மகேஸ்வரம்

ஆர்.மகேஸ்வரன்

மணி விழா மலர்

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ்வரம்

ஆர்.மகேஸ்வரன்

மணி விழா மலர்

2022

மகேஸ்வரன் மணிவிழா குழு

பிரதான நூலகம்

பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Disclaimer:

The findings/views/opinions expressed in this book are solely those of the authors and do not necessarily reflect the views of the publisher.

Copyright : Author.

ALL RIGHTS RESERVED

No part of this publication can be reproduced in any form by any means without the prior written permission from the publisher. All the contents, data, information, views opinions, chart tables, figures, graphs etc. that are published in this book are the sole responsibility of the authors. Neither the publisher nor the editor in anyway are responsible for the same.

நூலின் பெயர்	:	மகேஸ்வரம் (ஆர்.மகேஸ்வரன் மணிவிழா மலர்)
முதல் பதிப்பு	:	நவம்பர் 2022.
வெளியீடு	:	மகேஸ்வரன் மணிவிழா குழு பேராதனைப் பல்கலைக்கழகம் இலங்கை.
தொடர்புக்கு	:	0094 - 0812220820
மலராசிரியர்	:	ஏ.எஸ்.எம்.பீலிக்ஸ்
மலர்க்குழு	:	றொட்னி பெர்னாண்டோ சீ.சிறீதரன் வீ.கிருஷ்ணமூர்த்தி
ISBN	:	978-624-5 867-04-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

பகுதி - 1

வாழ்த்துச் செய்தி

1. தகைசார் பேராசிரியர் **சி.தில்லைநாதன்** 05

2. பிரதம நூலகர் **இராசையா மகேஸ்வரன்**
பேராசிரியர். **மா.செ.மூக்கையா** 07

3. நூலகர் மேதைக்குப் பல்லாண்டு கூறுவோம்
பேராசிரியர் **வை.நந்தகுமார்** 09

4. மகேஸ்வரன் எனும் நண்பனும் நானும்
பேராசிரியர். **வ.மகேஸ்வரன்** 10

5. மணிவிழா காணும் மாண்புறு நூலகர்
வைத்தியகலாநிதி **ச.முருகானந்தன்** 12

6. ஒரு சமூகத்துக்கான ஆய்வாளராக, ஊடகவியலாளராக பாரம்பரிய சிந்தனைகளின் மீது 'அரகல' (போராட்டம்) செய்ய வேண்டும்
திரு. **அருள் சத்தியநாதன்** சிரேஷ்ட ஊடகவியலாளர், தினகரன் 13

7. எனது பார்வையில் நண்பர் மகேஸ்வரன்
திரு. **சி.மனோகரன்** சிரேஸ்ட விரிவுரையாளர் 17

8. பன்முக ஆளுமை கொண்ட நடமாடும் நூலகர் இரா. மகேஸ்வரன்.
திரு. **இக்பால் அலி** ஊடகவியலாளர் 19

9. மணிவிழா நாயகனுக்கு
செல்வி. **முத்து ஸ்ரீமதி** 25

10. அறுபது அகவையினைக் காணும் பல்கலைக்கழக நூலகர் இராசையா மகேஸ்வரனின் தொழிற்சங்க உறவு
வே.கிருஷ்ணமூர்த்தி, ஒருங்கிணைப்புச் செயலாளர் 26

11. எனது மதிப்பிற்குரிய நண்பர் மகேஸ்வரன் சேர்,
திரு.**கோவிந்தசாமி புஸ்பலிங்கம்**
தலைவர் பலகொல்ல சைவ முன்னேற்றச்சங்கம் 28

பகுதி - 2

சுயவிபரம்

1. Maheswaran's Life Story and Biography 29
2. மகேஸ்வரனின் வாழ்க்கை சரிதம் 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி - 3

கட்டுரைகள்

1. தமிழின் பன்மைத்துவம்
பேராசிரியர். எம்.ஏ.நுஃமான் 58

2. இலங்கைத் தீவின் இன்னொரு நாவலர் சபாபதி பற்றிய சில குறிப்புகள்
பேராசிரியர் துரை.மனோகரன் 63

3. இப்னு அறபியின் வஹ்ததுல் வுஜூத் (இருப்புண்மை ஒன்றே) கோட்பாடு:
ஒரு மெய்யியல் பகுப்பாய்வு
பேராசிரியர் பீ.எம்.ஜமாஹிர் 68

4. 21ம் நூற்றாண்டு திறன்களும் எமது நாட்டு
கல்வி முறைமையின் அதன் தாக்கமும்
திரு. ஆர்.லோகேஸ்வரன் 77

5. ஆசிரியர் ஒழுக்கவிழுமியம்
திரு. ந.பார்த்தீபன் 83

6. இலங்கையில் திருச்சபைபற்றிய ஒரு பார்வை
திரு. ஏ.எஸ்.எம். பீலிக்ஸ் 87

பகுதி - 4

1. மகேஸ்வரன் படங்கள்
2. குடும்பப் படங்கள்
3. தும்பறை பல்கலைக்கழகம்
4. கண்டி மாவட்ட ஹொக்கி சங்கம்
5. பழைய மாணவர் சங்கம்
6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
7. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
8. சாகித்திய விழா
9. புனித சில்வெஸ்டர் கல்லூரி
10. பட்டமளிப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

தகைசார் பேராசிரியர் சி.தில்லைநாதன்

இந்துமரபில் அறுபது என்ற எண்ணிக்கை கொண்டதாக அமையும் ஆண்டுச் சுற்று வட்டத்தை ஒருவர் நிறைவுசெய்கிறார் என்பது வாழ்வில் அவர் அடையத்தக்க பேறுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அந்த வாழ்வை வெறுமனே உணவுண்டு உடுத்து உறங்குவதாக அமையும் வெற்று வாழ்வாக அல்லாது தனக்கும், தன் குடும்பத்திற்கும், சமூகத்துக்கும் பயன் தரத்தக்கதாக அமைத்துக் கொள்வராயின் அந்த நிறைவினை உலகமும் உவந்து கொண்டாடும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவ நிலையிலும், பின் உத்தியோக நிலையிலும் என்னோடு தொடர்புபட்டு, என்றும் என் மனதுக்கு இனியவராக விளங்கும் திரு.இராசையா மகேஸ்வரன், அவ்வாறான ஒரு நிறைவினை எய்துகிற நிலையில், அவரைச் சூழவுள்ள சமூகம் அதனை மகிழ்வுடன் கொண்டாடுகின்றமை 'உலகவாம் திரு' உடையவராக அவர் வாழ்ந்தமைக்குச் சான்றாவது கண்டு பேருவகை எய்துகிறேன்.

மகேஸ்வரன், இன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் எட்டாவது பிரதம நூலகராக விளங்குகிறார். பழமையும் பெரும் பாரம்பரியமும் உடையதான அப்பல்கலைக் கழகத்தில் பிரதம நூலகர் பதவிவகிக்கும் சிறுபான்மைச் சமூகம் சார்ந்த முதல் நபர் என்ற பெருமையோடு மணிவிழாக் காணும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தமை மகிழ்ச்சியைப் பன்மடங்காக்குகின்றது.

மகேஸ்வரன் எய்துகிற எல்லா நலன்களும் அவரைப் போலவே எனக்கும் மகிழ்ச்சி தருவனவாகும். பல்கலைக்கழக வாழ்வில் இனிய பண்புகளோடு அவர் ஆற்றிய பயன்மிக்க பணிகள் என் உள்ளத்தில் அழியா இடம்பிடித்துள்ளன. இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் இனக்கலவரங்கள் காரணமாக தமிழ் மாணவர்களின் தொகை குறைந்திருந்த நிலையில் அசாதாரண சூழலிலும் வருகை தந்திருந்த மாணவர்கள் உற்சாகம் குன்றியிருந்த நிலை காணப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் தடம் பல பதிந்திருந்த தமிழ்ச் சங்கமும் செயற்பாடு குன்றிச்சோபை இழந்து காணப்பட்டது. அந்த காலத்தில் அதன் பெருந்தலைவர் என்ற நிலையில் நானும் உள்ளம் உடைந்திருந்த வேளையில் 1986 இல் புவியியல் சிறப்பு மாணவனாக வந்திருந்த மகேஸ்வரன் தமிழ் பேசும் மாணவர்களை ஒன்று திரட்டி சங்கத்தைப் புதிய உத்வேகத்தோடு செயற்படுத்துவதிற் காட்டிய அக்கறை என்றும் என் மனதைவிட்டு அகலாது. அது போலவே மாணவனாக இருந்த போதும் நூலக உத்தியோகத்தில் அமர்ந்த பின்பும் எப்போதும் குறிஞ்சிக் குமரன்கோயிற் கருமங்களில் அவர் காட்டிய காட்டிவருகின்ற கரிசனையும் மிக்க பேராதனைப் பல்கலைக் கழக நூலகத்தில் பிறமொழிப் பகுதிகள் போலவே வளம் மிக்கதாய் விளங்கிய தமிழ்ப்பகுதி இடைக்காலத்தில் ஏதோ சில புறக்காரணிகளால் புறக்கணிக்கப்பட்டிருந்த நிலையில் அதனைப் புனருத்தாரணம் செய்வதில் – மீள ஒழுங்குபடுத்துவதில் மகேஸ்வரன் காட்டிய சிரத்தையும் அத்தகையதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத்துறையிலும் ஆய்வுத்துறையிலும் தொடர்ந்து ஈடுபட்டு உள் நாட்டிலும் வெளிநாடுகள் பலவற்றிலுமாக அவர் ஈட்டிய வெற்றிகள் பல. அவர் தன் குடும்பம், தான் கற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழகத்துடனும் பல்வேறு காலக்கட்டத்தில் அதிபராக, விரிவுரையாளராக, நூலகராக கடமையாற்றிய அனைத்து ஸ்தாபனங்களிலும் அனைத்துத் தரப்பினருடனும் நன்மையும் பெருமையும் சேர்க்கும் வகையில், ''பயன் தூக்காது அவர் ஆற்றும் பணிகளின் நயம் தூக்கின் அவர் சார்ந்த சமூகத்தால் அவரைக் கொண்டாடாது இருத்தல் இயலாது. அந்தச் சமூகத்துள் ஒருவனாக நின்று ஆரோக்கியத்தோடும் மகிழ்ச்சியோடும் நீண்ட ஆயுளோடும் கூடிய நிறைவாழ்வு வாழ மகேஸ்வரனை மனதார வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா.செ.மூக்கையா

முன்னாள் புவியியல் பேராசிரியர்
முன்னாள் புவியியல் துறைத்தலைவர்
முன்னாள் கிழக்கிலங்கை பல்கலைக்கழக துணைவேந்தர்

பிரதம நூலகர் இராசையா மகேஸ்வரன்

பேராதனை பல்கலைக்கழகத்தின் முதன்மை நூலகர் திரு.இராசையா மகேஸ்வரன் அவர்களை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நன்கறிந்தும் பழகியும் இருக்கிறேன். அவரது சஷ்டி பூர்த்தி விழாவின்போது வெளியாகும் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திரு.மகேஸ்வரன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியில் துறையில் சிறப்புக் கலை இளமாணி பட்டத் தேர்வுக்கு கற்றுக் கொண்டிருந்த காலத்திலிருந்தே ஒரு துடிப்புமிக்க மாணவனான அவரை அறிந்திருந்தேன். அவர் ஒரு சிறந்த மாணவனாக பலதுறையில் பெரும் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்ததுடன், ஹொக்கி போன்ற விளையாட்டு துறையிலும் ஆர்வத்துடன் பங்கேற்று மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் சிறந்த வீரராக அறியப்பட்டிருந்தார். பின்வந்த நாட்களில் ஹொக்கி வீரர்களைப் பயிற்றுவிப்பாளராகவும், சிறந்த நிர்வாகியாகவும், முகாமையாளராகவும் செயற்பட்டவர்.

புவியியலில் சிறப்புக் கலை இளமாணி தேர்வில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டவர். இதனையடுத்து, பேராதனை பல்கலைக்கழகத்தின் முதன்மை நூலகத்தில் உதவி நூலகர் என்ற பதவியேற்ற காலம் முதலாக அயராது பணியாற்றிப் பேராதனை பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் சகபணியாளர்கள் அனைவருக்கும் நம்பிக்கைக்குரிய நூலகராகச் செயற்பட்டுப் பெருமை பெற்றுக் கொண்டார். அக்காலத்தில் நூலகத் துறையில் பல்வேறு தகுதிகளையும் வளர்த்துக் கொண்டு அத்துறையில் முதுகலைமானிப் பட்டத்தினையம் பெற்றுக்கொண்டார். அத்துறைசார்ந்த ஆராய்ச்சி கட்டுரைகள் பலவற்றினையும் எழுதினார். தமிழ் ஆங்கில மொழிகளில் மட்டுமல்லாது சிங்களத்திலும் தனது மொழியாற்றலை மேம்படுத்திக் கொண்டதால் பல்கலைக் கழக சமூகத்தின் அனைத்துத் தரப்பினரதும் நம்பிக்கை, அங்கீகாரம் நல்உறவு நிலை ஆகியவற்றினை வளர்த்து தனது ஆளுமையினால் தனது வளர்ச்சியினை சிறப்புற உறுதி செய்துகொள்வது அவருக்குச் சாத்தியமாயிற்று. எழுபத்தைந்து வருடகால போரதனை பல்கலைக்கழக வரலாற்றில், முதன் முதலாக ஒரு சிறுபான்மை இனத்தினைச் சார்ந்த ஒருவர், அதன் பிரதான நூலகத்தின் பிரதம நூலகர் பதவியினை தனதாகிக் கொண்ட வரலாற்றுச் சாதனையாளர் ஆவார். மகேஸ்வரன் எனது முன்னாள் மாணவர் என்பதுடன் பின்னாளில் எனது நண்பர் என்பதிலும் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

தனது மேம்பாட்டுக்காக அயராது உழைத்து கல்வி, விளையாட்டு, கலை கலாசாரம் ஆகியவற்றிலும் தன்னை திறம்பட செம்மைப்படுத்தி கொண்ட திரு.மகேஸ்வரன் பொது வாழ்க்கையிலும், தன்னை சேவையாளனாக அடையாளப்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. பல்கலைக்கழகக் குறிஞ்சிக்குமரன் கோயிலின் நிர்வாகம் மற்றும் மலைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் கல்வி போன்ற பலதுறைகளிலும் சேவையற்றியவர். அவ்வப்போது அரசியலிலும் இவரது பங்கேற்பு குறிப்பிடத்தக்கதாக இருந்து வந்துள்ளது.

திரு. மகேஸ்வரன் தனது பணிகளையும் சேவைகளையும் தொடர்ந்தும் திறம்படவும் முழுமையாகவும் ஆற்ற அவருக்கு சிறந்த ஆரோக்கியத்தினையும் நீண்டஆயுளையும் தந்து அருளுமாறு எல்லாம் வல்ல குறிஞ்சி குமரனைப் பிரார்த்திக்கிறேன். அவரது சஷ்டி பூர்த்தி விழா சிறப்பாக நடந்தேற மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள கிடைத்த வாய்ப்புக்காக பெருமகிழ்ச்சியடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வை.நந்தகுமார்

நூலகர் மேதைக்குப் பல்லாண்டு கூறுவோம்

ஆண்டொன்று போனால் அகவை ஒன்று போகும். அந்தவகையில் அகவை அறுபது விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி அது வந்தே தீரும். ஆனால் அந்த அறுபது அகவைக்குள் சாதித்தவைகள் எவை? இதற்கான விடை பெறுமதியாக இருக்கும் போது தான் அகவை அறுபது என்பதும் ஒருவருக்குப் பெருமையை அளிப்பதாக இருக்கும். இந்தப் பெருமை, மகேஸ்வரன் அவர்களுக்கு நிறையவே உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகவை அறுபதில் காலடி எடுத்து வைத்து மணிவிழாக் காணும் மகேஸ்வரன் கண்டியைப் பிறப்பிடமாகவும், வடமராட்சியைப் பூர்வீகமாகவும் கொண்டவர். இவருடைய மனைவி கோமதி ஒரு வைத்தியர். இவர்களுக்கு இரண்டும் ஆண் பிள்ளைகள் உண்டு. இவர் வர்த்தகக் குடும்ப பின்னணியை கொண்டிருந்தபோதிலும் பிற்காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டு கல்வி கற்று இன்று கல்விக்குடும்பமாக மிளிர்கின்றது. மகேஸ்வரன் புவியியற்துறை மாணவனாக பேராதனைப் பல்கலைக்கழக புவியியற் துறையில் கற்கும் பொழுது நான் அவரது விரிவுரையாளராக இருந்தேன். அவரது வளர்ச்சி பற்றி நான் நன்கு அறிவேன். புவியியல் மாணவனாக இருந்த காலத்திலேயே தமிழ்ச் சங்க செயலாளராக, விளையாட்டு வீரனாக, விளையாட்டுக்குழுத் தலைவராக, பொது சேவையாளனாக, மாணவத் தலைவனாக என்று அவரது பற்பல செயற்பாடுகளை மிக அருகில் இருந்தே அவதானித்திருக்கின்றேன். பல விடயங்களில் அவரது சேவையை மனதார பாராட்டி இருக்கிறேன்.

பிற்காலத்தில் உதவி நூலகராக வந்தபின் குறிஞ்சிக்குமரன் கோயிலோடு இணைந்து அவர் செயற்பட்டார். நான் ஆறு கும்பாபிஷேகங்களைக் கண்டவன். இதில் மூன்று கும்பாபிஷேகங்களில் மகேஸ்வரனும் இணைந்திருந்தார். 2010-ம் ஆண்டு கும்பாபிஷே கத்தின் போது நான் தலைவராகவும் மகேஸ்வரன் செயலாளராகவும் செயற்பட்டபோது அவரது திறமையை நான் கண்டேன். 2022-ம் ஆண்டு கும்பாபிஷேகக் குழுவிலும் நான் தலைவராகவும் அவர் செயலாளராகவும் செயற்பட்டோம். 2008 ஆம் ஆண்டிலிருந்து 2022 வரை பொறுப்பாண்மைக்குழுவில் நான் தலைவராகவும் அவர் செயலாளராகவும் செயல்பட்டுள்ளோம். இவரது ஆன்மீகப்பணி சிறப்பானது. மாணவர்களை அணுகும் முறை, நிர்வாக உத்தியோகஸ்தர்களை அணுகும் முறை அவருக்கே உரிய சிறப்பம்சங் களாகும். உபவேந்தர்களிடம், பதிவாளர்களிடம் பக்குவமாக பழகி கோயில் காரியங்களை சிறப்பாக முடிப்பார். இது அவருக்கே உரிய செல்வாக்காகும்.

பழகுவதற்கு இனியவராகவும், நல்ல நண்பராகவும் நாம் நீண்ட காலம் பழகியுள்ளோம். எனது மணிவிழாவில் மகேஸ்வரன் உரையாற்றியமை இன்றும் ஞாபகத்தில் உள்ளது. அவரது மணிவிழாவில் நான் கலந்துக் கொண்டு வாழ்த்துவதோடு மணிவிழா மலருக்கு இச்செய்தியை வழங்குதன் மூலம் எமது உறவுப் பாலத்தினை வெளிக்காட்டிக் கொள்கிறேன். அவர் இன்னும் பல சேவைகள் செய்து மக்கள் தொண்டனாக, ஆன்மீகவாதியாக, நீடூழிவாழ வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர். **வ.மகேஸ்வரன்**

மகேஸ்வரன் எனும் நண்பனும் நானும்

நட்பு என்பதற்கு திருவள்ளுவர் பல்வகையான வரைவிலக்கணங்களைக் கூறுவார். அவ்வாறான வரைவிலக்கணங்களின் கூட்டுக் கலவையாக நண்பன் இராசையா மகேஸ்வரனை நான் பார்க்கிறேன். மகேஸ்வரனுக்கும் எனக்குமான உறவு சுமார் 30 வருடங்களுக்கு மேலானது. பேராதனையில் அவரைக் கண்டநாள் முதல் ஏதோ வகையில் எனக்கும் அவருக்குமான நட்பு உதயமானது. இருவரும் ஒரே இராசிக்காரர். பெயரும் அப்படியே. அதனால்தானோ என்னவோ அந்த நட்புக்கு உரம் கிடைத்தது. அது இன்றுவரை நீள்கிறது.

மகேஸ்வரன் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு உதவி நூலகராக நியமனம் பெற்றது முதல் எனக்கும் அவருக்குமிடையிலான உறவு இறுக்கமடைகிறது. பேராதனையில் நான் மாணவனாக இருந்த போதே நூலகத்தின் உபாசகன். விரிவுரையாளராகச் சென்றதன் பின்பும் அது தொடர்ந்தது. மகேஸ்வரனின் வரவுடன் அது மேலும் வலுப்பெற்றது. நான் மகேஸ்வரனின் நண்பன் என்பதனால் நூலகத்தின் சகலதளங்களிற்கும் சென்று வரவும், அரிய நூல்களைப் பெறவும் முடிந்தது. தமிழ்ப் பிரிவில் பணிபுரியும் நூலக உத்தியோகஸ்தர்களான திரு.சிவலிங்கம், திரு.சந்திரசேகரன், அவரது மகன் திரு.ஸ்ரீதரன் மற்றும் திரு.ரொட்ணி ஆகியோர் மகேஸ்வரனுக்கு அளித்த மரியாதையையே எனக்கும் அளித்தனர். அவர்கள் மாத்திரமல்ல சிங்கள நண்பர்களும் அவ்வாறே. எனக்கு ஒரு நூல் அவசியப்படும் நேரத்திலெல்லாம் என் கைகளில் உடனடியாகச் சேரப்பண்ணினார்கள். இதனால் எனதுத் தமிழ்த்துறைக்கு அடுத்த துறையாக நூலகமும் விளங்கியது என்பதில் ஐயமில்லை.

நானும் மகேஸ்வரனும் பல தளங்களில் ஒன்றாக இயங்கியுள்ளோம். எமது துறையினுடைய சகல நடவடிக்கைகளிலும், கருத்தரங்குகளிலும் நான் துறைத் தலைவராக இருக்கும் போது பங்கும், பகிர்வும் செய்திருக்கிறார். நானும் அவரும் சர்வதேச கருத்தரங்குகளில் பங்குகேற்க லண்டன், மலேசியா, இந்தியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குச் சென்றுள்ளோம். இந்தியாவில் என்னுடைய நண்பர்கள் எல்லோரும் மகேஸ்வரனின் நண்பர்கள் ஆயினர். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்னைப் போலவே அவருக்கும் நண்பர்கள் நிறைந்த பல்கலைக்கழகம் ஆகியது. மேலாக அவர் நூலகர் என்ற காரணத்தினால் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிற்கான தொடர்புகள் ஏற்பட்டு கூர்மையாகி இன்று அப்பல்கலைக்கழகங்களில் ஆதார சுருதியுரை நிகழ்த்துமளவிற்கு உயர்ந்து நிற்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகக் குறிஞ்சிக்குமரன் ஆலயப் பணிகளிலும் நாங்கள் ஒன்றாக இயங்கி இருக்கிறோம். இரண்டு கும்பாபிஷேகங்களைக் கண்டிருக்கிறோம். இந்துப் பட்டதாரிகள் சங்கம், பொறுப்பாண்மைக்குழு ஆகியவற்றினூடாக இணைந்து பணியாற்றி எத்தனையோ தைப்பூசத் திருவிழாக்களை சிறப்புற நடத்திக் காட்டியிருக்கிறோம். இதனுள் பேராசிரியர் சிவயோகநாதன், பேராசிரியர் நந்தகுமார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.தர்மதாசன் ஆகியோரின் கூட்டுப் பங்களிப்புடனையே இவற்றையெல்லாம் செய்து முடித்தோம். அன்னதானமாக இருந்தாலும் சரி, கட்டுமானப்பணிகளாக இருந்தாலும் சரி, நிர்வாகத்துடன் தொடர்புடைய பணிகளாக இருந்தாலும் சரி, மகேஸ்வரனின் பங்களிப்பின்றி அவை நிறைவேறியதில்லை. எதற்கும் கோபம் கொள்ளாத இணங்கிப் போகின்ற தன்மையும் மும்மொழிப் புலமையும் அதை அவர் நிறைவேற்றக் காரணம் ஆகியது.

மகேஸ்வரன் பல்கலைக்கழகத்துள் மாத்திரமல்ல அதற்கு வெளியேயும் பல தளங் களில் இயங்குகின்றார். அடிப்படையில் அவர் ஒரு "ஹொக்கி விளையாட்டு வீரர்" இதனால் இலங்கை ஹொக்கி விளையாட்டு அமைப்பின் முகாமையாளர், கண்டி வர்த்தக சங்கத்தின் பிரமுகர், பள்ளேகலயில் அமைந்துள்ள பல கோயில்களின் நிர்வாகசபை உறுப்பினர் என்னும் பல அமைப்புகளின் மதிப்புறு உறுப்பினர். இவையெல்லாம் அவருடைய நடத்தைக் கோலத்தால் கிடைத்தவை. அவர் "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை அதனிலும் இகழ்தலும் இலமே". எனும் சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனாரின் கோட்பாட்டின்வழி இயங்குபவர். அதனால் அவருக்கு யாவரும் சமமே. பெரியவர், சிறியவர் என்ற பேதம் அவருக்கு இல்லை.

மகேஸ்வரன் பற்றி பெருமிதம் கொள்ளகூடிய செய்தி ஒன்று உண்டு. அது அவர் பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆகியமை ஆகும். இலங்கைப் பல்கலைக்கழகம் அமைந்து ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டது. ஆயின் பேராதனை நூலகத்தில் சிறந்த பல தமிழ் உதவி நூலகர்கள் கடமை புரிந்தனர். எனினும், அவர்களால் பிரதம நூலகராக முடியவில்லை. அதற்கு பல்வேறு காரணிகள் உண்டு. எனினும் காலம் கடந்து நண்பர் மகேஸ்வரன் நூலகத்தின் முதல் பிரதம நூலகர் ஆனமை நான் மாத்திரமன்று தமிழ்ச் சமூகமே பெருமை கொள்ளகூடிய விடயமாகும். இந்த பேறு அவருக்கு சாதாரணமாக கிடைத்துவிடவில்லை. அவருடைய திறமை கருதியே அது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மகேஸ்வரனும் நானும் நெருங்கிய குடும்ப நண்பர்கள். அவருடைய குடும்பமும் என்னுடைய குடும்பமும் உரிமையுடன் நெருங்கி பழகிவருகிறோம். அது நிலைக்கும், நீடிக்கும். இந்த மணிவிழாவில் அவரை வாழ்த்தி நானும் எனது குடும்பமும் இன்புறுகிறோம். அவர் அமுதவிழா, நூற்றாண்டுவிழா என்பவை கண்டு இன்னமும் உயர்ந்த தளங்களிலும், வளங்களுடனும், நீடித்த ஆயுளுடனும் வாழ வேண்டும் என்றும் வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியகலாநிதி ச.முருகானந்தன்

(ஓய்வுநிலை மருத்துவர்)

மணிவிழா காணும் மாண்புறு நூலகர்

பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகரான இராசையா மகேஸ்வரனுக்கு இது மணிவிழா ஆண்டாகும். பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல் சிலர் சாதனையாளர்களாகி மாண்புற்று மனிதர்களாக வாழும்போது மாத்திரமன்றி மறைவுக்குப் பின்னரும் நினைவுகூரும் வண்ணம் தாம் பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்க்கின்றார்கள். இந்த வகையில் அப்படி ஒருவராக நூலகர் ஆர்.மகேஸ்வரனையும் குறிப்பிடலாம்.

சமுதாய நோக்கு, ஆன்மீகத் தொண்டு செயற்றிறன் மிக்க பாரம்பரியத்தில் இவர் தோன்றியதால் இவர் தன்னையும் அவ்வாறே நிலைநிறுத்திக் கொண்டார். இவரது பாட்டனார் சு.கா.முருகேசு அவர்கள் வடமராட்சியின் கரணவாய் கிராமத்தைச் சேர்ந்த வராவார். இவர் சமூக விடுதலைக்காகவும், ஆன்மீகத் தொண்டுகளுக்காகவும் இறுதி வரை அயராது பாடுபட்டு வாழ்ந்து மறைந்தவராவார். அவர் தொழில் நிமித்தமாக கண்டி மாநகரில் பெரிய வியாபாரத்தை மேற்கொண்டிருந்தார். அவரின் மகன் முருகேசு இராசையாவும் ஒரு தலைசிறந்த வர்த்தகர் இவருடைய சிரேஷ்ட புத்திரன் தான் மணிவிழா நாயகன் மஹேஸ்வரன்.

சிறுபிராயத்திலிருந்தே கல்வி, விளையாட்டு, தமிழ்த்தொண்டு, சமூகத்தொண்டு எனப் பலதுறைகளிலும் பிரகாசித்த மகேஸ்வரன் இலங்கை ஹொக்கி அணியின் முகாமை யாளராகவும், இலங்கையில் ஹொக்கி சம்மேளன உபதலைவராகவும் பணியாற்றுகிறார். கலைமாமணி பட்டதாரியான இவர் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ப்பிரிவு உதவி நூலகராக இணைந்து இன்று பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகராக பதவி உயர்வு பெற்று விளங்குகிறார். பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் இப்பதவியை வகிக்கும் முதலாவது தமிழராக இருப்பது எமக்கெல்லாம் பெருமைக்குரிய விடயமாகும். தேசிய நூலகர் சபை, தேசிய கலைக்கழகம் ஆகியவற்றில் உறுப்பினராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

ஆன்மீகப் பாரம்பரியத்தில் வளர்ந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக இருந்தபோதே குறிஞ்சிக்குமரன் ஆலயப் பணிகளில் ஈடுபட்டு வருவதுடன் பொறுப்பாண்மைக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்.

ஆய்வுத்துறைகளில் ஈடுபாடுமிக்க இவர் உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு, இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, கொழும்பு தமிழச் சங்கத்தில் இடம்பெற்ற பன்னாட்டு தமிழ் இலக்கிய மகாநாடு என்பவற்றில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்பித்துள்ளார். இவை தொடர்பாக மலேசியா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு சென்று கலந்து சிறப்பித்துள்ளார். இவரது பணிகளைப் பாராட்டி மத்திய மாகாண கலாசார அமைச்சு சாகித்திய மண்டல விருது வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது. பயண நூல்கள், ஆய்வு நூல்கள் என சில நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

மணிவிழாக் காணும் அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது சமூகப் பணிகளை தொடர வேண்டுமெனவும் நீண்ட கால ஆயுள் பெற்று நிறைவுடன் வாழ வேண்டுமெனவும் குறிஞ்சிக் குமரனைப் பிராத்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் சத்தியநாதன்
சிரேஷ்ட ஊடகவியலாளர்
முன்னாள் பிரதியாசிரியர் – தினகரன்

ஒரு சமூகத்துக்கான ஆய்வாளராக, ஊடகவியலாளராக பாரம்பரிய சிந்தனைகளின் மீது 'அரகல' (போராட்டம்) செய்ய வேண்டும்

இராசையா மகேஸ்வரனை அல்லது இந்த விழா நாயகனை எனக்கு 25 வருடங்களுக்கு மேலாக அறிமுகம். பேராதனை நூலகத்துக்கு வந்த பின்னர்தான் ஊடகவியலாளர் என்ற வகையில் அவருடன் தொடர்பு ஏற்பட்டது. அதற்கு முன்னர் அவர் பாடசாலை அதிபராக, விளையாட்டுத்துறையில் விரிவுரையாளராக, பயற்றுவிப்பாளராக விளங்கியதெல்லாம் எனக்குத் தெரியாது. அக்காலத்தில் அவர் ஊடகவியலாளராக கட்டுரைகளையும், செய்திகளையும் எழுதி வந்தார். கண்டியில் நிகழ்ந்த ஏதோ ஒரு முக்கிய நிகழ்வு தொடர்பான தகவல்களைத் தேடிக் கொண்டிருந்தபோது அருகே நின்றிருந்த ஒருவர் மகேஸ்வரனை தொடர்பு கொள்ளுங்கள் என்றார். அதைக் கேட்ட இன்னொரு ஊடகவியலாளர் அவராவது இதைக் கவர் பண்ணுவதாவது... அவர் பேராதனை நூலகத்தில் அல்லவா அமர்ந்திருப்பார்! என்றார் ஒரே போடாக!

எனக்குத் ஆச்சரியமாக இருந்தது. நூலகத்தில் அமர்ந்திருப்பாராம்.... விஷயங்களை தேடித்தர மாட்டாராம். அப்படிப்பட்டவர் யார் என்று நினைத்துக் கொண்டேன். பின்னர் அந்த விஷயம் மறந்துபோய் விட்டது. ஜனவரி முதலாம் திகதியில் இருந்து 15ம் திகதிவரை லேக்ஹவுஸ் ஆசிரிய பீடங்கள் களைகட்டி நிற்கும். இலங்கையின் நாலா பக்கங்களில் இருந்தும் பிராந்திய ஊடகவியலாளர்கள் இங்கு வருவார்கள்.

அப்படி ஒரு ஜனவரிமாதம் சாதாரண உயரமும் உடல் பருமனும் கொண்ட ஒரு இளைஞர் எனக்கு முன் இருந்த கதிரையில் அமர்ந்து என்னைப் பார்த்து புன்னகைத்தார்.

"நீங்கதானே அருள் சத்தியநாதன்?"

அசுவராசியமாக 'இம்' என்றேன்.

"உங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் கட்டுரைகளை வாசித்திருக்கிறேன். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதைக் கேட்டு வந்தேன் நான் மகேஸ்வரன். கண்டி பேராதனை யூனிவர்சிட்டியில்...."

எனக்கு புரிந்து விட்டது. எழுதாமல் குந்திக் கொண்டிருக்கும் அந்நபர்தான் என்று....

ஹலோ என்று பேச ஆரம்பித்தேன். விஷயம் உள்ள இளைஞராக இருந்தார். கண்டியின் மூலை முடுக்கெல்லாம் அவருக்குத் தெரிந்திருந்தது. டொப் ஊடகவியலா ளராகத் தெரிந்தார். எனக்கு அவரைப் பற்றி யாரோ தவறான தகவலைத் தந்திருப்பதாகப் பட்டது. அதன் பின்னர் அவருடன் அடிக்கடி தொடர்பு கொண்டேன். அவரது படிப்புக்கும், செய்யும் தொழிலுக்கும் கிடைக்கும் வருமானத்துக்கும் அவர் கண்டி ஊடகவியலாளராகப் பணியாற்ற வேண்டிய அவசியமே கிடையாது. பத்திரிகைத் தொழிலில் அவருக்குள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாடே பத்திரிகைக்கு எழுதத் தூண்டுகிறது என்பதை புரிந்து கொண்டபோது அவர் மீதான என் அபிமானம் அதிகரித்தது. இப்படியானவர்கள் நான்கு பேர் இருந்தால் பத்திரிகையைத் தூக்கி ஒரு உயரத்துக்கு கொண்டுபோய் விடலாமே என்று நினைத்தேன்.

இப்போது அவர், தன் உழைப்பின் காரணமாக, பேராதனை பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகராக உச்சம் தொட்டிருக்கிறார். அவர் ஒரு விரிவுரையாளர். நூலகத்துறை பேராசிரியர். புவியியல் பட்டதாரி. விளையாட்டு வீரர், தமிழ்ப்பற்றாளர், சமூகத்தொண்டர், ஆன்மீகச் செயற்பாட்டாளர் என பல்முக ஆளுமை கொண்ட ஒருவர்.

கல்லாநிதிகள் எல்லாம் தம்மைக் கலாநிதி, வைத்திய கலாநிதி என்றெல்லாம் போட்டுக் கொள்கிறார்கள். அதனால் கலாநிதி என்ற பட்டத்தின் கௌரவம் களங்கப்பட்டுள்ளது. இவர் நூலகத்துறையில் ஆய்வு ரீதியாகப் பயின்று பெறவுள்ள பட்டம் இவர் பற்றிய குறிப்புகளை வாசிக்கும்போது இவ்வளவு சிறப்புகளுக்கு சொந்தக்காரரான மகேஸ்வரனா! என வியந்தேன்.

இப்படியான உயர்வான ஒருவர், எப்படி இவ்வளவு எளிமையாகவும் நட்பு பாராட்டுபவராகவும் செய்திகளை தகவல்களை விரிவாக அதன் ஆழ அகலங்களுடன் புரிந்து கொள்பவராகவும் திகழ முடிகிறது என்று யோசிப்பதுண்டு. இதழியலுடனான இவரது தொடர்புகளும் சிலாகிக்கப்படக் கூடியவை. பொதுவாகவே இதழியலுடனான தொடர்பு விளையாட்டுத்தனமாக ஆரம்பமாகக் கூடியது. வாழ்க்கைப் படிகளில் ஏறிச் செல்லும் போதும் அதன் வழியில் பணமும், புகழும், செல்வாக்கும், புதுப்புது அறிமுகங்களும் கிட்டும்போது இதழியல் தொடர்புகள் அறுந்து போகக் கூடிய வாய்ப்புகள் அதிகம். சிலர் அவ்வாறு அறுத்துக் கொண்டு போயிருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் மிக நீண்ட காலம் தொடக்கம் இன்றுவரை அத்தொடர்புகளை அவரால் பேணிவர முடிந்திருந்ததற்கு காரணம் உண்டு. அவருடைய இதழியல் தொடர்புகள் வெளிப்படுத்தும் சுதந்திரத்தை தளமாகக் கொண்டு இயங்குவதாகும். இதன் மூலம் பணம் சம்பாதிக்கும் அவசியம் அவருக்கு இருந்ததில்லை. எனவே உண்மைகளை வெளிக்கொண்டுவர வேண்டும், நடந்தவற்றை நாலுபேர் அறியச் செய்ய வேண்டும் என்பது மட்டுமல்ல; அதன் உள் விஷயங்களையும், பின்னணியையும், உண்மையான நோக்கங்களையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற உந்துதல் அவரிடம் எப்போதும் இருந்து வந்திருப்பதை நான் அவருடன் பேசும் சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறேன். நூலகராக வந்திருக்காவிட்டால், நான் நினைப்பதுண்டு, சில சமயங்களில் ஒரு பத்திரிகைத்துறை பிரதம ஆசிரியராக வந்திருப்பார் என்று. அதற்கான செய்தித் திறன், ஆய்வுத்திறன், ஒரு சஞ்சிகையை பத்திரிகையை எவ்வாறு கொண்டுவர வேண்டும் என்பதற்கான ஆற்றல் அனைத்தையும் கொண்டவராகவே இவரைக் கருதுகிறேன்.

ஆய்வுடன் கூடிய எழுத்து ஈழத் தமிழ் இலக்கியப் பரப்பில் மிகக்குறைவு என்றும் சொல்லலாம். இலங்கையில் வெளியாகும் பெரும்பாலான தமிழ் நூல்கள் படிப்பதற்கும், புதிதாக எதையேனும் தெரிந்து கொள்ள உதவுவதாகவும் இல்லை என்பது என் கருத்து. அவரவர் தன் விருப்பப்படி எழுதி வெளியிட்டு விடுகிறார்கள். எழுத்து நேர்த்தி, நடை நேர்த்தி, கருப்பொருளின் வீச்சு என்பனவற்றைக் காண்பது அரிது. ஆனால் ஆய்வாளராகவும், எழுத்தாளராகவும் நின்று மகேஸ்வரன் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் நேர்த்தியானவை மட்டுமல்ல; பொருள் ஆழமும் அதைப் புரிய வைக்கும் எளிமையான நடையும் கொண்டவை. இதற்கு அவரது இதழியல் ஆர்வம் காரணமாக இருந்திருக்கலாம்.

இவர் ஒரு இந்து பூஜை புனஸ்காரங்களை அப்படியே பின்பற்றக் கூடியவர். எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆய்வாளர் என்ற வகையில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு களுக்குச் சென்று அம் மாநாடுகள் தொடர்பான கட்டுரைகளை உள்ளதை உள்ளபடி எழுதியவர். தமிழகத்தில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் இலங்கையைச் சேர்ந்த பல இஸ்லாமிய எழுத்தாளர்கள் கலந்து கொண்டிருந்த போதிலும் இம்மாநாடுகள் பற்றி விரிவாகவும், உள்ளது உள்ளபடியும், ஆய்வு ரீதியாகவும் பத்திரிகையில் எழுதியவர் இவரும் இன்னொருவரும் மட்டுமே. இக் கட்டுரைகளுக்கு எதிர்ப்பு கிளம்பவில்லை என்பதும், இஸ்லாமிய வாசகர்களின் ஆதரவு இவர்களுக்கு இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு ஆய்வுரீதியான எழுத்தாளனுக்கு மதங்களும், கலாசாரங்களும் தடையல்ல என்பதற்கு மகேஸ்வரன் ஒரு சிறந்த உதாரணம்.

தினகரனில் இவர் எழுதிய பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ''கண்டி எசல பெரஹரா தொடர்பான அதில் காணப்படும் திராவிட செல்வாக்கு'' பற்றிய கட்டுரைகள் சிறப்பானவை. பழைய விஷயங்களை, மறந்த அல்லது மறக்கடிக்கப்பட்டவற்றை தேடியெடுத்து அவற்றை பொதுவில் வைத்த சமீபகால தமிழ் எழுத்தாளராக இவரைக் குறிப்பிடலாம்.

நண்பர் மகேஸ்வரன் எவருடனும் எளிமையாகப் பழகக்கூடியவர். பழகும் போது தன் வித்துவத்தை வெளிக்காட்ட முயற்சிப்பதேயில்லை. சமீபத்தில் ஒரு இலக்கிய அன்பரின் மரண வீட்டில் இரு இலக்கிய அன்பர்களை நீண்ட இடைவெளியின் பின்னர் சந்திக்க நேர்ந்தது. ஆர்வத்துடன் அவர்களுடன் பேச முற்பட்டபோது அவர்களில் ஒருவர் தன் கைபேசியை எடுத்து இது நான் எழுதிய புத்தகம், இது அதன் அட்டைப்படம். இந்த அட்டைப் படத்தை வரைந்தது நானே. நான் எழுதியவற்றை இணையத்தில் இதுவரை இத்தனை ஆயிரம் பேர் பார்த்திருக்கிறார்கள் என்றெல்லாம் கூகுள் ஆதாரங்களுடன் தன் சுய புராணத்தை ஆரம்பித்து விட்டார். பக்கத்தில் அமர்ந்திருந்தவரும் நான் எவ்விதத்திலும் குறைந்தவன் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் தன் கைபேசியை குடைய ஆரம்பித்துவிட்டார். நான் அவர்கள் பக்கமாக அமர்ந்ததன் நோக்கம் அவர்களுடன் பேசுவதற்காக, அரசியல், உலக நடப்பு, சொந்த விஷயங்கள் சுக நலன்கள் பற்றி பேசுவதற்காகவே தவிர சுய புராணங்களைக் கேட்க அல்ல.

அந்த வகையில் நண்பர் மகேஸ்வரன் தனித்து நிற்கிறார். அவர் சுய புராணம் பாடி எவரும் கேட்டிருக்க மாட்டார்கள். போகிற போக்கில் தன்னைப் பற்றி சில விஷயங்களைச் சொல்லுவார். மணிவிழாக் குழுவினர் எனக்கு அனுப்பியிருந்த கடிதத்தில்தான், இத்தனை வருடங்களாக பழகிய பின்னரும், அவரைப் பற்றிய சில விஷயங்களை படித்து அறிந்து கொள்ள முடிந்தது! அந்த தன்னடக்கம் நல்ல மனிதர்களுக்கான அடையாளம்.

மகேஸ்வரன் உயர்க்கல்வியாளர்களுடன் அதாவது, பேராசிரியர்கள், பீடாதிபதிகள், உபவேந்தர்கள், கல்வி அமைச்சர்கள், கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய பெருந்தகைகள் என்று பலருடன் பழகும் வாய்ப்பு பெற்றவர். அது, பலருக்கும் கிட்டாத வரம், அவருடன் பழகியதன் மூலம் எனக்கு பல பேராசிரியர்களுடன் பழகும் வாய்ப்பு கிட்டியது. நானும் ஒரு நூல் விரும்பி; சிறிய நூலகமொன்றை வீட்டில் வைத்திருக்கிறேன் என்ற அளவில் எங்களுக்குள் பரஸ்பரங்கள் அதிகம். அலைவரிசையும் ஒன்றாக இருந்தது என்றும் சொல்லலாம். அவருடன் சலிப்பின்றி பல விஷயங்களை பேசிக்கொண்டிருக்கலாம். அவருடன் நான் மேற்கொண்ட பயணங்கள் சிறப்பானவை. சென்னை புத்தகத் திருவிழாவுக்கு அவருடன் சென்ற அனுபவமும், கோவை செம்மொழி மாநாட்டில் கலந்து கொண்டதும் மறக்க முடியாதவை. மகேஸ்வரனின் கல்வித் தகைமைகளுக்கு அப்பால் அவர் ஒரு சிறந்த மனிதர்; எவருக்கும் உதவக் கூடியவர், அன்புள்ளம் கொண்டவர் என்பதெல்லாம் சிறப்பான விஷயங்கள். பைபிளில் இயேசு சொல்வதாக ஒரு வசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும். 'Man shall not live on bread alone, but every word from the month of GOD' என்பது அந்த வசனம். மனிதன் வெறுமனே உணவால் மட்டும் உந்தப்பட்டு வாழ்பவன் அல்ல. அவனது வாழ்க்கை, வாழும் விதம், பேசும் சொற்கள், செய்கைகள் என்பன அவனைச் சுற்றி ஒரு பெறுமதியை, ஒரு கனத்தை உருவாக்குகின்றன. ஒருவர் நீண்ட காலமாக ஓரிடத்தில் சேவையாற்றிவிட்டு அங்கிருந்து நீங்கிய பின்னரும் அவர் விட்டுச் செல்லும் பெறுமதி அவரை நீண்ட காலத்துக்கு பேச வைக்கும். அது போலத்தான் ஒரு மனிதரின் நடமாட்டமும், அவரது நடமாட்டத்துடன் இணைந்து அப் பெறுமதிகளும் கவச குண்டலங்களாக அவருடன் நடமாடுகின்றன. இங்கே மணிவிழா நாயகன் மகேஸ்வரனின் பெறுமதிகள்தான் இம் மணிவிழா நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தைப் பலருள் விதைத்திருக்கின்றன.

மகேஸ்வரனிடம் எனக்கு ஒரு மனவருத்தமும் உண்டு. அவர் அதீத கடவுள் நம்பிக்கை கொண்டவர் என்பதில் எனக்கு பிரச்சினை கிடையாது. ஆனால் கல்வியாளர் என்ற வகையில் சமயத்தின் அடிமட்ட ஆசார அனுஷ்டானங்களில் அதிக நம்பிக்கை கொண்டு அவற்றை பக்தி பூர்வமாக பின்பற்றுவது எனக்குக் கொஞ்சம் இடிக்கிறது. வாகனத்தில் பயணிக்கும் போது மரத்தடிக் கோவில்களில் நிறுத்தி காணிக்கை செலுத்தி கும்பிடு போட்டு பயணிப்பது எல்லாம் எனக்கு விநோதமாக இருக்கும்.

கல்வியாளர்கள் ஏனையோருக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தங்கள் அவசியம். சீர்திருத்த சிந்தனைகள் இல்லையேல் இன்றைக்கும் நாம் கட்டை வண்டியில் தான் சென்று கொண்டிருப்போம். அச்சிந்தனைதான் விதவைகளை, உடன்கட்டை ஏறச்செய்ததை, மொட்டையடித்து மூலையில் அமரச் செய்ததைத் தடுத்தது. தேவதாசி முறையை ஒழித்தது. பெண்களும் கல்வி கற்கலாம்; என்ற விழிப்புணர்வுகள் முகிழ்த்தெழ சீர்திருத்தச் சிந்தனைகள் தான் காரணம். மத்திய ஐரோப்பாவில் தனிமையில் வாழ்ந்த மூதாட்டிகளை சூனியக்காரிகளாகக் கருதி உயிருடன் எரித்துக் கொன்ற கொடிய மூடப்பழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. மற்றும் உலகின் வியத்தகு விஞ்ஞான வளர்ச்சி போன்றனவற்றுக்கெல்லாம் சீர்திருத்த சிந்தனைகளே காரணங்களாகும்.

எனவே நாம் கை கொண்டு வரும் நம்பிக்கைகள், நடவடிக்கைகள், பாரம்பரிய சிந்தனைகளில் அவ்வப்போது சீர்த்திருத்தங்கள் புகுத்தப்பட வேண்டும். இல்லையேல் அவை உக்கிப்போய் விடும். இதைக் கல்வியாளர்கள்தான் செய்ய வேண்டும் செய்தியாளர்கள் அதை நாலா பக்கங்களுக்கும் எடுத்துச் செய்வார்கள். ஆனால் இலங்கைத் தமிழ்க் கல்வியாளர்களில் மிகப்பெரும்பாலானோர் மிகச் சாதாரண மனிதர் களின் நம்பிக்கைகளுடனேயே வாழ்வதையே காண்கிறோம். நடைமுறையில் உள்ள நிறுவனங்களும் நம்பிக்கைகளும், கொள்கைகளும் என்றுமே மிகச் சரியானவை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அவற்றில் உள்ள தவறுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டும். மீறப்படவும் வேண்டும். சில மாதங்களுக்கு முன்னர் பொறுத்துக் கொள்ள முடியாத இளைஞர்கள் 'அரகலய' செய்ததை நாம் பார்த்தோம்.

இந்த 'அரகலய' சிந்தனையை நம் மணிவிழா நாயகரிடமும் எதிர்பார்க்கிறேன். இருப்பதெல்லாம் ஒழுங்காகத்தான் உள்ளன என்று சொல்லித் திருப்திப்படுவதற்காக நீங்கள் இங்கே இல்லை. மணிவிழாவில் நான் கல்வியாளர்களுக்கு சொல்ல விரும்பும் செய்தி இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.மனோகரன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி

எனது பார்வையில் நண்பர் மகேஸ்வரன்

நாம் செல்லமாக மகேஸ் என அழைக்கின்ற நண்பர் மகேஸ்வரன் எனது கல்லூரித் தோழன். புனித சில்வெஸ்டர் கல்லூரியில் க.பொ.த (உ/த) கலைப் பிரிவு வகுப்பிலேயே எமது நட்பு ஆரம்பமானது. நண்பர் மகேஸ் பழகுவதற்கு இனிமையானவர், பண்பானவர். அவர் இருக்கும் இடத்தில் கலகலப்புக்கு குறைவிருக்காது. எப்பொழுதும் இவரைச் சுற்றி நண்பர் குழாமொன்று இருந்து கொண்டேயிருக்கும். கல்லூரியிலே அவருடன் கழித்த மூன்று வருடங்கள் என்றும் மறக்கவியலாத மகிழ்ச்சிகரமான காலங்களாகும்.

கல்லூரிக் காலத்தின் போது கல்லூரிக்கு அண்மையில் இரயில் கடவைக்கு அப்பால் இருந்த அவரது அப்போதைய வீட்டிலேயே நண்பர்கள் அனைவரும் ஒன்று கூடுவோம். பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் வகையில் படிப்பதிலிருந்து அண்மை யிலிருந்த மைதானங்களுக்குப் போய் விளையாடுவது வரையிலான அனைத்து செயற்பாடுகளுக்குமான திட்டமிடல்கள் நண்பர் மகேஸின் தலைமையில் அங்குதான் இடம்பெறும். எப்பொழுதும் மகேஸ் வீட்டில் இருபதுக்கும் மேற்பட்ட ஹொக்கி மட்டைகள் காணப்படும். கல்லூரியின் பிரபல ஹொக்கி வீரரான இவர் கல்லூரியின் அனைத்து வயது பிரிவு அணிகளிலும் விளையாடியவர். இதனால் பயிற்சிக்குறித்தான சகல விளையாட்டு உபகரணங்களும் இவரது வீட்டில் காணப்படும். எனவே நாம் பரீட்சைக்காகப் படித்ததன் பின்னர் அண்மையிலிருந்த அஸ்கிரிய மற்றும் பொலிஸ் மைதானங்களுக்குச் சென்று ஹொக்கி மற்றும் கால்பந்து, கிரிக்கெட் எல்லாம் விளையாடுவோம். இவ்வாறு அன்றைய கல்லூரி நாட்களை நாம் கழித்த விதம் இன்றும் எமது நினைவுகளை விட்டு நீங்காத பசுமையான நினைவுகளாக நிலைத்துள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைத்துறை சிறப்புப் பட்டதாரியான இவர் பல்கலைக் கழகத்திலும் பல்துறை சார் ஆளுமைகளை வெளிப்படுத்தியவர். ஓர் அதிபராக விரிவுரையாளராக பல்வேறு பதவி நிலைகளில் பணியாற்றி இன்று பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பிரதம நூலகராக தம்மை நிலை நிறுத்தியுள்ளவர். எமது புனித சில்வெஸ்டர் கல்லூரியின் மீது ஆழ்ந்த பற்றும் அதன் விருத்தியில் அக்கறையும் கொண்டுள்ள இவர் இதன் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவ ராக மிக நீண்ட காலமாக செயலாற்றி வருபவர். இவர் தனது வாழ்நாளில் மிக அதிகமாக நேசித்த விடயங்களுள் ஹொக்கி விளையாட்டுக்கு சிறப்பானதொரு இடமுண்டு. ஹொக்கி விளையாட்டு வீரராக மட்டுமன்றி பயிற்றுவிப்பாளராக மற்றும் நடுவராக முகாமையாளராக தேசிய மட்டத்தில் உபதலைவராக தடம் பதித்துள்ளவர். ஹொக்கி விளையாட்டுக்காக உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பயணங்களை மேற்கொண்டவர். இலக்கியத் துறையிலும் இவரது ஆளுமை வியந்து போற்றத்தக்கது. உலக நாடுகள் பலவற்றில் இவர் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்பித்துள்ளார். பல்வேறு நூல்களையும் படைத்துள்ளார். சிறந்த ஆய்வாளராக, பேச்சாளராக, விமர்சகராக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகவியலாளராக மிளிரும் நண்பர் மகேஸ் பல்துறைசார் ஆளுமைகளுடன் கூடிய மானுடநேய பண்புகளைக் கொண்ட சிறந்த மனிதராவார்.

கல்லூரிக் காலத்தின் பின்னரும் எமது நட்பு பல்வேறு வகையிலான செயற்பாடு களுடன் தொடர்ந்தது. புனித சில்வெஸ்டர் கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்பாடுகளின் போது இவர் தவறாது எம்மை அவற்றில் இணைத்துக் கொள்வார். எமது கல்லூரியிலிருந்து வெளியேறி சமூகத்தின் பல உயரிய நிலைகளில் இருக்கின்ற பழைய மாணவர்களை கல்லூரி நிகழ்வுகளுக்கு அதிதிகளாக அழைப்பித்து கௌரவிக்கின்ற உயரிய பணியினையும் மேற்கொண்டு வருபவர். எமது மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வுகளிலும் பிரதம அதிதியாகப் பங்குபற்றியுள்ளார். வெளிநாடுகளில் வசிக்கின்ற எமது கல்லூரித் தோழர்கள் இலங்கைக்கு வரும்போது எம் அனைவரையும் இணைத்துக் கொண்டு மகிழ்ச்சிகரமான சந்திப்புக்களை ஏற்பாடு செய்வார். எனது நூல் வெளியீடுகளின் போதும் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியுள்ளார்.

சமூக சேவை தொடர்பிலும் இவரது பங்களிப்பு என்றும் போற்றுதற்குரியது. கண்டி தமிழ்ச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினராக இருந்து இலக்கிய பணியாற்றி வருகிறார். பல்கலைக்கழக மட்டத்திலும் தமக்கு இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் எமது மாணவர்களுக்கு உதவி வருகின்றார். சிங்கள மொழியிலும் மிகச் சரளமாக உரையாடக் கூடிய இவருக்கு சிங்கள மொழி நண்பர்களும் குறைவிலாது உள்ளனர். தமது அன்புத் துணைவியாருடனும் இரு பிள்ளைகளுடனும் மகிழ்ச்சிகரமான இல்லற வாழ்க்கையிலும் ஈடுபட்டுள்ளார்.

எனது மிக நீண்ட கால நண்பர் மகேஸ் மணிவிழா காணும் இந்த சந்தர்ப்பத்திலே அவரை மனதார வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். அவரது தொழில்சார் பணி மென்மேலும் சிறக்கவும் தமது இனிய குடும்பத்தாருடன் இனிதே வாழவும் வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பால் அலி

பன்முக ஆளுமை கொண்ட நடமாடும் நூலகர் இரா.மகேஸ்வரன்

பேராதனை பல்லைக்கழக நூலக வரலாற்றில் தமது பெயரின் தடத்தை ஆழமாகப் பதித்து இன்று மணி விழாக் கொண்டாடும் பிரதான நூலகர் இரா.மகேஸ்வரன் தமிழ் கூறும் நல்லுலகிற்கு கிடைத்தமை ஒரு பெரும் வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்.

எந்தவொரு மாணவனும் நூலகமின்றிப் பல்கலைக்கழக வாழ்வு நிலையை நிறைவு செய்ய முடியாது. தரமான பல்கலைக்கழக மாணவன் குறித்த காலப்பருவத்தில் நூலகத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறுவதில்லை. அவனது வாசிப்பு அளவில் நிகழ்த்தும் மாறுதல்கள் பேராசிரியராக ஆய்வறிஞராக மேல்நிலை கொள்ளச் செய்கிறது. கற்றல் கற்பித்தல் என்ற நிலைகளில் ஒரு நூலகம் என்பது மிகவும் முக்கியத்துமிக்கது.

ஒவ்வொரு வருடமும் பேராதனை பல்கலைக்கழகம் புகுமுக மாணவர்கள் சலிப்பில்லாமல் நாளாந்தம் நூலகம் வந்து புத்தகங்களைத் தேடிப் படித்து அதன் மூலம் உச்சப் பயனை அடைந்து வெளியே செல்லுகின்றனர். இவர்களே நமது மண்ணையும் நாட்டையும் நேசித்து பொருளாதார விருத்தியையும் எதிர்காலச் சந்ததியினர்களையும் உருவாக்கி வருகின்றார்கள். இத்தகைய மாணவர்களால் இரா.மகேஸ்வரன் அவர்களின் பன்முக ஆளுமையை அறியாமல் இருக்க முடியாது. மகேஸ்வரன் நூலகர் மட்டுமல்ல. அரும்பெரும் நூல்களின் தகவல் களஞ்சியமாகவும் இருந்து வருகிறார்.

நூலகர், எழுத்தாளர், ஹொக்கி விளையாட்டுத் துறையின் முகாமையாளர், சிறந்த ஊடகவியலாளர் என்பது மட்டுமல்லாது உலக நாடுகளில் நடைபெறும் ஆய்வு மாநாடுகளில் கலந்து கொண்டு கட்டுரைகளைச் சமர்ப்பித்து நமது நாட்டிற்கான பெருமையை நிலைநாட்டி வருபவர். அக்காலக்கட்டத்தில் அவ்விளையாட்டுத் துறை மூலம் பல பண்பான சிங்கள நண்பர்களையும், இஸ்லாமிய நண்பர்களையும் பெற்றுக் கொண்டது பெரும் பேறான விடயம் என அடிக்கடி கூறுவார். இன, மத, மொழி பேதமற்ற ஓர் நல்ல மனிதர்.

பல்கலைக்கழக கல்விசார் சூழலில் எழுத்துத்துறை, ஹொக்கி விளையாட்டு, கண்டி முத்தமிழ் சங்கம் இலக்கியம் செயற்பாடுகள் முதலிய அமைப்புக்களில் பிரதான பதவிகளில் இணைந்து பணியாற்றி தனது பெயரினது அடையாளத்தையும் முகவரியையும் பதிவு செய்து கொண்டவர். இவர் நூலக விஞ்ஞான பாட ரீதியில் ஆங்கில மொழியில் ஏழு நூல்களும், தமிழ் மொழியில் எட்டு நூல்கள் வெளி யிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர அவர் இலங்கையில் இருந்து மலேசியாவில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் சென்ற குழுவிலும் மற்றும் இலங்கையில் இருந்து இந்தியா காயல்பட்டிணத்தில் நடைபெற்ற இஸ்லாமிய மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக கவிஞர் ஜின்னா ஷரிப்தீன் தலைமையில் சென்ற குழுவிலும் கலந்து கொண்டவர். அதேவேளை அவர் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு பதிவுகளை ஆவணப்படுத்தி "அமைதி வழியும் மதுர மொழியும்" என்ற ஒரு பயணக் கட்டுரை நூலொன்றை வெளியிட்டார். லண்டனில் நடைபெற்ற இலக்கிய மாநாட்டலும் கலந்துகொண்டவர். அம் மகாநாட்டுப் பதிவுகளை ஆவணப்படுத்தி "ஆண்ட பரம்பரை" என்னும் மற்றுமொரு நூலையும் வெளிக்கொணர்ந்துள்ளார். இந்த இரு நூல்களின் பயணக் கட்டுரை "வண்ண வானவில்" பத்திரிகையில் தொடராகப் பிரசுரம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் மகேஸ்வரன் இஸ்லாமிய இலக்கியப் பணிகளுக்கு உந்து சக்தியாக இருந்துள்ளார் என்பது மட்டுமல்ல தமிழ் முஸ்லிம் உறவுகளுக்கு ஒரு பாலமாக இருந்து வந்துள்ளார் என அறிய முடிகிறது. மலையக பெண்முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றி உள்நாட்டு ஆய்வு மலர்களிலும் வெளிநாட்டு பல்கலைக்கழகச் சஞ்சிகைகளிலும் எழுதி வருகின்றார். இத்தகைய தன்மை இஸ்லாமிய எழுத்துத் துறையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதோடு நம்மை பிரமிக்கச்செய்துள்ளதுடன் இரு சமூகத்திற்கிடையிலான உறவை மேலும் வலு சேர்க்கச் செய்கிறது. இஸ்லாமிய இலக்கிய உலகில் மலையக முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் நாமத்தையும் அவர்களது குறித்த சிந்தனைகள், செயற் திட்டங்கள் எல்லாவற்றையும் மீண்டெழச் செய்து புது உலகத்திற்கு அழைத்துச் செல்லச் செய்துள்ளமை மகேஸ்வரனின் பயணத்தில் மற்றுமொரு சிறப்பு நம்மை ரசிக்க வைத்துள்ளது.

ஏராளமான முஸ்லிம் அறிஞர்களையும் முஸ்லிம் அன்பர்களையும் நண்பர்களாகக் கொண்டவர். இன மத, மொழி என்ற குறுகிய வட்டத்துக்கப்பால் மனித நேயத்துடன் பழகும் நல்லகுணமுடையவர்.

பொதுவாக விளையாட்டுத் துறையில் ஈடுபடுபவர்கள் விளையாட்டுக்களோடும், நூலாய்வாளர்கள் தமது ஆய்வுகளோடு நின்று விடுவது வழமை. மகேஸ்வரன் இதற்கு மாறாக பல்வேறு துறைகளிலும் செயற்பட்டு பங்களிப்புச் செய்துள்ளார். வெறுமனே நூலகத் தொழில் துறையில் மட்டும் ஈடுபடாது; ஹொக்கி விளையாட்டுத் துறையில் ஈடுபாடு காட்டிய திறனும் ஹொக்கி சங்க முகாமையாளர் பயிற்றுவிப்பாளர், ஊடகவியலாளர், ஆய்வாளர் முதலியவற்றினுடைய அறிவும் திறனுமிருந்தால் மட்டுமே இத்தகைய பன்முக ஆளுமையை பெற முடியும் என்பது எனது மிக முக்கியமான கருத்தாகும்.

இவர். தந்தை இராசையா, தாயார் அன்னபூரணம். இவர் 1962 ஆகஸ்ட் 29 கண்டி நேசிம் ஹோமில் பிறந்தவர். 1933 களில் அவர் பாட்டனார் முருகேஸ் கண்டியில் பிரபல்யமான வர்த்தகராக தொழில் புரிந்தார். அக்கால கட்டத்தில் கண்டியில் கொழும்பு வீதியில் அமைந்துள்ள முருகன் ஸ்டோர்ஸ் என்னும் பெயரிலும் பிற்காலத்தில் (முத்துமாரியம்மன்) என்னும் பெயரில் இயங்கி வந்த கடையானது இவர் தந்தைக்கு உரித்தான கடையே. அதேவேளையில் 1954-களில் இவரது தந்தை கண்டி யட்டிநுவர வீதியில் 54 இலக்கத்தில் அமைந்துள்ள கடையொன்றையும் வாங்கி இருந்தார். கண்டி யட்டிநுவர வீதியில் நெலும் ஜவுளிக் கடைக்கு அருகாமையில் மல்லிகா ஸரோஸ் என்ற பெயரில் அமைந்துள்ள கடையை அப்பொழுது அவர் பாட்டனும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவும் சேர்ந்து நடத்தினார்கள். பின்னர் அப்பா தனியாக யட்டிநுவர வீதியில் உள்ள தினபால என்ற இடத்தில் நியூ மல்லிகா என்ற பெயரில் கடையொன்றை செய்தார். இப்படி அவர் தந்தை கண்டி நகரில் தனியாகவும் கூட்டாகவும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஒரு பிரபல்யமான வர்த்தகர். இத்தகைய வர்த்தகக் குடும்பத்தில் பிறந்தவர்தான் இரா.மகேஸ்வரன். இவர் தம்பி லோகேஸ்வரன் வவுனியா கல்விக் கல்லூரியில் உதவித்தலைவராக கடமையாற்றி வருகிறார்.

1974-களில் மகேஸ்வரனின் 10 வயதில் தந்தை மரணம் எய்தினார். அப்பாவின் இறப்பிற்குப் பின்னர் வர்த்தகத் துறையை முன்னெடுத்துச் செல்ல வழியில்லை. ஒரு பொருளாதார நெருக்கடியான நிலை ஏற்பட்டது. வர்த்தக சமூகத்தில் இருந்து முற்றாக வெளியேற வேண்டிய சூழல் இருந்தது. குறிப்பாக தந்தையின் கடையைச் செய்வதற்கு ஆளில்லை. அப்பொழுது குடும்பத்தில் எல்லோரும் படித்துக் கொண்டிருந்தார்கள். பின்னர் அவைகளை எல்லாம் விற்பனை செய்யப்பட்டன.

கடைசியாக கட்டுகஸ்தோட்டை வீதியில் ஒரு வீட்டை வாங்கி குடியிருந்தார்கள். இரா.மகேஸ்வரன் ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த சாதாரண உயர்தரம் வரையிலும் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் கற்று 1983-ம் ஆண்டில் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டார். இவர் 1983-ம் ஆண்டு பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட போதிலும் அங்கு தொடர்ந்து கல்வி கற்பதற்கான சூழல் இருக்க வில்லை. அப்பொழுது மக்கள் விடுதலை முன்னணியினரின் கிளர்ச்சியினால் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய பயங்கவாரத சூழல் காரணமாக பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கம் தடைப்பட்டிருந்தது. அச்சங்கத்தை மீண்டும் உயிர்ப்பித்து திறன்பட செயற்பட்டவர் மகேஸ்வரன்தான். அவர் சங்கத்தின் முக்கிய பதவியான செயலாளர் பொறுப்பினை ஏற்றுச் செயற்பட்டார் விவாத சபையின் உபதலைவராக செயற்பட்டவர். அவர் ஓர் உண்மையான இலக்கியச் செயற்பாட்டாளர். தானும் இயங்கி மற்றைய நண்பர்களையும் இயங்க வைத்து பல்லைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்துறையை மென்மேலும் உயர்த்த கண்ணும் கருத்துமாக இருந்து பாடுபட்டு உழைத்தவர்.

எட்டு வருடம் பல்கலைக்கழக வருடத்தை நிறைவு செய்து வெளியேறினார். 1987-களில் வெளியேற வேண்டியவர் 1990-களில் தான் வெளியாகினார். அவர் புவியல் துறையில் விசேட கௌரவ சித்தியடைந்தார். அதன் பின்னர் அப் பல்கலைக் கழகத்தில் ஹொக்கி விளையாட்டுப் பயிற்சிப் பிரிவில் பயிற்றுவிப்பாளகராக கடமையாற்றினார். 1994 -களில் உதவி நூலகராக பேராதனை பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்பட்டார்.

1996 களில் தான் அவர் ஊடகத்துறையில் பிரவேசிக்கின்றார். கண்டியில் தமிழ்சார் ஊடகவியலாளர் ஒருவர் வெற்றிடம் உள்ளதாக தினகரனில் விண்ணப்பம் கோரப்பட்டது. கண்டியில் இருந்து 13 பேர் விண்ணப்பம் செய்திருந்தார்கள். இதற்காக போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. இது கண்டி சென் போல்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இதில் மகேஸ்வரன் முதலிடத்தில் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் கண்டியில் ஊடகவியலாளராக நியமிக்கப்பட்டு அன்று முதல் இன்று வரையிலும் செயற்பட்டு வருகிறார். அவர் ஊடகத்துறையிலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எண்ணற்ற செய்திகளையும் எழுதி செல்வாக்குப் பெற்ற ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனை பல்கலைக்கழகத்தில் மாணவராக இருக்கும் காலட்டத்தில் இருந்து எல்லா இலக்கிய கூட்டங்களில் கலந்து கொள்பவர். மேடைகளில் நூல்களின் அறிமுகங்கள் நூல்கள் பற்றிய கருத்துரைகளை அதிகளவு செய்து வந்தார். 1982 களில் அவர் வீரகேசரியில் முதன் முதலாக மலையக அரசியல் கட்டுரையொன்றையே எழுதினார்.. அதற்குப் பின்னர் 1983, 1984, 1985, 1986, 1987–ஆம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கொள்கைகள் சம உடமைக் கருத்துக்களையும் போராட்ட முன்னெடுப்புக்கள் பற்றியும் தொடர்ந்து எழுதினார். அன்றைய நெருக்கடி மிகுந்த காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் களநிலவரத்தை பத்திரிகையில் எழுதுவது எளியதான செயல் அல்ல. இந்த கால கட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியோடு தொடர்புபட்ட கிளர்ச்சியாளர்கள் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமானது. இந்தச் சூழ்நிலையில் தான் இரா. மகேஸ்வரன் மன தைரியத்தோடு அரசியல் கட்டுரைகள் எழுதினார் என்பது ஒரு முக்கிய அம்சமாகும்.

அவை மாத்திரமல்ல கடல் வளம், மண் சரிவு, கடல் மாசுபடுதல், புவியியல்சார் காடழிப்பு துறைசார்ந்த, பொது மக்களுக்குத் தேவையான 300 க்கும் அதிகமான கட்டுரைகள் தேசிய பத்திரிக்கைகளில் எழுதியுள்ளார். இத்தகைய கட்டுரைகளை தொகுத்து நூலாக வெளியிடவில்லை. எனினும் தற்போது இக்கட்டுரைகளைத் தெரிவு செய்து நூலாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும் மலையகத்தில் முத்திரை வெளியிடப்பட்ட தலைவர்கள் என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையினை தேடி எடுத்து அதனை பிறர் நூலாக வெளிக் கொணர்ந்துள்ளார்கள். இப்படி பல கட்டுரைகள் மீள் பிரசுரங்கள் செய்யப்பட்டுள்ளன.

மலையகத்தில் ஒவ்வொரு வருடம் நடைபெறும் மத்திய மாகாண சாகித்திய விழாவில் விழாக் குழுவில் இருந்து செயற்பட்டுள்ளார். அத்துடன் ஒவ்வொரு விழா மலரிலும் இவரது ஆய்வுக் கட்டுரை இடம்பெறும். மகேஸ்வரனின் மிகவும் எளிமையான தமிழ் நடையையும் தமிழ் இலக்கிய ஆற்றலையும் அகன்ற பார்வையையும் புரிந்து கொள்ள இம்மலர்களில் இடம் பெற்றுள்ள ஆய்வு கட்டுரைகளே போதுமானதாகும். ஏழு சாஹித்திய விழா மலருக்கு ஆசிரியராகவும் ஐந்து மலருக்கு உதவி ஆசிரியராகவும் இருந்து மலையக சாஹித்திய விழாக்களில் இவர் ஒரு தனி முத்திரை பதித்தவர்.

தினகரனில் ஒரு சிறுகதை எழுதியுள்ளார். இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் அதிகம் எழுதியுள்ளார். 1890–களில் மலையகத்தில் ஆரம்ப காலத்தில் வெளிவந்த முனியாண்டி இலக்கிய சஞ்சிகை முதல் அதற்குப் பிற்பட்ட காலத்தில் வெளிவந்த மலைமுரசு உள்ளிட்ட நூற்றுக்கணக்கான சஞ்சிகைகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் அறிமுகப்படுத்தியவர். இவருக்கு இணையாக மலையகத்தில் நூலக ஆய்வுத் துறையில் யாரும் இல்லை என்று துணிந்து சொல்லலாம். நதி கடந்த களம், என்னும ஒரு நூலையும் வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கு மத்திய மாகாண சாஹித்திய விருது வழங்கப்பட்டது. உளவியல் அறிவும் நூலக ஆசிரியர் செல்நெறியும் என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

28 வருடங்கள் போராதனை நூலகத்தில் சேவையாற்றி வரும் இவர் இந்தப் பல்கலைக்கழக வரலாற்றில் முதன் முறையாக ஒரு தமிழ் நூலகர் பதவியில் இருப்பது இதுவே முதல் தடவையாகும். இப்பதவியானது சிரேஷ்ட பேராசிரியருக்கு ஒத்த பதவியைக் கொணடதாகும். எட்டாவது நூலகராவர். அதில் முதலாவது தமிழராக இவர் திகழ்கிறார். பன்முக ஆளுமை கொண்ட இவர் ஹொக்கி விளையாட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையின் தேசிய பயிற்றுவிப்பாளர், அகில இலங்கை ஹொக்கி விளையாட்டுக் கழகத்தின் உப தலைவரும் முகாமையாளரும் ஆவார். உதவி நூலகராக நியமனம் பெற்று அதற்குத் தேவையான மேல்பட்ட படிப்பின் படிப்புக்களை மேற்கொண்டு முதல் தர நூலராகவும் ஓர் ஊடகவியலாளராகவும், ஹொக்கி விளையாட்டுத் துறைப் பயிற்றுவிப்பாளர் மற்றும் ஹொக்கி முகாமையாளர் எனப் பல்வேறுபட்ட துறைகளிலும் சோர்ந்திடாது செயற்பட்டு வரும் இவரது தலைமைத்துவப் பண்புகள் எதிர்காலச் சந்ததியினர்களுக்கு சிறப்புடன் உணர்த்தக் கூடியவையே.

இவர் உதவி நூலகராக கடமையாற்றி வரும் சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக துறை சார்ந்த மாணவர்களுக்கு மட்டுமல்ல பல்லைக்கழகத்திற்கு வெளியே உள்ள நண்பர்களுக்கும் நூல்களை வழங்கி உதவி புரிந்தவர். குறிப்பாக முஸ்லிம் நண்பர்களுடைய கல்வி மேம்பாட்டுக்காக நிறைய பங்ளிப்பு செய்துள்ளார். எவராது சரி உசாத்துணைக்காக நூலொன்றைத் தேடிவந்தால் யார் எவரொன்று பார்க்காமல் குறித்து நூலை தன்னுடைய பெயரில் பதிவு செய்து கொடுப்பவர். உண்மையிலே நான் கூட நிறைய புத்தகங்கள் எடுத்துக் கொடுத்துள்ளேன். இந்தச் சந்தர்ப்பத்தில் எமது இருவருக்கிடையே இருந்த வலுவான தோழமை உறவையும் அவரது பணியையும் இப்பொழுது நினைவு கூர்ந்து கொள்வது மிகப்பொருத்தமானதாக அமையும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நூலக விஞ்ஞானக் கற்கைத் துறைக்கான பாட நெறியை முதலில் ஆரம்பித்து வைத்தவர் என்ற பெருமை அவருக்கு இருக்கிறது. இது 2021–களில் ஆரம்பிக்கப்பட்டது. மும்மொழிகளிலும் போதிக்கப்படுகிறது. சிங்களம் 30, தமிழ் 133, ஆங்கிலம் 13 என்ற அளவில் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளார்கள். இப்பாட நெறியின் நிறுவனர்களின் முன்னோடி இரா.மகேஸ்வரன் என்பது பதிவு செய்ய வேண்டிய ஒன்று.

1974–களில் அவர் 12 வயதில் ஹொக்கி விளையாடத் தொடங்கினார். 13 வயது முதல் 19 வயது எல்லைக்குக் கீழ் உட்பட்ட பிரிவுகளில் விளையாடியவர் கடைசியாக தேசிய மட்டத்தில் அகில இலங்கை பாடசாலைசலை அணிக்கு விளையாடினார். பாடசாலை விட்டு விலகிய பின்னர் கண்டியில் ஹொக்கி விளையாட்டுக்கென கழகம் ஒன்று இருக்கவில்லை. கே.எச்பி என்ற பெயரில் ஹொக்கி விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்தார். இதுதான் கண்டியில் முதல் விளையாட்டுக் கழகம். இந்த விளையாட்டுக் கழகத்திற்கும் இன்று 41 வயது ஆகும்.

இந்த விளையாட்டுக் கழகத்தின் மூலம் 1990–களில் கண்டி மாவட்ட சம்மேளனத்தின் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். அன்று முதல் இன்று வரையிலும் 17 வருடங்கள் செயலாளராகவும் தலைவராகவும் தொடர்ந்து பதவி வகித்து வருகிறார். கண்டி மாவட்ட சம்மேளனம் ஊடாக 1991 அகில இலங்கை ஹொக்கி விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவரானார். 1994 களில் அகில இலங்கை ஹொக்கி விளையாட்டுக் கழக சம்மேளனங்களின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இன்று வரை தொடர்ந்து உப தலைவராக கடமையாற்றுவதுடன் சிரேஷ்ட உபதலைவராகவும் ஹொக்கி பயிற்று விப்பாளாகவும் பதவி வகித்து வருகிறார். கூடுதலாக ஹொக்கி விளையாட்டுக் கழகங்கள் வெளிநாடுகள் செல்லும் போது கூடுதலாக இலங்கைகயின் ஹொக்கி தேசிய அணிக்கு முகாமையாளராகவே சென்றுள்ளார். இந்த விளையாட்டுத்துறை யின் மூலம் உலகில் உள்ள பல்வேறு நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். இவர் இருபது தடவைகளுக்கு மேல் ஹொக்கி முகாமையாளராக சென்று வந்த பெருமை அவருக்கு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாக வாசிப்பு குறைந்தது என்று சொல்வதற்கு இல்லை. முன்னர் போன்று கண்டதெல்லாம் வாசிக்காமல் இப்பொழுது மக்கள் தேடி வாசிக்கத் தொடங்கி விட்டார்கள். கூடுதலான மக்கள் தேடி வாசிக்கின்றார்கள். முன்னர் பக்கங் கணக்கில் கம்பராமாயாணம் வாசித்ததை இப்போது அதனை சுருக்கமாக வாசிக்கின்றார்கள். ஆதலால் கூடுதலான நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. குறுஞ்செய்தி, முகப்புத்தகம், வாட்ஸ்அப் போன்றவற்றில் வரும் தகவல்களை வாசிக்கின்றார்கள். இதனால் வாசிப்பு குறைந்து போய்விட்டது என்று சொல்ல முடியாது. நிறையப் பேர் வாசிக்கின்றார்கள். வாசிப்பு என்பது ஒரு தளம் மாறி இருக்கிறது. ஒரு தளத்தில் இருந்து இன்னுமொரு தளத்திற்கு சென்று இருக்கிறது. முன்னொரு காலத்தில் புத்தகமாக வாசித்ததை இப்போது கைத்தொலைபேசியில் வாசிக்கிறார்கள். குறுந் தகவல்களாக வாசித்துக் கொண்டு போகின்றார்கள். வாசிப்புத் துறையில் எந்தவொரு வீழ்ச்சியும் ஏற்பட வில்லை. இன்னும் மக்கள் வாசித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார் மகேஸ்வரன்.

இவர் எழுதிய நூல்கள் எல்லாம் இந்தியாவிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகம் அண்ணாமலை பல்கலைக்கழகம், திருச்சி சிதம்பரம் பாரதப் பல்கலைக்கழகம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் நூலக விஞ்ஞான கற்கைப் பிரிவுகளில் உசாத்துணை நூலாகவும் பாட நூலாக இருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தோழர் இரா.மகேஸ்வரன் மிகச் சிறந்த இந்து சமூக சமயச் செயற்பாட்டாளர். இவரது அறிவுத்திறன், மனித நேயம் ஆகியவையும் இவரது ஊடகம் மற்றும் ஹொக்கி விளையாட்டுத் துறை ஒளி வீசுவதற்கு தாராளமாக அமைந்துள்ளன. நண்பர் மகேஸ்வரனின் அறிவுத் திறன் பழகும் திறன் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட ஒருவர்களுள் நானும் ஒருவன்.

தனது திறமையில், தனது எழுத்தில் அபார நம்பிக்கை கொண்டவர் இவருடைய புகழ் என்றும் நிலைத்து நிற்கும். மகேஸ்வரன் என்றாலே நூலகம் என்பதுதான். ஆம். மகேஸ்வரன் ஒரு நடமாடும் நூலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து ஸ்ரீமதி

மணிவிழா நாயகனுக்கு

எட்டாக்கனியை தொட்டுக்காட்டிய
எங்கள் ஏகலைவன்
பேராவின் பேராளுமை
பேராசான்எங்கள்
மணிமகுடம் சூடபோகும்
மாமனிதர் தான் இவர்

கண்டி கண்டெடுத்த
கணவான்களின் வரிசையில் இன்று
காத்திரமாக ஒட்டிக்கொண்டது
கல்வியும், விளையாட்டும்

முடிசூடா மன்னன்
தமிழ்பற்றான் ஒருபுறம்
துறைசாரா தூரநோக்கங்கள்
துயரில்லை இப்போது என்றாலும்
சாதனைகள் பல செய்ய
சாத்தியங்கள் இருந்தாலும்
சங்கடங்களும் இருந்திருக்கும்

சரித்திரத்தில் சிகரம் தொட்ட
சாமானியன்
சர்வதேச சமராளன்
ஹொக்கியில்
சாதித்த துறைகள் பல
பல் தேசம் சென்று
பல திறமை புரிந்து
இன்று மணிவிழாவில் நீங்கள்

அனுபவம் ஆளுமை
இவையிரண்டும்
உயர்த்தியது.
எனக்கு வாழ்த்த வயதில்லை ஐயா
வணங்குகிறேன்
வருடங்கள் பலநூறு
வாழ வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே.கிருஷ்ணமூர்த்தி
ஒருங்கிணைப்புச்செயலாளர்,
இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான
நூலக தகவல் உதவியாளர்கள் அலுவலகர்கள் சங்கம்

அறுபது அகவையினைக் காணும் பல்கலைக்கழக நூலகர் இராசையா மகேஸ்வரனின் தொழிற்சங்க உறவு

மனித வாழ்வின் அகவையில் அறுபது என்பது வாழ்வின் பூரணத்துவத்தின் முக்கிய பகுதியெனலாம். இவர்களுள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நூலகராக தற்போது திகழும் திருவாளர் இராசையா மகேஸ்வரன் பல்கலைக்கழக மாணவன் காலத்தில் சக மாணவர்களின் நலனுக்காக பல்கலைக்கழக நிர்வாகத்திடம் இருந்து உரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பது அவரது பல்கலை பருவ நடவடிக்கைகளில் ஒன்றாகவிருந்தது. சக மாணவர்களின் நலத்தின் பொருட்டு அமைக்கப்பட்ட கடமைக் குழுக்களில் (Action Committees) பங்கு பற்றிச் செயற்பட்டதுடன் அக்குழுக்கள் சிலவற்றுக்குத் தலைமை தாங்கி நடத்தியவர். அக்காலத்தில் "நடத்திச் செல்பவர்" (Student Leader) என்று அழைக்கப்படுபவர்.

தலைவராக இருக்கும் காலப் பகுதிக்குள் பல்கலைக்கழக காலப்பகுதிக்குள் மாணவர்கள் தமது புலமைசார் நடவடிக்கைகளுடன், சமய, சமூக நலன்களில் நாட்ட முடையோராய் இருப்போரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அந்தவகையில் இன, மத, மொழி வேறுபாடின்றி சக மாணவர்களின் வளர்ச்சி, எழுச்சியின் பொருட்டுச் செயற்பாடுகளை முன்னெடுத்தவர் மகேஸ்வரன் சேர் என்றால் மிகையாகாது. அது மட்டுமல்ல அக்காலகட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள், அவர்களின் குடும்பங்களுக்கு உதவி புரிவதில் மகேஷுக்கு நிகர் மகேஷ் ஆகும்" என இவருடன் அக்காலத்தில் வளாகத்தில் படித்த சக மாணவர்கள் இப்போதும் நினைவு கூறுகின்றனர்.

மேலும், அக்காலத்தில் இரண்டு தமிழர்களே மாணவர் நடவடிக்கைக் குழுவில் இருந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர் பொறியியல் பீடத்தில் கல்வி கற்று வந்த இரஞ்சிதன் குணரட்ணம் (தற்பொழுது முன்னணி சோசலிஸ்ட் கட்சியின் தலைவரான குமார் குணரத்னத்தின் கூடப்பிறந்த மூத்த சகோதரன்) பின்னரே இரஞ்சன் குணரட்ணம் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணித்து விட்டார். அதில் மற்றைய மாணவத் தலைவன் இராசையா மகேஸ்வரன். இவர் தான் செய்யும் பிறர் நல சேவைக்காக எதனையும் பிரதி உபகாரமாக பெறுபவர்கள் அல்லர் என்பதனை தன்னுடன் வளாகத்தில் கற்ற ஏனைய மாணவ சமூகத்திற்கு நிரூபணமாக்கிக் காட்டியவர்.

அவ்வாறே திருவாளர் இராசையா மகேஸ்வரன் தனது பட்டப் படிப்பினை முடித்துக் கொண்டு தொழில் துறைக்குப் பிரவேசித்த பின்னர் பல்கலைக்கழகங்களில் தமது அறிவு ஊழியத்தை (Knowledge Labour) வேதனத்திற்காக விற்கும் புலமையாளர்களும், தமது உடல் ரீதியான ஊழியத்தினை சம்பளத்திற்கு விற்கும் (Manual Labour) உடல் உழைப்பாளர்களும் அவர்களின் மேலாளர்களினால் பெறப்படும் மேலதிக உழைப்புச் சுரண்டல்களையும் தட்டிக் கேட்பதற்கு பல்கலைக்கழக ஆசிரிய தொழிற்சங்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(FUTA) பல பதவிகளை வகித்தார். அதில் மத்திய குழுவிற்கு பேராதனைப் பல்கலைக் கழகத்தினை பிரதநிதித்துவப்படுத்த நியமிக்கப்பட்டார். அந்தக் காலப்பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்குக் கீழ் இயங்கும் சகல பல்கலைக்கழக கல்விசாரா மற்றும் நிர்வாகத் துறைப் பணிக்குழுவினர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்திருந்தனர். என்றாலும் அந்தப் போராட்டம் சற்றுத் தோல்வியைத் தழுவி நின்றது. அதற்குக் காரணம் அக்காலத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் காமினி சமரநாயக்க. இவர் தனது தலைமையில் ஆணைக்குழுவின் கூட்டத்தினை அவசர அவசரமாகக் கூட்டி இலங்கை பல்கலைக்கழகத் துறையில் எந்த ஒரு வேலைநிறுத்தத்தினையும் செய்ய முடியாதவாறு சுற்றறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தார்.

அக்கால ஒட்டத்தில் இலங்கையில் பழமையானதும் உயர் கல்வி நடவடிக்கைகளிலும் ஆராய்ச்சிகளிலும் விசாலத்தன்மையினை கொண்டிருந்த பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஆசிரியத் தொழிற்சங்கம் திருவாளர் இராசையா மகேஸ்வரனை தனது மத்தியகுழுப் பிரதிநிதியாக நியமித்திருந்தது. இச்சங்கத்தில் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கிய இவாஜீன் வழிநடத்தல்கள் அவர்களின் நூறு (100) நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தினை வெற்றிகரமாக கொண்டு நடத்திக் கொண்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட பேராசிரியர் காமினி சமரநாயக்கவின் 2007.06.07 திகதியிடப்பட்ட 890 இலக்கத்தினைக் கொண்ட ஆணைக்குழு சுற்றறிக்கையானது அடையாள வேலைநிறுத்தம், வெளிநடப்பு, தொடர்ச்சியான வேலைநிறுத்தம் போன்றவற்றினை முற்றாகத் தடை செய்திருந்த நிலையில் இராசையா மகேஸ்வரன் போன்றோரின் வெளிப்படையான அயராத முயற்சியினால் அச்சுற்றிக்கை தவிடு பொடியாக்கி முறியடிக்கப்பட்டது. அதன் மூலம் போடப்பட்டிருந்த தொழிற்சங்க உரிமைக்கான எல்லைகள் உடைத்தெறியப்பட்டு எல்லைகளைக் கடந்து பல்கலைக்கழக மட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கான உரிமை வட்டம் தேவையான அளவு விரிவாக்கப் பட்டமை இங்கு பெருமிதத்துடன் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான இவரது வளாக மாணவப் பருவத்திலும் தொழில் துறையிலும் தொழிற் சங்க உறவுகளைப் பயன்படுத்தி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்து கொண்டிருந்த தமிழ்ச் சங்கம் ஒரு காலகட்டத்தில் இனவாத பூசல்களால் தடை செய்யப்பட்டது. அந்தளவிற்கு அபாயகரத்தினை நோக்கிய சூழலாக இருந்தது. இதற்குத் திருவாளர் மகேஸ்வரன் மீளுயிரளித்து மீண்டும் துளிர் விடச் செய்த பெருமையை தன்னகத்தே கொண்டுள்ளமையும் இங்கு மகிழ்ச்சியுடன் தமிழ் பேசும் உள்ளங்களுக்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பகிர்வதில் பெருமையடைகிறோம்.

இங்ஙனம், மென்மேலும் திருவாளர் இராசையா மகேஸ்வரனின் வாழ்வில் நித்தம் நலமெனச் சுடர்தரும் ஒளி மிளிர நெஞ்சார வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிந்தசாமி புஸ்பலிங்கம்

தலைவர் பலகொல்ல சைவ முன்னேற்றச்சங்கம்

எனது மதிப்பிற்குரிய நண்பர் மகேஸ்வரன் சேர்,

இவ்வருடம் மணிவிழாக் காணும் விழாநாயகன் இரா.மகேஸ்வரனுடன் நான் 17 வருடங்களாக தொடர்பில் உள்ளேன். இவரும் நானும் மிக அண்மையில் வசித்து வந்ததாலும் எனது வியாபார நிறுவனத்திற்கு பின்னால் அமைந்துள்ள அறநெறி பாடசாலைக்கு அவர் பிள்ளைகளுடன் அடிக்கடி அங்கு வருகைத்தரும் போதும், வேறு பல நண்பர்கள் மூலமும் இவரைப் பற்றி ஓரளவு தெரிந்துக் கொண்டேன். அதாவது இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி லைபிறரியன் ஆக வேலை பார்ப்பதாகவும், சிறந்த ஹொக்கி விளையாட்டு வீரராக இருந்தவர் என்றும் பிரபலமான ஊடகவியலாளர் எனவும் அறிந்துக்கொண்டேன். அத்துடன் அவரது சிறந்த நேர்மையைக் கண்டு ஆச்சரியப்பட்டிருந்தேன். அதனால் அவர்மீது எனக்கு நல்ல மரியாதை ஏற்பட்டது.

இவருக்கும் எனக்குமுள்ள தொடர்பு அவரது மகன்மார்கள் மூலம் கிடைக்கப் பெற்றது. அதாவது 2005ஆம் ஆண்டளவில் எம்மால் பலகொல்லயில் நடாத்தப்பட்டு வந்த திருவள்ளுவர் அறநெறி பாடசாலையில் மகன்மார்கள் கற்க வந்த காலத்தில் ஏற்பட்டது. பலகொல்ல சைவ முன்னேற்ற சங்கத் தலைவராக நான் இருந்தபோது அறநெறிப் பாடசலைக்குத் தேவையான வசதிகள் யாவற்றையும் எனது செலவில் மேற்கொண்டு வந்ததை அறிந்த மகேஸ் சேர், என்னோடு நட்பு கொண்டார். பிற்பட்ட காலங்களில் எமது சங்கத்தால் நடாத்தப்பட்ட கலைவிழாவின் போது சங்க உறுப்பினராக, இதழ் ஆசிரியாராக செயற்பட்டார். கலைவிழா மலர் ஒன்று வெளியிட வேண்டுமென சங்கத்து நிர்வாகிகள் தீர்மானித்த வேளையில் இதழாசிரியராக செயற்பட மகேஸ்வரன் சேர்தான் பொருத்தமானவர் என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. அப்பொறுப்பை செவ்வனே செய்து முடித்தார். இவர் மத்திய மாகாண சாகித்ய விழா மலர்கள் பலவற்றின் இதழாசிரியராக செயற்பட்ட அனுபவம் இந்த நூலிலும் காணக்கூடியதாக இருந்தது. முக்கியமாக இவரால் எழுதப்பட்ட பலகொல்ல தமிழர் தொடர்பான ஆய்வு கட்டுரை சிறந்த ஆவணமாக அனைவராலும் பாராட்டப்பட்டது.

எனவே, இவ்வாறு எங்கள் அடிக்கடி சந்திப்பு தொடரும்போது சிறந்த நட்பாக மாறியது. சைவபக்தியும், தமிழ்பற்றும் கொண்ட எனக்கு அதே குணவியல்புகளுடன் சகலகலா வல்லவரான மகேஸ் சேரின் நட்பு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்தவகையில் அவரோடு பல நாடுகளுக்கும் சென்று வந்துள்ளேன். குறிப்பாக ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்காக சென்றிருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் – சிதம்பரம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் – திருச்சி, அன்னை திரேசா பல்கலைக்கழகம் – கொடைக்கானல் ஆகிய இடங்களுக்கு அவருடன் சென்று வந்தேன். அங்கெல்லாம் அவருக்கு வழங்கப்பட்ட மதிப்பு மரியாதை கண்டு வியந்து போனேன். இந்திய அரசியல்வாதிகள், அந்நாட்டு பேராசிரியர், இலக்கியவாதிகள் ஐயா, சார் என விளித்து கதைப்பதைக் கேட்டு நானும் சந்தோஷமடைந்தேன். இந்நாட்டிலுள்ளோர் கொண்டுள்ள மதிப்பை விட அது பெரிதாக எனக்குப்பட்டது. எங்களது இந்நட்பும், அன்பும் இன்னும் பல வருடங்கள் தொடர இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

"மேன்மைக்கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAHESWARAN'S
Life Story and Biography

R. Mahewaran, was born in Kandy on 29th August 1962, as the eldest son of late Mr. Rasiah and Mrs. Annapooranam Rasiah. The family consisting of five children, two boys and three girls, was living in Kandy because their father, Mr. Rasiah who originally hailed from Jaffna based in Kandy for business reasons. Mr. Rasiah being a successful businessman, owning and managing grocery shop business in Kandy and involved in a thriving Jaffna cigar business in the Kandy town. The unexpected demise of the father caused the dependent-age children and the widowed mother helpless. Someone has to take the lead role in the family to make ends meet and to look after the wellbeing of the family and for the continuation of studies of the children. Naturally, as the eldest son, Maheswaran was compelled to rise to the occasion. Father's loss left Maheswaran with no option but to take up the father's business at the tender age of eleven.

At a young age, he had to shoulder the burden of the family by involving in manual manufacturing and selling of Jaffna Cigar. He involved in manual making and packing of Jaffna Cigar soon after returning from school and during weekends. Whenever time permits and during weekends he will carry loads of cigar and walk to boutiques and shops that were in villages and towns in the Kandy area. His mother tenderly supported his labor. She used to wait in the threshold of the house till the son returns home from when dusk falls his long haul.

His untiring efforts and hard work towards the welfare of the family did pay off. Later in life, all his siblings graduated from leading state Universities in the country and three of them received Post Graduate Degrees. His sisters Yashodha Devi, Kala Devi and Kokila Devi emerged as teachers and his younger brother Logeswaran became Head of the Kotagala teacher training College.

In spite of the various obstacles that came in his way, though family commitments consumed most of his quality time, he never gave up Education and Sports. Rasiah Maheswaran received his primary and secondary Education at St. Sylvester's College, Kandy. He started playing the game of Hockey at the age of thirteen, the sport that he loves and holds dear to this day. Along with supporting his family he continued his studies, sports, extra-curricular and co-curricular activities. In School, he is reckoned as an eloquent speaker. He excelled in speech competitions and won many prizes.

He particularly remembers three revered teachers, namely, Mr. Krishnamoorthy, Mrs. Balasundarampillai (wife of former Vice-Chancellor of the Jaffna University), and Mr. Kanakasingham under whose tutelage in school he was successfully guided to enter the University by receiving an "A" pass for geography, his favorite subject.

He entered the University of Peradeniya and received an honours degree in Geography. His graduation was delayed due to the JVP insurrection which hampered smooth functioning of Universities in the island. Following his graduation he started

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

his career as a Physical Training Instructor at Vigneswara College, Panwila, Kandy and later became the Principal of the same school. subsequently he got on appointment as a lecturer at the Government Teacher Training College in Kotagala.

In 1994 he joined the University of Peradeniya, his Alma Mater, as an Assistant Librarian. From then onwards he embraced his destined profession of "Academic Librarianship" and does a yeoman service to the profession and to the prestigious institute which he serves. He earned his Master of Library and Information Science at Faculty of Graduate Studies of the Colombo University. Steadily climbing, rung by rung in the ladder of career success, he has now reached a top rung, to the post of Deputy Librarian of the University of Peradeniya. He served as the acting Librarian of the University of Peradeniya, since 2015. In 2020, he became the Eighth Librarian of the University of Peradeniya. Mr. Maheswaran lavishly disseminates his wealth of knowledge in Library and Information Science and experience by writing number of articles and books.

Despite his busy schedule, not confining himself only to his chosen field, he has extended his research work in Tamil studies especially focusing his attention on Documenting of Tamil Folklore. He had travelled widely to countries such as India, Great Britain and Malaysia to present his research papers in many an academic forum and International research conference and has authored several books on this discipline. He has received the "Central Province Sahithya award", and on many occasions, he has been felicitated for his literary and writing abilities.

Being a prolific writer, he is concerned towards the wellbeing of the society. He is actively involved in spheres such as professional, religious, social welfare and sports and holds responsible positions in the community. He is the incumbent secretary of the Board of trustees of the Kurinji Kumaran Hindu Temple of the University of Peradeniya, and the secretary of the Faculty of Arts Teachers Union, President of the Hindu graduates Association of the same University. At present he serves as the President of the Lions Club - Peradeniya Elite and was elected recently as the President of the "Voice of Kandy", an umbrella Association that consists several past pupils' Associations of leading schools in Kandy.

R. Maheswaran started playing the game of Hockey from his school days and still contributes immensely for the betterment of Sri Lankan hockey. He is the current President of the Kandy district Hockey Association and a Vice President of the Sri Lanka Hockey Federation.

Mr. Maheswaran is married to Komathy, a veterinary surgeon by profession and has two sons, Methulan and Madhushan who pursue their higher studies.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ்வரனின் வாழ்க்கை சரிதம்

அறுபதாவது பிறந்தநாள் இவ்வருடம் 2022 இல் எனக்கு அறுபதாவது பிறப்பாண்டு என்று என் உடன் நெருங்கிப் பழகுவோர்க்குத் தெரியும். என்றாலும் இதுபற்றி நான் பெரிதாக சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அண்மையில் ஒருநாள் பல்கலைக்கழக நூலகத்தின் தமிழ்ப்பரிவு உத்தியோகத்தர்கள் உடன் சாதாரணமாக பேசிக்கொண்டு இருந்தேன். அப்போது அவர்கள் சேர் உங்களுக்கு 60 ஆவது வயதாகிறது; மணிவிழாக் கொண்டாடலாமே என அன்புடன் கேட்டுக் கொண்டார்கள். நானும் நேரமில்லை பார்க்கலாமென இழுத்தேன். ஆனால் அவர்கள் விடுவதாக இல்லை. சேர் நீங்கள் பாரம்பரியம் மிக்க இந்த பல்கலைக்கழகத்தில் முதலாவது தமிழ் நூலகர். இனி ஒரு சிறுபான்மை சார்ந்த ஒருவர் வருவது எப்போது?! எனவே உங்களுக்கு விழாச் செய்யவே வேண்டும்; மறுகாதீர்கள் இதன் மூலம் எங்களுக்கு பெருமையும் உண்டு. கடமையும் உண்டு... அனுமதி மட்டும் தாருங்கள் நாங்கள் விழாவை ஏற்பாடு செய்து முன்னின்று நடத்துகிறோம் என்றார்கள். வீட்டாரும் பச்சைக்கொடி காட்ட நானும் ஒப்புக் கொண்டேன். உடனே எனது சுயவிவரங்களை எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டார்கள். நான் யோசித்து விட்டு, நீங்களே என்னைப் பேட்டி கண்டு கட்டுரையாக்குங்கள் என்றேன்.

அவர்களின் அயரா முயற்சியும், ஊக்கமும், திட்டமிட்ட செயற்பாடுகளும், ஒத்துழைப்பும் எனது மணிவிழாக் கொண்டாட்டம் நிகழவும், மணி விழா மலர் வெளிவரவும் காரணமா யிற்று. நன்றி

அவர்களின் நேர்காணல் வினாக்களும் எனது பதில்களும்

சேர் உங்களது சிறுவயது காலத்தில் மறக்கமுடியாத அனுபங்களை கூறமுடியுமா?

நான் பல்கலைக்கழகத்தின் நூலகத்திற்கு மட்டுமல்ல பல்கலைக்கழகம் வரவே நினைத்ததில்லை. சிறுவயதில் ஆர்வத்துடன் படித்த நான் இடையில் ஆர்வமில்லாமல் விட்டுவிட்டேன். குடும்ப சுமை மற்றும் நான் வாழ்ந்த நாட்டுச் சூழல் இதற்கு காரணமாகும்.

எனது தந்தை ஒரு பிரபல வியாபாரி. எனது பாட்டனும் கண்டியில் வியாபாரிதான். என் பாட்டனார் சுப்பிரமணியம் கார்த்திகேசு முருகேசு. இவர் யாழ்ப்பாண மாவட்டத்தில் கரணவாய் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறந்த முயற்சியாளன். இவர் கண்டியில் வியாபாரத்திற்காக 1933ஆம் ஆண்டு கொழும்பு வீதியில் "முருகன் ஸ்டோர்ஸ்" என்ற வர்த்தக நிலையத்தை நிறுவினார். பதினொரு வயதில் என் தந்தை இராசையா இங்கு உதவிக்காக வந்துள்ளார். அன்று தொடக்கம் கண்டியிலேயே வாழ்ந்து வந்தார். பின்னர் யட்டிநுவர வீதி என சொல்லப்படும் வீதி அக்காலத்தில் பிரவுன்ரிக் வீதியாகும். அங்கே தந்தையின் பெயரில் கடையொன்றினை வாங்கினார். அதற்கு மல்லிகா ஸ்டோர்ஸ் என பெயர் வைத்தனர். தந்தை பாட்டனுக்கு ஏற்பட்ட சில மனக்கசப்புக்களால் என் தந்தை அதற்கு முன்புறம் இன்னுமொரு கடையை வாங்கி அதற்கு நியூமல்லிகா ஸ்டோர்ஸ் என பெயரிட்டதோடு பிற்காலத்தில் இரு கடைகளையும் தாமே நிர்வகித்து வந்தனர். வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்களைக் கண்டபோது தந்தையும் மகனும் இடைக்கிடையே முரண்படுவதும், சேர்வதும், புதிய கடைகளை ஆரம்பிப்பதும் வேலையாயிற்று. இதன் போது காவேரி ஸ்டோர்ஸ் என்ற மற்றொரு கடையிலும் பங்காளாரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சிறுவயது முதல் ஐயாவுடனே கடைக்கு செல்வது வழக்கம். கடையிலேயே இருப்பேன். என் தந்தை இராசையாவுக்கு அக்காலத்தில் 1970களில் ஆட்சிக்கு வந்த அரசியல் அமைச்சரான நவரத்னவின் நட்பும், கண்டி பொலீஸ் அத்தியட்சகர் சண்முகம், வெம்பிலி தியேட்டர் முகாமையாளர் பசுபதி, றீகல் தியேட்டர் முகாமையாளர் ஆசிர்வாதம், லாசா தியேட்டர் இது பிற்காலத்தில் ஓடியன் தியேட்டர் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு அதன் முகாமையாளர் லாசரஸ் ஆகியோருடனும் நட்பு இருந்தது. இதன் காரணமாக அக்காலத்து கோட்டா முறையில் பால்மா, ஜனதா பீடி, கோதுமை மா, அரிசி கோட்டாக்கள் வழங்கப்பட்டன. நட்பின் காரணமாக மது பழக்கமும் இவர்களிடையே இருந்தது. இதன் காரணமாக ஐயா இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். பின்னர் சுகயீனமடைந்து 1973ஆம் ஆண்டு எனது பதினொரு வயதிலேயே அவர் காலமானார். அவரது மரணம் என்னை பெரும் துயரத்திற்கு இட்டுச்சென்றது. என் துயரத்திற்கு அளவே இல்லை.

இராசையாவுக்கும் அம்மா அன்னபூரணத்திற்கும் மூத்த மகனாக பிறந்த நான் 12 வயதிலேயே குடும்ப சுமையை ஏற்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானேன். சிறுவயதிலேயே வியாபாரத்தில் இறங்கினேன். என்னுடன் பிறந்த சகோதர, சகோதரிகள் நான்கு பேருடன், எனது கல்விச் செலவுகளையும் பொறுப்பேற்றேன். மூன்று இளைய சகோதரிகள், ஒரு சகோதரன் மொத்தம் ஐந்து பேர். இன்று சகோதரிகள் மூவரும் ஆசிரியைகள். யசோதாதேவி, கலாதேவி, கோகிலாதேவி, இவர்கள் பதவி உயர்வு பெற்று கற்பித்தலில் சிறந்து விளங்குகிறார்கள். சகோதரன் லோகேஸ்வரன் முன்னாள் பிரதி முதல்வர் வவுனியா கல்வியற் கல்லூரி தற்போது. கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் அதிபராக கடமையாற்றுகிறார்.

நான் சிறுவயதில் குடும்ப பொறுப்பை ஏற்று, வீட்டில் இருந்த சுருட்டு கம்பனியை பொறுப்பேற்றேன். அந்த சுருட்டு வியாபாரம் எங்கள் குடும்ப செலவுகளை சமாளிக்கக் கூடியதாக இருந்தது. நான் சுருட்டுப் பார்சல்களை கையில் ஏந்தியபடி கடைகடையாக (பாடசாலை விட்டு வந்து) இரவு வரை வியாபாரம் செய்தேன். அம்பிட்டிய, நத்தரம் பொத்த, பூவெலிகடை, லேவெல்ல, அருப்பொல, கடுகஸ்தொட்ட, கண்டி மாநகர பகுதிகள் ஆகிய இடங்களில் வியாபாரத்திற்கு செல்வேன். நான் திரும்பி வரும்வரை அம்மா வீட்டு வாசலில் காத்திருப்பார். பாவம் சின்னப் பையன் வியாபாரம் செய்கிறானே என எண்ணிக் கண்ணீர் விட்டபடி என்னை வீட்டுக்குள் மகிழ்சியுடன் அழைத்து செல்வார். சில விடுமுறை நாட்களில் தனியாக யாழ்ப்பாணம் சென்று புகையிலை வாங்கி வருவேன். அத்துடன் சுருட்டு சுத்துபவர்களோடு சேர்ந்து வேலை செய்வேன். இப்படியாக சிறுவயது முதல் இளமைக்காலம் வரை குடும்பச் சுமையை சுகமென ஏற்று, வாழ்வில் இன்னல்களோடு காலங்கள் ஓடின. இவையெல்லாம் மறந்து போக முடியாதவை. இந்நிலையில் நான் பல்கலைக்கழகம் செல்வேன் என கற்பனைக்கூடப் பண்ணமுடியாத இறுக்கமான வாழ்வு.

அந்த இறுக்கமான சூழலிலும் நீங்கள் புனித சில்வஸ்டர் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் மறக்க முடியாத சம்பவங்கள் மற்றும் அனுபவங்கள் ஏதேனும் உண்டா?

நானும் என் சகோதர சகோதரிகள் அனைவரும் கல்வி கற்பதில் பின்னிற்பதில்லை. நானும் தம்பியும் புனித சில்வெஸ்ரர் கல்லூரிக்கு செல்ல, சகோதரிகள் கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் கல்வி கற்கச் சென்றார்கள். இவ்வேளையில் பேரிடியாக மிக்க துக்கமான மறக்க முடியாத விடயம். எனது முதலாவதாக மறக்க முடியாத விடயம் எனது 6ஆம் வகுப்பில் தந்தையை இழந்தது தான்! மற்றும் 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தில் எனது வீடும் சொத்துக்களும் எரிந்து சாம்பலாகின. ஆனாலும் நாங்கள் கடவுள் கிருபையால் இவற்றைத் தாங்கிக் கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வீடு கண்டியில் புனித சில்வஸ்டர் கல்லூரிக்கு அருகாமையிலேயே இருந்தது. அதனால் அப்பிரபல பாடசாலையான புனித சில்வெஸ்டர் கல்லூரியில் கல்வி கற்க வாயப்புக் கிட்டியதையும் மறக்க முடியாததொன்றாகும். பாடசாலை நாட்களில் எனது நண்பர்களுடன் விளையாடும் போது கேலியாக என்னை சுருட்டு வியாபாரி என்றும் காவேரி எனவும் அழைப்பார்கள். நான் அவ்வாறு கேலி பண்ணுவதை பெரிதும் பொருட்படுத்தாதவனாக இருந்ததனால் பலர் இன்றும் என் நண்பர்களாக இருக்கிறார்கள். கண்டி டவுன்களில் இருக்கும் அப்பையன்களுக்கு பையன்களுக்கு “சுருட்டு” ஓர் காட்சிப் பொருளாக இருந்தது. ஏனெனின் யாழ்ப்பாணத்தில் மட்டுமே அக்காலத்தில் சுருட்டு தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. அன்றைய என்சக நண்பர்கள் அனைவரும் இன்றும் பிரபல வியாபாரிகள். ஏனென்றால் அவர்களின் தந்தைமாரும் வியாபார ஸ்தலங்களின் உரிமையாளராவார்.

இன்று அந்த முதலாளிகளாகி விட்ட நண்பர்களின் வியாபார ஸ்தலங்களுக்கு சில உதாரணங்கள் சில.. ரவீந்திரன், கணேசன் (கிருஷ்ணா ஸ்டோர்ஸ்) செல்வராஜ் (சிலோன் ரேடிங் கம்பனி) புண்ணிய மூர்த்தி (ரஞ்சனாஸ்) சந்திரபோஸ் (போஸ் என் பிரதர்ஸ்), துரைசாமி (கண்டி ரீ ஸ்டோர்ஸ்), ரவிசங்கர் (சிம் கோ கொழும்பு, கந்தசாமி ஸ்டோர்ஸ் பேராதனை) ஆகியோர் வர்த்தக குடும்பங்களைச் சார்ந்தோர் குமாரரட்ணம் (லண்டன்), மனோகரன் கனகமணி (கனடா), மௌஜீட் (திகன), ஆனந்தன் (நுவரெலியா), மனோகரன் (விரிவுரையாளர் மகாவலி கல்வியியல் கல்லூரி), ஆகியோர் வகுப்பு தோழர்கள். மீராமக்கம் பள்ளியில் லெப்பேயாக இருந்த முகமதுவின் மகன் நியாஸ் எனது பள்ளிதோழன். எனவே, நான் இஸ்லாம் பற்றிய தெளிவும் அறிவும் நியாஸின் நட்பு மூலம் பெற்றுக் கொண்டேன். நான் பாடசாலை நாட்கள் தொடக்கம் எனது 30 வயதுவரை கண்டி மீரமக்கம் பள்ளி, பொலீஸ் மைதானம், அஸ்கிரிய மைதானம் சுற்றுபுறத்தில் வாழ்ந்து வந்தேன். தொடர்ந்தும் மைதானங்களில் இங்கு நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளை ரசித்துப் பார்த்து வந்ததில் விளையாட்டு மேல் எனக்குத் தனிப்பற்று ஏற்பட்டது. நானும் சிறந்த விளையாட்டு போட்டி வீரனாக வேண்டும் என என் ஆழ்மனதில் தோன்றியது. 12 வயதிலிருந்தே ஹொக்கி விளையாட ஆரம்பித்தேன். ஏனைய நேரங்களில் கடையிலும் தொழில் புரிந்தேன். வீட்டு கஸ்டத்தினை உணர்ந்து குடும்பத்தைக் காப்பாற்றியதோடு சகோதரர்களை படிக்க வைத்தேன். எங்கள் கல்வி விருத்திக்கு எனது தாயாரின் அன்பான வழிகாட்டல் பெரும் தூண்டுகோலாக இருந்தது. என்பதை நினைவு கூறுகிறேன். குடும்பத்தில் மூவர் பல்கலைக்கழகம் சென்றனர். இருந்தபோதும் ஐவருமே இன்று பட்டதாரிகளாக உள்ளோம் என்றும் ஏட்டுக்கல்வி மாத்திரம் போதுமானதல்ல என அன்றே உணர்ந்து கொண்டவனாக விளையாட்டு மற்றும் பேச்சாற்றல் போன்றனவற்றில் ஈடுபாடு காட்டி வந்தேன். அதனால் பேச்சுப்போட்டி, பட்டிமன்றம் ஆகியவற்றில் பரிசில்கள் பெற்றிருக்கிறேன். பாடசாலையில் சிறந்த பேச்சாளனென பாராட்டுப் பெற்றிருந்தேன்.

சார் நீங்கள் இக்கல்லூரியில் கற்ற காலத்தில் உங்களுக்கு ஊக்கமாக இருந்து, உங்களை வழிநடத்திய ஆசிரியர் பற்றியும், பின்னர் அதனால் பெற்ற பேறுகள் பற்றியும் குறிப்பிட முடியுமா?..

நல்லதோர் கேள்வி ஒன்று. நினைவில் நின்ற சில ஆசிரியர்களாக திரு கிருஷ்ணமூர்த்தி, திருமதி. பாலசுந்தரம்பிள்ளை (யாழ்ப்பாண முன்னாள் உபவேந்தரின் மனைவி) திரு. கனகசிங்கம் ஆகியோர்களிடம்; கற்கும் போது முதல் தடவை க.பொ.த உயர்தரத்தில் 4 பாடங்கள் சித்தி பெற்றேன். ஆனால் பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கவில்லை. பின் என் விடாமுயற்சியில் படித்து இரண்டாம் தடவை பரீட்சை எடுத்து புவியியலில் சித்தியுடன் உயர்தரத்திதில் சித்திபெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவானேன். அதனால் புவியியலையே சிறப்புப் பாடமாக பயின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆரம்ப கல்வியை புடம் போட்டவர்கள் திருவாளர் கிறகரி மாஸ்டர், தம்பிராஜா மாஸ்டர், அந்தோனிப் பிள்ளை மாஸ்டர், ஆனல்ட் டீச்சர், தம்பிப்பிள்ளை டீச்சர், வஹாப் மாஸ்டர், ஆகியோராவர். எனது வீடு பாடசாலையிலிருந்து நூறு மீட்டர் தூரத்திலேயே அமைந்திருந்தது. இதனால் எனது பாடசாலை சகல நண்பர்களும் வந்து போகும் வீடாக இருந்தது. நான் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் பழைய மாணவனாக, ஹொக்கி விளையாட்டு வீரராக அக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நீண்ட கால உபதலைவருமாகவும் இருக்கிறேன். நான் பேராதனை பல்கலைக்கழக புவியியல் விசேட கௌரவப் பட்டதாரியானேன். பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக இருந்த போது அங்கு ஹொக்கி குழுத் தலைவராக, விளையாட்டு சபை உறுப்பினராக, தமிழ்ச் சங்க செயலாளராக (1986), விவாதசங்க உபதலைவராக பல பதவிகள் வகித்தேன். பன்விலை விக்னேஸ்வரா வித்தியாலய விளையாட்டு ஆசிரியராக பின்னர் அதிபராக, அதன் பின்னர் கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் விளையாட்டுத்துறை விரிவுரையாளராகவும் கடமையாற்றிய பின்னர் பேராதனைப் பல்கலைகழக நூலகத்தில் கல்விசார் உதவி நூலகராக பதவி ஏற்றேன்.

இன்று நீங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 8வது பிரதான நூலகர். நீங்கள் ஒரு தமிழராக பதவி பெற்றது எமக்கும் பெருமையும் மகிழ்ச்சியுமாக உள்ளது. இப்பதவியை பெற்றது பற்றி....

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் கல்விசார் உதவி நூலகராக பதவி வகித்து அதன்பின் சிரேஷ்ட உதவி நூலகராக, பிரதி நூலகராக, பதில் நூலகராகக் கடமையாற்றி தற்போது பிரதம நூலகராக பதவி உயர்வு பெற்றுள்ளேன்.

பல்கலைக்கழகத்தில் நூலகர் தவிர உங்கள் வேறு செயற்பாடுகள் பற்றி...

வேறு பணிகளென்றால் பல்கலைக்கழக கல்விசார் விரிவுரையாளர் சங்க உபதலைவராகவும் அதன் செயலாளராகவும், குறிஞ்சிக்குமரன் கோயில் பொறுப்பாண்மைக் குழு உறுப்பினராகவும் அதன் செயலாளராகவும் இந்து பட்டதாரிகள் சங்கத் தலைவராகவும் பணியாற்றி வருகிறேன்.

கண்டியில் ஹொக்கி விளையாட்டுத்துறையுடன் நீண்ட காலத் தொடர்புடையவர் என அறிந்திருக்கிறோம். அது சம்பந்தமாக உங்கள் தொடர்புகளும், உங்கள் தமிழ் மொழிப் பற்றும் வேறுபட்டவை அவை தவிர வேறு பாதைகளான இந்த இரண்டிலும் பயணிப்பதில் உள்ள கடினத்தன்மையை நாம் அறிவோம். எவ்வாறு சமாளிக்கிறீர்கள்?

சிறு வயது முதல் அதாவது 13 வயது முதல் நான் ஹொக்கி விளையாட ஆரம்பித்தேன். தொடர்ந்து விளையாடி அதில் வெற்றிகளும் கண்டேன். பல நண்பர்களையும் சேர்த்துக் கொண்டேன். அதன் பயனாக கண்டி ஹொக்கி சங்க உபதலைவராக, இலங்கையின் ஹொக்கி விளையாட்டு சங்க உபதலைவராவும் நீண்ட காலம் கடமையாற்றுவதோடு தேசிய பயிற்றுவிப்பாளர், தேசிய நடுவர் போன்ற தரத்தினையும் பெற்றுள்ளேன். ஹொக்கி விளையாட்டு மூலம் இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பங்களதேஷ், மலேசியா, ஹொங்கொங், பெல்சியம், ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கு சென்று சென்றேன். இலங்கைத் தேசிய குழு முகாமையாளராக, இலங்கை ஹொக்கி சம்மேளன உபதலைவராக கடமையாற்றி வருகிறேன்.

அதுதவிர, தமிழ் சார்ந்து நான் ஒரு ஆய்வாளராக, ஊடகவியலாளராக, விமர்சகராக, நூலகத்துறையிலும், இலக்கிய துறையிலும், எனது பல ஆய்வு கட்டுரைகளை இந்தியா, பிரித்தானியா, மலேசியா, சுவிஸ், ஆகிய நாடுகளில் சமர்பித்தேன். கோவை (கோயம்பத்தூர்) செம்மொழி மாநாடு, மலேசியா ஒன்பதாவது உலக தமிழாராச்சி மாநாடு, லண்டன் தமிழியல் ஆய்வு மாநாடு, மலேசியா இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, இந்தியா காயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டணம் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, மலேசியா முருகபக்தி மாநாடு, சிங்கப்பூர் நூலகவியலாளர் மாநாடு, சென்னை தமிழாராட்சி நிறுவன பன்னாட்டுக் கருத்தரங்கு, இந்திய தமிழ் நாட்டு தொல்லியல்கழக 25வது வருட பன்னாட்டு கருத்தரங்கு, பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை, தமிழ் ஆய்வு தேசிய கருத்தரங்குகள் ஆகிய அரங்குகளில் நான் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்தேன். முக்கியமாக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும தடம் பதித்தேன்.

இவை தவிர பல நூல்களும் வெளியிட்டு தடம் பதித்துள்ளேன். முக்கியமாக 'நதி கடந்த களம்' என்ற ஆய்வு நூலுக்கு மத்திய மாகாண சபை சாகித்ய மண்டல பரிசு பெற்ற நான் 'நாட்டுப்புற பாடல்கள்', 'அமைதி வழியும் மதுர மொழியும', 'ஆண்ட பரம்பரை' 'நூலகப் பிரயோக விஞ்ஞானம், மற்றும் 'உளவியல் அறிவும் நூலக ஆசிரியர் செல்நெறியும்' ஆகிய பல நூல்களை வெளியிட்டுள்ளேன்.

உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அவர்களது வாழ்க்கைப் பற்றி....

நான் முதலில் குறிப்பிட்டது போல குடும்பத்தில் அம்மாவுடன் சகோதரங்கள் ஐவரும் சேர்த்து ஆறு பேர், அதில் நான் மூத்தவன். எல்லோரும் தனித் தனி குடும்பமாக மதிப்புடன் வாழ்கிறார்கள். நான் பருத்தித்துறையைப் பூர்வீகமாகக் கொண்ட மருத்துவரான கோமதியை 1999 இல் கரம்பிடித்தேன். எமக்கு மிதுலன், மதுஷான் என்று இரண்டு மகன்கள். இருவரும் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் உயர் கல்வி கற்றார்கள். அக்காலத்தில் எனது மூத்த மகன் மிதுலன், இலங்கை பாடசாலை களின் தேசிய விளையாட்டு குழு சார்பாக 19 வயதுக்கு உட்பட்ட பிரிவில் ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றத் தேசிய வீரராகத் தெரிவாகி பங்களாதேஷ் நாட்டுக்கு பயணமான போது நான் அளவில்லா ஆனந்தமடைந்தேன்.

உங்களுக்கும் மலையகத்திற்குமான தொடர்பு எவ்வாறு அமைந்தது?

நான் பல்கலைக்கழகத்தில் கற்கும் போது மலையகப் பட்டதாரி மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்று கூடல்கள் நடத்தப்பட்டன. அக்காலத்தில் மலையக நகரங்களிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களே ஆரம்பத்தில் ஒன்று கூடினர். அப்படியாக அவர்களின் தொடர்புகளாலும்; மற்றும் எனது குடும்பப் பரம்பரை 1933 இல் இடம்பெயர்ந்து கண்டியில் வர்த்தக நோக்கில் வாழ்ந்து வந்ததாலும்; எனது அம்மாவுக்கு மலையக உறவுத் தொடர்புகள் இருந்ததாலும்; நான் பிறந்தது முதல் இன்றுவரை கண்டியிலே வாழ்ந்து வருவதாலும்; எனக்கும் மலையகத்துக்குமான தொடர்பு மிக ஆழமானதாக உள்ளது. அத்துடன் பட்டதாரி மாணவர் சங்கம் பின்னர் பட்டதாரிகள் சங்கம் ஆகியவற்றில் ஸ்தாபக உறுப்பினராகவும், உபசெயலாளராகவும், உபதலைவராகவும், பின்னர் தலைவராகவும் பதவி வகித்தேன். அதன் காரணமாக 1991 இல் கண்டி பல்லேகலவில் ஜனாதிபதி பிரேமதாசவினால் நடத்தப்பட்ட "கம்உதாவ" திட்டத்தில் மலையக பட்டதாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க காணி வழங்குவதற்காக 25 பேரின் பெயர்கள் வழங்கப்பட்டு பின்னர் நேர்முக பரீட்சையில் மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு காணிகள் வழங்கப்பட்டன. இதில் நானும் ஒருவர். எனக்கும் காணி கிடைத்தது. அதனால் தற்போது பள்லேகலவில் குடியிருக்கிறேன். பள்லேகல பகுதியில் சமூக சேவை நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், கோயில்களில் சில அமைப்புகளுடன் இவ்வாறான பற்பல காரணங்களால் மலையகத் தொடர்புகள் இருந்ததாலும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதே எனது தாரக மந்திரம்.

திருத்துவக் கல்லூரி நகர் மைதானம், பள்ளேகல கிரிக்கட் ஸ்டேடியம், இராணுவ ஹொக்கி மைதானம் எனது இல்லத்திற்கு அண்மையில் அமைந்துள்ளதால் தொடர்ந்தும் விளையாட்டுகளுடன் தொடர்போடு இருந்து வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக வாழ்க்கை எப்படி?

1984இல் பல்கலைக்கழகம் நுழைந்த போது விளையாட்டிலேயே ஆர்வம் காட்டினேன். அதற்கு முன்னர் 1983இல் பல்கலைக்கழக தமிழ்சங்கம் யாழ்ப்பாண வீரசிங்க மண்டபத்தில் மேடையேற்றிய ஒரு நாடகத்தின் வருமானத்தினை இரண்டாக பிரித்து புலிகளுக்கும், புளட் அமைப்புக்கும் கொடுத்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டில் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் தடை செய்யப்பட்டு கோவைகள் பொலிஸ் விசாரணைகளுக்காக நாலாம் மாடிக்கு எடுத்து செல்லப்பட்டதோடு சில விரிவுரையாளர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இவ்வாறு தடைசெய்யட்ட தமிழ்ச்சங்கம் மீண்டும் 1986ஆம் ஆண்டு மீளமைக்கப்பட்ட போது என்னை செயலாளராக நியமித்தனர். தமிழ்ச்சங்க செயலாளராக கலைவிழா, நாடக விழா ஆகியவற்றை நடத்தியதால் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களது நட்பும் அறிமுகமும் கிடைத்தது. பேராசிரியர் சி.தில்லைநாதன் தமிழ்த்துறை தலைவர், தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர் எனவே அவருடன் நல்ல நட்பு ஏற்பட்டது.

இதுவே பிற்காலத்தில் நான் நூலகத்திற்கு வருவதற்கு காரணமாயிற்று. நூலகர் நேர்முக பரீட்சையில் எனது கல்வி பெறுபேறுகளோடு, விளையாட்டு, சங்கங்களின் ஈடுபாடு போன்றன தெரிவுக்கு காரணமாயிற்று. அதுவே எனது வாழ்க்கையின் திருப்பு முனையாகவும் அமைந்தது.

நூலகத்துறையில் உங்கள் வரவிற்குபின் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன?

எனது காலத்திலேயே நூலகத்தில் தனியான தமிழ் பிரிவு ஒன்று ஆரம்பமானது. இத்தமிழ் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டேன். தமிழ் கட்டுரைகள், பிற்காலத்தில் ஆய்வுகளுக்கும் நூல்கள் படைப்பதற்கும் இதுவே காரணமாயிற்று. நூலகராக இந்தியா பல்கலைக்கழக நூலகர்களுடன் ஏற்பட்ட உறவு என்னை மேலும் வலுப்பெறச் செய்தது. பல பன்னாட்டு கருத்தரங்குகளுக்கு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், சிதம்பரம்–அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி–மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், கொடைக்கானல்–அன்னை தெரேசா பல்கலைக்கழகம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் பல கல்லூரி ஆகியவற்றில் ஆதாரசுருதி உரை மற்றும் பிரதம அதிதி, விசேட அதிதி மற்றும் வளவாளர், ஆய்வாளர், தலைவர், விமர்சகர், கருத்து வழங்குனர் என பல வகையிலும் கலந்துகொண்டேன். இதுவே பிற்காலத்தில் நூலகராவதற்கு புள்ளிகளைப் பெற்றுத் தந்தது. நூலகராவதற்கும் வழிவகுத்தது.

நூலகரான பின் பல வருடமாக தேங்கிக் கிடந்த ஏடுகளை, ஓலைச்சுவடிகளை பராமரிப்பதற்கு தஞ்சாவூர் சரஸ்வதி மாஹாலில் நான் பெற்ற பயிற்சி, அனுபவத்தி னூடாக பராமரிப்பு பிரிவு ஒன்றை ஆரம்பித்தேன். நூலகத்தில் புதிய ஆறுமாடி கட்டிடம் ஒன்றை நிறுவி நூலக இடப்பற்றாக்குறையை போக்கியதோடு புதிய பல சேவைகளை அறிமுகப்படுத்தினேன். புதிய மண்டபம், கேட்போர் கூடம், கருத்தரங்குகள், மனித நூலகத் திட்டம் போன்றன என்னால் ஆரம்பிக்கப்பட்டவையே. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நூலக விஞ்ஞான பாடநெறி என்னுடைய காலத்திலேயே ஆரம்பிக்கப் பட்டது. 1963–1964 நடத்தப்பட்ட டிப்ளோமா அக்காலத்தில் இல்லாமல் போனது. இதனை மீண்டும் 2021இல் ஆரம்பித்தேன்.

உங்கள் சமூகப்பணி பற்றி சுருக்கமாக ஏதாவது?

சமூக சேவையிலும் நான் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறேன். பேராதனை லயன்ஸ் கழகம், புனித சில்வெஸ்டர் பழைய மாணவர் சங்கம், கண்டி பழைய மாணவர் சங்கங்கள், பழைய மாணவிகள் சங்கங்கள் ஒன்றிணைந்த "வெயிஸ் ஒப் கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு'', கண்டி ஹொக்கி சங்கம், இலங்கை ஹொக்கி சம்மேளனம் போன்றவற்றில் எனது முழுமையாக ஈடுபாடு அமைந்தன.

உங்களால் அதிகம் நேசிக்கப்படும் ஹொக்கி விளையாட்டுக்கென கண்டியில் உருவாக்கப்பட்ட ஹொக்கி கழகம் பற்றி.......

எமது க.பொ.த உயர்தர வகுப்பில் கற்ற நன்பர்களான குணா, குணாரட்ணம், குமாரரட்ணம், நான் ஆகியோர் கல்லூரி ஹொக்கி குழுவில் விளையாடினோம், எமது வகுப்பில் அசோகா ஹொஸ்டலிருந்து படித்த ஆனந்தன் ஹொஸ்டல் அணியில் விளையாடினர். நாம் அனைவரும் இணைந்து கழகத்திற்கு இடையிலான ஹொக்கியில் விளையாட வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்து வாலிபர் சங்க அணியில் விளையாடினேன். இந்த அணி அகில இலங்கை ரீதியான போட்டிகளில் கலந்து கொள்ளாததினால் நாம் தனியாக ஒரு கழகத்தை உருவாக்க முடிவு செய்தோம். எமது வகுப்பு ரவிசங்கரும் ஹொக்கி விளையாடினார். ரவிசங்கரின் சகோதரன் மோகன்ராஜ், அசோகா ஹொஸ்டல் உதயகுமார் ஆகியோர் எமக்கு அடுத்த வகுப்பில் கலை பிரிவில் கற்றனர். சகலரும் இணைந்து ஒரு கழகத்தினை ஆரம்பிக்க நினைத்தோம். அக்காலத்தில் கண்டி கழகங்களுக்கு இடையிலான றகர் போட்டிகளை பார்வையிடச் செல்வோம். அப்போது சி.எச்.என்ட்.எப்.சி (CH&FC) யும், கண்டி கழகமும் விளையாடிய போட்டி அதனை பார்க்க சென்ற நாம் கே.எச்.என்ட் எப்.சி (KH&FC) என பெயர் வைக்க எண்ணினோம். அதுவே எனது வாழ்க்கையில் மற்றொரு திருப்பு முனையாக அமைந்தது. கழகத்திற்காக அர்ப்பணித்து செயலாற்றினேன். 1981இல் 19வயதில் கழகம் ஆரம்பித்தேன். முப்பது வருடம் அதன் செயலாளர். பதினொரு வருடம் அதன் தலைவர். 41 வருடமாக நிர்வகித்து வருகிறேன். அதனூடாக கண்டி மாவட்ட சங்கம், இலங்கை ஹொக்கி சம்மேளம் ஆகியவற்றை பிரதி நிதித்துவப்படுத்தினேன். 1987 தொடக்கம் இன்று வரை மற்றும் 1990 தொடக்கம் 1997 வரை செயலாளராகவும் 1997லிருந்து கண்டி மாவட்ட தலைவராக செயற்படுகிறேன். 1990 இல் இருந்து இன்றுவரை இலங்கை சம்மேளத்தில் பிரதிநிதி, 1996 முதல் உபதலைவர். பலமுறை இருந்ததோடு, பலமுறை இலங்கை தேசிய அணி முகாமையாளராக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளேன். சில காலம் ஹொக்கியே வாழ்க்கையானது 21வருடம் புனித சில்வெஸ்டர் கல்லூரி பயிற்சியாளராக இன்றும் முழு ஈடுபாடுடன் பங்கு பற்றி வருகிறேன்.

நீங்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதன்பின் சமூகத்திற்கு உங்களால் ஆற்றக்கூடிய சேவைகள் பற்றி உங்களது தூர நோக்கு (vision) என்ன?

நான் ஓய்வுபெற இன்னும் ஐந்து வருடங்கள் உள்ளது. எனது ஓய்வு 65 வயதிலாகும். எனது சமூக, சமய சேவைகள் இன்று போல என்றும் தொடரும். ஓய்வு பெற்றதன் பின் நான் முன்னெடுத்து செல்லும் ஆவணக்காப்பகத்தினை அபிவிருத்தி செய்து தொண்டாற்றுவதே எனது குறிக்கோளாகும். இவற்றை விட கோவில் திருப்பணிகள், சில அதி கஸ்ரப்பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு உதவி செய்தல் என்று என்னால் முடிந்த அளவு சேவைகள் செய்து வருகின்றேன். இவற்றை விடக் கலை இலக்கியம், கல்வி, ஊடகம், மருத்துவம் போன்ற பல துறைகளில் சேவைகள் செய்யது தொண்டாற்றுவதே எனது இலட்சியமும் குறிக்கோளுமாகும்.

நேர்காணல்

றொட்ணி பர்னாந்து
சிறீதரன்.ச
கிருஷ்ணமூர்த்தி.வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERSONAL BIO-DATA

Education

1969 to 1982	:	St. Sylvester's College, Kandy, Sri Lanka
1990	:	Bachelor of Arts (Hons.) in Geography, Second Class- Upper Division, University of Peradeniya, Sri Lanka.
1997 to 2001	:	Master of Library and Information Science, Master of Faculty of Graduate Studies, University of Colombo, Sri Lanka.

St. Sylvester's College Tamil Sangam - (தமிழ் இலக்கிய மன்றம்)

St. Sylvester's College Junior Tamil Literature Association (கனிஷ்ட தமிழ் இலக்கிய மன்றம்)

1975	:	Treasurer
1976	:	Assistant Secretary

St. Sylvester's College Tamil Literature Association (தமிழ் இலக்கிய மன்றம்)

1980	:	Secretary - Tamil Literature Association

St. Sylvester's College Hockey Team

1975 to 1982	:	Played Hockey for under 13,15,17 and 19 Played Kandy school hockey team under 13,15, 17 and 19
1981	:	Sri Lanka Schools

St. Sylvester's College OBA

1990 to 1997	:	Committee Member
1997 to 2007	:	Vice President
2013 to up to date	:	Vice President
2013 to 2017	:	Vice President (Media Committee)
2017 to 2022	:	Vice President (Education Committee)
2005	:	Director - Hockey Carnival

University of Peradeniya

1983 October 24th	:	Entrance of University of Peradeniya
1985	:	Secretary - University Debate Society
1985	:	Assistant Secretary - Geography Society
1986 to 1987	:	Secretary Tamil Sangam (செயலாளர் தமிழ்ச் சங்கம்)
1984 to 1990	:	Player - University Hockey Team
1986	:	Captain - University Hockey Team
1986 to 87	:	Player - University Foot Ball Team
1986	:	Assistant Secretary - Geography Society
1987	:	Member - University Sports Council

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya - Library

1994	:	Joines as Assistant Librarian
2001	:	Senior Assistant Librarian, Gr. II
2007	:	Senior Assistant Librarian, Gr. I
2011	:	Deputy Librarian
2015 to 2019	:	Acting Librarian
2020 to up to date	:	8th Librarian of the University of Peradeniya

University Librarian's Association (ULA)

2004 to 2006	:	Secretary
2011 to 2012	:	Secretary
2013 /14	:	President

Kurinjik Kumaran Kovil (குறிஞ்சிக்குமரன் கோயில்) - Board of Trust

2002	:	Member - Board of Trust
2007 to up to date	:	Secretary - Board of Trust

Kumbabishegam (கும்பாபிஷேகம்)

2010	:	Secretary - Kumbhabishega Committee (5th Kumbhabishegam)
2022	:	Secretary - Kumbhabishega Committee (6th Kumbhabishegam)

Hindu Graduate Association (இந்து பட்டதாரிகள் சங்கம்)

1995	:	Life member
1999 to 2000	:	Committee Member
2001 to 2004	:	Secretary
2004 /2005	:	Editor
2005 /2006	:	President
2008 to 2012	:	Secretary
2015	:	Editor
2016 to 2018	:	Secretary
2018 to 2022	:	President

University of Peradeniya Alumni

1995	:	Life Membership

Faculty Sports and Recreation Club

1999 to up to date	:	Member
2022 to up to date	:	Assistant Secretary (Social Services)

Sports Council

2001	:	Sports Advisory Committee Member

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KH & FC

1981 Sep 20	:	K.H.F.C. Hockey Club was founded - one of the funder member
1982 to 1997	:	General Secretary
1997 to up to date	:	President

K.H.& F.C Team Member

1981 to 2010	:	Played
1983	:	Captain

Kandy District Hockey Team

1983 to 1986	:	Player
1987	:	Captain - Seminar National Championship
1988	:	Player

Hockey Coach

1987 to 2007	:	St. Sylvester's College, Kandy, Sri Lanka
2002 to 2006	:	Trinity College Kandy, Sri Lanka
1999 to 2003	:	Mahamaya Girls' College, Kandy, Sri Lanka
2000 to 2005	:	University of Peradeniya, Kandy, Sri Lanka
1989 to 2010	:	Kandy School Team
1997 to 2010	:	Kandy District Team
1987	:	Participated Olympic Solidarity Course (SLHF)
1994	:	Participated Olympic Solidarity Course (Ministry of Sports)
1996	:	Participated Asian Hockey Federation Coaches Seminar in Singapore
1998	:	Participated Asian Hockey Federation Coaches Seminar in Kuala Lampur, Malaysia

Hockey Umpire

1981	:	Register Umpire
1988	:	Umpire (Grade II)
1992	:	Umpire (Grade I)
1998	:	National Umpire

Kandy District Hockey Association

1987	:	Committee Member
1988 to 1990	:	Assistant Secretary
1990 to 1991	:	General Secretary
1993	:	Assistant Secretary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994 to 1997	:	General Secretary
1998 to up to date:		President

Sri Lanka Hockey Federation

1987	:	Representation from Kandy D.H.A
1988 to 1994	:	Committee Member
1997 to 2006	:	Vice President
2011 to 2015	:	Vice President
2021 to up to date:		Vice President

Kandy Sports Foundation

1996 to 2010	:	Committee Member
2000	:	Assistant Secretary

Upcountry Graduate Association

1990 to 1993	:	Assistant Secretary
1993 to 1997	:	President

Young Men Hindu Association (இந்து வாலிபர் சங்கம்)

1978 to 1980	:	Member
1981	:	Committee Member

Kandy District Hindu Association (கண்டி மாவட்ட இந்து சங்கம்)

1986	:	Committee Member
1987	:	Secretary (Sports)
1989 to 2002	:	Secretary

Kandy Tamil Sangam (கண்டித் தமிழ்ச் சங்கம்)

1997	:	Founder Member of the Tamil Sangam
1997 to 2005	:	Secretary

Balagolla Hindu Cultural Society (பலகொல்ல இந்து கலாசார முன்னேற்ற சங்கம்)

2007	:	Editor - இதழாசிரியர்

Kandy Muththamil Sangam (கண்டித் முத்தமிழ்ச் சங்கம்)

2015 to up to date	:	Founder Member and Vice President

Lions Club – Peradeniya Elite

2021	:	Member - Director Board of Lions Club Peradeniya Elte
2022	:	President - Peradeniya elite Lions Club

Voice of Kandy (7 OBA'S & 6 OGA'S of Kandy Schools Past Pupils)

2014 to 2019	:	Committee Member
2020 to 2021	:	Treasurer
2022	:	President

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kandy Club

2022 : Life Member (No 1010)

National Art Council ((தேசிய சாகித்ய குழு)

2004 to 2006 : Member of Sri Lanka National Art Council

2013 to up to date : Member - Central Province Library Board

Media

1996 to up to date : Media writer

Justice of peace

1996 up to date : Appointed as All Island Justice of Peace - Appoint by Minister of Justice of Democratic Socialist Republic of Sri Lanka

Research Publications in Refereed Journals

1. Maheswaran, R. (2007). Bibliometric phenomenon in Tamil publication in Sri Lanka in 2005. Journal of the University Librarians Association of Sri Lanka. 2, 2-36
2. Maheswaran, R. (2008). Role of Libraries in conflict and peace process. Journal of the University librarians' Association. 12, 99-123
3. Maheswaran, R. (2017). Visualizing the citation patterns of quantum cryptography research publications: a study using cite net explorer. International Journal of Information Retrieval and Management, 5 (10), 7-9
4. Maheswaran, R. (2016). Mapping of agriculture research Output in Sri Lanka: a Scientometric analysis. Indian Journal of Information Sources and Services (IJISS.), 6 (1), 43-46.
5. Maheswaran , R. (2016). Design and Development of Library Gateway: Special Reference to University of Peradeniya, Sri Lanka. Indian Journal of Information Sources and Services (IJISS). 6(2), 41- 44
6. R. Poornima, A. Surulinathi, R. Maheswaran (2018). Yoga Research Output : A Scientometric study. Indian journal of information science and services. 12(1), 31-39)
7. Maheswaran, R. (2014). A Scientometric Analysis of Biodiesel Research Output: An Asian Country Perspective. Asian Journal of Information Science and Technology. 4(2), 63-67 .

Papers Presented at National/International Conferences/Symposia Published as Full Papers

1. Maheswaran, R. (2018). Implementation of Institutional Repository using DSPACE: A Case Study at University of Peradeniya. In W. J. Jeyaraj, S. Santharooban, & M. N. Ravikumar (Eds.), Re-Engineering Libraries to align with Transitiong Educational & Technological Paradigms. Paper presented at the of the International Symposium on Emerging Trends in Education and Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

& Information Science (LibSym) 2018, Chenkalady, 9-10 August (pp. 97-104). Chenkalady, Sri Lanka: Library Network. Eastern University. **(Presented and Full paper published)**

2. Maheswaran, R. (2016). Funding Research output at the University of Peradeniya: A Scientometric Analysis. In Suresh De Mel et al (Eds.), Unleashing Minds to create a sustainable future. Presented at the International conference on the Humanities and Social Sciences,Peradeniya 27- 28 July (pp. 354 – 357). Peradeniya, Sri Lanka: Faculty of Arts, University of Peradeniya. **(Presented and full paper published)**
3. Maheswaran, R. (2016). Analyzing the Research Productivity of University of Peradeniya, Sri Lanka. In P. Ravichandran (Ed.), Re-Engineering of Library Resources and Services: Challenges and Opportunities: Presented at the ICRLRS 2016, Chidambaram, 5 - 6 February (pp .286 - 290). Annamalai Nagar, India: Directorate of Distance Education wing, Annamalai University. **(Presented and full paper published)**
4. Balasubramani, R. Maheswaran, R. (2016) SAARC Citation Index: A Proposal for the Tool and Measurement of Scholarly Communication. In Ramanan, T. (Ed.), Libraries as partners of knowledge sustainability: Presented at the International Conference of University Librarians' Association of Sri Lanka – ICULA 2016, Jaffna, 9-10 March 2016 (pp 85 – 90). Sri Lanka: University Librarians' Association. **(Presented and full paper published)**
5. Maheswaran, R. (2017) A comparative study of the scholarly research publication of University of Colombo and University of Peradeniya using scientometric tools. In S. Srinivasa Ragavan, R. Balasubramani, B. Ramesh Babu (Eds.), Pesented at the UGC Sponsored International Conference on Knowledge Resources and Library Technologies. Thiruchirappalli, 24-24 February (pp. 266 - 271). Thiruchirapalli, Tamil Nadu, India: Department of Library and Information Science. Bharathidasan University. **(Presented and full paper published).**
6. Maheswaran, R, (2016). Status of Institutional repository in Sri Lanka: An Analytical Study. Presented in Multidisciplinary Research for sustainable development in the information era: 6th International symposium 2016. Oluvil, 20 – 21 December Oluvil, Sri Lanka: South Eastern University of Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/1960
7. Maheswaran, R. (1996). Necessity of a bibliometric study on publications of Sri Lanka Diaspora. In Theesan Jeyaraj (Ed.) Multiform: Silver Jubilee special volume, Library Eastern University of Sri Lanka. (pp. 7-14). Batticaloa : Eastern University of Sri Lanka.

Published in Abstracts Form

1. Maheswaran, R. (2016). Status of Institutional Repository in Sri Lanka: an Analytical Study. In Multidisciplinary Research for Sustainable Development in the Information Era: 6th International Symposium 2016. Oluvil, 20 – 21 December (pp.35). Oluvil, Sri Lanka: South Eastern University of Sri Lanka. **(Presented and abstract published)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. Maheswaran, R. (2016). Status of Institutional Repositories in SAARC countries: An Analytical Study . In M. K. Weerasinghe, W. A. Weerasooriya, & W. Seneviratne (Eds.), Information for Sustainable Development: Challenged and Opportunities. First International conference on Library and Information Management, Kelaniya, 21 – 22 October (pp. 64). Kelaniya, Sri Lanka: Department of Library and Informartion Science, Faculty of Social Sciences, University of Kelaniya. **(Presented and abstract published)**
3. Maheswaran, R. (2018). Transition of Library Resources and services in the Digital Era : The Overview of Sri Lankan perspectives. Presented at the International Conference on "Rejuvenating Libraries for Information Access in the Digital Era (ICRLIB – 2018), Annamalai Nagar, 9 - 10 December. Annamalai Nagar, Tamil Nadu, India: Department of Library and Information Science. Annamalai University.
4. Maheswaran, R. (2015). Implementation of Palm Leaf manuscript preservation and conservation project : A Case Study at University of Peradeniya. Presented at the 25th year annual conference of Tamil Nadu Archaeological Society. Rajapalayam, TN, India, 19 - 20 December. Rajapalayam, Tamil Nadu, India: Tamil Nadu Archaeological Society.
5. Maheswaran, R. (2018). Use of Digital Library by Postgraduate students of the Department of Education – Univeristy of Peradeniya. Presented at the Two-days workshop on "Optimal Use of Research Tools and Techniques" organized by the Department of Library and Information Science, Thiruvalluvar College, Papanasam, sponsored by Tamil Nadu State Council for Higher Education (TANSCHE). Papanasam, TN, India, 26 - 27 February. Papanasam, Tamil Nadu, India: Department of Library and Information Science, Thiruvalluvar Collge.

Tamil Research articles

1. மகேஸ்வரன், இரா. (2014). இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் முருகவழிபாட்டு இலக்கிய வடிவங்கள் வகிபாகம் (The contributions of the literary forms pertaining to Murugan Cult in the Sri Lankan Tamil Literary history) (pp. 1-9). Switzerland: Second International Conference on Muruga Bhakthi. (Full paper published)
2. மகேஸ்வரன், இரா. (2013). ஈழத்தமிழ்ப் பயண இலக்கியங்கள்: தனிநாயகம் அடிகளார் முதல் தற்காலம் வரை (Sri Lankan Tamil Travel Literature from Fr. Thaninayagam to present) London: World Research Conference of Tamilological Studies. (Presented and full paper published) (உலக மாநாடு - லண்டன்)
3. மகேஸ்வரன், இரா. (2012). இலங்கையில் முருகவழிப்பாட்டின் வரலாற்றினை கூறும் நாட்டுப்புறவியல் (Folklore which reveals the history of God Murugan cult in Sri Lanka). In M. Rasendran (ed.), பல்நோக்குப் பார்வையில் முருக தத்துவம். Presented at the First International Conference on Muruga Bhakthi 2012, University of Malaya, Kuala Lumpur (Malaysia), 9 – 12 August. Kuala Lumpur, Malaysia: Department t of Indian Studies, Faculty of Arts and Social Sciences. (Presented and full paper published) (சர்வதேச முருகபக்தி மாநாடு - மலேசியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. Maheswaran, R. (2011). இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் கண்டிப் பிராந்தியத்தின் வகிபாகம் : ஒரு உசாத்துணை அளவீடு (Bibliographic study on Kandyan Muslim contributions to Sri Lankan Muslim Tamil literature). In M. Saibo Marikkar, M. Natharsha, M. Ahmed Marikkar (eds.), ஆய்வு மாலை. Presented at the International Conference on Islamic Tamil Literature, Kayalpattinam, 8 - 10 July (pp. 383 -389). Kayalpattinam: International Conference on Islamic Tamil Literature. (Presented and Full paper published) (உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - காயல்பட்டினம்)

5. மகேஸ்வரன், இரா. (2015). சங்ககால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள் ஆவணப்படுத்தலுக்கான ஓர் ஒப்பீட்டாய்வு. (Documenting and comparative study on sports in contemporary period and Sangam Period). In P. Saravanakumar and Anne Yalini (Eds.), Presented at the National Conference on Sangam Literature Department of Tamil University of Peradeniya. Peradeniya, 28 February, (pp.121 – 128). Peradeniya:Department of Tamil, University Peradeniya.In Peradeniya. (Presented and Full paper published) (தண்பதம் -2016)

6. மகேஸ்வரன், இரா. (2015). இலங்கையில் இந்தியத் தமிழர் நாட்டார் வழக்காற்றியல் தொன்மையும் இன்றைய நிலையும். (Folklore of Indian Tamils in Sri Lanka: Its Antiquity and Present condition). Kuala Lumpur: 9th International Tamil Conference. (Presented and full paper published in CD format) (9வது உலக தமிழாராச்சி மாநாடு, மலேசியா)

7. மகேஸ்வரன், இரா. (2017). நவீன ஊடகத்தில் நாட்டுப்புறக் கலைகள் (Folk Arts depicted through modern mass media). Presented at the annual conference organized by the Department of Tamil, University of Peradeniya. In P. Saravanakumar and Anne Yalini (Eds.), Presented at the National Conference on Sangam Literature Department of Tamil University of Peradeniya. Peradeniya, 28 February, (pp.121 – 128). Peradeniya: Department of Tamil, University Peradeniya. In Peradeniya. (Presented and full paper published). (தண்பதம் -2018)

8. மகேஸ்வரன், இரா. (2016). சைமன் காசிச்செட்டி - தமிழ் புலவர் சரிதத்தின் முன்னோடி (Indexing the works of Simon Casie Chetty a pioneer Tamil poet in the history of Tamil poets). In K. Murugesan, S. Kumaran, V. Maheswaran (Eds.), உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும் தொகுதி - III : Presented at the International Conference on U. V. Swaminatha Iyer and Tamil Scholars of the 19th Century, Coimbatore, 5 December (pp .1159 - 1163). Coimbatore, Tamil Nadu, India: Department of Tamil. Kongunadu Arts and Science College. (Presented and Full paper published)

9. மகேஸ்வரன், இரா. (2013). இலங்கைப் பல்கலைக்கழக நூலகங்களும் தமிழ்நூல் ஆவணமாக்கலும் (Documentation of Tamil Documents in Sri Lankan Universities) Peradeniya. In P. Saravanakumar and Anne Yalini (Eds.), தண்பதம் - 2015 (Thanpatham). Peradeniya: Department of Tamil, University Peradeniya. (Presented and full paper published).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. Maheswaran, R. (2010). இலங்கைத் தமிழ் ஆவணங்கள், ஆவணப்படுத்தல் - வரலாறு - அதன் முக்கியத்துவம். (Documentation of Tamil documents in Sri Lanka: a reference study). Coimbatore: World Tamil Classical Conference. (Organized by State Government of Tamil Nadu from 23rd June to 27th June 2010). (செம்மொழி மாநாடு கோயம்பத்தூர்)

Presented with Evidence

1. மகேஸ்வரன், இரா. (2013).இலங்கையில் இந்தியத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல்: தொன்மையும் இன்றைய நிலையும் (Folklore of Indian Tamils in Sri Lanka and documenting of their ancient and existing forms) Kandy: National Conference on Tamil Literature by Kandy Tamil Sangam.
2. மகேஸ்வரன், இரா. (2015). பிரித்தானியருக்கும் சிங்கள பிரதானிகளுக்கும் இடையிலான கண்டி ஒப்பந்தத்தில் தமிழ் கையெழுத்துக்களை ஆவணப்படுத்தல். (Documenting and analyzing of Tamil handwritings in Kandyan Convention Document). Presented at the Madurai: 25th Year annual conference of Tamil Nadu Archaeological Society. (19th & 20th July 2015). (தமிழ்நாடு தொல்லியல் கழகம் மாநாட்டு ஆவணம் -2016)
3. மகேஸ்வரன், இரா. (2013). இலங்கை இந்திய நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் (Researches on Indian Tamil Folklore in Sri Lanka). Kandy: Kandy Tamil Society. (26th October 2013).
4. மகேஸ்வரன், இரா. (2012). ஈழத்தமிழர் பயண இலக்கியங்களில் தற்கால புதிய பரிமாணங்கள். (Trends on Sri Lankan Travel Literature). Colombo: Colombo Tamil Sangam – International Tamil Literature Conference 2012. (கொழும்பு தமிழ்ச் சங்க சர்வதேச மாநாடு 2012)
5. Maheswaran, R. (2010). Bibliometric Study on Sri Lankan Tamil Publications from 1996 – 2005. Colombo : International Conference organized by University Librarians' Association. (14th to 15th July 2015).
6. மகேஸ்வரன், இரா. (2015). இலங்கையில் இந்தியத் தமிழர் நாட்டார் வழக்காற்றியல் (Folklore of the Indian origin Tamil people in Sri Lanka), presented at cultural conference organized by the Sociological and Art Division of the World Tamil Research Institute, Tharamani, Chennai, India : World Tamil Research Institute. Held on 26th and 27th February 2015. (உலகத் தமிழாராச்சி நிறுவனம் - சென்னை)
7. மகேஸ்வரன், இரா. (2015). கண்டி எசல பெரகராவும் பௌத்தத்தில் இந்து கலாசார பண்புகளும். (Documenting of Tamil Cultural aspects in Kandy Esala Perahera). In S. Udayasooriyan, S. Suntharesan, K. Thilakavathi (Eds.), ஆய்வுக்கோவை. Presented at the International Conference on Tamilological study. Thanjavur Tamil University, 16 – 17 May (pp.25 – 31). Thanjavur : all India Tamil teachers Association.
8. மகேஸ்வரன், இரா. (2017). திருக்குறள் தமிழ் பதிப்புக்கள் : ஓர் உசாத்துணை அளவீடு (Documenting and Bibliogrpahic Study on Tirukkural Tamil Publications). Presented at the UGC sponsored two day International seminar on

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

panmuka nokkil Thirukkural (Multi Dimensional perspectives in Thirukkural)., 5 December (pp .1159 - 1163). Tirunelveli,Tamil Nadu, India: The M. D. T. Hindu College.

Books

English Books and Chapters

1. Maheswaran, R. (2014). Digital Library Initiatives in Sri Lanka. Salem, India : SA.
2. Maheswaran, R. (2013). Knowledge Organization: Classification Systems. (978-81-925974-6- 1) Salem, India : SA.
3. Maheswaran, R. (2015). Scientometrics: The Development Measurement, and Scholarly Communications. (978-81-9222221-9-6).Chidambaram, India : AMU Mani.
4. Maheswaran, R. (2014). Foundations of Library and Information Centers: An Overview.

   (978-81-922221-7-2).Chidambaram, India: AMU Mani.
5. Maheswaran, R. (2016). Management Basics for Library Professionals. . (978-81-922221-8-9).Chidambaram, India: AMU Mani.
6. Maheswaran, R. (2013). Information Processing and Retrieval in Library and Information Centers: With Special Reference to Sri Lankan Universities. (978-81-925974-5-4).Salem, India : SA.
7. Maheswaran, R. (2014). Basic Research Methods and Techniques for Library and Information Science.(978-81-925975-7-8). Salem, India : SA.
8. Maheswaran, R (2015).Scientometrics: The Development, Measurement, and Scholarly Communications. (978-81-922221-9-6).Salem, India : SA Publishers.
9. Maheswaran, R (2014).Digital Library Initiatives in Sri Lanka. (978-81-837141-2-0). Salem, India: SA Publishers.
10. Maheswaran, R. (2016). Management Basics for Library Professionals. (978-81-922221-8-9). Chidambaram, India: AMU Mani.

Reviewer/Editorial Board Member of journals

1. Editorial Committee Member - Journal of University Librarians' Association (JULA), 2007
2. Editorial Committee Member Journal of University Librarians' Association (JULA), 2014 issue I
3. Editorial Committee Member Journal of University Librarians' Association (JULA), 2014 issue II
4. Referees Panel Member, JULA 2007
5. Referees Panel Member, JULA 2014
6. Referees Panel Member, JULA 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. Editorial Member, SLLA 2015
8. Reviewer of abstracts for "Unleashing Minds to Create a Sustainable Future" International Conference on the Humanities and Social Sciences (ICHSS) held on 27th and 28th July 2016 University of Peradeniya. Organized by the Faculty of Arts, University of Peradeniya.
9. Reviewer to the MVM Journal Published by the MV Muthiah Government Arts College for Women in 2016, 2017, 2018

Keynote Address and Speeches

1. Maheswaran, R. (2018, February). Library Services in Digital Age, International Seminar on Redefining the Library Services organized the Central Library, and Department of Library and Information Science of G. T. N. Arts College, TN, India.
2. Maheswaran, R. (2017, September). Designing and Creating Website Using Free Tools. Internal Quality Assurance Cell (IQAC) & Central Library, G. T. N. Arts College, TN, India.
3. Delivered an oration on "Library Collaboration Development" for the students of Master of Library and Information Science M.Lib.I.Sc)) in the Department of Library and Information Science, Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India on 08. 03. 2018.
4. Delivered a keynote speech on " Library Services in Digital Age" during the International Seminar on " Redefining the Library Services" Organized by the Central Library and Department of Library and Information Science of G. T. N. Arts College, Tamil Nadu, India on28thFebruary,2018.
5. Keynote Speaker in the one day Seminar on "Sustainable Reading Habits for Successful Academic and Research Endeavours" held on 01. 03. 2018, organized by the Central Library of M. V. Muthiah Government for Women, Dindigul, Tamil Nadu, India.
6. Delivered a keynote speech on Tamil Literature of the Indian origin plantation Community in the International Seminar on "Tamilology in different perspectives" organized by the Library and the Department of Tamil of the Srimath Sivagnana palaya Swamigal, Tamil and Science College on 22, 02. 2017.
7. Keynote Speaker on "Role of Public Librarians in Building the Nation" in the opening ceremony of the International Refresher Course for Public Library Staff members, Tamil Nadu, organized by the Department of Library and Information Science, Periyar University, Tamil Nadu, India, held on 17th February, 2017.
8. Maheswaran, R. (2015). Documentation of Folklore of Plantation Tamils in Sri Lanka. Presented in the International Seminar on "Thadam Pathitha Tamilarkal, Madurai, Tamil Nadu, Indi, Department of Tamilology, School of Tamil Studies, Madurai Kamaraj University. Held on 05.12.2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Guest Speaker and Chair Person

1. Guest Speaker – Felicitation address during the inaugural function of International workshop on Pen Source Library System (KOAH, Dspace, Joomla and Drupal)) otganized by the Department of Library and Information Science, Periyar University, tamil Nadu, India, held on 06 – 08 March 2018.
2. Guest Speaker during the inaugural function of the International Seminar on Open Access Digital Resources for Academicians held in Gobi Arts & Science College, on March 5, 2018.Topics covered – Open Access Digital Resources and execution.
3. Invited talk and resource person and delivered an invited talk on "Library marketing for effective Library Service" in the one day International Conference entitled "Issues, Challenges and Opportunities of Library Resource Management" organized by the Department of Library and Information Science, Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India on 03.09.2017.
4. Delivered Felicitation Speech in the International Conference on "Rejuvenating Libraries for Information Access in the Digital Era" held on 9th and 10th March, 2018 organized by the Department of Library and Information Science, Annamalai University, Annamalai Nagar – 608 002, India.
5. Served as a Chairperson in the International Conference on "Re- Engineering of Library and of Library Resources and Services : Challenges and Opportunities (ICRLRS – 2016)" held on 5th & 6th February, 2016 organized by Library & Information Scienc Wing, Directorate of Distance Education, Annamalai University, Annamalai Nagar – 608 002, Tamilnadu, India.
6. Participated in the UGC sponsored International conference and acted as a Chair Person on "KNOWLEDGE RESOURCES AND LIBRARY TECHNOLOGIES (ICKRELT 2017) organized by the Department of Library and Information Science, Bharathidasan University, Tiruchirapalli, Tamilnadu, India on 24 – 25, February 2017.
7. Chaired a session in the 9th International Conference – Seminar on Tamil Studies on 29th January – 1st February 2015, University of Malaya, Kuala Lumpur.
8. Resource person and delivered a lecture on "OVERVIEW OF RESEARCH" of the Two-day international workshop on "OPTIMAL USE OF RESEARCH TOOLS AND TECHNIQUES", organized by the Department of Library and Information Science, Thiruvalluvar College, Papanasam, sponsored by Tamil Nadu State Council for Higher Education (TANSCHE) held on 26th and 27th February 2018.

Tamil Books

1. மகேஸ்வரன், இரா. (2015). உளவியல் அறிவும் நூலக ஆசிரியர் செல்நெறியும் (Knowledge of Psychology for Teacher Librarians - Text book for the Undergraduate and Postgraduate Students as well as for Diploma course Students of Sri Lanka Library Association) Kandy: Easwaran Book Depot. ISBN 978 – 955 – 0660 – 17 – 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ்வரன், இரா. (2015). பிரயோக நூலக விஞ்ஞானம் (Applied Library Science - Text book for Postgraduate Studies for Teacher Librarians) Kandy: Easwaran Book Depot. ISBN 978 – 955 – 0660 – 17 – 9

2. மகேஸ்வரன், இரா. (2015). ஆண்டபரம்பரை. (Travel Literature: Chronological Documentation of Information). Colombo: Kumaran Book House. ISBN 978 – 955 – 0660 – 13 – 1
3. மகேஸ்வரன், இரா. (2015). அமைதி வழியும் மதுர மொழியும் (Documenting of Muslim Tamil Literature with Publicational Information). Colombo: Kumaran Book House. ISBN 978 – 955 – 0660 – 14 – 8
4. மகேஸ்வரன், இரா. (2015). நதி கடந்த களம் : தமிழ் ஆய்வுகள். (Tamil Research articles on Information Literacy). Colombo: Kumaran Book House. ISBN 978 – 955 – 0660 – 13 – 1
5. மகேஸ்வரன், இரா. (2018). வளம் மிக்க வழக்காற்றியல்: (Documenting of Rich Folk Culture). Colombo: Kumaran Book House. ISBN 978 – 955 – 659 – 589 – 5
6. மகேஸ்வரன், இரா. (2018). பதிவுச் சுவடுகள் (Archival evidence). Colombo: Kumaran Book House. ISBN 978 – 955 – 0660 – 13 – 1
7. மகேஸ்வரன், இரா. (2015). நாட்டுப்புற பாடல்கள் (Documenting and creating a new system of Classifying of Tamil Folk Songs). Kandy: Easwaran Book Depot. ISBN 978 – 955 – 0660 – 15 – 8
8. மகேஸ்வரன், இரா. (2018). தொடர்ந்தும வராதோ ? (creative Tamil poetry work). Kandy: Easwaran Book Depot. ISBN 978 – 955 – 0660 – 24 – 7
9. மகேஸ்வரன், இரா. (2011). புழக்கத்திலுள்ள பழமொழிகள் ? (Documenting of Tamil Proverbs in practice with meaning). Kandy: Easwaran Book Depot.
10. மகேஸ்வரன், இரா. (2005). தகவல் வழிகாட்டி (Information guide) In கல்வியியல் கட்டுரைகள் (Essays on Education) (pp. 220 – 224). Maharagama : National Institute of Education. ISBN 955 1305 03 5

Book Chapters

1. மகேஸ்வரன், இரா. (2011). ஈழத்தமிழ் பயண இலக்கியங்கள்: ஓர் உசாத்துணை அளவீடு (bibliography study on Sri Lankan Tamil travel literature) In T. Manoharan (ed.) (pp. 193 – 204) Peradeniya : Department of Tamil, University of Peradeniya
2. Maheswaran, R. (2011). இலங்கைத் தமிழ் ஆவணங்கள், ஆவணப்படுத்தல் - வரலாறு - அதன் முக்கியத்துவம். (Documentation of Tamil documents in Sri Lanka: a reference study). In N. Selvaraja (ed.), Noolthettam Vol. 7 (pp. 495 – 504). UK: Ayothi Library Services.
3. மகேஸ்வரன், இரா. (2008) மலையக தெலுங்கர்களும் மலையாளிகளும்: ஒரு நோக்கு. Evidence Documenting of Telugu People and Malayalam people in upcountry). In R. Maheswaran (Ed.) Tamil Sahitya Volume (pp. 24 – 33). Kandy : Ministry of Tamil Education and Hindu Culture

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மகேஸ்வரன், இரா. (2010) முத்திரை வெளியிடப்பட்ட மலையக தலைவர்கள் (Documenting of Sri Lanka Tamil upcountry leaders honoured with postage stamps) In R. Maheswaran (Ed.), Tamil Sahitya Volume (pp. 5-9). Kandy : Ministry of Tamil Education and Hindu Culture.

5. மகேஸ்வரன், இரா. (2007) மலையக அறிவியல் பரிமாணத்தில் நூலகமும் வாசிப்பும் (The Role of Libraries and Reading habit in the educational sphere of the plantation community). In Devasigamony (Ed.), Tamil Sahitya Volume (pp. 11 – 15). Kandy : Ministry of Tamil Education and Hindu culture.

6. மகேஸ்வரன், இரா. (2009) இலங்கை மலையகமும் முருக வழிபாடும் (Proving the evidence of Information for The Cult of God Murugan in the plantation Regions). In R. Maheswaran (Ed.), Tamil Sahitya Volume(pp. 46 – 49). Kandy : Ministry of Tamil Education and Hindu Culture.

7. மகேஸ்வரன், இரா. (2005). மலையக ஆவணக்காப்பகம். (Archives for upcountry) In R. Maheswaran (ed.) Central Province Sahitya Vizha Special Volume (pp. 41 – 43) Ministry of Tamil Education and Hindu Cultural Affairs.

8. மகேஸ்வரன், இரா. (2006). நாட்டாரியலில் மலையக நாட்டுப்புற விளையாட்டுக்கள் (A bibliometric study on up country Tamil folk games). In R. Maheswaran (ed.) Central Province Sahitya Vizha volume (pp. 43 – 51) Kandy : Ministry of Tamil Education and Hindu Cultural affairs.

9. மகேஸ்வரன், இரா. (2002). நூலக அறைகூவல் (attracting readers to the Library). In A. Raman (ed.) Tamil Sahitya Volume (pp. 55 – 57) Kandy: Ministry Of Tamil Education and Hindu Cultural Affairs.

10. Maheswaran, R. (2011). ஈழத்தமிழ்ப் பயண இலக்கியங்களில் இஸ்லாமிய எழுத்தாளர்களின் பங்களிப்பும் தனித்துவமான மொழி வழக்குகளும் (Bibliographic study on Sri Lankan Travel literature written by Muslims). In the Special volume of the International Islamic Tamil Literary Conference (pp. 67 – 70). Kuala Lumpur: International Islamic Tamil Literary Conference committee. (உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு)

11. மகேஸ்வரன், இரா. (2007). பல்கலைக்கழக நூலகங்களில் நவீன தன்னியக்க மின்னியல் தொழில்நுட்ப வளர்ச்சி (Growth of modern e-technology and Automation in University Libraries). (pp 52-60) Peradeniya : Felicitation Volume of Prof.V. Nanthakumar.

12. மகேஸ்வரன், இரா. (2002). கண்டி மாவட்ட தமிழர்களின் வரலாற்றுப்பதிவுகள் (Documenting Historical records of Tamils in Kandy district). In Anthony Jeeva (ed.) Central Province Tamil Sajitya Vizha Special Volume (pp. 186 – 206). Kandy : Ministry of Tamil Education and Hindu Cultural Affairs. ISBN 955 9084 13 5

13. மகேஸ்வரன், இரா. (2007). தமிழர் வரலாற்றில் பலகொல்ல : அகமும் புறமும் (Bibliography study on history of Tamils in Balagolla). In Tamil Kalaivizha special Issue (pp. 8- 23). Balagolla: Balagolla Hindu Society.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மகேஸ்வரன், இரா. 2003) இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையே நூலக வளப்பகிர்வு. (Library Resource Sharing Among University Libraries in Sri Lanka). Ilankatir (pp.74-77). (இளங்கதி - பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம்)

15. மகேஸ்வரன், இரா. (2015). தகவல் சேமிப்பும் மீள் பெறுதலும் (Information Storage and Retrieval). In Oliver Abeynayake (ed.). National Library of Sri Lanka: 25th Anniversary Commemorative Volume. (pp. 253 – 256). Colombo: National Library & Documentation Services Board. (,லங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சபை)

16. மகேஸ்வரன், இரா. (2012). குருந்துவத்த குருதெணிய மாரியம்மன் தனித்துவமும் மகத்துவமும் : ஆவணப்படுத்தல். (Documenting of the Kurunduwatta Gurudeniya Mariyamman Temple). In. R. Maheswaran (ed.). Monograph on Gurudeniya Kurunduwatte Muthu Mariamman Temple History. (pp. 21 – 40). Gurudeniya: Temple Administrative Committee.

17. மகேஸ்வரன், இரா. (2017).முனியாண்டியும் சமகால வெளியீடுகளும்: ஆவணப படுத்தல் (Documentation of Muniyandi and contemporary publications). In M. P. Chandrasekaran (Ed.),தமிழ் சாகித்ய விழா சிறப்பு மலர் – 2017 (Tamil Sahithya Festival Special Volume 2017) (pp.52 – 56). Kandy: Central Province Ministry of Ministry of Agriculture, Irrigation, Animal Production and Health, Agrarian Development, Fisheries, Hindu culture and Estate infrastructure.

18. மகேஸ்வரன், இரா. (2018). உணர்நிலை ஊற்றில் மலையக பெண் கவிகள் (Indexing of book published by Women poets in the Tamil Plantation community). In S. Ganapathipillai (Ed.),தமிழ் சாகித்ய விழா சிறப்பு மலர் – 2018 (Tamil Sahithya Festival Special Volume 2018) (pp.24 – 29). Kandy: Central Province Ministry of Ministry of Agriculture, Irrigation, Animal Production and Health, Agrarian Development Fisheries, Hindu culture, Tamil Education and Estate infrastructure.

19. மகேஸ்வரன், இரா. (2016). வரலாற்று புகழ் மிக்க கண்டி "எசல பெரகராவும்" பௌத்தத்தில் இந்து சமய, தமிழ் கலாசார பண்புகளும் (Documenting Tamil Hindu Religious Cultural aspects found in Kandy Esala Perahera). In H. M. D. R. Herath (Ed.), පූජනීය දළදා සංස්කෘතිය : 2016 එකොළොස්වන කලාපය. (Poojaniya Dalada Sanskruthiya) – (pp.52 – 57). Kandy: Central Province Ministry of Agriculture and Environment.

20. மகேஸ்வரன், இரா. (2017). கண்டி எசல பெரகராவும் உபயோகத்தில் உள்ள தமிழ் சொற்பதங்களும் - ஓர் ஆய்வுக்கண்ணோட்டம். (Documenting Tamil Vocabulary used in Kandy Esala Perahera). In H. M. D. R. Herath (Ed.), පූජනීය දළදා සංස්කෘතිය : 2017 fodf<diajk කලාපය.(Poojaniya Dalada Sanskruthiya) (pp.71 – 75). Kandy: Central Province Ministry of Agriculture,Irrigation, Animal Production, Agrarian Development, Fisheries, Tamil Education, Estate Development and Hindu Culture.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Editing of Collections of Essays and Books

1. Editor of Tamil Sahitya Vizha (Tamil Sahitya Festival)volume Published by Ministry of Hindu Cultural Affairs & Tamil Education, Province, 2005.Central
2. Editor of Tamil Sahitya Vizha ((Tamil Sahitya Festival) Volume Hindu Cultural Ministry, 2006.
3. Editor of Tamil Sahitya Vizha (Tamil Sahitya Festival)Volume Published by Ministry of Hindu Cultural Affairs & Tamil Education, Central Province, 2007.
4. Editor of "Sylvestrine" 2016 - 2018 : Magazine of the Old Boys' Association of St. Sylvester's College, Kandy. Published by the Old Boys' Association of St. Sylvester's College, Kandy.

Editing of Classical Work

1. மகேஸ்வரன், இரா. (2007). தமிழர் வரலாற்றில் பலகொல்ல : அகமும் புறமும் (Bibliography study on history of Tamils in Balagolla). In Tamil Kalaivizha special Issue (pp. 8- 23). Balagolla: Balagolla Hindu Society.
2. மகேஸ்வரன், இரா. (2012). குருந்துவத்த குருதெணிய மாரியம்மன் தனித்துவமும் மகத்துவமும் : ஆவணப்படுத்தல். (Documenting of the Kurunduwatta Gurudeniya Mariyamman Temple). In. R. Maheswaran (ed.). Monograph on Gurudeniya Kurunduwatte Muthu Mariamman Temple History. (pp. 21 – 40). Gurudeniya: Temple Administrative Committee

Bibliographic Tools compiled (Bibliographies, Indexes etc.)

1. மகேஸ்வரன், இரா. (2008). பேராதனைப் பல்கலைக்கழகம்: தமிழ் ஆய்வுக்கட்டுரைகளின் சுட்டி: 1942 – 2008. (University of Peradeniya: Theses index from 1942 to 2008). Peradeniya: Main Library Tamil Division.
2. மகேஸ்வரன், இரா. (2008). பேராதனைப் பல்கலைக்கழகம்: தமிழ் ஆய்வுக்கட்டுரைகளின் சுட்டி: 1942 – 2015. (University of Peradeniya: Theses index from 1942 to 2015). Peradeniya: Main Library Tamil Division.
3. மகேஸ்வரன், இரா. (2018). பேராதனைப் பல்கலைக்கழக பிரதான நூலக தமிழ்ச் சேகரிப்பிலுள்ள கல்வியியல் நூற் சுட்டி (An Index on Education books available in the Tamil collection of the Main Library, University of Peradeniya, Peradeniya : Tamil Division, Main Library, University of Peradeniya.
4. மகேஸ்வரன், இரா. (2018). பேராதனைப் பல்கலைக்கழக பிரதான நூலக தமிழ்ச் சேகரிப்பிலுள்ள நாட்டாரியல் நூற் சுட்டி (An Index on Folklore books available in the Tamil collection of the Main Library, University of Peradeniya, Peradeniya : Tamil Division,Main Library, University of Peradeniya.
5. Editor, தமிழ் சாகித்திய விழா மலர் - Tamil Sahitya Vizha (Tamil Sahitya Festival) volume Published by Ministry of Hindu Cultural Affairs & Tamil Education, Central Province, 2008
6. Editor, தமிழ் சாகித்திய விழா மலர் - Tamil Sahitya vizha (Tamil Sahitya Festival) volume Published by Ministry of Hindu Cultural Affairs & Tamil Education, Central Province, 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. Sri Lanka Library Association Academic (Education) coordinator for the Central Province

   For the year 2014

   For the year 2015

National Level Committee

1. Working Group member of the National Plan of Action for Social Development of Plantation Community, Ministry of Estate Infra Structure and Livestock Development
2. Working Group Member of The National Plan of Action for Social Development of

Plantation Community, Ministry of Estate Infra Structure and Livestock Development

University Level Committee

1. Member of the Faculty Board of the Faculty of Arts from 2007 up to date.
2. Member of the Faculty Board of the Faculty of Management from 2015 and 2016.
3. Secretary Board of Board Trustee for Art Gallery and Museum Project – University of Pradeniya 2017 to 2022 (to dated)

ULA

1. President of University Librarians' Association (ULA) of Sri Lanka in the Year 2013

2. Secretary of University Librarians' Association (ULA) of Sri Lanka for the periods of 2004, 2005 and 2006.

3. Secretary of University Librarians' Association (ULA) of Sri Lanka in the Year 2011

Awards

1. Sahithya Award for the book titled "நதி கடந்த களம்" (Nati Katanta kalam – collection of research articles) for the best monograph in research book category in 2017 by Central Province Ministry of Agriculture and Hindu Culture at the annual Tamil Sahithya Festival held in Nuwara Eliya.
2. Sahithya Award for the book titled "வளமிக்க வழக்காற்றியல்" (Valamikka Valakkarriyal – collection of research articles) for the best monograph in research book category in 2018 by Central Province Ministry of Agriculture and Hindu Culture at the annual Tamil Sahithya Festival held in Hatton.
3. Tamil Sahitya Award-2005 awarded by the Central Province Ministry of Hindu Culture.
4. Tamil Sahitya Award 2002 awarded by the Central Province Ministry of Education.

5. Awarded best writer award for Article on Upcountry Tamils' and their problems Awards by Central Province Cultural Ministry in 2003.

6. Ratna Theepa awarded by the Kandy Art and Cultural Association

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tours

Hockey - Sri Lanka National Team

1. 8th - 30th Nov, 1996 - Sri Jawaharlal Nehru Memorial Hockey Tournament 1996 as the Assistant Manager
2. 1996 - Participated the Asian Hokey Federation Coaches Seminar held in Singapore as a Coacher
3. 4th – 16th July 2002 – 2nd AHF Cup Men's Hockey Tournament in Hong Kong - as a manager for SL Hockey Team.
4. 25th Jan – 12th Feb 2004 Women's Asian Cup 2004 in New Delhi as the chief de mission of the Sri Lanka Team
5. 26th June 10th July 2012– 6th Women's Junior Asia Cup 2012 Bangkok, Thailand to Participated as chief de mission of National team of Sri Lanka.
6. 1st – 9th September 2014–FIH League hockey tournament Dhaka, Bangladesh as the manager of Sri Lanka Mens team
7. 8th – 22nd March 2022- Men's Asian hockey federation Cup tournament to be held from 11th – 18th March in Jakarta as the Manager of Sri Lanka Team

University Team

1. 21st Dec – 31st - 1996-accompany the University of Peradeniya hockey team invitation matches of Chennai hockey Association (Tour to Madras) as couch of man & Women Team
2. 14th Feb. 5th March 1999 – Jawaharlal Nehru Champion college hockey tournament as a manager of University hockey team in Amritsar, Punjab

School Team

1. 1992 – 16th Dec – 27th Dec – Malaysia (Kuala Lumpur, Penang) / Singapore Tour St. Sylvester's College Under 15 and under 17 Teams tour as College Coach.
2. 2000 –April - St. Sylvester's College Tour to Tamil Nadu India and13 and 15 tour a college coach.

Club Team

1. 1990 – 30th Nov 7th Dec- Bangkok – KHNFC Hockey Tour Men/ women Royal Bangkok Hockey Tournament.

AHF (Asian Hockey Federation)

1. 5th -10th June 1996 - Asian Hockey federation coaching seminar Singapore
2. 5th - 8th March - 2002- 33rd meeting of the Asian Hockey federation council – at Kuala Lampur Malaysia. Participated as Sri Lanka representative
3. 30th March – 6th April 2005– 42nd Asia Hockey Federation Council meeting at Kuala Lumpur – Malaysia Participate as official of Sri Lanka Hockey federation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIH (International Hockey Federation)

1. Dec – 39th 2004 - Congress and federation of international forum in Germany –Lisberg to participate as Sri Lanka Hockey federation representative.

Private Tour

1. 31st 6th Aug - Personal Tour Chennai (Wedding of Relative)
2. 28th – 15th 2019 October – Personal Tower Canada (Wedding of Relative)

Conferences :

Tamil Conferences

1. 9th – 19th Jan 2005 – International Tamil Book Expiation Chennai – India.
2. 19th – 29 June 2010– world classical Tamil conformance for paper presentation – Kovai in Coimbatore – India Tamil Nadu (செம்மொழி மாநாடு கோயம்பத்தூர்)
3. 19th – 25th May 2011– international Islamic Tamil Literature conference – 2011 in Malaysia – as a Presenter (உலக இஸ்லாமிய தமிழாராச்சி மாநாடு - மலேசியா)
4. 7th – 13th July - 15th 2011 world Islamic Tamil Research Symposium 2011 Kayal pattinam, Tamil Nadu, India – as a Research Presenter (உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - காயல்பட்டினம்)
5. 19th – 14th August 2012– International Conference on Muruga Bakthi 2012 – in Malaya Kula Lumpur Malaysia to Submitted a research paper (சர்வதேச முருகபக்தி மாநாடு - மலேசியா)
6. 14th 18th August 2013– World research conference of Tamilological studies – to present a research paper (London, UK) (உலக தமிழியல் மாநாடு- லண்டன்
7. 28th Jan 2nd Feb – 9th -2015 International conference Seminar on Tamil studies submitted as abstract @ University of Malaya Kula Lumpur(9வது உலக தமிழாராச்சி மாநாடு மலேசியா)
8. 24th – 28th Feb – 2015 International conference by international institute of Tamil Studies in Chennai in India to present a research paper (உலக தமிழராச்சி நிறுவனம் - சென்னை)
9. 15th -20th May – 2015 46th International Conference of the, all India University Tamil Teachers Association – 2015 in Thanjavur Tamil Nadu India to Participate and present paper. (பல்கலைக்கழக தமிழராசிரியர்கள் சங்க மாநாடு - தமிழ்ப் பல்கழலக்கழகம் தஞ்சாவூர்)
10. 14th – 19th July – 25th 2015 annual session of Tamil Nadu Archaeological society to attend the conference and chair a session of the conference (தமிழ்நாடு தொல்லியல் கழகத்தின் 25வது மாநாடு - இராஜபாலயம்)
11. 2nd – 6th Dec international conference 2015. Tamil University, Thanjavur, India to present a paper on tamil women poets (இலங்கை பெண் கவிஞர்கள் தஞ்சாவூர் தமிழ்பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. 4th – 7th Dec – 2016 International Tamil conference U. Ve. Saminathaiyyar & Tamil Scholars of 19th century Kongunadu Arts and Science College Coimbatore Tamil Nadu Present a research paper. (சாமிநாத ஐயர் நூற்றாண்டு பன்னாட்டு தமிழாராச்சி மாநாடு - 19ஆம் நூற்றாண்டு தமிழ் அறிஞர்கள் -கோயம்பத்தூர்

Library and Information Science Conferences

1. 4th- 10th Feb 2016– International conference 2016. Annamalai University. Annamalai Nagar. Tamil Nadu. India – invite lecture at the international conference
2. 16th – 27th Feb – 2017, Perilya University Department of Library and information Science – conference on "Rural Village public Library" - Chief Guest and Recourse person
3. International conference on "knowledge recourses and Library Technologies Feb 24 – 25 Bharathidasan, as a Chair Person for the Conference - 2017.
4. (i) 24th Feb. – 11th March 2018 – Optimal use of Research tools and techniques – Dept of Library of Thiruvalluvar College (International conference) (26th Feb. 27th)
   (ii) One day international conference on topic a way for Tamil Literature forever (3rd march) 2018
   (iii) One day international seminar 5th march is Gobi Arts & Science College. 2018 on Present team
   (iv) International University Libraries conference Annamalai University – 9th, 10th March is panel member for the panel discussion. 2018
5. 5th Dec 2018– Monomania Sundaranar University two days International Conference as on Library and information Science participated resource person.
6. Participated as a resource person in the International conference Indian Institute of management Tiruchirappalli. 2018
7. Periyar University in Salem, Tamil Nadu, India to Participate as a Resource person in an international seminar 13th – 14th and 18
8. 22nd 27th April 2019 – Alagappa University, Tamil Nadu International Conference on Technology & Innovations in Contemporary Libraries (ICETICl -2019) and Guest speaker (24th – 25th April)
9. One day International workshop on Document management system and institutional repository Development organized by the same university Department of Library Information Science Tamil Nadu on 26th April 2019. Participate as a resources person.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்

தமிழின் பன்மைத்துவம்

தமிழ்ப் பற்றாளர்கள் தனித்தமிழ் இயக்கத்தின் நூற்றாண்டைச் சிரத்தையோடு கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் தமிழின் பன்மைத்துவம் பற்றிப் பேசுவது அவர்களைச் சீண்டுவதற்கான ஒரு முயற்சி என்று சிலர் கருதக் கூடும். எனது நோக்கம் அது அல்ல. தமிழின் பெருமைகள் பற்றிப் பலரும் பேசுவதுபோல அதன் தொன்மை, தூய்மை, இனிமை, இளமை, கன்னிமை பற்றியெல்லாம் நானும் பேச வேண்டியதில்லை. இவைபற்றி ஏற்கனவே நிறையப் பேசியாகிவிட்டது. அவ்வாறு பேசுவதற்கான கற்பனை வளமும் என்னிடம் இல்லை. அதற்கு வேண்டிய அளவு மொழி உணர்வு பற்று, பாசம் என்பனவும் என்னிடம் இல்லை. எனது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டிய வகையில் தமிழின் முக்கியமான பெருமை அல்லது அதன் பலம் என்று நான் கருதுகின்ற அதனுடைய பன்மைத் தன்மை பற்றிச் சில கருத்துகளைச் சொல்வதுதான் இங்கு எனது நோக்கம்.

தனித் தமிழ் அல்லது தமிழின் தூய்மை என்பதும் தமிழின் பன்மைத்துவம் என்பதும் ஒன்றுக்கு ஒன்று எதிர் நிலையான கருத்தாக்கங்கள் என்பது ஒரு எளிய உண்மை. இவற்றுள் ஒன்றை ஏற்பது மற்றதை நிராகரிப்பதாகவே அமையும். தமிழ் மொழி தூய தனித் தமிழாகவும் அதேவேளை பன்முகப்பட்டதாகவும் இருத்தல் சாத்தியமல்ல.

தனித் தமிழ் என்பது பிறமொழிக் கலப்பற்ற, திரிபுகளற்ற, ஒருமுகப்பட்ட தூய தமிழையே குறிக்கும். இத்தகைய ஒரு கற்பனைத் தமிழை உருவாக்குவதற்காகவே தனித்தமிழ் இயக்கம் கடந்த ஒரு நூறு ஆண்டுகளாக அயராது உழைத்து வந்திருக்கின்றது. தமிழ்த் தேசியமும், திராவிட இயக்கமும் அதற்குப் பக்கத் துணையாக இருந்திருக்கின்றன. என்றாலும்; அதன் சாதனைகள் வியப்பூட்டுவன அல்ல. ஏனெனில், அது மொழியின் இயல்புக்கு மாறானதும் அதனால் காரிய சாத்திய மற்றதுமாகும். பழமையை நோக்கிய எல்லாவகையான தூய்மையாக்கக் கருத்து நிலைகளையும் அடிப்படைவாதம் என்ற தற்கால அரசியல் கலைச்சொல் சுட்டுகின்றது. அவ்வகையில் மொழித் தூய்மையாக்கக் கருத்து நிலையை மொழி அடிப்படைவாதம் எனலாம். மத அடிப்படைவாதம் சில அம்சங்களில் வெற்றியடைந்தாலும் மொழி அடிப்படைவாதம் வெற்றியடைவது முற்றிலும் சாத்தியம் அல்ல.

மொழி மனித வாழ்வுடன் ஒன்றிணைந்தது. சமூக வளர்ச்சியுடன், பண்பாட்டு வளர்ச்சியுடன் இணைந்து இடையறாது மாற்றமடையும், வளர்ச்சியடையும் ஒரு தொடர்பாடல் கருவி அது. இதை மெய்ப்பிக்க உலக மொழிகளின் வரலாற்றுக்கு நாம் போக வேண்டியதில்லை. நமக்குத் தெரிந்த கடந்த இரண்டாயிரம் ஆண்டுகாலத் தமிழின் வரலாறு போதும். சங்ககாலத் தமிழன் அல்ல இன்றையத் தமிழன். இன்றையத் தமிழனின் மொழித் தேவைகளைச் சங்கத் தமிழால் நிறைவேற்ற முடியாது. பன்முகப்பட்ட இன்றையத் தமிழ் பேசும் சமூகத்தின் பன்முகப்பட்ட தொடர்பாடல் தேவைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுசெய்யும் வகையில் இன்றையத் தமிழ் பன்முகப்பட்டு வளர்ச்சியடைந்திருக்கிறது. இதுவே தமிழின் பலம். இத்தகைய நெகிழ்ச்சியும் வளர்ச்சியும் இல்லாவிட்டால் தமிழ் எப்போதோ செத்த மொழியாகியிருக்கும்.

தமிழின் பன்முகத் தன்மையைத் தீர்மானிக்கும் காரணிகள்பற்றி இனி நாம் நோக்கலாம். தமிழைத் தாய்மொழியாகப் பேசும் தமிழ்ச் சமூகத்தின் பன்முகத் தன்மைதான் அதன் அடிப்படை. தமிழ்ப் பேசும் சமூகம் ஒருமுகப்பட்டதல்ல, அது பன்முகப்பட்டது. உலகெங்கும் சுமார் ஏழு கோடித் தமிழர்கள் தமிழைத் தாய்மொழியாகப் பேசுகின்றனர். இவர்கள் பல்வேறு தேசத்தினர், பல்வேறு மதத்தினர், பல்வேறு இனக் குழுமத்தினர், பல்வேறு சாதிப்பிரிவினர், பல்வேறு சமூக அடுக்கினர். இவ்வாறு பல்வேறுபட்ட சமூகக் குழுவினரால் பயன்படுத்தப்படும் ஒரு மொழி வேறுபாடுகள் அற்று ஒருமுகப்பட்டதாய் இருத்தல் சாத்தியமே அல்ல. கால அடிப்படையிலும், இட அடிப்படையிலும் சமூக அடிப்படையிலும் பயன்பாட்டு அடிப்படையிலும் தமிழ் வேறுபடுகின்றது. இந்த வேறுபாடுகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பொது அடையாளம்தான் தமிழ். உலகின் ஏனைய வளர்ச்சியடைந்த மொழிகளைப் போலவே தமிழும் பல்வகைத் தமிழாக உள்ளது. இதுவே தமிழின் யதார்த்தம். இந்த யதார்த்தத்தைச் சற்று விரிவாகப் பேசுவதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழைச் செம்மொழி என்று கொண்டாடுகின்றோம். செம்மொழிகள் எல்லாம்; செத்த மொழிகள்தான். அதாவது இன்று வழக்கில் இல்லாதவை. லத்தீன், சமஸ்கிருதம் என்பன அத்தகையன. தமிழ் அத்தகைய ஒரு செத்த மொழி அல்ல. அது ஒரு வாழும் மொழியும்தான். கிரேக்கம், அரபு, சீனம் முதலிய மொழிகளைப்போல் தமிழும் ஒரு செம்மொழியாகவும் அதேவேளை வாழும் நவீன மொழியாகவும் உள்ளது. உலகின் சில மொழிகள் செம்மொழிகளாக மட்டும் பேசப்படுபவை, பல மொழிகள் நவீன மொழிகளாக மட்டும் பேசப்படுபவை. தமிழ் போன்ற சில மொழிகள்தான் செம்மொழி, நவீன மொழி என்ற இரட்டை அடையாளத்துக்குரியவை. இத்தகைய சில மொழிகள் பழமையின் சுமையினால் தத்தளிக்கும் அபாயத்துக்கும் ஆளாகின்றன. தமிழ் அதில் முதன்மையானது எனலாம்.

எழுத்து வரலாறு உடைய மிகச்சில தொன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்று என்பதில் மறுப்புக்கு இடமில்லை. இரண்டாயிரம் வருடத்துக்குக் குறையாத தொடர்ச்சியான எழுத்துச் சான்று உடைய வரலாறு தமிழுக்கு உண்டு. இதன் அடிப்படையில் தமிழைப் பழந்தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என்று நாம் வகைப்படுத்துகின்றோம். சங்க இலக்கியம் பழந்தமிழுக் குரியது. காவியங்களும் புராணங்களும் தேவார திருசாசகங்களும் இடைக்காலத் தமிழுக்குரியவை. ஏழு கோடித் தமிழர்களில் எத்தனை சத வீதத்தினர் இந்த இலக்கியத் தொகுதியைச் சுயமாகப் படித்து ஓரளவுக்கேனும் புரிந்துகொள்வர் என்பது சுவையான ஆய்வுக்குரியது. சங்க இலக்கியத்தை ஒரு சத வீதத்துக்கும் குறைவானவர்களும் இடைக்கால இலக்கியத்தை அதைவிடச் சற்று அதிகமானவர்களும் புரிந்துகொள்ளக்கூடும் என்று கூறலாம். இவர்கள் பல்கலைக் கழகங்களில் அல்லது கல்லூரிகளில் சங்க இலக்கியத்தையும் இடைக்கால இலக்கியத்தையும் ஒரு பாடமாகப் பயின்றவர்கள் அல்லது சுய விருப்பத்தின்பேரில் சிரமம் எடுத்துக் கற்றவர்களாக இருப்பர். இன்று நாவல், சிறுகதைகளைப் படித்துப் புரிந்து கொள்வதைப் போல் இப்பண்டைய இலக்கியங்களை இலகுவில் படித்துப் புரிந்துகொள்ள முடியாது. அவ்வகையில் பழந்தமிழ், இடைக்காலத் தமிழ் என்பன இன்றைய வழக்கில் இல்லாத தமிழ் என்று கூறிவிடலாம். இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு, மொழிவரலாறு சார்ந்த முக்கியத்துவமும் பெருமையும் அவற்றுக்கு உண்டு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், பழமையில் திளைக்கும் தமிழ்ப் பற்றாளர்கள் பழந்தமிழை முதலிடத்திலும் இடைக்காலத் தமிழை அதை அடுத்த இடத்திலும் வைத்துக் கொண்டாடுகின்றனர். அவற்றையே செந்தமிழ், உயர் தமிழ், சரியான தமிழ், தூய தமிழ் என்று நம்புகின்றனர். இதுதான் பிரச்சினைக்குரியது. அவர்களைப் பொறுத்தவரை தற்காலத் தமிழ் திரிபுகளும் சிதைவுகளும் மிக்க ஊறுபட்ட தமிழாகும். இதனாலேயே இவர்கள் செம்மொழிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தில் ஒரு சிறிதளவாவது தற்காலத் தமிழுக்குக் கொடுப்பதில்லை.

சுமார் 1800 ஆண்டுகளில் தமிழ் அடைந்த மாற்றங்களைவிட, கடந்த 200 ஆண்டுகளில் அது அடைந்த மாற்றம் மிகப் பெரிது. பண்டைய, இடைக்காலத் தமிழ் முற்றிலும் செய்யுட் தமிழ்தான், உரைநடையின் பயன்பாடு அக்காலத்தில் அபூர்வபமானது. ஆனால் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் தமிழில் நடைபெற்ற மாற்றம் அதைத் தலைகீழாகப் புரட்டிவிட்ட மாற்றம் எனல் பொருந்தும். செய்யுளின் இடத்தை உரைநடை முற்றாகப் பிடித்துக் கொண்ட மாற்றம் இது. இதை அமைதியாக நடந்த மொழிப் புரட்சி எனலாம். பழந்தமிழ், இடைக்காலத் தமிழ் என்பவற்றின் முகத்தை முற்றாக மாற்றிய புரட்சி இது. இன்றையத் தமிழில் செய்யுளுக்கு இடமில்லை என்றாகிவிட்டது. கடைசியாகக் கவிதையையும் உரைநடை பிடித்துக் கொண்டது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஏற்பட்ட தமிழ் உரைநடை வளர்ச்சி மேலைப் பண்பாட்டுக் கலப்பின் உடன் விளைவு எனலாம். தமிழின் பன்முகப்பாட்டை ஊக்குவித்த முக்கியமான காரணியாகவும் அது அமைந்தது.

தமிழின் பன்முகப்பாட்டைத் துரிதப்படுத்திய பிறிதொரு காரணி 'தமிழ் கூறும் நல்லுலகின்' எல்லை விரிவாக்கமாகும். தொல்காப்பியத்துக்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" எனத் தமிழ் உலகின் எல்லையை வரையறுக்கிறார். அக்காலத்தில் தமிழ் கூறும் நல்லுலகின் ஒரு பகுதியாக இருந்த ஈழத்தை அவர் ஏனோ உள்ளடக்கவில்லை. சோழர் ஆட்சிக் காலத்தில் தமிழ் கூறும் நல்லுலகின் எல்லை கடல் கடந்து ஈழத்திலும், மலாயா, பர்மா, தய்லாந்து முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் ஓரளவு விரிவடைந்தது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தென்கிழக்கு ஆசியாவில் மட்டுமன்றி, மேற்கே மொறீசியஸ், ஃபீஜி, சீசெல்ஸ், தென்னாபிரிக்கா என அது மேலும் விரிவடைந்தது. 1980களிலிருந்து இலங்கைத் தமிழர்கள் யுத்தம் காரணமாக ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா என மேற்கு நாடுகளில் இலட்சக்கணக்கில் புலம்பெயர்ந்து குடியமர்ந்தனர். இன்று தமிழ்கூறும் நல்லுலகு ஐந்து கண்டங்களையும் அளாவி விரிந்திருக்கக் காண்கிறோம்.

அவ்வகையில் இன்றையத் தமிழ் உலகின் பல்தேசிய மொழிகளுள் (transnational language) ஒன்றாக மாறியுள்ளது. ஒன்றுக்கு அதிகமான நாடுகளில் தேசிய மொழியாக, ஆட்சி மொழியாக, கல்விமொழியாக, சிறுபான்மையினர் மொழியாக இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் மொழிவளர்ச்சி நோக்கில் மிகுந்த முக்கியத்துவம் உடையது. பல்வேறு புவியில், பண்பாட்டுச் சூழல்களில் வழங்கும் மொழி என்றவகையில் அதனுடைய பன்மைத்துவம் மேலும் விரிவடைந் திருக்கின்றது. இது இன்றையத் தமிழின் ஒரு முக்கியமான வளர்ச்சி நிலையாகும்.

தமிழின் பன்மைத்துவத்தின் பிறிதொரு அம்சம் அது பன்நெடுங்காலமாக ஒரு பல்மத, பல்லின, பல்பண்பாட்டு மொழியாகப் பரிணமித்திருப்பதாகும். பழந்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் மதச்சார்பற்ற மொழியாகவே காணப்படுகின்றது. காலப்போக்கில் அது சைவம், வைஷ்ணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதக் குழுவினரின் மொழியாக வளர்ச்சிபெற்றது. அவ்வகையில், தமிழில் இம்மதங்கள் எல்லாவற்றினதும்; முத்திரை ஆழப் பதிந்துள்ளது. அதுபோல் பல்வேறு இனக் குழுமத்தினரின் மொழியாக, பல்வேறு சாதிப் பிரிவினரின் மொழியாகவும் அது வளர்ச்சி பெற்றுள்ளது. அவ்வகையில் தமிழ் உலகின் மிகச் சில பல்பண்பாட்டு மொழிகளுள் ஒன்றாகும். இப்பன்மைத்துவம் தமிழின் பலத்துக்கும் வளத்துக்கும் பலமான அடித்தளமாக அமைகின்றது.

தமிழின் பன்மைத்துவத்தைத் தீர்மானித்த பிறிதொரு காரணி பிறமொழித் தொடர்பு எனலாம். ஒரு மொழிச் சமூகத்தினர் பல்வேறு கரணங்களால் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிறமொழிச் சமூகத்தினருடன் தொடர்புகொள்ள நேரும்போது மொழித் தொடர்பும் மொழிக் கலப்பும் நிகழ்கின்றன. மொழித் தொடர்பு இல்லாமல் மொழிக்கலப்பு நிகழாது. ஒரு மொழிச் சமூகத்தினர் வேற்று மொழிச் சமூகத்தினருடன் எவ்வகையிலும் தொடர்பு கொள்ளும்; வாய்ப்பு இல்லாத நிலையில் மொழிக்கலப்பு நிகழாது. தமிழ் வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே தமிழுக்குப் பிறமொழித் தொடர்பு இருந்ததைக் காண்கின்றோம். ஆரம்பத்தில் சமஸ்கிருதம், பிராகிருதம், பாளி ஆகிய வடமொழிகளுடனும், கிரேக்கர், ரோமர் முதலிய ஐரோப்பிய மொழிபேசுவோருடனும் தமிழ் தொடர்புகொள்ள நேர்ந்தது. இடைக்காலத்தில் தமிழ் தொடர்புகொள்ள நேர்ந்த பதினேழு மொழிகளை நன்னூல் குறிப்பிடுகின்றது. காலனித்துவ காலத்திலும் பூகோளமயப்பட்ட தற்காலத்திலும் தமிழ் ஐந்து கண்டங்களின் பிரதான மொழிகள் பலவற்றுடனும் தொடர்புகொள்ள நேர்ந்துள்ளது. இத்தொடர்பு தமிழின் சொல்வளப் பெருக்கத்துக்கு அடிப்படையாக அமைந்தது. அதன் ஒலியமைப்பிலும் வாக்கிய அமைப்பிலும் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது. அதன் நெகிழ்ச்சித் தன்மையை அதிகரித்துள்ளது.

செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற பாகுபாடு தொன்மையானது. செந்தமிழ், செந்தமிழ் நிலம் என்பன பற்றித் தொல்காப்பியமே முதலில் பேசுகின்றது. செந்தமிழ் அல்லாத தமிழ் கொடுந்தமிழ் எனப் பின்னர் வரையறுக்கப்பட்டது. செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற இப்பாகுபாடு சமூக அதிகார அடுக்கு சார்ந்தது எனலாம். சமூக உயர் குழாத்தினரின் மொழிவழக்கே செந்தமிழ் என வரையறுக்கப்பட்டது எனக் கருதமுடியும் "வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர்கட்டு ஆகலான" என்பது தொல்காப்பியச் சூத்திரம். செந்தமிழே நிலைமொழியாக, பொதுமொழியாகக் கருதப்பட்டது. பாண்டி நாட்டை (மதுரை) சூழ உள்ள சமூக உயர் குழாத்தினரின் வழக்கே செந்தமிழாகக் கருதப்பட்டு பொதுமொழி ஆயிற்று என ஆய்வாளர் சிலர் கூறியுள்ளனர். செந்தமிழ் தவிர்ந்த ஏனைய பிராந்திய பேச்சு வழக்குகள் கொடுந்தமிழ் என ஒதுக்கப்பட்டன. இதையே தொல்காப்பியம் திசைச்சொல் எனக் கூறுகின்றது. தொல்காப்பியர் காலத்தில் செந்தமிழ் நிலத்தைச் சூழ பன்னிரண்டு கிளைமொழிப் பிரதேசங்கள் இருந்ததாகத் தெரிகின்றது. "செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தும் தம்குறிப்பினவே திசைச் சொற் கிளவி" என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதை உணர்த்துகின்றது. திசைச்சொற்களும் செய்யுளில் இடம்பெறலாம் என தொல்காப்பியம் ஏற்றுக்கொண்டாலும் இருபதாம் நூற்றாண்டுவரை இலக்கியப் படைப்புக்குரிய மொழியாக 'கொடுந்தமிழ்' ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நெடுங்காலமாக செந்தமிழே இலக்கிய மொழியாக வழங்கியது. அதன் அமைப்பையே தொல்காப்பியம் முதலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கண நூல்கள் விளக்கின. கொடுந்தமிழ் இலக்கணமற்றது, கொச்சை என ஓரங்கட்டப்பட்டது. தமிழில் ஆழ வேரூன்றியுள்ள இரட்டைவழக்கின் (diglossia) அடிப்படை இதுவே.

செந்தமிழ் யாருடைய பேச்சுத் தமிழாகவும் இல்லாதுபோய் நெடுங்காலமாயினும் இன்றும் அதுவே பொதுத் தமிழாகவும் எழுதுவதற்குரிய மொழியாகவும் நிலை பெற்றுவிட்டது. அதன் இலக்கண அமைப்பே நியமமாகக் கருதப்படுகின்றது. அதையே பேச்சு மொழியாகவும் பயன்படுத்த வேண்டும், 'கொச்சை' மொழியைப் பேசுவதைத் தவிர்க்கவேண்டும் என வலியுறுத்தும் பழமைவாதிகள் கல்வித்துறையில் இன்னும் உயிர்ப்புடன் உள்ளனர். பள்ளிப் பாடநூல்களில் இக்கருத்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.

இது எவ்வாறு இருப்பினும் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து பொது வெளியில் 'கொடுந்தமிழ்' பற்றிய மனப்பாங்கு படிப்படியாக மாற்றமடைந்து வந்திருப்பதைக் காண்கிறோம். இன்று "கொடுந்தமிழ்" என்ற வழக்கு மெல்லமெல்ல மறைந்துவிட்டது. பேச்சுத் தமிழ் கிளைமொழி ஆகிய சொற்கள் முன்னணிக்கு வந்துள்ளன. பேச்சுத் தமிழ் இலக்கியத்துள் வந்தபோது இருந்த பதற்றம் இன்று இல்லை. பேச்சுத் தமிழை இழிசனர் வழக்கு என்றும், பேச்சுத்தமிழ் பயன்படுத்தப்பட்ட இலக்கியத்தை இழிசனர் இலக்கியம் என்றும் பழித்தவர்கள் இன்று இல்லை. கடந்த நூற்றாண்டில் தமிழ்மொழி ஜனநாயக மயப்பட்டதன்; விளைவு இது. இன்று தமிழ்க் கிளைமொழிகள் எல்லாம் படைப்பிலக்கிய மொழியாகிவிட்டன. அதன்மூலம் தமிழின் பன்மைத்துவம் மேலும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது

ஒரு மொழி பன்முகப்பட்டு வளரும்போது அம்மொழியின் முழு அமைப்பிலும் மாற்றம் ஏற்படுகின்றது. ஒலியமைப்பு, சொல்லமைப்பு, வாக்கிய அமைப்பு, சொற்பொருள் அமைப்பு என எல்லாம் மாற்றமடைகின்றன. அம்மொழிக்கு எழுதப்பட்ட பழைய இலக்கண விதிகள் செல்லுபடியற்றுப் போகின்றன. புதிய இலக்கண விதிகள் தோன்றுகின்றன, புதிய ஒலிகள், புதிய எழுத்துகள், புதிய ஒலிச்சேர்க்கைகள் வந்துசேர்கின்றன. புதிய சொற்கள் உருவாக்கப்படுகின்றன அல்லது கடன்வாங்கப் படுகின்றன. புணர்ச்சி விதிகள் நெகிழ்ச்சியடைகின்றன. புதிய வாக்கிய அமைப்புகள் உருவாகின்றன. புதிய புதிய துறைகள் சார்ந்த மொழிநடைகள் விருத்தியடைகின்றன. மொழி காலத்தின் தேவைக்கேற்ப இசைவாக்கம் பெறுகின்றது. இதையே மொழியின் நவீனமயமாக்கம் என்பர்.

கடந்த சுமார் இரண்டு நூற்றாண்டுகளாகத் தமிழ்மொழி இவ்வாறுதான் நவீனமாகி வந்திருக்கின்றது. அதன் வளர்ச்சிப் போக்கில் பழமைக்கும் புதுமைக்கும் இடை யிலான மோதலை எதிர்கொண்டிருக்கின்றது. பழமைவாதிகள் அதன் பன்முகத்தை மறுத்து அதைச் செம்மொழி யுகத்துக்கே இழுத்துச் செல்ல முயன்றனர், இன்னும் முயல்கின்றனர்;. தமிழின் 'நல்லூழ்' காரணமாக அது முற்றிலும் சாத்தியமாகவில்லை என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் **துரை.மனோகரன்**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கைத் தீவின் இன்னொரு நாவலர் சபாபதி நாவலர் பற்றிய சில குறிப்புகள்

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில், பத்தொன்பதாம் நூற்றாண்டு பழைய இலக்கியப் போக்கின் முடிவினையும், புதிய இலக்கியப்போக்கின் தொடக்கத்தையும் குறித்து நிற்கின்றது. இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்த வரையிலும் அந்நூற்றாண்டு முக்கிய காலகட்டத்தைக் குறிப்பதாகவே அமைந்துள்ளது. பல வகையிலும் இலங்கையின் பல்வேறு இலக்கியவாதிகளதும், அறிஞர்களதும் சாதனைகளை வெளிப்படுத்திய காலகட்டமாக அது விளங்குகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றில் பல சிறந்த இலக்கிய ஆளுமைகளை இனங்காண முடிகிறது. ஆறுமுக நாவலர், ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை, உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், சி.வை. தாமோதரம்பிள்ளை, முஹம்மது காசிம் சித்திலெவ்வை, சபாபதி நாவலர் முதலானோர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிறந்த ஆளுமைகளாக விளங்கினர். இவர்களில் பலர் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் தமது சாதனைகளால் பெரும் புகழ் பெற்றிருந்தனர்.

இவர்களுள் சபாபதி நாவலர் (1843 – 1903) சுயம்புநாதபிள்ளை தெய்வயானை தம்பதியின் புதல்வராக, இலங்கையின் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள கோப்பாயில் பிறந்தவர். ஆரம்பத்தில் அவரது ஊரான வடகோவையில் (கோப்பாய் வடக்கு) பிராமண ஆசாரியார் ஒருவரிடம் கல்வி கற்றார். பின்னர், தமிழ், வடமொழி ஆகியவற்றில் ஒருங்கே புகழ் பெற்றிருந்த நீர்வேலி சிவசங்கர பண்டிதரிடம் தமிழையும், வடமொழியையும் முறையாகப் பயின்றார். சிறிது காலம் ஆங்கிலமும் கற்று, அம்மொழியிலும் தேர்ச்சி பெற்றார். ஆறுமுகநாவலரிடத்தும், அவரது மருமகன் வித்துவ சிரோன்மணி பொன்னம் பலபிள்ளையிடத்தும் அவர் தமிழ் பயின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆறுமுகநாவலரின் விருப்பத்துக்கு ஏற்ப, சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சிறிதுகாலம் தலைமைத் தமிழ்ப் போதகாசிரியராகவும் விளங்கினார். அதன்பின்னர், திருவாவடுதுறை ஆதீனத்தில் சேர்ந்து, அவ் ஆதீனத்தின் பதினாறாவது மகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகளின் ஆதரவைப் பெற்று, 12 ஆண்டுகள் ஆதீன வித்துவானாகத் திகழ்ந்தார். அவரது நாவன்மையை மெச்சி, சுப்பியமணிய தேசிகர் அவருக்கு 'நாவலர்' பட்டத்தை வழங்கினார். ஆறுமுக நாவலருக்கும் 'நாவலர்' பட்டத்தை வழங்கியது திருவாவடுதுறை ஆதீனமே என்பது குறிப்பிடத்தக்கது.

இராமநாதபுரம் சமஸ்தானத்து மன்னர் ஸ்ரீ பாஸ்கரசேதுபதி சபாபதி நாவலரிடத்துப் பெருமதிப்பு வைத்திருந்தார். பாஸ்கரசேதுபதி சபாபதி நாவலருக்கு எழுதிய கடிதங் களில் பின்வருமாறு விளித்து எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைவசிகாமணியாயும் பரசமயகோளரியாயும் விளங்காநிற்கும் கனம் நாவலரவர்களுக்கு..."

"சைவப்பயிர் தழைக்க, பிரசங்க இடிமுழக்குடனும் விபூதி ருத்திராட்சப் பொலிவாகும் மின்னலுடனும் ஓங்கிவளரும் ஒரு முகிலாகிய கனம் நாவலரவர்களுக்கு..."

சபாபதி நாவலரைத் தமது சமஸ்தானத்துக்கு அழைத்தமைக்கான காரணத்தையும் பாஸ்கரசேதுபதி ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்:

"தாங்களை யாம் அழைத்துவந்த காரணம் தங்கள் பிரசங்க அமிர்தத்தினை நுகருமாறும் நம் சமஸ்தானத்திலுள்ள சகல பிரஜைகளுக்கும் சைவசமய உண்மை களைத் தேறுமாறும் திராவிட சைவசித்தாந்த வித்யாபோதஞ் செய்து போதரும் கடப்பாட்டினைத் தாங்கள் மேவுதல் வேண்டுமென்றே."

பாஸ்கரசேதுபதிக்கும், சபாபதி நாவலருக்கும் இடையிலான சந்திப்பு, நாவலர் கும்பாபிஷேக தரிசனம் செய்யச் சென்றபோது ஏற்பட்டது. மகாராஜா இராமநாதபுரம் திரும்பும்போது, சபாபதி நாவலரையும் தம்முடன் அழைத்துச் சென்றார். மகாராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்க, நாவலர் சிறிதுகாலம் அவரது சமஸ்தானத்தில் தங்கி யிருந்தார். பாஸ்கரசேதுபதியோடு திருவுத்தரகோசமங்கைக்குச் சென்று சுவாமி தரிசனம் முடித்த பின்னர், 'வேதநெறி தழைத்தோங்க' என்னும் தலைப்பில் பேருரையும் நிகழ்த்தினார். மன்னரோடு வேறு பல தலங்களுக்கும் சென்று, பேருரைகள் செய்து பெருமை பெற்றார். பாஸ்கரசேதுபதி 3000 ரூபா அவருக்குச் சன்மானமாக வழங்கினார்.

சேதுபதி வழங்கிய சன்மானத்தோடு சென்னை வந்த நாவலர், சித்தாந்த வித்தியாநு பாலன் அச்சுயந்திரசாலை அமைத்து, ஞானாமிர்தம் என்னும் பத்திரிகையைச் சிறிதுகாலம் நடத்தி வந்தார். அவரது பத்திரிகைச் செலவுக்காகப் பாஸ்கரசேதுபதி மாதம் 60 ரூபா கொடுத்துதவினார். சபாபதி நாவலரின் ஞானாமிர்தம் என்ற பத்திரிகை பற்றிப் பிரமவித்தியா என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பின்வருமாறு எழுதியிருந்தார். "ஞானாமிர்தம் என்னுமோர் அமிர்தம் புத்தியென்னும் மந்திரத்தாற் கடைய ஓர் நாவலரென்னுந் திருப்பாற்கடலில் பிறந்துலவுகின்றது." பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பத்திரிகை உலகிலும் சபாபதி நாவலர் தமக்கென ஓர் இடத்தைப் பெற்றிருந்தார் என்பதனை, மேற்கண்ட பத்திரிகை ஆசிரியரது கூற்று புலப்படுத்துகின்றது.

தமிழ்நாட்டின் பல்வேறு ஆதீனங்களினதும் மதிப்பையும், ஆதரவையும் சபாபதி நாவலர் பெற்றிருந்தார். மதுரை ஆதீன மடாதிபதி ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீன மடாதிபதி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள், அவ் ஆதீனத்தின் பின்னைய மடாதிபதி ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீன மடாதிபதி ஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகள் ஆகியோர் சபாபதி நாவலரின் சமய முயற்சிகளைத் தமது உரைகள் வாயிலாகவும், கடிதங்கள் மூலமாகவும் விதந்து பாராட்டி ஆசிர்வதித்து உபசரித்தனர். ஆதீனச் சூழலே சபாபதி நாவலரைப் பெரிதும் வளர்த்தெடுத்தது எனலாம்.

சபாபதி நாவலர் தமது வாழ்நாளில் 35 ஆண்டுகளைச் சென்னையிலும், சிதம்பரத் திலும் கழித்தார். அவரின் மாணவர்களாகச் சிதம்பரம் அ.சோமசுந்தர முதலியார், விழுப்புரம் இராமசாமிப்பிள்ளை, மாகறல் கார்த்திகேய முதலியார், மயிலை க. சிங்காரவேலு முதலியார், திருமயிலை பாலசுந்தர முதலியார், சுழிபுரம் சிவப்பிரகாச பண்டிதர் ஆகியோர் விளங்கினர். இவர்களுள், திருமயிலை பாலசுந்தர முதலியார் சபாபதி நாவலரைத் தமிழ்த் தெய்வமாகக் கருதிப் போற்றிவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதி நாவலர் பல நூல்களை எழுதியுள்ளார். சிதம்பரசபாநாத புராணம், சிவகர்ணாமிர்தம், சதுர்வேததாற்பரிய சங்கிரகம், பாரததாற்பரிய சங்கிரகம், இராமாயணதாற்பரிய சங்கிரகம், யேசுமதசங்கற்ப நிராகரணம், இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, வைதிக காவிய தூசண மறுப்பு, ஞானசூடாமணி, ஞானாமிர்தம், திராவிடப் பிரகாசிகை முதலிய நூல்களோடு, பல்வேறு பிரபந்தங்களையும் இயற்றியுள்ளார். திருச்சிற்றம்பலவந்தாதி, திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, மாலையந்தாதி, சிதம்பர பாண்டியநாயக மும்மணிக்கோவை,, வடகோவைச் செல்வவிநாயகர் இரட்டைமணிமாலை, நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், வதிரிநகர்த் தண்டபாணிக் கடவுள் பதிகம், புறவார்ப் பனங்காட்டூர்ப் புறவம்மை பதிகம், சிவஞானயோகிகள் குருபூசை மஹோத்சவம் ஆகியவை அவை.

சபாபதி நாவலரின் புலமைச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சிதம்பரசபாநாத புராணத்தில் தில்லையின் பெருமை பற்றி அவர் பாடிய பாடலை நோக்கலாம்:

"திருவினாற் கவினாற் றேசாற்
றிருத்தத்தாற் சிறப்பு வாய்ந்த
வுருவினா லுயர்வான் மாண்பா
லொழுக்கத்தா லோத வொண்ணா
வருமையாற் புகழா னன்கா
வர்க்கத்தா னறிவா னான்ற
பெருமையாற் றனக்குத் தானே
யுவமையாம் பிறங்கு தில்லை."

அவரது கடினமான செய்யுள் நடைக்குள், இத்தகைய சுவையான பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

சபாபதி நாவலரின் பெயரை இன்றும் நினைவில் நிறுத்தும் பாரிய பங்களிப்பாக விளங்குவது, திராவிடப் பிரகாசிகை என்னும் அவரது இலக்கிய வரலாற்று நூலாகும். இந்நூல் 1889 இல் வெளிவந்தது. அதன் இரண்டாம் பதிப்பு 1927 இல் வெளி யிடப்பட்டது. இந்நூல் தமிழின் தெய்வப் பழமைமரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டதாக விளங்குகின்றது. சபாபதி நாவலர், தாம் திராவிடப் பிரகாசிகை என்னும் நூலினை எழுதியமைக்கான காரணத்தைப் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"தமிழின் தொன்மை மரபினையும், அதனிலக்கண மரபினையும், இலக்கிய மரபினையும், சாத்திர மரபினையும் நல்லாசிரியர் வழிநின்று தெளிதற்குரிய நற்றவ அறிவுமாட்சியுடையரல்லாதார் சிலர், இக்காலத்துத் தாந்தாம் அறிந்தவற்றால் முறை பிறழக்கொண்டு தமிழ் மொழியினும் பிறமொழியினும் பலவாறெழுதி வெளியிட்டு வரம்பழித்தலானும், அவர் உரையின் பொய்ம்மை தேறமாட்டாத பேதை நீரார், அவற்றினை மெய்யெனக் கொண்டு தமிழ் நல்லாசிரியர் தெய்வப்புலமை மாட்சி யினையும், அவர் நூலுரைகளின் தாரதம்மிய முறையினையும் வரன்முறை போற்றாது புறம் பழித்துத் தமக்கும் பிறர்க்குங் கேடு சூழுதலானும், தமிழ் உலக மற்றவற்றின் உண்மை தேறி உறுதிப் பயனெய்துதற் பொருட்டு அத்திறனெல்லாம் விளக்கி 'திராவிடப் பிரகாசிகை' என்னும் பெயரினால் இவ்வசனகிரந்தம் இயற்றுவேமா யினேம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இவ்வாறு எழுதியபோதிலும், இயல்பாகவே சைவசமயச் சார்பில் நின்றுகொண்டே தமது கருத்துகளை நூல் முழுவதும் வெளியிட்டுள்ளார்.

தமிழையும், வடமொழியையும் எப்போதும் சமத்துவமாக நோக்கும் பண்பு கொண்ட சபாபதி நாவலர், தமிழின் தனித்துவத்தையும் திராவிடப் பிரகாசிகையில் குறிப்பிடுகின்றார்.

> "...தமிழ்மொழி ஆரியமொழி போல தெய்வமொழியாய் நிலவரைபில் ஆதிகண் தோன்றி நடைபெறும் தொன்மொழி என்பது மேலே நிறுத்தி போந்தாமாதலின், அதற்குரிய விலக்கணம் ஒவ்வோர் துறையில் வடமொழியோடொத்து ஒழுகினுந் தன்மொழிக்கட்படுஞ் செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத் தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம், புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும், வேறு தன்னியல்களாக கொண்டே ஒழுகும் நீர்மையதாகலானும், இவை எல்லாம் பாணினீயத்துள்ளும் ஐந்திரத்துள்ளும் பிற வடநூலுள்ளும் பெறப்படலாகாலானும், அது பொருந்தாமை ஒருதலையாகவுணர்க."

இப்பகுதியில் தமிழின் பல்வேறு சிறப்புக்களையும் குறிப்பிட்டு, தமிழ் வடமொழியை விடத் தனித்துவத் தன்மைகள் கொண்ட மொழி என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

திராவிடப் பிரகாசிகை சிறந்த ஒரு நூலாக விளங்கியபோதிலும், அளவுக்கு மீறிய கண்டனங்களும் அதில் விரவிவருகின்றன. குறிப்பாக, சி.வை. தாமோதரம்பிள்ளையைச் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் நூலில் கண்டித்து எழுதியுள்ளார், சபாபதி நாவலர். சி.வை. தாமோதரம்பிள்ளை கருத்தியல்ரீதியாகச் சிவஞானமுனிவரைக் கண்டித்தமையைச் சகிக்க முடியாமல், கண்டபடி தாமோதரம்பிள்ளையை அவர் கண்டிக்கிறார். இதுபற்றிப் பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் கூறுபவை மனங்கொள்ளத்தக்கவை:

> "கோப்பாய் சபாபதி நாவலர், சிவஞான முனிவரின் உபாசகர். அவர் மொழியே அன்றி அவர் மொழி பொருளையும் பொன்னேபோற் போற்றியவர்... திருவாவடுதுறை யாதீனத்தையும் சிவஞான முனிவரையும் பிள்ளையவர்கள் வன்மையாகக் கண்டித்ததை கண்ட சபாபதி நாவலர் 'இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு' வெளியிட்டார். அதனோடு அமைதியுறா சபாபதி நாவலர் 'திராவிடப் பிரகாசிகை' வெளியிட்டார்... திராவிடப் பிரகாசிகை என்னும் தமிழ் வரலாறு தாமோதரம் பிள்ளையை கண்டிக்கும் வரலாறாக அமையப் போகின்றது என்பதைக் குறிப்பாக... கூறிய சபாபதி நாவலர் பிள்ளையவர்களின் பெயரைக் கூட கூற விரும்பவில்லை போலும். 'வீரசோழியப் பதிப்புரைகாரர்' என்று கூறுவதோடமைந்து விடுகிறார்."

சபாபதி நாவலர் ஒருவகையில், சி.வை. தாமோதரம்பிள்ளையைக் கண்டிப்ப தற்காகவே திராவிடப் பிரகாசிகையை எழுதியது போலவும் தெரிகிறது. தாமோதரம் பிள்ளையைத் தனிப்பட்ட முறையில் திராவிடப் பிரகாசிகையில் தாக்கவும் சபாபதி நாவலர் தயங்கவில்லை.

திராவிடப் பிரகாசிகை 19 ஆம் நூற்றாண்டுக் கண்டன மரபையும், உரையாசிரியர் நடையையும் கொண்டதாக விளங்குகிறது. தர்க்கரீதியாக வாதங்களை முன்வைக்கும் திறன் படைத்த சபாபதி நாவலர், 19 ஆம் நூற்றாண்டில் பரவத்தொடங்கிவிட்ட அறிவியல் அம்சங்களை மனங்கொள்ளத் தவறிவிடுகிறார். ஆறுமுகநாவலரிடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட பரந்த அறிவியல் பார்வை, சபாபதி நாவலரிடத்தில் அறவே இல்லை என்றே கூறவேண்டும்.

சபாபதி நாவலர் தமது ஆளுமையை ஆதீன வட்டத்துள் சுருக்கிக்கொண்டவராக விளங்கினார் என்றே கூறவேண்டும். அவர் அந்த வட்டத்துக்கு வெளியே வந்து, பரந்த அளவில் செயல்பட்டிருந்தால், இன்னும் அதிக அளவில் அவர் சாதித்திருக்கலாம்.

உசாத்துணை நூல்கள்

சதாசிவம், ஆ. (1966) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், கொழும்பு: சாகித்திய மண்டலம்.

சபாபதி நாவலர் (1927) திராவிடப் பிரகாசிகை, சென்னை.

பூலோகசிங்கம், பொ. (1970) தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள், யாழ்ப்பாணம் கண்டி: கலைவாணி புத்தக நிலையம்.

மனோகரன், துரை. (1997) இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, யாழ்ப்பாணம் கண்டி: கலைவாணி புத்தக நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் **பீ.எம்.ஜமாஹிர்**
மெய்யியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

இப்னு அறபியின் வஹ்ததுல் வுஜூத் (இருப்புண்மை ஒன்றே) கோட்பாடு: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

இருபதாம் நூற்றாண்டு மெய்யியலில் அதிலும் குறிப்பாக பகுப்பாய்வு மெய் யியல் சிந்தனைக்கு உயிர்ப்பூட்டுதலையும் ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்திய விட்கன்ஸ்டைன், பகுப்பாய்வு என்பதை மொழியை வரைவிலக்கணப்படுத்துவதாக இல்லாமல் அதன் உபயோகத்தைக் கவனமாக விவரணப்படுத்துவதாகக் கொள்கிறார். இவ்வழியில் மொழிகளையும் மொழிகளின் பகுதிகளையும் அதன் தொடர்பாடல் முறைகளையும், சொற்களின் பயனையும் வெளிக்கொணர்வதே இங்கு பகுப்பாய்வு உள்ளடக்குகிறது எனலாம். இதன் மூலம் அடைய முயற்சிப்பது ஒழுங்கும் தெளிவுமாகும். (A.D.P.Kalanasuriya,1987:25).

இஸ்லாமிய சிந்தனையில் அதிலும் சூபித்துவ சிந்தனையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய ஸீ'ய்குல் அக்பர் (மாபெரும் அறிஞர்) என அழைக்கப்படும் இப்னு அறபியின் (கி.பி 1165–1240) மறைஞானத்தில் உள்ள ஒழுங்கையும் தெளிவையும் புரிய, மறைஞான மொழியின் செயல் முறையிலுள்ள பிரச்சினைகளை (முடிச்சுக்களை) அவிழ்ப்பதன் மூலம் கண்டு கொள்ளலாம். இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' (இருப்புண்மை ஒன்றே) கருத்துக்களைத் தெளிவுப்படுத்துவதற்கான முயற்சியில் பகுப்பாய்வு ஒரு தேர்ச்சியான முறையாகும். இதனூடாகச் சொற்களின் பாவனையில் அவை பெறும் பல்வேறு அர்த்தங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

மத்தியகால இஸ்லாமிய மெய்யியலாளரான இப்னு அறபியின் பிரதான பங்களிப்பு 'வஹ்ததுல் வுஜூத்' பற்றிய கோட்பாடாகும். 'அல்லாஹ்வின் (இறைவன்),உள்ளமை (வுஜூத்), மட்டுமே உண்மை: பிரபஞ்சத்தின் இருப்பு தற்காலிகமானது. பிரபஞ்சம் அல்லாஹ்வினது உள்ளமையின் (வுஜூதின்) தெறிப்பேயாகும். பிரபஞ்சமாகத் தோற்றம் கொடுப்பது அல்லாஹ்வின் திருநாமங்களின் (பண்புகள்) வெளிப்பாடாகும். அல்லாஹ்வின் திருநாமங்கள் பிரபஞ்சமாகத் தோற்றம் கொடுத்திருப்பதால் அல்லாஹ் படைப்பில் இறங்கிவிட்டான் என்றோ அல்லது படைப்பில் ஐக்கியமாகிவிட்டவன் என்றோ பொருளாகாது'. என்று அவர் விளக்குகிறார். அதாவது உள்ளமை (வுஜூத்) ஒன்றுதான். அதுதான் அல்லாஹ்வின் உள்ளமையாகும். அந்த உள்ளமையிலிருந்தே 'இருப்பன'வாகவுள்ள யாவும் தமது உள்ளமையை, அதாவது இருப்பைப் (வுஜூத்) பெற்றுக்கொண்டன. 'தாத்'தே (சாரம் மூலப்பொருள்)'வுஜூத்' எனப்படுகிறது. ('தாத்' என்பது ஒரு பொருளின் பொருண்மையைக் குறிக்கும். இங்கே அல்லாஹ்வின் பொருண்மையை அல்லது சாரத்தைக் குறிக்கவே இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இது பண்புகளை வெளிப்படுத்துவது, விபரிக்கப்பட முடியாத யதார்த்தமாகும்).

'தாத்' ஏகத்துவத்தின் விஸ்தரிப்பாகும். ஒரே இறைவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. (There exists but one God). அந்த இறைவனைத் தவிர வேறு உள்ளமை (வுஜூத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவுமில்லை (There is nothing existence except God). பிரபஞ்சத்திலுள்ள எல்லாம் அந்த உள்ளமையிலிருந்து உண்டானவையாகும். ஏக உள்ளமையின் பண்பினால் மறைஞானியின்(சூபி),'நான்' எனும் 'அகம்' அவரைவிட்டு நீங்கி விடும். அப்போது அவர் இறைவனில் மறைந்துவிடுவார். அதாவது, இறைவன் தன் ஏக உள்ளமையில் மறைத்துக் கொள்கின்றான் என்பதாகும்.

இங்கு 'வுஜூத்' (Wujud) என்பது இருப்பு (Existence) அல்லது உள்ளமை அதாவது உண்மை (Being) என மொழி பெயர்க்கப்படுகிறது. இதில் பெறப்படும் அல்லது பேசப்படும் அனுபவம் என்பது உள்ளமையின் ஒருமை அதாவது ஏகத்துவம் (Oneness of Being) அல்லது இருத்தலின் ஐக்கியமாகும் (Unity of Existence). ஆக, இப்னு அறபியின் கோட்பாட்டின் தன்மையை ஒருமைத் தன்மை (Oneness) அல்லது இறைவனின்ஏகத்துவத்தை குறித்து நிற்கிறது என அறியலாம். அதாவது, இதை உள்பொருளியல் சார் ஒருமைவாதம் (Ontological Monism) எனவும் குறிப்பிடலாம். அதாவது மெய்மை அல்லது உளது பற்றிய ஒருமைவாதம் என வரையறை செய்யலாம். இந்தக் கோட்பாடே 'வஹ்ததுல் வுஜூத்' என அழைக்கப்படும்.இக்கோட்பாட்டை உடையோர் 'வுஜூதியா' என அழைக்கப்படுகின்றனர். இந்த 'வுஜூதியா' கோட்பாடு பேசும் 'தாத்' (சாரம்) மற்றும் 'ஸிபத்து' (பண்புகள்) பற்றிய கருத்தில் சூபிகளுக்கும், மெய்யியலாளர்களுக்கும்இடையில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

மறைஞானியரான சூபிகள் 'பண்புகள்' நிலையானவை என்றும், அவை 'தாத்'தில் ஓர் உபரி என்றும் கருதுகின்றனர். மெய்யியலாளர்கள் பண்புகளே உண்மையில் 'தாத்' என்றும் 'தாத்'தும்ஸிபத்துக்களும் இரண்டறக் கலந்து அவனில் ஒழுங்கு படுத்தப்படுவையாய் இல்லை என்றும் கருதுகின்றனர் (K.S.Khajakhan, 1935:51)..

இக்கூற்றின் முதலாவது கருத்தே ஒரு பகுப்பு முறையான (Analytic) கருத்தாகத் தோன்றுகிறது. அந்தக் கருத்தின்படி முதலில் தாத்தே ஏகமனதாயும் தன்னிறைவுற்ற தாயும் இருந்தது. அதிலிருந்து பண்புகள் வெளியாகின.

இரண்டாவது கருத்து தொகுப்பு முறை (Synthetic) கருத்தாகத் தோன்றுகிறது. அந்தக் கருத்தின் படி பண்புகள் இருக்கின்றன. அவை இரண்டறக் கலந்து தன்னளவில் சூனியமான ஒன்றை விளைவிக்கின்றன. இது ஒட்சிசன் (Oxygen) , ஐதரசன் (Hydrogen) ஆகியவற்றினூடாக ஓடும் மின்னோட்டம் ஒன்றிணைந்து இந்த இரண்டையும் தவிர வேறு எதுவுமே இல்லாத நீரை விளைவிப்பதைப் போன்றது. இது பௌத்த சமயம் சார் கருத்தாகும்.

சூபிகளினதும், மெய்யியலாளர்களினதும் கருத்துப்படி 'தாத்தே' உண்மையில் 'ஸிபத்து' (பண்பு)களாக, இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, உனது 'தாத்' (சாரம்) தானாகவே உன்னைப் பார்க்கும் ஆற்றலுடையவனாக ஆக்குவதில்லை. பார்வை என்ற பண்பிலேயே தங்கியிருக்கிறது. எனினும்,'அல்லாஹ்' பார்வையில் தங்கியிருக்க வில்லை. உன்னைப் போலன்றி அவன் தனது 'தாத்'தைக் கொண்டே பார்க்கிறான். யதார்த்தத்தில் 'தாத்'தும்,'ஸிபத்'தும் ஒன்றேயாகும். ஆனால், புரிந்துக்கொண்ட விளக்கத்திலேயே அவை வெவ்வேறானதாய் இருக்கின்றன. பண்புகள் 'தாத்'தின் முகங்கள் அல்லது அம்சங்கள் மட்டுமேயாகும். ஆகவே, பண்புகள் யதார்த்தத்தில் 'தாத்'தே என்றுதான் சொல்ல முடியும். அதாவது கொள்கலனுமில்லை, கொள்ளப்படுவதுமில்லை. ஆனால், கொள்கலனாயும் கொள்ளப்படுவதாயும் வெளியாக்கியிருப்பது ஒரே ஒரு யதார்த்தமேயாகும். பலவான தன்மை கற்பனையில் இருக்கிறது அன்றி யதார்த்தத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமையைப் பொறுத்தவரை 'தாத்'தும் 'ஸிபத்து'க்களும் ஒன்றேயாகும். ஆயினும் அறிகையைப் பொறுத்தவரை வேறானவையாயும் இருப்பதைப் போல வித்தி யாசமானவையுமாகும். இந்த வகையீடு நயமதிப்பிலேயே இருக்கிறது. இவ்வாறு தாத்திலே மெய்யான முற்றொருமையும் (Identity) உண்டு. சங்கற்பமான வேற்றுமையும் (Diversity) உண்டு. புறவாதிகள் (ளாஹிரி), கருதுவதைப்போல அவை வித்தியாசமான வையாயின், ஒவ்வாத பிற்பட்ட ஒரு அடிப்படையை அவை எப்போதும் கொண்டவையாய் இருத்தல் வேண்டும் ஆனால் அவ்வாறு இல்லை.

வரையுற்ற அதாவது முடிவுள்ள ஒரு பொருளைச் சூழ்ந்து இருப்பதே அறிவு ஆகும். வரையற்ற அதாவது முடிவிலியான ஒரு பொருளைச் சூழ அதனால் இயலாது இவ்வாறு முழுமுதல் தன்மையில் 'அல்லாஹ்' தன்னைஅறிந்தவனாகவே இருக்கிறான். இந்த நிலையில் அறிபவனாகவும் அறியப்படுபவனாகவும் இருப்பவன் அவனேயாகும்.

இப்னு அறபியைப் பற்றி, இமாம் இப்னுதைமிய்யா பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'வஹ்ததுல் வுஜூத்' பற்றிய கோட்பாட்டைப் போதித்தவர்களுள் இப்னு அறபி இஸ்லாமிய கோட்பாட்டுக்கு மிக நெருங்கியவராவார். அவரது பல கருத்துக்கள் இஸ்லாத்திற்கு உடன்பாடான வகையிலேயே காணப்படுகின்றன. இவர் 'அள்ளாஹிர்' எனும் வெளிரங்கமானதற்கும் 'மளாஹிர்' எனும் பிரத்தியட்சமான வெளிப்பாடுடைய பொருள்களுக்குமிடையில் வித்தியாசப்படுத்துவதுடன் சமயச் (தீன்) சட்டங்களை அங்கீகரித்துஏவல், விலக்கல் ஆகியவற்றை அங்கீகரிக்கின்றனர். சூபிகளான ஆத்மஞானிகள் நன்னடத்தை, இறைவணக்கம், இறைதியானம் முதலான விடயங்கள் சார்ந்த 'ஸூலூக்' என்னும் நடைமுறை பற்றி குறிப்பிட்டுள்ள பல விடயங்களை இப்னு அறபி சிலாகித்துக் குறிப்பிட்டு அதனைக் கடைப்பிடிக்கும்படி போதிக்கின்றார். இதனால் தான் பல சூபிகள் இப்னு அரபியின் நூல்களில் காணப்படும் ஆன்மீகப் பயிற்சிகளைக் கடைப்பிடித்துப் பயனடைகின்றனர். அவர்களில் பலருக்கு இந்த ஆன்மீக அனு';டானங்களும் பயிற்சிகளின் நுட்பமும், யதார்த்தமும் புரிவதில்லை. ஆனால் உரிய முறையில் விளங்குவோரும் புரிந்து கொள்வோரும் அவரது போதனைகளின் உண்மையான அர்த்தத்தை அறிந்துக் கொள்கின்றனர் (இப்னுதைமிய்யா: 176).

அக்பரியா பள்ளியின் (School of Akbariyya) நிறுவனரான இப்னு அறபி சூபித்துவ வரலாற்றில் மிக உயர்ந்த இடத்தை வகிப்பவர். ஆயினும் சூபித்துவத்தோடு ஆழமான தொடர்புடைய அறிஞர் சிலர் அவரது கருத்துக்களில் நல்லபிப்ராயம் கொண்டிருக்க வில்லை. அத்தகையவர்களுள் இரண்டாவது ஆயிரம் ஆண்டின் புத்துயிர்ப்புவாதி (முஜத்தித் அல்ப்தானீ) என அழைக்கப்படும் இந்தியாவைச் சேர்ந்த அஹ்மத் ஸர்ஹந்தி (15641626) குறிப்பிடத்தக்கவர். அவர் இப்னு அறபி பற்றிக் குறிப்பிடுகையில் பின்வருமாறு எழுதுகிறார்:

'ஸீ'ய்க் முஹ்யத்தீன் (இப்னு அறபி) உளத்தெளிவும், இறைஞானமும் அருளப்பட்ட வர்களுள் ஒருவராகத் தோன்றுவது ஆச்சரியமாக இருக்கிறது. ஏனெனில் அவரது அனுபவங்களில் சில மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து வேறுபட்டவையாக மட்டுமன்றி தவறானவையாகவும் இருக்கின்றன'. (A.H.Ali Nadwi, 1975:38-39). அவர் மேலும் கூறுகின்றார்: 'அவரது (இப்னு அறபியின்) பேரானந்த அனுபவங்களுள் சில வைதீக மரபினரின் போதனைகளோடு ஒத்துப்போவதில்லை. தவறானவையாயும் இருக்கின்றன' (அநூல்,39).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்னு அறபிக்கு எதிரான இத்தகைய குற்றச்சாட்டு நீண்ட காலமாக இஸ்லாமிய சிந்தனையில் இருந்து வருகின்றது. அதிலும் குறிப்பாக, 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டில் கிரேக்க மற்றும் வேதாந்த அத்வைத சிந்தனைகளின் தாக்கமுண்டு என்றும் இக்கோட்பாடு இஸ்லாத்துக்கு முரணானது என்றும் விமர்சனங்கள் உள்ளன. எனினும் எம்.சி.சித்திலெப்பை தனது 'அஸ்ராருல் ஆலம்' (1928) எனும் நூலில் சூபித்துவ ஞானத்திற்கும், இந்து சமய ஞானத்திற்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துரைப்பதுடன் கூடுதலாக இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டை ஆதரிப்பவராகவும் காண முடியும். அதேநேரம் முஹம்மது அப்துர் ரஹ்மான் ஸாஹிபு தனது 'முஸ்லிம் அத்வைத மூல மொழி' (1962) எனும் நூலில் 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டையும் இந்து சமய வேதாந்த பகுதியையும் இணைத்து விளக்கி இரண்டையும் ஒன்றாகக் காண்பதும் குறிப்பிடத்தக்கது.

'வஹ்ததுல் வுஜூத்' என்றால்இறைவனின் இருப்புண்மையைக் குறிக்கும். இருப்புண்மையைப் பெற்றிருக்கும் ஒரே உள்பொருள் இறைவன் ஒருவனே. மற்றவை அனைத்தும் இருப்புண்மை இல்லாதனவே என்பது இதன் கருத்து. இப்னு அறபியைப் பொறுத்தவரை இறைவனின் 'வுஜூத்' என்பதும் 'தாத்' (சாரம்)என்பதும் ஒன்றே. 'வுஜூத்' என்ற சொல்லை இப்னு அறபி இந்தக் கருத்திலேயே கையாண்டிருக்கிறார். 'அல்லாஹ்' அல்லாத அனைத்துச் சிருஷ்டிகளினதும் இருப்புண்மை (வுஜூத்) உள்ளதாக இருக்கும் மெய்ப்பொருளின் இருப்பையே ஆதாரமாகக் கொண்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், சிருஷ்டிகள் யாவும் உள்பொருளான இறைவனது இருப்புத்தன்மையின் தெறிப்புக்கள் ஆகும். இந்த வகையில் பிரபஞ்சத்தை இப்னு அறபி மெய்ப்பொருளின் தெறிப்பாகவே கருதினார். ஆடியில் தோன்றும் தெறிப்புக்குத் தற்காலிகமான இருப்புண்மை இருப்பது போல சிருஷ்டிகளுக்கும் தற்காலிகமான இருப்புண்மையே உண்டு. தெறிப்புத் தனது இருப்புக்குத் தெறிப்பைத் தோற்றுவிப்பதில் தங்கி இருப்பதைப் போலச் சிருஷ்டிகள் தம் இருப்புக்கு இறைவனின் இருப்புண்மையில் தங்கியிருக்கின்றன. தெறிப்பு தெறிப்புக்குரிய பொருளாகாததைப் போல சிருஷ்டிகள் ஒருபோதும் சிருஷ்டிகர்த்தா ஆவதில்லை.

மேலும், குயவன்பாத்திரம் என்ற உருவகமானது அல்லாஹ்வுக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை மிகச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு ஏற்றதொரு உதாரணமாகும். இந்த உருவகத்தை நோக்கின் அல்லாஹ்வுக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையேயுள்ள பிரத்தியேகமான தொடர்பு இலகுவாகப் புலப்படும். இவ்வகையில் இருப்புள்ளவன் அல்லாஹ் மட்டுமே மற்றவை அந்த இருப்பின் வெளிப்பாடுகளே. மனிதனின் 'நான்' என்ற உணர்வு அழிந்தபின் படைத்தவன் பக்கம் சேருகிறான். படைப்பு எவ்வளவு உயர்ந்தாலும் அல்லாஹ்வாக முடியாது. அல்லாஹ்வின் வுஜூத்தான் பல்வேறு வடிவங்களாக பிரபஞ்சத்தில் தோன்றியிருக்கின்றது. இந்த வகையில் உள்பொருளாகிய 'வுஜூத்' ஒன்றுதான் என்று அறிவதே 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டின் சாரம்சமாகும்.

'அல்லாஹ்'ஏகனாயும் அதே சமயம் பலவாயும் இருக்கிறான் என்பதற்கு குர்ஆனில் தன்மைப் பன்மையில் பேசும் வசனங்களே நல்ல சான்றாகும். அதிகமான இடங்களில் 'அல்லாஹ்' நாம், நாம் என்றே குறிப்பிடுகிறான். இதற்குச் சிலர் 'அல்லாஹ்' தனது அமரர்களையும் கருத்தில் வைத்தே இப்படிப் பேசியிருக்கிறான் என்கின்றனர். ஆனால் இது தவறானது. சிருஷ்டிகளாக வெளியாகியிருக்கும் தனது 'தாத்'தின் 'தஷ்பீஹ்' (ஒப்புவமைநிலை) நிலையினைக் கருத்தில் வைத்தே அவன் இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைப் படர்க்கையில் பேசியிருக்கிறான் எனக் கருதலாம். மேலாக, குர்ஆன் அரபு மொழியில் இறக்கப்பட்டது. அம்மொழியில் ஒருமைக்கு பன்மைச் சொல்லை உபயோகிப்பது அரேபிய வழக்கத்தில் உள்ளது. இப்பன்மை உபயோகமானது கௌரவ நிலையில் பயன்படுத்தப்படுவதாகும். இறைவனைத் தவிர கண்ணியம் உடையவன் வேறு யாரும் இல்லை. இந்த கண்ணியத்தை உறுதிப்படுத்துவதற்கு பன்மைத்துவ விளக்கம் பயன்படுத்துவது அரேபிய வழக்கமாகும். குர்ஆனில் 'உன்னிடம் ஓதிக் காட்டுகின்றோம்', 'உன்னிடம் கதையாகக் கூறுகின்றோம்' போன்ற பன்மை உபயோகங்கள் அரபு மொழியில் ஒருவனாகவும் கண்ணியமாகவும் இருக்கும் போது வழக்கமாக உபயோகப்படுத்தப்படுவது வழிமுறையாகும் (இப்னு தைமிய்யா: 128).

இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாடு அல்லாஹ்வின் அகமானவன் (பாதின்), வெளியானவன் (ளாஹிர்) ஆகிய இரு நிலைகளையும் விளக்குவதாக அமைந்துள்ளது. புறம் (External – ளாஹிர்) என்பது ஆத்ம உலகம், சூக்ம உலகம், சட உலகம் என்பன பற்றியதாகவும் அமைகின்றது. அதாவது புறம் என்பது படைப்பு என்றும், அகம் (Inner – பாதின்) என்பது ஒப்புவமைகள் அற்ற தூய நிலையாகவும் (தன்ஸீஹ்) அதாவது அல்லாஹ்வின் வுஜூத் என்றும், மாறாக புறம் (ளாஹிர்) என்பது ஒப்புவமை (தஷ்பீஹ்) உடையதாகவும்அமைகின்றது.

இங்கு'தன்ஸீஹ்' என்ற தூய்மையான பகுதியும் ஒப்புவமையான 'தஷ்பீஹ்' என்ற இரு பகுதிகளும் வுஜூதின் இருநிலைகளாகும். இவ்விரண்டும் வுஜூதைத் தவிர்ந்து வேறு இல்லை. இறைவன் குர்ஆனில் 'அவனைப் போல் ஒரு பொருளுமில்லை'என்று தன்ஸீஹ்கையும்'அவன் கேட்பவனும் பார்ப்பவனுமாய் இருக்கிறான்' என்று தஷ்பீஹை யும் கூறுகிறான். அவனைத் தஷ்பீஹ் இல்லாமல் தன்ஸீஹ் ஆக்கினால் அவனைத் தன்ஸீஹைக் கொண்டு மட்டுப்படுத்தியதாகிவிடும். அவனைத ';தன்ஸீஹ்;' இல்லாமல் 'தஷ்பீஹ்' ஆக்கினால் அவனைத் தஷ்பீஹைக் கொண்டு மட்டுப்படுத்தியதாக ஆகிவிடும். இவ்விரண்டு பகுதிகளிலும் வுஜூதைத் தவிர்ந்து வேறு எதுவும் கிடையாது. இவ்விரண்டு பகுதிகளும் ஒன்றுசேர அறிபவனே ஏகத்துவவாதியாவான். அதாவது இவ்விரண்டு விதமான பண்பின் மூலம் 'வுஜூத்' ஒன்றேயாகும். எனவே முடிவு ஒன்றாக வேண்டும். அதுவே முழுமையாகும். இம்முழுமையை அறிபவனே பூரணமான மனிதன் ஆவான். ஆக, இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாடு அல்லாஹ்வின் 'அகம்' சார்ந்த பகுதியையும் 'புறம்' சார்ந்த பகுதியையும் ஒன்றாகக் காணுகின்றது என அறியலாம்.

சூபித்துவ நெறியை விமர்சனம் செய்யும் பழமைவாதிகள் இந்த 'தன்ஸீஹ்' என்பது இந்துமத அத்வைதத்தில் காணப்படும் 'நிர்க்குண பிரம்ம' நிலையே என்று கூறுகின்றனர். ஆனால், இந்து வேதாந்திகள் கூறும் 'நிர்க்குணம்' வேறாகும். அவர்கள் குறிப்பிடும் நிர்க்குணநிலையில் பண்புகள் (குணம், குறி) எந்த வடிவத்திலுமில்லை. பண்பு எதுவும் எந்த நிலையிலும் இல்லாத பிரம்மத்தையே அவர்கள் நிர்க்குணம் என்கின்றனர். ஆனால் சூபிகள் கூறும் 'தன்ஸீஹ்' என்பது எல்லையில்லாமலும் மறைந்து கிடக்கும் பண்புகளை தன்னுள் பொதிந்திருப்பதுமான 'தாத்'தின் நிலையாகும். அத்வைதிகளின் கோட்பாடு 'பிரம்மம்' என்ற 'தாத்'தையே ஒரு பூச்சியமாக்கிவிடுகிறது. சூபிகளின் கோட்பாடோ 'தாத்' என்ற பிரம்மத்தை எல்லா எண்களையும் தன்னுள் அடக்கிய ஒன்றாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நிலையிலும் வேறானது என்பது இல்லை. 'எல்லாம் அல்லாஹ்வே' என்று அனைத்திறைக் கோட்பாடு (Pantheism) அதாவது இயற்கையாவையும் இறையுருவே என பேசுவோர் பின்வரும் விடயத்தை நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். 'இருக்கும் வுஜூத் ஒன்றேதான். அது தான் அல்லாஹ்வின் வுஜூத்' என்ற கருத்தில் சூபித்துவத்தின்பயிற்சியாளர்களிடையே கருத்து வேறுபாடு இல்லை. பிரபஞ்சமும் அதிலுள்ள எல்லாப் பொருட்களும் அவனது வுஜூதாகவே இருக்கின்றன. ஆனால் வஹ்தத்தின் (ஏகமான) கட்டத்திலேயே இது சாத்தியமாகின்றது என்பதை மறந்துவிடலாகாது. அந்த வுஜூத்'வஹ்தத்'தின் கட்டத்திலிருந்து கீழே இறங்குகையில் வேறான தன்மை ஏற்பட்டு விடுகின்றது. அப்போது இப்னு அறபி கூறுவது போல 'அப்து' (அடியான்) அப்துவாகவும்,'றப்பு' (அல்லாஹ்) றப்பாகவுமே இருக்கின்றனர். மெய்ஞானி ஒருவனைப் பொறுத்தவரை சாதாரண நிலையில் தன்னுணர்வோடு இருக்கும் போது வேறானதைப் பார்ப்பவனாகவே இருக்கின்றான். அப்போது அவன் அல்லாஹ்வை சிருஷ்டிகர்த்தாவாயும் பிறவற்றை சிருஷ்டிப் பொருள்களாகவுமே காண்கின்றான். ஆயினும் அவன் யதார்த்தத்தில் வேறாய் இல்லை என்பதையும், இருப்பதெல்லாம் ஏகமான ஒரே வுஜூதே என்பதனையும் உணர்ந்து அறிந்தவனாகவே இருக்கின்றான். 'இல்முல் யகீன்' என்ற இந்த அறிவை மட்டும் வைத்துக்கொண்டு 'எல்லாம் அல்லாஹ்வே' என்று அவன் கூறுவதில்லை. அது தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் தன்னுணர்வோடு உள்ள நிலையைப் பொறுத்தவரை அவன் ''ரீஅத்' என்ற சட்ட(புற)நெறியை முழுக்க முழுக்க பின்பற்றுபவனாகவும் அதன் சட்டங்களுக்கு கட்டுப்படுபவனாகவும் இருத்தல் வேண்டும்.

வேறாய் இருந்தால் மட்டுமே பணிதலும் வழிபடுதலும் சாத்தியமாகும். இந்த வேறான தன்மை அல்லாஹ்வுக்கு இடையே உள்ள ஒரு திரை போன்றது. இந்தத் திரை அகற்றப்பட்டுவிட்டால் ''ரீஅத்' தேவை இல்லாமல் போய்விடும். சன்மார்க்கம் (தீன்) எனும் வாழ்க்கை நெறி என்பது அர்த்தம் அற்றதாகிவிடும். ஆயினும் இந்த வேறான திரை அகற்றப்படும் வேளையும் உண்டு. அதுவே ஒருவன் தனது அறிவில் ஏற்கனவே உறைந்திருக்கும் உண்மையை நிதர்சனமாக, அனுபவ ரீதியாகக் கொண்டு வேறானதை மறுக்கிறான். இதுவே வஹ்தத்தின் சமுத்திரத்திலிருந்து ஒரு நீர்க்குமிழியாக வெளியாகி இருக்கும் 'ஸாலிக்' (மெய்ஞானி) அதே சமுத்திரத்தில் தனது குமிழித் தன்மையை கரைத்து தன்னைச் சமுத்திரமாக காணும் கட்டமாகும். இந்நிலையை 'கிதாபுல் அஜ்விபா' எனும் நூலில் இப்னு அறபி பின்வருமாறு கூறுகின்றார்: அவனாலே அவன் அவனை அறிகின்றான். பிரபஞ்சம் என்பது, படைப்புக்களற்ற அவனின் தனித்துவத்தையும் ஒருமை நிலையையும் மறைக்கும் ஒரு திரையாகும் (ஏ.எம்.முஹம்மது சஹாப்தின், 1995:131132).

அல்லாஹ்வின் இறக்கங்களுள் (தன்ஸீலாத்), ஒன்றான 'வஹ்தத்'(ஏகம்) என்ற இந்தக் கட்டத்தில் சிருஷ்டி – சிருஷ்டியாளன்; என்ற வேறுபாடு இன்றி சிருஷ்டிகள் யாவும் அல்லாஹ்வோடு முற்றொருமை (ஐனநவெவைல) உடையனவாக இருக்கின்றன. இந்தக் கட்டத்தில் அல்லாஹ் தன்னை வேறாகவும் தனது பண்புகள், நாமங்கள், செயல் ஆற்றல்கள், நிலையான கருத்துப் படிவங்கள் (அஃயானெ தாபிதா), சிருஷ்டிகள் முதலானவற்றை வேறாகவும் காண்பதில்லை. குறிப்புக்கள் அற்ற உள்வாங்கு நிலையான இந்தக் கட்டத்தை இறைவனின் நல்லடியார்கள் 'ஃபனா' என்ற தன்னழிப்பு மூலம் அடைகின்றனர். இந்த நிலையில் அவர்கள் தம்மை வேறாகவும் அல்லாஹ்வை வேறாகவும் காண்பதில்லை. காணவும் முடியாது. இந்தக் கட்டத்தை அடைந்தவர்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது சுயத்தை முற்றாக இழந்த நிலையில் 'நானே மெய்ப்பொருள்', 'அல்லாஹ்வே எல்லாம்' என்பன போன்ற வார்த்தைகளை வெளியிடுகின்றனர். சமயம் குறித்த சட்ட விரிவுரையாளர்கள் இவை இஸ்லாமிய சமய சட்ட வரையறைக்கு முரணான வார்த்தைப் பிரயோகங்கள் எனக் கூறுகின்றனர்.

எனினும் சிருஷ்டிகள் 'வஹ்தத்' என்ற கட்டத்திலிருந்து பிரிந்து 'வாஹிதியத்', 'ஆலமுல் அர்வாஹ்','ஆலமுல் அஜ்ஸாம்' முதலான கட்டங்கள் மூலம் வேறாகிவிட்ட பின்னர் தம்மை அல்லாஹ்வோடு முற்றொருமை உடையவையாகக் கருதவோ கூறுவோ முடியாது. ஏனெனில் ஏகமான தன்மை வஹ்தத்திற்கு கீழுள்ள பிற இறக்கங்கள் (குறைந்த தரம்) வாயிலாக அகன்று வேறான தன்மை (கைரியத்) ஏற்பட்டுவிட்டால் முந்திய கட்டம் பற்றிய நினைவும் உண்மையும் மேல் எழ முடியாது. உப்பு கடல்நீரில் இருந்து பிரிந்து வேறாகிவிட்ட பின்னர் தன்னை எப்படி கடல் என்று அழைத்துக் கொள்ள முடியாதோ அப்படியே வஹ்தத்திலிருந்து கீழ் இறங்கிய மனிதன் அல்லது சிருஷ்டி தன்னை ஏக பொருளாகக் குறிப்பிடவோ காணவோ முடியாது. உப்பு தன்னைக் கடலாகக் காண்பதாக இருந்தால் அது மீண்டும் கடலில் கரைந்தாக வேண்டும். அவ்வாறே சிருஷ்டியும் தன்னை ஏகமாகக் காண்பதாக இருந்தால் அது 'வஹ்தத்' கடலில் தன்னைக் கரைத்துக் கொள்ள வேண்டும். இந்த அனுபவத்தை ஆத்மீக ஞானிகள் 'ஃபனா' என்ற தன்னழிப்பின் மூலம் அடையலாம் எனக் கூறுகின்றனர்.

இப்னு அறபி 'ஃபனா'இரண்டு விடயங்களைக் கொண்டது. என்கிறார். ஒன்று மெய்ஞானக் கருத்தில் அமைந்த ஃபனா, மற்றையது உளவியல் கருத்தில் அமைந்த ஃபனாவாகும். முந்தியதில், ஃபனா என்பது அறியாமை அழிந்து, முழுமையும் அடங்கிய ஏகத்துவத்தின் (உள்ளுணர்வினால் ஏற்பட்ட) திடமான அறிவில் நிலைப்படுதலாகும். இது ஒரு படிவம் என்ற வகையில் ஞானி அல்லது ஸாலிக் தனது அகத்தின் இல்லாமையை உணர்ந்தறிதலேயன்றி அகத்தை இழத்தல் அன்று. பிந்தியதில், ஃபனா என்பது காட்சி உலகின் படிவங்கள் அகல்தலும் ஏகமான ஒரே பிரபஞ்ச சாரம் தொடர்தலும் ஆகும். இது பற்றி அவர் குறிப்பிடுகையில், இன்னொரு படிவத்தில் அல்லாஹ்வின் 'தஜல்லீ' (ஒளிர்வு) நிகழும் கணத்தில் ஒரு படிவம் மறைந்து விடுவதே அதன் ஃபனா ஆகும் என்கிறார். (புஸூஸுல் ஹிகம்:230).

உண்மையில் ஓர் எல்லைப்பாட்டில் அல்லது குறிப்பீட்டில் தோன்றும் 'தாத்'தின் தோற்றமே 'தஜல்லீ' எனப்படுகிறது. இறைவன் தனது அடியானுக்கு அவன் அதிகம் விரும்பித் தேடும் வடிவத்திலே 'தஜல்லீ' அளிக்கிறான். நபி மூஸா (அலை) 'றிஅய்பின் வீட்டிலிருந்து எகிப்துக்குத் திரும்பிச் சென்ற வழியிலே, பாலைவனத்தில் நெருப்பைத் தேடிக் கொண்டிருந்தார். அப்போது அல்லாஹ் 'எரியும் புதரிலே' தனது தஜல்லீயை வெளிப்படுத்தினான். இவ்வாறு ஒருவன் எந்த உருவத்தில் அவனைத் தேடுகிறானோ அவன் அந்த உருவத்தில் 'தஜல்லீ' அளிப்பான். மலை, மரம், கல், பெண் குழந்தை முதலான எப்பொருளின் உருவத்திலும் அல்லாஹ்வின் 'தஜல்லீ' ஏற்படலாம். 'தாடி முளைக்காத அழகிய இளைஞனின் உருவத்தில் இறைவனைக் கண்டேன்' என்று நபி (ஸல்) கூறியிருப்பதும் அறியத்தக்கது. எனினும் யதார்த்தத்தில் இல்லாத ஒரு பொருளை அதாவது தஜல்லீயை தாத்தாக அல்லது இறைவனாக எண்ணிக் கொள்வதும் அதனை வழிபடுவதுமே விக்கிர ஆராதனையாகும். இப்னு அறபியின் கருத்துப்படி, ஃபனா ஏழு கட்டங்களைக் கொண்ட ஒரு படிமுறைச் செயற்பாடாகும் (பார்க்க, புதூஹாத்துல் மக்கியா: 675676). ஃபனா நிலைக்கு உள்ளானவர் 'ஃபானீ' எனப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஆத்மீக ஞானிகள் தமது தன்னழிப்பின் மூலம் அடைந்த அனுபவத்தையும் ஞானத்தையும் ஒருவர் அறிந்து யதார்த்தத்தை புரிந்து வைத்துக் கொள்ளலாமே ஒழிய, அவர் அதனை முழு முதலான உண்மையாக சுய உணர்வோடு அடித்துக் கூற முடியாது. அவ்வாறு சொல்லுதல் இறைமறுப்பும் (குஃப்ர்), இணைவைத்தலுமே ('ஜிர்க்) ஆகும். இதற்கு 'தவ்பா' என்ற பாவமன்னிப்புத் தவிர வேறு பரிகாரமோ மீட்சியோ கிடையாது. சாதாரண மனிதர்களைப் பொறுத்தவரை அல்லாஹ்வை சிருஷ்டிகர்த்தாவாகவும் அவன் அல்லாத மற்ற அனைத்தையும் சிருஷ்களாகவும் கருதி அவனது அடிமைகளாக நடந்து கொள்ளுதல் ஒன்றே போதுமானதும் எதிர்பார்க்கப்படுவதுமாகும். அல்லாஹ்வின் இருப்புண்மையைக் (வுஜூத்) கொண்டு நிலை பெற்றிருக்கும் சிருஷ்டிகளுக்கெனத் தனியான சொந்த இருப்புண்மை இல்லை என்ற அறிவு ஒன்றே அவர்களுக்குப் போதுமானதாகும். இதற்கு அப்பால் அந்த வுஜூதோடு தம்மை முற்றொருமை உடையதாகக் காண்பதும் கருதுவதும் தேவையற்றதும் ஆபத்தானதுமாகும். இதனை குர்ஆன் '.... அவனோ (அல்லாஹ்) இவர்கள் வர்ணிப்பதிலிருந்து மிக்க பரிசுத்தமானவனாகவும் உயர்ந்தவனாகவும் இருக்கின்றான்' (குர் ஆன், 6:100) என்று உணர்த்துகிறது.

இந்த அடிப்படையில்தான் இப்னு அறபி தமது 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டை விளக்கியுள்ளார். 'இருப்புண்மை (வுஜூத்) ஒன்றுதான். அந்த இருப்புண்மையைத் தவிர உள்ளதாக இருப்பது எதுவுமே இல்லை' என்று கூறிய அவர், 'ஆயினும் றப்பு றபு;புதான்,அப்து அப்து தான்' என்றும் அடித்துக் கூறினார். இவ்வாறு கூறியதன் மூலம் அவர் ஒரு கட்டத்திற்குப் பிறகு வேறான தன்மை (கைரியத்) உண்டு. என்பதையே அவர் சூசகமாக வெளிப்படுத்தினார். இந்த வேறான தன்மையைக் கருத்தில் கொண்டேதான் அல்லாஹ் மனிதர்களுக்காக தீர்க்கத்தரிசிகளையும் தூதர்களையும் வேதங்களையும் 'ரீஅத் என்ற சட்ட நெறிகளையும் இறக்கி அருளினான்.

முடிவாக, இப்னு அறபியின் தத்துவம் இரண்டு பிரச்சினைகளைத் தெளிவுப் படுத்துவதைக் காணலாம்.

1. ஒரு இருத்தல் மட்டுமே உண்டு
2. ஏனைய இருத்தல்கள் இல்லை ஆனால் ஏனையவைகள் ஒரு இருத்தலின் வெளிப்பாடுகளும் தோற்றப்பாடுகளும் மாத்திரமே என்பதுமாகும்.

எனினும், 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாடு பல சந்தர்ப்பங்களில் சாதாரண மக்களின் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் சவாலாக அமைந்து விடுகின்றது. சந்தேகமின்றி இப்னு அறபி பிற்கால சூபிகள் மீதும் அவரது கோட்பாடுகளை நிராகரித்தவர்கள் மீதும் பாரிய செல்வாக்கை செலுத்தினார். அதிகமானோர் அவரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர். இருப்பினும் சூபிகளுக்கு மத்தியில் 'வஹ்ததுல் வுஜூத்'எனும் அடிப்படைச் சிந்தனைக்கு அப்பால் உண்மையான மறைஞான அறிவு சார் வளர்ச்சி இருக்கவில்லை என்ற மதிப்பீட்டைப் பெற முடியும்.

உசாத்துணைகள்

1. Ali Nadwi, A.H, (1975) Religion and Civilization, Academy of Islamic Research and Publication, Lucknow.
2. Kalanasuriya, A.D.P, (1987) A Philosophical Analysis of Buddhist Nations, (The Buddha and Wittgenstein), Sri satguru Publications, Delhi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Khaja Khan, K.S, (1935) The Secret of Anal Haqq, S.H.Mouhummod Ashraf, Lahore.

4. இப்னு அறபி (ஆ.இ), புதூஹாத்துல் மக்கிய்யா, பாகம்ஐஐ, கெய்ரோ.

5. இப்னு தைமிய்யா, (ஆ.இ), மஜ்மு அதுர்ரஸா இல் வல்மஸா இல், பாகம் 01, கெய்ரோ.

6. இப்னு தைமிய்யா, (ஆ.இ),மஜ்முஉல் ஃபத்தாவா, பாகம் 05, கெய்ரோ.

7. சித்திலெப்பை, எம்.சி,(1928),அஸ்ராருல் ஆலம், டயமண்ட் பிரஸ், கொழும்பு.

8. முஹம்மது அப்துர் ரஹ்மான் ஸாஹிபு (1962) முஸ்லிம் அத்வைத மூலமொழி, 'லீஹுஒல் ஹமீதிய்யா பிரஸ், சென்னை.

9. முஹம்மது சஹாப்தீன்,ஏ.எம், (1995) இறைவனும் பிரபஞ்சமும் இஸ்லாமிய தத்துவக் கருத்துக்கள், ஏ.எம்.எம். சஹாப்தீன் டிரஸ்ட் பவுன்டேசன் வெளியீடு, கொழும்பு.

10. ஜமாஹிர், பீ.எம், (2021) மெய்யியல் சிந்தனைகள், நதா வெளியீடு, மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.லோகேஸ்வரன்

முதல்வர்

கொட்டகலை ஆசிரியர் கலாசாலை

21ம் நூற்றான்டு திறன்களும் - எமது நாட்டு கல்வி முறைமையின் அதன் தாக்கமும்

21ம் நூற்றாண்டு ஓர் அறிவுமைய நூற்றாண்டாக பரிணமித்துள்ளது. மனித வாழ்வில் எல்லா துறைகளிலும் அறிவு ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. எண்மப் புரட்சியின் (டிஜிற்றல் புரட்சி) விளைவாக இந்நூற்றாண்டு மனித சமூகம் அறிவுசார் சமூகமாக Knowledge Society மாற்றம் அடைந்து வருகின்றது. இந்த எண்மப் புரட்சியின் புதிய வளர்ச்சி பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டிலும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த மாற்றங்கள் கடந்த நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களைவிட மிக அதிகமாக இருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. கடந்த நூற்றாண்டுகளில் கற்றல் என்பது கற்பவர் உடன்பாடான நிலையில் இருந்து தகவல்களை பெற்றக் கொள்வதும், தொழில்துறை உலகில் சிறந்து விளங்க உதவும் திறன்களை பெற்றுக் கொள்ள தயார் படுத்துவதிலுமே கவனம் செலுத்தப்பட்டது. இது குறுகிய அளவிலான திறமைகளையும், ஒரே மாதிரியான திறன்களை கொண்ட சமூகத்தை உருவாக்குவதற்காகவே அமைந்திருந்தது. இன்றும் கூட இவ்விரண்டு திறன்களுமே பாடத்திட்டத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

20ம் நூற்றாண்டின் பாடசாலைக் கல்வியும் பெரும்பாலும் ஒரே மாதிரியான கல்வித் திட்டத்தை பின்பற்றி ஒரே மாதிரியான வேகத்தில் கல்வி கற்பதாகவே அமைந்திருந்தது. இந்த கல்வி முறைகள் நடைமுறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விடவும் உண்மையான படைப்பாற்றலை, திறன்களை வெளிப்படுத்த தவறியமையையே காணமுடிந்தது.

ஆனால் 21ம் நூற்றாண்டு எண்மப் புரட்சியின் (டிஜிற்றல் புரட்சி) விளைவாக கல்வி நிறுவனங்கள் கடந்த காலத்தில் எதிர்கொண்டதைவிட வேறுபட்ட அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டியதாக உள்ளன. குறிப்பாக சிந்திக்க முடியாத வகையில் மாறிவரும் உலகில் வெற்றிபெறத் தேவையான திறன்களையும், நடைமுறை அறிவையும் வழங்குவதும் இந்த திறன்களில் பயிற்சி மற்றும் சிறந்து விளங்குவதற்கான தளத்தை அவர்களுக்கு வழங்க வேண்டியும் உள்ளது. காரணம் இன்றைய பிள்ளைகள் வெறும் வேலையைப் பெறுவதை மட்டும் நோக்கமாக கொண்டிருத்தல் என்பதைவிட உலக பிரச்சினைகளை அணுகித் தீர்க்கும் திறன் கொண்டவர்களாகவும் மாற்றம்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று மாற்றம் அடைந்துவரும் தொழில்நுட்பம் மற்றும் தகவல் ஒருங்கிணைப்புடன் 21ம் நூற்றாண்டின் வளர்க்கப்பட வேண்டியதிறன்களை அறிந்து கொள்வதிலும், சிறந்த வழியில் அவற்றை பயன்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இத்திறன்கள் பிள்ளைகளிடம் புதிய சிந்தனைத்திறனையும் செயன்முறையையும் உருவாக்க முயற்சிப்பதுடன் சமூகத்தின் மத்தியில் சமூகம் மற்றும் கலாசார எல்லை களை கடந்து செல்லவு உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக மாற்றமடைந்துவரும் கல்வித் தேவைகளுக்கு அமைவாக 21ம் நூற்றாண்டில் பிள்ளைகளிடம் பல திறன்கள் விருத்தியடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவையாவன:

21ம் நூற்றாண்டு திறன்களாவன:

1. கற்றல் திறன்கள் – "Learning skills"

– பகுப்பாய்வு திறன்	"Critical Thinking skills"
– படைப்பாற்றல் திறன்	"Creativity skills"
– இணைந்து பணியாற்றும் திறன்	"Collaboration skills"
– தொடர்பாடல் திறன்	"Communicationskills"

2. கல்வியறிவுத் திறன்கள் – "Literacy skills"

தகவல் திறன்	"Information skills"
ஊடக திறன்	"Media"
தொழில்நுட்ப திறன்	"Technology skills"

3. வாழ்க்கை திறன்கள் – "Life skills"

நெகிழ்வு தன்மை	"Flexibility"
தலைமைத்துவம்	"Leadership"
தன்னார்வ முயற்சி	"Initiative"
உற்பத்தி திறன்	"Productivity skills"
சமூகத்திறன்	"Social skills"

மேலே கூறுப்பட்ட கற்றல் திறன்கள் (Learning skills), கல்வியறிவுத்திறன்கள் (Literacy skills), வாழ்க்கை திறன்கள் (Life skills) என்பன இன்று பாடசாலை கல்வியின் ஊடாக பிள்ளைகளிடம் விருத்தி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம் மூன்று வகை திறன்களிலும் 21ம் நூற்றாண்டுக்கான திறன்களில் 4C's திறன்கள் (கற்றல் திறன்கள்) பிரபல்யமானதாக உள்ளது, இதில் முதலாவதாகக் கூறப்படும் பகுப்பாய்வு திறன் (Critical Thinking) என்பது 21ம் நூற்றாண்டில் கற்றல் செயற்பாடுகளின்போது பிளளைகளின் சிந்தனையானது அறிவுபூர்வமான சிந்தனையாக விருத்தியடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு விடயத்தை கவனமாக ஆராய்ந்து, மதிப்பீடு செய்து, பகுத்து, முடிவு காணும் வகையில் சிந்தனை அமைப்பதே அறிவுபூர்வமான சிந்தனை என்பதாகும். அதாவது தகவல்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அதனை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, ஒருங்கிணைந்து நோக்கி, மதிப்பீடு செய்து அதனடிப்படையில் முடிவுகளை எடுக்கும் அல்லது பிரச்சினைகளை விடுவிக்கும் வகையில் அமையும் சிந்தனைத் தொகுதியே பகுப்பாய்வு சிந்தனையாகும்.

மேற்கூறப்பட்ட இப்பகுப்பாய்வுச் சிந்தனையோடு இணைந்த வகையில் படைப்பாற்றல் (Creativity) திறன்களும் பிள்ளைகளிடம் விருத்தியடைய வேண்டும் எனக் கூறப்படுகிறது. படைப்பாற்றல் திறன் என்னும் போது ஒரு தனி மனிதனுக்குரிய ஆக்க சக்தியாக உருவாகுதல், புதியதொன்றை கண்டுபிடித்தல், புதிய முறையில் பிரச்சினைகளை அணுகுதல், ஏற்கனவே அறிந்த ஒன்றில் மாற்றங்களை தோற்று வித்தல் போன்றவற்றுக்கு அடிப்படையாக அமையும் திறனே இப்படைப்பாற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன் என்பதாகும். இவ்வாறாக எதையும் புதிய முறையில் நோக்குதல், அணுகுதல் போன்ற திறன்களே இன்று பிள்ளைகளிடம் விருத்தியடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு பிள்ளைகளிடம் அறிவுபூர்வமான சிந்தனை, புதுமை புனைவதற்கான சிந்தனை, ஆழ்சிந்தனை, விரிசிந்தனை போன்ற சிந்தனைத்திறன்கள் விருத்தியடைந்திருக்க வேண்டியது அவசியமானதாகும்.

இவற்றுடன் இணைந்து பணியாற்றும் திறன் (Collaborction) தொடர் பாடல் (Communicction) என்பனவும் கற்றல் திறன்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள இறுதிகளாகும். இதில் இணைந்து செயற்படுத்துவதன் மூலம் கூடிய பயனை பெறலாம் எனறு ஆய்வுகள் நிரூபிக்கின்றன. இன்று பாடசாலை கல்வி செயற்பாடுகளிலும், நிறுவன செயற்பாடுகளிலும் இந்த இணைந்த பணியாற்றல் என்பது அதிகம் பேசப்படும் பொருளாக மாறியுள்ளது. இணைந்து பணியாற்றும் போது பலரது திறன்கள் குவியப்பட்டு அது கூடிய விளைவை அல்லது வெற்றியை பெற்றுத்தரும் என்றும் கூறப்படுகின்றது. எனவே மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றும் திறன்; 21ம் நுற்றாண்டு கற்றல் திறன்களில் அவசியமான ஒரு திறனாக கருதப்படுகின்றது.

கற்றல் திறன்களில் இறுதியாக தொடர்பாடல் திறன் என்னும் போது ஒருவரிடம் காணப்படும் சிந்தனையை அல்லது கருத்தை வெளிப்படுத்த உதவும் ஒரு கருவியே இதுவாகும். ஒருவரிடம் தொடர்பாடல் ஆற்றலானது (மொழி ஆற்றல்) அவரது ஆளுமையை வெளிப்படுத்தும் முக்கிய அம்சமாகும். இன்று Talking to others – எல்லோருடனும் விரும்பும் வகையில் உரையாடுதல் என்பது (முகாமைத்துவத்தில்) முக்கிய கருப்பொருளாக பார்க்கப்படுகின்றது. எனவே இவ்வாறு எல்லோருடனும் விரும்பும் வகையில் உரையாடும் திறனும் பிள்ளைகளிடம் சிறு வயதில் இருந்தே விருத்தியடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே இந்த கூறப்பட்டுள்ள திறன்களும் இன்றைய நவீன வேலைச் சூழலில் இசைவாக்கம் அடையும் ஒருவரின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. அத்துடன் எந்த ஒரு தொழில்துறைக்கும் தேவையான அடிப்படை திறன்களாகவும் உள்ளன. இத்திறன்கள் பாடசாலை மாணவர்கள் எதிர்காலத்தில் வாண்மையாளர்களாகவும் வெற்றியாளர்களாகவும் மாறுவதற்கு அவசியமாக தேவைப்படும் திறன்களாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

அடுத்து Learning skills என்பதை எடுத்துக் கொண்டால் இதற்குள் தகவல் (Information), ஊடகம் (media), தொழில்நுட்பம் (Technology) ஆகிய திறன்கள் உள்ளடக்கப்படுகின்றது. இதில் தகவல் பெறும் திறன் என்னும் போது அறிவு ஆக்கிரமித்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் எந்த விடயம் தொடர்பாகவும் தேவையான, போதுமான தகவல்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. இவ்வாறான வாய்ப்புகள் காணப்பட்டபோதும் சரியானதும், தேவை யானதுமான தகவல்களை பெற்றுக்கொள்ளும் திறன் பிள்ளைகளிடம் வளர்க்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்டவாறான தகவல்களை பெற்றுக்கொள்ள இன்று பல்வேறு ஊடகங்கள் எம்மத்தியில் நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அச்சுச் சாதனங்கள் Digital, சாதனங்கள், இலத்திரனியல் தொடர்புச் சாதனங்கள்) போன்ற ஊடகங்ளைச் சாதகமாக பயன்படுத்தி சரியானதும், துல்லியதுமான தகவல்களை பெற்றுக் கொள்ளுதல், அவற்றை தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்திக் கொள்ளுதலும் அவசியமானதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சரியான, தேவையானதகவல்களை பெற்றுக்கொள்ளும் திறனும், அதற்கான ஊடகங்களைப் பொருத்தமாகக் கையாளும் திறனும், பிள்ளைகளிடம் பாடசாலைக் கல்வியின் போதே விருத்தியடையச் செய்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்வியறிவுத் (Literacy skills) திறனில் தொழிநுட்ப திறன் என்பது மிக முக்கிய திறனாக கருதப்படுகின்றது. உலக அளவில் ஏற்பட்டுவரும் தொழில்நுட்ப விருத்தியானது இன்று எல்லா துறைகளிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருவதைக் காண முடிகின்றது. இது பாடசாலை கல்வியிலும், வகுப்பறை செயற்பாடுகளிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக அடோமெடிக் ரியாலிட்டி (Automatic reality), ஆட்டோமேன் (Automation), விசுவல் ரியாலிட்டி (Visual reality), ரோபாட்டிக்ஸ் போன்ற அதி நவீன தொழிநுட்பங்களின் ஒருங்கிணைப்பு ஏற்கனவே கற்றலை மேம்படுத்துவதற்கான வகுப்பறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றுடன் சாதாரணமாகவே வகுப்பறைகளில் இன்று Ipads, Computer, Web application, Internet என்பனவும் பயன்பாட்டில் உள்ளன. இவை வகுப்பறை சுவர்களுக்கு அப்பால் மாணவர் ஈடுபாட்டையும், திறன்களையும் அதிகரிக்க வழிவகுக்கின்றது. இவற்றுடன் விடேமாக Nig, Blogger, Wikispaces, Bebo, MSN, My Spase, Secon Life போன்ற இணையத்தளங்கள் நவீன கற்றல் வாய்ப்பை பிள்ளைகளுக்கு வழங்கி வருகின்றன.

எனவே இவற்றை கையாளும் திறன்கள் இன்று பிள்ளைகளிடம் விருத்தி செய்யப்பட வேண்டும் என கூறப்படுகின்றது. எல்லா தொழில் துறைகளிலும் இத்தொழில்நுட்பங்களின் பயன்பாடானது மிக அவசியமாக தேவைப்படும் ஒன்றாக மாறிவருகின்றது. இத்திறன்களை கொண்டோரே தமது வாழ்வில் மிக விரைவாக முன்னேறி வருகின்றமையையும் காணமுடிகின்றது.

அடுத்து 3வது தொகுதியான வாழ்க்கை திறன் (Life skills) என்பதற்குள் நெகிழ்வுத் தன்மை (Flexibility) தலைமைத்துவம் (Leadership), தன்னார்வ முயற்சி (Initiative) உற்பத்தித் திறன் (Producti skills) சமூகத்திறன் (Social skills) என்பன அடங்குகின்றது.

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் விட்டுக்கொடுத்து நெகிழ்வுத் தன்மையுடன் மற்றோருடன் இணைந்து போகும் பண்பு பாடசாலையில் இருந்தே பிள்ளைகளிடம் வளர்க்கப்பட வேண்டும். இவ்வாறாக இணைந்து போகும் பண்பு ஒருவரை எதிர்காலத்தில் சாதனையாளராக கூட மாற்றும். நம்மத்தியில் இவ்வாறு வாழ்ந்தவர்கள் அதற்கு எடுத்துக்காட்டு. நெகிழ்வுத் தன்மை என்பது நல்ல பண்புள்ள ஒருவராக வாழ ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய திறனாகும்.

மேற்கூறப்பட்ட நல்ல பண்புகளை ஒருவர் கொண்டிருந்தாலும் அவர் தனது செயலில் பின்நிற்பாராயின் இப்பண்புகளை எவ்வளவு கொண்டிருந்தும் அது பயனற்றதாகி விடும். எனவே அவ்வாறானவர்களிடம் தலைமைத்துவபண்புகளும் விருத்தியடைந்திருக்க வேண்டும். அதாவது தான் ஒரு இலக்கை நிர்ணயித்து அந்த இலக்கை எட்டுவதற்கு மற்றவர்களையும் இணைத்து அவ்விலக்கை அடைவாராயின் அவரே தலைவராவார். தான் எண்ணிய கருமத்தை மற்றவர்களைக் கொண்டு நிறைவேற்றும் திறனே தலைமைத்துவத் திறனாகும். இவ்வாறான திறனும் சிறு வயதில் இருந்தே பிள்ளைகளிடம் வளர்க்கப்பட வேண்டும்.

அதேபோல் எந்த செயலையும் மற்றவர்கள் ஆற்றுவார்கள். தான் ஒரு பங்காளராக செயற்படுவோம் என்ற எதிர்மறை மனநிலை நீங்கி தானே எந்த விடயத்திலும் முன்வந்து செயற்படும் திறன் Initiative என்பதாகும். இவ்வாறான தன்னார்வ (Initiative)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியை கொண்டவர்கள் எதிர்காலத்தில் தனது பணியிடத்திலும் முன்னிற்பர் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. எனவே இவ்வகையான தன்னார்வ திறனும் பிள்ளைகளிடம் வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அடுத்ததாக தான் எடுத்துக்கொண்ட விடயத்தை முதன்மைபடுத்தி பலரின் சிந்தனையை தூண்டும் திறனே (Productivityskill) எனப்படுகின்றது. இத்திறன் கொண்டவர்கள் பாடசாலையிலும், எதிர்கால வேலைத் தளத்திலும் Positive Thinking உடையவர்களாக செயற்படுவதுடன் தனது வாழ்க்கையில் வெற்றியாளர்களாகவும் செயற்படுகின்றனர். எந்த ஒரு பிள்ளையும் தனது பணியை தானே உணர்ந்து தானாகவே முன்வந்து செயற்படுமானால் அப்பிள்ளையின் எதிர்காலம் சிறப்பாக அமையும். இவ்வாறான உற்பத்தித்திறனும் (Productivityskill) பாடசாலை கல்வியின் மூலமே வளர்க்கப்பட வேண்டிய திறனாகும்.

இறுதியாக மற்றவர்களுடன் இணைந்து அவர்களது தேவைகளை புரிந்து, அவர்களின் உணர்வுகளை மதித்து செயற்படும் திறனே, சமூகத்திறன் (Social skills) என்பதாகும். குறிப்பாக பெரியவர்களை மதிப்பது, பேசும் போது மரியாதைக்குரிய சொற்களை பயன்படுத்துவதும், மற்றோருடன் பண்புடன் நடந்துக்கொள்வது என்பன இன்று எல்லோரிடமும் எதிர்பார்க்கப்படும் நல்ல பண்புகளாகும். இவ்வாறான நல்ல பண்புள்ளவர்களாக வாழ்வதற்கான திறன்களும் (Social skills) பிள்ளைகளிடம் வளர்க்கப்பட வேண்டிய முக்கிய ஒரு திறனாகும். இச்சமூகத்திறன் ஒருவரை நல்ல பிரஜையாக வாழ வழிசெய்யும் எனவும் கூறப்படுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நெகிழ்வுதன்மை,தலைமைத்துவம், தன்னார்வமுயற்சி, உற்பத்திதிறன், சமூகத்திறன் போன்ற வாழ்க்கை திறன்களை ஒருவர் ஒருங்கே பெற்றிருந்தால் அவர் நல்ல தலைவராகவும், நெறியாளராகவும் இருப்பதை எமது நடைமுறை வாழ்க்கையில் காணமுடிகின்றது. இத்திறன்கள் அனைத்தும் சிறுவயதில் இருந்தே பிள்ளைகளிடம் வளர்க்கப்பட வேண்டிய திறன்களாகும். இவை எதிர்க்காலத்தில் தொழில் வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் ஒருவர் வெற்றிபெற அடித்தளமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையின் கல்வி முறைமையில் இதன் தாக்கம்

21ம் நூற்றாண்டில் ஏற்பட்டுவரும் புதிய அறிவானது இந்த நூற்றாண்டின் வேறுபட்ட நிலைமைகள், சவால்கள், தேவைகள் என்பனவற்றை எதிர்கொண்டு சமாளிக்கும் திறன் வலுப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

இப்பின் புலத்தில் இன்றைய கல்வி முறையின் மற்றொரு செல்நெறி எதிர்கால வியலை நோக்கி பாடசாலைக் கல்வியையும், பல்கலைக்கழகக் கல்வியையும் திட்ட மிடுவதாகும், இன்று பாடசாலை கல்வியை பயலும் 45 இலட்சம் பிள்ளைகள் 13 ஆண்டுகளுக்கு பின்னர் வேலை உலகில், அறிவு பொருளாதாரத்தில், நவீன சமூக கட்டமைப்புக்குள் இணையப் போகிறார்கள். அத்தகைய வேலை உலகிற்குள், அறிவு பொருளதார அமைப்பிற்குள் இசைந்து வாழவதற்கான திறன்களை பாடசாலை கல்வியின் போதே பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் எமது பாடசாலைகளில் அமுல்படுத்தப்படுகின்ற கலைத்திட்டத்தின் ஊடாக இத்திறன்கள் பிள்ளைகளிடம் எந்தளவு விருத்தி அடைய போகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எதிர்மறையான விளைவை தருவதாகவே சுட்டிக்காட்டப்படுகின்றது. குறிப்பெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேற்றை மையப்படுத்தி தனியார் போதனைத் தளத்தை கொண்ட Note Taking - grades seeking privete based Education கல்வி முறையே இன்றும் எமது நாட்டின் நடைமுறையில் உள்ளது. ஆனால் காலமாற்றத்துக்கு அமைவாக 21ம் நூற்றாண்டுக்கான கற்றல் திறன்கள், கல்வியறிவு திறன்கள், வாழக்கைத் திறன்கள் என்பவற்றை அடிப்படையாக கொண்டே எமது கலைத்திட்டம் அமைய வேண்டும். துரதிஷ்டவசமாக பாடசாலைகளில் ஏட்டுக் கல்விக்கும், அல்லது பரீட்சை மைய கல்விக்கே இன்னும் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. எனவே இவ்வகையான கல்வி முறைகளை புறந்தள்ளி காலமாற்றத்துக்கு அமைவாக 21ம் நூற்றாண்டுக்கான திறன்களை பிள்ளைகளிடம் விருத்தியடைய செய்வதில் கல்வி கொள்கைகளை உருவாக்குபவர்கள் கூடிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். காரணம் பாடசாலைகளை விட்டு வெளியேறும் பிள்ளைகள் தேசிய மட்டத்திலன்றி, சர்வதேச மட்டத்திலும் தொழில் வாய்ப்பைப் பெறவேண்டிய நிலைமை காணப்படுவதனாலாகும். அவர்களுக்கு அதற்கான திறமை பாடசாலைக் கல்வியின் ஊடாகப்பெற வழிபடுத்தப்பட்ட வேண்டும் எனவே புதிதாக உருவாக்கப்படும் எமது கல்விக் கொள்கையிலும் இத்திறன்கள் (21ம் நூற்றாண்டுக்கான திறன்கள்) உள்வாங்கப்பட வேண்டும், இன்று எமது நாட்டின் செயற்படுகின்ற சர்வதேச பாடசாலைகளில் செயற்பாடுகள் இந்த எதிர்பார்ப்புக்களை அடிப்படையாக கொண்டே செயற்படுவதாக அறிய முடிகின்றது. ஆனால் எமது அரச பாடசாலைகளில் நடைமுறையில் உள்ள கலைத்திட்டத்தில் இவ்வாறான திறமைகள் பிள்ளைகளிடம் உருவாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு கல்வியியலாளர்களால் முன் வைக்கப்படுகின்றது. எனவே எமது கல்வித்துறையில் உள்ளோரும், கல்வி கொள்கையை வகுப்பவர்களும் புதுமையாக சிந்திக்காதவரை இவ்வாறான மாற்றுக்கல்வி மாதிரிகள் எம்மத்தியில் உருவாக வாய்ப்புகள் இல்லை என்றே கூறலாம்.

எனவே 21ம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் இன்றைய பிள்ளைகளை தயார்படுத்தும் பொறுப்பை பாடசாலைகளே கொண்டுள்ளது என்பதை கவனத்தில் கொண்டு கல்விமுறைமைக்குள் புதிய மாற்றங்களை உருவாக்கு வதுடன் அவற்றை நடைமுறைச் சாத்தியமாக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.பார்த்தீபன்
ஒய்வுநிலை உபபீடாதிபதி.
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

ஆசிரியர் ஒழுக்க விழுமியம்

பொதுவாக விழுமியம் என்பது மனிதன் செல்நெறி காட்டும் வெளிச்சம் எனலாம். ஆசிரிய விழுமியம் என்பது ஆசிரியரின் செல்நெறி காட்டும் வெளிச்சம் என எடுத்துக் கொள்ளலாம்.

தம்மால் தமக்கு விதிக்கப்பட்ட செயற்பாடுகளை நேர்மையாகவும் பொறுப்புடனும் முன்மாதிரியாகவும் சமூகப் பொறுப்புக் கொண்டவராக... தங்களிடமிருந்து எதிர்ப் பார்க்கப்படும் சிந்தனைகள், பொறுப்புகள் மற்றும் பழக்க வழக்கங்கள் யாவும் விழுமியம் எனப்படும்.

V-Valuable	- பெறுமதிமிக்க
A-Accebtable	- ஏற்றுக் கொள்ளக்கூடிய
L-Loveable	- விருப்பத்துக்குரிய
U-Understandable	- விளங்கிக்கொள்ளக்கூடிய
E-Educatable	- கல்வி புகட்டக்கூடிய
S-Sustainable	- நிலைபேறுடைய

விழுமியம் என்ற சொல் "விழுது" என்ற அடிச்சொல்லில் இருந்து பெறப்பட்டது.

விழுது – தாய் மரத்தைத் தாங்கி நிற்கும். அதுபோல் விழுமியமும் தன் சமூகத்தைத் தாங்குகின்றது.

அன்பு, நீதி, உண்மை, பொறுமை, கருணை, நேர்மை, நேரந்தவறாமை, மூத்தோரைக் கனம்பண்ணல், விட்டுக்கொடுப்பு... இவ்வாறான பெறுமதிமிக்க அனைத்தும் விழுமியங்கள் எனப்படும். Values- என்பது பெறுமதி மிக்கவை எனப் பொருள் கொள்ளப்படும்.

சமூகம் மேம்பட, உய்ய, நல்வழி செல்ல உதவும் விடயங்கள் யாவும் விழுமியங்கள் எனப்படுகின்றன. இவற்றுள் எது உயர்வானது? எது அவசியம் ? எதனை அதிகம் பேண வேண்டும் ? எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? என்ற பேச்சுக்கோ, நினைப்புக்கோ இடமில்லை. எல்லாம் அவசியமானவை. முதன்மையானவை.

இந்நிலையில் ஆசிரியர் ஒழுக்க விழுமியக் கோவை என்பதனைப் பார்ப்போம்.

ஆசிரியர்களின் பண்புத் தரத்தினை விருத்தி செய்யும் உபகரணம் ஆசிரியர் ஒழுக்க விழுமியக் கோவை எனச் சிறப்பிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் மாணவர்களின் ஒழுக்க விழுமியச் சிந்தனையை விருத்தி செய்வதில் மிக முக்கிய பொறுப்பு வாய்ந்தவர்கள். பாடசாலையில் சேர்ந்து

சுமார் 13 ஆண்டு காலம் பிள்ளையின் வாழ்வுக்கு பலமான அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய ஏகநபர் ஆசிரியரேயாவர்.

இன்று Loco Perents (லோகோ பேரன்ஸ்) என்ற அதாவது "இடம் சார் பெற்றோர்கள்" என்ற சட்டரீதியான யோசனைகளுக்கு அமைய மாணவர்களின் நலனுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட சகல ஆசிரியர்களும் கட்டுப்பட்டுள்ளனர் என ஆசிரியர்களின் விழுமியம் மிக்க செயற்பாடுகள் தொடர்பான ஒழுக்க விழுமிய முறைமை மற்றும் பொது சட்டத் தொகுப்பு கூறுகிறது. ஆசிரியர்கள் மாணவர்களைச் சுய கற்றலுக்கு வழிப்படுத்துவதும் அதற்கான வசதிகளை ஏற்படுத்துவதும் மேலும் கற்பித்தல், மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள உதவுதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் ஆசிரியர்களின் ஒழுக்க விழுமிய முறைமை ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன... 1.தனியாள் விழுமியம் 2.சமூக விழுமியம் 3.ஒழுக்க விழுமியம் 4.ஆன்மீக விழுமியம் 5.நடத்தைசார் விழுமியம் என்பனவாகும்.

மனித விழுமிய உணர்வு மனிதனின் சிந்தனையில் ஏற்பட வேண்டும். தூய சிந்தனையிலே விழுமிய உணர்வுகள் தோன்ற முடியும். விழுமியங்களின் உற்பத்தித் தளம் மனித உள்ளங்களே. கிரேக்க தத்துவ ஞானி சோக்ரடீஸ் "மனிதன் யாருமே தவறு செய்வதில்லை. அவன் தவறு செய்யக் காரணம் அவன் சரி, பிழை பற்றி அறிந்திராததே" என்று கூறுகிறார். இதன்படி, ஒழுக்க விழுமியம் செயற்பட அறிவு முக்கியம். அறிவு என்பதே எது சரி, எது பிழை என்பதை உணர்த்தக் கூடியது. விழுமியத்தை அறிவுடன் இணைத்து செயற்படுத்தும் பங்கை பாடசாலையே ஆற்ற வேண்டும். இதனைச் செயற்படுத்தவே கல்வியின் நோக்கங்களை அறிவு, திறன் , மனப்பாங்கு, பயிற்சி என்பவை குறிப்பிடப்படுகின்றன.

"நேர்மை, மரியாதை செய்தல், பொறுப்பேற்றல் என்ற மூன்று விழுமியங்களை மிக முக்கியமான விழுமியங்களாக அவுஸ்திரேலியா குறிப்பிடுகிறது. இம் மூன்று பிரதான விழுமியங்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக ஆசிரியர் ஒழுக்க விழுமியங்கள் காணப்படுகின்றன.

வாண்மைத்துவமும் ஒழுக்க நெறியும் நெருங்கிய தொடர்புடையன. ஒழுக்க நெறியின் உள்ளடக்கங்கள்

1. தொழிலுக்குக் காட்டுகின்ற பணிவு.
2. வாண்மைத்துவ வகைகூறல்.

வகைகூறல் என்பது பொறுப்புக்கூறல் பொறுப்பை ஏற்றால் தான் பொறுப்புக் கூறும் இடம் பெறும் நேர்மை, மரியாதை செய்தல், பொறுப்பேற்றல் என்பன வாண்மைத்து வத்துடன் இணைந்தவை.

இந்த அடிப்படையில் பின்வரும் கவிதையைப் பார்ப்போம்.

வாழ்வில் நாம் கற்றதென்ன? பெற்றதென்ன...?

வித்தியா என்ற தலைப்பில் வந்த கவிதை. (இது கல்வியையும் குறிக்கும்.)

சொந்த ஊரிலே சேறாகிய
ஒற்றையடிப் பாதையில்
சடலமாய் நீ !

அருகில்
மழையை எதிர்பார்த்த
செந்நிறக் குடை

பாதங்களைப் பாதுகாக்க
வெண்ணிற சப்பாத்துகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமக்க யாருமில்லாத
தனித்து
உன் கனவுகளுடன்
புத்தகப் பை

மிதிக்க நீயில்லாத
துவிச்சக்கர வண்டி
மல்லாந்து கிடக்கிறது

கழுத்துப்பட்டியும் றிபனும்
காமுகர்களுக்கு ஆயுதமாகின

சக மனிதர்களிடம்
நீ எதிர்பார்த்த
"மனிதம்"
இறந்து கிடக்கிறது

மரண ஓலத்தை
தன்னுள்ப் புதைத்து
மூச்சிழந்தது காற்றுவெளி

பாடசாலைச் சீருடையில்
உன்னைப் புணர்ந்தவர்கள்
படிக்காதவர்கள் அல்லர்

வாழ்வில் கற்றது
வன்முறையும் காமமும் தான்.

இப்போது எங்கள் கல்வியில் நாம்
சந்தேகிக்கப்பட வேண்டியிருக்கிறது.

ஆசிரியர் இயல் எனும் தலைப்பில்
றொஸ் இவ்வாறு கூறுகிறார்.

அச்சுறுத்தும் முடிவுக்கு வந்தேன்
வகுப்பறையின் இயக்கம்...
நானேயானேன்.

இந்த அருட்டுணர்வில் பேராசிரியர்
சபா ஜெயராசா பின்வருமாறு ஒரு
கவிதையை எழுதியுள்ளார்.

எனது அணுகு முறைகளே
வகுப்பறையை மலர்விக்கும்
கவிநிலைகள்.
எனது மனோநிலையே
அன்றைய நாளின்
வானிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆசிரியன் என்ற வகையில்
மாணவன் வளம் பெறுதலிலும்
வழி தவறுதலிலும் எனது ஆளுகையே
அதீதமாகின்றது.

எனது செயல்கள்
மாணவனுக்கு மகிழ்ச்சி தரலாம்
மனச் சோர்வு தரலாம்
நோய் தரலாம் - நோ அகற்றலாம்.

எந்நிலையிலும் எனது துலங்கலே
பூதாகரமாகத் தலை தூக்கும்
எனது துலங்கலால்
நெருக்கடிகள் எழலாம்
அல்லது விழலாம்

மாணவன்
உலகம் வியக்கும் மானுடனாகலாம்
அல்லது எதிர் மானுடனாகலாம்
எனது துலங்கலால்...
ஆசிரியரரின் துலங்கலால்...

ஆசிரியர் பிள்ளைகளிடம் மதிப்பெண்களை
எதிர்பார்ப்பதை விட
மதிப்பார்ந்த எண்ணங்களை
எதிர்பாருங்கள்.

ஒரு நல்லாசிரியர்
வாழ்க்கைப் பாடத்தைக்
கற்றுக் கொடுக்கிறார்.
அது வாழ்க்கை முழுவதும்
கடைப்பிடிக்கப்படும் என்பது கற்பித்தல் பற்றிய உண்மை.

ஆசிரியத்துவம் தொடர்பாக ஒவ்வோர் ஆசிரியரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதற்காகவே இந்த ஒழுக்க விழுமியக் கோவை.தற்போது இது பொதுச் சட்டத் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

சட்ட முறைமை என அறிமுகப் படுத்தப்படுவது சகல ஆசிரியர்களாலும் கட்டாயமாக பின்பற்ற வேண்டிய சட்டக் கோட்பாடுகளாகும்.

ஒழுக்க விழுமியம் கொண்ட செயற்பாடுகள் தொடர்பான விழுமிய முறைமையாக அறிமுகப் படுத்தப்படுவது தம்மால் தமக்காக விதிக்கப்பட வேண்டிய நேர்மை, பொறுப்பு மற்றும் முன்மாதிரி, சமூகப் பொறுப்பு போன்ற நபர்கள் ரீதியிலான ஆசிரியர்களின் சமூகம் எதிர்பார்க்கும் சிந்தனை, பொறுப்புகள், பழக்க வழக்கங்கள் ஆகும்.

எனவே ஆசிரியர்கள் ஒழுக்க விழுமியக் கோவையை தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.S.M.பீலிக்ஸ் (M.A., M.Ed)

இலங்கையில் திருச்சபை பற்றிய ஒரு பார்வை

அறிமுகம்

இலங்கையின் வரலாற்றை எழுதிய நூல்களில் மஹாவம்சம் முதன்மையானது. அந்த நூலில் குறிப்பிட்டப்படி பௌத்தமதம் இலங்கையில் பரவுவதற்கு முன் இலங்கையில் இயற்கை வழிபாடுதான் காணப்பட்டிருந்ததென்றும், பின்னர் பௌத்தமதமானது மன்னன் தேவநம்பியதீசன் காலத்தில் பரவியது என்கின்ற கருத்தையும் முன் வைக்கிறது. அதுபோல இந்துமத வரலாற்றாய்வாளர்கள் ஆரம்ப காலம் முதல் இலங்கை முழுவதும் சிவன் வழிபாடுதான் பரவிக் காணப்பட்டது என்கின்ற கருத்தியலை முன்வைத்து எதிர்வாதம் புரிந்து வருகின்றனர். இதனிடையே கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் தமது மூல மதங்கள் ஆதாம், ஆபிரஹாம், மோயீசன் காலத்திலேயே இலங்கையில் காணப்பட்டதென்றும் வாதிடுகிறார்கள், அத்துடன் பாரசீக, ரோம, கிரேக்க, அரேபிய வியாபாரிகள் மூலமும், மற்றும் மகா அலெக்ஸாண்டரின் படையெடுப்பின் மூலமும் இறைமகன் இயேசுவின் வருகை பற்றிய செய்திகள் பரவியிருந்ததாகவும் கூறிவருகின்றார்கள். இவை போன்ற செய்திகள் ஆதாரமற்றவை என மறுதலிப்பவர்களும் உண்டு. அதேவேளை கிறிஸ்து இயேசுவை "தேவ குமாரன்" என்று விசுவாசித்து அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்று, அவருக்குக் கீழ்படிந்து நடக்க அர்ப்பணிக்கும் கூட்டமே திருச்சபையென வரையறை செய்யப்பட்டதற்கமைய, கிறிஸ்துஇயேசுவின் காலத்துடன் தொடர்புபடுத்தி திருச்சபைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தனவென்ற கருத்துமுண்டு.

இலங்கையில் கிறிஸ்தவம்

பொதுவாக இலங்கையில் கிறிஸ்தவம், ரோமன் கத்தோலிக்கம் போன்ற மதங்கள் ஐரோப்பியரான போர்த்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலேயேதான் முதன் முதல் பரப்பப்பட்டதாக இன்றும் எண்ணி வருகின்றார்கள். ஆனால் இக்கருத்து உண்மையானதாக் கருதினாலும் கிறிஸ்து பிறப்புக்கு முன்பிருந்தே கிரேக்கம், இத்தாலி, பாலஸ்தீனம் போன்ற நாடுகளின் தொடர்புகளால் அவர்களின் மதக்கொள்கைகளும் உள் நுழைந்திருந்தன. குறிப்பாக இலங்கையிலே கிறிஸ்தவப் பரம்பல் பற்றிய வாய்மொழிப் பாரம்பரியமாகச், சில சம்பவங்கள் புனை கதைகளாக (Myth) பதிவாகியுள்ளன. உதாரணத்திற்காக சிலவற்றை பார்க்கமுடியும்.

1. இயேசு பிறப்பை முன்கூட்டியே கணிப்பிட்ட சோதிடவியல் ஞானிகள் மூவர் (10 பேர் என்ற கருத்துமுண்டு) பெத்தெலகேம் சென்று இயேசு பாலனை வணங்கிப் பரிசில் வழங்கியிருந்தனர். அவர்களில் ஒருவர் சைவசமயத் தமிழ் ஞானியான கஸ்பார்பெரியபெருமாள் ஆவார். இவர் பாண்டியநாட்டின் ஒரு பகுதியையும் யாழ்ப்பாணத்தையும் ஆட்சி செய்த மன்னனாவார் என்றகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி பல நூல்களில் பதிவாகியுள்ளது. அதாவது இயேசுகிறிஸ்து பிறப்புக்கு முன்னரே அவரைப்பற்றிய செய்தி இலங்கையில் கணிப்பிடப்பட்டிருந்தது.

2. இயேசுவோடுகூடயிருந்த அப்போஸ்தலரான புனிததோமா அவர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள மைலாப்பூரில் நற்செய்தியை அறிவித்து வந்தாரென்பது உண்மை வரலாறு. ஆனாலும் அவர் இயேசுவின் கட்டளையின்படி கஸ்பார்பெரியபெருமாளைச் சந்தித்து ஞானஸ்நானம் வழங்க இலங்கை வந்து சென்றாரென்றும் கொழும்பு ஜிந்துப்பிட்டி, மற்றும் நெடுந்தீவின் பெரியதுறையின் (துறைமுகம்) ஊடாக யாழ்ப்பாணம் வந்து, பலருக்கும் ஞானஸ்நானம் வழங்கினாரென்றும் வாய்மொழிக் கதைகள் பல உண்டு. இவ்வாறான வாய்மொழி வரலாறு தவிர தொல்பொருள் அகழ்வாய்வுகள் மூலமும் சில சான்றுகள் இலங்கையில் கிடைக்க பெற்றுள்ளன. அவையாவன.

i. 1912 இல் அநுராதபுரத்தில் கருங்கல்லாலான பாரசீகச் சிலுவை அகழ்ந் தெடுக்கப்பட்டு ஆராய்ச்சி செய்தபோது "நெஸ்டோரியன்" சபையைச் சேர்ந்த பாரசீகக் கிறீஸ்தவர்கள் கி.பி.535 இலிருந்து இலங்கையில் வசித்து வந்தாக அறியக் கிடக்கிறது. இதனை எழுத்தாளர் சாடொ, மார்க்கோப்போலோ போன்றோர் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள். இதுபோன்ற சிலுவைஒன்று கொழும்பு முகத்துவாரப் பகுதியிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

ii. அதேபோல மன்னாரில் சிரிய நாட்டு கிறிஸ்தவர்களின் ஞானஸ்ஞானத் தொட்டி யொன்றும் கண்டெடுக்கப்பட்டது.

iii. சிகிரியாவில் படையினரில் சிலர் கிறிஸ்தவர்கள் என்ற குறிப்பும் உண்டு.

இப்படியாகப் பல சான்றுகள் தகவல்களில் இருந்து அறியகிடப்பது என்னவெனில் "கிறீஸ்தவம்" கி.பி. 1505க்குப் பின்னராக ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களால் தான் வலிந்து பரப்பப்பட்டது; என்பதை முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாதென்பதுதான். ஆனாலும் ஐரோப்பியர்கள் வாழ்ந்த அக்காலங்களிலேயே இலங்கையில் கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆழவேரூன்றியது என்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையை ஆட்சிசெய்த ஐரோப்பியர்களின் உச்சமான நோக்கம் வியாபாரம், மற்றும் காலனித்துவ ஆட்சியை நிறுவுவதுதான் என்பதை யாவரும் அறிவோம். அதனோடு சேர்ந்து தமது ஆளுகையை உறுதிப்படுத்த கட்டாய அல்லது ஏமாற்றிய வழிகளில் இந்நாட்டு மக்களை மதமாற்றம் செய்யப்பட்டதையும் மறுக்க முடியாது. இது இங்கு மட்டுமல்ல உலகம் முழுவதிலும் பல அரசுகள் செய்த ஒரு சாணக்கிய அரசியல்தான். கிறிஸ்தவமதம் மாத்திரமல்ல ஏனைய மதங்கள் எதுவாயினும் அரசியல் இலாபம் கருதி இவ்வாறான பலாத்கார முறைமையிலேயே பரவின என்பதை வரலாறுகள் மூலம் அறிந்திருக்கின்றோம். ஆனாலும்; கிறிஸ்தவத்தின் அடித்தளத்தில் அன்பும் கருணையும் தியாகமும், பரிசுத்த ஆவியின் கொடைகளும் காணப்பட்டிருந்ததை மறுப்பதற்கு இல்லை. அவை கிறீஸ்தவ சிந்தையுள்ள தூதுரைப்பணியாளர்களின் தயாள, தாராள, தியாக அர்ப்பணச் செயற்பாடுகளால் மேற்கொள்ளப்பட்டுவந்தது. இன்றும் அது தொடர்கிறது. இருந்தபோதும் சில சுயநலமிக்க மேய்ப்புப்பணியாளர்ளின் ஏமாற்றும் செயல்களும் இருந்துவந்திருக்கின்றன. இதுபோன்ற நிகழ்வுகளைதனது வாழ்வில் அனுபவித்த ஆபிரிக்கா பேராயர் "டெஸ்மன்டுட்டு" இப்படியானவர்கள் பற்றிய தனது சிந்தனையில் முகிழ்த்த ஒரு செய்தியை ஹாஸ்சியமாக நாசூக்காக குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பைபிளோடு அவர்கள் வரும்போது எங்களிடம் போதிய நிலம் இருந்தது. எங்களிடம் திருவிவியத்தைத் தந்து கண்ணை மூடிப் பிரார்த்தியுங்கள் என்றார்கள். நாமும் கண்களை மூடிப்பிரார்த்தித்தோம் பின்னர் நாம் கண்திறந்து பார்த்தபோது வேதாகப்புத்தகம் எம்மிடம் இருந்தது, எமது நில உரிமைப் பத்திரமும், நிலமும் அவர்களிடம்"

இவ்வாறு அவர் ஏளனமாக குறிப்பிட்டபோதும் "மானிட ஒடுக்குமுறைகள், அநீதியான ஆட்சி முறைகள், பெண் அடிமைத்தனம், கல்வி அறிவின்மை போன்ற இன்னோரன்ன மானிட ஏற்றத்தாழ்வுகள் பலவற்றை கிறிஸ்தவ போதகர்களின் வருகை, போதனை, கல்விப்பணி மற்றும் அவர்களின் நன்னடத்தை, முன்மாதிரிகைகள் மூலம் ஓரளவேனும் சீர்செய்யப்பட்டனவென்பதையும் மறுப்பதற்கில்லை" என்கிறார் டுட்டு. அதுபோலவே இலங்கையில் ஐரோப்பியரை ஆதிக்கவாதிகள், சுரண்டல்வாதிகள்ஆதி மதங்களை அழித்தவர்கள் என்று ஒருபக்க சார்பாக கடுமையாக விமர்சித்தாலும் மறுபக்கம் இலங்கையில் அவர்களாலேயே கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதிகள், பொருளாதாரக் கட்டமைப்புகள் போன்றன அபிவிருத்தியடைந்தன என்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். அத்துடன் இறைஇயேசுவின் ஆழமான அன்பும் மக்களை சென்றடைய ஆன்ம விடுதலையை பற்றி சிந்தித்தார்கள், செயற்பட்டார்கள்.

மலையக்தில் கிறிஸ்தவ பணிகள்

மலையகத்தை சென்றடைந்த மிஷனரிகள் அக்கால மக்களுக்கான வறுமை, கல்விதடைகள், சிறுவர் மகளீர் துஸ்பிரயோகம், போதைப்பொருட்பாவனை, இயற்கை அனர்த்தங்கள் போன்ற பிரச்சினைகளின் போது உடனே முன்னின்று உதவிக்கரம் நீட்டிவந்தார்கள். அத்துடன் ஆன்மீக நலனிலும் வழிகாட்டிகளாக இருந்து வந்தார்கள். இலங்கையில் கிறிஸ்தவம் பரவுமுன்னர் (1505க்கு முன்) ஈழத்தின் அரசர்களும் மற்றும் நில உடைமையாளர்களும், பெரும் பணம் படைத்தோரும் தமது ஆதிக்கத்தின்கீழ் அதிக எண்ணிக்கையில் இருந்த சாதாரண மக்களை அடிமைகளாக்கி, மிகமோசமான முறையில் வேலைவாங்கி, தீண்டத்தகாதவர்கள் என அவர்களை ஒதுக்கி வைத்து கொடுமைப்படுத்தியது மட்டுமல்லாமல், ஆலயத்துள் இறைவழிபாடு செய்யக்கூட அனுமதிக்காத நிலையுமிருந்தது. இறைவன்முன் சென்று தமது துன்பதுயரங்களை முறையிட முடியாத சோகத்தில் இருந்த அம்மக்களுக்கு மிஷனரிகளின் வருகை ஆறுதல் தருவதாக இருந்தது. இதுபோலவே மலையகத் தோட்டபுற மக்களுக்கும் ஆங்கிலேயர் காலத்தில் இதேநிலை காணப்பட்டது. அவர்களின் ஆன்மவிடுதலை, சமூகவிடுதலை சார்ந்து இந்நாட்டின் மைந்தர்களை கிறிஸ்தவம் ஆற்றுப்படுத்தியதாலும், அவர்களின் வாழ்வுக்கு ஒளியூட்டியதாலும் கிறிஸ்தவமதம் வேகமாகப் பரவியது. அத்துடன் கல்விபெற்ற புத்திஜீவிகளின் பெருக்கத்தால் மிகவும் பாதகமான நிலையிலிருந்த இனத்துவ, சாதித்துவ, பிரதேச, மொழி பிரச்சினைகள் பிரிவினைகள் சற்றுத் தளர்ந்தன.

தொன்றுதொட்டு ஏழை, பணக்காரரிடையே அதலபாதாள இடைவெளி காணப் பட்டிருந்ததை அறிவோம். இவ்வாறான நிலை ஆங்கிலேயர் காலத்தில்கூட தொடர்ந்தது. ஆங்கில மொழி கற்றோர்; உயர் அந்தஸ்தை பெற ஏனையோருக்கு வாக்குரிமை கூட இல்லாதநிலை காணப்பட்டிருந்தது. குறிப்பாக கோல்புறூக்-கமரூன் முதல் டொனமூர் சீர்த்திருத்தக் காலகட்டங்களில்கூட இந்நிலை மாறவில்லை. ஆனாலும் பெருந்தோட்டத் துறைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் படுகின்ற துன்பங்களை ஆற்றுப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குள் கிறிஸ்தவ சபைகள் செயற்பட தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830களில் கோப்பித்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தமிழ்பேசும் மக்களின் ஆன்ம நலம்கருதிய பப்டிஸ்ட் திருச்சபை அவர்களுக்கான பல வழிகாட்டல்களை மேற்கொண்டது. 1869களில் கோப்பிப்பயிர் செய்கை வீழ்ச்சியடைய மக்கள் பல இன்னல்களைச் சந்திக்க நேரிட்டது. இக்காலகட்டத்தில் தேயிலைத் தோட்டங்கள் முன்னணிக்கு வர, மக்கள் சற்று ஆறுதல் பெற்றனர். கோப்பித் தோட்டத்து தேவாலயங்கள் பல மறையத்தொடங்க தேயிலைத் தோட்டத்து பிரதேசங்களில் தேவாலயங்கள் புதிதாக எழுந்தனவென்பது கிறிஸ்தவ மக்களுக்கு நல்லசெய்தியாக இருந்தது. இதேவேளை கல்விப்பணிக்கு தமிழ்க்கூலி திருப்பணி அமைப்பு (ததிச) முன்னின்று உழைத்தது. பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளின் கல்வி விருத்திக்கு கூடுதலாக உழைத்த அக்கால ததிசஅமைப்பு 1943 இல் தமிழ்த்திருச்சபைத் திருப்பணி என பெயர் மாற்றம் பெற்றது. கல்வி வளர்ச்சி யினால் சமூக ஏற்றத்தாழ்வுகளை சமன்செய்யமுடியுமென நம்பிய கிறிஸ்தவசமய சீர்திருத்தவாதிகள் தோட்டப்புற பாடசாலைகள், பட்டிணப் பாடசாலைகள் என பரவலாக ஆரம்பித்து வைத்தார்கள். முக்கியமாக பெண்களின் அடிமை நிலைகளைக் கவனத்திற் கொண்டு வணரோலண்ஸ் அவர்களால் அரசின் அனுமதியுடன் 1867 இல் அமைக்கப்பட்ட பொரளை பெண்கள்விடுதிப்பாடசாலை மலைநாட்டு கிறிஸ்தவ பெண்பிள்ளைகளின் உயர்கல்விக்காக உருவாக்கப்பட்டது. இக்கல்விநிலையம் 1892இல் கண்டி மோபிறே பெண்கள் பாடசாலையாக இடமாற்றப்பட்டது. ஆனாலும் அவ்வாறன உயர்கல்வி, அதிகஸ்ரப் பிரதேச விளிம்பு நிலைக் கிறிஸ்தவ தோட்டப்புற மக்களின் பெண் பிள்ளைகளைச் சென்றடைய இன்றுவரை சபைகள் அக்கறை காட்டவில்லையென்ற குற்றசாட்டும் உண்டு. மலையகத்தின் வண ரோலண்ஸ் அடிகளாரின் சேவைகள் அளப்பரியன. ஆனாலும் எல்லாத் தோட்டப் புறங்களிலும் அது சாத்தியமாகவில்லை. அதன் பின்னரான காலங்களில் வண ரோலண்ஸ் அடிகளாரை போல சபையார்கள் இப்பகுதியில் வேறுயாரும் பணி செய்யவில்லை என்று கூறுவாரும் உளர். அதைவிட பல கிறிஸ்தவ பாடசாலைகள் அண்மைக்காலமாக பௌத்த, இந்து, இஸ்லாமிய மேலாதிக்கவாதிகளால் கபளீகரம் செய்யப்பட்டு பெயர்மாற்றம் பெற்று வருவதை கிறிஸ்தவத் தலைமைகள் மெத்தனப்போக்குடன் நடந்து அவற்றை தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு கத்தோலிக்க, கிறிஸ்தவசபைகள் மலினப்பட்டு போய்விட்டனவா என்ற சந்தேகமும் வலுப்பெற்று வருகின்றது.

எமது நாடும் திருச்சபைகளும்

எமது நாட்டைப் பொறுத்தவரை காலம் காலமாக மதச்சுதந்திரம் இடையிடையே கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோதும் அதன் வளர்ச்சிப்பாதையில் எழுந்த பல தடைகளை உடைக்க, கிறிஸ்தவ மக்களின் இறை நம்பிக்கை, இறை விசுவாசத்தின் உறுதிப்பாடு என்பனவற்றுடன் தூதுரைப் பணியாளர்களின் தியாகங்களும் காரணங் களாக இருந்தன. பாரிய வீழ்ச்சியிலிருந்தும், அழிவிலிருந்தும் திருச்சபைகள் காப்பாற்றப்பட்டு வருவதற்கு மக்கள், பணியாளர்களின் ஆன்மீக புரிந்துணர்வே காரணமாகும். கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை மனதிற்கொண்டு இயங்குகின்ற திருப்பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தன்னலம் கருதாத தியாகங்கள், அரும்பணிகள், பொதுச் சேவைகள் ஆச்சரியமூட்டுபவையாக, அதிசயம்மிக்கவையாக இருந்து வந்திருக்கின்றன. சில வேளைகளில் அருட்பணியாளர்கள், ஊழியர்கள் தாம் சார்ந்த, சாராத அரசுகளின் அரசியல் கெடுபிடிகளுக்கு அப்பால் மனிதநேயத்துடன் ஏழைஎளிய மக்களின் நீதிக்காக குரல் கொடுத்ததால் அந்தத்தேவ ஊழியர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசதண்டனை, அல்லது புறம்தள்ளப்படுதல் போன்ற சம்பவங்களும் நிகழ்ந்து வந்திருக்கின்றன. குறிப்பாக கிறிஸ்தவ சபைகளுக்கிடையே கூட யுத்தங்கள் இடம் பெற்றுள்ளதும் கண்கூடு. உதாரணமாக உரோமன் கத்தோலிக்க போர்த்துகேயர், கல்வின் திருச்சபை ஒல்லாந்தர், அங்கிளிக்கன் திருச்சபை ஆங்கிலேயர் ஆகியோரிடையே இலங்கையில் ஏற்பட்ட யுத்தங்களைக் குறிப்பிடலாம். ஆனாலும் ஏதோவொரு வகையில் இவர்களிடையே கிறிஸ்துவில் ஐக்கியம் ஏற்பட்டதும் இறைவனின் அருள்தானென்றால் மிகையல்ல.

இலங்கையில் மிகக்குறுகிய சதவீதத்தில் பரவியுள்ள றோமன் கத்தோலிக்க திருச் சபையைத் தவிர அது சாராத மிகமிகக் குறுகிய விசுவாசிகளின் எண்ணிக்கையைக் கொண்ட தூதுரைப் பணியாளர்களின் இயக்கங்களில் முக்கியமானவையான, திருச்சபை தூதுரைப்புக் கழகம், சிநானா தூதுரைப்பு மிஷனரி, கல்வின் திருச்சபை நற்செய்தி பரப்புரைப்புக் கழகம், அமெரிக்க மிஷனரி, பப்டிஸ் தூதுரைப்புகுழு, மெதடிஸ்றசபை, இலங்கை பெந்திகோஸ்தே திருச்சபை, இரட்சணியசேனை, தேவசபை, ஏழாம்நாள் வருகை போன்றன இயங்குகின்றன. அவற்றை தவிரவும் மேலும் பல நற்செய்தி பரப்பும் சுயாதீன கிறிஸ்தவ சபைகளும் பல சேவைகள் செய்து வருகின்றன. அவையாவனவும் நற்செய்தி பரப்புதல், கல்விச்சேவை, வைத்தியசேவை, இயற்கை அனர்த்தங்களின்போது உதவுதல், விளிம்புநிலை மக்களுக்கான அடிப்படை உதவிகளை மேற்கொள்ளல், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் என்று பல்வேறுபட்ட ஆன்மீகச் சேவைகள், சமூக சேவைகள், பொதுச்சேவைகள் என்று பல இன்னல்களுக்கிடையே ஊழியர்களால் ஆற்றிவரும் அரும்பணிகள் எழுத்தில் வடிக்கமுடியாதன. கிறிஸ்து இயேசுவை மையப்படுத்தி இயங்கும் இந்தக் கிறிஸ்துவ சபைகள் தியாக சிந்தையுடன் மக்கள் மத்தியில் இன்றுவரை ஓயாது சேவையாற்றி வருகின்றார்கள். இச்சேவைகள் தவிரவும் மற்றும் பல கல்விக்கூடங்கள், வைத்திய பராமரிப்பு நிலையங்கள் முதியோர் இல்லங்கள், அனாதை ஆச்சிரமங்கள் போன்ற பல நிறுவனங்களையும் நிறுவி கிறிஸ்து வின் பாதைகளில் செயற்பட்டு வருகின்றன. இலங்கையில் இன்றும்கூட கிறித்தவ, கத்தோலிக்க பாடசாலைகள் தம் பணிகளில் முன்னணியிலேயே உள்ளன.

முடிவுரை

மானிட வேறுபாடுகளுக்கு அடித்தளமாக இருப்பன கல்வி, பொருளாதார, அரசியல் ஏற்றத்தாழ்வுகள்தான் என்பது அறிஞர்களின் பொதுக்கருத்தாகும். இவற்றை சமநிலைப்படுத்தி மனிதநேயத்தை வளர்ப்பதில் 2000ஆண்டுகளாக இயேசுவின் பாதைகளில் பயணிப்பவர்களால்கூட இன்றுவரை சமன்செய்ய முடியாமல் போனது துரதிஸ்டம்தான். இதற்கு பலகாலமாக புரிந்துணர்வு குன்றிய நிலையில் செயற்பட்டு வந்த தனித்தனி திருச்சபைகளுக்கிடையே தோன்றிய கருத்துமுரண்பாடுகள், பிளவுகள், இன, மொழி, பிரதேசபிரிவினைகள் யுத்தங்கள் காரணங்களாகயிருக்கலாம். கிறிஸ்துவை மையப்படுத்தி இயேசுவை அத்திவாரத்தின்மேல் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் சபைகள் அனைத்தும் ஒற்றுமைப்பாட்டுக்குள் வரவேண்டியது காலத்தின் தேவையாகும். புனித பவுலாரின் இறையியல்மையம் “கிறிஸ்துவுக்குள் இருத்தலே” (Being in Christ) என்கிறார் ஆல்பர்ட் ஸ்வைட்சர். இதனை விளங்கி கிறிஸ்துவுக்குள் ஐக்கியத்தைப் பேண வேண்டியது கிறிஸ்தவர்களின் தலையாய கடமையாகும். அப்போதுதான் எதனையும் வெற்றி கொள்ள முடியும்.

நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப படங்கள்

எமது குடும்பமும், மாமியின் குடும்பமும்

ஐயா இராசையா

ஐயாவும் மருமக்களும்

up Country Graduate Association Members in 1992 with Prof. M.S.Mookiah

up Country Graduate Association meeting with Prof. S.Mookiah and Prof. S.Vijeyachandran 1994

with undr Graduate from Sylvester's Tamil Medium 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At Nigara water falls Canada.

Canada relatives

With Canada relatives

Convocation day with Amma 1990

Wedding reception card

Wedding reception

At wedding reception with Minister Lakshman Kiriella

Wedding day 1999

Wedding with Komathy 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the family at Pazhmuthircholai Murugan Temple, Madurai

my two Cousins S.Yogananthan and T.Sivananthan - 1984

With two close relatives

With my brother in law felix

In a relatives wedding in 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University Life

Convocation Procession

Dumbara Campus FootballTeam

Dumbara Campus Hockey Team as Captain

Kandy District Captain - 1987

Kandy District Captain 1987 Senior National Championship - taking oath in front of Roy De Silva (President NOC and SLHF) and Mayor of Kandy Thilak Rathnayake

Kandy District Hockey Team 1985

University of Peradeniya Captain 1986

St.Sylvesters College Hockey Team 1981

University of Peradeniya Hockey Team 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KANDY DISTRICT HOCKEY ASSOCIATION

KH&FC 1986

Kandy District Hockey Team 1995

St. Sylvester's College Coach - 1988

University of Peradeniya Hockey Team Coach 1996

St. Sylvester's College Coach - 1991

Kandy School Coach - 1994

St. Sylvester's College Coach - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவர் சங்கம்
OBA

OBA Get together 2

OBA Get together with Minister Gunasekara

OBA Get together

OBA Jaffna trip 2015

OBA Get together 2

Old Sylvestrians at the Voice of Kandy AGM 2022 (2)

Voice of Kandy 2021

Voice of Kandy AGM get together 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Old Sylvestrians at the Voice of Kandy AGM 2022 (1)

Voice of Kandy get together 2020

With Provincial Governor Tikiri Kobbekaduwa, Principal Meetiyagoda and OBA officials



OBA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bharathidasan University / Annamalai University

Addressing a conference gathering in Periyar University, Salem

At Annamalai University in 2016 attending an International Conference

At Alagappa University, Karaikkudy in 2019

46th International Conference of Tamil Teachers' Asociation, Tamil Nadu, held at Thanjavur Tamil University

At Bharathiyar Memorial House, Pondichery

At Gopi Arts College, Erode

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At Kallanai, Trichy with Prof. V.Maheswaran, Prof. T.manoharan and Prof. Balasubramani

At Kamaraj University, Madurai 2019

At Madurai Kamaraj University in 2016

At Manonmaniyam Sundaranar University, Thirunelvely in 2018

At University of Kelaniya International Conference

In London discussing with Sri Lankan academics (Dr. Mu. Nithyananthan at center)

Attending an International conference in India

Bharathidadan University International Conference 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Felicitatwed by Prof. Baskaran, Vice Chancellor tamil University Thanjavur in 2015

Felicitated by Prof. Sundaresan at Tamil University Thanjavur

Discussion at London with Tamil Literary personalities.

Saraswathi Mahal Library - Thanjavur



At Periyar University, Salem.

Roja Muththiah Home in Karaikkudy

Tamil Nadu Archaeological Association's Silver Jubilee Conference at Rajapalayam, Tamil Nadu

Tamil Nadu Archaeological Association's Silver Jubilee Conference at Rajapalayam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At Ziegenbalg monument in Tranquebar, Tamil Nadu

Tamil University Thanjavur

With poet Erode Tamilanban, Prof. T.Manoharan and Mr. M.Rubavathanan at Coimbatore after Tamil Classical language Conference

At Thiruvalluvar College, Babanasam, Rameswaram

உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்கேற்க மலேசியா பயணம்

மலேசியா கோலாலம்பூரில் மலாயா பல்கலைக்கழகத்தில் ஜனவரி 29 ஆம் திகதி முதல் பெப்ரவரி முதலாம் திகதி வரை நடைபெறவுள்ள ஒன்பதாவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் பேராதனைப் பல்கலைக்கழக பிரதி நூலகரும் ஊடகவியலாளருமான இராசையா மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

‘உலக மயமாதல் சூழலில் இலங்கையில் புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்களது தனித்துவமான கலாசார விழுமியங்களையும் அண்மைக்கால மாற்றங்களையும் ஆவணப்படுத்தல்’ என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையினை சமர்ப்பிக்கவுள்ளார்.

மற்றொரு அமர்வில் வைத்திய கலாநிதி திருமதி கோமதி மகேஸ்வரன், இரா. மகேஸ்வரன் இணைந்து ‘இலங்கையில் பெண் தெய்வ வழிபாடும் தமிழர் பண்பாட்டில் அதன் செல்நெறியும்’ என்ற ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இரா. மகேஸ்வரன் இந்தியா, தமிழ்நாடு கோவையில் நடைபெற்ற தமிழ் செம்மொழி மாநாடு, தூத்துக்குடி காயல்பட்டினத்தில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, மலேசியவில் நடைபெற்ற முருக பக்தி மாநாடு, லண்டன் உலக தமிழியல் ஆய்வு நடுவம் நடத்திய லண்டன் தமிழாய்வியல் மாநாடு, பல்கலைக்கழக நூலகர் சம்மேளன மாநாடு, சர்வதேச ஹொக்கி சம்மேளன மாநாடு ஆகிய சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்.

மொரீசியஸில் நடைபெற்ற புலம்பெயர் தமிழ் இலக்கிய மாநாட்டிலும் சுவிஸில் நடைபெற்ற முருகவழிபாடு ஆய்வு மாநாட்டிலும் இவரது கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. மலேசிய இஸ்லாமிய, தமிழ் இலக்கிய மாநாட்டு மலரில் இவரது கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு கொழும்பு தமிழ்ச் சங்கம், கண்டி தமிழ்சங்கம், இலங்கை பல்கலைக் கழக நூலகர் சங்கம், பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை நடத்திய தமிழ் ஆய்வுக் கருத்தரங்கு ஆகிய தேசிய ஆய்வு மாநாடுகளிலும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். இவை மாநாட்டுக்கட்டுரை மலர்களிலும் இடம்பெற்றுள்ளன.

வைத்திய கலாநிதி கோமதி மகேஸ்வரன் குண்டசாலை கரந்தகொல்ல விலங்கு பரிபாலன பாடசாலை சிரேஷ்ட விரிவுரையாளர், விவசாயத் துறை விலங்கு பரிபாலன மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்.

இவ்விருவரும் ஜனவரி 27 ஆம் திகதி மலேசியா பயணமாகின்றனர். அங்கு நடைபெறும் இலக்கியவாதிகள் சந்திப்பிலும் கலந்து கொள்வதுடன் சிறப்புரையாற்றவும் உள்ளனர்.

World Tamil conference 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகித்ய விழா

At the Sahithya Vizha

At the Upcountry cultural ceremony

Maheswaran

With Aiyadurai - President
National Workers Congress

Felicitating His Excellency the Asst.
Indian High Commissioner Natarajan

Felicitating Prof. V. Nanthakumar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Felictatd by Minister rauff Hakeem in 2022

நூலகர் மகேஸ்வரனின் நூலுக்கு சாகித்திய விருது

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் ஆய்வு நூலுக்கான சாகித்திய விருது இம்முறையும் பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் இரா. மகேஸ்வரனின் 'வளம்மிக்க வழக்காற்றியல்' எனும் ஆய்வு நூலுக்கு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை அட்டன் டி.கே. டபிள்யூ. கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் நுவரெலியாவில் நடைபெற்ற மத்திய மாகாண சாகித்திய விழாவில் இவரது 'நதி கடந்த காலம்' எனும் ஆய்வு நூலுக்கு விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

News item on Sahithya Award for authoring a Book

IMG_9797 (2)

In London with my class mate K. Kumararatnam and my College mate Aruleswaran

Taking oath as Justice of Peace

Honoring Mahathma Gandhi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Central Province Sahithya Award

With Kumaran (Publisher), Rifaudeen (Librarian) and Arul Sathyanathan (Editor) in India

With Minister Gunasekara

With Minister Keheliya Rambukwella

With Minister Rohana Dissanayake

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Minister P. Chandrasekaran

With Minister Rauff Hakeem in Malaysia in the Islamic Tamil Literary Conference

With Minister V. Puthrasigamony

With Provincial Minister Thilina Bandara Thennakoon

With Prof. Thillainathan and Prof. V. nanthakumar in 2020

With friends at Hindu Cultural center

With Minister Thissa Attanayake and Minister Radhakrishnan and Provincial Councillor Mathiyugarajah while reciving Sahithya Award

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As the Librarian

At Convocation as Librarian

Foundation laying ceremony for the New Library Building 2017

Presenting a mememto to Prof. Srinivasa Raghavan

UNESCO officials visit to the Main Library to inspect Palm Leaf manuscript

Opening ceremony of British Council digital wall in the new library building

தினகரன்

ePaper

ஜேர்மன் நாட்டு தமிழ் மரபு அறக்கட்டளையின் பணிப்பாளர் கலாநிதி கே. சுபாஷினி, மலேசியாவின் புத்ரா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நா. கண்ணன், தமிழக எழுத்தாளர் ஏ. மதுமிதா ஆகியோர் நேற்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு சென்றனர். இவர்கள் பல்கலைக்கழக நூலகர் இரா. மகேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியதுடன் நூல்களையும் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

(படம்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

Visit of Ms. Subhashini, President of Tamil Heritage Fund

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Press conference in 2017 with VC and DVC

Unveiling University of Peradeniya Library Centenary Plaque

unveiling the proposed new Library building

laying foundation stone for the New Library Building 2017

With University Library Library Senior Staff in 2022

Portrait unveiling ceremony of Dr. Ian Goonetilleke

Group photograph with former Librarian Mr. A.Senadheera after his felicitation ceremony

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Asian Hockey Fedaration Coaches Seminar Singapore - 1996

Asian Hockey Fedaration Coacher's Seminor Singapore - 1996

Chief guest 1993

R. Maheswaran challenge trophy Jaffna District Hockey Tournament 2022

Asian Hockey Federation Managers' meeting in Indonesia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hockey Nationals 2000

Hockey Tournament 2004

Hockey federation officials

Introducing National umpires to Difence Minister Gen.Anurudha Ratwatta

Kandy Sports Foundation innauguration ceremony with Ministers Anuruddha Ratwatte and Lakshman Kiriella

Kandy Hockey Natioanal 1996

unveiling the proposed new Library building

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka National Coach Jayasekaran from India - 1994

With German Coach 1992

With Kandy Hockey umpires

with Kenya Coach 1996

With German Coach -1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With min.Rogana Dissanayake
President SLHF at Malaysia

with Alagendra Seretary General AHF -2
in Malaysia

with Alagendra Seretary General AHF in
Malaysia

with Malaysia King Azlan Shah and
Alagendra Seretary General AHF

with malaysia King Azlan Shah
President Asian Hockey Fedaration 1992

Charing the Interanational Coferance
Oraganize by Indian institute of
managementTiruchirappalli 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவழித் தமிழ்

பொருளடக்கம்

மகேஸ்வரனின் ஆய்வுக் கட்டுரைகள்

1. இந்திய வம்சாவளி, மலையக நாட்டார் பாடல்களில் 'கண்டி' பற்றிய வரலாற்றுத் தடயங்கள் 118

2. இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் கண்டிப் பிராந்தியத்தின் வகிபாகம்: - ஓர் உசாத்துணை அளவீடு 125

3. "சுதந்திரத்திற்கு முன்னரான மலையகத்தவர்களின் பதிப்பு முயற்சிகளை ஆவணப்படுத்தல்" 132

4. இலங்கை வரலாற்றில் பெண்தெய்வ வழிபாடும், தமிழர் பண்பாட்டில் அதன் செல்நெறியும் 141

5. புலம்பெயர் தமிழர்களின் தனித்துவமான கலாசார பண்பாட்டு விழுமியங்களும் மாற்றங்களும் 146

6. ஈழத்தமிழ்ப் பயண இலக்கியங்கள் தனிநாயகம் அடிகளார் முதல் தற்காலம் வரை 154

7. இலங்கைத்தமிழ் ஆவணங்கள்: ஆவணப்படுத்துதல் - வரலாறு - அதன் முக்கியத்துவம் 164

8. மலையக சமூக மாற்றத்தில்; சமூக நாடகப் பிரதிகளின் வகிபாகம் 172

9. வரலாற்று புகழ்மிக்க கண்டி "எசல பெரகரா"வில் இந்து பூசை வழிப்பாட்டு முறைகளும், சம்பிரதாயங்களும் 184

10. இலங்கையில் முருக வழிப்பாட்டின் வரலாற்றினை கூறும் நாட்டுப்புறவியல் 194

11. இலங்கையில் இந்தியத் தமிழர் நாட்டார் வழக்காற்றியல் 203

12. கண்டியம்பதியில் மத்திய கைலாசம் : கட்டுக்கலை அருள்மிகு மீனாட்சிஅம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வவிநாயகர் திருக்கோயில் - வரலாறு 211

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சங்க இலக்கியங்களில் ஆண்களின் வீரத்தினை
வெளிக்காட்டும் போரும் வீர விளையாட்டுகளும்........218

14. சைமன் காசிச்செட்டி -
தமிழ் புலவர் சரிதத்தின் முன்னோடி........227

15. நவீன ஊடகத்தில் நாட்டுப்புற கலைகள்........231

16. பிரித்தானியருக்கும் சிங்கள பிரதானிகளுக்கும் இடையிலான
கண்டி ஒப்பந்தத்தில் தமிழ் கையெழுத்துக்கள் - ஆவணப்படுத்தல்........236

17. மலையகப் பெண்கவிஞர்களும் - பாடுபொருளும்
- ஆவணப்படுத்தலுக்கான ஓர் முன்னாய்வு........241

18. சங்ககால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள்
ஆவணப்படுத்தலுக்கான ஓர் ஒப்பீட்டாய்வு........252

19. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஊவா வகிபாகம்
- ஆவணப்படுத்தலுக்கான ஓர் முன்னாய்வு!........262

நன்றிஉரை........272

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

இந்திய வம்சாவளி, மலையக நாட்டார் பாடல்களில் 'கண்டி' பற்றிய வரலாற்றுத் தடயங்கள்

உலகில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றில், முக்கியமாக ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைக்கு புலம்பெயர்ந்த இந்தியத்தமிழர்கள் முக்கிய இடம் பெறுகிறார்கள். ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இவர்கள் பாதைகளமைக்க, பாலங்களமைக்க, குளங்களமைக்க, புகையிரதப் பாதைகளமைக்க மற்றும் பெருந்தோட்டத் துறைக்கும் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்பட்டனர். இக்காலத்தில் இந்தியாவில், தமிழ் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், வறுமை, பட்டினி, நிலவுடைமையில் ஏற்பட்ட மாற்றங்கள், அடிமைவாழ்க்கை, வாடகை, ரயத்துவாறி முறை என்ற மிராசுதாரரின் ஆதிக்கத்திலிருந்த நிலத்திற்கான அடிமைகள் முறை, சாதிக்கொடுமை, 1677இல் இந்தியப் பருத்திக்கான சுங்கவரி, 1696இல் கொண்டுவரப்பட்ட பட்டுக்கான சுங்கவரி, விவசாயத்தில் தேக்கம், பணமின்மை, ஆகியன புலம்பெயர்வதற்குக் காரணமாயின.

இந்திய வேலையாட்கள் இலங்கைக்கு மலையகத்தின் சுபீட்சம் பற்றிய பிரசாரம் செய்யப்பட்டு ஏமாற்றி இலங்கைக்குக் கூட்டி வரப்பட்டனர். இலங்கை ஆளுநர் நோர்த் காலத்தில் (17981802) கூட்டிவரப்பட்ட தொழிலாளர்கள் "பயினியர் ரோட் கோப்ஸ்" என அழைக்கப்பட்டனர். 1818 இல் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சியை அடக்கு வதற்காக 5000 தென்னிந்தியர் கொண்டுவரப்பட்டனர். அதைவிட 1796இல் பிரித்தானியர் இலங்கை கடற்கரையினைக் கைப்பற்றியபோது, வரி சேகரிப்பதற்காக இருமொழி தெரிந்த இந்திய தமிழர்கள் இங்கு கொண்டுவரப்பட்டனர், இவர்கள் டுபாஷிகள் என அழைக்கப்பட்டனர். செல்டன் ஹென்றி ஃபோட் 1823இல் கம்பளை சிங்கப்பிட்டியவில் கோப்பித்தோட்டத்தினை ஆரம்பித்தார். இக்கால இந்தியத்தமிழரின் வருகை 1842இல் 14,000, 1843இல் 31,000, 1844இல் 67,000, 1845இல் 71,000 என அதிகரித்துச் சென்றுள்ளது. 1924இல் இந்தியமக்கள் 786,000 பேர் எனவும், தோட்டத்தொழிலாளர்கள் 610,000 பேர் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. 1850இல் கொக்கோ பயிர்ச்செய்கை கம்பளையில் ஆரம்பிக்கப்பட்டது. 1873இல் தேயிலைப் பயிர்ச்செய்கை லூல்கந்துரவில் ஆரம்பிக்கப்பட்டது.

"சிலோன் புளுபுக்" நூலில் 1864இல் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியாவிலிருந்து 2079 கலங்களும், பிரேஞ்சு இந்தியாவிலிருந்து 175 கலங்களும் வந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1848இல் புகையிரதப்பாதை ஆரம்பிக்கப்பட்டபோதும், எண்ணூறு (800) இந்தியத் தொழிலாளர்கள் கூட்டி வரப்பட்டுள்ளனர். கடலில் படகுகள் சரிந்ததாலும், பாம்புக் கடியினாலும், மலேரியா காய்ச்சலினாலும் பலர் இறந்துள்ளனர். "ஆதிலட்சுமி" என்ற கப்பல் நீரில் மூழ்கி 120 பேர் இறந்துள்ளனர். கடற்கரையிலிருந்து தோட்டங்களுக்கு வந்து சேருமுன்பாகவும் பலர் இறந்து உள்ளனர். 1847–1867 வரை 24 சட்டங்கள் 1858இல் இமிகிரேஷன் சட்டம், 1859ல் ஒப்பந்தத்தொழிலாளர் சட்டம் உட்படக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்வருடத்துடன் இவர்கள் இடம் பெயர்ந்து 200 வருடங்கள் ஆகியும் பலருக்கு அதே லயத்து வாழ்க்கை தான். இவர்கள் லயன்களிலேயே (10X10) அடி அறைகள்) தங்க வைக்கப்பட்டனர். இதுவே நிரந்தர வீடாகியது. இவர்கள் செங்கல்பட்டு, மதுராந்தகம், வடஆற்காடு, சேலம், தென்னாற்காடு, திட்டிவனம், திருச்செந்தூர், சிதம்பரம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, பாபநாசம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய பகுதிகளிலிருந்து வந்துள்ளனர். இங்கு இவர்களுள் அகம்படியார், அம்பட்டர், அம்பலகாரர், ஆசாரி, இடையர், ஒட்டர், கம்மாளர், கவுண்டர், கள்ளர், குறும்பர், சக்கிலியர், சாணார், செட்டி, தேவர், நாடார், நாயர், நாயுடு, பள்ளர், பறையர், பண்டாரம், வண்ணார், மறவர், முத்துராசா, முதலி, வடுகண்ணார், வலையர், வள்ளுவர், வேளாளர் ஆகிய சாதிகளைச் சேர்ந்த மக்கள் வந்துள்ளனர்.

கங்காணிமார்களே தரகுப்பணம் பெற்றுத் தொழிலாளர்களைக் கூட்டிவந்தனர். 1904இலிருந்து கரையோர ஏஜன்சி நிலையம் மூலம் இவர்களது வரவு பதியப்பட்டுள்ளது. இவர்கள் கப்பல், படகுகள் மூலம் பாம்பன்–மன்னார், தூத்துக்குடி–கொழும்பு, தொண்டி –கொழும்பு ஊடாக வந்துள்ளனர். இவர்கள் நகர சுத்தித் தொழிலாளர்களாக, துறைமுகக் கூலிகளாகத் தொடர்ந்தும் ''கூட்டுத்துண்டு'' முறை மூலம் இலங்கைக்குக் கூட்டி வரப்பட்டுள்ளனர். அதாவது, கங்காணி வழங்கும் முற்பணததிற்கான துண்டு, இந்தப் பணத்தினைச் செலுத்தி இத்தொழிலாளர்களை வேறு தோட்டத்துக்குக் கூட்டிச்செல்ல முடியும். 1921வரை இம்முறை காணப்பட்டுள்ளது. இங்கு கங்காணி வட்டிக்குப்பணம் கொடுப்பார், கடைநடத்துவார். அவரது கடையிலேயே பொருட்கள் வாங்கவேண்டும். அவரே திருமணம் செய்து வைப்பார். அரசியலைக் கவனிப்பார். எனவேதான் இம்மக்களது வாய்மொழிப்பாடல்கள் கங்காணியை மையமாக வைத்து உருவாகியுள்ளன. இவை நையாண்டிப் பாடல்களாகவும் காணப்படுகின்றன. கல்லாமல் கவிபாடும் திறன்கொண்ட பாமரர்களே இவ்வகை நாட்டார் பாடல்களைப் பாடியுள்ளனர்.

வழக்காற்று இடம்பெயர் கோட்பாடு, வரலாற்று அணுகுமுறைக் கோட்பாடு ஆகியன கொண்டு இவர்களது வாய்மொழிப்பாடல்களில் கண்டி தொடர்பான வரலாற்றுச் செய்திகளை ஆராயப்படுவதோடு, இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அவதானித்தும் கடந்த கால எனது ஆய்வுகளின் அடிப்படையிலும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டாரியல் என்பது நாட்டுப்புற வாய்மொழிபாடல்கள், நாட்டுப்புற கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டுப்புற நினைவுகள், நாட்டுப்புற மரபுகள், நாட்டுப்புற நம்பிக்கைகள், நாட்டுப்புற மந்திர சடங்குகள், நாட்டுப்புற மருத்துவம், நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டுப்புற கலைகள், நாட்டுப்புற தொழில்முறைகள் போன்ற பல்வேறு அம்சங்களைக் கொண்ட ஒரு கூறுகளின் கூட்டாகக் காணப்படுகிறது.

(முருகானந்தம், 1991); கூற்றின்படி "இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே நாட்டாரியல் பற்றிய தேடுதல், ஆய்வுகள் தீவிரமடைந்துள்ளன. நாட்டாரியல் என்பது ஒரு தனித்துறையாக விளங்குவதோடு பல்கலைக்கழகங்களிலும், பாடசாலை கல்வியிலும் இன்று முக்கிய விடயத்தினை பிடித்துள்ளது.''

இலங்கையின் மலையக நாட்டாரியல் ஏனைய சமுகத்தனின்றும் வேறுபட்ட தனித்துவப் பண்புகளை கொண்டனவாகவுள்ளன. வாய்மொழி இலக்கியம் பற்றிய தேடலில் இலங்கையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், மலையகம் போன்ற வெவ்வேறு பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் அவ்வப் பிரதேசத்திற்கேற்ப அவ்வப் பிரதேச பழக்க வழக்கங்கள், வாழ்க்கைச் சுமைகள், மகிழ்ச்சிகள், துன்பதுயரங்கள், ஏமாற்றங்கள், ஒடுக்குமுறைகள் போன்றவற்றின் வெளிப்பாடாகவே இவைகள் அமைந்துள்ளன.

மலையக வாய்மொழிப் பாடல்கள் எழுத்தறிவில் குறைந்திருந்த சமுதாயத்தினரின் பல்வேறு வாழ்க்கை அம்சத்தை வெளிப்படுத்தும் ஒரு இலக்கியமாகவே கருதுதல் வேண்டும். உழைக்கும் மக்களிடையே வழக்கத்திலிருந்து வரும் பாடல்களாகவும், உழைக்கும் மக்களின் தலைமுறை தலைமுறையாக பாடுப்பட்டும், உயிர் வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. இப்பாடல்களில் இலக்கணம் காணமுடியாது. ஆனால் உள்ளத்தில் எழும் எண்ணங்கள், உணர்ச்சிகள், வாழ்க்கை உண்மை சம்பவங்களை பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன. மனதிலும் பதிந்திடும் தன்மை கொண்டவை இதனை எழுதி வைத்து மனனம் செய்து வாசிப்பதோ, படிப்பதோ, பாடுவதோ அல்ல.

மலையக வாய்மொழிப் பாடல்கள் இந்திய தமிழகத்தின் பண்டைய கிராமிய கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாகவும் விவசாய மக்களிடையே புழக்கத்திலிருந்த அத்தனை அம்சங்களும் மலையக தோட்ட கலாச்சாரத்திலும் பிரதிபலிப்பனவாக அமைந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேய தோட்டச் சொந்தக்காரர்கள் இந்திய தமிழகத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்களாக இலங்கையின் மலைப்பிரதேசங்களுக்கு அவர்களைக் கூட்டி வரும்போதும், அவ்வாறு வந்த தொழிலாளர்கள் இலங்கை மலையகத்தில் தொழில் செய்த காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களும் வாய்மொழிப் பாடல்களாக வெளி கொண்டு வரப்பட்டுள்ளன. வேலைக் கஸ்டம், தோட்டச் சொந்தக்காரர்களின் பல்வேறு தொல்லைகள், தமது சொந்த கிராமத்தைவிட்டு இடம்பெயர்ந்த மனக்கஸ்டம், உறவினர்களை பிரிந்த துன்பம், கொடியபஞ்சம், நில உரிமையாளர்களினால் துன்பறுத்தப்படல், எதிர்பார்ப்புகள், வழிப்பயணங்களின் வேதனைகள், அவலங்கள், இழப்புகள், கொடியநோய், காட்டு விலங்குகளால் ஏற்பட்ட பேரழிவுகள், தோட்ட நிர்வாக கெடுபிடிகள் வாழ்க்கை போராட்டம் போன்றன இதில் பிரதிபலிப்பதைக் காணலாம். இதை தவிர குழந்தைகளை உறங்க வைக்கப் பாடுகின்ற தாலாட்டுப்பாடல்கள், குடும்பத்தில் ஒருவரை பிரிந்துவிட்டு, பறிகொடுத்து விட்டு பாடுகின்ற ஒப்பாரிப் பாடல்கள், ஆண்டவனைத் துதித்துப் பாடுகின்ற பக்திப்பாடல்கள் மற்றும் உரிமைப் பாடல்களும் இதில் அடங்குகின்றன.

இலங்கையில் மலையக மக்களிடையே வழங்கும் நாட்டுப்பாடல்களை சேகரித்து அவ்வப்போது பத்திரிகைகளிலும், கட்டுரைகளாகவும், நூல்களாகவும் பலர் வெளியிட்டுள்ளனர். சி.வி. வேலுப்பிள்ளை, ஏ.பி.வி. கோமஸ், சிக்கன்ராஜ், சாரல் நாடன், சி.வே. ராமையா, க. நவசோதி, மாத்தளை வடிவேலன், பேராசிரியர் எஸ்.தில்லைநாதன், கலாநிதி ந. வேல்முருகு, சி. அழகுபிள்ளை, க. சுப்பிரமணியம், சு. முரளிதரன், பேராசிரியர் க. அருணாசலம் ஆகியோர் இவற்றில் குறிப்பிடக்கூடிய பங்கினை ஆற்றியுள்ளனர்.

இப்பாடல்கள் ஊடாக மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வெளி உலகிற்கு தகவல்களைச் சொல்ல துடிக்கின்ற பாடல்களாக தகவல்களாக இவை அமைந்துள்ளன. கண்டியை மட்டும் பிரித்தெடுத்து நோக்குவோமாயின் கண்டியையே அக்காலத்தில் இந்தியத் தமிழக தொழிலாளர்கள் மையமாகக் கொண்டிருந்துள்ளனர் என்ற தகவல்கள் வாய்மொழிப் பாடல்களூடாககாண முடிகின்றன.அக்காலத்தில்இலங்கையின்மலைநாடு (உடரட்ட) ராசதானியத்தின் தலைநகராக கண்டி அமைந்திருந்ததனால் கண்டியையே மையமாகக் கொண்டு இப்பாடல்கள் அமைந்துள்ளன. கதிர்காமத்தினைக்கூட மலையகத்தின் கண்டிநகரோடு இணைத்துப் பாடல்கள் பாடியுள்ளனர். இலங்கை அல்லது மலையகம் என்பதற்கு பதிலாக "கண்டி' என்ற பதத்தை பாவித்தார்களா அல்லது கண்டி என்பது விளம்பரப்படுத்தப்பட்ட தனித்தன்மைகளை கொண்டிருந்தனவா? என்பதை பாடல்கள் ஊடாகவே புரிந்து கொள்ள வேண்டும்.

"காணிக்கை கொண்டு – செல்வமே
கண்டி கதிருமலை போனோமையா
வழியா வழிநடந்து – செல்வமே
வரத்துக்கே மோனோமையா" (2)

என்ற பாடலில் கண்டி கதிருமலை என குறிப்பிட்டுப் பாடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பேராசிரியர் க. கைலாசபதி, 1953) குறிப்பிடுகையில் "சென்ற நூற்றாண்டின் முதல் காவியமே கண்டிச் சீமைக்கு ஆள்கூட்டிய போது பிறந்த பாடல்கள் முதல் இலங்கைக்கு வந்து தொழிலாளர்கள் தலைமுறைகளாக இங்கே வாழ்ந்து இங்கேயே இறந்தவர்களை எண்ணி இரங்கும் ஒப்பாரிப் பாடல்கள் வரை, வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களையும் பிரதிபலிக்கும் பாடல்கள் காதலிலிருந்து கடவுள் வழிபாடு வரை பல்துறைகளைச் சேர்ந்த பாடல்கள் இத்தொகுதியில் இடம்பெறுகின்றன." என சி.வி. வேலுப்பிள்ளையின் மலைநாட்டு மக்கள் பாடல்கள் என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சி.வி. வேலுப்பிள்ளையின் மலைநாட்டு மக்கள் பாடல்கள் நூலில் "1825இல் கோப்பிக்காலம் ஆள்கட்டிய போது என்ற தலைப்பில் கண்டி பற்றிய பல பாடல்களை சேகரித்து வழங்கியுள்ளனர். அதே போல அதே நூலில் "கண்டி சீமை வந்த பின்' என்ற தலைப்பிலும் சில பாடல்கள் வழங்கியுள்ளனர்.

1825 கோப்பி காலம்
ஆள் கட்டிய போது

"கண்டி கண்டி எங்காதீங்க
கண்டி பேச்சு பேசாதிங்க
கண்டி படும் சீரழிவே
கண்ட பேரு சொல்வாங்க"

"கண்டி கண்டி எங்காதீங்க
கண்டி பேச்சு பேசாதிங்க
சாதி கெட்ட கண்டியிலே
சங்கிலியன் கங்காணி"

"அட்டே கடியும்
அரிய வழி நடையும்
கட்டே எடறுவதும்
காணலாம் கண்டியிலே"

"ஆளும் கட்டும் நம்ம சீமை
அரிசி போடும் நம்ம சீமை
சோறு போடும் கண்டிச் சீமை
சொந்தமினு எண்ணாதீங்க"

கண்டிச்சீமை வந்த பின்
"கண்டிக்கு வந்தமினு
கனத்த நகை போட்டமினு
மஞ்ச துளிச்ச மினு
மனுச மற்க தெரியலியோ'

"பாதையிலே வீடிருக்க
பழனிசம்பா சோறிருக்க
எருமே தயிரிருக்க
ஏண்டி வந்தே கண்டிச்சீமை"

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தபனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நாமறந்தேன் '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி.வி. வேலுப்பிள்ளை, 1983) இலங்கையில் தங்கவிரும்பாது தாயகம் திரும்பத் துடித்துக் கொண்டிருந்ததை சில பாடல்கள் புலப்படுத்துகின்றன. இப்பாடல்களை கோப்பிகாலம், பயணம், கண்டிச்சீமை வந்தபின், பழம், துரை, பங்களா, இஸ்டோறு, பெரியகங்காணி, கண்டாக்கு, கணக்கப்பிள்ளை, கங்காணி, தோட்டகாதல்பாடல், பொதுகாதல்பாடல், தாக்கம், சடை, தாலாட்டுப்பாடல், ஒப்பாரி, ஒயிலாட்டுப்பாட்டு, ரயில்கும்மி, கும்மி, கோடாங்கி, சமயவழிபாட்டுப்பாடல்கள், காமன்பாட்டு என வகைப் படுத்தியுள்ளனர்.

"கும்மியோ கும்மி, கோப்பிக்காட்டு கும்மி என்னும் பெயரில் 24 பக்கங்களைக் கொண்ட நூல் 1918ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதுவே முதன்முதல் வெளிவந்த மலையக நாட்டார் பாடல்நூல் இச்சிறு நூலில் மலையகத்தில் வழங்கி வந்த நாட்டுப் பாடல்களின் தொகுப்பாக இருக்க வேண்டும். அல்லது நாட்டுப் பாடல்களின் அமைப்பில் புனையப்பட்டதாக இருக்கவேண்டும்' என சாரல் நாடன் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் கண்டியில் வெளிவந்துள்ளது எனவே முதல் நூலினை வெளியிட்ட பெருமையும் கண்டியையே சேருகிறது.

(சாரல் நாடன், 1997) "இலங்கை நாட்டார் பாடல்களில் மலையகப் பாடல்களின் தொகை ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பினும், அச்சில் வெளிப்படாத பாடல்கள் பெருமளவில் மலையகத்தில் வழக்கில் உள்ளன என கருதப்படுகிறது. இவ்விதம் சேகரிக்கப்பட்டு அச்சில் வராத பாடல்கள் மலையக மக்கள் வாழ்வின் உயிர்ப்பான அம்சங்கள் பலவற்றை வெளிப்படுத்தக் கூடியன.' எனவும் குறிப்பிட்டுள்ளார். இதனை சாரல் நாடன் தமது வாய்மொழி இலக்கியம் என்ற நூலில் தொழிற்பாடல், சூழலில் பிறக்கும் பாடல், கங்காணிப்பாடல், கும்மியும் கோலாட்டமும், வாழ்வளித்த வாய்மொழி பாடல்கள், மயக்கம் இன்பம், அவலத்தரல் என வகைப்படுத்தியுள்ளார்.

(பேராசிரியர் க. அருணாசலம், 1994) தமது மலையகத் தமிழ் இலக்கியம் என்ற நூலில் "சுருங்கக்கூறின் மலையக நாட்டாரியல் பற்றிய முழுமையான ஆய்வுகள் உதவி யின்றி மலையகத் தோட்டத் தொழிலாளர் பற்றிய முழுமையான வரலாற்றை எவராலும் எழுத முடியாது என கூறும் அளவிற்கு மலையக நாட்டாரியற் கூறுகள் அவர்களது வரலாற்றையும் வாழ்வு மையம் பிரதிபலித்து நிற்பதை அவதானிக்கலாம்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மலையக நாட்டார் பாடல்கள் முழுவதும் முறைப்படி தேடி, வகைப்படுத்தித் தொகுக்கப்படின் பெரும்பயன் ஏற்படும். பொதுவாக நாட்டார் பாடல்களைத்தொழில் முறைப்பாடல்கள், பொதுப்பாடல்கள், காதற்பாடல்கள், வாழ்த்துப்பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், விளையாட்டுப் பாடலகள் , ஒப்பாரி பாடல்கள் , தாலாட்டுப்பாடல்கள்,நாடகப் பாடல்கள் என வகைப்படுத்துவர். மேற்கொண்ட ஒவ்வொரு வகையிலும் பல உப பிரிவுகள் உள்ளன." என்கிறார்.

(இ. பாலசுந்தரம், 1974) தமது ஈழத்து தமிழ் நாட்டார் இலக்கியம் என்ற கட்டுரையில் "நாட்டார் இலக்கிய பரப்பினை பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் என நான்காகப் பகுக்கலாம்" என்கிறார்.

(மாத்தளை வடிவேலன், 1997)இதுபற்றி குறிப்பிடுகையில் "சொந்த நாட்டில் நிலவிய வறுமை பஞ்சக்கொடுமை, அடக்குமுறை, சமுதாயக் கொடுமை என்பவற்றினாலும் நாட்டைவிட்டு வெளியேறுதல் இலகுவான நடைமுறையாக அமைந்தமையாலும் தொடர்ந்தும் இலங்கையை நோக்கி வந்து குமுறிக்கொண்டே இருந்தனர். தமிழ் நாட்டில் வீசிய புயலைப் பற்றியும் அதற்கு பின்னர் ஏற்பட்ட பஞ்சத்தை பற்றியும் பாடப்பட்ட "புயல்காத்துப்பாட்டும் பஞ்ச கும்மியும்" என்ற நூலில் "பரிதாபி வருஷப் பஞ்சக்கும்மி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலில் எழுபத்தி யொன்றாம் பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

கெண்டிச் சீமைக்கப் போய் மண்டலத்தில் சனம் அண்டிப்
பிழைக்காது அவதிப்பட்டு கெடும்பாடு பட்டலைந்து
கொடுங்கால கொடுமையெல்லாம்
நெடுங்காலம் வந்ததென்று வினவினாரே"

வாய்மொழி பாடல்களில் பெரியதுரை, சின்னதுரை, கங்காணி, கணக்கப்பிள்ளை, கண்டாக்க என்ற தாங்கள் தொழில் செய்யுமிடத்திலுள்ள எஜமான்கள்களை பற்றியதாகவும் பாடல்கள் இருந்தன.

"அந்தனா தோட்டமினு
ஆசையா தானிருந்தேன்
ஒரே முட்டை தூக்கச் சொல்லி
ஓதைக்கிறாரே கண்டாக்கையா'

இது உரத்தைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்தானை தோட்டம் என்பது ஹந்தானை தோட்டத்தை குறிக்கிறது. இதனை கண்டி 'நோனாமலை' என்றும் சிலர் அழைக்கின்றனர். ஒரு ஆங்கிலேய பெண்மணிக்கு சொந்தமானத் தோட்டமாக இது இருந்துள்ளது.

"கல்லாறு தோட்டத்திலே
கண்டாக்கையா பொல்லாதவன்
மொட்டை புடுங்குதின்ன
மூணாள விரட்டிவிட்டான்"

இந்தக் கல்லாறு என்பதற்கு பலர் பல இடங்களை குறிப்பிட்டுள்ளனர். ஹேவாஹெட்ட தொகுதியில் தலாத்து ஓயாவிற்கு அண்மையிலும் ஒரு கல்லாறு தோட்டம் இருந்துள்ளது. நல்ல நிலவுக்காலங்களிலும் திருவிழாக் காலங்களிலும் பெண்கள் கூடி கும்மியடித்து களிநடனம் புரிவதுண்டு. இவர்கள் கையொலியை இயற்கையான தாளமாக்கி பாடுவதுண்டு. இதில் கண்டியோடு சம்மந்தப்பட்ட பாடல்களாக இல்லாது பொதுப்பாடல்களாகவே உள்ளது. இது பற்றி வேறாக ஆராயலாம்.

கண்டாக்கையா போலவே தொரை பற்றி கண்டி பாடல் ஒன்றும் உள்ளது.

"கொழுந்து வளர்ந்திருச்சி
கூடே போட நாளாச்சி
சேந்து நேரே புடிச்சுசிட்டா பறக்குறாளே
கண்டி தொரை தோட்டத்திலே
கருத்தக்குட்டி முழியிரட்டி
கிட்ட கிட்ட நேரே புடிச்சி
சிட்டா பறக்குறாளே"
மற்றொரு பாடலில்
"மானிருக்கும் புதுத்தோட்டம்
மயிலிருக்கும் அம்பாகோட்டே
தேனிருக்கும் ரசவளையாம்
தேடிப் போவோர் கோடிப்பேரு"

என்று இங்கு திகன அம்பா கோட்டையும் ரஜவெலயையும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு பாடலில்

"கண்டி ஒரு காதம்
கதிர் கொழும்பு முக்காதம்
முக்காதம் போனவரு எக்காலம்
திரும்பு வாரோ".... என குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்டியில் 1993ஆம் ஆண்டு சந்தியோதய மண்டபத்தில் மலையக கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மலையக நாட்டாரியல் கருத்தரங்கு பயன்மிக்க ஒன்றாக அமைந்ததோடு பல உண்மைகளையும் வெளிக் கொண்டுவந்த கருத்தரங்காகவும் இருந்ததாக அறியமுடிகிறது. இது போலவே கும்மி, ஒப்பாரி, தாலாட்டுப் பாடல்கள் கண்டியை குறிப்பிடப்படாது விட்டாலும் இன்று வரை கண்டி மலையக மக்களின் அன்றாட வாழ்க்கையில் பாடப்படும் பாடல்களாகக் காணப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்

1. முருகானந்தம். ச. (1991)நாட்டுப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள், உலக தமிழாராச்சி நிறுவனம்.
2. வேலுப்பிள்ளை சி.வி. (1983) ‘‘மலைநாட்டு மக்கள் பாடல்கள்’ கலைஞர் பதிப்பகம், சென்னை,
3. சாரல் நாடன், (1998) மலையக வாய்மொழி இலக்கியம் தேசிய கலை இலக்கிய பேரவை இணைந்து சவுத்ஏசியன் புக்ஸ்
4. கைலாசபதி. கவேலுப்பிள்ளை சி.வி. (1983) மலைநாட்டு மககள் பாடல்கள் (முன்னுரை) கலைஞன் பதிப்பகம்
5. சாரல்நாடன், (1997) மலையகம் வளர்த்த தமிழ், துரைவி வெளியீடு
6. அருணாசலம். க. (1994) மலையகத்ததமிழ் இலக்கியம், தமிழ்மன்றம்
7. இ.பாலசுந்தரம் (1974) ஈழத்து தமிழ் நாட்டார் இலக்கியம் நான்காவது தமிழாராட்ச்சி மாநாடு நினைவுமலர் அனைத்துலக தமிழாராட்ச்சி மன்றம்,
8. வடிவேலன். பெ. (1997)மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும், கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு,
9. வடிவேலன் மாத்தளை(1993) ‘‘மலையக ஆற்றுகைக் கலைகள்’ தொகு. பேராசிரியர். கா.சிவத்தம்பி, இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும், உதயம் நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் கண்டிப் பிராந்தியத்தின் வகிபாகம்: - ஓர் உசாத்துணை அளவீடு

இலங்கையின் பூகோளவியல் அடிப்படையில் மத்திய மலைநாட்டு நிலப்பரப்பினை, உள்ளடக்கிய பகுதி மத்திய மாகாணம் எனப்படும்.மத்திய மாகாணத்தின் தலைநகரம் கண்டி ஆகும்.இது இலங்கையின் அதி நீளமான நதியான மகாவலி நதி, பசுமையான பள்ளத்தாக்குகள், கணவாய்கள் எனப் பல்வேறு தரைத்தோற்ற அமைப்புகளைக் கொண்டது.போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்திலும், கண்டி இராச்சியத்தினைக் கைப்பற்ற முடியாமல் போனமைக்குக் காரணம் இவ்வாறான இயற்கைத் தரைத்தோற்ற அமைப்புகளே.தென்னிந்தியாவிலிருந்து வந்த மன்னர் பரம்பரையே இறுதியாகக் கண்டியை ஆட்சி செய்ததுடன் ஆட்சிமொழி தமிழாகவும் இருந்துள்ளது. இங்கு கம்பளை, உடுநுவர, யட்டிநுவர, அக்குறணை, கலகெதர, மடவளை, உடுதெனிய, உடதலவின்ன, போன்ற பகுதிகளில் முஸ்லீம்கள் செறிந்து வாழும் குடியிருப்புகள் அமைந்துள்ளன். கி.பி. 8ம் நூற்றாண்டில் அரேபிய முஸ்லீம்கள் வர்த்தக நோக்கத்துடன் வருகை தந்த போதும்; மலைநாட்டில் ஆதாம் மலையினைத் தரிசிக்கவும், யாத்திரை செய்யும் வழமையும் இங்கு இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வந்தவர்கள் பலர் இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறினார்கள். இந்தியாவின் தென்கரையோர முஸ்லீம்களும் வர்த்தக நோக்கத்துடன் இங்கு வருகை தந்தனர்.அவர்களில் சிலரும்; இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறினார்கள். மன்னர் காலத்தில் இவர்களுள் சிலர் மன்னருக்கு விசுவாசம் மிக்கவர்களாக 'இராஜகாரியங்கள்' செய்வதிலும் ஈடுபடுத்தப்பட்டனர். இறைநேசர்களான அப்துல் காதிர் ஜிலானி(ரஹ்), நாகூர் சாஹுல் ஹமீத் வலியுல்லாஹ், கண்டி செய்கு சிஹாப்தீன் வலியுல்லாஹ், ஆகியோர் ஆதம் பாவா மலையினைத் தரிசிக்க வந்த குறிப்புகள் வரலாற்று நூல்களில் காணப்படுகின்றன. இங்கு யாத்திரை வந்த மார்க்கத் தலைவர்கள் பலர் இலங்கையிலே திருமணம் செய்து குடும்பங்களாகி இங்கேயே வியாபாரங்களை விஸ்தரித்துக் கொண்டனர்.

இலங்கைக்கு யாத்திரை செய்த இப்னு பதூதாவின் (1345); குறிப்புகளில், அவர் புத்தளத்திலிறங்கி குருநாகல் வழியாக வந்தபோது முஸ்லீம்களைச் சந்தித்ததாகக் கூறப்படுகின்றது. ஆதாம் மலையைத் தரிசிக்க வந்த கூபா வலியுல்லாஹ் கம்பளையில் ஓரிடத்திலிருந்தவாறு மலையைத் தரிசித்த போது அக்காணி உரிமையாளரினால் மூக்கு அறுக்கப்பட்டு இரத்தம் வழிந்தபோதும் மீண்டும் தானாக உருவாகிய மூக்குடன் தியானத்தில் ஈடுபட்ட அற்புதம் கேட்ட மன்னர் 4ம் புவனேகபாகு தியானம் செய்த இடத்தில் அவரைப் பார்க்க வந்த போது கூபா வலியுல்லாஹ்வைக் கண்டதும் மன்னரின் யானை மண்டியிட்டு வணங்கியது. இந்தக் காரணத்தினால் அந்த நிலத்தினையே மன்னர் கூபாவுக்குத் தானம் செய்தார். பின் அவ்விடத்திலேயே கூபா மரணமானதின் பின்னர் ஸியாரம் அமைக்கப்பட்டது. இது இன்றும் சகல இனமக்களாலும் கஹட்டப்பிட்டிய தர்கா எனப் போற்றப்பட்டு வருகின்றது. கண்டி மன்னருடைய படையணியிலும் பல்லாயிரக்கணக்கான முஸ்லீம்கள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட்டம் நடத்தியுள்ளனர். முஸ்லீம் வைத்தியர்கள் இங்கு கண்டி மன்னன் காலந்தொட்டு சிறந்த வைத்திய சேவையாற்றினர். அவர்களின் சேவையினைப் பாராட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்களால் காணிநிலம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவ்வாறு வழங்கப்பட்ட நிலபுலங்கள் 'மடிகே' என்ற பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றன. இவ்வாறு பல 'மடிகே'க்கள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளன. உதாரணமாக, உடதலவின்ன மடிகே, கலகெதர மடிகே, உடுதெனிய மடிகே, போன்றவற்றைக் கூறலாம்.அவை குறிப்பிட்ட பெயர்களைக் கொண்டே இன்றும் மக்களால் அழைக்கப்படுகின்றன.

அரபுத்தமிழ் எங்கள் அன்புத்தமிழ் என்ற பொதுப்படையான கருத்தோட்டத்தினூடாகத் தமிழ் இலக்கியத்தை வளர்க்க முற்பட்ட கண்டி இஸ்லாமியத் தமிழர்கள் தமது சமயம் சம்பந்தமான நூல்களைப் படைத்ததுடன் சமய அறவழியினூடாக தமிழ் இலக்கியத்தினையும் வளர்க்க முனைந்தனர். மத்திய மலைநாட்டில் பதினாறாம் நூற்றாண்டு முதல் குடியேறிய முஸ்லீம்கள் தமிழ் மொழி மூலமாகவே அனைத்துக் கருமங்களினையும் ஆற்றினர். தென்னிந்தியப் பண்பாட்டின் அடிச்சுவடாக 'இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்' என்ற நெறியின் கீழ் சமயப் பண்பாட்டினைக் கருவாகக்கொண்டு தமிழில் இலக்கியம் படைத்துள்ளனர். இலங்கை இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கண்டி மாவட்ட மக்கள் ஆற்றிய பங்கினை எடுத்துரைத்தலும், அவற்றினை ஆவணப்படுத்துவதுமே இவ்வாய்வினது நோக்கமாகும்.

வரலாற்று நூல்களை முதன்மை ஆதாரமாகவும், மற்றும் சுவடி ஆற்றுப்படை, நூல்த்தேட்டம், தேசிய நூற்பட்டியல், ஆகிவற்றுடன் இவை தொடர்பாக வெளிவந்த பல ஆய்வு நூல்களை இரண்டாம் நிலை ஆதாரமாகவும் கொண்டுள்ளது.இலங்கை மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்ட எல்லைகளை மட்டுமே கொண்டு ஆராயப்படுகிறது (துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைக்கட்டுரைகள், சஞ்சிகைகளின் கட்டுரைகள், பாடசாலை நூல்கள் அரசாங்கப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட நூல்கள், வினாவிடைகள், வர்த்தமானிகள், திணைக்கள அறிக்கைகள், இலக்கியமற்ற மார்க்க நூல்கள் ஆய்விலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன.)

இதன் அடிப்படையில் கசாவத்தை ஆலிம் அப்பா, அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர், எம்.ஸி.சித்திலெப்பை ஆகியோர் ஆரம்பத்தில் சமகாலத்தில் இலக்கியப் பணியாற்றியவர்கள். கண்டி மாவட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் கசாவத்தை ஆலிம் எழுதிய 'தீன்மாலை'(1878) உடன் ஆரம்பமாகின்றது.இவரே எகிப்து நாட்டுக் காவியமான 'பத்ஹுல் மிசிர் பஹனசர்' என்ற நூலை அதே பெயரில் மொழிபெயர்த்து (1906) தமிழில் வெளியிட்டார். மேலும் அப்துல் காதர் ஜீலானி அவர்கள் பெயரில் 'வித்தியா' என்ற புகழ்பாடல் நூலையும் இயற்றியுள்ளார்,

தெல்தோட்ட போப்பிட்டியவைச் சேர்ந்த பாவலர் அருள்வாக்கி அப்துல் காதிர்(1866 1918) பல்வேறு இலக்கிய வடிவங்களை இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்குத் தந்துள்ளார். கண்டிப் பூங்காவைப் பார்க்கச் சென்ற சிறுவன் மயங்கி விழுந்து எழுந்த பின், தானாகவே கவி பாடியதால் இவரை 'அருள்வாக்கி' என அழைக்கலாயினர். இவர் பாடியவை திருப்புகழ், கலம்பகம், பிள்ளைத்தமிழ், பதிகம், மாலை, புஞ்சம், திரட்டு, கவிதை, வசனநூல்கள் எனப் பலவகைப்படும். இவைதவிர முனாஜாத்து, எண்கலைவண்ணம், வன்மெல்லிசை வண்ணம், பதிற்றுப்பத்தந்தாதி அருள்மணி மாலை, அடைக்கலமாலை ஆகியன அடங்கிய பிரபந்த குஞ்சகம்' என்ற நூல்; (1901) இல் வெளிவந்துள்ளது. இவருக்கு அட்டாவதானி, 'வித்துவதீபம்' என பல கௌரவ நாமங்கள் உண்டு. புலவர் அருள்வாக்கி அப்துல் காதீர் 'பேரின்ப இரஞ்சிதமாலை' (1881), 'காரண பிள்ளைத்தமிழ்'(1895) 'பிரபந்தகுஞ்சகம்'(1901), கண்டிக் கலம்பகம்'(1903), தைக்கா சாகிப்ஒலியுல்லா(1908), சந்ததித்திருப்புகழ்' (1909), போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை நூல்களை வெளியிட்டார். எனவே ஈழத்து மலையகக் கவிதை முன்னோடி (18811918) அப்துல் காதிர் புலவர் என விதந்து கூறப்படுகின்றார்.

இலங்கையின் முதல் தமிழ் நாவலாசிரியராக விளங்கும் கண்டியைச்சேர்ந்த அறிஞர் எம்.ஸி.சித்திலெப்பை வெளியிட்ட 'அசன்பேயுடைய சரித்திரம்' (1885) கண்டியிலேயே வெளியிடப்பட்டது.இவரே 'முஸ்லீம் நேசன்' (18821887) என்னும் வாரப்பத்திரிகையையும் வெளியிட்டார்.முஸ்லீம் நேசன் அச்சகம் என்ற நிறுவனத்தினையும் நிறுவி பலரது நூல்களை வெளியிடவும் முன்னோடியாக விளங்கினார். 'தமிழ் முதலாம் புத்தகம்' (1892), 'அஸ்றாறுல் ஆலம்' (1897), 'துருக்கிகிரேக்க யுத்தம்'(1898), 'அபூநவாவாஸின் கதை' ஆகிய நூல்களையும், 'ஹிதாயத்துள் காசிமிய்யா பிஷஷிலில் சிஸாத்தில் அறபியா'(1891), என்ற அரபுநூலையும், மற்றும் பல அரபு நூல்களையும் வெளியிட்டார்.

எம்.என்.பாவா என்பவர், 'கடைசிக் கண்டித் தமிழ்மன்னன் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவம்'(1910) எனும் நூலையும், முஹிதீன் மீரா சாஹிப் என்பவர் 'பத்திரசரத்தினக் களஞ்சியம்'(1929), என்ற நூலினையும், முஹம்மது முஹிதீன் என்பவர் 'புகழ்ப்பா'(1930), என்ற நூலையும் வெளியிட்டுள்ளனர். கம்பளையிலிருந்து எம்.ஏ.றஊப் 'சத்தியார்த்தம்'(1932) என்ற நூலினையும், எம்.எஸ் பீர்முகம்மது 'கீர்த்தனாமிர்தம்'(1939) கம்பளை காதர் மஸ்தான் 'தமிழ் அமுது' (1955) என்ற நூலினையும் எழுதியுள்ளார்கள்.நாவலப்பிட்டி அப்துல் ரகுமான் 'ஞான ஆகிதாக் கும்மி' என்ற நூலினையும், நாவலப்பிட்டி எம்.எம் பாரிஸ், 'வெற்றிமணி' (1955) என்ற நூலினையும், கே.பீர் முகம்மது 'அஷ்டாங்கயோகம்' (1955) 'ஏகாந்ததீபம்'(1955), என்ற நூல்களையும் எச்.எச்.எஸ்.ஜுமாத் 'தப்லீல் இலாம்' (1957) என்ற நூலையும், ஆர், ஏ.ஏ ஹலீம் 'ஹயாத்து நபி ஆண்டவர்கள் அற்புதம்' (1957), ஹர்மீத் லெவ்வை 'கரீமா திறவுகோல்' (1957), எச்.எல்.றாஸிக் 'இஸ்லாமிய இன்னிசை' (1957) என்ற நூலையும் நாவலப்பிட்டி எம்.ஏ.அப்பாஸ், 'கள்ளத்தோணி' என்ற நாடக நூலினையும் வெளியிட்டுள்ளார்கள்.

கல்ஹின்ன கவிமணி எம்.ஸி.எம்.ஸுபைர், 'மலர்ந்த வாழ்வு', 'சீறாப்புராணம் பதுறுப் படலம் உரை' (1961), 'மலரும் மனம்'(1967), 'கண்ணான மச்சி'(1969), 'காலத்தின் குரல்கள்'(1981), 'எங்கள் தாய்நாடு' (1984) 'இலக்கியமலர்கள்'(1989), என்பன இவரால் எழுதப்பட்ட நூல்களாகும். இவர் மணிக்குரல் பதிப்பகம் என்ற நிறுவனத்தினையும் நிறுவி, பல நூல்களை வெளியிட்டுள்ளார். 'சீறாப்புராணம் பதுறுப்படலம் உரை'(1961) மணிக்குரல் பதிப்பகத்தினாலேயே வெளியிடப்பட்டுள்ளது. பேராசிரியரான எம்.எம்.உவைஸின் 'இஸ்லாமியத் தென்றல்' மற்றும் கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் 'இக்பால் இதயம்' (1961), அப்துல் காதரின் 'செய்னம்பு நாச்சியார் மான்மியம்' போன்ற நூல்களும் இங்கேயே வெளியிடப்பட்டுள்ளன.

கல்ஹின்ன நாவலாசிரியரான, 'மாமா' எனும் தாஜுல் அதீப் என்.எம்.ஹனிபா ஒரு சிறந்த எழுத்தாளர், 'பகற் கொள்ளை'(1960), 'மர்மக்கடிதம்'(1963), ஏமாற்றம்'(1963), 'இலச்சியப் பெண்'(1974), போன்ற நாவல்களையும், 'மாணிக்கச்சுடர்கள்'(1993), 'குட்டிக்கதைகள் என்ற நூல்களையும் படைத்துள்ளார்.

கம்பளை ஏ.எச்.ஐ.டீன் 'இசையமுதம்'(1964) என்னும் நூலினையும், கம்பளை ஏ.எல்.எம்.ஹஷீம் 'இனிய மொழிகள்' என்ற நூலினையும் வெளியிட்டுள்ளனர். கம்பளை சி.மு.நல்லதம்பி என்ற எல்.கே.சாகிபு, 'இசைத்தேன்' என்ற இசைப்பாடல் நூலையும் இயற்றியுள்ளார். கம்பளையில் ஆசிரியராகக் கடமையாற்றிய பதுளையைச் சேர்ந்த நயிமா ஸித்திக்(பின்னர் நயிமா பஸீர்) 'வாழ்க்கைப்பயணம்" (1974) என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலினையும், 'வாழ்க்கைச்சுவடுகள்'' (1987); என்ற சிறுகதைத் தொகுதியையும்; எழுதியுள்ளார்.கம்பளைக் கவிஞர் அப்துல் ரகுமான், அக்குறணை, பாலையொளி சகாப்தீன் ஆகியோர் சிறந்த பல்கலைப் படைப்பாளிகள் ஆவார்கள்.எம்.எச்.எம். ஜவ்பர் 'அருட்கொடை'(1965), என்னும் உரைநடை நூலையும், 'இஸ்லாமிய வரலாற்றில் பொன்னேடுகள், 'மரணத்தின் மடியில் மகான்கள் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். அக்குரணை அதிபர், கவிஞர் டி.எம்.ஷாஹுல் ஹமீதுத் 'கீத போதனா இரஞ்சிதம்'(1972), என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.

கல்ஹின்ன எம்.எச்.எம்.ஹலீம்தீன், 'தியாகச்சுடர்' (1969), என்ற கவிதை நூலையும், 'காலத்தின் கோலங்கள்' (1984), 'இதயமலர்கள்'(1985), மற்றும் 'பாலர்பாட்டு' போன்ற நூல்களையும்;, மகாகவி இக்பால் (1987), 'மலையகத் தொழிலதிபர்'(1994) என்ற நூலையும் எழுதியுள்ளார். பல ஆங்கிலமொழி நூல்களை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கல்ஹின்ன எஸ்.எம்.ஹனிபா, ஒரு சட்டத்தரணி, கொழும்பு ஸஹிராக் கல்லூரியில் படிக்கும்போது, அவர் 'சமுதாயம்'(1948), என்ற காலாண்டு சஞ்சிகையினை வெளியிட்டுள்ளார். மேலும் இவர் 'உலகம் புகழும் உத்தமதூதர்'(1976), 'உத்தமர் உவைஸ்'(1981), 'இலக்கியவளர்ச்சி'(1982), 'மகாகவி பாரதி'(1983), 'மலையகப் பெருமகன்' (1989), 'இஸ்லாமிய இலக்கிய மறுமலர்ச்சி' (1991), 'வைரமலர்கள்' (1991), 'கல்ஹின்ன நினைவுகள்' (1991), 'எங்கள் ஊர் கல்ஹின்ன' (1991), 'குறிஞ்சி மலர்கள்' (1996), 'நெஞ்சின் நெருப்பு' (1997) போன்ற சிறுகதைகளை, 'பணப்பசி' (1998) என்ற ஆங்கிலக் குறுநாவலின் மொழிபெயர்ப்பினையும் 'மலைஒளி' (2001), 'கவிஞர் சுபைர் நினைவுமலர்' (2000), 'இஸ்லாமிய இலக்கியச் சாதனைகள்' (2002) 'சோனியா சரிதை' (2005), ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.இவரே கல்ஹின்ன தமிழ்மன்ற ஸ்தாபகரும் ஆவார். தமிழ்மன்றம் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கெலிஓயா ஏ.எல், எம், ஹாமீம் 'இனியமொழிகள்' (1964), நாவலப்பிட்டி எம், பி, மொஹிதீன் 'தங்கையே திருந்திவிட்டேன்'(1965) என்ற நூல்களை எழுதியுள்ளனர்.

கண்டியைச் சேர்ந்த மார்க்க அறிஞரான எச்.சலாஹுதீன், 'ஈழத்தின் தப்லீக்' (1964), 'நான் கண்ட மக்கா'(1964)'மகளே கேள்'(1968), 'வெள்ளிக்கிழமை'(1969), சிறுநூல் தொகுப்பு பாகம் 1, பாகம் 2, (2001), பாகம் 3 பாகம் 4 (2002) மற்றும் தொகுப்புகளின் தொகுப்பு (2002) போன்ற நூல்களையும் பல மார்க்கப் பிரசுரங்களையும் எழுதி வெளி யிட்டுள்ளார்.

உடத்தலவின்ன டாக்டர் ஏ.எம்.கனி, 'இஸ்லாமிய மதபாடம்'(1960), 'மக்களின் சுவர்க்கம் மாதாவின் பாதத்தடியில்'(1967) என்ற நூல்களையும் எழுதியுள்ளார். உடதலவின்ன மீராமொஹிதீன் 'இஸ்லாமியக் கதைகள்' என்ற நூலினை எழுதியுள்ளார்.; ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் எம்.வ.ஏம்.முஸ்லீம் 'இறவாச்செல்வம்'(1978) என்ற கவிதை நூலினைப் படைத்துள்ளார். யு.எல்.எம் ஹுவைலித் 'தத்துவச்சாறு' (1968) எனும் கவிதை நூலையும், 'என் இல்லாள்' (1970), கவியரங்கில் மறையும் நிழல்' (1983)) என்ற நூலினையும் ஜீவியப் பயணம்' (1987) எனும் உளநூலையும், முஹம்மட் இஸ்மாஈல் மார்க்க தொடர்புடைய பதினேழு (17) நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

பேராதனை எஸ்.எம்.ஏ.ஹஸன் 'அருள்வாக்கி'(1973), 'கம்பன் கவியமுதம்' (1974), 'நெஞ்சத் தாமரையின் இன்ப நினைவுகள்'(1975), கலாநிதி பதியுத்தீன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1975),'அமெரிக்க கறுப்பின முஸ்லீம்' (1978), 'யசஹாமி'(1979), 'விஞ்ஞானம் வளர்த்த மெய்ஞானத் திருமறை'(1983), 'அல்குர் ஆன்ஓர் அறிவியல் கண்ணோட்டம்' (1995), 'வைத்திய திலகம் அப்துல் அஸிஸ்'(1997), ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இதில் 'நெஞ்சத் தாமரையின் இன்பநினைவுகள்' (1975) ஒரு பயண இலக்கியமாகும். 'யசஹாமி' வேடர் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் நாவலாகும். இவர் அல்லாமா இக்பாலின் 'இதயப்புதையல் (1999); அஸ்ஹாரேஇகுஹ்தி' (1999) என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இவரது மனைவி முகைதீன் பாவா சித்தி ஸர்தாபீ (பேராதனை ஷர்புன்னிஸா), பல கட்டுரைகளையும், சிறுகதைகளையும், 'கிராமிய மணம்' (1996) என்னும் கிராமிய கதைகளையும் எழுதியுள்ளார்.

உடத்தலவின்னவைச் சேர்ந்த பி.எம்.புண்ணியாமீன் 'தேவைகள் மினிக்கதைகள் (1979) என்ற நூலினை முதலாவது படைப்பாகவும் 'நிழலின் அருமை'(1986) என்ற சிறுகதை நூலையும், 'அடிவானத்து ஒளிர்வுகள்' (1987) என்ற நாவலையும், 'இலக்கிய உலா' (1987), 'இலக்கிய விருந்து (1987), 'கிராமத்தில் ஒரு தீபம்' (1988) என்ற கதீப் அப்துல் ஹமீத்தின் வாழ்க்கை வரலாறு, 'கரு' (1989) (மூன்றாவது சிறுகதைத்தொகுப்பு),' அந்த நிலை' என்ற மூன்று நெடுங்கதைகள் கொண்ட நூலையும், 'நெருடல்கள்(1990), 'யாரே எவரே எம்மை ஆள'(1996) 'ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதல்' (2001) 'இனி இதற்குப்பிறகு' (2003) (சிறுகதைத்தொகுதி) மற்றும் 'எம் வை அப்துல் ஹமீத் வரலாற்றுக் குறிப்புகள்' (2004), 'நெடுங்கதைகளும் உருவங்களும்' என்ற நூல்ளையும், உடதலவின்ன சிந்தனை வட்டத்தின் மூலம் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க 'புதிய மொட்டுகள்', அரும்புகள்', 'பாலங்கள்'(1996), 'சுவடுகள்' போன்ற கவிதை நூல்களையும் தொகுத்தளித்துள்ளார். இவரது 'சிந்தனை வட்டம்' மூலம் பல நூல்களை வெளியிட்டு வருகிறார்.கலைமகள் ஹிதாயா றிஸ்வி, மஸிதா புண்ணியாமீன் இணைந்து 'இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தைகள்' (2000) என்ற கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளனர்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த மலாய் மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட ப.ஆப்டீன் 'இரவின் இராகங்கள்' (1987) என்ற மல்லிகைப்பந்தல் வெளியீடான ஒரு சிறுகதைத் தொகுதியையும், கருக்கொண்ட மேகங்கள்' (1999) என்ற நாவலையும், 'நான் பயணித்த புகைவண்டி' (2003) எனும் சிறுகதைத் தொகுதியையும், தந்துள்ளார்.

பேராதனை ஜெக்கியா ஜுனைதீன் 'ஷார்மிலாவின் இதயராகம்' (1989) என்ற தொடர்நாவலை சிந்தாமணி வார இதழ் பத்திரிகையில் எழுதினார். இது, நாவலாக வெளியிடப்பட்ட பின்னர், இலங்கையின் முதல் வண்ணத் திரைப்படமாக்கப்பட்டது. இப்படத்த்ஜீனை இயக்கிய ஏ.ஏ.ஜுனைதீன் 'எனது வானொலி நாடகங்கள்' (1999) 'தீர்வும் தீர்ப்பும் மேடைநாடகங்கள்' என்ற நூலினையும், முஹமட் கலீல் 'துயரக்கொழுந்துகள்' (1992) என்ற நூலினையும் வெளியிட்டுள்ளார்கள்.

மடவளை கலீல் 'கைதிப்புறாக்கள்' (1993) என்ற சிறுகதை நூலினையும், 'இதயக் கதவுகள்' என்ற கவிதை நூலினையும் எழுதியுள்ளார். மடவளை அன்சார் எம்.ஸியாம் 'என் தேசம்(2000), 'மருதாணி இன்றி சிவந்த மண்' போன்ற கவிதை நூல்களினை எழுதியுள்ளார். ஜுனைதா ஷெரீப் சிதைவுகள் என்ற நூலை எழுதியுள்ளார்.

லறினா ஏ.ஹக் என்பவர் எருமைமாடும் துளசிச்செடியும்'(2003) என்ற சிறுகதைத் தொகுதியையும், 'வீசுக புயலே' (2003) என்ற கவிதைத் தொகுதியையும் 'ஓர் தீப்பிளம்பும் சில அரும்புகளும்'(2004) என்ற நாவலையும், 'செ.கணேசலிங்கனின் நாவல்களில் பெண்பாத்திரங்களிள் ஒரு பெண்ணிலை நோக்கு'(2005) என்ற தனது பேராதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கான ஆய்வினை நூலாகவும், மௌனத்தின் ஓசைகள்' (2008) என்ற மொழிபெயர்ப்பு கவிதைத் தொகுதியையும் படைத்துள்ளார். எஸ்.எச்.எம். இஸ்மாயில் 'பொறாமை: அதன் தீயவிளைவுகள்' (1996) எனும் நூலினையும், ஹாசிம் 'நீங்களும் இப்படியா' (2007) எனும் நூலினையும் உருவாக்கினார்கள்.

கலகெதர வி.நூருர் முஹம்மத் 'பல்வண்ணக்கீர்த்தனம்'' மற்றும் திருமணிமாலை ஆகிய நூல்களை எழுதியுள்ளார். உடுதெனிய கவிஞர் என்.நஜ்முல்ஹுஸைன்; 'பனித்தீ' எனும் புதுக்கவிதை நூலினை வெளியிட்டுள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் பணிபுரியும் இவரது மனைவி நூறுல் அயின் சிறந்த இலக்கிய வாதியாவார். இவர் 'பண்பாடும் பெண்கள்' (1997)அவரது சகோதரரான ரஷீத் எம் பியாஸ் 'புனித றம்ழான் ஒரு விளக்கம்' எனும் நூலினையும் எழுதியுள்ளார். அவரது மற்றொரு சகோதரரான ரஷீத் எம் ரியாஸ் ஒரு சிறந்த இலக்கியவாதியும் பத்திரிகையாளருமாவார்.

ஊடகத்துறையில் பத்திரிகையாளர்களான எம்.இஸட்.எம்.றாஸிக், ஜிப்ரி ஆப்டீன், எம்.எச்.எம்.மன்சூர், ஸ்டார் ராசிக், ஐ.ஏ.றஸாக், எம் உவைஸ், ஜே.எம் ஹாபீஸ், எச்.ஏ.ஸக்கூர் மற்றும் எம்.குவால்டீன் போன்றவர்கள் ஊடகங்கள் மூலம் இஸ்லாமியத் தமிழுக்கு அருஞ் சேவையாற்றியுள்ளனர்.

இவர்களுள் ஐ.ஏ.றஸாக் என்வர் சித்திலெப்பை ஆரம்பித்த 'முஸ்லீம் நேசன்' பத்திரிகையை ஆசிரியராக இருந்து 1996ம் ஆண்டில் மீள்பிரசுரம் செய்தார்.இவரே இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம் 1970ல் கண்டியில் ஆரம்பித்தபோது அதன் ஆரம்பச் செயலாளராக இருந்து சேவையாற்றினார்.

கண்டி மாவட்டத்திலிருந்து வெளியான இஸ்லாமியத் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ் சிகைகள் என நோக்கின், முஸ்லீம் நேசன் (1882) எம்.சி.சித்திலெப்பை, ''ஞானதீபம்'' (1892) சித்தி லெப்பை, மரைக்கார் (அரபுத்தமிழ்), ''சமுதாயம்'' (1948) கல்ஹின்னை ஹனிபா, உண்மை உதயம் (1984) கல்ஹின்னை ஹனிபா, ஊசி (1984) ஏ.எஸ் எம்.ஹாசிம், ''தியாக தென்றல்'' (1991) ரஷீத் றியாழ், ''நிதாவுல் இஸ்லாம்''; (1984) நாவலப்பிட்டி மௌலவி புர்ஹானுதீன் ''பிறை கவசம'' (1988) அமானுல்லாஹ், போர்முரசு (1986) 'ஹாசிம்,''மணிக்குரல் (1961) கவிஞர் ஸுபைர், மாணவ முரசு (1967) ஹனிபா, நாவலப்பிட்டியிலிருந்து ''இளையோரின்'' (1960), பி.ஏம்.கலிலூர் ரஹ்மான், முஸ்லீம் இலட்சிய மாத இதழ் யுனிவர் சிட்டி மஜ்லிஸ் (1971) பல்கலைக்கழக ஆண்டு மலர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

கண்டியைச் சேர்ந்த ஏ.எஸ்.எம், ஹாஷிம என்பவர் 'ஊசி' என்ற பத்திரிகையை வெளியிட்டதால்.இவரை ஊசி ஹாஷிம் என்றே அழைப்பார்கள். சமூகத்தினைப் பாதிக்கும் செயல்களைக் குத்திக்காட்டுவதாலேயே'ஊசி' என்று பெயரிட்டார்.

கல்ஹின்ன எம்.ஸீ.எம் அமீர், 'புதுமணம்' என்ற பத்திரிகையை வெளியிட்டுள்ளார்.

கல்ஹின்ன கவிமணி எம்.ஸி.எம்.ஸுபைர் 'மணிக்குரல்' என்ற சஞ்சிகை யினை(19611964) மாதாந்தச் சஞ்சிகையாக வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றான பேராதனைப் பல்கலைக்கழகம் கண்டியில் அமைந்துள்ளது. இதன் தமிழ்த்துறை மூலமும், அரபு இஸ்லாமிய நாகரிகத்துறை மூலமும், மெய்யியல் துறை மூலமும் பேராதனைப் பல்கலைக்கழகம் இஸ்லாமியத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பல அளப்பருஞ் சேவை ஆற்றியுள்ளது. தமிழ்த்துறைத் தலைவராகக் கடமையாற்றிய பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.வித்தியானந்தன், பிறையன்பன் என்ற புனைபெயரில் ‘கலையும் பண்பும்’(1961) என்ற நூலினை எழுதியுள்ளார். கல்முனையைச் சேர்ந்த பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், புத்தளத்தைச் சேர்ந்த கலாநிதி எம்.எஸ்.எம்.அனஸ், மாவனெல்ல எம்.ஐ.எம்.அமீன், பாக்கிஸ்தானைச் சேர்ந்த பேராசிரியர் ஸெய்யித் அக்தர் இமாம், மாத்தறையைப் பிறப்பிடமாகக் கொண்ட எம் ஏ.எம்.சுக்ரி ஆகியோர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே சேவையாற்றினர். பட்டப்பின் படிப்புக்காகவும் கலாநிதி பட்டத்துக்காகவும் தமிழ் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற பேராசிரியர் எம்.எம்.உவைஸ் ‘இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்’ (1957) மற்றும் ‘தமிழ் இலக்கியத்தில் இஸ்லாமிய காப்பியங்கள்’ (1975) ஆகிய ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.எம்.ஐ.எம்.அமீன், ’இலங்கை முஸ்லீம்களின் வரலாறும் கலாசாரமும்’ (1990), ஏ.எம்.எம்.ஷஹாப்தீன்’ தமிழ் இலக்கியத்தில் இஸ்லாமியத் தோற்றப்பாடு ஒரு மெய்யியல் ஆய்வு’(1985), பீ.எம்.ஜமாயிர் ‘இஸ்லாமியத் தோற்றப்பாடு ஒரு மெய்யியல் மீள்பரிசோதனை’ (2001) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துப் பட்டபின் பட்டங்களைப் பெற்றுள்ளனர். தமிழை விசேட துறையாகக் கற்கும் இஸ்லாமிய மாணவர்கள் இஸ்லாமிய இலக்கியம் தொடர்பான பல ஆய்வேடுகளை தமிழ்த்துறைக்குச் சமர்ப்பித்துள்ளனர். சில நூல் விழாவும் பெற்றுள்ளன.

உடுதெனிய முஹம்மது பரீக்தீன் ‘சுவை’ என்ற காலாண்டு சஞ்சிகையினை வெளியிட்டுள்ளார்.இங்கு முஸ்லீம் மஜ்லிஸ் மூலம் பல்வேறு இதழ்கள் காலத்துக்கு காலம் மாணவர்களதும், விரிவுரையாளர்களதும் ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளியிடப்பட்டுள்ளது. இலங்கைப்பல்கலைக்கழகம் பேராதனை, வெளியிட்ட ‘இஸ்லாமிகா ஸெய்லானிக்கா’, ‘பேராதனைப் பல்கலைக்கழகம் அல்இன்ஷிரா’ ஆகிய வருடாந்த சஞ்சிகைகள் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது போலவே கண்டியிலுள்ள பாடசாலைகளில் இஸ்லாம் மஜ்லீஸ்கள் மூலம் பல்வேறு சஞ்சிகைகள், ஆண்டுமலர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கிய வளர்ச்சியில் வரலாற்றுக் காலந்தொட்டு கண்டி நகரம் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது.கண்டி நகரமே ஈழத்து இஸ்லாமியத் தமிழ் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக உரமூட்டுவதாக புதிய இரத்தம் பாய்ச்சியுள்ளது.

உசாத்துண நூல்கள்:

‘கண்டி மாவட்ட முஸ்லீம்கள் வரலாறும் பாரம்பரியமும்;’ (ப.ஆ) அனஸ், எம்.எஸ்.எம்., கொழும்பு, முஸ்லீம் கலாச்சார, சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு (1996).

சுக்ரி எம்.ஏ.எம்.‘இலங்கையில் இஸ்லாம்’ யாழ்ப்பாணம், கலைவாணி புத்தக நிலையம் (1963)

ஜெமீல் எஸ்.எச்.எம். ‘சுவடி ஆற்றுப்படை’ கொழும்பு இஸ்லாமிய நூல் வெளியீட்டு பணியகம். (1995);

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

"சுதந்திரத்திற்கு முன்னரான மலையகத்தவர்களின் பதிப்பு முயற்சிகளை ஆவணப்படுத்தல்"

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு தொழிலுக்காக கூட்டி வரப்பட்ட இந்தியத் தமிழர்கள் மலையகத் தமிழர்கள் அல்லது இந்தியவம்சாவளித் தமிழர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் புகையிரத பாதைகளமைக்க, குளங்களமைக்க மற்றும் பெருந்தோட்ட துறைக்காகவும், கூலிகளாக கூட்டிவரப்பட்டனர். இலங்கை மலையக அச்சுப் பதிப்பு முயற்சிகளை இலங்கைத் தமிழ்மொழியிலான நூல்களின் அச்சுப்பதிப்பு வரலாற்றுடனும் உலக அச்சுப்பதிப்பு வரலாற்றுடனும் நோக்கல் வேண்டும். இலங்கையிலே புரட்டஸ்தாந்து மதப் பிரச்சாரத்தை ஆரம்பித்த ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியால் ஒல்லாந்தரின் அச்சுக்கூடம் 1713இல் கொழும்பில் அமைக்கப்பட்டது. 1816இல் இலங்கைக்கு வந்த அமெரிக்க மிஷனரிமார் அச்சுத் தொழிலிலே பெரிதும் ஈடுபாடு காட்டத் தொடங்கினர். தேசாதிபதி எட்வார்ட் பான்ஸ் அவர்களின் காலத்தில் (1820) அமெரிக்க மிஷனுக்காக "கரற்" என்பவர் இலங்கைக்கு ஓர் அச்சியந்திரத்தைக் கொண்டுவந்தார். இந்த வரலாற்றுகளுடனேயே மலையகத்தவரதும் பதிப்பு முயற்சிகள் ஆராயப்பட வேண்டும். இலங்கையில் 1802இல் பத்திரிகை என்ற வடிவத்தில் முதன் முதல் பத்திரிகையான 'The Government Gazzete' வெளிவந்தது. இந்த பத்திரிகை வரலாற்றுடனும் மலையக பத்திரிகை வருகையை ஆராய வேண்டும். மலையக அச்சுப்பதிப்புகள் இதுவரை சரிவர ஆவணப்படுத்தப்படாமை மிக முக்கிய குறைபாடாகும். இலங்கையின் முதல் தமிழ் நாவலாசிரியராக சித்திலெப்பை வெளியிட்ட 'அசன்பேயுடைய சரித்திரம்' (1885) கண்டியிலேயே வெளியிடப்பட்டது. ஈழத்து மலையகக் கவிதை முன்னோடி (18811918) அப்துல் காதிர் புலவர் என விதந்து கூறப்படுகின்றார். இலங்கையின் மலையத்தில் ஆரம்பக்கால அல்லது சுதந்திரத்திற்கு முற்பட்ட நூற்பதிப்புத் துறையில் நடேசையர் ஓர் பதிப்பாளராக, பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். தேசபக்தன், உரிமைப் போர், சுதந்திரப்போர், வீரன், சுதந்திரன், தோட்டத் தொழிலாளி மற்றும் வீரகேசரி ஆகியன மலையகத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகளாகும்.

வரலாற்றுப் பின்னனி

இந்திய வம்சாவளி தமிழர் அல்லது மலையகத் தமிழர் என்போர் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில், இலங்கைக்கு இந்தியாவிலிருந்து தொழிலுக்காக கூட்டிவரப்பட்ட தமிழர்கள் ஆவர். பாதைகளமைக்க, புகையிரத பாதைகளமைக்க, குளங்களமைக்க மற்றும் பெருந்தோட்டதுறைக்காகவும், கூலிகளாக கூட்டிவரப்பட்டனர். அவர்களின் ஏழ்மையினையும், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் நிலவிய பட்டினி, பஞ்சம், வறுமை, சாதிக்கொடுமை, அடிமை வாழ்க்கை போன்ற இன்னோரன்ன காரணங்களால், மிகவும் நொந்து போயிருந்த தமிழர்களை இலங்கையில் வளமான வாழ்க்கை காத்திருப்பதாக தரகர்மாரால் பரப்பிய பொய்களால் கவரப்பட்டு இலங்கைக்கு வருகை தந்தார்கள். இவர்களோடு வர்த்தகக் காரணங்களுக்காகவும், ஏனைய பல காரணங்களால் இந்தியாவிலிருந்து வந்த மக்கள் வம்சாவளியாக வாழ்வதால் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்றும், புவியியல் ரீதியாக மலையகத்தில் மிகச்செறிவாக வாழ்வதால் மலையகத்தமிழர்கள் எனப்படுகின்றனர். இவர்களது படைப்புகளும் பதிப்புகளுமே இவ் ஆய்வில் நோக்கப்பட்டுள்ளது. அதேவேளை தமிழ் பேசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக முஸ்லீம்கள் அல்லது இந்திய வம்சாவளி முஸ்லீம்கள் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை மலையக அச்சுப்பதிப்பு முயற்சிகளை இலங்கைத் தமிழ்மொழியிலான நூல்களின் அச்சுப்பதிப்பு வரலாற்றுடனும் உலக அச்சுப்பதிப்பு வரலாற்றுடனும் நோக்கல் வேண்டும். அவ்வகையில் உலகளாவிய ரீதியில் மிக புராதன காலந்தொட்டு மக்கள் களிமண், கல், பெப்ரஸ் புல், மரக்கட்டை, உலோகத் தகடுகள், பனை ஓலையில் தமது கருத்துக்களை, ஆக்கங்களை தகவல்களை பதிவு செய்து வைத்திருந்தார்கள். அச்சுஇயந்திர கண்டுபிடிப்பின் பின் ஒரு மாற்றத்தையே கொண்டுவந்தனர். 1401 இல் சீனாவில் பி. ஷெங் என்பவர் தனித்தனி அச்சு எழுத்தை உருவாக்கினார். இவர் 1450 இல் உலோகத்தால் அச்சு எழுத்துக்களை வார்த்தெடுத்து அச்சிடும் முறையினைக் கண்டுபிடித்தார். கார்டில் ஹா (cartil ha) போர்த்துகேய லிஸ்பனில் 1554ல் கிறிஸ்தவ சமய வினாவிடை புத்தகத்தினை முதல் முதலில் தமிழில் அச்சிட்டார். 1578 இல் "தம்பிரான் வணக்கம்" என்கிற (Henrique) பாதிரியாரால் தமிழில் அச்சிடப்பட்டது. 1813இல் திருசிற்றம்பலம் தேசிகரின் 'இலக்கணச் சுருக்கம்'', 1812இல் வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதை, 1821இல் வீரமாமுனிவரின் சதுரகராதியும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட முதல் தமிழ் நூல்களாகும். ஆனால் மலையத்தினைரைப் பொறுத்தவரை 1869 இலேயே ஏப்ரகாம் ஜோசப் என்ற கோப்பித்தோட்ட கண்டக்டர் எழுதிய " கோப்பி கிருஷிக் கும்மி" யாழ்ப்பாணத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வாய்மொழி மூல அடிப்படையில் தோன்றிய விவசாய நூல் எனக் கருதப்படுகிறது. இதன் பின் 1918 இலேயே ''கும்மியோ கும்மி, கோப்பிக் காட்டு கும்மி'' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையிலே ஒல்லாந்தரின் அச்சுக் கூடம் 1713இல் கொழும்பில் அமைக்கப்பட்டது. இங்கு ஒல்லாந்து அரசாங்கம் சார்பில் 1742இல் சுவிசேஷத்தின் நான்கு பதிப்புக்கள் தமிழில் வெளியாகின. 1796இல் இலங்கையை ஆங்கிலேயர் கைப்பற்றியதன் காரணமாக அவ்வச்சகம் மூடப்பட்டது. 1816இல் இலங்கைக்கு வந்த அமெரிக்க மிஷனரிமார் அச்சுத் தொழிலிலே பெரிதும் ஈடுபாடு காட்டத் தொடங்கினர். 19ஆம் நூற்றாண்டில் தேசாதிபதி எட்வார்ட் பான்ஸ் அவர்களின் காலத்தில் (1820) அமெரிக்க மிஷனுக்காக கரற் என்பவர் இலங்கைக்கு ஓர் அச்சியந்திரத்தைக் கொண்டு வந்தார். தேசாதிபதி எட்வார்ட் பான்ஸ் இலங்கையின் மலையக பிரதேசத்தில் தேயிலையை அறிமுப்படுத்தியவர். அமெரிக்க இலங்கை மிஷனின் அச்சகம் மானிப்பாயில் உதயமானது. 1834இல் நான்கு ஊழியர்களுடன் ஆரம்பித்த இவ்வச்சகம் 1850இல் எழுபது ஊழியர்களைக் கொண்டதால் பல நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தியது. இந்த வரலாற்றுகளுடனேயும் மலையகத்தவரதும் பதிப்பு முயற்சிகள் ஆராயப்பட வேண்டும்.

இலங்கையில் 1802இல் பத்திரிகை என்ற வடிவத்தில் முதன் முதல் சிலோன் கவர்ன்மன்ட் கெசட் (Ceylon Government Gazette) என்ற பத்திரிகை வெளிவந்தது. 1832 ஜனவரியில் கொழும்பு ஜோர்னல் (Colombo Journal) வெளிவந்தது. இந்த மாற்றங்களுக்குப் பின்னர் த கண்டி ஹெரலட் (The Kandy Herald) என்ற பத்திரிகை வெளிவந்தது. 1802 இல் மும்மொழியுடன் சிலோன் கெசட் வந்ததைத் தொடர்ந்து, 1843 இல் வெளிவந்த சிலோன் டைம்ஸ் (Ceylon Times) என்ற பத்திரிகையை 1923இல் விஜயவர்த்தன ஏற்று நடத்தினார். ஈழத் தமிழ்ப் பத்திரிகை வரலாறு "உதயதாரகை" யுடன் ஆரம்பமாகிறது. 1841இல் மாதம் இருமுறையாக இவ்விதழ் வெளிவந்தது. கொழும்பில் வாழும் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் மக்களை மையமாகக்கொண்டு 1863 பெப்ரவரி 06இல் "இலங்காபிமானி (The Ceylon Patriot) என்ற பத்திரிகை சி.வை. கதிரைவேற்பிள்ளையால் வெளியிடப்பட்டது, 1864இல் றொபர் நியுட்டன் என்பவரால் இலங்கைக் காவலன் (The Ceylon Watchman) என்ற பத்திரிகையும் வெளியிடப்பட்டது. இதற்கிடையில் 1864இல் "பாலியர் நேசன் என்ற சிறுவர் பத்திரிகை இளைஞர்களின் சமய முன்னேற்றம் கருதி அமெரிக்க மிசனின் ஆதரவுடன் வில்லியம் சின்னத்தம்பி என்பவரால் வெளியிடப்பட்டது. இந்த வரலாற்றுடனும் மலையக பத்திரிகை வருகையை ஆராய வேண்டும். இதுவும் இவ் ஆய்வின் நோக்கங்களில் ஒன்றாகும்.

மலையக அச்சு பதிப்புகள் இதுவரை சரிவர ஆவணப்படுத்தப்படாமை மிக முக்கிய குறைபாடாகும். இலங்கை பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம் வெளியிட்ட துணை நூலகர் நா. சுப்பிரமணியத்தின் தொகுப்பான "ஈழத்துத் தமிழ் நாவல்கள் நூற்பட்டியல் 1885 – 1976 மலையக பதிப்புகளான நாவல்கள் இடம் பெறவில்லை.

சில்லையூர் செல்வராசன் (1967) இல் வெளியிட்ட ஈழத்தமிழர் நாவல் வளர்ச்சி நூலிலும் மலையக நாவல்கள் இல்லை. கனக. செந்தில்நாதனின் ஈழத்தமிழ் நூல் வழிகாட்டியிலும் மலையக நூல்கள் இல்லை. எனவே, இந்த ஆய்வு மலையக அச்சுபதிப்பு முயற்சிகளை, நூல்களை எடுத்துக்காட்டும் ஆவணமாக அமையவுள்ளது.

அச்சுஊடகம் தமிழ் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு, 1835இல் அது யாரும் பயன்படுத்தப்படலாம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னரே தமிழின் பழமைச் சிறப்பை வெளிக்கொண்டு வரும் இலக்கியங்கள் (குண்டலகேசி, சிலப்பதிகாரம், வளையாபதி, புறநானூறு, கலித்தொகை போன்ற இலக்கியங்கள் ஆரம்பத்தில்) அச்சிற் கொண்டு வரப்பட்டன. ஆனால் 1835க்கு முன்னர் பிரிட்டிஷ் அரசாங்கமும் மிஷனரிமாரும் மாத்திரமே அச்சுரிமையைப் பெற்றிருந்த காலத்தில் பழைய தமிழ் நூல்கள் சில அச்சிடப் பெற்றிருந்தன. இவ்விடயத்தில் 1835இன் பின்னர் ஆறுமுகநாவலரின் (1882 – 1879) ஈடுபாடு மிக முக்கியமானதாகும். உ.வே.சாமிநாத ஐயர். சி.வை.தாமோதரம்பிள்ளை, ஒப்பாய்வு பற்றி வாதவிவாதங்களிடையே ஆறுமுக நாவலரது பதிப்பும் பணி தமிழிலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த பின்புலத்துடனேயே மலையக இந்திய வம்சாவளியினரது பதிப்பு முயற்சிகளும் ஆராயப்பட வேண்டும்.

இலங்கை முஸ்லீம்களின் பத்திரிகைத்துறை முயற்சி 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தொடங்குகிறது. 1869இல் துவான் பாவா யூனூஸ் ஸல்தீன் என்பவரினால் ஆரம்பிக்கப்பட்ட "ஆலாமத்லங்காபுரி" என்பதுவே இலங்கை முஸ்லீம் களின் முதல் பத்திரிகை ஆகும். இது இலங்கைத் தீவின் அடையாளம்" என்ற தமிழ்மொழி பெயர்ப்பைக் கொண்ட மலாய் மொழியில் அமைந்த பத்திரிகையாகும். இலங்கையில் தமிழில் வெளிவந்த முஸ்லீம்களின் முதல் பத்திரிகை 'புதினாலங்காரி' ஆகும். புதினம் என்றால் செய்தி எனவும் அலங்காரி என்றால் அழகுள்ள எனவும் பொருள்படத்தக்க வகையில் புதினாலங்காரி என பெயரிடப்பட்டதாக அறிய முடிகிறது. இது 1873இல் வெளியான பத்திரிகையாகும். இவை தவிர "இஸ்லாம் மித்திரன்" எனும் பத்திரிகை 1893இலிருந்து எம்.எஸ்.உத்துமான் என்பவரால் மாதமிருமுறை வெளியிடப்பட்டது. இவரே "தேசநேசன்" என்ற பத்திரிகையையும் வெளியிட்டார். அப்பத்திரிகை தினப்பதிப்பாக வெளிவர ஆரம்பித்தது.

இலங்கையின் முதல் தமிழ் நாவலாசிரியராக விளங்கும் கண்டியைச் சேர்ந்த அறிஞர் எம்.ஸி.சித்திலெப்பை வெளியிட்ட ஹஅசன்பேயுடைய சரித்திரம்' (1885) கண்டியிலேயே வெளியிடப்பட்டது. இவரே 'முஸ்லீம் நேசன்' (1882–1887) என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரப்பத்திரிகையையும் வெளியிட்டார். சித்திலெப்பை ஆரம்பித்த 'முஸ்லீம் நேசன்' (1882) இதுவே முன்னோடி பத்திரிகை என கூறப்படுகிறது. முஸ்லீம் நேசன் அச்சகம் என்ற நிறுவனத்தினையும் நிறுவி பலரது நூல்களை வெளியிடவும் முன்னோடியாக விளங்கினார். அப்துல் காதீர் 'பேரின்ப இரஞ்சிதமாலை' (1881), 'காரண பிள்ளைத்தமிழ்'(1895) 'பிரபந்தகுஞ்சகம்'(1901), கண்டிக்கலம்பகம்'(1903), தைக்கா சாகிப்ஒலியுல்லா(1908), சந்ததித்திருப்புகழ்' (1909), போன்ற கவிதை நூல்களை வெளியிட்டார். எனவே ஈழத்து மலையகக் கவிதை முன்னோடி (1881–1918) அப்துல் காதிர் புலவர் என விதந்து கூறப்படுகின்றார்.

எம்.என்.பாவா என்பவர், 'கடைசிக் கண்டித் தமிழ்மன்னன் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவம்'(1910) எனும் நூலையும், முஹிதீன் மீராசாஹிப் என்பவர் 'பத்திரசரத்தினக் களஞ்சியம்'(1929), என்ற நூலினையும், முஹம்மது முஹிதீன் என்பவர் 'புகழ்ப்பா'(1930), என்ற நூலையும் வெளியிட்டுள்ளனர். கம்பளையிலிருந்து எம்.ஏ.றஊப் 'சத்தியார்த்தம்'(1932) என்ற நூலினையும், எம்.எஸ்.பீர்முகம்மது 'கீர்த்தனா மிர்தம்'(1939) ஆகிய நூல்கள் மலையக நகரங்களிலிருந்து வெளியிடப் பட்டுள்ளது. இந்த வரலாற்று பின்னணிகளிடையே மலையக தமிழ் அச்சு பதிப்பு பற்றி நோக்க வேண்டும்.

மலையகத் தமிழர் முயற்சிகள்:

1909இல் டி.கே.எம்.ஜபார். 'தேயிலை கொய்யும் தெம்மாங்கு', 1910இல் பி.பண்டாரம் 'தேயிலைத்தோட்ட தெம்மாங்கு'' இரண்டு பாகங்கள் என்பன வெளியாகியுள்ளன. இது 28 பக்கங்களைக் கொண்டது. 1918 கும்மியோ கும்மி. கோப்பிக்காட்டு கும்மி என்ற நூல் வில்சன் வெளியிட்டுள்ளார். பஞ்சக் கொடுமை, சிந்து, நொண்டிச் சிந்து, சிந்துக் கும்மி என துன்ப துயரங்களையே வெயியிட்டுள்ளனர். இவை ரயில் வண்டிப்பாதை அமைப்பதில் ஏற்பட்டுள்ள துன்பங்களையும், துயரங்களையும் வெளிபடுத்துகின்றன.

அச்சுஊடகங்கள் மூலம் முதலில் வெளியான பத்திரிகைகளாக 1918 ஜனமித்ரன், 1922 தேசநேசன், 1924 தேசபக்தன், 1924 இந்தியன், 1924 லங்காவிகடன், 1924 தொழிலாளி, 1925 தேசதொண்டன், 1927 சத்யமித்திரன், 1927 தேச ஊழியன், 1927 சமத்துவ ஊழியன், 1928 தொழிலாளர் தோழன், 1928 கங்கானி 1929, இலங்கை இந்தியன், சத்யமித்ரன் என்ற பத்திரிகைகளின் பதிப்பு மலையகத்தவரின் பதிப்பு முயற்சியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை காட்டி நிற்கின்றன. 1930ம் ஆண்டுவரையிலும் இதன் வளர்ச்சி குறிப்பாக கவனிக்கத்தக்கது. அதற்கு பிறகு வீரகேசரி (1930), தினகரன் (1932) என்ற தமிழ்த் தினசரிகளினால் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தனியொருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்ற பாரதி கோட்பாட்டுடன் ஏழைகளின் விடுதலைக்காக ஓர் ஞாயிறு வெளியீடு என்ற இலக்குரையுடன் ''தொழிலாளி'' (1925) வெளி வந்தது. மலையக இந்திய வம்சாவளி பெருந்தோட்ட தொழிலாளிகளின் உணர்வினை வெளிப்படுத்தும் வாராந்த பத்திரிகையாக அமைந்த இப்பத்திரிகையின் ஆசிரியராக டி.சாரநாதன் என்பவர் தொழிற்பட்டுள்ளார். இதே டி.சாரநாதனையே ஆசிரியாராகக் கொண்டு ஒரு சத விலையில் நான்கு பக்கங்களைக் கொண்ட தமிழ் தினசரியாக '' காந்தி'' என்ற பத்திரிகையும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இலங்கை தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களான எம்.ஏ. அருளானந்தனும், டாக்டர். ஈ.வி.ரட்ணமும் இணைந்து நடத்திய 'தேசநேசன்'' (1920) ஏட்டின் ஆசிரியர் பொறுப்பில் கோ.நடேச ஐயர் அமர்த்தப்பட்டார். தஞ்சாவூர்ப் பிராமணரான இவர் 1919ல் தான் கொழும்புக்கு வந்தார்.

நடேசஐயர் 1914இல் 'வர்த்தக மித்திரன்'' என்ற பெயரில் ஓர் பத்திரிகை இந்தியாவில் தமிழ்நாட்டு தஞ்சாவூரில் ஆரம்பித்தார். 'வர்த்தக மித்திரன்'' என்ற பத்திரிகைக்கு சந்தா சேர்ப்பதற்காக இலங்கைக்கு 1919இல் வந்தார். 1920இல் தேசநேசன் பத்திரிகையும், 1924இல் தேசபக்தன் என்ற பத்திரிகையும் ஆரம்பித்தார். இவர் தனது பத்திரிகைகளை வெளியிட ஓர் அச்சகத்தினை 'சகோதரி அச்சகம்'' என்ற பெயரில் ஹட்டனில் நிறுவினார். இந்தியாவில் தஞ்சாவூரில் இவர் ஒர் அச்சகத்தினை நிறுவி பதிப்புத்துறையில் ஈடுபட்டவர். இவ் அச்சகத்திலேயே வர்த்தக மித்திரன் (1914), சுதந்திரன் (1912), ஒற்றன் என்ற அவரது முதல் நாவல் வெளியிட்டுள்ளார். இந்த அனுபவத்துடனேயே ஹட்டனில் அச்சுக்கூடத்தினையும், பதிப்பகத்தையும் தனது சொந்த பத்திரிகை வெளியீடுகளையும் ஆரம்பித்தார். நடேச ஐயரை ஆசிரியராகக் கொண்டு மற்றுமொரு தமிழ்ப் பத்திரிகை, தேசபக்தன் (1924) வெளிவந்தது. தமிழ்ப் பத்திரிகை இல்லாத காரணத்தால் செய்திகளை தகவல்களை அறியமுடியாத மக்களுக்கு தகவல்களை வழங்கக்கூடியதாக "தேசபக்தன்" (1924) வெளிவந்தது. அதன் முதல் இதழில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கத்தில் அப்பத்திரிகையின் வெளியீட்டு நோக்கம் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் 'தேசபக்தன்' பத்திரிகை, கதை, கட்டுரை, கவிதை எனப்பல அம்சங்க ளையும் வெளியிட்டுவந்தது. குறிப்பாக இந்திய வம்சாவளியான நடேச ஐயர் மனைவி மீனாட்சியம்மை நடேசஐயர், எச். நெல்லையா என்பவர்களாலேயே அப்பத்திரிகையில் அதிகம் எழுதப்பட்டன. தேசபக்தனுக்கு நல்ல வரவேற்பு இருக்கவே 1929 இல் நாளேடாக வெளிவந்தது.

சந்திரவதனா (1934), இரத்னாவளி அல்லது காதலின் மாட்சி (1938), சோமாவதி அல்லது இலங்கை இந்திய நட்பு வீரகேசரி வெளியீடு, கொழும்பு (1939), காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி (1940), என்ற நாவல் சந்திரவதனா முதல் பாகம் 468 பக்கங்களிலும் இரண்டாம் பாகம் 486 பக்கங்களிலும் வெளியாகியுள்ளது. இதனால் இலங்கையின் மலையத்தில் ஆரம்பக்கால அல்லது சுதந்திரத்திற்கு முற்பட்ட நூற்பதிப்புத் துறையில் நடேச ஐயர் ஓர் பதிப்பாளராக, பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். இவரது இம் முயற்சிகளினால் மலையகத்தில் ஒரு பதிப்புக் கலாசாரம், நூல் வெளியீட்டு கலாசாரம் குறிப்பாக பத்திரிகைகள் வெளியிடும் கலாசாரம் உருவாயிற்று எனலாம்.

நடேசஐயர் பத்திரிகை வெளியீடுகளாக் தேசநேசன் (1920 1923), தேசபக்தன் 1924 1931), உரிமைப் போர் (1931), சுதந்திரப்போர் (1940), வீரன் (1942), சுதந்திரன் (1947) தோட்டத் தொழிலாளி (1947), என்பனவும், நடேச ஐயரின் ஆக்க படைப்புகளாக இன்ஸ்யூரன்ஸ் (1918), ஒயில் என்ஜின்கள் (1918), வெற்றியுனதே (1930), நீ மயங்குவதேன் (1931), புபேந்திரசிங்க அல்லது நரேந்திரபதியின் நரக வாழ்க்கை (1935), ''தொழிலாளர் அந்தரப் பிழைப்பு' நாடகம் (1938), இந்தியா இலங்கை ஒப்பந்தம் (1941), தொழிலாளர் சட்டப் புத்தகம் (1942), அழகிய இலங்கை (1944), கதிர்காமம் ஐந்து அரிய புகைப்படங்களுடன் (1946),இவரது படைப்புகளும் வெளிவரலாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசஐயரின் பிற்கால நூல்கள் ஹட்டன் திம்புல வீதியில் இயங்கிய 'கணேஸ் பிரஸ்சில்' பதிப்பித்துள்ளார். இவரது 'சகோதரி அச்சக'' பதிப்புகளும்;, 'கணேஸ் பிரஸ்'' பதிப்புகளும் இலங்கை மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாசிப்பை ஊக்குவித்ததோடு, வாசிப்பு காலாசாரம் ஒன்றினையும் ஏற்படுத்தியது. இது எதிர்காலத்தில் பலர் தமது ஆக்கங்களை வெளிக்கொண்டுவர காரணமாயிற்று. நடேசஐயரின் தொடர் நாவல்களில் ஒன்று "மூலையில் குந்திய முதியோன்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. தேசபக்தன் (19241929), பத்திரிகையில் 'மூலையில் குந்திய முதியோன் அல்லது துப்பறியுந்திறம்'' என்ற தொடர் நாவலைக் கோ.நடேசய்யர் எழுதியுள்ளார். இந்நாவல் ஒக்டோபர் 1924இல் ஆரம்பமாகியுள்ளது. மற்றொன்று சத்ய மித்திரனில் ஒரு தொடர் நாவலாக வெளிவந்தது. இது "சரஸ்வதி அல்லது காணாமற்போன பெண்மணி'' என்பதாகும். நடேசஐயர் 1931இல் 'நீமயங்குவதேன்''. 1938 இந்திய தொழிலாளரை மையமாகக்கொண்டு 'அந்தரப் பிழைப்பு' நாடகம் போன்றவற்றை எழுதியுள்ளார். இவைகளுள் சில நூல்களாகவும் வெளிவந்தன. மற்றும் 'ராமசாமி சேர்வையின் சரிதம்'' என்ற தலைப்பிலான சிறுகதை 'நீ மயங்குவதேன்''? நூலில் எழுதப்பட்டுள்ளது. இதனையே மலையகத்தின் முதல் சிறுகதையாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

பத்திரிகைத்துறை மூலம் இலங்கை – இந்தியா நலன்காக்கப் புரட்சிகரமான கருத்துகளை வெளியிட்டு அரும்பாடுபட்டவர் இவர். பல புத்தகங்களும் எழுதினார். 1947ல் தமிழ் காங்கிரஸின் நாளேடாக சுதந்திரன் வெளிவந்தபோது அதன் முதல் ஆசிரியராகவும் இருந்தார். தேசபக்தன் பத்திரிகையில் அவருக்குத் துணையாக எச். நெல்லையா என்ற ஹரிஹர பாரதி நெல்லையா இணையாசிரியராகச் சேர்ந்தார். அவர் அப்போது எஸ்.என். வங்கி தனியார் வணிக நிறுவனத்தில் பணி புரிந்தார். நெல்லையாவின் பத்திரிகைத்துறை பிரவேசம், நடேசய்யரின் துணையுடன் தேசபக்தனில்தான் ஆரம்பமானது. தேசபக்தனும், தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட செய்திகளையே வெளியிட்டு அம்மக்களின் ஆதரவினைப் பெற்றிருந்தது. இதன்பின் வீரகேசரி பத்திரிகை இந்திய வம்சாவளியான சுப்ரமணியம் செட்டியாரால் ஆரம்பிக்கப்பட்டது. வீரகேசரி ஆவணிப்பட்டி பெரி. சுப்ரமணியம் செட்டியார் 1930 ஆகஸ்ட் மாதம் 6ம் நாள் ஆரம்பித்தார். இது வீரகேசரி அச்சகத்திலேயே வெளியிடப்பட்டது. இவ் அச்சகத்தையும் சுப்பிரமணிய செட்டியாரே செட்டியார் தெருவில் நிறுவினார். அவரே பத்திரிகை ஆசிரியர். அவருக்கு உதவியாகச் சேர்ந்தவர் எச்.நெல்லையா. அவரே பின்னர் ஆசிரியர். பத்திரிகை அச்சிடும் முழுப்பொறுப்பையும் கவனிக்க செட்டியாருக்கு முடியவில்லை. அவர் எஸ்.பி.எட்வாட்டையும் துணைக்குச் சேர்த்துக் கொண்டார். எட்வாட் 'தொழிலாளர் தோழன்' (1928) என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். பின்னாளில் வீரகேசரி இயக்குனர் சபையின் நியமனம் உறுப்பினராகவும் ஆசிரியர் பகுதி பொறுப்பாளராகவும் இருந்தார்.

மீனாட்சியம்மை நடேசய்யர் தமது பங்குக்கு பாடல்களைச் சிறுபுத்தக வடிவில் ''தொழிலாளர் சட்டக்கும்மி'' (1931) என்ற பெயரில் வெளியிட்டார். இந்திய தொழிலாளர் துயரச்சிந்து (1947) இவராலேயே வெளியிடப்பட்டுள்ளது. இந்தியத் தொழிலாளர் துயரச்சிந்து இரண்டு பாகங்கள் (1931), வெளிவந்தன. இவரால் எழுதப்பட்ட இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை கணேஸ் பிரஸ், ஹட்டன் (1940), ஊடாக வெளிவந்தது. இவரைத் தொடர்ந்து "சத்யமித்ரன்'' (1927) பத்திரிகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி அல்லது காணமற்போன பெண்மணி என்ற தொடர் நாவலை து.தொ.க. இராசம்மாள் எழுதியுள்ளார். 1926இல் தொடர் நாவலாக வெளிவந்த இது 1929 இல் நூல் வடிவம் பெற்றது. நடேசய்யரின் உறவினர் நாகலிங்கம் வீரகேசரியில் இருந்து விலகித் தினகரனில் துணைஆசிரியரானார். கொழும்பில் 1924ல் தொழிலாளி என்ற ஏடு ஆர். சாரங்கபாணிச் செட்டியாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

பெரியார் ஜோன் என்று பின்னாளில் அறியப்பட்ட ஏ.எஸ்.ஜோன் இந்தியன் என்ற பத்திரிகையை வெளியிட்டார். கே.டி.சிதம்பரம் இலங்கை விகடனை வெளியிட்டார். 1925ல் தேசத் தொண்டன், 1928ல் ஆதித் திராவிட மித்திரன் ஆகிய ஏடுகளுக்கு கோடி. சிதம்பரமே ஆசிரியர், 1930ல் நடேசய்யரின் உறவினர் சாரநாதன் தொழிலாளி என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினார். பின்னர் இவர் பதுளையில் இருந்து சில காலம் இதனை வெளியிட்டார். இடையில் நின்று போன தேசபக்தனை நடேசய்யரின் மனைவி 1930ல் மீண்டும் வெளிவரச் செய்தார். அவரே அதன் ஆசிரியர். எச். நெல்லையா 'இலங்கை இந்தியர்' என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடாத்தினார். இப்பத்திரிகைகளைவிட வேறுபல பத்திரிகைகளும் 192030களுக்கிடையில் வந்து கொண்டிருந்தன. இவைகளில் பல மேலே குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்காலத்திலேயே மலையக ஆரம்பகால படைப்புகளாக 1937இல் "சாமளா அல்லது காதல் போதனை' என்ற நாவலைக் கண்டியிலிருந்து எஸ். செல்வநாயகமும், 1938ல் , சுந்தரமீனா அல்லது காதலின் வெற்றி" என்ற நாவலை மஸ்கெலியா, குயின்ஸ்லேண்ட் தோட்டத்தில் ஆசிரியராகக் கடமைப்புரிந்த ஏ.போல் என்பவரும், 1940ல் "கண்ணனின் காதலி" என்ற நாவலை இரத்னபுரி, மத்வாகெல தோட்டத்தில் ஆசிரியராகக் கடமைப் புரிந்த ஜி.எஸ்.எம். சாமுவேல் என்பவரால வித்தியாலோக அச்சகத்திலும் ,1942ல் கோவிந்தன் அல்லது தேசிய ஊழியன் என்ற நாவலை இரத்தினபுரியிலிருந்து பி.எஸ். வரதராஜீலு நாயுடு" என்பவரும்; வெளியிட்டுள்ளனர். இந்த கோவிந்தன் நாவலை வரதராஜீலு முப்பத்தெட்டுப் பக்க நாவலான இதை இலங்கை இந்தியன் காங்கிரஸின் தற்போதைய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இரத்தினபுரி செயற்குழு அனுசரணையுடனும் நூலாக்கியிருந்தார். இந்த நாவல்களில் சில இரத்தினபுரி நகரில் விக்டோரியா அச்சகம், வித்தியாலோக அச்சகம் அச்சடிக்கப்பட்தை அவதானிக்கையில், அந்தப்பகுதியில் தமிழர்கள் கணிசமான அளவு படைப்பிலக்கிய ஆர்வத்துடன் வாழ்ந்திருப்பதைக் காண முடிகிறது. மலையகத்தில் அச்சு ஊடகத்தின் வருகையுடன், மேல் குறிப்பிட்ட நூல்களின் வருகையானது அச்சு முறைமையின் பிரதானம் பற்றியும் அதன் பாவனை முக்கியத்துவம் பற்றியும் மலையக தமிழ்ச் சூழலில் நிலவிய முக்கியத்துவத்தினை உணர்த்துவதாக அமைகிறது.

சுப்பையாபிள்ளை, டி. 'வீரபத்தினி' என்ற நூல் கொழும்பிலிருந்து 1926 இல் வெளி யிடப்பட்டுள்ளது. கே.கணேஸ் (1940) தீண்டத்தகாதவன், என்ற நூலும் நெல்லையா, எச். (1947) பிரதாபன் அல்லது மஹாராஷ்டிர நாட்டுமங்கை என்ற நூலும் கொழும்பு, ஸ்டான்ரி பதிப்பகத்தின் மூலமும், சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி கொழும்பு, சரஸ்வதி புத்தகசபை (1934) போஸ், ஏ., (1940) சுந்தரமீனாள் அல்லது காதலியின் வெற்றி, மஸ்கெலியா, யூனியன்பிரஸ். (1938), வேல்ஸ் ரத்தின பாண்டியன் எஸ்.எஸ். (1938) கள்ளத்தோணி, (குறுநாவல்) விக்டோரியா, இரத்தினபுரியிலிருந்தும் வெளி யிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948ல் இலங்கை சுதந்திரம் பெற்ற சமயம் வீரகேசரியில் சேர்ந்தவர் கே.கணேஷ் சுதந்திரதினச் சிறப்பிதழ் தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்தார். மலையக எழுத்தாளர் களில் முதலில் வீரகேசரியில் சேர்ந்தவர் இவராகத் தான் இருக்க வேண்டும். தலாத்துஓயாவுக்கு அருகில் அம்பிட்டியில் 2.3.1930ல் பிறந்த கணேஷ், கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும், பின்னர் திருவையாறு ராஜா கல்லூரியிலும் படித்தவர். 1942ல் எழுதத் தொடங்கி இளைஞர் காங்கிரஸ் உருவாக்கி லோகசக்தி என்னும் முற்போக்குச் சஞ்சிகை வெளியீட்டில் பங்கேற்று தமிழகத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தபின் கணேஷ் இலங்கைக்குத் திரும்பினார். இவரது பதிப்பு முயற்சிகள், படைப்புகள் இதன்பின் முக்கியத்துவம் பெறுகிறது.

ஜப்பான் சக்கரவர்த்தியின் பிறந்தநாள் விழாவுக்கான அகில உலகக் கவிதைப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்று சக்கரவர்த்தியிடம் விருது பெற அழைக்கப் பட்டார். 1946ல் இலங்கையில் கே.ராமநாதனுடன் சேர்ந்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அமைத்தார். இருவரும் பாரதி என்னும் சஞ்சிகையும் நடத்தினர். வீரம் ததும்பும் தமிழ்த் தினசரி என்ற குறிப்புடன் எம். பெருமாள் என்பவரை ஆசிரியராகக் கொண்டு 1939இல் இந்தியா' என்ற பத்திரிகை வெளிவந்தது. தினசரி வெளிவந்த குறுகிய காலத்தில் 1939 முதல் இப்பத்திரிகை வாராந்த வெளியீடாக வந்ததாக அறியமுடிகிறது.

'அடிமை வாழ்வு அகற்றிட வேண்டும்; சுதந்திர வாழ்வு ஒளிபெற வேண்டும்.'' என்பதனைப் பிரகடனமாகக் கொண்டு எம்.எல்.ஏ.மோத்தா என்பவரால் கொழும்பி லிருந்து 1939 முதல் ஞாயிறு வெளியீடாக "பராசக்தி'' பத்திரிகை வெளிவந்தது.

சர்வஜன சகோதரத்துவ தமிழ் தினப்பதிப்பாக ஸி.எஸ்.சோமசுந்தரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை', "உண்மையைக் கடைப்பிடி", "நாடொப்பனசெய்'' முதலானவை மகுடவாசகங்களாக அமைய "ஒற்றுமை'' என்ற பத்திரிகை வெளிவந்தது.

ஏட்டுப்பிரதிகள் இல்லாத அல்லது குறைந்த சமூகமாக, அச்சு இயந்திரம் இல்லாத பிற்பட்ட சமூகமாக ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு கூட்டிவரப்பட்ட சமூகமாக ஏனைய இலங்கை வாழ் சமூகங்களை விட குறிப்பாக இலங்கைத் தமிழர்களான வட மாகாண தமிழர்கள், கிழக்கு மாகாண தமிழர்கள் மற்றும் இலங்கை தமிழ் பேசும் முஸ்லீம்கள், தமிழ் கிறிஸ்தவர்கள் ஆகியோர்களைவிட ஒப்பீட்டுரீதியாக பின்தங்கிய சமூகமாக மலையகத் சமூகத்தினர் இன்றும் காணப்பட்டுவருகின்றனர். உலக தமிழர் வரலாற்றில் ஆரம்பத்தில் இலங்கைக்கு குடும்பங்களோடு புலம்பெயர்ந்த தமிழர்களான இந்திய வம்சாவளி அல்லது மலையகத் தமிழர்களது தமிழ் பதிப்புகள், அவர்களது புலம்பெயர்சூழலில், வாழ்வாதார சிக்கலிலும், பொருளாதாரக் கஸ்டமான சூழலிலும் ஏனைய சமூகங்களைவிட சற்று பின்தங்கி பிற்காலத்தில் பதிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவர்களது அச்சுபதிப்பு முயற்சிகள் மேலும் தேடுதல்கள் மூலம் ஆராயப்பட வேண்டும். இந்த எனது ஆய்வுக் கட்டுரைக்கான தேடுதல், ஆவணப்படுத்தல் என்பன எதிர்கால ஆய்வுகளுக்கான மேல்வரிச்சட்டமாகவும் முன் ஆதாரமாகவும் அமையும் என்பது என் நம்பிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசாத்துணை நூல்கள்

1. முத்துக்குமாரசாமி, இரா, (2010). 'பழந்தமிழ் அச்சு நூல்கள், உலகத் தமிழ் செம்மொழி மாநாடு, கோயம்புத்தூர்.
2. நல்லையா, சி. சாரல்நாடன். (1998). 'பத்தரிகையாளர் நடேசய்யர்'. கண்டி, மலையக வெளியீட்டகம், 1998
3. நல்லையா, சி. சாரல்நாடன். (2000). 'மலையக இலக்கிய தோற்றமும் வளர்ச்சியும்'. சாரல் வெளியீட்டகம், கொட்டகலை.
4. நல்லையா, சி. சாரல்நாடன். (2009). 'மலையக நிர்மாணச் சிற்பி கே. நடேசய்யர்', கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
5. சிவதம்பி, கா. (2007). 'தமிழ்த்துறைப் பதிப்புப் பணியில் உ.வே.சா'. குமரன் புத்தக இல்லம் கொழும்பு.
6. கார்மேகம் எஸ். எம். (2002). 'ஒரு நாளிதழில் நெடும் பயணம்', ராணி பப்ளிகேஷன், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

இலங்கை வரலாற்றில் பெண்தெய்வ வழிபாடும், தமிழர் பண்பாட்டில் அதன் செல்நெறியும்

இலங்கையில் பெண் தெய்வவழிபாடு ஆதிவாசிகள் காலத்திலிருந்து நீண்ட காலமாக நிலவி வந்துள்ளது. சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்து கொற்கை வழிபாடு, யோனி வழிபாடு போன்று பல்வேறு சூழலில் பல்வேறுவகையில் பெண்தெய்வ வழிபாடு நிலவி வந்துள்ளது. இலங்கையில் பெண்தெய்வ வழிபாடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் சக்தி வழிபாடாக அம்மன் வழிபாடு, கண்ணகிவழிபாடு என்றும் பிரித்தானியர் காலத்தில் குடியேறிய இந்தியத்தமிழர் வாழும் மலையகத்தில் மாரியம்மன் மற்றும் சிறுதெய்வவழிபாடாகவும், சிங்களவர்கள் பரந்துவாழும் பிரதேசங்களில் பத்தினி அம்மன் வழிபாடாகவும் நிலவிவருவதைக் காணமுடிகின்றது.

சிந்துவெளி நாகரிகத்தைப் போல, சுமேரியநாகரிகத்திலும் பெண்தெய்வவழிபாடு நிலைபெற்றிருந்தமைக்கு ஆதாரங்கள் உண்டு. சுமேரியநாகரிகத்தில் நிந்து, நின்மா, ஈணான், ஸ்தார், யூரினோம், இயாசிம் ஆகியன பெண் தெய்வங்களாகக் குறிப்பிடப் படுகின்றன. எகிப்தியர்கள் 'ஐஸீஸ்'' என்றும், பபிலோனியர்கள் 'நியாமத்' என்றும், ரோமர்கள் 'வீனஸ்'' என்றும்வணங்கினர். பெண்தெய்வவழிபாடாகியசக்திவழிபாட்டுக்கு இருக்கு வேதத்திலும் குறிப்புகள் உள்ளன. வாக்தேவி, அதிதிவாக்புரந்தி, திஷக, ஈரை, வாருணி போன்ற பெண் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சைவசமயத்தில் பெண்தெய்வ வழிபாடாக சக்தி வழிபாடு, உமாதேவி, துர்க்காதேவி, அம்மன், காளி தேவி, கண்ணகி வழிபாடு காணப்படுகின்றன. சிந்துவெளிநாகரிகச் சின்னங்களிலும், சுமேரிய நாகரிககாலத்துச் சின்னங்களிலும் சைவ சமயத்திலும் சிங்கவாகனத்துடன் பெண்தெய்வம் காணப்படுகின்றது.

கி.பி இரண்டாம் நூற்றாண்டில் சேரன் செங்குட்டுவன், சோழ நாட்டைச் சேர்ந்த, பாண்டியநாட்டில் கணவனை இழந்து நீதிகேட்ட கண்ணகிக்கு கோயில் எடுத்த விழாவில் கலந்து கொள்ள இலங்கை மன்னன் கஜபாகு வருகை தந்ததாகச் சிலப்பதிகார வரந்தரு காதையிலும் இராஜரெத்தினகர போன்ற சிங்கள நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. கயபாகு மன்னன் கண்ணகி சிலையைப் பிரதிஷ்டை செய்த பின்னரே, சிங்கள மக்கள் பத்தினித்தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டனர் என வரலாறுகள் கூறுகின்றன. கண்டி, தெவிநுவர, அங்குரான்கெத்த, குண்டசாலை ஆகிய இடங்களி லும் பத்தினித் தேவாலயங்கள் உண்டு. கண்டி எசலபெரகரா (ஆடிதிருவிழா) வில் புத்தபெருமானின் புனிதப்பல் ஊர்வலத்துடன் பத்தினி தேவாலய ஊர்வலமும் இடம் பெறுகின்றது. புளியங்குளம், பாணமை, களுவன் கேணி, திகிரிவட்ட ஆகிய இடங்களிலும் பத்தினி தேவாலயங்கள் காணப்படுகின்றன. பத்தினிப் பெண்கள் வழிபாடு செய்ய பன்திஸ்கேன்முற என்னும் முப்பத்தைந்து நூல்கள் சிங்கள பௌத்தர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. சிங்களவர் மத்தியில் கதிர்காமத்தில் முருகக்கடவுள் வழிபாட்டுடன் வள்ளியம்மை, தெய்வானையம்மை வழிபாடுகளும் காணப்படுகின்றன. மடுத்திருப்பதியில் பத்தினி தேவாலயம் காணப்பட்டதாக வரலாறுகளில் கூறப்படுகிறது. ரோமன் கத்தோலிக்கர்களிடத்து தேவமாதா வழிபாடும் உண்டு. இவர்கள் யேசுவைப் பெற்றதாயை புனிதையாகக் (St.Mary) கருதி வழிபடுகின்றனர். மன்னார் மடு தேவாலயம், மாத்தறை மாதா கோயில்களும், கண்டி தென்னக்கும்புர படிவத்த பாத்திமா அன்னை, லங்காமாதா தேவாலயம், யாழ் மரியாள் தேவாலயம் போன்ற பல பெரிய கோயில்களும், பல சிறிய கோயில்களும் இலங்கையில் பரவலாக காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பெண்தெய்வங்கள் ஊருக்கு ஒன்றாகப் பெருகிக் காணப்படுவதோடு, தற்போது அழிந்தும் மறைந்தும் மாற்றம் பெற்றும் வருகின்றன. எனவே, சடங்கு முறையிலான மரபுவழி வந்த நம்பிக்கைகள் போற்றப்படுவதற்கான காரணங்கள் ஆகியன பற்றிப் பதிவு செய்வதும், ஆவணப்படுத்தி எதிர்காலத்தில் சந்ததியினர் தமது பண்பாட்டினை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் எடுத்துக்காட்டுவதும் இன்றைய நிலையில் அவசியமாகும்.

இலங்கையில் பெண்தெய்வ வழிபாடு தொடர்பான தோற்றம், காணப்பட்ட சூழல், புவியியல் காரணிகள் பல்வேறு வரலாறு, காரணப்பெயர்கள், மற்றும் வேறுபட்ட தளங்களில் பெண் தெய்வவழிபாட்டின் வளர்ச்சியின் போக்குகள் பற்றி ஆராய்வதும், பெண்வழிபாட்டுடன் தொடர்புடைய கலாசார, பண்பாட்டுக் கூறுகளை வெளிக்காட்டுவதுமே, இவ்வாய்வின் நோக்கமாகும்.

இவ் ஆய்வானது, களப்பணி, வரலாற்று, விவரண அணுகுமுறை ஆகியன கொண்டு ஆராயப்பட்டதோடு, முதன்மை ஆதாரங்கள், இரண்டாம் நிலை ஆதாரங்கள், கடந்த கால ஆய்வுகளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகில் பெண்தெய்வவழிபாட்டினைப் பெருந்தெய்வவழிபாடு, சிறு தெய்வ வழிபாடு என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆகமசிற்ப விதிப்படி அமைக்கப்பட்டு ஆறுகாலப்பூசைகள் நடைபெறுவதும் பிராமணர்கள் பூசகரிகளாகவுள்ள கோயில்கள் பெருந்தெய்வ வழிபாட்டுத் தலங்களாகும். திருமகள், சரஸ்வதி, பராசக்தி, ஆதிபராசக்தி, ஆதிலட்சுமி, தானியலட்சுமி, வீரலட்சுமி, கஜலட்சுமி, சந்தானலட்சுமி, விஜயலட்சுமி, வித்யாலட்சுமி, சக்தி, தனலட்சுமி, மாரி, வைஷ்ணவி, நாராயணி, பத்தினி, கண்ணகி, இராஜராஜேஸ்வரி, மலைமகள், தாட்சாயிணி, பார்வதி, உமாதேவி, முத்துமாரி, அம்மன், துர்க்காதேவி, காளிதேவி, வல்லியம்மை, தெய்வானையம்மை ஆகியனவற்றைப் பெருந்தெய்வங்களாக வகைப் படுத்தப்படலாம்.

சிறுதெய்வவழிபாடு பிராமணர்கள் அல்லாத பூசகர்களைக் கொண்டது. உயிர்ப்பலியிடல் நடைமுறையிலுள்ளது. தெய்வங்கள் கொடூர உருவ முடையவையாகச் சிறுதெய்வவழிபாடு காணப்படுவதுடன், கோயில்களுக்கென ஆகமசிற்ப அமைப்புகள் இல்லை. சிறுதெய்வங்கள் நோய்கள், சூனியங்கள், கண்ணூறு, நாவூறு கெடுதல், துன்பங்கள் போன்ற தீமைகளிலிருந்து காப்பாற்றுவனவாக நம்பப்படுகின்றன. சிறுதெய்வங்கள் ஏவுதலின்படி கெடுதல் செய்யக்கூடியனவாக உள்ளன. சிறுதெய்வங்கள் ஊருக்கு ஒன்றாகப் பெருகிக் காணப்படுகின்றன. அங்காளம்மன், அங்காளபரமேஸ்வரி, முப்பத்தம்மன், பச்சையம்மன், பார்வதியம்மன், சோழபுரியம்மன், எல்லையம்மன் மாதங்கியம்மன், முத்துக்காளியம்மன் சோடியம்மன் காத்தாயியம்மன், குத்தாளம்மன், காளியம்மன், பங்காரகாமாட்சியம்மன், பச்சைக்காளி, சியாமளாதேவியம்மன், செங்கமல நாச்சியம்மன், செல்லியம்மன், திரௌபதியம்மன், கனகதுர்க்கையம்மன், மனோன்மணியம்மன், பொற்கொடியம்மன், கங்கையம்மன், காட்டேரியம்மன், மோகினி, பிடாரி, பேச்சி, பிச்சி, பிள்ளைக்கொல்லி, உத்திரகாளி, அறியாத்தம்மன், காளிகாம்பாள், பேச்சியம்பாள், ஸ்ரீபுவனேஸ்வரியம்பாள், அன்னபூரணியம்மன், ஸ்ரீதுர்க்காதேவி, சிவகாமியம்மன், கருமாரியம்மன், கண்ணகியம்மன், பூமாரியம்மன், கடல்நாச்சியம்மன், துர்க்கையம்மன், வீரமாகாளியம்மன், பத்தினியம்மன், வட்டபாதையம்மன் போன்றன சிறுதெய்வங்களாகவும் வகைப்படுத்தப்படலாம்.

நயினாதீவில் நாகபூசணியம்மன், மட்டக்களப்பில், வடமராட்சி பருத்தித்துறையில், மந்திகை மற்றும் மாதனையில்; கண்ணகியம்மன், கண்டியில் பத்தினியம்மன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளையில் முத்துமாரியம்மன், தெல்லிப்பளையில் துர்க்காதேவியம்மன், யாழ்ப் பாணம் நல்லூரில் வீரமாகாளியம்மன், சம்பூரில், பொலனறுவை, ஏறாவூரில், போர தீவில், அன்னமலையில், சிலாபத்தில் காளியம்மன், மட்டக்களப்பில், கோட்ட முனையில், பருத்தித்துறை தும்பளையில் மாரியம்மன், பருத்தித்துறை தும்பளையில் பத்திரகாளியம்மன் வழிபாடு பிரசித்தி பெற்றுள்ளது. மாரியம்மன் கோயில்களில் வெள்ளிப்பிரம்பு, உடுக்கை, வேப்பிலை, அம்மாணைக் காய் என்பன முக்கிய சின்னங்களாகும். உயிர்ப்பலி, உருவேறுதல், தெய்வமாடுதல், கும்பமெடுத்தல், தீமி தித்தல் என்பனவும் இங்கு நடைபெறுகின்றன.

காளிகோயில்கள் இலங்கை நாட்டின் பலபகுதிகளிலும் பரந்து காணப்படுன்றன. திருகோணமலை காளிகோவில், சம்பூர் பத்திர காளியம்மன், உப்புவெளி காளியம்மன், பறையனாங்குளம் எல்லைக் காளியம்மன், படுக்கைப் பத்திரகாளியம்மன், பாலம் போட்டாறு பத்திரகாளியம்மன் மற்றும் பல அம்மன் ஆலயங்கள் திருகோண மலை நகரினைச் சூழ அமைந்துள்ளன. காளியம்மன் காவல் தெய்வமாகவே கருதப்படுகின்றது. குளக்கோட்டன் மன்னன் காலத்தில் திருகோணமலை காளியம்பாள் கோவில் எல்லைக்காளி கோயிலாகவே திகழ்ந்துள்ளது. இவ்வாலயத்தின் நிருத்தமண்டபத்தில் வலதுபுறத்திலுள்ள தூணில் இராஜராஜ சோழனின் புதல்வரான இராஜேந்திரசோழனின் (கி.பி 10121044) மெய்கீர்த்தி பொறிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஏழாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த கல்வெட்டு இக்கோயிலின் பழமையினையும் தொன்மைச் சிறப்பினையும் எடுத்தியம்புவதாகக் கருதப்படுகின்றது.

"காளி ஆச்சி" என அழைக்கப்படும் திருகோணமலை பத்திரகாளியம்பாள் ஆகமவி திப்படி அமைக்கப்பட்ட ஆலயத்தில் எழுந்தருளி இருப்பதுடன், சங்கு, சக்கரம், வில், கதாயுதம், கலப்பை, கேடயம், ஈட்டி, பாசம், சூலம் என்று பல்வேறு ஆயுங்களுடன் காட்சியளிக்கிறாள். சம்பூர் பத்திரகாளியம்மன் கோயில் அறுநூறு ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்தது. போரதீவிலுள்ள பத்திரகாளியம்மன் ஆலயத்துடன் பண்டைய இயக்கர் இன மக்களைத் தொடர்புபடுத்தி மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே, மட்டக்களப்பில் ஆதிக் குடிகள் வாழ்ந்த காலத்தில் போரதீவு பத்திரகாளியம்மன் ஆலயம் தோற்றம் பெற்றது எனலாம். இலங்கைத்தமிழ் மக்கள், இந்திய வம்சாவழி மக்கள் மத்தியில் மாரி மற்றும் முத்துமாரியம்மன் வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மாரியம்மன் மற்றும் முத்துமாரியம்மன் கோவில்கள் நாடெங்கிலும் காணப் படுகின்றன. பன்னிரண்டு மடைகள் வைத்தல், பூசைசெய்து தெய்வம், உரு ஆடுதல், கற்பூரம், சர்க்கரைப் பொங்கல் செய்தல், பூக்குழி இறங்குதல் அல்லது தீமிதித்தல் என்பன நடைபெறு கின்றன. பராயமடையாத பன்னிரண்டு சிறு பெண்களை நீராட்டி, புது ஆடைகள் அணிவித்து, பூப் போட்டு, சர்க்கரைப் பொங்கல் படைத்து, பூசை செய்வார்கள். மாரியம்மனுக்குச் சர்க்கரைப் பொங்கல் பிரியமானது என மக்கள் நம்புகின்றனர். மாரியம்மனுக்குக் குளிர்த்தி, பள்ளயம் செய்வர். நோய்கள் தொற்றாது எனவும் மக்கள் நம்புகின்றனர்.

மழைவேண்டியும் மாரியம்மனுக்குச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. 'பூக்குடம் எடுத்தல்' எனும் சடங்கு, இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்தி லும், மழை வேண்டி நடத்தப்படுகின்றது. இந்நிகழ்வில் பெண்கள் நீர்க்குடம் ஏந்தி, குரவை யிட்டபடி, அம்மன் மீது பாடல்களைப் பாடியபடி குடத்து நீரினை கோயிலைச்சுற்றி அம்மன் மூலஸ்தானத்தினைச் சுற்றி ஊற்றுவர். முதல் குடம் நீரை அம்மனின் மூலஸ்தானத் திருவுருவத்துக்கு ஊற்றுவதும் உண்டு. இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாணத்திலும் நடைபெறும் மாரி யம்மன் வழிபாடுகள் தனித்துவமானவை. பெரும்பாலும் ஆகமவிதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டு இருப்பதுடன், குளிர்த்தி வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன. நேர்த்தி, கடன் கழித்தல், கரகம் எடுத்தல் போன்றனவும் நடைபெறுகின்றன. 'ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது' என்பது மலையகத்தில் வழங்கும் பழமொழி ஆகும். அதாவது, மாரியம்மனின் நேர்த்திக்கடனைப் பூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்பதே பொருளாகும். மாரியம்மன் வழிபாடு வடமேல் மாகாணத்திலும் காணப்படுகின்றது. மலையகத்திலும் ஆகமவிதிப்படி கோயில்களை அமைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. மலையகத்தில் மாத்தளையில் முத்துமாரியம்மன் ஆலயம் ஆகமவிதிப்படி அமைந்த கோயிலுடன் மகோற்சவம் நடைபெறும் கோயிலாக விளங்குகின்றது. இக்கோயில் ஆயிரத்து எண்ணூறுகளில் சிறுகொட்டிலில் மிகச்சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு இருந்ததாக அறியப்படுகின்றது. அம்மைநோய்கள், கண்நோய்கள் போன்ற தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காக முத்துமாரியம்மன் வழிபாடு செய்யப்படு கிறாள். முத்துமாரியம்மன் கோபமுற்றால் முத்தெறிவாள் என்றும், இதன் காரணமாக அம்மைநோய்கள் வரும் எனவும் மக்கள் நம்புகின்றனர்.

இலங்கையில் வளமான வாழ்வுக்காகவும் நோய்களிலிருந்து பாதுகாப்புக்காகவும், மழை வேண்டியும் கண்ணகியம்மனுக்கு வழிபாடு நடத்தப்படுகின்றது. வைகாசி மாத பூரணைதினத்தில் அல்லது வைகாசிமாத பூரணையினை அடுத்து வரும் திங்கட் கிழமைகளில் கண்ணகியம்மன் கோவில்களில் பொங்கல் வைத்துப் பூசை செய்து திருவிழா நடைபெறும். திருவிழா தொடங்கும்போது விளக்கு வைத்தல் எனும் சடங்கு நடத்தப்படும். இச்சடங்குக்காக கடலிலிருந்து நீர் எடுத்து வந்தே திருவிழா முடியும் வரை விளக்கு ஏற்றப்படுவதாக கூறப்படுகின்றது. கண்ணகியம்மன் கோவில்களில் பாற்பொங்கல் வைத்தே பூசனை செய்யும் முறை நிலவி வருகின்றது. வடஇலங்கை, கிழக்கிலங்கை உட்படப் பல பகுதிகளில் பல கண்ணகியம்மன் ஆலயங்கள் தோற்றம் பெற்றிருந்தன. புங்குடுதீவு, செட்டி குளம், கரம்பன், புலோலியூர் மந்திகை, பொதிக்கடல், சங்குவயல் முதலான இடங்களில் கண்ணகியம்மன் கோயில்கள் எழுர்ச்சிபெற்றிருந்தன. கிழக்கில் கண்ணகியம்மனை 'கண்ணகையம்மன்' என்றே போற்றுகின்றனர். கண் சம்பந்தமாகன கடவுளாக நம்பப்படுகிறாள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலரும் அவரது சகாக்களும் சிறுதெய்வவழிபாட்டினை விடுத்துக் கோயில்களை ஆகம மயப்படுத்தியபோது, பல கண்ணகியம்மன் கோயில்கள் வட இலங்கையிலிருந்து மறைந்தன. பல இராஜ இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, மனோன்மணி, நாகேஸ்வரி, நாகபூசணி என்னும் பெயர் கொண்ட சக்தி ஆலயங்களாக மாற்றம் பெற்றன. எஞ்சியிருப்பவை ஒருசில கோயில்களே. அவற்றுள் வற்றாப்பழை கண்ணகியம்மன் ஆலயம் பிரசித்தி பெற்றது. தலவரலாற்றுப் பெருமை கொண்ட புங்குடுதீவு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி ஆலயம் பண்டைய கண்ணகியம்மன் ஆலயம் எனக் கருதப்படுகின்றது.

பாண்டிய நாட்டிலிருந்து வெளியேறிய கண்ணகி இடைச்சேரியில் பாலமுதம் அருந்தியும் கொம்புமுறி விளையாட்டினைப் பார்த்தும் கோபம் ஆற்றினாள் என்பது ஐதீகம். கண்ணகையம்மன் கோயில் திருவிழாக்களில் கொம்புமுறி விளையாட்டுகள் நடைபெறுகின்றன. பாலமுதம் பொங்கி பூசனை செய்வதும் நடைபெறுகின்றது. கண்ணகையம்மன் கோபத்துக்குள்ளானால் வைசூரி, கண்ணோய், குக்கல், வெப்பு, சின்னம்மை, வயிற்றுக் கடுப்பு, பெருஞ்சுரம் முதலிய நோய்களுக்கு ஆளாக வேண்டி வரும் என அஞ்சினர். பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயமும் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுகாமம் திரௌபதியம்மன் ஆலயமும் உடப்பிலுள்ள திரௌபதியம்மன் ஆலயமும் பிரசித்தமானவை. அத்துடன் கல்லடி,புத்தூர், புளியந்தீவு, மட்டக்களி ஆகிய இடங்களிலும் திரௌபதியம்மன் ஆலயங்கள் தோன்றின இவை பிரதானமாக வைணவ மதத்தினைப் பரப்பும் நோக்குடன் அமைக்கப்பட்டவை. மகாபாரதக் கதையினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டன. இங்கு தீக்குளித்தல் வைபவம் சிறப்பானது. பாண்டவர் வனவாசம் செல்லுதல், அருச்சுனன் தவம்செய்து பசுபதாஸ்திரம் பெறுதல், அரவாணைக் களப்பலி கொடுத்தல் போன்ற காட்சிகள் திருவிழாக் காலங்களில் பக்தர்களால் உருவகிக்கப்படுகின்றன.

சங்ககால இலக்கியங்களில் நற்றிணை (216), புறநானூற்றுப் பாடல்களிலும் (144 146) கண்ணகிவழிபாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது போலவே இலங்கையில் இவ்வழிபாடு பரவியது பற்றிச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரையிலும், வரம்தருகாதையில் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் சக்திவழிபாடாகப் பெண்தெய்வ வழிபாடுகள் நிலைத்திருப்பதுடன், ஆகமசிற்பவிதிப்படியான வழிபாடாக மாறி வருவதையும், மோகினி, பிடாரி, பேச்சி, பிச்சி, பிள்ளைக்கொல்லி, உத்திரகாளி போன்ற சிறுதெய்வவழிபாடுகள் அருகி, மறைந்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

உசாத்துணை நூல்கள்:

1. மகேஸ்வரலிங்கம், க., (1996) மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், தில்லை வெளியீடு.
2. வடிவேலன்,. பெ (1997) மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும் , கலைஒளி முத்தையாப்பிள்ளை நினைவுக்குழு.
3. வேல்முருகு. ந., (1993) மலையகமக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும், வாசகர் பதிப்பகம்.
4. நாகேஸ்வரன். கனகசபாபதி (2013) நயினை ஸ்ரீ நாகபூசனி அம்மன், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்.மணிவிழாக்குழு., நயினை தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

புலம்பெயர் தமிழர்களின் தனித்துவமான கலாசார பண்பாட்டு விழுமியங்களும் மாற்றங்களும்

அறிமுகம்

உலகில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றில், இலங்கைக்குப் புலம்பெயர்ந்த இந்தியத்தமிழர்கள் முக்கிய இடம் பெறுகிறார்கள். இவர்கள் பல பல கட்டங்களாக வந்து குடியேறினார்கள். உதாரணமாக நாயக்கர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் பல தேவைகளின் நிமிர்த்தம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இடம் பெயர்ந்தனர். இவ்வாறான வரலாறுகள் ஏராளம். ஆனாலும் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் இலங்கை ஆளுநர் பிரடரிக்நோத் (1798–1802) 30,000 பவுண் செலவில் இந்தியத்தொழிலாளர்களை இலங்கைக்கு கூட்டிவர தொடங்கியுள்ளனர். இவர்களே "பயினியர் ரோட் கோப்ஸ்" என அழைக்கப்பட்டனர்.

1976ஆம் ஆண்டு பிரித்தானியர் இலங்கை கரையோரங்களை (Costal Area) கைப்பற்றிய போது வரி சேகரிப்பதற்காக இருமொழித் தெரிந்த இந்திய சென்னைத் தமிழர்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டனர். இவர்கள் டுபாஷிகள் என அழைக்கப்படுவர். அதற்கு முன்னர் போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கவர்களாக மாறிய இந்திய பரதவ இனத்தமிழர்கள் இலங்கையின் கரையோரங்களில் குடியேறி இருந்தனர்.

1818 இல் இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதற்காக 5000 தென்னிந்தியர் கொண்டு வரப்பட்டனர், அவர்களே பாதையமைக்க, துறை முகமாக்க, பாலங்களமைக்க, குளங்களமைக்க மற்றும் புகையிரதப் பாதைகளமைக் கவும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர். இவர்கள் "கூட்டுத்துண்டு" முறை மூலம் கூட்டிவரப்பட்டுள்ளனர். அதாவது கங்காணி வழங்கும் முற்பணத்திற்கான துண்டு, இந்த பணத்தினை செலுத்தி இத்தொழிலாளர்களை வேறு தோட்டத்துக்கு கூட்டிச் செல்ல முடியும்.

ஆங்கிலேயர்காலத்தில் பெருந்தோட்டத் தொழிலுக்காக தமிழர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கூட்டி வரப்பட்டனர். இக்காலத்தில் இந்தியாவில், தமிழ்நாட்டில் சில பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு ஏற்பட்ட வறுமைப்பிணி, ஒடுக்கு முறைகள், அடிமை வாழ்க்கை, சாதிக் கொடுமைகள் மற்றும் ஆங்கிலேயர்களின் வரிகளால் விரக்தியுள்ள மக்கள் கண்டிச் சீமையை நம்பி புலம்பெயர்ந்தார்கள். இலங்கையில் மலையகத்தில் தேங்காயும் மாசியும் குறைவின்றி நிறைந்திருப்பதாகவும் சுபீட்சமான வாழ்வு வாழலாம் என்ற பசப்பு வார்த்தைகளை நம்பி புலம்பெயர சம்மதித்தார்கள். இச்சந்தர்பத்தில் ஆங்கிலேயர் தமிழர்கள் மூலமே பிரசாரம் செய்து ஏமாற்றி வரவழைத்தார்கள். அதேவேளை சிலர் ஒப்பந்த முறையிலும், கங்காணிகளினாலும், கொண்டு வரப்பட்டார்கள். சிலர் துண்டுமுறை மூலமும் கூலிகளாக இலங்கைக்குக் கூட்டி வரப்பட்டனர். இன்றும் ஆங்கில அகராதியில் தமிழ்த் தொழிலாளர்களை கூலி (Cooly) எனக் குறிப்பிட்டுள்ளனர்.

1823 இல் இலங்கையில் பெருந்தோட்டத்துறையில் கோப்பித்தோட்டம் ஆரம்பிக்கப் பட்டது. 1850 இல் கம்பளை மரியாவத்தையில் கொக்கோத் தோட்டங்களும் 1873 இல் லூல்கந்துரத் தோட்டத்தில் தேயிலைப் பயிர்ச் செய்கையையும் ஆரம்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து, 1942இல் 14000 பேரும், 1843இல் 31000 பேரும், 1844இல் 67000 பேரும் 1875இல் 71000 பேரும் எனத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து இலங்கைக்கு வந்தனர். இவர்களில் பலர் கடல் பயணங்களின் போதும் படகு அமிழ்ந்ததாலும் பலர் இறந்து போனார்கள். அத்துடன் புயல் காற்றில் படகுடன் இழுத்துச் செல்லப்பட்டுக் காணாமற் போயினர். ஆதிலட்சுமி என்ற கப்பல் 120 பேருடன் கடலில் மூழ்கியது. தப்பி வந்து சேர்ந்தவர்களும் கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டனர். காட்டுவழியில் நடந்து வரும்போது மிருகங்களாலும், பாம்பு போன்ற விஷ ஜெந்துக்களாலும், தாக்கப்பட்டும், பெரும் நோய்களுக்குட்பட்டும் இறந்து போயினர். 1824 இல் இலங்கையில் குடியேறிய மக்களில் தமிழ்பேசும் இந்தியர்கள் 786000பேர் எனவும் இதில் தோட்டத்தொழிலாளர்கள் 610000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் லயத்து மக்களுக்கு 1825 இல் ஆண்களுக்காண சம்பளம் 38 சதமாகவும் பெண்களுக்கான சம்பளம் 26 சதமாகவும் சிறுவர்களுக்கான சம்பளம் 19 சதமாகவும் காணப்பட்டிருந்தது.

1821வரை இம்முறை காணப்பட்டுள்ளது. இங்கு கங்காணி வட்டிக்குப் பணம் கொடுப்பார், கடை நடத்துவார். அவரது கடையிலேயே பொருட்கள் வாங்க வேண்டும். அவரே திருமணம் செய்து வைப்பார். அரசியலைக் கவனிப்பார். எனவே தான் இம்மக்களது வாய்மொழிப் பாடல்கள் கங்காணியை மையமாக வைத்து உருவாகியுள்ளன. இவை நையாண்டிப் பாடல்களாவும் காணப்படுகின்றன. இப்பாடலை உருவாக்கியவர் தேர்ந்த புலவர்களோ, செம்மொழிபாவலர்களோ இல்லை. கல்லாமல் கவிபாடும் திறன்கொண்ட பாமர்களே, இவ்வகை நாட்டார்பாடல்களை பாடியுள்ளனர்.

"சிலோன் புளுபுக்" நூலில் 1864 ல் பிரிட்டிஸ் ஆட்சியின் கீழ் இந்தியாவிலிருந்து 2079 கலங்களும், பிரேஞ்சு இந்தியாவிலிருந்து 175 கலங்களும் வந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1848இல் புகையிரதப்பாதை ஆரம்பிக்கப்பட்ட போதும், எண்ணூறு (800) இந்தியத் தொழிலாளர்கள் கூட்டிவரப்பட்டுள்ளனர். கடலில் படகு சரிந்து பலர் இறந்துள்ளனர். இவர்களில் சிலர் பாம்புக்கடியினாலும், மலேரியா காய்ச்சலினாலும் பலர் இறந்துள்ளனர். "ஆதிலட்சுமி" என்ற கப்பல் நீரில் மூழ்கி 120 பேர் இறந்துள்ளனர். கடற்கரையிலிருந்து தோட்டங்களுக்கு வந்து சேருமுன்பாகவும் பலர் இறந்து போயுள்ளனர். 1847-1867 வரை 24 சட்டங்கள் புலம்பெயர்வுக்காக கொண்டுவரப்பட்டுள்ளது. இதில் 1858ல் இமிகிரேஷன் சட்டம், 1859ல் தொழிலாளர் ஒப்பந்தத் சட்டம் ஆகியன குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவர்கள் முதலில் லயன்களிலேயே (10x10 அடி அறைகள்) தங்கவைக்கப்பட்டனர். இந்த லயன்களே இவர்களது நிரந்தர வீடாகியது. சிலருக்கு இன்று வரையும் அதே கதைதான். குறிப்பாக இவ்வாறு கூட்டிவரப்பட்டவர்கள் செங்கல்பட்டு, மதுராந்தகம், வடஆற்காடு, சேலம், தென்னாற்காடு, திண்டிவனம், திருச்செந்தூர், சிதம்பரம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, பாபநாசம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளளைச் சார்ந்தவர்கள். இப்படி வந்தவர்களுள் பல குலவகுப்பினராக அடையாளம் காணப்பட்டனர். முக்கியமாக அகம்படியார், அம்பட்டர், அம்பலகாரர், ஆசாரி, இடையர், ஒட்டர், கம்மாளர், கவுண்டர், கள்ளர், குறும்பர், தோனார், சக்கிலியர், சாணார், செட்டி, தேவர், நாடார், நாயர், நாயுடு, பள்ளர், பறையர், பண்டாரம், வண்ணார், மறவர், முத்துராசா, முதலியார்கள், வடுகண்ணார் (வடுகர்), வலையர் (கரையார்), வள்ளுவர், வேளாளர் ஆகிய சாதிகளைச் சேர்ந்த மக்கள் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தமிழர்களின் புலம்பெயர் சூழல் மற்றும் காரணங்கள் பற்றி ஆராய்ந்து, இவர்களது உணர்வுபூர்வமான வெளிபாடுகளான நாட்டுப்புற இலக்கியங்கள், சமய வழிபாட்டுமுறைகள், சிறுதெய்வ வழிபாடுகள், குலதெய்வ வழிபாடுகள், என பகுத்துப் பார்கலாம். இதைவிட இயற்கை வழிபாடுகளும் காணப்பட்டது.

அதுபோல நாட்டுப்புற இலக்கியங்களை பின்வருமாறு பாகுப்படுத்தலாம். நாட்டுப் புறக் கதைகள், வாய்மொழிப்பாடல்கள், பழமொழிகள், மரபுக்கதைகள், பழங்கால நம்பிக்கைகளோடு இணைந்த வேறும் பல மரபுகள், போன்றனவும் காணப் பட்டன. அத்துடன் இசைக்கருவிகளின் பயன்பாடு, மரபு ரீதியானசடங்குகள், நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டுப்புற மருத்துவங்கள் போன்ற பாரம்பரியமாக கொண்டுவரப்பட்டன. இவர்களது குல முறைகள் பிரதேச பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் ஆகியன பூர்வீகப் பண்பாட்டின் வேர்களாக இங்குப்பரவி விருச்சமாகி இன்றும் பேணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு காணப்படுகிறது. அத்துடன் தம்மிடையே உள்ள ஒற்றுமை உணர்வுகளைச் சீரழிக்கப்பட்டு வேற்றுமை உணர்வோடு பல கூறாக நிற்பது ஏகாதிபத்திவாதிகளுக்கு சாதகமான நிலையாகும். இதை விளக்குவதாக பின்வரும் பாடல் அமைகிறது.

“ஆலமரமானேன்
ஆகா பெண்ணானேன்
ஆகா பெண்ணானேன்
ஆளுக்கொருதேசமானோம்” *என்றும்,*

“எட்டுப்பேர் சேவகரும்
எலங்கைக்கு போனதில்
எட்டுப்பேர் வந்ததென்ன நீங்க
எலங்கையிலே மாணடதென்ன“ *என்றும்,*

“கூனி அடிச்ச மலை
கோப்பி கன்னு போட்ட மலை
அண்ணனைத்தோத்த மலை
ஆந்தா தெரியுதடி” *என்றும்,*

“எலுமிச்சம் பழம் போல
இரு பேரும் ஒரு வயது
யாரு செய்த தீவினையோ
ஆளுக்கொருதேசமானோம்” *என்றும் கூறப்படுகின்றது.*

இவ்வாறு இவர்களின் உணர்வுகளால் தூண்டப்பட்டு பல வகையான பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். உதாரணமாக, தலாட்டுப்பாடல், சடங்குப்பாடல்கள், தொழிற்பாடல்கள், கதைப்பாடல்கள், கொண்டாட்டப்பாடல்கள், ஏற்றப்பாடல்கள், களையெடுப்புப்பாடல்கள், கதிர் அறுவடைப்பாடல்கள், வண்டிக்காரன் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என்பன காணப்பட்டது. சில இடங்களில் வாய்மொழிமூலம் இன்றுவரை இவைப் பாடப்படுகின்றன.

தேயிலைத்தோட்டங்கள், இறப்பர்த்தோட்டங்கள், கோப்பித்தோட்டங்கள் போன்ற பிரதேச அடிப்படைவாதத்திலும் பிற்காலத்தில் தொழிலுக்கேற்ப முறையில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இராசன் பாடல்கள், மதுரைவீரன் பாடல்கள், கட்டபொம்மு பாடல்கள், மணிக்குறவன் பாடல்கள், எனப்பற்பல கதைப்பாடல்கள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதைப்பாடல்கள் எனும்போது உடுக்கடிப்பாடல்கள், சாமியாட்டம், பேயாட்டம் போன்ற சில பாடல்களைகுறிப்பிடலாம். பொதுவாக நையாண்டிப் பாடல்களாகவும், கேலிப்பாடல்களாகவும் காணப்படுகின்றன. நாட்டில் ஏற்பட்ட இனவாதப்பிரச்சினையோடு ஏற்பட்ட பயங்கரமான சூழலும், புதிய கலாச்சார சூழலும், உலகமயமாக்கலின் விளைவுகளாலும் இவை ஆவணப்படுத்தப் படாமையினாலும் இப்பாரம்பரிய கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் அழிந்தும் மறைந்தும் வருகின்றன.

இம்மக்களது மதநம்பிக்கைகள், சடங்குகள், பல்வேறுவிழாக்கள், கலை இலக்கியங் கள் தென்னிந்தியாவில் தாம்வாழ்ந்த பூர்வீக இடங்களில் காணப்பட்ட பண்பாட்டு அம்சங்க ளில் சாயல்கள் பொதிந்து காணப்படுவதைக் காணலாம். அதேவேளை அவர்களின் மரபு ரீதியான அடிப்படையில் ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரை சமய சடங்குகளுடன் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பின்னிப்பிணைந்துள்ளன.

இலங்கை வந்த பின்னர் வெளியுலகத் தொடர்பற்ற தனிமைநிலை, மலைகள் காரணமாக கடுங்குளிர்காற்று, கடும் மழை, வெள்ளம் தொற்றுநோய்கள், பஞ்சம் பசிபட்டினி, பல்வேறு துன்ப துயரங்கள் போன்றன தமது சமயநம்பிக்கைகளுக்கு பற்றுகோலாக அமைந்தன. அந்த அடிப்படையில் இவர்களிடையே சாமி கும்பிடுதல் முக்கியம் பெற்றது. குறிப்பாக தெய்வத்தை நாடி தமது விடிவை நாடி அழுது புழம்புவது வழக்கம். அதனாலேயே அவர்களின் இவர்களிடத்தே குலதெய்வங்கள், சிறுதெய்வங்கள் என வழிபாட்டு முறைகள் காணப்பட்டன.

அவற்றின் பிரிவுகளான மாரியம்மன், பத்தினி யம்மன், சிவபெருமான், உமாதேவியார், காளி, காயத்திரி, சரஸ்வதி, விநாயகர், முருகன், இராமர், சீதை, அனுமான், கிருஷ்ணர், நாராயணன், சபரிமலைஐயப்பன், மாரியப்பன், காமாட்சி, ஏழுகன்னிகைகள், ஆகியன பெருந்தெய்வங்களாகவும், மதுரைவீரன், மாடசாமி, முனியாண்டி, ரோதைமுனி, காட்டுமுனி, தவறணைமுனி, கருப்பன்சாமி, வேட்டைக்கறுப்பன், செண்டாகட்டி, கவ்வாத்துச்சாமி, மின்னரடயான், மலைச்சாமி, வைரவர், ஈடும்பன், மாயாண்டி, சங்கிலிகறுப்பு, கறுப்புத் தெய்வம், சுடலைமாடன், உத்தரகாளி, மாரி ஆத்தா வனத்து சின்னப்பர், வனத்துஅந்தோனியார், மரியாள், சூசையப்பர், ஆகிய சிறு தெய்வங்களை குலதெய்வங்களாகவும் கொண்டு பூசைசெய்து வந்துள்ளனர். சிறு தெய்வங்களுக்கு ஆடு, கோழி பலியிட்டும், சுருட்டு சாராயம் படைத்தும், வழிபடுகின்றனர். இவ்வழிபாட்டு முறைகள் இன்று கேலிகூத்தாக பார்த்து வருகின்றனர். இவ்வாறான சிறுதெய்வ வழிபாட்டுக்கு பல காரணங்கள் முக்கியமானது. பல காரணங்களில் யாதெனில் அதிக எண்ணிக்கையுடையஇந்தவிளிம்புநிலைமக்களைபெருந்தெய்வவழிப்பாட்டாளர்களான நிலவுடைமைச் சமுதாயம் மேல் வர்க்க சமுதாயத்தோர் அவ்வாலயங்களுக்குள் சென்று வழிபட அனுமதிக்கவில்லை. அதனால் இவ்வாறு ஓதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் தமக்கென்று தெய்வங்களை படைத்துக் கொண்டார்கள். சிறு தெய்வவழிபாட்டில் பத்திரகாளி வழிபாடு, பின்னர் பிராமணர்களால் அம்மன் வழிபாடாக மாறிவருகின்றது. பூசாரிமுறை மாறி பிராமணர்கள் முறையும் பூசகர்முறையும் நடைமுறையிலுள்ளது. நகர்ப்புற கோயில்கள் பிராமணர்களால் ஆகம விதிப்படி கட்டப்பட்டு காணப்படுகின்றன.

இவ்வாறு புலம்பெயர் மக்களில் புத்தரை 'பெருமாள்சாமி' என்று அழைத்து வணங்குகிறார்கள். ஏனென்றால் ஆரம்ப காலங்களில் பரவலாக இந்தியாவிலிருந்து ஏனைய நாடுகளுக்கு பௌத்தம் பரவியது. குறிப்பாக தமிழ்நாடு, இலங்கை, ஆந்திரப்பிரதேச பெரும்பான்மையான மக்கள் பௌத்தர்களாக இருந்திருக்கிறார்கள். பல்வேறு காரணங்களால் பின்னர் இலங்கைத் தமிழர் முற்றாக அச்சமய வழிபாடுகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்துக் கொண்டதானது இன்று பல சிக்கலுக்குள் தமிழர்களை தள்ளிவிட்டது. அன்றைய நவீன காலத்தில் கல்வி அறிவு மேம்பாட்டால் குலபேதங்கள் சற்று தளர்வடைய குலதெய்வ வழிபாடுகளைப் பாமர மக்கள் இன்று கைவிட்டு வருகிறார்கள். குல தெய்வங்களுக்கு பதிலாக தோட்ட மட்டத்தில் சிறுதெய்வங்களை வழிபடுகின்றனார். ஆனாலும் ஆறுநாட்டு வேளாளர்களிடம் மட்டும் இன்றும் குலதெய்வ வழிபாடு காணக் கூடியதாகவுள்ளது. இதுபோன்ற குல தெய்வம் அவர்களின் அடையாளச் சின்னமாகவும் உள்ளது.

தமிழரின் நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டுப்புற சடங்குகள், நாட்டுப்புற வாய் மொழி பாடல்கள், நாட்டுப்புற வாய் மொழி கதைகள், நாட்டுப்புற விடுகதைகள், நாட்டுப்புற தெய்வ வழிபாடுகள், நாட்டுப்புற கலைகள் நாட்டுப்புற மருத்துவம், நாட்டுப்புற மந்திர சடங்குகள், என காலம் காலமாக நடைமுறையிலிருந்து வந்துள்ளன. நாட்டார்வழக்காறு இடம்பெயர்க் கோட்பாடின் படி (Migratory Theory)ஐரோப்பிய தேவதைக் கதைகள், இந்திய புராணக்கதைகளில் தொடர்புபட்டிருப்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. ஐரோப்பிய தேவதைக் கதைகள், இந்தியாவில் தோன்றி ஐரோப்பாவுக்கு இடம்பெயர்ந்தன. என்பதனை கோட்பாடாக தியோடோர் பென்ஃபி (Theodore Benfey) 1858 இல் கண்டுள்ளனர். இதேபோல் நாட்டார் வழக்காற்று ஆய்வாளர்கள், ஆய்வுகளில் "கடன் வாங்குதல்" என்ற கோட்பாடும் காணப்படுகின்றன என்கின்றனர். சமஸ்கிரத கதைகளை ஐரோப்பியர்கள், பின்பற்றியுள்ளனர். இது மக்களின் இடம்பெயர்வுகள், போர்கள், பயணம் செய்தல், போன்ற காரணங்களார் ஒப்புமைகள் ஏற்பட்டுள்ளன. இதனை "ஊடுருவிப்பரவுதல்" (Diffusion) எனவும் கூறினர்.

இயற்கையில் காணப்படும் பொதுவான இயல்புகளைக் (Common Sources) கொண்டு நாட்டார் வழக்குகள் ஊடுருவுவதை "வரலாற்று நிலவியல் அணுகுமுறை" என்று ஆராய்ந்தனர். இதனை காரணமாக வைத்து, அது பரவிய காலம், தோன்றிய இடம் என்பன பற்றி ஆராய்கின்றனர். இதேபோல் நாட்டார் வழக்காற்றில் சூழல் கோட்பாடும் முக்கியமானதாகும். இந்த கோடபாடுகளின் அடிப்படையிலேயே இலங்கை, இந்திய வம்சாவளி தமிழரின் நாட்டாரியல் பற்றி ஆராயப்படவேண்டியுள்ளது.

இங்கு மருத்துவ முறைகளாகப் பல காணப்பட்டன. முக்கியமாக நாட்டுப்புற மருத்துவமாக தாய்ப்பால் மற்றும் தாவரப் பதியப்பகுதிகளாலான மருந்துகள், விதைகள், கிழங்கு, காய், இலை. செடி, வேர், பட்டை என்பனவும் எழுமிச்சை, இஞ்சி, மஞ்சள், சீரகம், தும்பை, துளசி, மிளகு, பூண்டு, பல்வேறு தாவர பகுதிகளும் காச்சிய எண்ணெய், பழச்சாறு, தேன், பால், தயிர், மோர், முட்டை, மீன் ஆகியவற்றையும் பயன்படுத்தினர். வெளியில் பூசும் மருந்துகளாக ஆமணக்கு, பூண்டு, வாழைத்தண்டு, வேப்பிலை, கற்றாளை, மஞ்சள், மிளகு, உப்பு, தேன் ஆகியவை பயன்படுத்துகின்றனர். இங்கு, கண்நோய், உடல் வீக்கம், வலி, பீனிசம். பல் வருத்தம், உடல்காயங்கள் என பலவகை நோய்களுக்கு காரணமான வாதம், பித்தம், சிலேட்டுமம் (சளி) என்பனவற்றுக்கு கை மருத்துவம், வீட்டு மருத்துவம் செய்து குணமாக்கினார்கள். பிற்காலங்களில் இம்மருத்துவ முறையே சித்த மருத்துவம், ஆயுள்வேத மருத்துவம், யுனானி போன்ற வைத்திய முறைகளாக மாற்றம் பெற்றன. இவர்கள் மருத்துவ சடங்குகளாக நேர்த்திக்கடன் நிறைவேற்றி பலி செலுத்தி பிணிதீர்க்க பில்லிசூனியம், பேய் விரட்டல் போன்றவற்றையும் மேற்கொள்கின்றனர். திருநீறு மந்திரிப்பது இதில் முக்கியத்துவம் பெறுகிறது. சாமப்பேய், பிசாசு, முனி, கறுப்பு, மோகினி, ஆவி ஆகியவற்றை விரட்டும் சடங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புற விளையாட்டுகளைப் பொறுத்தவரை ஆண்கள் விளையாட்டுகளாக கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, கோலி விளையாட்டு, கிளித்தட்டு, சடுகுடு, வெட்டுக்கத்தி, வழுக்குமரம் ஏறுதல், பட்டம் விடுதல், டாம் விளையாட்டுகள் போன்றனவும், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல், மல்யுத்தம், சிலம்படி விளையாட்டு, வாளும் கேடயமும், மாட்டுவண்டி ஓட்டுதல் ஆகியன ஆண்களின் வீரவிளையாட்டுகளாக குறிப்பிடப்படுகின்றன. பெண்கள் விளையாட்டுகளாக கோலம்போடுதல், சமைத்து விளையாடுதல், நொண்டிக்கோடு, வீடுகட்டி விளையாடுதல் பாண்டியாடுதல், கோலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், குளம்கரை, காயா பழமா, கீச்சு கீச்சுத்தம்பாளம், கெந்தி விளையாடுதல் போன்ற விளையாட்டுக்களும், பொதுவாக இருபாலருக்குமான விளையாட்டுகளாக தொட்டுவிட்டு ஓடுதல், குதித்தல் (ஸ்கிப்பிங்), ஆடுபுலி ஆட்டம், கண்ணைக்கட்டி நொண்டித் தொடுதல், தாயக்கட்டையில் பல்வேறு விளையாட்டுகள், தொட்டால் விரட்டி, பந்தால் ஆள் அடித்தல், கண்கட்டி தேடல், கையைத்தொட்டவரை விரட்டல், நிழலைமிதித்தல், பழம் பொறுக்குதல் போட்டி, பம்பரம் விட்டு விளையாடல், குளம்கரை, காயா பழமா, கீச்சு கீச்சுத்தம்பாளம், பண்ணாங்குழி, சங்கிலிபுங்கிலி, முந்திரிக்காயும் நரியும், கண்ணாம்பூச்சி, ஓடிப்பிடித்து விளையாடுதல், சதுரங்கம் (டக்டிக்டொஸ்), போன்றன இடம்பெறுகின்றன.

வாழ்க்கைச் சடங்குகளாக, பிறப்பு, பூப்புனிதநீராட்டு, திருமணம், இறப்பு ஆகிய சடங்குகள் முக்கியமாகவுள்ளதோடு ஆடிமாதத்தில் பெண்ணை தாய்வீட்டுக்கு அனுப்புதல், பெண் பிள்ளைக்கு காது குத்துதல், தினத்தில் பெண்ணின் தாய்வீட்டிலும் அடுத்துவரும் வருடங்களில் கணவனின் தாய்வீட்டிலும் தாலியைப் புனிதப்படுத்தி தாலிக்கயிறு மாற்றல், தாலியினை மஞ்சள் நீராட்டல், 'பொட்டு' என்ற அணியினை தாலியுடன் இணைத்தல், மற்றும் பெண் கருத்தரித்து ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் மாதங்களில் கட்டுச்சோறுகட்டும் நிகழ்வு நடைபெறல், இதில் பெண்வீட்டார் கட்டுச்சோறு கட்டி வருவர், பிரசவத்துக்கு தாய்வீடு அழைத்து வரல், புளிகரைத்து தயிர்ச்சோறு கட்டல், தேசிக்காய், அல்லது தக்காளிச்சோறு கட்டல், பெண்வீட்டார் மாப்பிளைவீடு சென்று வளைகாப்பு அணிவித்தல், இது பெண்கருத்தரித்த ஏழாம் மாதத்தில் செய்யப்படுகின்றது. இது தவிர மகப்பேறு பார்த்தல், மகப்பேற்று தாயினை நீராட்டல், சேனைப்பாலூட்டல் என பிள்ளைக்கு பாலூட்டல், பேய் பிசாசுக்கு தோசபரிகாரஞ் செய்தல், பிள்ளைக்கு கழுத்தில் அல்லது இடுப்பில் நூல்கட்டுதல், கறுப்புப்பொட்டு வைத்தல், தொட்டில் கட்டுதல், மாமன் எண்ணச்சீலை கொண்டு தொட்டில் கட்டல், பெயர் சூட்டுதல், வித்தியாரம்பம் அல்லது ஏடு தொடக்குதல், பூப்புனிதநீராட்டல், களிகிண்டுதல், வண்ணான் சடங்கு, புண்ணியதானம், அதன் பின்னர், திருமணத்தின் போது, தாம்பூலம் மாற்றுதல், பத்திரிகைவைத்தல், பொன்னுருக்குதல், மணமகளின் வருகை, முகூர்த்தக்கால் ஊன்றுதல், ஓமம் வளர்த்தல், கன்னிகாதானம், மாங்கல்யதாரணம், அம்மி மிதித்தல், மிஞ்சி போடுதல், அருந்ததி பார்த்தல், குழந்தைபரிமாறல் ஐயர் இல்லாத திருமணம், என்பனவும் பின்பற்றப்படுகின்றன. இதேபோல மரணச்சடங்குகளிலும் இதில் தோடி போடுதல். கட்டைமெய் எடுத்தல், மாமன்சீரு, நீபிமாலை எடுத்தல், அரப்பு வைத்தல், நெய்ப்பந்தம் பிடித்தல், சீதேவி வாங்குதல், வாய்க்கரிசி போடுதல், கொள்ளிக்குடம் உடைத்தல், எட்டு செய்தல், மூன்றாம் குழி மூடுதல், கருமாதி செய்தல், தாலி கழற்றுதல், திவசம் செய்தல் என இச்சடங்குகள் அமைந்துள்ளன. இன்று மரண சடங்குகள் சூழலுக்கேற்ப மாறுபட்டு காணப்படுகின்றது.

இவர்கள் இசைக் கருவிகளாக, வீணை, தம்புரா, சுரகெத்து, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், சங்கு, எக்காளம், கொம்பு, தப்பு, தவில், மத்தளம், கஞ்சிரா, டமாரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கை, தம்பட்டம், முரசு, சேமக்கலம், ஜாலரா, கடம், கொக்கள், உடுக்கை என்பன இன்றும் ஆங்காங்கே புழக்கத்திலுள்ளன, பல கருவிகள் வழக்கொழிந்து போயின. தோட்டங்களில் இன்னும் சிலவற்றில் வேலை ஆரம்பிக்க சங்கொலி கேட்கிறது. அதற்குப் பதிலாக, பிரதியீடாக இன்று சில தோட்டங்களில் 'ஹோர்ன்' சத்தம் கேட்கிறது. இவர்களிடம் பறை, சிலம்பு மற்றும் கூத்து ஆகியன முக்கித்துவம் பெறுகின்றன. பறைக்கு தப்பு என்றே கூறுகின்றனர். காலைத்தப்பு, பிரட்டுத்தப்பு, பகல் உணவுத்தப்பு, மாலைத்தப்பு, ருதுசாந்தித்தப்பு, திருமணத்தப்பு, சாவுத்தப்பு, காவடித்தப்பு, கரகத்தப்பு, காமன் தப்பு, மங்களத்தப்பு என பலவகை தப்பு அடிப்பர். காமன்கூத்து, பொன்னன் சங்கர், அருச்சுனன் தபசு போன்ற கூத்துகள் ஆடப்படும் போது அதற்கு அடிக்கும் தப்புகளின் ஒசைகள் வேறுபட்டனவாக அமைகின்றன. இராமன் பஜனையும் தோட்டங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளன. வாஸ்தா எனப்படும் சிலம்பாட்டம் சிறப்புப்பெற்று காணப்பட்டது.

இசைக்கருவிகள் பல இன்று வழக்கொழிந்து போயின. பறைச்சத்தம் குறைந்து போனது. சிலம்பாட்டம் முற்றாகவே அழிந்து போனது நாட்டாரியரின் நவீன இலத்திரனியல் யுகத்தின் பூகம்பத்தில் ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. அருச்சுனன் தபசு, மற்றும் பொன்னன்சங்கர் கூத்துகளை காண முடிவதில்லை. காமன்கூத்து அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்னும் சில பகுதிகளில் நடைதளர்ந்து நடைபெற்றுவருகிறது. ஆனாலும் இதை உணர்ந்த கல்விக்குழுமங்கள், கலைஞர்கள் இக்கலைகளைப் பாதுகாக்க முயற்சி எடுத்துவருவது பாராட்டக்கிறயது. காமன்கூத்து தற்போது புதுப்பொலிவுடன் புதிய இசைவடிவத்துடன் அரங்கேறுகின்றது. ஒப்பாரிப்பாடல்களைக் கேட்கமுடிவதில்லை. சோக இசையுடனான சினிமாப் பாடல்களையே தற்காலங்களில் ஒலிபரப்புகின்றனர். ஏற்றப்பாடல்கள், நடுகைப்பாடல்கள், அறுவடைப்பாடல்கள் என்பன இன்று விவசாய நடவடிக்கைகள் இந்திரமாயமாகியுள்ளதால் மங்கிப்போயுள்ளன.

அண்மைக்காலமாக ஊடகங்களில் நாட்டுப்புறக்கலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. சினிமாவில் நாட்டுப்புறக்கதைகள், பாடல்களை மக்கள் இரசிக்கின்றனர். நாட்டுப்புற கதைகள், பாடல்கள், கலைகள், ஆடல்கள், கூத்துகள், விளையாட்டுகள், எனப் பல்துறைகளிலும் புதியபுதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் விமோசனம் கிடைப்பதாக தெரியவில்லை. அத்துடன் நாட்டுப்புற கலைஞர்களுக்கு இன்றும் சிறந்த அந்தஸ்து வழங்கப்படவில்லை. கிரிக்கெட் போட்டிகளில் 'கிளர்னட் பாண்ட்' அடித்து ஆடுகின்றமை வேடிக்கையாக உள்ளது. புலமையும் வறுமையும் எப்போதும் நண்பர்கள் இதன் மூலம் சடங்குமுறை கலைஞர்கள் மெல்ல மெல்ல தொழில்சார் கலைஞர்களாக மாறிவருகின்றனர். ஆனாலும் இதனை 'சக்கிலி பாண்ட்', என்றே அழைக்கின்றனர். கோழி, ஆடுபலியிடும் முறை, சுருட்டு, சாராயம் படைத்தல் போன்றனவும், சிறுதெய்வ வழிபாடுகளும், பலியிடலும், சாமிபார்த்தல் முறைகளும், சூனியம் செய்தல் முறைகளும் குறைந்து நீங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

புலம்பெயர் இந்திய வம்சாவளி தமிழர் பெருந்தோட்டத்துறையில் முற்றுமுழுதாக ஈடுபட்டுள்ளதால் இலங்கை பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். அன்னிய செலாவணியின் பங்கில் 1959ல் 59.6 வீதம் தேயிலை பெற்றிருந்தது. தேயிலை உற்பத்தியில் முழுமையான இந்தியத் தமிழரே ஈடுபட்டிருந்தனர். இது 1980களில் 35.1 வீதம் 1990களில் 24.9 வீதம், 2012ல் 11.1 வீதமாக குறைந்தடைந்து செல்கிறது. இறப்பர் உற்பத்தி வருமானம் 2012ல் 0.9 வீதமாகும். கால்நடை வளர்ப்பிலும் இவர்களது பங்கு குறிப்பிடத்தக்கதாகும். கால்நடை வளர்ப்பில் இவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பினை தனியே பிரித்து கூறமுடியாதுள்ளது. எனவே காலப்போக்கில் நோக்கின் இலங்கை பொருளாதாரத்தில் இவர்களது முக்கியத்துவம் குறைவடைந்து வருகின்றது. இலங்கையின் இன்றைய பொருளாதார சீரழிவுக்கு இதுவே அடித்தளமாகவுள்ளது. இவர்கள் தவிர வியாபாரிகளாக இங்கு வந்த இந்திய வம்சாவளியினர் வியாபாரத்துறையில் முக்கிய பங்கு வகிப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். கல்வி எழுச்சியால் இந்தியப்புலம்பெயர் இலங்கை வாழ் மலையகத்தமிழரின் தனிப்பட்ட அடையாளங்கள் அழிந்தும், மாற்றம் பெற்றும் வருகின்றன. இவர்கள் தங்களது ஆரம்ப வேர்கள் பற்றி எந்த அடிப்படை அறிவும் இல்லாதவர்களாக வாழ்கின்றனர். பலர் கலப்புத் திருமணங்கள் மூலமும், மதமாற்றங்கள் மூலமும் மொழி மாற்றம் மூலமும், தனித்துவத்தை இழந்து வருகிறார்கள். எனவே, இம்மக்களின் வரலாறு , தனிப்பட்ட கலாசார விழுமியங்களைத் தொகுத்து ஆவணப்படுத்திப் பாதுகாத்து, அழிந்து போகாமல் எஞ்சியிருப்பவர்களுக்குக் கொண்டு செல்வது பண்பாடுகள், கலாசாரங்களின் அடிவேர்கள் பற்றிய உண்மையான விடயங்களை ஆய்வு செய்வது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளதை உணருதல் இன்றியமையாததாகும்.

உசாத்துணை நூல்கள்

1. Nadesan, S. A History of the up country Tamil people. Colombo: Nandalala Publications, 1998.
2. Hollup, Oddvar. Bonded labour caste and cultural identity among Tamil plantation workers in Sri Lanka. Colombo: Charles Subasinghe & Sons, 1994.
3. நல்லையா, க. மலையகத் தமிழர் வரலாறு. கொட்டகலை: சாரல் வெளியீடு, 2003.Mahavamsa . Wilhelm Geiger (ed). Colombo: Ceylon Government Press, 1960.
4. இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும், கருத்து நிலையும் தொகுதி 1. கார்த்திகேசு சிவத்தம்பி (பதிப்பாசிரியர்). கொழும்பு : உதயம் நிறுவனம், 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

ஈழத்தமிழ்ப் பயண இலக்கியங்கள் தனிநாயகம் அடிகளார் முதல் தற்காலம் வரை

அறிமுகம்

தமிழ் இலக்கியத்தில் பயண இலக்கியம் தனியானதோர் இலக்கிய வடிவமாக உருவாகி, ஒரு புதிய பரப்பினைக் கொண்டு விளங்குகின்றது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' அல்லது யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்ற கருத்துக்கேற்ப ஒருவர் பயணம் மூலம் அனுபவித்த இன்பத்தினை எழுத்துருவில் வழங்குவது பயண இலக்கியமாகும்.

புதிய அனுபவங்களையும் புதிய உணர்ச்சிகளையும் பிறரோடு பகிர்ந்து கொள்வதற் காகப் படைக்கப்படும் இப்பயணப்படைப்பிலக்கியம் தரமான புதிய வடிவம் பெற்றுள்ளது. பல்வேறு மக்களுடைய இயல்புகள், பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், கலாசாரங்கள், சமயநம்பிகைகள், என்னபன பற்றி கண்களால் நேரில் கண்டவை, கேட்டறிந்தவை எனச் சகலவழிகளிலும் குறிப்பெடுத்துப் பாதுகாத்து வைத்து, கலையம்சத்துடன் இலக்கியவடிவம் கொடுப்பதுடன், தமக்கே உரித்தான சிறந்த நடைவளமும், சிறந்த மொழிப்பிரயோகமும் கொண்ட தரமான படைப்பிலக்கியமாக மிளிரச் செய்வதற்குத் தனித்திறமை அவசியம்.

சுற்றுலாப் பயணங்கள்

பாடசாலைக் காலத்திலேயே மாணவர்களுக்குக் கல்விச் சுற்றுலா பற்றிய எண்ணக் கருவானது, பாடவிதானத்துடன் ஒன்றிணைத்து வழங்கப்படுகின்றது. மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் வகுப்பாசிரியர்கள் மூலமாகவோ, பாடசாலைச் சுற்றுலாப் பயண பொறுப்பாசிரியர்கள் மூலமாகவோ சுற்றிலா பயணங்களுக்குக் கூட்டிச் செல்லப்படுகின்றனர். அதன் பின்னர், தாம் பார்த்து இரசித்தவற்றினைக் கட்டுரையாக அல்லது ஒப்படையாக எழுதும் வழமை பாடசாலை மட்டத்திலேயே ஆரம்பிக்கபடுகின்றது.

பழங்காலத்திலும் "யாத்திரை" செய்யும் வழமை இருந்து வந்துள்ளது. பண்டைக் காலத்து மக்கள் வியாபார நோக்குடன் திரைகடலோடித் திரவியம் தேட முற்பட்டுள்ளனர். தமிழ் இலக்கியத்தில் ஆரம்பகால பயண நூல்கள் இதிகாசக்காலத் திலிருந்தும், காப்பியங்களிலிருந்தும் தோற்றம் பெற்றுள்ளன. "செங்கோன் தரைச் செலவு," அர்ஜுனன் தீர்த்த யாத்திரை பத்துப்பாட்டுள் ஆற்றுப்படை பயணங்கள், பெரிய புராணத்தில் நாயன்மார் பயணங்கள், அரிச்சந்திரபுராணத்தில் பயணகாட்சிகள், என பயண இலக்கியங்கள் ஆரம்பமாகின்றன. இலங்கையர் கல்வி கற்பதற்காக இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளுக்குச் செல்லும் வழக்கமும் அக்காலந்தொட்டே இருந்துள்ளது. அரசியல் காரணத்துக்காக, வெளிநாடுகளுடன் வர்த்தகர் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள அரசியல்வாதிகள் வெளிநாடு சென்று வந்துள்ளனர். கலைவளர்ச்சி கருதி கலைஞர்களும் வெளிநாடு சென்று வந்துள்ளனர். இதைப்போலவே செல்வம் படைத்தவர்கள் பொழுதுபோக்காக வெளிநாட்டுப் பயணங்கள் சென்றனர். விளையாட்டுத்துறை சார்ந்தோர் விளையாடவும், கண்டங்களுக்கான சம்மேளனம், உலகச்சம்மேளனம் ஆகிய அமைப்புகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்களுக்காகவும் வெளிநாடுகளுக்குச் சென்று வந்துள்ளனர். இவர்கள் தமது பயண அனுபவங்களை இலக்கியமாக படைத்துள்ளனர். மாநாடுகளுக்காகவும், சொற் பொழிவாற்றுவதற்காகவும், பேராளாராகவும் சென்று வரும்போது உருவான படைப்புக ளும் அதில் பயண அனுபவங்களை கூறி நிற்பின் அவையும் பயண இலக்கியங் களாகின்றன. தொழில்பயணங்கள் தொழிற்சார் உத்திகளை எடுந்துரைத்தும், படைப்புகளாகவும், அரசியல்துறைசார் பயணங்கள் அந்நாட்டு அரசியலுடன், நாட்டு நிர்வாகப்பதவிகளினைப் பிறநாட்டுப் பதவி நிலைகளை ஒப்பிட்டாய்வு செய்வன வாயும், கண்காட்சிப் படைப்புகள் கவர்ச்சிப் பொழுதுப்போக்கு அம்சங்கள் கொண்ட இலக்கியபடைப்புகளாகவும் அமைந்துள்ளன. தல யாத்திரையின் மடங்கள், பக்தர்கள், மதத்தலைவர்களின் அனுபவங்களை, கட்டடக்கலை, சிற்பம், ஓவியம், தொடர்பான அனுபவங்களை கொண்டனவாகப் படைக்கப்பட்டுள்ள்ள. இந்நூல்களில் மனநிறைவு, பக்தி, மதத்தினை பரப்புதல், தலங்களை அறிமுகச் செய்தல் போன்ற காரணங்களுக்காகவும் பயண இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

புதியதொன்றினைக் கண்டவுடன் ஏற்படும் வியப்புணர்ச்சி, மகிழ்ச்சி, பிறருக்கும் தெரியப்படுத்தல் வேண்டும் என்ற, ஆவல் பிறரையும் அவ்விடங்களுக்கு சென்றுவர உந்துதல் என்பன செயல் வடிவம் பெற்றுப் பயண இலக்கியங்களாக்கப் படுகின்றன. இவை ஒரு வித வருணனையினைக் கொண்ட இலக்கியப்படைப்பாகவும் திகழ்கின்றன. ஒருவர் எந்த நோக்கத்தினை அடிப்படையாக வைத்துத் தமது அனுபவங்களை விபரிக்கின்றார்; என்பது முக்கியமல்ல. படிப்போர் நெஞ்சில், அந்த நோக்கம் அல்லது விடயம் படியுமாறு எழுதுவதே பயணவிலக்கியமாகும். இவை அனுபவ நூல்களாக வாசகர் மனங்களில் ஓர் எழுச்சியுணர்வினை ஏற்படுத்தும் தன்மையினதாகவும், புதிய உத்திகளோடு அனுபவங்களினைத் தொகுத்து வழங்குவனவாகவும், விடயங்களை ஆவணப்படுத்துவதாகவும் காணப்படுகின்றன.

இன்று பயணம் செய்வது எளிதாகிவிட்டது. வசதிகளும் வாய்ப்புகளும் பொருத்தமான வாகனங்களும், பெருகிவிட்டன. இதன் மூலம் பிரயாண நேரம் குறைக்கப்பட்டுள்ளது. தொழில் காரணமாகவும் வெளிநாடு சென்றோர் அங்கேயே குடியேறி, குடியுரிமை பெற்று வாழ்வதோடு தமிழிலக்கியப் பரப்பினை விரிவாக்கிப் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் எனும் புதியதோர் இலக்கிய வடிவம் உருவாகக் காரண கர்த்தாக்கள் ஆகியுள்ளனர்.

ஈழத்தவர் பயண இலக்கியங்கள் பற்றி முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவில்லை. இதற்குப் பிறநாடுகளில் அவை வெளியிடப்பட்டமை, இலங்கைத் தமிழ்ப் பயண இலக்கிய உசாத்துணை நூல்கள்பட்டியல் இல்லாமை. ஆவணப்படுத்தப்படாமை என்பன காரணமாகலாம். இதனால், இலங்கை தமிழ் படைப்பாளர்களின் பயண இலக்கிய நூல்கள் பற்றி எதிர்காலச்சந்ததியினர் அறிந்துக்கொள்ள முடியாதுள்ளது. இலங்கையின் பயண இலக்கியங்களின் பங்களிப்பின் தன்மைபற்றியும், பயண இலக்கிய நூல்களில் செல்நெறிகள், கையாண்ட சிறப்புச்சொற்பதங்கள், சிறப்புச்சொற்றொடர்கள், வழங்கிய தகவல்கள் பற்றியும் இதுவரை ஆராயப்படவில்லை.

இலங்கை தமிழர் எழுதிய பயண இலக்கிய நூல்களை வெளிக்காட்டுதலும், இவற்றை ஆவணப்படுத்தி, இந்நூல்களை வகைப்படுத்தி ஆராய்ந்து ஈழத்தமிழ்ப் பயண இலக்கியங்களின் முன்னோடிகள் யார் என்பதை அடையாளப்படுத்தலும், இப் பயண இலக்கியங்களின் பரிணாம வளர்ச்சிக்கு தனிநாயகம் அடிகளார் வகிபாகம் பற்றி ஆராய்வதும், காலத்துக்கேற்ப தமிழ்ப் பயண இலக்கிய நூல்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் மாற்றங்கள் அதன் பரிணாம வளர்ச்சி செல்நெறி பற்றி ஆராய்வதும், எடுத்துக்காட்டுவதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

ஈழத்தவர் தமிழ் பயண இலக்கிய நூல்களை முதன்மை ஆதாரமாகக் கொண்டும், சுவடியாற்றுப்படை, நூற்பட்டியல்கள், நூல்த்தேட்டம் மற்றும் நூலகப்பதிவுகளை அடிப்படையாகக் கொண்டும் வெளியான ஈழத்தவர் பயண இலக்கியங்களைத் தேடி, அவதானித்து, இந்த நூல்களை பட்டியற்படுத்தி, ஆவணப்படுத்தி, பயண இலக்கிய நூல்களை வகைப்படுத்தி தமிழ் அறிஞர்கள் பயண இலக்கியத்தில் ஏற்படுத்திய செல்வாக்கு பற்றியும் தனிநாயகம் அடிகளாரின் பங்களிப்பு பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களது பயண இலக்கிய நூல்களை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. நூலாகவன்றி அவ்வப்போது வெளியான கட்டுரைகள் இவ் ஆய்வில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

பயண இலக்கியங்களை பொதுவாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சுற்றுலா, கண்காட்சிப் பயணங்கள்
2. கல்விசார் பயணங்கள்
3. தொழில் ரீதியான பயணங்கள்
4. அரசியல் மற்றும் மாநாடுகளுக்கான பயணங்கள்
5. சமய யாத்திரைகள்
6. கலை – இலக்கியப் பன்னாட்டுத் துறைசார் பயணங்கள்
7. உள்நாட்டு பயண இலக்கியங்கள்
8. புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் பயண இலக்கிய நூல்கள்

ஆய்வுக்காக ஆவணப்படுத்தப்பட்ட முதன்மை ஆதார ஈழத்து தமிழ் பயண நூல்கள்

1. சோ. சிவபாதசுந்தரம் : (1947) "மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்" வானதி பதிப்பகம்
2. தனிநாயகம் அடிகளார் : (1952) "தமிழ்த்தூது" தமிழ் இலக்கியக்கழகம் வெளியீடு
3. கே.வைகுந்தவாசன் : (1953) "நான் கண்ட நவசீனா" தமிழாக்கம் வ.பொன்னம்பலம், சிந்தனை பதிப்பகம்.
4. கதிர் வேலுப்பிள்ளை : (1958) "மேலைநாட்டு தரிசன வரலாற்றின் சுருக்கம்" ஆசிரியர் வெளியீடு
5. சோ. சிவபாதசுந்தரம் : (1960) "கௌதம புத்தர் அடிச்சுவட்டில்" அமுது நிலையம்
6. யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள்: (1960) 'கைலாசம் கண்டேன்', சுதந்திரன் பிரசுரம்
7. எச்.ஸலாவுதீன் : (1964) 'நான் கண்ட மக்கா',சிபா பதிப்பகம்
8. தனிநாயகம் அடிகளார் (1966) ஒன்றே உலகம், பாரி நிலையம்
9. ஏ.எம்.ஏ.அஸிஸ் : (1967) 'மிஸ்றின் வசியம்', கலைவாணி வெளியீடு
10. ஏ.எம்.ஏ.அஸிஸ் : (1967) 'கிழக்காபிரிக்க காட்சிகள்', கலைவாணி வெளியீடு
11. ஏ.எம்.ஏ.அஸிஸ்: (1968) 'தமிழ் யாத்திரை', கலைவாணி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. எஸ்.எம்.கமாலுதீன் : (1968) 'தாய்லாந்து தலைநகரிலே', பாரி நிலையம்
13. ஏ.எம்.ஏ. அஸிஸ் (1968) முதல் உலக தமிழ்மாநாடு தணிக்கைப் பதிப்பகம்
14. ஏ.எம்.ஏ.அஸீஸ் : (1969) 'ஆபிரிக்க அனுபவங்கள் சுவையான பிரயாணக் கட்டுரைகள்', திரியெம் பப்ளிகேசன்
15. ஜோதி சூரியகுமார் '(1973) தென்னகத்தில் சில தினங்கள்........', ஜோதி பதிப்பகம்.
16. எஸ்.எம்.ஹசன் : (1975) 'நெஞ்சத் தாமரையின் இன்ப நினைவுகள்', இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம்
17. க.இந்திரகுமார் : (1976), 'புதுயுகம் கண்டேன்', மக்கள் எழுத்தாளர் முன்னனி வெளியீடு
18. க.சிவப்பிரகாசம் : (1976) 'சிரித்தன செம்மலர்கள்' , வீரகேசரி வெளியீடு
19. செய்னுல்ஹசன் : (1977) கோடையில் உல்லாசம்,ஆசிரியர் வெளியீடு
20. சோ. சிவபாதசுந்தரம் : (1978) 'சேக்கிழார் அடிச்சுவட்டில்''', வானதி பதிப்பகம்.
21. கைலாசபதி, சர்வமங்களம் கைலாசபதி: (1979) 'மக்கள் சீனம் காட்சியும் கருத்தும்', பாட்டாளிகள் வெளியீடுகள்.
22. எம்.எம்.உவைஸ் : (1982) 'நெஞ்சில் நிறைந்த சுற்றுலா'
23. சு.பாக்கியநாதன் மற்றும் திருமதி பாக்கியநாதன்: (1984) 'சிந்திக்கத்தூண்டிய ஜெர்மனிய கலாச்சாரம்' நான் வெளியீடு
24. ஐ.சாந்தன் : (1985) 'ஒளி சிறந்த நாட்டினிலே', ஈழமுரசு அறிவ+ட்டகம்
25. நா.முத்தையா : (1986) 'இந்தோனேசியாவில் இரண்டு வருட அனுபவங்கள்''', சாவகச்சேரி குருபவனம்
26. எம்.எம்.உவைஸ்: (1987) 'மக்கா பயணம்', பஷாரத் பப்ளிகேஷன்
27. கண.சுபாஷ் சந்திரபோஸ்: (1988) 'சாம்பல் மேட்டில் பூத்த சாதனை அலைகள்' கற்பகம் வெளியீடு
28. தங்கம்மா அப்பாக்குட்டி (1988) 'இலண்டனில் ஏழுவாரம்', தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்
29. எம்.கே.ஈ.மவ்லானா : (1990) 'எல்லாம் இன்ப மயம்', பசுக்கதிர் பதிப்பகம்
30. அபுநாஜாத் (1990) "சம்மாத்துறை முதல் அஸர்பைஜான் வரை",தெகிவளை,பாதை பப்ளிகேஷன்
31. லெ.முருகபூபதி: (1990) 'சமதர்ம ப+ங்காவில்', நீர்கொழும்பு பாரதி இல்லம்
32. ஈ.கே.இராஜகோபால் : (1991) ' வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்', தமிழன் வெளியீடு
33. ப. ஸ்ரீகந்தன் : (1994) 'இன்றைய யாழ்ப்பாண நிலைமைகள்', கனடா மஞ்சரி வெளியீடு
34. சோமஸ்காந்தன் : (1995) 'பொய்கை மலர்', காந்தளம் வெளியீடு. (இது இலங்கை யினுள் சுற்றுலா பற்றிய நாவல் என்பதால் வகுப்பாக்கத்தினுள் ஆராயப்படவில்லை.)
35. நூராாணியா ஹசன் : (1997) 'அஸ்கிரிய முதல் லாகூர் வரை',மக்கள் கலை இலக்கிய சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. ச.சதாசிவம் : (1998) 'இந்திய திருத்தல யாத்திரை','கனடாவிலிருந்து காசி முதல் கன்னியாகுமரி வரை' சிவகாசி இராஜாத்தி எக்ஸ்பொட்

37. தி.ஞானசேகரன் : (1999) 'அவுஸ்திரேலிய பயணக்கதை',ஞானம்பதிப்பகம்

38. மாத்தளை சோமு : (2000) 'இலண்டன் முதல் கனடா வரை',தமிழ்க்குரல் வெளியீடு

39. மாத்தளை சோமு : (2000) 'மாத்தளை முதல் மலேசியா வரை', தமிழ்க்குரல் வெளியீடு

40. வண்ணை தெய்வம்(2003) 'தாயகதரிசனம்', தமிழ் நெஞ்சம் வெளியீடு

41. டொமினிக் ஜீவா : (2001)'முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள்', மல்லிகைப்பந்தல் வெளியீடு

42. க.சபாரத்தினம் : (2002) 'மொஸ்கோ அனுபவங்கள்', இளம்பிறை வெளியீடு

43. க.சொக்கலிங்கம் : (2003)'அக்கரைச் சீமையின் அனுபவங்கள்', ப+ரணி வெளியீடு

44. மாத்தளை சோமு : (2003)'சிட்னி முதல் நோர்வே வரை', தமிழ்க்குரல் வெளியீடு

45. எம்.ஐ.எம்.அப்துல் லத்தீப் : (2003) 'புத்தளம்மன்னார் பாதையும் வரலாற்றுப் பயணங்களும்'

46. அந்தனிஜீவா : (2005) 'நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம்', மணிமேகலைப் பிரசுரம்

47. சோமகாந்தன் : (2005) 'சிரிக்கும் 'கோடையில் சிலிர்க்கும் பனிநாடு' பூபாலசிங்கம் புத்தகசாலை

48. இ.குருநாதன்(2005) ஸ்கான்புள்ளில் இருந்து கெய்ரோ வரை" ஒரு தரைவழிப்பயணம்"நான்குரச வெளியீடு.

49. நவம், ஆரையம்பதி. (2006) "குமரிமுதல் சென்னை வரை 19631964", சென்னை,மித்ரா ஆட்ஸ் கிரியேஷன்

50. சு.ஸ்ரீகந்தராசா (2006) 'ஓர் அவுஸ்திரேலிய ஈழத்தமிழரின் இந்தியப்பயணம்', மணிமேகலைப் பிரசுரம்

51. செ.கணேசலிங்கனின் : (2007) 'சில பயணக் குறிப்புக்கள்: அமெரிக்கா இங்கிலாந்து', குமரன் பப்ளிகேசன்

52. ஐ.சாந்தன் : (2007) 'காட்டு வெளியிடை, ஈழமுரசு அறிவூட்டகம்.

53. சாரல்நாடன் (2009) "சிந்தையள்ளும் சிவனொளிபாதமலை", சாரல் வெளியீட்டகம்.

54. கந்தவனம்,வி.(2009) "தென்னகத்தில் என்னகத்தார்", சென்னை, காந்தளகம்

55. பிரபா,கானா.(2009) கம்போடியா இந்தியா தொன்மங்களை நோக்கி, வடலி

56. பொன்னண்ணா வேலனண.(2010) "பனிமலை தாண்டிய பாதச்சுவடு", டென்மார்க், அறிவகம்

57. உதயகுமாரி பரமலிங்கம், (2010) நிலாவின் இந்திய உலா

58. பாலசந்திரன் ஞா : (2013) "அங்கோர் உலகப் பெருங்கோயில்" ஞானம் பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. தி.ஞானசேகரன் : (2013) ''வட இந்திய பயண அனுபவங்கள்'' ஞானம் பதிப்பகம்

60. தி.ஞானசேகரன் : (2015) ''இலண்டன் பயண அனுபவங்கள்'' ஞானம் பதிப்பகம்

61. இரா.மகேஸ்வரன் : (2015) ''ஆண்ட பரம்பரை , இலண்டன் பயணக்கட்டுரை'' குமரன் புத்தக இல்லம்.

62. இரா.மகேஸ்வரன் : (2015) ''அமைதி வழியும் மதுர மொழியும் : இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு பயணப் பதிவுகளை ஆவணப்படுத்தல்'' குமரன் புத்தக இல்லம்.

63. தி.ஞானசேகரன் : (2018) ''கனடா பயண அனுபவங்கள்'' ஞானம் பதிப்பகம் ஆகிய இதுவரை வெளியான 63 பயண இலக்கிய நூல்கள் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இனி, இந்நூல்களை ஆய்வினது வரையறைக்குள் உள்ளடக்குவோமாயின்....

1) சுற்றுலாக் கண்காட்சிப் பயணங்கள்

கதிர் வேலுப்பிள்ளை : 'மேல்நாட்டுத் தரிசன வரலாற்றின் சுருக்கம்',(1958)

எம்.கே.எம்.மவ்லானா : 'எல்லாம் இன்ப மயம்', (1989) நவம், ஆரயம்பதி. (2006) ''குமரிமுதல் சென்னை வரை 19631964'', சென்னை,மித்ரா ஆட்ஸ் கிரியேஷன்

சு. ஸ்ரீகந்தராசா : ஓர் அவுஸ்திரேலிய ஈழத்தமிழரின் இந்தியப்பயணம்',(2006)

செ. கணேசலிங்கன் : சில பயணக்குறிப்புகள்: அமெரிக்காஇங்கிலாந்து(2007)

நா.சோமகாந்தன் எழுதிய 'சிரிக்கும் கோடையில் சிலிர்க்கும் பனிநாடு'(2008)

செய்னுல்ஹசனின் : கோடையில் உல்லாசம்(1977) பிரபா,கானா.(2009) ''கம்போடியா இந்தியா தொன்மங்களை நோக்கி'', வடலி ஆகியன உள்ளடங்கும்.

2). கல்விப் பயணங்கள்

எஸ்.எம்.கமாலுதீனின் 'தாய்லாந்து தலைநகரிலே' (1968), பேராசிரியர் கைலாசபதி, சர்வமங்களம் கைலாசபதி யின் 'மக்கள் சீனம் காட்சியும் கருத்தும்' (1979) ஆகியன உள்ளடங்கும்.

3) தொழில் ரீதியான பயணங்கள்

கன.சுபாஸ் சந்திரபோஸ் எழுதிய 'சாம்பல் மேட்டில் புத்தசாதனை அலைகள்' (1968), ஐ.சாந்தன் எழுதிய 'ஒளி சிறந்த நாட்டினிலே' (1985) நா.முத்தையா 'இந்தோனேசியாவில் இரண்டு வருடஅனுபவங்கள் (1986) அபுநாஜாத் (1990) ''சம்மாத்துறை முதல் அஸர்பைஜான் வரை'', தெகிவளை, பாதை பப்ளிகேஷன், ஈ.கே.இராஜகோபாலின் வல்வெட்டித் துறையிலிருந்து அமேரிக்கா வரைகப்பலோட்டிய தமிழர்கள்' (1991), மாத்தளை சோமு எழுதிய மாத்தளை முதல் மலேசியா வரை (2000), க.சபாரத்தினம் 'மொஸ்கோ அனுபவங்கள்', (2002) ஐ.சாந்தன் எழுதிய 'காட்டு வெளியிடை' (2007) நூராணியா ஹசன் 'அஸ்கிரிய முதல் லாகூர் வரை', (1997 ஆகியன உள்ளடங்கும்.

4) அரசியல் மற்றும் மகாநாடுகளுக்கான பயணங்கள்

கே.வைகுந்தவாசன்: ''நான் கண்ட நவசீனா'' தமிழாக்கம் வ.பொன்னம்பலம், (1953) ஏ.எம்.ஏ.அஸீஸ் எழுதிய 'மிஸ்றின் வசியம்' (1967) ஏ.எம்.ஏ.அஸீஸ் எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கிழக்கபிரிக்க காட்சிகள்'(1967) ஏ.எம்.ஏ. அஸீஸ் எழுதிய ஆபிரிக்க அனுபவங்கள் சுவையான பிரயாண கட்டுரைகள்' (1969), ஏ.எம்.ஏ. அஸீஸ் எழுதிய ' முதல் தமிழ் உலகத் மகாநாடு' (1968) ஏ.எம்.ஏ.அஸீஸ் எழுதிய தமிழ் யாத்திரை (1968), லே.முருகபு+பதி எழுதிய 'சமதர்ம பூங்காவில்' (1990), க.இந்திரகுமார் எழுதிய 'புதுயுகம் கண்டேன்'(1976), க.சிவப்பிரகாசம் எழுதிய சிரித்தன செம்மலர்கள்' (1976), கதர் வேலுப்பிள்ளை எழுதிய 'மேலைநாட்டு தரிசன வரலாற்றின் சுருக்கம்' (1958) ஆகியன உள்ளடங்கும்.

5) சமயயாத்திரைகள்

சோ.சிவபாதசுந்தரம் எழுதிய 'மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் (1947) சோ. சிவபாதசுந்தரம் எழுதிய 'கௌதம புத்தர் அடிச்சுவட்டில்' (1947), யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் எழுதிய 'கைலாசம் கண்டேன்'(1960), எச்.ஸலாவுதீன்:'நான் கண்ட மக்கா',(1964), ஜோதி சூரியகுமார்: 'தென்னகத்தில் சில தினங்கள்....', (1973) சா.சிவபாதசுந்தரம் எழுதிய 'சேக்கிழார் அடிச்சுவட்டில்'(1978) எம்.எம்.உவைஸ் 'மக்கா பயணம்'(1987), தங்கம்மா அப்பாக்குட்டி எழுதிய 'இலண்டனில் ஏழு வாரம்'(1988) சதாசிவம் சேவியர் எழுதிய 'இந்திய திருத்தல யாத்திரை : கனடாவிலிருந்து காசி முதல் கன்னியா குமரி வரை': (1998) ஆகியன உள்ளடங்கும்.

6) கலைஇலக்கியப் பண்பாட்டுத் துறைசார் பயணங்கள்

தனிநாயகம் அடிகளாரினது தமிழ்த்தூது: (1952),தனிநாயகம் அடிகளாரின் "ஒன்றே உலகம்" (1966) எஸ்.எம்.ஹசன் எழுதிய 'நெஞ்சத்தாமரையில் இன்ப நினைவுகள்' (1975) , எம்.எம்.உவைஸ் நெஞ்சில் நிறைந்த சுற்றுலா (1982), ஞானசேகரன் எழுதிய 'அவுஸ்திரேலிய பயணக்கதை' (1999), மாத்தளை சோமு எழுதிய 'இலண்டன் முதல் கனடா வரை' (2000), டொமினிக் ஜீவா எழுதிய 'முப்பெரும் தலை நகரங்களில் 30 நாட்கள்' (2001), மாத்தளை சோமு (2003) எழுதிய 'சிட்னி முதல் நோர்வே வரை' (2003), அந்தனி ஜீவா எழுதிய 'நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம்' (2005), க.சொக்கலிங்கம் எழுதிய 'அக்கரைச் சீமையின் அனுபவங்கள்' (2003) , ஞா.பாலச்சந்திரன் எழுதிய உலகப் பெருங்கோயில் அங்கோர்வாட் (2013) ஆகியன உள்ளடங்கும்.

7) இலங்கைப்பற்றி இலங்கை எழுத்தாளர்களின் உள்நாட்டு பயண நூல்கள்:

சோமகாந்தன்: பொய்கை மலர் (நாவல்கதிர்காமம் பயணம் பற்றி கூறப்படுகின்றது) (1995), எம்.ஐ.எம்.அப்துல் லத்தீப் 'புத்தளம் மன்னார் பாதையும் வரலாற்றுப் பயணங்களும்' (2003).

சாரல்நாடன், சிந்தையள்ளும் சிவனொளிபாதமலை, (2009) ஆகியன உள்ளடங்கும்.

8) புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் பயண இலக்கிய நூல்கள்

வண்ணைத்தெய்வம் எழுதிய 'தாயகதரிசனம்' (2003) ப. ஸ்ரீகந்தன் 'இன்றைய யாழ்ப்பாண நிலைமைகள்' (1994), இ.குருநாதன்(2005) ஸ்கான்புள்ளில் இருந்து கெய்ரோ வரை "ஒரு தரைவழிப்பயணம்" சு.பாக்கியநாதன் மற்றும் திருமதி பாக்கிய நாதன் (1984) எழுதிய 'சிந்திக்கத் தூண்டிய ஜெர்மனிய கலாச்சாரம்' (1984) பொன்னண்ணா வேலணை.(2010) "பனிமலை தாண்டிய பாதச் சுவடு", டென்மார்க், அறிவகம் ஆகியன உள்ளடக்கி வகைப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பயண இலக்கியங்களின் போக்கினை ஆய்வோமாயின், ஆரம்பக்காலப் பயண இலக்கியங்கள் திருத்தல யாத்திரையை கூறும் சமயப் பெரியார்களின் 'அடிச்சுவடு' பற்றியனவாகவும் அதன்பின் தமிழாராய்ச்சி மாநாடுகள் பற்றியதாகவுமே அமைந்துள்ளன. இதில் தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்தாது குறிப்பிடத்தக்க ஆரம்ப நூலாகும். ஈழத்தமிழர்களே தமிழ்ப்பயண இலக்கியத்தின் முன்னாடிகளாக காணப்படுகின்றனர். இதன் முன்னோடிகளில் தனிநாயகம் அடிகளாரும் ஒருவர்.

யாத்திரை, செலவு போன்ற பதங்களும் பயண இலக்கியங்களில் பாவிக்கப்படுகின்றன. இந்த பதங்களிலேயே பல கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இந்திய தமிழ் நாட்டில் 1960களுக்கு பின்னரே பயண இலக்கியங்கள் பல நூலாக வெளியிடப்பட்டுள்ளன. ஏ.கே.செட்டியார் சோமலெ, நெ.து.சுந்தரவடிவேலு, சோமு ஆகியோரே முதலில் பயண இலக்கியங்களை எழுதினர். இலங்கையில் 1952ல் தனிநாயகம் அடிகளார் தனது முதல் நூலான தமிழ்தூது என்ற நூலில் முதல் அத்தியாயத்தினை பயண இலக்கியமாக வெளியிட்டுள்ளார். இதே காலத்திலேயே சி.எம்.இராமச்சந்திரன் (1948) கடலின் கண் முத்து, மு.வரதராசன் (1950) யான் கண்ட இலங்கை ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

1947இல் சோ.சிவபாதசுந்தரம் மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் என்ற நூலை வெளியிட்ட போதும் தனிநாயகம் அடிகளாரது பயண இலக்கிய நூலே பயண இலக்கியத்திற்குரிய கலை இலக்கிய அம்சங்களுடன் வெளியாகியுள்ளது. அதன் பின் 1966ல் அவரது 'ஒன்றே உலகம்' என்ற பயண நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூலே பயண இலக்கியம் என்பதற்கு சிறந்த விளக்கத்தினை எடுத்துக்காட்டுகிறது. இதில் 'சுற்றுச் செலவுக் கலை' என்ற தலைப்பில் இவ் விளக்கத்தினை வழங்கியுள்ளார். எனவே தமிழ் பயண இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராக தனிநாயகம் அடிகளாரை அடையாளப்படுத்தலாம்.

தனி நாயகம் அடிகளார் தமிழ்தூது என்ற நூலில் பர்மா, அமெரிக்காத்தீவான திரிநாடு, ஜமேக்கா, அட்லாண்டிக் தீவுகள், மார்த்தினிக் ஆகிய இடங்களில் தமிழர் சிறப்போடு வாழ்வதையும், ஜப்பானிலும், ஹவாய்தீவிலும் தமிழ் வானொலிகள் காணப்பட்டதையும், மணிலாவிலும், அமெரிக்க லொஸ் ஏஞ்சலிலும், சன் பிரான்சிஸ்கோவிலும் இந்திய தமிழ் உணவு சாலைகள் உள்ளதையும் நியுயார்க்கில் "தெருவில் வாராண்டி" என்ற தமிழ் இசைத்தட்டை கேட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.உரோமம் மாநகரில் வாழ்ந்த தமிழர் வீரமாமுனிவர் கழகம் என ஒரு மடத்தை நிறுவி தமிழைப் பயின்று வந்ததையும், தென் அமெரிக்க, வட ஆபிரிக்கா, எகிப்து, பலஸ்தீன், சிரியா போன்ற இடங்களில் பண்டை நாகரிக நிலைக்களங்களையும் பார்த்தது பற்றி எழுதியுள்ளார்.

தனி நாயகம் அடிகளார் அவரது "ஒன்றே உலகம்" என்ற இரண்டாவது பயண இலக்கிய நூலில் சுற்றுச் செலவுக்கலை, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், பர்மா, இந்தோனேசியா. ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, தென் அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மன், ஆஸ்திரியா, இத்தாலி, வத்திக்கான், கிரேக்கநாடு, போர்த்துக்கல், ஐரோப்பாவின் சிலநாடுகள் (டென்மார்க், பின்லாந்து, அயர்லாந்து, சுவிட்சலாந்து, பெல்ஜியம்) , ஆபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா (எதியோப்பியா, நைரொபி, மொரிசியஸ் தீவு), மேற்காசிய நாடுகள் (துருக்கி, லெபனான், ஈராக், ஈரான்) என தனித்தனியான தலைப்புகளில் இவரது பயண அனுபவத்தினை பயண இலக்கியமாக படைத்துள்ளார். இதில் இம்மக்களின் பண்பாடு, வாழ்க்கைமுறை, வழிப்பாட்டுமுறை, வணக்கஸ்தலங்கள், கல்விக்கூடங்கள், பழக்கவழக்கங்கள். பொருளாதாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் தன்மை என சகலத்தையும் கண்முன் காட்ட முயற்சித்துள்ளார். இவை பயண இலக்கியத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனைப் பின்பற்றியே பலர் பயண இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

இதன் பின் தோன்றிய பயண இலக்கிய நூல்கள் மாக்சிச, சமதர்மக் கொள்கைகளை விளக்கும் நூல்களாகவே காணப்படுகின்றன. நான் கண்ட நவசீனா, புதுயுகம் கண்டேன், சிரித்தன செம்மலர்கள், சமதர்ம பூங்காவில் போன்றன இந்த வகையை சார்ந்தவைகளாகும்.

இதன்பின் வேகமாக வளர்ந்த இஸ்லாமிய மதத்தைச்சார்ந்த மக்கா பயண நூல்கள், மிஸ்ரின் வசியம் (எகிப்து) போன்றவற்றுடன் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு பயண இலக்கிய நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. தமிழ் யாத்திரை, தாய்லாந்து தலைநகரிலே, நெஞ்சத்தாமரையில் இன்ப நினைவுகள், நெஞ்சம் நிறைந்த சுற்றுலா ஆகியன இஸ்லாமிய எழுத்தாளர்களது படைப்புகளாகும். இது இஸ்லாமிய தமிழ் இலக்கிய வளர்ச்சியினையும் எடுத்துக்காட்டுகின்றது.

இதன் பின் தொழில் ரீதியான பயண நூல்கள் தோன்றின. ஒளி சிறந்த நாட்டினிலே, இந்தோனேசிய இரண்டு வருட அனுபவங்கள், மொஸ்கோ பயணம், காட்டு வெளி யிடை, சாம்பல் மேட்டில் பூத்த சாதனை அலைகள் என்பன இந்த வகையைச் சார்ந்தாகும்.இதன் அடுத்த கட்டமாகவே இலண்டன் முதல் கனடா வரை, மாத்தளை முதல் மலேசியா வரை, முப்பெரும் தலை நகரில் 30 நாட்கள், சிட்னி முதல் நோர்வே வரை, நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம், அவுஸ்திரேலிய பயணக்கதை போன்ற எழுத்தாளர்களின், இலக்கிய வாதிகளின் பயணம் தொடர்பானவை நூல்களாக தோன்றியுள்ளன. இவற்றில் புலம்பெயர்ந்த தமிழர்களது வாழ்க்கைநிலை, இலக்கிய அமைப்புக்கள், இலக்கிய செயற்பாடுகள் பற்றி கூறப்படுகின்றன.

இன்று புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களது பயண விலக்கியங்கள் வேறொரு பரிமாணத்தினைத் தமிழிலக்கியத்திற்கு வழங்கக் கூடியவை. புலம்பெயர்ந்த பயணங்கள் அல்லது அகதிவாழ்க்கைப் பயணங்கள் எனவும், அதேநேரம் புலம்பெயர் இலக்கியங்கள் எனத் தனியாகவும் ஆராயத்தக்கவை. அண்மைக்காலமாக தாயக தரிசனம், இன்றைய யாழ்ப்பாண நிலைமைகள், அவுஸ்திரேலிய ஈழத்தமிழரின் இந்திய பயணம் போன்ற பயண இலக்கிய நூல்கள் போர்க்கால அனுபவங்களை குறிப்பிடும், அகதி வாழ்க்கையின் போது கண்ட அனுபவங்களை குறிப்பிடும் நூல்களாக வெளிவந்துள்ளன. எனவே காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஏற்ப இந்தப் பயண இலக்கிய நூல்களின் பொருளடக்கம் காணப்படுகின்றது. இது ஒரு புதிய பரிமாணத்தை நோக்கி நகர்கிறது எனலாம்.

முடிவுரை:

பயணத்தின் நோக்கம், பிறரோடு பகிர்ந்து கொள்ளும் தன்மை, மொழிப் பிரயோகம், எழுத்து வடிவம், நடைவளம், வர்ணனை, சமயநம்பிக்கைகள் ஆகியவற்றினைப் பொறுத்தும் மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தலுக்கு அப்பாற்பட்டு வேறுபட்டுக் காணப்படுகின்றன. உதாரணமாக அரசியல் பயணத்தில் இலக்கியத்துறை சார்ந்த நிகழ்வும் கலந்திருக்கலாம். அப்படியாயின் ஈழத்தமிழ்ப் பயண இலக்கியங்கள் ஒரு புதிய பரிமாணம் பெற்ற, ஒரு புதியப்பரப்பினைக் கொண்ட இலக்கியங்களாகவே எதிர் காலத்தில் அடையாளப் படுத்தப்படலாம். அவ்வாறான நூல்களின் முன்னோடி ஆய்வாக இவ்வாய்வு அமையும் என்பது எனது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

1. ஈஸ்வரன்.ச.2006 சுற்றுலாவியல், பாவை பப்ளிகேஷன், சென்னை.
2. ஞானபுஸ்பம், இரா. 1990 தமிழில் பயண இலக்கியம், தேன்மழைப் பதிப்பகம், சென்னை.
3. மகேஸ்வரன், இரா. 2011,'ஈழத்தமிழ் பயண இலக்கியங்களில் இஸ்லாமிய எழுத்தாளர்னளின் பங்களிப்பும் தனித்துவமான மொழி வழக்குகளும் – ஓர் புலமைசார் உசாவல்,' உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டு மலர், மலேசியா, pp66-70.
4. மகேஸ்வரன், இரா. 2011. 'ஈழத்தமிழ் பயண இலக்கியங்கள், து.மனோகரன் (பதி) அருணம்.பேராசிரியர் க.அருணாசலம் பாராட்டு விழா மலர். தமிழ்த்துறை. பேராதனைப் பல்கலைக்கழகம் பேராதனை pp.193 - 204..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

இலங்கைத்தமிழ் ஆவணங்கள்: ஆவணப்படுத்துதல் - வரலாறு - அதன் முக்கியத்துவம்

உலகில் சகல நாடுகளிலும் ஆவணக்காப்பகங்கள் உண்டு. ஆவணக்காப்பகங்கள் என்பது குறிப்பேடுகளை, நாளேடுகளை வெளியீடுகளை தொகுத்து வைத்து பாதுகாக்கும் இடமாகும். இன்றைய ஆவணங்களை வருங்காலத்தவர்களுக்கு பயன்படத்தக்கதாக பாதுகாத்து வழங்குவது இதன் பணிகளுள் முக்கியமானதாகும். இலங்கையில் ஆவணப்பாதுகாப்புக்கு நீண்டகால வரலாறு உண்டு. மூன்றாம் நூற்றாண்டில் மன்னர்காலந்தொட்டு இலங்கையின் பௌத்தமடாலயங்களிலும், கோயில்களிலும், நூல்கள் பாதுகாக்கப்பட்டும், பயிலப்பட்டும் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக மகாவிகாரைகள், அபயகிரி விகாரை ஆகியன ஆவணப்பாதுகாப்பு நிலையங்களாக விளங்கியிருந்தன. இலங்கையில் 3ம் நூற்றாண்டு முதல் ஆவணப்பாதுகாப்பு ஆரம்பிக்கப்பட்ட போதும் ஐரோப்பிய ஆட்சிக்காலத்திலேயே 16ம் நூற்றாண்டில் ஆவணப்படுத்துதல், நூலகம் என்பன முறைப்படி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பண்டைக்காலத்தில் மன்னர்களால் வழங்கப்பட்டவை குறித்துவைத்த ஆவணம் “பின்பொத்” (Pinpoth) என அழைக்கப்பட்டது. இதனை வைத்துக்காத்தவர் “பொத் வருன்” (Poth varun) நூல்காப்பாளர் என அழைக்கப்பட்டுள்ளனர். கோட்டை இராச்சிய காலத்தில் (1415 – 1597) மன்னரால் வழங்கப்பட்ட வாய்மூலத் தண்டனைகளைக் குறித்துவைத்த “முகவெட்டி” (Mukavetti) என்ற ஆவணம் பயன்படுத்தப்பட்டதாவும், கண்டி இராச்சியகாலத்தில் ஆவணங்களை ‘மகாமோட்டி’ (Mahamoutti) பாதுகாத்ததாக வரலாறுகளில்; காணப்படுகின்றன. இக்காலத்தில் மன்னர்கள் கொடையாக வழங்கிய காணிகளுக்கான ஓலைச்சீட்டு (‘olai Sittu’ - ‘Cul Put’) என அழைக்கப்பட்டதுடன் இவ்வாவணங்களை எழுதுபவரும், பாதுகாப்பவரும் ‘எழுதுனர்’ (liannah) எனவும் அழைக்கப்பட்டதாகவும் வரலாற்றில் காணப்படுகின்றது. அநுராதபுரகாலத்தில் (3001017) மன்னரது இராச்சியநிதிக்கணக்குகள் ‘பண்டக பொத்தகம்’ (Pandaka–Pottagam) என அழைக்கப்பட்டுள்ளது. அதேபோல் வரிஅறவிட்டவை ‘வரி பொத்தகம்’ (Vari-Pottagam) என அழைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றினை கூறும் மகா வம்சம், சூளவம்சம் என்பன தீபவம்சம் (Dipawamsa, Attakatha) எனும் 4ம்6ம் நூற்றாண்டு ஆவண ஏடுகளைத் துணைக்கொண்டு எழுதப்பட்டுள்ளன. இவை முடியாட்சி காலத்தில் நடைபெற்ற சில விடயங்களாகும். பின்னர் ஐரோப்பியர் வருகையோடு இதன் வருகையை ஆராய்வோம்.

போர்த்துக்கேயரே (1515–1656) ஆவணப்படுத்துதலை 16ம் நூற்றாண்டில் ஆரம்பித் துள்ளனர். ஒல்லாந்தர் (1640–1796) போர்த்துக்கேயரிடமிருந்து கொழும்பை 1656இல் கைப்பற்றிய போது ஆவணப்படுத்தப்பட்ட ஆவணங்களை கையளிக்கமறுத்து போத்துக் கேயர்கள் அழித்துள்ளனர். ஒல்லாந்தர் 1660–1662 காலப்பகுதியில் ஆவணப் படுத்துனர் (Record Keeper – Mr.Pieter de Bitter) நியமிக்கப்பட்டுள்ளார். இக்காலத்தில் பல நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு என ஆவணப் படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தர்களிடமிருந்து பிரித்தானியர் (17961947) இலங்கையை கைப்பற்றிய போது 1798 இல் ஒல்லாந்தரினால் (டச்சுக்காரர்) ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன. 1815இல் கண்டிஇராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டபோது கண்டி ஆவணங்கள், அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் மாவட்டக் காரியாலயங்களில் ஆவணக்காப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். 1870களில் நூலகங்களும், 1877ல் நூதனசாலையும் நூலகமும் (Museum and Library) ஆரம்பிக்கப்பட்ட பின் உள்ளூர் வெளியீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அச்சகம் மற்றும் வெளியீட்டாளர் சட்டம் 1885ல் கொண்டு வரப் பட்டுள்ளது. இலங்கை 19ம் நூற்றாண்டிலே நூல்கள் ஆவணப்படுத்தலை ஆரம்பித்துள்ளது. 1902ம் ஆண்டு ஆவணக்காப்பாளர் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டு கொழும்புக் கச்சேரியில் ஓர் அலுவலகமும் அமைக்கப்பட்டுள்ளது. 1902ம் ஆண்டு ஆவணப்படுத்தலில் ஒரு திருப்புமுனையாக ஆவணப்படுத்தல் மீண்டும் மாவட்ட மட்டத்தில்ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கண்டி, யாழ்ப்பாணம், காலி, கொழும்பு ஆகிய இடங்களில் நூதன சாலைகள்; (Museums) ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1942–1943 காலப் பகுதியில் 2ம் உலக யுத்த காலத்தில்; ஜப்பான் கொழுப்பில் குண்டு போட்டதால், ஆவணக் காப்பகம் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதேவேளை பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் (1876–1947) காலனித்துவ நாடுகளின் வெளியீடுகள் காலனித்துவ பதிப்புரிமைச்சட்டத்தின் கீழ் (Colonial copy right Act) சேர்க்கப்பட்டு பிரித்தானிய நூதனசாலையில் ஆவணப்படுத்தப்பட்டது.

1796 இலிருந்து 1948 வரையிலான காலப்பகுதி வெளியீடுகள், ஆவணங்கள் பிரித்தானியாவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. 1947 இலங்கை சுதந்திரம் பெற்றபின், சிலகாலம் கல்வியமைச்சின் கீழ் ஆவணக்காப்பகம் காணப்பட்டுள்ளது. 1951இல் அச்சக பதிப்புச்சட்டம் ("Printing press ordinance"- ''1951–20ம் சட்டம்) கொண்டுவரப்பட்டுள்ளது. 1952 இல் இலங்கை தேசிய நூல்விபரப் பட்டியலுக்கான உபஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்ட பின், கல்வி அமைச்சிலிருந்து ஆவணக்காப்பகம் உள்ளூராட்சி மற்றும் கலாசார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. 1962இல் முதலாவது தேசியநூற்பட்டியல் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்தே வெளியிடப் படடதுடன், இதன் வெளியீட்டுக்கு பிரித்தானிய தேசியநூல்விபரப்பட்டியலின் பிரதமஆசிரியர் திரு.எ.ஜெ.வேல்ஜ்ஜின் சேவையும் பெறப்பட்டுள்ளது. 1963 தொடக்கம் வித்தியலங்கார பல்கலைக்கழகத்தில் ஆவணங்கள் ஆவணப்படுத்தப்பட்டு 1975இல் ஆவணக் காப்பகம் பதியகட்டிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. 1974ஆம் ஆண்டிலிருந்து தேசிய நூற்பட்டியல் தேசியசுவடிகள் திணைக்களத்திலிருந்து தேசியநூலகசபை பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

இத்தேசியநூற்பட்டியல் சட்டவைப்பு நூற்சேர்க்கையின் அடிப்படையில் தயாரிக்கப் படுகின்றது. 1962 தொடக்கம் 1974ஆம் ஆண்டு வரையிலான தேசியநூற்பட்டியல் தேசியசுவடிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. 1974ஆம் ஆண்டு 48ஆம் இலக்கச்சட்டத்தின் மூலம் இத்திணைக்களம் தேசியஆவணக்காப்பகம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது. இதன் நோக்கம், 1974ஆம் ஆணடு 48ஆம் இலக்கச்சட்டத்திலும், 1981ம் ஆண்டு 30ஆவது இலக்கச்சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1885ஆம் ஆண்டின் அச்சகம் வெளியீட்டு பதிவுச்சட்டத்திற்கு அமைவாக, அச்சகங்களும் வெளியீட் டாளர்களும் சகல நூல்களினதும் பிரதிகள் ஐந்தினை வழங்கவேண்டும். இதில் ஒரு பிரதி 1973க்குப் பின், தேசியநூலகசபைக்கு வழங்கப்பட வேண்டும். இன்னுமோர் பிரதி 1952இலிருந்து பேராதனை பல்கலைக்கழகநூலகத்திலும், ஒரு பிரதிச் சுவடிகள் திணைக்களத்திலும் சட்டச்சேர்க்கையாக (Legal depository) ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1951 அச்சக வெளியீட்டாளர்கள் சட்டத்தின் பின், 1973இல், 45வது சட்டமாக தேசியசுவடிகள் சட்டம்; (The National Archives Low no 48, 1973) கொண்டுவரப்பட்டது. 1973இல், 51வது சரத்துக் கேற்ப இலங்கை தேசியநூலகசேவைகள் சபை (The Sri Lanka National Library service Board), ஸ்தாபிக்கப்பட்ட பின், இலங்கையில் வெளியிடப்படும் சகல வெளியீடுகளும் சட்டப்படி இச்சபை மூலம் ஆவணப்படுத்தப்பட்டுவருகின்றன. 1976 இல் இலங்கை தேசிய நூலக சேவைகள் (The Sri Lanka National Library service), ஆரம்பிக்கப்பட்டது. 1986ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் வெளியிடப்படும் நூல் களுக்கு சர்வதேசதராதர நூல்எண் (ISBN) வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் சர்வதேசதராதர நூல்எண் (ISBN) பெற்றுக்கொண்டால் மாத்திரமே இலங்கை தேசிய நூற்பட்டியலில் (National Bibliography) பதியப்படுகின்றது. இலங் கையைச் சேருந்தவர்கள் சர்வதேசதராதரநூல் எண்களை (ISBN) வேறு நாடுகளில் பெற்றுக் கொண்டால் இலங்கையரது நூலாயினும் இலங்கை தேசியநூற்பட்டியலில் பதியப்படுவதில்லை.

இலங்கை உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலத்தில் 'தமிழ் ஈழம்' பிரதேசத்தின் வெளியீடுகள், ஆவணங்கள் தமிழ் ஈழவிடுதலை போராட்ட இயக்கங்களின்; மூலம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை 2009இல் நடைபெற்ற யுத்தத்தினால் அழிந்துள்ள தாகக் கருதப்படுகின்றது. இதேபோல் யாழ்ப்பாணம் குரும்பசிட்டி கனகரத்தினம் என்னும் தனிநபரால் ஆவணப்படுத்தப்பட்ட தமிழ்ஆவணங்கள் பற்றிய தகவல்களையும் அறிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கையில் தமிழ்ஆவணங்கள் முழுமையாக ஆவணப்படுத்தப்படுவதில்லை. தமிழ் நூல்கள் பல இந்தியாவிலும் பிறநாடுகளிலும் அச்சிட்டு வெளியிடப்படுவதும், இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேசதராதர நூல் எண் பெறப்படாமை யும் எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் அக்கறையின்மையும் போதிய தமிழ் உத்தி யோகத்தர்களின்மையும், பாராமுகத்தன்மையும் தேசிய நூற்பட்டியலில் தமிழ்நூல்கள் பதியப்பட்டு ஆவணப்படுத்தப்படாதுள்ளன. இதனால் ஆய்வாளர்கள், எதிர்கால சந்ததியினர் இவை பற்றி அறியமுடியாதுள்ளன.

வரலாற்று துணையுடன் இலக்கிய வரலாற்று ஆய்வு நூல்களின் ஆதாரங்களுடன் இத்துறைசார்ந்த இரண்டாம் நிலை சான்றுகளுடன் களநிலையில் நேரடி அவதானிப்பு களுடனும், விளக்கநிலை வாயிலாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. 'நூல் தேட்டம்' என்ற நூல்பட்டியல் ஆவணம் முதலாம் தொகுதி முதல் ஐந்தாம் தொகுதி வரை அவதானிக்கப்பட்டது. வெளியீட்டாளர்களின் விலைப்பட்டியல்கள், நூலகங்களில் வைப்பிலுள்ள நூல்கள், வகுப்பாக்கப்பட்டியல்கள் ஆகியன அவதானிக்கப்பட்டது. இவற்றுள் அநேகமான நூல்கள் நூல்தேட்டத்தில் பதியப்பட்டுள்ளதால், நூல்தேட்ட பதிவுகளை அடிப்படையாகக் கொண்டே கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வில் துண்டுப்பிரசுரங்கள், பாடசாலை பாடநூல்கள், பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட நூல்கள், வினாவிடைகள் வர்த்தமானி வெளியீடுகள், அரசதிணைக்கள அறிக்கைகள் ஆகியன தவிர்க்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தமிழ் ஆவணங்களை ஆவணப்படுத்துதல் பூரணமாக நடைபெறவில்லை என வெளிக் காட்டல், இலங்கைத்தமிழ் ஆவணங்களை ஆவணப்படுத்துதலில் உள்ள இடர்பாடுகளை கண்டறிதலும், இவற்றினை களையும் வழிமுறைகளை கண்டறிதலும் தீர்வு காண்பதுமே இவ்வாய்வினது நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிந்தவையும் அவதானிப்புகளும்:

'சுவடிகள் ஆற்றுப்படை' என்ற நான்கு தொகுதிகளாக எஸ்.ஏச்.எம்.ஜெமீல் இலங்கை முஸ்லீம் எழுத்தாளர்களது நூல்களை ஆவணப்படுத்தியுள்ளார். சா.ஜோ.செல்வராஜா மட்டக்களப்பு மாவட்ட நூலியல் தொடர்பான வரலாற்றினை ஆவணப்படுத்தியுள்ளார். க.குணராசா(செங்கை ஆழியான்) இலங்கை நாவல்கள் பற்றியும், கனக செந்திநாதன், தில்லையூர் செல்வராஜன் மற்றும் பேராசிரியர் பூலோகசிங்கம் ஆரம்பகால வெளியீடு கள் பற்றியும் ஆவணப்படுத்தியுள்ளனர். இதே போல் புகலிட மண்ணிலே நூல்களின் பதிவுகளை ஒன்று திரட்டியும் இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களினது பதிவு களையும் 'நூல்தேட்டம்' என்ற நூல்தொகுதியாக இலண்டனில் உள்ள நூலகர் என்.செல்வராஜ் வெளியிட்டுள்ளார். ஆயிரம் நூல்களுக்கு ஒரு தொகுதி; என்ற வகையில் ஆறு (6) நூல் தேட்டங்கள் வெளியிட்டுள்ளதுடன் இலங்கைத்தமிழர்களது, மலேசிய, சிங்கப்பூர் வாழ் இலங்கைத் தமிழர்களால் வெளியிடப்பட்ட நூல்கள் ஒரு தேட்டமாகவும் வெளியிடப்பட்டுள்ளன. தொடந்தும் இலங்கைத் தமிழ்நூல்களை பதிந்து வெளிகொணர்தலில் ஈடுபட்டு;ள்ளார்.

ஆய்வுக்காக உதாரணமாக, 2005ஆம் ஆண்டினை நோக்குவோமாயின், "நூல்த் தேட்டம்" என்ற நூலின் பதியப்பட்டுள்ள தமிழ் நூல்களினை எடுத்துக்கொண்டால், தொகுதி; ஒன்று ஆறு வரை மட்டும் 2005ஆம் ஆண்டில் 361 இலங்கைத்தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் பதியப்பட்டு காணப்படுகின்றன. இந்நூல்களில் இலங்கை யில் 197 நூல்களும், சென்னையில் 99 நூல்களும், இங்கிலாந்தில் 24 நூல்களும், கனடாவில் 13 நூல்களும், ஜேர்மனியில் 08 நூல்களும், பாரிஸில் 07 நூல்களும், அவுஸ்ரேலியாவில் 05 நூல்களும், நோர்வேயில் 03 நூல்களும், டென்மார்க்கில் ஒரு நூலும் வெளியிடப்பட்டதாக பதியப்பட்டுள்ளன. இது 2005ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட நூல்களின் பதிவின் இறுதி முடிவல்ல. பின்தொடரும் ஏனைய தொகுதிகளிலும் 2005ஆம் ஆணடு வெளியீடுகள் பதிப்படவுள்ளன. ஆனால் இலங்கைத் தேசிய நூல் பட்டியலில் (National Bibliogrphy) 91 இலங்கைத்தமிழ் நூல்கள் மட்டுமே பதியப்பட்டுள்ளன. இதில் இரண்டு இந்தியாவில் வெளியிடப்பட்ட நூல்கள் மத்திரமே பதியப்பட்டுள்ளன. 270 இலங்கைத்தமிழ்நூல்கள் பதியப்படாது காணப்படுகின்றது. எனவே இலங்கை தேசியநூல்பட்டியலானது பூரணமானதல்ல என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

மணிமேகலை பிரசுரம் வெளியிட்டுள்ள விலைப்பட்டியலில் 72 இலங்கை நூலாசிரியர் களின் நூல்கள் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் இலங்கை தேசிய நூல்பட்டியலில் ஒரே ஒரு நூல் மாத்திரமே பதியப்பட்டுள்ளது. இது இலங்கை தேசியநூற் பட்டியலானது பூரணமானதல்ல என்பதற்கு மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். அத்துடன் இலங்கை நூலங்களில் வைப்பிலுள்ள பல நூல்;களுககும்; இலங்கை தேசியநூல்பட்டியலில் பதிவுகளைக் காணமுடியவில்லை. இதுவும் தேசியநூல்பட்டியலானது பூரணமானதல்ல என்பதற்கு ஒரு சிறந்ததோர் எடுத்துக்காட்டு ஆகும்.

மேலும், புகலிட மண்ணிலே இலங்கைத்தமிழர் நூல்களை ஒன்று திரட்டியும், இலங்கையிலே ஒன்று திரட்டியும் ஈழத்தமிழர் தேசியநூல்களின் ஆவணப்படுத்தலினை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வா றான பணியை மேற்கொள்ளும் அமைப்புகளாவன:

❖ ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும். (European Tamil Documentation and Research centre-ETDRC.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ உலகத்தமிழ் நூலகம் ஸ்காப்ரோ, ஒன்றாரியோ, கனடா.

❖ வல்வை ஆவணக் காப்பகம், கனடா.

❖ முல்லை அமுதன் ஆவணக்காப்பகம்

❖ தமிழ்தகவல் மையம் – ஆவணக்காப்பகம் (Tamil Information centre-TDC Library)

❖ மலையகஆவணக்காப்பகம் புசல்லாவ, (இந்திய வம்சாவளி இலங்கையரது ஆவணங்கள்)

❖ பிரித்தானிய நூலகம் (British Library)

❖ இலண்டன் பல்கலைக்கழக நூலகம் – SOAS–School of Oriental and African Studies Library, University of London)

தமிழ் நூல்களின், வெளியீடுகளின் ஆவணப்படுத்துதலில் காணப்படும் பிரச்சினைகள்

1. இலங்கையில் ஆவணப்படுத்துதலில் தொடர்ச்சியின்மை:

2. இலங்கை தவிர்ந்த பிறநாடுகளில் தமிழ் நூல்கள் வெளியிடுதல்:

2.1.1 : நூல்களை வெளியிடுவோர், எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் செலவு குறைவு மற்றும் சந்தைவாய்ப்பு போன்ற பொருளாதார காரணங்களினால் பல இலங்கைத் தமிழ் நூல்களை தமிழ்நாட்டில் வெளியிடுகின்றனர். இவ்வாறு சென்னையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு பதிவுகள் எதுவும் இலங்கையில் இல்லை. இவற்றுக்கு சர்வதேச தராதர எண் பெறப்படுவதும் இல்லை. எனவே, இவை இந்தியாவிலும் பதிவுசெய்யப்படுவதும் இல்லை

2.1.2 : 1983–85 ஆண்டுக்காலப்பகுதியில் அரசியல்காரணங்களுக்காக பல நூல்கள் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டு இலங்கை தவிர்ந்த பிற நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இவை இலங்கையில் தடைசெய்யப்பட்ட பிரசுரங்க ளாகும். இவ்வெளியீடுகளின் பதிவுகள் இந்தியாவிலும் இலங்கையிலும் இல்லை.

2.1.3 : தமிழகத்தில் சென்னையில் வெளியிடுவதற்கான காரணங்களில் பிரதான மானது, சென்னையில் வெளியீட்டாளர்களின் மூலம் வெளியிடப்படும் நூல்களை தமிழகஅரசு கொள்வனவு செய்வதே. எனவே எழுத்தாளர்கள் இந்தியாவில் வெளியிட ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு வெளியீடு செய்யும் போது தமிழகஅரசுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் இரண்டாம் பதிப்புகூட 'இரண்டாம் பதிப்பு' என குறிப்பிடப்படாது வெளியிடப் படுகின்றன.

2.1.4 : ஈழத்து எழுத்தாளர்கள் தமது நூல்களின் முதல் பதிப்பினை இலங்கை யில் வெளியிட்டு வரையறுககப்பட்ட விநியோகம் காரணமாக மீண்டும் தமிழகத்தில் மீள்பதிப்புச் செய்து இந்தியவாசகர் களுக்காக வெளியிடுகின் றனர். மாநிலமொழி அல்லாத நூல்களுக்கு விதிக்கப்படும் இறக்குமதி கட்டுப்பாடுகள் இருந்தபோதும், தமிழ்மொழி என்பதால் இலங்கை நூல்களுக்கு கட்டுப்பாடுகள் எதுவும் தமிழ்நாட்டில் இல்லை.

2.1.5 : இந்தியாவில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதர எண் (ISBN) பெறப் படாமைக்கு வெளியீட்டாளர்கள், அச்சகங்கள் "தீர்வை அல்லது வரியிலிருந்து" விலக்குப் பெற்று தப்புவதற்காக என கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2 புலம்பெயர்ந்தோர் வெளியீடுகள்

2.2.1 : 1786இல் மலேசியாவின் பினாங்கு தீவினை கைப்பற்றிய பின் ஆங்கிலேயரால் வரவழைக்கப்பட்டு பின் அங்கு குடியேறிய இலங்கைத்தமிழர்களும், 1950களுக்கு முன் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தொழில் நிமித்தம் குடியேறிய இலங்கைத்தமிழர்களது வெளியீடுகளும் நூல்களும் எங்கும் பதியப்படவில்லை. மலேசியா வாழ் யாழ்ப்பாணத் தமிழர்கள் 'இலங்கைத் தமிழர்' என்ற வரையறைக்குள்ளும் அடக்கப்படவில்லை.

2.2.2 : உள்நாட்டுதமிழ் ஈழ யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்து இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன், நோர்வே, டென்மார்க், சுவிற்சலாந்து, கனடா, கென்யா, அவுஸ்திடேலியா, ஐக்கியஅமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், பிஜி போன்ற நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களது வெளியீடு களும் நூல்களும் எங்கும் பதியப்படாது ஆவணப்படுத்தப்படாது காணப்படுகின்றன. புலம் பெயர்ந்த நாடுகளில் புலம்பெயர்ந்தோர் வெளியீடுகள் அந்த அந்த நாடுகளில் தேசியநூற் பட்டியலில் இடம்பெறுவதும் இல்லை. ஆவணப் படுத்தப்பட்டு இருப்பில் சட்டவைப்பில் வைக்கப்படுவது மில்லை.

3. இலங்கை தேசியநூற்பட்டியலில் பதியப்படாமை:

3.1 : இலங்கையில் வெளியிடப்படும் நூல்களில் சர்வதேசதராதர எண் பெறப்படாதவை தேசிய நூற்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாதது போல் அச்சகம், வெளியீட்டாளர் சட்டப்படி கையளிக்கப்படாத தமிழ் நூல்களைத் 'தேடிப்பெறல்' இடம்பெறுவதுமில்லை.

3.2 : இலங்கையில் கலாசார அமைச்சின் மூலம் சாகித்திய விருது வழங்கப்பட்ட நூல்கள் சிலவற்றின் பதிவுகளும் தேசிய நூற்பட்டியலில் காணப்படவில்லை. முன்னர் இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு மட்டும் சாகித்திய விருது வழங்கப்பட்டது. தற்போது பல சிறந்த எழுத்தாளர்கள் இலங்கையில் வெளியிடுவது செலவு அதிகம் என்ற காரணத்தினால் இந்தியாவில் அச்சிடுகின்றனர். அவற்றுக்கு விருதும் வழங்கப்படுகின்றன.. ஆனால், இவை ஆவணப்படுத்தப்படவில்லை; தேசியநூற்பட்டியலிலும் இல்லை; அதனால் சட்டவைப்பிலும் இல்லை.

4. உள்நாட்டு யுத்தமும் அதன் தாக்கமும்:

4.1 : இலங்கையின் யுத்தசூழல்காரணமாக புலம்பெயர்ந்தோர் தம் நூல்களை இலங்கையில் வெளியிடுவதற்கு பயங்கொள்ளுகின்றனர். ஈழமக்கள் விடுதலை தொடர்பான தகவல்கள் இருப்பின் இலங்கையில் வெளியீட்டாளர் கள் பல விசாரணகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதால் பல நூல்கள் இந்தியாவில் வெளியிடப்பட்டன. தற்போது இந்தியாவிலும் வெளியிடுவது சிக்கலாகியுள்ளதால் ஐரோப்பாவில் வெளியீட்டு முயற்சிகள் சிறப்புப்பெற்றுள்ளன. ஆனால் இவை இலங்கையில் தேசிய நூற்பட்டியலில் சேர்ப்பதற்கு எவ்வித பிரயத்தனமும் எடுக்கப்படவில்லை.

4.2 : 'ஈழம்' என்ற வார்த்தைப்பிரயோகமும் இலங்கையில் நூல்களை அச்சிட்டு வெளியிட பல சிக்கல்களை தோற்றுவித்துள்ளமை மற்றொரு காரணமாகும். வடகிழக்கு தமிழ் எழுத்தாளர்கள் தமது விடுதலை பிரச்சினைகள் தொடர்பான இலக்கிய நூல்களை இலங்கையில் வெளியிடாமல் வெளி நாடுகளிலேயே வெளியிட்டனர். இந்தப் பதிப்புத்தளமாக இந்தியாவே அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.3 : யுத்தசூழலில் இலங்கை வெளியீட்டாளர்கள், பதிப்பகத்தார் ஈழத்தமிழரின் நூல்களை வெளியிட ஆர்வம் காட்டவில்லை. இவர்கள் எழுத்தாளர்களை அணுகவும் இல்லை. இச்சந்தர்ப்பத்தினை இந்திய வெளியீட்டாளர்கள், பதிப்பகத்தார் பயன்படுத்திக்கொண்டார்கள்.

5. எழுத்தாளர், வெளியீட்டாளரின் புறக்கணிப்பும் திணைக்களத்தின் புறக்கணிப்பும்:

5.1 : தமிழ் பிரதேசஅச்சகங்களும், வெளியீட்டாளர்களும், பதிப்பகத்தார்களும் அச்சகச் சட்டமூலத்தின்படி சுவடிகள் காப்பகத்துக்கு ஒழுங்காக நூல்களை அனுப்பிவைக்காமை

5.2 : தமிழ்நூல்கள் சுவடிகள் காப்பகததக்கு அனுப்ப வேண்டும் என்ற அக்கறையின்மை,

5.3 : தேசிய சுவடிகள் திணைக்களத்துக்கு தமிழ் நூல்கள் கிடைக்காமை,

5.4 : இலங்கைச்சுவடிகள் திணைக்களத்திலும், தேசியநூலகத்திலும் தமிழில் வேலை செய்யக் கூடிய தேவையான தமிழ்ஆட்பலமின்மை நூற்பட்டியல் தயாரிப்பில் பின் தங்கியநிலை ஏற்பட ஒரு காரணமாகின்றது. இதனால் எதிர்கால சந்ததியினரின் ஆய்வுகளுக்குத் தேவையான பதிவுகள் குறைவடைந்துள்ளமை மாத்திரமல்லாது ஆவணப்படுத்துதல் இல்லாது போயுள்ளமை பெருங்குறைபாடு.

இலங்கையில் நூற்பதிவு இலக்கத்துடன் வெளியீட்டாளர் வெளியிடுவதை ஊக்கப்படுத்த வேண்டும். தமிழக அரசு இலங்கை தமிழ்நூல்கள் வெளியிடுவோரை "நூல் பதிவு" இலக்கம் பெற வேண்டும் என கட்டாயப்படுத்த வேண்டும். நூல் வெளியீட்டாளரும் நூல் பதிவு இலக்கம் பெற ஆர்வம் காட்டவேண்டும். நூல் பதிவு இலக்கம் பெறாமல் வெளியிடுவோரிடம் நூல் வெளியிடுவதை தமிழ் எழுத்தாளர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். வெளியீடுகள் அனைத்தும் தேசிய நூலகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு தேசியநூல் பட்டியலில் பதிவு செய்ய வழிகோல வேண்டும். இதற்காக அரசாங்கத்தினை வலியுறுத்த வேண்டும்.

தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். பாராமுகப்போக்கு தவிர்க்கப்பட வேண்டும். இலங்கையிலும், பிறநாடுகளிலும் சட்டப்படி நூல்பதிவுஎண் பெறாத நூல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் நூற்பதிவினை ஊக்குவிக்க வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனமாக எழுத்தாளர், வெளியீட்டாளர்கள் ஒன்றிணைந்து ஒரு ஆவணகாப் பகத்தினை அமைத்து தமிழ்நூல் ஆவணப்படுத்தலினை மேற்கொள்ள ஆவனசெய்ய வேண்டும்.

புகலிடநாடொன்றில் முழுமையான ஆவண காப்பகம் ஒன்றினை நிறுவுதல் வேண்டும். தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகத்துக்கு எழுத்தாளர், வெளியீட்டாளர்கள் நூல்களை வழங்க வேண்டும். சுவடிகள் திணைக்களம், தேசிய நூலகம் ஆகியன தமிழ் நூல்களை தேடிப்பெற வேண்டும். மற்றும் சர்வதேசதராதர எண் பெறாத நூல்களையும் தேசிய நூல்பட்டியலில் சேர்த்து பதியப்படவேண்டும். மேலும் புலம்பெயர்ந்தவர்களின் நூல்களையும் தேடிப்பெறல் வேண்டும். சுயதணிக்கைக்குட்படாது இலங்கையை சேர்ந்த, புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் நூல்களை சுவடிகள் திணைக்களம், தேசிய நூலகம் ஆகியனவற்றுக்கு வழங்க வேணடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சாகித்திய பரிசு மற்றும் விருதுகள் வழங்கும் போது நூல் பதிவு இலக்கம் பெற்ற நூல்களை மட்டும் மதிப்பீடு செய்து பரிசுகள் வழங்கவேண்டும்.

உசாத்துணை நூல்கள்:

- கனக.செந்திநாதன், 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' கொழும்பு, அரசு வெளியீடு, (1964)
- செல்வராஜ், என்., "மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம் தொகுதி–1", ஐக்கிய இராச்சியம், அயோத்தி நூலக சேவைகள்;, 2007.
- செல்வராஜ்,என்., "நூல்தேட்டம் தொகுதி 15", ஐக்கிய இராச்சியம், அயோத்தி நூலக சேவைகள், 20022008.
- செல்வராஜ், என்., "வேரோடி விழுதெறிந்து", கொழும்பு, ஞானம் பதிப்பகம், .2009.
- நடராசா, எப், எக்ஸ், சி.,'ஈழத்துதமிழ் நூல் வரலாறு' கொழும்பு, அரசு வெளியீடு, 1970.
- பூலேகசிங்கம், பொ., "தமிழ் இலக்கியத்தில் ஈதை தமிழர் பெருமுயற்சிகள்", கொழும்பு, குமரன் இல்லம்', 1970.
- மகாலட்சுமி, தி.,நிர்மலா, சூ., பூமிநாதன், த., 'சுவடிச்சுடர்', சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002.
- ஜெமீல், எஸ்,எச்,எம், "சுவடி ஆறறுப்படை" கல்முனை, இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், 1994
- Maheswaran, R "Bibilometric Study of Tamil Publications in Sri Lanka in 2005" , Colombo, University Librarian association of Sri Lanka, 2007.
- National Library of Sri Lanka: Colombo; Sri Lanka National Library Service Board, 1995.
- Wimalaratne, K, D, G,. "An Introduction to the National Archives in Sri Lanka "Colombo, Social Science Research Centre, National Science Council of Sri Lanka, 1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

மலையக சமூக மாற்றத்தில்; சமூக நாடகப் பிரதிகளின் வகிபாகம்:

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு தொழிலுக்காக கூட்டி வரப்பட்ட இந்தியத் தமிழர்கள் மலையகத்தமிழர்கள் அல்லது இந்தியவம்சாவழித்தமிழர்கள் என அழைக்கப்படுகின்றனர். அவர்களின் பொழுது போக்காகவும் கலாச்சாரவிழுமியங்க ளின் எடுத்துக்காட்டாகவும் விளங்கும் நாடகங்களின் நாடகப்பிரதி வளர்ச்சி மற்றும் கலை அம்சங்கள் பற்றி ஆராய்ந்து ஆவணப்படுத்துவதே இவ்வாய்வாகும். நிகழ்கலையான (மலையக) நாடகங்களின் பிரதிகளை வரலாற்று நிலவியல், சித்தாந்த அல்லது இலட்சிய கோட்பாடு ரீதியான, மரபுவழக்காற்று, புராணவியல், பண்பாட்டு மற்றும் ஒப்பீட்டு ரீதியாக நாடக பிரதிகளின் வளர்ச்சி பற்றி ஆராய்ந்து ஆவணப்படுத்துத்தப்பட்டுள்ளது. பிரபலமான, புகழ்பெற்ற, பரிசுபெற்ற மலையக சமூகநாடகப் பிரதிகள் ஆவணப்படுத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட, நாடகப்பிரதிகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலுருவில் வெளியிடப்பட்ட நாடகப் பிரதிகளையும், ஆவணப்படுத்தி மலையக நாடக எழுத்தாளர்களும், தயாரிப்பாளர்களும் நாடக சபாக்களும், மலையக நாடகக் கலைஞர்களும், நாடகவளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாய்வில் நூலாக வெளிவந்த நாடகப்பிரதிகள் ஆராயப்பட்டு பாத்திரப்படைப்பு, மொழிவழக்கு, நாடகத்தலைப்பு, அரங்கமைப்பு, கருப்பொருள், போன்றன பற்றியும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. சமகால நாடகப்பிரதிகளை ஒப்பிட்டு நாடகப்பிரதிகளில் பயன்படுத்தப்பட்ட பாத்திரவமைப்பு, மொழிவழக்கு போன்ற கலாச்சார, கலையம்சங்கள் எடுத்து ஆராயப்பட்டு மலையகத் துக்கே உரித்தான பண்புகளைக் கொண்டிருப்பதும், நாடகப்பிரதிகளில் தலைப்பு, அரங்கமைப்பு, கருப்பொருள் போன்றன காலத்துக்கு ஏற்றவாறு மாற்றமடைதுள்ளமையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

மலையகத்தில் பாடசாலை மட்டத்தில் கலைவிழாக்களிலும், பல்கலைக்கழக மட்டத்தில் கலைவிழாக்களிலும், நாடகவிழாக்களிலும், ஆசிரியர் கலாசாலைகளான தலவாக்கலை, யதன்சயிட், கொட்டக்கலை, பண்டாரவளை, பேராதனை ஆகியவற்றிலும் குறிப்பாக ஏனைய ஆசிரிய கலாசாலைகளிலும், கல்வியற் கல்லூரிகளிலும் சிறப்பாக ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி மற்றும் பேராதனை, மகாவலி கல்வியல் கல்லூரிகளிலும், தொழிநுட்ப கல்லூரிகளிலும், இளைஞர் சேவை மன்றங்களிலும், தொடர்ச்சியாக மலையக நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்துள்ளன. மலையக நாடகங்களின் ஆரம்பக்காலம் நாட்டுக்கூத்துக்களாகவும் பின் சமயதத்துவ அறப்போதனை நாடகங்களாகவும் திராவிடக் கொள்கை பரப்பு, சமூகவிழிப்புகால நாடகங்களாகவும், பின் அரசியல் எழுச்சி கொண்ட நாடகங்களாகவும், சமூக விடுதலை, சர்வதேச சமூக மாற்றங்களுக்கான அரங்குகளாகவும், புதிய வடிவிலான, புதிய உத்திகளுடைய நாடகங்களாகவும் வளர்ச்சி பெற்றன. இதில் அண்மைக்கால சமூகநாடகப்பிரதிகள் இவ்வாய்வில் நோக்கப்பட்டுள்ளன.

இவற்றுள், அண்மைக்காலத்தில் நுவரெலியாவில் ஜெகநாதன் சுகுமாரன் பல நாடகங்களை நெறியாள்கை செய்து நடித்தும் உள்ளார். இவரது நாடகங்கள் தேசிய நாடக விழாவிலும் மேடையேற்றப்பட்டுள்ளன. "யாரை நம்பி நான் பிறந்தேன்" நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது புகழ்பெற்ற நாடகமாகும். இவரது படைப்பாக "காமாட்சியும் ஒரு கண்ணகி தான்" (2005) மணிமேகலை பிரசுரமாக நூலுரு பெற்றுள்ளது. இவர் தனது நாடகப் பிரதிகள் மூலம் மலையக மக்களின் தாழ்ந்த நிலை, கல்வியில் பின்தங்கியமை, ஊதியம் விரயமாக்குவது, மது பழக்கத்திற்கு எளிதில் அடிமையாவது போன்ற சமூக சீர்க்கேடுகளைச் சுட்டிக்காட்டி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கிறார். இவர் "காயத்திரி" என்ற தொலைகாட்சி நாடகத்தினையும் தயாரித்துள்ளார். இவரினது நாடகப்பிரதிகளை சமகாலத்துநாடகப்பிரதிகளுடன் ஒப்பிட்டும் நோக்கப்பட்டுள்ளன.

சமகாலத்தவரான, இரம்பொடையைச் சேர்ந்த மலையக வாசுதேவன் (1975) ரம்பொடை லேமாசி பி தங்கராஜ் நாடகங்களிலும் பின்னர் 1980களில் ரம்பொடை புரொட்டொஸ் மேமலை தோட்டத்தில் வாழ்ந்த நாடக ஆசிரியரான இரா.ஆறுமுகம் வழிகாட்டலில் பல நாடகங்களிலும் நடித்தார், பிற்காலத்தில் இவர் சில சமூக நாடகப் பிரதிகளை உருவாக்கி மேடையேற்றினார். நியூ பீக்கொக், சோகம புசல்லாவ போன்ற பெருந்தோட்ட பகுதிகளில், தோட்ட கலைஞர்களைக் கொண்டு பல மலையக மண் வாசணை கருவூலங்களை கதையாகக் கொண்ட சமூகநாடகப் பிரதிகளைத் தயாரித்து மேடையேற்றியதோடு, தேசிய நாடக விழாவிலும் பரிசில்களையும் பெற செய்தார். இவர் இயற்பெயர் ஏ.எம். வாசகம் (வாசுதேவன்). இ.தொ.கா. மாநாட்டில் "வழிகாட்டி"(1993) என்ற நாடகப்பிரதியும்; இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தேசிய நாடகவிழாவில் "வாடிய ரோஜாவைத் தேடிய ராஜா"(1995) என்ற நாடகப்பிரதியும்; நாடகங்களாக தயாரித்து மேடையேற்றப்பட்டன. இவரது "பயணம் ஒன்று", " புதிய சிந்தனை", "பணத்தால் வந்த வினை", "தீராத விளையாட்டு", "எங்கே சுதந்திரம்"; ஆகிய நாடகங்கள் புகழ்பெற்ற நாடகங்களாகும். 1995இல் தெலுங்கு காங்கிரஸ் நாடகவிழாவில் "பயணம்" என்ற நாடகம் ஐந்து விருதுகளைப் பெற்றது. இவரது "எங்கே சுதந்திரம்" என்ற நாடகப்பிரதி மதிப்பார்ந்த படைப்பு என்ற விருதினை 1998 இல் அரசதமிழ் நாடகவிழாவில் பெற்றுள்ளது. இவரது நாடகப்பிரதிகளில்"பணத்தால் வந்த வினை" தேசிய நாடக விழாவில் சிறந்த நடிகை துணை நடிகை, சிறந்த கதைக்கான விருது பெற்றது. நுவரெலியா இந்துகலாசார பேரவை மத்தியமாகாண இந்து கலாசார அமைச்சுடன் நிகழ்த்திய நாடகவிழாவில் "புதிய சிந்தனை" என்ற நாடகம் முதலிடம் பெற்றது. இவரது முதலாவது நாடகப்பிரதியான"சுடரும் சூறாவளியும்",மற்றும் "தெளிவு பிறந்த நேரம்", "ஓடிப்போனவள்", "மனித நாக்கு மலையை சாய்க்கும்", "நீ திருந்து உலகம் திருந்தும்" நாடகங்கள் தேசிய நாடக விழாவில் (03)மூன்று விருதுகளை பெற்றுள்ளது. அஸ்ஸிஸ் மன்றம் நடத்திய நாடகவிழாவிலும் மூன்று பரிசுகளைப் பெற்றுள்ளன. இவரின் நாடகப்பிரதிகளுள் சில "புதிய சிந்தனை" (2002) எனும் நூலாக வெளிவந்துள்ளன.

மலையக நாடகப்பிரதிகள் பற்றி பூரண கள ஆய்வு இதுவரை முறையாக மேற்கொள்ளப் படவில்லை. தனிமனிதர்கள், சிறுகுழுக்கள், மட்டுப்படுத்தப்பட்டளவில் நாடகங்கள் பற்றி சில கட்டுரைகள் எழுதியுள்ளனர். இச்சூழலில் மலையக நாடகப்பிரதிகள் பற்றிய ஆய்வுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படாது காணப்படுகின்றன.

நாடகம் ஒரு நிகழ்கலை, காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவருவது, தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழ் மேடை நாடகக் கலை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மறுமலர்ச்சி கண்டு இருபதாம் நூற்றாண்டில் மிளிரத் தொடங்கியது. மலையகத்தில் பல குழுக்கள் நாடகத்தை நடத்தின. புதுமைகள் பல புகுந்தப் பெற்றன. மக்கள் கண்டு சுவைத்த மகிழ் கலையாக விளங்கியது. குறைவான பாத்திரங்களைக் கொண்டு உணர்வுபூர்வமான நாடகங்களை உருவாக்குதல், சுருக்கமான, பொருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான, உரையாடல்களை அமைத்தல், வரலாற்று, சமூக, நடைப்பியல் சார்ந்த கதையமைப்பு களினாலும் நடிகரின் ஆற்றல் வாய்ந்த நடிப்பினாலும் நாடகங்களை சிறக்கச் செய்தல், கதைப்பொருளோடு ஒட்டியமைத்து தலைப்புகளை அமைத்தல் முதலிய அம்சங்களால் மலையகத்தில் தமிழ்மேடை நாடகம் சிறப்புற்று விளங்கியது. மேடை நாடகங்களில் பயன்படுத்தும் நவீன உத்திகளாலும் அவை உன்னத நிலையைப் பெற்றன. இந்த வளர்ச்சியோடு மலையக சமூக நாடகங்களும் வளர்ச்சியடைந்தன. அவற்றுள் நாடகப்பிரதிகளில் கையாளப்பட்ட உத்திகளையும் வளர்ச்சியையும், செல்நெறிகளையும் மட்டும் இக்கட்டுரை எடுத்துக் காட்டுகிறது.

கதை அமைப்பில், மாந்தர் படைப்புகளில், உரையாடலில், தலைப்பிடுவதில், நடிப்பில், மேடைக் காட்சி அமைக்கும் முறையில், ஒளியமைப்பில், ஒலியமைப்பில், ஒப்பனையில், பிற தொழில் நுணுக்கங்களில் என்று பல புதுமைகளைப் படைத்துக் கொண்டு புதிய உத்தி முறைகளைக் கையாண்டு தமிழ்மேடை நாடகம் வளர்ந்தது.இந்தவகையில், ஒப்பீட்டளவில் மலைய சமூக நாடகங்களின் பிரதிகளை ஆராய்வது மற்றொரு நோக்கமாகும்.

வரலாற்று நிலவியல் இடப்பெயர் கோட்பாட்டு என்ற வகையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் ஊடுருவிய நாடகங்கள், கூத்துக்கள், கதைகள் ஒரே மாதிரியான கதைகள், கடன் வாங்கியவை, அதே போன்று இடப்பெயர்தலினால் வாய்வழியாக வந்து சேர்ந்தவை என ஆரம்பகால நாடகப்பிரதிகளும், மரபுவழக்காற்று, புராணவியல் நாடகங்களின் நாடகப் பிரதிகளின் வளர்ச்சி ஃபுராணக்கதைகளுடனான இந்தியாவி லிருந்து மலையகத்துக்கு வந்த நாடகவரலாறு பிற்காலத்தில் சித்தாந்த கோட்பாடு அல்லது இலட்சிய கோட்பாடு ரீதியான நாடகங்களின் வளர்ச்சி, காலனித்துவம், சமகால நிகழ்வுகள், மேற்கத்தேய எதிர்ப்பு, திராவிட கொள்கைப் பரப்புதல், வர்க்கபோராட்ட கதைகள் என பல்வேறு அம்சங்களை கொண்ட நாடகப்பிரதிகளின் வளர்ச்சிபற்றியும், வரலாற்று மீட்டுருவாக்கமுறை மூலம் இந்தியத் தமிழக சாதிமுறைகளை மலையகத்திலும் பின்பற்றிய நாடகங்களை, ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டம், வர்க்க ரீதியான முரண்பாடுகள், போன்றவற்றினை கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நாடகப்பிரதிகள் பற்றியும் சமகாலத்தில் உருவான ஏனைய சமூகநாடகப்பிரதிகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

பண்பாட்டு கூறுகளுடனான நாடக வளர்ச்சி என்ற வகையில், பொருளாதார நடத்தைகள், உற்பத்தி நடத்தைகள், பெண்ணியம், ஆணாதிக்கம், போன்றவற்றின் பரிமாண வளர்ச்சியின் போக்கு. இதில் புழமையைகாத்தல், புதியன புகுத்துல் என இரண்டு வகையான அம்சங்களை நோக்கலாம். இந்தவகையில் மலையகச் சமூக நாடகப் பிரதிகளை காலத்துக்கேற்ற கதையோட்டத்தடன் காணப்படுவதுடன் அதற்கேற்ற நடிப்பு உத்திகள் பாத்திரப் படைப்புகளையும் கொண்டு அமைந்துள்ள நாடகங்கள் பற்றி இவ்வாய்வில் நோக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம், ஆசிரியர் கலாசாலை, பாடசாலை மட்ட நாடகங்களில் நடிகனாக, நடுவராக, விமர்சகராக பங்குபற்றியதினூடாக பெற்ற அனுபவரீதியான கருத்துக்க ளுடனும், விமர்சன பார்வையூடாகவும் களநிலையில் கண்டனவற்றின் அனுபவரீதியான தொகுப்பாகவும் இந்த ஆய்வு செய்யப்படுகிறது.

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில், இலங்கைக்கு இந்தியதமிழர்கள தொழிலுக்காக கூட்டிவரப்பட்டனர். பாதைகளமைக்க, புகையிரதபாதைகளமைக்க, குளங்களமைக்க மற்றும் பெருந்தோட்ட துறைக்காக, கூலிகளாக கூட்டி வரப்பட்டனர். அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்மையினையும், இந்தியாவில் தமிழ்நாட்டில் நிலவிய பட்டினி, பஞ்சம், வறுமையுடன் சாதிகொடுமை, அடிமைவாழ்க்கை போன்ற இன்னோரன்ன காரணங்களாலும், இலங்கையில் வழமானவாழ்க்கை காத்திருப்பதாக பரவிய பொய்யான பரப்புரைகளால் கவரப்பட்டும் வர்த்தகக் காரணங்களுக்காகவும் இந்தியாவிவிருந்து வந்த மக்கள் வம்சாவளியாக வாழ்வதால் இந்திய வம்சாவழி தமிழர்கள் என்றும், புவியியல் ரீதியாக மலையகத்தில் மிகச்செறிவாக வாழ்வதால் மலையகத்தமிழர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இம்மலையகத் தமிழர்களினால் உருவாக்கி நடிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட சமூகநாடகங்களின் பிரதிகள் மட்டுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தப் பட்டன.

வரலாற்று நிலவியல் கோட்பாட்டு என்ற வகையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் ஊடுருவிய நாடகங்கள், கூத்துக்கள், கதைகள், மரபுவழக்காற்று, புராணவியல் நாடகவளர்ச்சி புராணக் கதைகளுடனான இந்தியாவிலிருந்து மலையகத்துக்கு வந்த நாடகவரலாறு, இடம்பெயர் கோட்பாடு என்ற வகையில் இந்திய சூழலில் தோன்றி இடம்பெயர்ந்தன என்ற வகையில் ஆரம்பகாலத்தில் மலையக மக்களின் கூத்துகளாக காமன்கூத்து, பொன்னர் சங்கர், அர்சுனன் தபசு ஆகியன காணப்பட்டன. அதன் பின் மரபுவழி வந்த நாடகங்களாக கந்தன் கருணை, லங்காதகனம், இராமாயணம், குலேபகாவலி, அரிச்சந்திரன், மயான காண்டம்,கண்டிராசன் கதை, சத்தியவான் சாவித்திரி, நல்லத்தங்காள், அரிச்சந்திர விபசம், நந்தன் சரித்திரம், மதுரை வீரன், வள்ளி திருமணம் ஆகிய நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டன. பின்னர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட பம்மல் சம்பத் முதலியார் (1911) லீலாவதி, சுலோசனா, மனோகரா ஆகிய நாடகங்களும் (1917, 1929) சுந்தரம்பாளினின் " ராஜபார்ட்" டீ.கே சணஷ்முகம் குழுவினரின் (1928) "சத்தியவான் சாவித்திரி 1926", கலைஞர் மு.கருணாநிதியின் "சந்தா", "நச்சுக்கோப்பை" "தூக்குமேடை" (1947),"பரம்பிரம்மம்" (1954) "மணிமகுடம்" (1956), "சாம்ராட் அசோகன்" (1958), "உதயசூரியன்" (1958), "காகிதப்பூ" (1966), "அனார்கலி" (1967), "சாக்ரடீஸ்" (1967), "சேரன் செங்கூட்டுவன்" (1967), எம். ஆர். ராதாவின் "ரத்தக் கண்ணீர்" என். எஸ் கிருஷ்ணன் மதுரம் ஜோடியின் "இழந்த காதல்" ஆகியன மலையகத்தில் மேடையேற்றப்பட்டன. இவை குமாரசமிப்பிள்ளை நாடகசபா கருப்பையாபிள்ளை நாடகசபா, வேல் நாயகர் கோஷ்டியினால் மேடையேற்றப் பட்டன. இவற்றின் ஊடாகவே மலையக நாடகமேடையும், நாடகப்பிரதி உருவாக்கமும் வளர்ச்சியடைந்தது.

இதனைத் தொடர்ந்து எம்.ஏ. அப்பாஸின் "கள்ளத்தோனி", நடேசய்யரின் "தொழிலாளர் அந்தரப்பிழைப்பு" என்ற நாடகபிரதிகள் நூல்களாகவும், பத்திரிகையிலும் வெளிவந்தது. நாடக எழுத்தாளர்களாக கண்டி எம்.ராமசந்திரன், (முகமும் முகவரியும்), "இடைவெளி" (1997), அந்தனி ஜீவாவின் "அக்கினி பூக்கள்" (1999), மரியம்பீபீ சுல்தான் "அர்த்தமுள்ள உறவுகள்" (2008) மலையக வாசுதேவனின் "புதிய சிந்தனைகள்"(2002) ஜெ. சுகுமாரின் "காமாட்சியும் ஒரு கண்ணகிதான்" (2005) என்ற நாடகப்பிரதிகளும் நூலுருவில் வெளிவந்தன.

அக்காலச் சுதந்திர போராட்ட சூழலில் மேடையேற்றப்பட்ட பல நாடகங்கள் இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத்தின் தாக்கத்திற்கு உட்பட்டவையாக அமைந்திருந்தன. மலையக மக்கள் இம்மண்ணுக்குரியவர்கள், அவர்கள் மலையகத்தமிழர் என்ற அடையாளத்துடன் வாழ்கின்றவர்கள் என்ற சிந்தனையை முன்னிறுத்தி வெளிவந்த "யார் நாடற்றவன்" என்ற நாடகம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்நாடகபிரதி நோட்டன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஸபான தோட்டத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. இம்மலையக நாடகப்பிரதிகளின் கருப்பொருளாக வர்க்கப்போராட்டம், முதலாளி எதிர்ப்பு, கங்காணி சுரண்டல், சாதி எதிர்ப்பு, முதலாளி தொழிலாளி முரண்பாடு, உரிமைப்போராட்டம், பிரஜாஉரிமை போன்றன 50, 60களில் கருப்பொருளாக காணப்பட்டன. ஆரம்பகால யாழ்ப்பாண ஆசிரியர்களினால் மலையக மாணவர்களுக்கான கொடுமை, வீட்டு வேலை, மாற்றுத்திருமணம்,தொழிலாளர்களின் ஒற்றுமை, தோட்ட சூழல் பாதிப்பு, அடிமை வாழ்க்கை, லயத்து வாழ்க்கை, ஏக்கங்கள், ஆவேசம், நாடுகடத்தல், சினிமா சாஸ்த்திரி ஒப்பந்தம், அதன் பாதிப்பு, குடும்பபிரிவு, பீலிச்சண்டை, தோட்டத்துக்கு வெளியே கூலித்தொழில்கள் ஆகியன 60, 70களில் நாடகப்பிரதிகளின் கருப்பொருளாகவும், வெளிநாட்டு பயணம், மத்திய கிழக்கில் வீட்டு வேலை, மாற்று இனத்திருமணங்கள், அரசியல் ஏமாற்றம், பொலிஸ் கெடுபிடி, தொழிற்சங்க ஏமாற்றங்கள், சந்தா, கட்டாயக் கருத்தடை ஆகியன 80,90களில் கருப்பொருளாகவும், மது ஒழிப்பு, குடியால் ஏற்படும் பிரச்சனைகள், மூட நம்பிக்கை, தொழிற்சங்க ஒப்பந்தங்கள், கல்வி பிரச்சிணை, கல்வியின் முக்கியத்துவம், ஆசிரியர் பிரச்சினை, அதிபர் சுரண்டல், சிறுவர்களை வீட்டு வேலைக்கு அமர்த்துதல், பாலியல் பிரச்சினை, சிறுவர் துஷ்பிரயோகம், சீதனப்பிரச்சினை,மத்தியதர வர்க்க சிந்தனைப் போக்கு, தொழிற்சங்கச் சம்பள ஒப்பந்தங்கள் ஆகியன 90க்கு பின் நாடகப்பிரதிகளின் கருப்பொருளாகவும் அமைந்துள்ளது. அதுபோல் போலித் தலைவர்கள், நிர்வாகிகளின் ஊழல்கள் போன்றனவும் கருவாக அமைந்தது.

மலையக நாடகப்பிரதிகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான புறச்சூழலை நோக்கின் ஆரம்பத்தில் குழந்தை ம.சண்முகலிங்கம் நிறுவிய நாடக அரங்கக் கல்லூரியில் டிப்ளோமா பெற்றவர்களால் நாடகத்துறையில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைக்காற்று, கலைக்கழகத்தின் நாடகங்களின் வருகை நாடக அரங்கியல் கல்லூரிகளின் வருகை போன்றன மூலம் நாடக்துறையில் பயிற்சி பெற்றோர் மலையகத்திலும் உருவாகினர். க.பொ.த சாதாரணதர (1978) பரீட்சைக்கு நாடகம் ஒரு பாடமானது. க.பொ.த உயர்தரம் தனியான பிரிவானது. யாழ்ப்பல்கலைக்கழக நாடகக் கலைமாணி தேர்வு பாடநெறி (1985) கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தர் அழகியற்கற்கை நிறுவனம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை நிறுவனம் ஆகியவற்றின் வருகையின்பின் அவற்றின் கற்கைகளை மேற்கொண்ட மலைய மாணவர்களது ஈடுபாடும் நெறியாள்கையும் மலைக நாடகத்துறையில்பிரதிகள் வடிவமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்தியது.

நாடகப்பிரதி உருவாக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திருச்செந்தூரன் நாட்டார் கலையான காமன்கூத்தை நவீனமயப்படுத்தி கொழும்பில் மேடையேற்றினார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்றதுறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்று தொழில்முறைத் தேர்ச்சி பெற்றார். இதனால் அவர் ஏராளமானவர்களுக்கு நாடகப்பிரதி உருவாக்க பயிற்சி வழங்கினார். 'சிலைகள்' என்ற நாடகத்தில் நடித்ததோடு, தாளலய நாடகங்களையும் நெறிப்படுத்தினார். திருச்செந்தூரன் பண்டாரவளை,ஹட்டன் பகுதிகளில் பல நாடகங்களை அரங்கேற்றிய தோடு அவரும் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தார் அவரது "தியாக உள்ளம்" என்ற நாடகம் பிரபல்யமானது. சேக்ஸ்பியரின் "ஒத்தெல்லோ" நாடகத்தில் ஒத்தெல்லோவாக நடித்தவர்.

முருகன், சிவலிங்கம் பல நாடக பட்டறைகளை நடத்தியுள்ளார்.கலையுலகில் நாடகம், சினிமாத்துறை கலைஞராகவும் இலக்கிய வாழ்வில் கவிதை, சிறுகதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல், அரசியல் கட்டுரைகள், நகைச்சுவை கட்டுரைகள், நாடகங்கள், மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என தனது ஆளுமையை பரவலாக்கிக் கொண்டவர். கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின், வீதி நாடக குழுவினர்கள் அண்மையில் பதுளை மாவட்டத்தில் எட்டு இடங்களில் பெருந்தோட்ட மக்களை அறிவூட்டும் வகையில் விழிப்புணர்வு வீதி நாடகங்களை நடாத்தினார்கள்.

மாத்தளை கார்த்திகேயன் என்பவர் இருபத்தைந்துக்கு மேற்ப்பட்ட நாடகபிரதிகளை எழுதி மேடையேற்றி நடித்து சிறந்த குணச்சித்திர நடிகராக பல தேசிய விருதுகளை பெற்றவர் "காலங்கள் அழுவதில்லை" (1974) என்ற இவரது நாடகம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் மேடையேற்றப்பட்டது. முதலாவது தொலைக்காட்சி நாடகமாக "காலங்கள்"நாடகப்பிரதி ஒளிபரப்பப்பட்டது. "குடும்பம் ஒரு கலைகதம்பம்","பணமா, பாசமா?"என்பன இவரது நாடகப் பிரதிகளாகும். "களங்கம்" (1974), "போராட்டம்" (1975),"ஒரு சக்கரம் சுழலுகிறது" (1976) ஆகிய நாடகங்கள் இவரால் பிரதியாக்கத்தையும் மேடையேற்றப்பட்டவை.ஏ.எஸ்.எம் பீலிக்ஸ் இனால் நெறியாள்கை செய்யப்பட்டு அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம் (1995 இல்) பெற்ற ''மன்னிக்க மாட்டாயா'' என்ற கிறிஸ்தவ நாடகத்துக்கான பிரதியாக்கத்தையும் மாத்தளை காத்திகேசே எழுதினார்.

கோவிந்தராஜனின் "மலையோரும் வீசும் காற்று","புதுக்குடும்பம்","மாப்பள்ளை வந்தார்","அரும்பு" ஆகிய நாடகங்கள் அண்மைகாலத்தில் தொலைக்காட்சியில் நல்ல வரவேற்பினை பெற்றது. இவரது "தோட்டத்து ராஜாக்கள்" 1994இல் இந்து கலாசாரத் திணைக் களத்தின் நாடகத் துறைக்கான விருதினைப் பெற்றது. "கவ்வாத்து கத்தி" யும் இவரது நாடகப்பிரதியாகும்.

மாத்தளை ராஜ்சிவா என்னும் எஸ் சிவலிங்கம் "அரைப்படிப்பு","எமலோகத்து இன்டர்வியூ", "யாருக்கு யார் சொந்தம்", "ராதையின் நெஞ்சமே", "தமிழ் வாழ தலைக் கொடுத்தாய் தம்பி", "காட்டரசன்", "சகோதரபாசம்" போன்ற நாடகப் பிரதிகளை தனது கலைவாணி நாடக மன்றம் மூலம் மேடை ஏற்றியுள்ளார். மாத்தளை குழந்தைவேல் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். இவரது "காந்தியின் இலட்சியம்" என்ற நாடகம் புகழ்பெற்றது. செலகம எஸ்.ராசு, பி.கணேசன், என்.எஸ் நாதன், செல்வராசா, மு. காலிமுத்து ஆகியோரால் ஏற்படுத்தப்பட்ட நாடகமன்ற மூலம் "மலைநாட்டு மக்களின் மாறாதுயர்", "வழி பிறந்தது" போன்ற நாடகமும் மேடையேற்றப்பட்டது. இந்நாடகப் பிரதியாக்க வளர்ச்சியுடனேயே, அண்மைக்கால நாடகபிரதியாக்கமாக வளர்ச்சியடைந்துள்ளது கே.ஜெயக்குமாரின் "மோகம் முப்பது நாள்", குழந்தைவேலின்"காந்தியின் இலட்சியம்",மாத்தளை செல்லதுரையின் "நலமே புரியின் நலமே விளையும்" (1966) ராஜரட்ணத்தின் நெறியாள்கையோடு மேடையேறிய "அன்பின் வெற்றி" (1960) "இதுதான் முடிவு" (1966) என்ற நாடகப்பிரதிகள் நாடகங்களாக மலையத்தில் பல பாகங்களில் மேடையேற்றப்பட்டது. ஹட்டனில் 1960இல் நடைபெற்ற தேசிய கலைவிழாவில் சொக்கநாதனின் "சிவகரிச்செல்வி" கவிதா நாடகம் முதலிடத்தினை பெற்றுக்கொண்டது.

கண்டி போஸ் சங்கம் (1939) பல நாடகங்களை மேடையேற்றியது. ஈழகுமார் (முத்துகாமாட்சி குமாரவேல்) ஆரம்பித்த மலைநாட்டு நாடக மன்றம்,மலைநாட்டு நல்வாலிபசங்கங்கள், மலையக இளைஞர் முன்னனி, மலையக மக்கள் இயக்கியம் போன்றவையும் இலங்கை திராவிட முன்னேற்ற கழகம், மலையக வெகுஜன இயக்கம் போன்றவையும் 1960களில் மாத்தளை இலக்கிய வட்டம், ஹட்டன் இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டம் முதலிய அமைப்புகளும் தோன்றின. இவற்றின் மூலம் பல நாடகப்பிரதிகள் நாடகங்களாக மேடையேற்றப்பட்டுள்ளன. இவற்றுள், கலகெதர ஏ.ஆர்.ஏ.லத்தீப், கண்டி விஸ்வநாதராஜா, அந்தனி சந்தனம், ஏ. ஏ ஜுனைதீன் ஆகியோர் பல நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றினர். விஸ்வநாதராஜாவின் "யாருக்காக" நாடகம் நா. செல்லதுரையின் "ஐயோ காதலி", "இருபது நாளிகை" போன்ற நாடகங்கள் கொழும்பில் மேடையேற்றப்பட்டன. விஸ்வநாதராஜா நாடகப்பிரதிகளை உருவாக்கியதுடன், 25க்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளதோடு, கண்டி சந்ரா, நா. செல்வதுரை ஆகியோரும் புகழ்பூத்த நடிகர்கள். கண்டி தேவதாஸ் ஜெயசிங்; "ஸ்ரீ விக்ரமராஜசிங்கன்" என்ற நாடகப்பிரதியை உருவாக்கினார். இந்நாடகம் பல இடங்களில் மேடையேற்றப்பட்டுள்ளது. கண்டி கலஹாவைச் சேர்ந்த புண்ணியமூர்த்தியன் நாடகங்கள், கலஹாவைச் சேர்ந்த கண்டி புனித அந்தோனியால் கல்லூரி ஆசிரியர் வசந்தனின் நாடகங்கள், கண்டி கொட்டகங்க சிவானந்தனின் நாடகங்கள் போன்றனவும் கண்டி பகுதிகளில் தயாரித்து மேடையேற்றபட்ட குறிப்பிடத்தக்க நாடகங்களாகும்.

லடீஸ் வீரமணியின் தமிழர் முன்னேற்ற நாடக மன்றம், வரணியூரானின் கலைச் செல்வி கலாமன்றம், கொழும்பு சபா விருத்தி சங்கம், உதயசூரியன் நாடக மன்றம் சி. சண்முகத்தின் பாரதி கழகம், கதிரவன் கலைக்கூடம், தேசிய கலாநிலையம், ராஜசேகரன் ஹெலன் குமாரின் வெள;ளி நிலா கலாலயம், ஆகியவற்றின் தயாரிப்பான மேடை நாடகங்களின் தாக்கமும் மலையகநாடக பிரதியாக்கத்திலும் தாக்கத்தினை ஏற்;படுத்தியது.

கண்டியில் வாழ்ந்த (19591984) திருத்துவக் கல்லூரி ஆசிரியர் நவாலியூர் செல்லதுரையின் "உலகம் எங்கள் கைகளிலே" (1978), "சிலப்பதிகாரத்தில் சிலை எடுத்த சேரன்", "சின்னவனா பெரியவனா"(1999) போன்ற நாடகங்களையும் இவர் ஹட்டன் பொஸ்கோ, ஹைலன்ஸ் கல்லூரியில் பணிபுரிந்த காலத்தில்(19571958) வேறுபல நாடகங்களை எழுதி நெறியாண்டு மேடையேற்றியுமுள்ளார். இவரது நாடகங்கள் வத்துகாமம், மாத்தளை, பன்வில, குருநாகலை, மவுசாகலை, கம்பளை, ரஜவல, தெல்தெனிய, நாவலபிட்டிய. கொழும்பு ஆகிய இடங்களில் மேடை ஏற்றப்பட்டன. கண்டி அம்பிட்டிய சின்னையா பல நாடகப்பிரதிகளை தயாரித்துள்ளார். சிலோன் சின்னையா என்ற பெயரில் திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

ராஜேந்திரன் மாஸ்டரின் மனோரஜ்சித கனாசபா ஊடாக தயாரிக்கப்பட்ட "மிஸ் மல்லிகா", "லீலா சந்தர்" ஆகிய நாடங்களும் "கங்காணியின் மகன்" நாடகமும் மலையகத்திலும் மேடையேற்றப்பட்டன. "கங்காணியின் மகன்" என்ற நாடகத்திலேயே நடிகர் லடீஸ் வீரமணியிற்கு நாவலர் ஏ. நெடுஞ்செழியனால் நடிகவேல் என்ற பட்டம் வழங்கப்பட்டது. இந்நாடகமும் மலையகநாடக பிரதியாக்கத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் அரங்கேறிய பல நாடகங்களின் நாடகப்பிரதிகளை உருவாக்கி வி.டி.செல்வராஜ் நெறியாள்கை செய்துள்ளார். இவரது சகோதரர் வி.டீ.தர்மலிங்கம் திருச்செந்தூரனுடன் ராகலை, ஹட்டன் பகுதிகளில் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தமது மாநாடுகளில் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளது. இவை தொழிற்சங்கங்கள், தொழிலாளருக்கு நன்மை செய்வதாக சித்தரிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் நாடகவிழாவிலும், கலைவிழாக்களிலும் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளன. இங்கு நடைபெறும் நாடக போட்டிகளில் மலையக மாணவர்கள் மலையக பின்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலான கதை, கருவூலகங்களை நாடகபிரதிகளாக தயாரித்து மேடையேற்றி வெற்றிபெற்றும்உள்ளனர். இவ்வகையில் சகல பல்கலைக்கழகங்களும் பங்களிப்பு செய்த போதும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மலையக நாடகபிரதியாக்கங்கள் தொடர்பான பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். பேராதானைப் பல்கலைக்கழக பொறியியற்பீட பேராசிரியர் எஸ். சிவசேகரன் தயாரித்து மலையகத்தில் வீதிகளில் நடித்த வீதி நாடகங்களும், நாடகப்பட்டறைகளும் மலையகத்தில் குறிப்பிடத்தக்க வரவேற்பைப் பெற்றது. தொழிற்சங்கவாதியான இடதுசாரி கொள்கைகளைக் கொண்ட சண்முகதாசன் மலையகத்தில் தயாரித்த நாடகங்களும் மக்களிடையே தாக்கதினை ஏற்படுத்தியது. இவை தொழிற்சங்க கலைவிழாக்களில் மேடையேற்றப்பட்ட நாடகங் களாகும். பத்திரிகையாளரான நெடுஞ்செழியனும் பல நாடகப் பிரதிகளைத் தயாரித்து மேவீயேற்றியுள்ளார். கண்டி சத்தியோதய நிறுவனம்,பெ.முத்துலிங்கத்தின் சமூகசேவை நிறுவனம் ஆகியன நாடகத்துறையிலும் வீதி நாடகத்துறையிலும் பல பயிற்சிப்பட்டறைகளை நடாத்தி இத்துறை வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளது. சில நாடகங்கள் மலையக வானொலியின் "குன்றின் குரல்" எனும் நிகழ்சியில் ஒலிப்பரப்பப் பட்டன. இதுபோலவே, மலையக வெகுஜன இயக்கமும் நாடகங்கள் தயாரிப்புக்கு ஊக்குவிப்பதில் புத்துயிரளித்துள்ளனர்.

1960களில், தலவாக்கலை, மல்லிகைப்பூவைச் சேர்ந்த குமாரசாமியின் நாடகங்கள் தலவாக்கலை, ஹட்டன் பகுதியில் பிரபலியமானது, இவரது நாடகங்களில் ஜே. பழனிவேல், ஜே கதிர்வேல், செல்லமுத்து, கருப்பையா போன்றோர் நடித்துள்ளனர். மல்லிகை சி.குமாரின் "போராளிகள்" நாடகம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய நாடகமாகும். வி.டி.தர்மலிங்கத்தின் நாடகங்கள் அரசியல் ரீதியில் பல விமர்சனங்களை ஏற்படுத்திய நாடகங்களாகும். "தூக்குமேடை"(1967) மலையகத்தில் பேசப்பட்ட ஓர் நாடகமாகும்.

டிக்கோயா பகுதியில் பா.முத்தையா பல நாடகப்பிரதிகளை நாடகங்களாக மேடையேற்றியுள்ளார். ஹட்டன் நிஜாம் எழுதிய "வெளிச்சம் வெளியே இல்லை" (1993) அகில இலங்கை பாடசாலை ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது. ஹட்டன் பி.நல்லசாமி, என்.எஸ்.எம்.ராமையா, கொழும்பிலும் மேடை ஏற்றியுள்ளனர். என்.எஸ்.எம் ராமையாவின் "ஒரு மின்னல்" நாடகப்பிரதியும் வானொலியில்; ஒலிபரப்பப்பட்டது. இவரது "நீ திருந்தினால் உலகம் திருந்தும்"; என்ற நாடகம் கொழும்பில் மேடையேற்றப்பட்டது. தலவாக்கலை பாரதிவிழாவில் மேடையேறிய வ.செல்வராஜின் "மலைகளை பேசவிடுங்கள்"; என்ற நாடகபிரதியும்,ராகலை சிவராஜேந்திரன், ராமையா, ராஜகோபால், முருகையா ஆகியோரது நாடகபிரதிகளும் நாடகங்களாக தேசிய ரீதியில் நாடக விழாவில் மேடையேற்றப்பட்டன. ஸ்ரீபாத கல்வி யியல் கல்லூரியின் "சொல்லடிப் பெண்ணே" என்ற பெண் விடுதலை நாடகம், இளைஞர் சேவை மன்றத்தின் உத்தியோகஸ்தர்களான எஸ்.விஜயகுமாரன், ஏ. லோரன்ஸ் ஆகியோர் பிரதியாக்கம் செய்து தயாரித்து மேடையேற்றிய நாடகங்கள் முற்போக்கு சிந்தனை கொண்டவையாக அமைந்தன. அரசினர் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ஜே.சற்குருநாதன் 1995ஆம் ஆண்டு மத்திய மாகாண சாகித்ய விழாவில் மேடையேற்றிய "எட்டடிக் குச்சுக்குள்ளே" என்ற நாடகமும் அவர் ஆசிரியர் கலாசாலையில் மேடையேற்றிய பல நாடகங்களும் அரசியலில் குறிப்பிடத்தக்க கொந்தளிப்பை ஏற்படுத்தியது. மலையத்தில் அதிபராக இருந்த நாகலிங்கத்தின் பங்கும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இரத்தினபுரி மாவட்ட தெய்யோவிட்ட நாடகத்துறை ஆசிரியர்களால் பிரதியாக்கம் செய்து, தயாரித்து மேடையேற்றப்பட்ட நாடகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய உத்திகளைக் கொண்டனவாக காணப்படுகின்றன.இதேபோல் நாடகத்துறை ஆசிரியர்கள் பொகவந்தலாவையில் மேற்கொண்ட முயற்சிகளும் குறிப்பிடத்தக்க வெற்றிகளைத் தந்துள்ளது. இவை அரசியல், இயங்கியல் சார்ந்ததாக காணப்பட்டது.

பதுளையில் தமிழழோவியன், மு. ந. வேலழகன் ஆகியோா் பல சமூக நாடகங்களை மேடையேற்றியுள்ளனா். எம். ஏ. அப்பாஸின் "கள்ளத்தோனி", "துரோகி". "மூட்டையை கட்டுங்கள்" போன்ற நாடகங்கள் பதுளையில் 1950களில் பிரசித்தம் பெற்றன. இந்நாடகப்பிரதிகள் நூலுருவாகவும் வெளிவந்துள்ளன. கு.க.சே.ராமசாமி எழுதிய "கண்ணீா்" (1953) நாடகமும் நூலுருவில் வெளி வந்துள்ளது. இக்காலத்தில் ராவணன் என்பவா் எழுதிய "கங்காணி மகள்"; நாடகமும் பிரசித்தி பெற்றிருந்தது. பதுளை கே. தங்கவேல் பல நாடகங்களை மேடையேற்றியதோடு நடிகராகவும் இருந்துள்ளாா். அப்புத்தளை ஆனந்தன் மோகனதாஸ் சிறந்த நடிகராக மலையகத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளாா். "இது எங்கள் ஊா்" நாடகம் பதுளையில் பிரசித்தமான நாடகமாகும். இதில் "பபுன்" என்ற பாத்திரம் மறக்கமுடியாத பாத்திரமாக மக்கள் மனதில் பதியப்பெற்றது.

மேற்கூறப்பட்ட வரலாற்று ரீதியான வளா்ச்சி; பின்புலத்துடன், ஆய்வுக்காக ஜெ.சுகுமாரனின் "காமாட்சியும்ஒரு கண்ணகிதான்" எனும் சமூக நாடக நூலும் அதில் காணப்படும்; "மறுமலா்ச்சிக்கு" "அவள் வெளிநாடு போகிறாள்","காமாட்சியும் ஒரு கண்ணகிதான்", "யாா் காரணம்","காயத்திரி", ஆகிய நாடகப்பிரதிகள் நோக்கப்பட்டுள்ளன..

இவரது "மறுமலா்ச்சி" நாடகப்பிரதியில் ஒரு தனியாா் தோட்டத்தில், அந்த தோட்ட முதலாளியின் இரு மகன்களில் மூத்தவா் அங்கே தொழிலாளியாக வேலை செய்கிறாா். இவா் முதலாளி வீட்டு வேலைக்காரியுடன் நட்பு, முதலாளியும், மூத்த மகனும் ஒரு பக்கம், தனது அப்பனும் அண்ணனும் செய்யும் தில்லுமுள்ளுக்கு எதிராக குரல் கொடுப்பதே இதன் கருப்பொருள். மக்களின் அடிப்படை வசதிகளுக்காக குரல் கொடுத்து தொழிலாளா் உரிமைகளை பெற்று கொடுத்தல், அடிப்படை வசதியை பெற்று கொடுத்தல், போன்றவற்றோடு முதலாளிகள் மனம் திருந்தி தொழிலாளா்களுக்கு சலுகைகளை வழங்குதல், இதில் கருப்பொருளாகும். இந்நாடக பிரதியின் முக்கிய கதாபாத்திரம் தம்பி;. இதில் நகைச்சுவையாளராக ஒரு ஜோசியா் சித்தரிக்கப்படுகிறாா். தொழிலாளா்களாக பெண்கதாபாத்திரங்கள்; நாகம்மா, சரோஜா, அண்ணாவின் உயிரை தொழிலாளா்கள் காப்பாற்றுவதும், தொழிலாளா்களுக்கு சலுகை வழங்குவதும், தோட்ட நிா்வாகத்தில் தம்பி கலந்து கொண்டதும் இக்கதையின் கருவாகும்.

"அவள் வெளிநாடு போகிறாள்" நாடகப்பிரதியில் அஞ்சலி என்ற பெண் முக்கிய பாத்திரம்.இவள் கூலி வேலை. கணவன் வேலையற்றவன். குதிரை பந்தயத்தில் சூதாடுபவன். மனைவியின் உழைப்பில் வாழ்வதோடு மனைவி உழைப்பில் பந்தயத்திற்கு பணம் கட்டுவான், இவா்களின் இரண்டு பிள்ளைகள். அஞ்சலி கடன்பட்டு வட்டிக்கு பணம் எடுத்து வெளிநாடு செல்கிறாள். உழைத்து பணம் அனுப்பி கடன் கட்டுகிறாள். கணவன் தொடா்ந்தும் சூதாட்டத்தில் ஈடுபடுதல். அஞ்சலி திரும்பி வரும் போது காலை இழந்த கணவன் உழைக்க தொடங்குகிறான். இதுவே கதை. பாத்திரப்பெயா்கள் ராமு, மோகன், ஆறுமுகன், அஞ்சலி, சுப்பையா இந்நாடகத்தில் ஒன்பது காட்சிகள் காணப்படுகின்றன.

"காமாட்சியும் ஒரு கண்ணகி தான்" நாடகத்தில் காமாட்சி ஒரு தோட்ட தொழிலாளி. கஸ்டப்பட்டு பிள்ளைகளை படிக்க வைக்கிறாா். கணவன் குடிகாரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் குடும்பத்தை பற்றி கவலையின்றி குடிக்கிறான். மனைவி பிள்ளைகளை கொடுமையும் படுத்துவான். மகள் படித்து ஆசிரியர் தொழிலுக்காக காத்திருக்கிறாள். நேர்முகப் பரீட்சைக்காகத் தந்தையுடன் செல்கையில் தந்தை பொறுப்பில்லாமல் குடித்து விடுகிறான். பஸ்ஸில் கலாட்டா பண்ணுகிறான். பஸ்காரர்கள் இவர்களை இறக்கிவிட வீதியில் இளைஞர்கள் மகளை தாகதமுறையில் கலாட்டா பண்ணுகிறார்கள். வீடு வந்து சேர்ந்த தந்தையின்ஃகணவனின் கையை வெட்டிவிடுகிறாள் காமாட்சி.இதுதான் நாடகப்பிரதியின் கதையாக காணப்படுகின்றது..

இப்பிரதியில்,பிள்ளைகளை பாடசாலை அனுப்புதல், சமைத்தல் வேலைக்கு போதல், கடன் வாங்குதல், சாப்பாடு சரியில்லையென குடித்த கணவன் ஏசுதல், மனைவியை மாமனார் தேற்றுதல், மாமா, அப்பா ஆகியோரின் பென்சன் காசை எதிர்பார்த்து கடனுக்குச் சாமான்கள் வாங்குதல், அம்மா, அப்பா சண்டை, பெண்கள் வேலைக்கு செல்ல வேண்டும் என்ற அறிவுறுத்தல், கடன் கொடுத்த கடைகாரர், சிங்களவர் கடனை அறவிட வீடு தேடி வருதல், முதலாளியுடன் வாதாடுதல், மகள் வேலைக்கு போய் கடனை அடைப்பாள் என எதிர்வுகூறல், மகளுக்கு நேர்முகப்பரீட்சை கடிதம் வருதல், பஸ் தேநீருக்காக நிறுத்தும் போது சாராயம் குடித்தல், தகப்பனின் குடியால் பஸ்ஸில் இறக்கிவிடப்பட்டவரை இளைஞர்கள் தொந்தரவு செய்தல், ஒரு பெரியவர் மகளை காப்பாற்றி வீட்டில் விடுதல், கணவனின் கையை வெட்டுதல் இப்பிரதியில் காட்டப்படுகின்றது. இப்பிரதியில், இரண்டு காட்சிகள மட்டுமே காட்டப்பட்டுள்ளது. மலையகத்திற்கே உரித்;தான வசன நடை, பேச்சுதமிழ் இப்பிரதியில் காணக்கூடியதாகவுள்ளது.. கதையில் வரும் பாத்திரங்களாக காமாட்சி, ராமையா, அசனா, ராமு, பண்டா, ஆச்சி, தாத்தா, மாமா, ராமசாமி ஆகியோர் காட்டப்படுகின்றனர்.

இப்பிரதியை ஆராயும்போது வசனநடையினை நோக்கின், அப்பா 20ரூபா தாங்க, அப்பா : அம்மா எங்காவது முடிச்சு வைச்சிருப்பா, எல்லோரும் மலைக்கு போராங்க, சாப்பாட்டுக்கு ரொட்டி சுட்டு வைச்சிருக்கேன். 10வது மலையில்அப்படியே கொழுந்து கிடந்தது, 500 ரூபாவுக்கு வட்டி குட்டி போட்டு 700 ரூபா, வீட்டுக்கே போனு துரத்திப்புட்டாங்க, பங்களா காட்டில வேலை போன்ற மலையகத்துக்கே உரித்தான வசனநடைகளை, மொழிவழக்குகளை காணலாம்.

இன்னுமோர் நாடகப்பிரதியான "யார் காரணம்" என்ற நாடகம் ஒரு வீதி பிச்சைகாரனின் கதையைச் சித்தரிக்கின்றது. நாடகத்தில் பிச்சைகாரனுடன் பல சிறுவர்கள் உள்ளனர். இதில் ஒரு வயோதிபரும் இருக்கிறார். இவர் தவறுகளுக்கு புத்திமதி கூறிவந்தார். இந்த பிச்சைக்காரர் மத்தியில் ஒரு கணவன் மனைவி. இவர்கள் அந்த பெரியவரையும் கவனித்து வருகிறார்கள். இந்த தம்பதியினர் போதைப்பொருள் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளனர். பெரியவர் இவர்களை திருத்த முயற்சிக்கிறார். ஒரு நாள் பொலீஸ்காரர் கணவனை பிடித்து விடுகின்றனர். இவனுக்கு 10 வருட சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. பெரியவரை மனைவி பார்த்து வருகிறாள். பெரியவர் மனைவி பராமரித்து தனிமைபடுகிறார். பிச்சையெடுக்கும் சிறுவர்கள் தவறு புரிகின்றனர். பொலிஸார் பிடித்து செல்கினறனர். இறுதியில் பெரியாரின் மகன் தந்தை பிச்சையெடுப்பதை அறிந்து அங்கு வந்து செல்வத்தோடு வாழ்ந்ததை நினைவுபடுத்துகிறான். பிச்சை வாழ்க்கை விட்டு தந்தையை அழைத்து செல்கிறான். கரு பொருளாக பெரியவர்களை வயோதிபரை வீதியில் விடுதல். பிச்சைகார சிறுவர்கள், போதை பொருள் விற்பனையில் வீதிஓர பிச்சைகாரர்கள் சிறுவர்களும்; ஈடுபடல போன்றன் அமைந்துள்ளன. பிள்ளைகளால் கைவிடப்பட்ட வயோதிபர், பிச்சைகாரர்கள் முக்கிய பாத்திரங்களாக சித்தரிக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காயத்திரி" நாடகப்பிரதி பற்றி ஆயும் போது, தோட்டத்தில் வாழும் சிவராமனுக்கு இரண்டு பிள்ளைகள். இருவரும் படிப்பில்லை. சிவராமனுக்கு மட்டும் வேலை. பிள்ளைகளை படிக்க வைக்க முடியவில்லை. மகன் தோட்டவேலை விருப்பமின்றி நகர வேலைக்கு வேலைதேடி அலைகிறான். நண்பர்கள் இதனை விரும்பவில்லை. நகரில் வேலை கிடைக்காததால் நண்பர்களின் உதவியுடன் தோட்டத்தில் பெயர் பதிய செல்கிறான். இவரது சகோதரியும் செல்கிறாள். சகோதரியின் அழகில் மயங்கிய கணக்குப்பிள்ளை தவறாக அவளுடன் நடக்கிறார். அவள் அழுதுகொண்டே அண்ணாவிடம் தெரிவிக்கிறாள். அண்ணன் கனக்குப்பிள்ளையின் விரல்களை வெட்டுகிறான். பொலிசுக்கு போகிறான். கணக்குபிள்ளை தவறை உணர்கிறான். கருப்பொருளாக கணக்குபிள்ளையின் தவறான நடத்தை, வேலையின்றி உள்ள தோட்டஇளைஞர்களின் நிலை போன்றன காணப்படுகின்றன. இப்பிரதியிலும்; சிங்கள பாத்திரமாக பண்டா என்ற நண்பன் காணப்படுகின்றான். எனவே இவரது சகல நாடகப்பிரதிகளிலும்; கொச்சைத்தமிழ் பேசும் சிங்களப்பாத்திரம் ஒன்றினை காணக்கூடியதாகவுள்ளது.

இந்நாடகப்பிரதிகளை சமகாலத்தில் மலையகத்தில் மேடையேற்றப்பட்டரம்பொடை வாசுதேவன், நாடகங்களான சமூகநாடகப் பிரதிகளுடன் ஒப்பீட்டு நோக்கின் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இந்த ஒற்றுமைகள் கருப்பொருள் தெரிவிலும், மொழி வழக்கு பேச்சு தமிழிலும், கதாபாத்திர படைப்பிலும், காட்சி மாற்றத்திலும் காணக்கூடியதாகவுள்ளன. இந்நாடகப்பிரதிகளில் அரங்க அமைப்பு, பின்னணி இசையமைப்புகளை ஒளியமைப்பு குறிப்புகள் சிறப்பாக காணமுடியவில்லை. நேர முகாமைத்துவம் பற்றியும் சிந்தித்ததாக தெரியவில்லை.

மலையக நாடகப்பிரதிகளில் மொழிவழக்கு அல்லது பேச்சுவழக்கு ஏனைய பிரதேசதமிழ் நாடகங்களிலிருந்து வேறுபட்டவை. பேச்சுவழக்குச் சொற்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுமலையக நாடகப்பிரதிகளில் நாடக அரங்கு பொருத்தப் பாட்டினைப்பற்றி காணமுடியவில்லை. நாடகஅரங்கின் ஒலிஅமைப்பு பற்றிகுறிப்பாக கூறப்படவில்லை. ஆரம்பகாலத்தில் கொழுந்து மடுவங்களிலும், கோயில் முற்றத்திலும் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டதால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். மலையக நாடக பிரதிகளின் பாத்திரப் படைப்பு பற்றி நோக்குகையில் ஏனைய நாடகங்களை விட மலையக நாடகங்களில் குறிப்பாக சில பாத்திரப்படைப்புகளை அவதானிக்கலாம். நாடக பாத்திரங்களாக பெரியதுரை, சின்னதுரை, பெரிய கங்காணி, சின்ன கங்காணி, கண்டாக்கையா, கணக்குப்புள்ளை, தரகர், குமஸ்தா, பூசாரி, வெட்டியான், முதலாளி போன்ற பாத்திரங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. இவை காலப்போக்கில் மாறுபாட்டு காணப்படுகின்றன. மலையக நாடகங்களில் பாரதியாரின் எழுத்துக்களில் காணப்படுவது போல உணர்ச்சிவசமான வசனநடை கொண்டவையாகக் காணப்படுகின்றன. நாடகப்பிரதிகள் மக்கள் மன்றத்திடம் முன்வைப்பதாகச் காணப்படுகின்றன. மக்களிடமிருந்தே தீர்வினை எதிர்பார்ப்பதா கவும் அமைந்துள்ளன. இவை சமூகமாற்றங்களுக்கு வழிவகுத்தன. இருபதாம் நூற்றாண்டின் நிறைவுப்பகுதியில் தன் நிலையில் தளரச்சி கண்ட மலையகத்தமிழ் மேடைநாடகம் இன்று நலிவுற்று போய்க் கொண்டிருக்கிறது. எனவே புதிய நாடகப் பிரதியாக்கங்களை சமூகப் பிரக்ஞையோடு எழுதி ஊக்கிவிக்க வேண்டியது, கலைஞர்களின் முக்கிய சமூகக் கடமையாகும். இந்த ஆய்வு மேலும் பல ஆய்வுகளுக்கு முன்னோடி ஆய்வாக அமையுமெனக் கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

1. சிவலிங்கம், எஸ் (2009) நாடக உலகமும் நாமும், தமிழ் சாகித்திய விழாமலர், மத்தியமாகாணம் கல்வி அமைச்சு, கண்டி.
2. முத்தையா, ஆ. (2014).மலையகத் தமிழர் நாடக வரலாறு: கொழும்பு
3. சுகுமாரன், ஜெ.(2005).காமாட்சியும் ஒரு கண்ணகி தான், சென்னை: மணிமேகலை பிரசுரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

வரலாற்று புகழ்மிக்க கண்டி "எசல பெரகரா"வில் இந்து பூசை வழிப்பாட்டு முறைகளும், சம்பிரதாயங்களும்

இலங்கை வரலாற்றில் பல்வேறு தமிழ் மன்னர்கள் நாட்டினை ஆட்சி செய்துள்ளனர். காலத்ததுக்கு காலம் இந்திய சேர, சோழ பாண்டிய மன்னர்களும் இலங்கைத் திருநாட்டினை ஆட்சி செய்துள்ளனர். இறுதியாக 17ம், 18ம், நூற்றாண்டுகளில் இலங்கையில் கண்டி இராச்சியம் பிரசித்தி பெற்றதாகக் காணப்பட்டது. இலங்கை வரலாற்றில் ஆட்சியினை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக புத்த பெருமானின் புனிதப்பல் விளங்கியுள்ளது. புனித பல்லினை வைத்துள்ள மன்னவரே நாட்டின் மன்னராகத் திகழ்ந்தார். புனிதப்பல் காலத்துக்கு காலம் பாதுகாப்பு கருதியும் அன்னிய படையெடுப்புக்கு அஞ்சியும், பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு மாற்றப்பட்டு பாதுகாத்த தலங்களிலேயே "பெரகரா" என்றழைக்கப்பட்ட திருவிழா ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

வரலாற்று புகழ் மிக்க வருடாந்த கண்டி எசல பெரகராவானது, இலங்கையில் இன ஒற்றுமைக்கும், மத ஒற்றுமைக்கும் காரணமாக விளங்குகின்றது. சிங்களத்திற்கும், தமிழுக்கும் போல பௌத்தத்திற்கும் சைவ சமயத்திற்கும் இடையிலான நீண்ட வரலாற்று தொடர்புகள் உள்ளன. என்பதை கண்டி எசல பெரகரா பறைசாற்றி நிற்கின்றன. இந்துக்களது பூசை வழிப்பாட்டு முறைகளிலே காணப்படும் சாஸ்திர, சம்பிரதாயங்கள் கண்டி எசல பெரகரா வழிபாட்டிலும் காணப்படுகின்றன.

'பெரகரா' என்பது பிரகாரம் (சுற்றுப்பிரகாரம்) என்ற சொல்லிலிருந்து பிறந்து மருவி வந்த பதமாகும். பிரகாரம் என்பது தலத்தினை சுற்றி வருதல் எனப் பொருள்படும். அதாவது தலத்தினைச் சுற்றிச்செல்லும் ஊர்வலமாகும். இப்பெரகரா, தென்னிந்திய தமிழரின் சம்பிரதாயப்படி ஆடித் திருவிழாவாகவே நடாத்தப்பட்டுள்ளது. இலங்கை மன்னன் மகாசேனன்(கி.பி 274–301) புதல்வனான மன்னன் கீர்த்தி ஸ்ரீ மெஹாவன (கி.பி 301–328) இந்தியாவின் கலிங்க இளவரசனும் பின்னர் மன்னருமான சமுத்ரா குப்தாவுடன் கொண்டிருந்த நட்புறவு காரணமாக புனிததந்தம் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

இறுதியாக புனிதப் பல் கண்டி இராச்சியத்தில் வைப்பு (பிரதிஸ்டை) செய்யப்பட்டு கண்டியில் புனிதப்பல்லுக்கான கோயில் தலதா மாளிகை கட்டப்பட்டது. 1707 –1739 வரை கண்டியை ஆட்சிசெய்த கடைசிச் சிங்கள மன்னன் வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் இறந்த பின், அவரது பட்டத்து ராணியான நாயக்க வம்சத்து ராணியின் இளைய சகோதரனான மதுரையைச் சேர்ந்த நாயக்க அரசனான ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (1739–1747) அரியணை ஏறினான். இதன்பின்னர் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்(1747–1783) இராஜாதி இராஜசிங்கன்(1781–1798) இறுதியாக நாயக்கவம்சத்து மன்னராக ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் (1798–1815) போன்றோர் ஆட்சி செய்தனர். எழுபத்தைந்து (75) வருடங்களாக தமிழர்களே ஆட்சி புரிந்தனர். ஸ்ரீ விக்ரம இராஜசிங்கனின் இயற்பெயர் கண்ணுசாமி. இவர்களிடமே புனிதப்பல் இருந்தது. எனவே கண்டியில் இவர்களே எசல பெரகரா திருவிழா ஊர்வலத்தினை நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி பெரகராவில் இந்துசமய தமிழ்க்கலாசார பண்பாட்டுப் பண்புகள் பல நீண்ட காலமாகவே காணப்பட்டு வந்துள்ளன. இலங்கையில் பெரும்பான்மையாகவுள்ள சிங்கள மக்களினதும், தமிழ் மக்களினதும், அதுபோல பௌத்தர்களினதும், இந்துக் களினதும், ஒற்றுமைக்கு காரணமாக விளங்கும் பௌத்தர்களின் பெரகராவில் காணப்படும் இந்துக் கலாசார, தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களை வெளிக்காட்டுவதும், அவை பற்றி விளக்குவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கண்டி வரலாற்று புகழ்மிக்க எசல பெரகராவில் காணப்படும் இந்து சமய தமிழ்க் கலாசார, பண்பாட்டுப் பண்புகள் வழிபாட்டு முறைகளாக இந்து மதத்திற்கும், தமிழர்களுக்கும், பெரகராவிற்கும் உள்ள தொடர்பினை பறைசாற்றி நிற்கிறது. இந்திய தமிழ் நாட்டுடனான தொடர்பு, கண்டி இராச்சிய மன்னர் காலம் தொட்டு, இந்திய அரச குடும்பங்களில் பெண் எடுக்கும் வழமை காணப்பட்டது. கண்டி இராச்சியத்தினை தமிழ் நாயகர்கள் ஆட்சி செய்தமை சில காரணங்களாக அமைகின்றன. மேலும், நாயக்கர் ஆட்சியிலும் அதற்கு முன்னரும் கண்டியில் இந்துக்கள் குடியிருந்தமை, தமிழ் நாட்டின் ஆடித்திருவிழாவாக கண்டியில் எசல பெரகரா அறிமுகப்படுத்தப்பட்டமை போன்றவை இந்து முறைப்படியான வழிபாட்டிற்கு காரணமாக இருக்கலாம்.

கண்டி வரலாற்று புகழ்மிக்க எசல பெரகராவில் காணப்படும் இந்து சமய, தமிழ் கலாசார பண்பாட்டுப் பண்புகள் வழிபாட்டு முறைகளாக இந்து மதத்திற்கும், தமிழர்களுக்கும், பெரகராவிற்கும் உள்ள தொடர்பினை பறைசாற்றி நிற்கிறது. இதற்கு இந்திய தமிழ் நாட்டுடனான தொடர்பு முக்கியமானது.

அதாவது கண்டி இராச்சிய மன்னர் காலம் தொட்டு, மன்னர்கள் இந்திய தமிழ்நாட்டு அரச குடும்பங்களில் வழமையாக பெண் எடுத்தமை, கண்டி இராச்சியத்தினை தமிழ் நாயகர்கள் ஆட்சி செய்தமை, பண்டைய காலத்திலிருந்தே கண்டியில் தமிழ் இந்துக்கள், குடியிருந்தமை, தமிழ் நாட்டின் ஆடித் திருவிழாவையே கண்டியில் எசல பெரகராவாக அறிமுகப்படுத்தப்பட்டமை போன்றன இதற்கு காரணங்களாகும். இதுவே நாயக்கர் ஆட்சியிலும் எசல பெரகராவில் இந்து முறைப்படியான வழிபாட்டிற்கு வழிவகுத்தன.

அதேபோல கண்டி வரலாற்று புகழ்மிக்க எசல பெரகராவில் காணப்படும் "தமிழ் சொற்பதங்கள்" தமிழுக்கும், தமிழர்களுக்கும், பெரகராவிற்கும் உள்ள தொடர்பினை பறைசாற்றி நிற்கிறது. இத் தமிழ் சொற்கள் கலப்பிற்கு மேலே குறிப்பிட்ட பல காரணங்கள் தவிர மன்னர் காலத்து தமிழர் நிர்வாகம் சிங்கள மொழியில் திராவிட மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளின் கலப்பு போன்றனவும் தமிழ் சொற்பாவனைக்கு காரணமாக இருக்கலாம்.

இலங்கையில் சைவ சமயம் பரவிய அளவுக்கு வைணவம் பரவவில்லை. இலங்கையில் வைணவர்களிடையே பெருமாள் வழிபாடு, திருமால் வழிபாடு, வல்லிப்புரத்தாழ்வார் வழிபாடு, கிருஷ்ண வழிபாடு மற்றும் நரசிம்ம வழிபாடுக்கான கோயில்கள் காணப்படுகின்றன. இவை சைவ சமயத்தவர்களிடையேயும் போற்றி வழிபடப்படுகின்றன. அதே சமயம் பௌத்த சிங்களவர்களிடமும் விஷ்ணு வழிபாடு பிரசித்த பெற்றது. இந்திரன், வருணன், மாயோன், சேயோன் வழிபாடுகளும் சிங்கள பௌத்தர்களிடம் சிறப்பாகவுள்ளது. இவர்கள் சமன் தெய்யோ என வழிபடுவதை நாம் காணலாம். இது இந்திர வழிபாடாகும். இந்திரனே சமன், வருண என பௌத்தத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுகிறார்கள். இதேபோன்று விஷ்ணு தேவாலயங்கள் கேகாலை மாவட்டத்தில் அழுத்நுவரவிலும், தெவுந்தரவிலும், கடலாதெனிய, லங்காதிலக்க ஆகியவற்றிலும் உள்ளன. இவை பஸ்நாயக்க நிலமேமார்களினால் நிர்வகிக்கப்படுகிறது. இவர்கள் பெரகரா ஊர்வலத்திலும் பங்குபற்றுகின்றனர். கண்டி விஷ்ணு தேவாலய பஸ்நாயக்க நிலமே தெரிவில் மேற்கூறப்பட்ட விஷ்ணு தேவாலயங்களுக்கும் வாக்குகள் உண்டு. விஷ்ணுவின் நிறம் நீலம் எனவே கண்டி எசல பெரகராவில் விஷ்ணு தேவாலய பெரகரா விஷ்ணுவின் நிறமான நீலவர்ண மின்குமிழ் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து மதத்தில் பிராமணர்கள் பூசை செய்வது போல இங்கு கதிரேஷன் தவிர்ந்து மூன்று தேவாலயங்களிலும் கப்புராளையினால் (பூசாரி) பூசைகள் செய்யப்படுகிறது. கதிரேஷன் கோயிலில் மட்டும் முருகனுக்கும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் பிராமணர்களால் பூசை செய்யப்படுகிறது. கப்புராளையினால் (பூசாரி) செய்யப்படும் பூசைகளிலும் இந்துக்களின் முறைப்படி விளக்கேற்றல், நெய்விளக்கேற்றல், கற்பூர தீபம் காட்டுதல், பஞ்சாரத்தி காட்டல், அடுக்கு தீபம், ஒற்றைத் தீபம் காட்டல், சாம்பிராணி தூபம் காட்டுதல், மஞ்சல் நீர் தெளித்தல், பூ சாத்துதல், பூமாலை சாத்துதல், பட்டு சாத்துதல், நைவேத்தியம் படைத்தல், பால் படைத்தல், பழங்கள் படைத்தல், ஆகியன செய்யப்படுகின்றன. நைவேத்தியம் படைத்தலையும், பிரசாதம் வழங்குவதையும் "தான" (தானம்) வழங்குதல் என அழைக்கப்படுகிறது. நீற்று பூசணிக்காய் வெட்டுதல், குங்குமம் பூசுதல், பச்சை சாத்துதல், சந்தனத்தில் பொட்டு வைத்தல், அர்ச்சனையின் பின் வெற்றிலை பூ கொடுத்தல் போன்றனவும் இந்து சமய வழிபாட்டு முறைகளிலேயே செய்கின்றனர்.

பெரகராவில் தேவாலங்களின் இறுதியாக செல்லும் யானை மீது "அம்பாரி" கட்டி அதனுள் பனிச்செம்பு வைத்து கொண்டு செல்லப்படுகிறது. இதில் பனிச்செம்பு பட்டுத்துணியில் சுற்றி வைக்கப்படுவதோடு இதற்கு மல்லிக்கைப்பூ, பூச்சரம் செய்து சூட்டப்பட்டு மல்லிகைப்பூவால் தூவி, சாமரம் வீசி சாம்பிராணி தூபத்துடன் எடுத்து செல்லப்படுகிறது. அம்பாரி கட்டியுள்ள யானைக்கு அருகில் வலப்புறமும், இடப்புறமும் செல்லும் யானைகளில் மேலிருந்தே பூ தூவுவதோடு சாம்ராணி தூபம் காட்டி சாமரமும் வீசப்படுகிறது. இச்சாமரம் வீசுதல், பூ தூவுதல், சாம்ராணி தூபம் காட்டுதல் தலாதா மாளிகை புனித பேழையை கொண்டு செல்லும் ஊர்வலத்தில் வலப்புற, இடப்புற யானைகள் மீதிருந்து இப்பூசை செய்யப்படுகிறது. கதிரேஷன் கோயில் பூசைகளில் காளாஞ்சி வழங்கப்படுகிறது. இங்கு அம்பாரி கட்டி பனிச்செம்பு கொண்டு செல்லும் யானையின் முன் பூசை செய்யும் பிரதான குருவான பிராமண சிவாச்சாரியார் பெரகரா ஊர்வலத்தில் நடந்து செல்வது வழமை. ஏனைய தேவாலங்களில் பிரதான கப்புராளைமார் இவ்வாறு முன் செல்வாரகள்.

எசல பெரகரா ஊர்வலத்தில் கதிரேசன் தேவாலயத்தின் தவில், நாதஸ்வரம், காவடி, கரகம், போன்ற பக்தி நடனங்கள் தமிழ் கலைஞர்களின் பங்குபற்றுதலுடனேயே நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வூர்வலத்தில் பூசை செய்யும் பிராமணர், பல்லாக்கினை தூக்கிச் செல்லும் யானையின் முன் ஊர்வலத்தில் செல்கிறார். தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் 'கிளர்ணட் பேண்ட்' காவடி, மேளம் அடித்தும், உடுக்கு அடித்தும் ஊர்வலத்தில் செல்கின்றனர். முருகப் பெருமானின் சேவற்கொடி, மயில்கொடி மயில்வாகனம் ஆகியன பெரகராவில் காணப்படுகின்றன. கதிரேஷன் என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மாத குமரன் என்பது பொருள். கார்த்திகேயன், குமரன், முருகன், கந்தன், வேலன், ஆறுமுகன், சுப்பிரமணியன் என இந்துக்களினால் அழைக்கப்படும் வேலனை கதரகம தேவியோ,குமார, விசாக, மகாசேன என்ற சிங்களவர்கள் வழிபடுகின்றனர்.

முருகன் இலங்கையில் கதிர்காமத்தில் வேடர் இனத்தைச் சேர்ந்த வள்ளி என்ற பெண்ணை மணந்தார் என்பது வழக்காற்றியல் வழமை. முருகனை மகா கதரகம என பௌத்தர்கள் வழிபடுகின்றனர். நாயக்கர் ஆட்சி காலத்தில் இராஜசிங்கன் வம்சம் நாட்டை ஆளுபவர் பௌத்தராக இருக்க வேண்டும் என்பதற்காகவும், புனித தந்தத்தின் காவலர் என்பதாலும் பௌத்த மதத்தை தழுவி வழிபட்டனர். எனினும் அவர்களது இந்திய அரசியர் இந்துக்களாகவே இருந்தனர். இவர்கள் முருக பக்தர்களாகவும் இருந்துள்ளனர். எனவே மன்னரும், இராணியும் ஒன்றாக சென்று வழிபடக்கூடியதாக பௌத்தமும் முருக வழிபாடும் ஒன்றிணைந்ததாக கண்டி கதிரேஷன் கோயில் அமைந்தது.

சிங்கள மக்கள் பௌத்த மதத்தவராக விளங்கிய போதும் முருகனை வழிபட்டு வந்தமைக்கு வரலாற்று சான்றுகள் உண்டு. விஜயன் கதிர்காம கோயிலை கட்டியதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. துட்டகாமினி எல்லாளனை தோற்கடிப்பதற்காக கதிர்காம கந்தனுக்கு நேர்த்தி வைத்ததாகவும், வெற்றி பெற்றதன் பின் கதிர்காம ஆலயத்தை அமைத்ததாகவும் " கந்த உபாத" கூறுகிறது. எனவே சிங்கள மக்களிடையே காணப்பட்ட முருக வழிபாடு கண்டியிலும் பிரசித்து பெற்றிருந்ததில் ஆச்சரியமில்லை.

பெரஹராவில் புத்த தந்த பவனி சேர்க்கப்படுமுன் கதிர்காம கடவுளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு வந்ததாக பெரஹரா வரலாறு கூறுகிறது. பெரஹராவில் விஷ்ணுவும் கதரகம தெய்யோவும் (கண்டி கதிர்காம கந்தன்) பத்தினி தெய்வமும் ஊர்வலமாக சென்றதாக ரொபட் நொக்ஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். ரொபட் நொக்ஸ் நூல் பிந்திய காலத்தைச் சேர்ந்தது. ஆனால் அவர் இலங்கையில் கைதியாக இருந்த போது கேட்டவற்றையே இதில் குறிப்பிட்டுள்ளார்.

நீர்வெட்டு இந்துக்களின் முறைப்படியே நடைபெறுகிறது. கெட்டம்ப மகாவலி நதிக்கரையில் இந்த நீர் வெட்டு நடைபெற்று நீர்க்கலசங்கள் இந்து முறைப்படி பூசை செய்யப்பட்டு கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்திற்கு கொண்டு வரப்படுகிறது. அங்கும் சைவ முறைப்படி பூசை செய்யப்பட்டு பகல் பெரகரா ஆரம்பிக்கப்படுகிறது. இங்கு விபூதி பிரசாதம் வழங்குதல், சந்தன, குங்கும பொட்டிடுதல், தேங்காய் அடித்துடைத்தல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. பெரகரா ஆரம்பிக்குமுகமாக தலதா மாளிகையிலிருந்து யானை மீது கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்திற்கு வருகை தந்து ஆசி பெறுவதும் மேற்கொள்ளப்படுகிறது. இது போலப் பெரகரா ஊர்வலம் தொடங்கிய பின் ஆறாவது பெரகரா அல்லது முதலாவது ரந்தோலி பெரகரா அன்று அல்லது இறுதி பெரகரா அன்று கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்திலிருந்து இந்துக்கள் பூசை தட்டுக்களுடன் கோயில் சிவாச்சாரியார்களுடன் ஊர்வலமாக சென்று ஊர்வலத்தில் கொண்டு செல்லப்படும் புனித பேழைக்கு அர்ச்சனை செய்யும் வழக்கமும் சம்பரதாய பூர்வமாக காணப்படுகிறது. இவ் அர்ச்சனைகள் இந்து முறைப்படியே செய்யப்படுகிறன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெரகராவில் ஏனைய நான்கு தேவாலயங்களும் இணைந்து கெட்டம்பே மகாவலி நதியில் நீர்வெட்டு செய்த பின் கண்டி கட்டுகலை ஸ்ரீ செல்வவிநாயகர் கோயிலுக்கு கொண்டுவரப்படுகின்றது. பின்னர் இந்நீர்வெட்டு நீர் அடங்கிய பனிச்செம்புகளுக்கு பூசை செய்யப்படும். அதனைத் தொடர்ந்து நான்கு தேவாலயங்களும் உள்ளடங்கிய பெரகரா ஸ்ரீ செல்வவிநாயகர் கோயிலிலிருந்தே ஆரம்பிக்கப்படுகின்றது.

இறுதிப் பெரகரா நாளில் நீர்வெட்டு நடத்தப்படுகின்றது. இந்நீர் வெட்டு இந்துக்களின் முறைப்படி நடத்தப்பட்டு கலசங்களில் நீர் எடுத்து வரப்படுகின்றது. இவ்வூர்வலத்தில் பூசை செய்யும் பிராமணர், பல்லாக்கினை தூக்கிச்செல்லும் யானையின் முன் ஊர்வலத்தில் செல்கிறார்.

முருகப் பெருமானின் சேவற்கொடி, மயில்கொடி மயில்வாகனம் ஆகியன பெரகராவில் காணப்படுகின்றன. எசல பெரகரா ஊர்வலத்தில் கதிரேசன் தேவாலயத் தின் தவில், நாதஸ்வரம், காவடி, கரகம், போன்ற பக்தி நடனங்கள் இந்து கலைஞர்களின் பங்குபற்றுதலுடனேயே நடத்தப்பட்டு வருகின்றது. பகல் பெரகராவில் கண்டி செல்வ விநாயகர் கோயிலிலும் பெரகராவில் ஒரு அங்கமாகவுள்ளது. கோயில் பூசை முடிந்து கலைஞர்களுக்கு விபூதி, சந்தனம், குங்குமம் இடப்பட்டு பெரகரா ஊர்வலத்தில் செல்கின்றனர். இதன் மூலம் இந்துக்களினது அடையாளம் ஏற்று கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

பத்து நாள் வெளி பெரகரா ஊர்வலத்தில் இறுதி ஐந்து நாளும் 'ரங்' என அழைக்கப்படும் தண்டாயுதம். பல்லக்கில் தூக்கிச் செல்லப்படுகின்றது. இதனால் இந்த ஐந்து நாளையும் ரந்தோலி பெரகரா என அழைக்கப்படுகிறது. ஊர்வலத்தில் யானை மீது அமர்ந்து பனிச்செம்பினை தூக்கிச் செல்வர். இந்துக்களின் முறைப்படி சுபமுகூர்த்தம் பார்த்து தினமும் பெரகரா ஊர்வலம் ஆரம்பமாகின்றது. அக்காலக் கண்டி இராச்சிய பிரிவுகளில் கொடிகள் ஊர்வலத்தில் கொண்டு செல்லப்படுகின்றது. இதில் இராவணன் கொடி, சேவற்கொடி, மயில்கொடி போன்ற இந்துக்களின் சின்னங்களும் கொடிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் யானைகள் பல ஊர்வலமாக செல்லும். யானைப்பொறுப்பாளர், அரசரின் உடமைப் பொறுப்பாளர், சங்கு ஊதுபவர் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு காவுபவர், உணவுப்பொறுப்பாளர் போன்ற பலரும் யானைகளில் செல்வர். சங்கு ஊதுவது இந்துக்களின் வழக்கங்களில் ஒன்றாகும். இந்துக்களின் பூசைகளின் போதும், மரணச்சடங்குகளின் போதும், சங்கு ஊதும் வழக்கமும் உண்டு.

இது போல இந்துக்களின் பூசையின் போது கைமணி, காண்டா மணி அடிப்பது போல தேவாலங்களிலும் கைமணி, காண்டாமணி ஒலிக்கப்படுகிறது. அத்தோடு கைமணி ஊர்லத்தில் யானை மீதும் கொண்டு செல்லப்படுகிறது.

கதிரேஷன் என்றால் கார்த்திகை மாத குமரன் என்பது பொருள். கார்த்திகேயன், குமரன், முருகன், கந்தன், வேலன், ஆறுமுகன், சுப்பிரமணியன் என இந்துக்களினால் அழைக்கப்படும் வேலனை கதரகம தேவியோ, குமார, விசாக, மகாசேன என்று சிங்களவர்கள் வழிபடுகின்றனர்.

முருகன் இலங்கையில் கதிர்காமத்தில் வேடர் இனத்தைச் சேர்ந்த வள்ளி என்ற பெண்ணை மணந்தார் என்பது வழக்காற்றியல் வழமை. முருகனை மகா கதரகம என பௌத்தர்கள் வழிபடுகின்றனர்.

இலங்கையின் சிவனொளிபாதமலையினை தரிசித்துச் செல்ல பல இந்துக்கள் இந்தியாவிலிருந்து வந்ததாகவும் அவர்களுள் செங்கந்தன் என்பவர் காட்டுப் பகுதியில் வாழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது. காடு என்பது சிங்களத்தில் "கெலே" (காடு கெலே) என அழைக்கப்படுவதால் செங்கந்த கெலே என்பதே செங்கடகெல என அழைக்கப்பட்டு செங்கடகல ஆகியது என்றும் கந்த என்பது ஆங்கிலத்தில் (KANDY) கண்டி என எழுதப்பட்டு, இந்நகரின் பெயர் கண்டி ஆயிற்று என்றும் அறியப்படுகின்றது. செங்கந்தன் வழிபட்ட கோயில் ''நாதர்'' கோயில் என்பதும் இராஜராஜசிங்கன் வழிபட அமைத்த கோயில் கதிரேசன் கோயில் எனவும் அதுபோல தமிழ் மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டது விஷ்ணு கோயில் எனவும் கண்ணகியின் பெருமையினை உணர்ந்து கண்ணகி வழிபாடு இலங்கையில் ஏற்பட்டதாகவும், கண்ணகி கோயில் கண்டியிலும் அமைத்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த கண்ணகி கோயிலே பின்னர் பத்தினி கோயிலானது எனவும் கூறப்பட்டது. கண்டி எசல பெரஹராவில் ஐந்தாவதாக பத்தினி தேவாலய பெரஹரா ஊர்வலமாகச் செல்கின்றது. கண்ணகி அம்மன் குழந்தையாக பேழையில் மிதந்து வந்த போது மாநாயக்கன் செட்டியார் எடுத்து கண்ணகி என்ற பெயரிட்டு வளர்த்து கோவலனுக்கு திருமணம் செய்து கொடுத்த்தாகவும் கோவலனுக்கும் மாதவி என்ற கணிகையுடன் தொடர்பு ஏற்பட்டதால் தனது செல்வங்களை எல்லாம் இழந்து பின்னர் கண்ணகி யிடம் தஞ்சமடைந்து வாணிக நோக்கமுடன் மதுரை சென்றதாகவும், காற் சிலம்பை விற்க சென்ற போது பாண்டிய மன்னனால் கள்வனெனக் கருதப்பட்டு கோவலன் கொல்லப்பட்டதாகவும் நீதி கேட்டு கண்ணகி விரித்த கூந்தலுடன் மன்னனை சந்தித்து மற்றைய கால் சிலம்பை திருகி எறிந்து, அது தனது கால் சிலம்பு என நிரூபித்ததாகவும் கோபத்தில் மதுரையை எரித்தபின் மலையேறி மறைந்ததாகவும் அதனை செங்குன்றக் குறவர்கள் கண்டதாகவும் சிலப்பதிகாரம் சொல்கிறது. கண்ணகியின் பெருமையை உணர்ந்து செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை செய்தான் எனவும் சிலை பிரதிஷ்டை செய்தபோது இலங்கை மன்னன் கஜபாகு இவ் விழாவில் கலந்து கொண்டதாகவும் அறியப்படுகிறது. கஜபாகு மன்னன் தென்னிந்தியாவில் இருந்த திரும்பிய போது சந்தன மரத்திலான கண்ணகி சிலையையும் காற் சிலம்பையும் இலங்கைக்கு கொண்டு வந்தான் எனவும் வடபுல கடற்கரையில் இறங்கிய மன்னன் யானை மீது ஊர்வலமாக கண்டிவரை சிலையைக் கொண்டு சென்று கண்டி ஆலயத்தில் வைத்து வழிபட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் கூறப்படுகிறது. இதனை கடல்சூழ இலங்கை கயபாகு வேந்தனும் (வரந்தகு காதை (160 – 164) எனும் பாடல் மூலம் அறியலாம்.

கஜபாகு மன்னரே இலங்கையில் கண்ணகி வழிபாடு பரவ காரணமானவர். கண்ணகியே பின்னர் பத்தினி தேவாலயமாக பௌத்தர்களால் அறியப்பட்டது. இந்த பத்தினி ஆலயத்தின் எசல பெரஹரா ஊர்வலத்தில் பெண்களின் நடனம் நிகழ்ச்சிகளை அதிகமாகத் காணக்கூடியதாக இருக்கும் பெண்கள் தாம் கண்ணகி ஆலயத்தில் நேர்த்தி வைத்துக் கொண்டு அதை நிறைவேற்றுவதாலேயே பெண்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது என்று இதற்கு காரணம் தெரிவிக்கப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டத்தில் மங்கள வாழ்த்துப் பாடலில் "இந்திர விழாவெடுத்த காதை" என்பதும் ஒன்றாகும். இந்த சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்ற இத்திருவிழா பூம்புகாரில் கொண்டாடப்பட்ட விழா. இந்திரக் கோயிலான வச்சிரக் கோட்டத்திலுள்ள முரசை வெள்ளானைத் கோட்டத்திற்கு எடுத்துச் சென்று அதனை யானை மேலே ஏற்றி வீதி வலம் செல்வதன் மூலம் இந்திரவிழா உத்தியோகப்பூர்வமாக நகர மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த இந்திர விழாவில் சிவன் கோயில், குமரக் கோட்டம், திருமால் கோட்டம், பலராமன் கோட்டம் ஆகிய எல்லா கோயில்களிலும் விழா நடைபெற்று வலம் வந்தன. இதனை கண்ணுற்ற கஜபாகு இலங்கையிலும் இதைப்போலவே நடைபெற வேண்டும் என விரும்பி கண்டி பெரஹராவுடன் நாத்த, விஷ்னு, கதிரேஷன், பத்தினி தேவாலயங்களில் இருந்தும் ஊர்வலங்கள் புறப்பட்டு எசலபெரஹராவுடன் இணையும்படி செய்திருக்கலாம் என கருதப்படுகிறது.

எனவே தமிழில் காணப்படும் பெருங்காப்பியங்களுடன் கண்டி பெரகராவுக்கு தொடர்பு காணப்படுகின்றது. கண்ணகிக்கு கண்டியில் ஆலயம் அமைத்தது பற்றி சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வரந்தரு காதை 160164 ம் பாடல்களில்

**"அது கேட்டுக் கடல் சூழ் இலங்கை கயபாகு என்பான்
நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்தறுத்து
ஆங்கு அறத்தை கெடுத்த வரந்தரு இவனென
ஆடித்திங்க ளவையின் ஆங்கோர்
பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப
மலைவீற் றிருந்த வளம்பல பெருகி
பிழையா விளையன் நாடாயிற்று. " எனக் கூறியுள்ளார்.**

நாத்த தேவாலய பெரஹரா, ஊர்வலத்தில் இரண்டாவது இடத்தினை பெற்றுள்ளது. நாத்த என்பதற்கு பல்வேறு விளக்கங்களை நாம் காணக்கூடியதாகவுள்ளது. இந்து மதத்தில் நாரதர் என சிவபெருமான் அழைக்கப்படுகிறார். அகிலேஸ்வர நாதர் என்பதும் சிவனின் பெயர்களில் ஒன்றாகும். நாதர் முடிமேலிக்கும் நல்ல பாம்பே என்ற சொற்றொடரை மனதில் இருத்திக் கொள்ளவும். முன்னேஸ்வர நாதர் எனவும் அழைக்கின்றோம். நாதர் என்பது மருவி "நாத்த" என்றாகி இருக்கலாம் என்றும் சிவன் கோயில் பிற்காலத்தில் "நாத்த" எனப் பெயர்பெற்றிருக்கலாமென கூறும் நூல்களும் உள்ளன. "நாக வழிபாடு காலப்போக்கில் மறுவி நாக என்பது சிங்களத்தில் "நாத்த" எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.. ஆனால் "நாத்த" என்பதுடன் எந்தவித இந்து மத்த் தொடர்பும் கிடையாது என சிங்கள நூலான பெபிலியானவில் கே. என். ஒ. தர்மதாஸ, எச். எம். எஸ் துன்தெனிய ஆகிய இருவரும் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத்த தேவாலயம் பற்றி கூறும் பெபிலியான சாசனம் கடலாதெனிய சாசனம், லங்காதிலக்க சாசனம் (சிலாலேகன) ஆகியன நாத்த என்ற தெய்வம் இந்து சமயத்துடன் சம்பந்தப்படாதது என்றும் இத்தெய்வம் போதிசத்துவர் அவதாரமாகவும் கூறப்படுகிறது. புத்தர் 550 தடவை அவதாரம் எடுத்துள்ளார் என ஜாதகக் கதைகள் கூறுகின்றன. இந்த அவதாரங்களையே போதி சத்துவர் என பௌத்தத்தில் கூறப்படுகிறது. இத் தொடர்சியின் இறுதி அசதாரமே கௌதம புத்தராவார் என்று பௌத்த நம்பிக்கை மேற்படி அவதாரங்களில் ஒரு அவதாரமான போதிசத்து அவ்லோகிஸ்வரநாத்த என்ற அவதாரமே நாத்த தெய்வமாக வணங்கப்படுவதாக பெபிலியான சாசனமும், புத்தரின் முதல் அவதாரமான லோகிஸ்வரநாத்த இங்கு வணங்கப்படுவதாக கடலாதெனிய சாசனமும் குறிப்பிட்டுள்ளன.

“நாத்த என்ற பெயருடன் தொடர்புடைய மற்றொரு விளக்கத்தில் அனுராதபுரத்திலிருந்து வெள்ளரசு கிளை ஒன்றினை நாத்த எனப் பெயருடையவர் கொண்டு வந்து தலதா மாளிகைக்கு முன்பாக நட்டு வணங்கியதால் நாத்த என்ற பெயர் வந்ததாகவும் 14ஆம் நூற்றாண்டில் இந்தத் தேவாலயம் கட்டப்பட்டு வணங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. புத்தரின் முதல் அவதாரம் என்பதால் “நாத்த தெய்வம் வீற்றிருக்கும் இக்கோவில் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுவதோடு பெரஹாரா ஊர்வலத்தில் தேவாலயங்களில் முதலிடம் பெறுகிறது. இக்காலத்திலேயே தலதா மாளிகைக்கு அடுத்ததாக ஊர்வலத்தில் இடம் பெறும் கௌரவத்தை இத் தேவாலயம் பெற்றுள்ளது.

தலதா மாளிகையின் எண்கோண மண்டபம் “பத்திரிப்பு'' என அழைக்கப்படுகிறது. இது மன்னர் மக்களை பார்த்து இருந்த இடம் “பார்த்து இருத்தல்'' பாத்திருப்பு பின்னர் பத்திரிப்புவாக மாறியுள்ளது.

“ய'' என்ற எழுத்தும் “ம'' என்ற எழுத்தும் பல தமிழ் சொற்களோடு இறுதியில் கலந்து சிங்கள சொற்பதமாக மாறியுள்ளதை இங்கு பல சிங்கள சொற்களில் அவதானிக்கலாம். பெரகராவில் முன்னால் “கசை'' அடிக்கப்படுகிறது. இந்த தமிழ் சொல் அப்படியே சிங்களத்தில் “கசை'' என பாவிக்கப்படுகிறது. இதனை அடிப்பவர்களை கசகார்கள் என்பதற்கு பதிலாக “கச காரயோ'' என்கின்றனர்.

பெரகரா ஊர்வலம் இரவில் செல்வதால் வெளிச்சத்திற்காக வருசையாக நெய்ப்பந்தம் பிடிக்கப்படுகிறது. இந்த “பந்தம்'' என்ற சொல் சிங்களத்திலும் அதே அர்த்தத்தில் பாவிக்கப்படுகிறது. “ம்'' இல்லாமல் பந்தம என பாவிக்கப்படுகிறது.

நடனம் மற்றும் மேளக் கலைஞர்களாக பரம்பரை பரம்பரையாக கலந்து கொள்கின்றனர். இந்த இராஜகாரியம் என்பதே சிங்களத்தில் இரஜகாரிய என்றழைக்கப் படுகிறது. இவர்களுக்கு உபகாரம் வழங்கப்படும் இவ் “உபகாரம்'' என்ற தமிழ் சொல் “உபகார'' என்று சிங்களத்தில் உபயோகிக்கப்படுகிறது. “ய'' என்ற எழுத்தும் “ம'' என்ற எழுத்தும் பல தமிழ் சொற்களோடு இறுதியில் கலந்து சிங்கள சொற்பதமாக மாறியுள்ளதை இங்கு பல சிங்கள சொற்களில் அவதானிக்கலாம். பெரகராவில் முன்னால் “கசை'' அடிக்கப்படுகிறது. இந்த தமிழ் சொல் அப்படியே சிங்களத்தில் “கசை'' என பாவிக்கப்படுகிறது. இதனை அடிப்பவர்களை கசகார்கள் என்பதற்கு பதிலாக “கச காரயோ'' என்கின்றனர்.

இந்துக்களதும், தமிழர்களதும் கலாசார நிகழ்வுகளில் முக்கிய அம்சமாக நாதஸ்வரம், தவில் மேளம் வாசிக்கப்படுகிறது. இதன் மூலம் இந்து, தமிழ்க் கலாசாரம் பிரதிபலிக்கின்றது. “நாதஸ்வர'' என்று சிங்களத்திலும், மேளம அல்லது “மோளம'' என சிங்களத்திலும் அழைக்கப்படுகிறது. இது போல (பறை) பற என்பதற்கு “பெர''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சிங்களத்தில் அழைக்கப்படுகிறது. இவை தவிர மயிலாட்டம், புலியாட்டம் கோலாட்டம், தப்பாட்டம், கரகாட்டம் போன்ற தமிழ் கலாசார நிகழ்வுகளும் பெரகரா ஊர்வலத்தில் காணக் கூடியதாகவுள்ளது. "கரகம்" சிங்களத்தில் "கலய" என அழைக்கப்படுகிறது.

பொட்டு வைத்தலை "பொட்டுவ" என்கின்றனர். "பூசை" அல்லது "பூஜை" செய்வதை "பூஜாவ" என்கின்றனர் தண்ணீர் கலசத்தினை "கலய" "கலேய" "கலசம" என்கின்றனர். பகல் என்பதற்கு தவல் என அழைக்கப்படுகின்றது. பிள்ளையார் கோயில் என்பதற்கு "கோவில்" என்கின்றனர். பிள்ளையாருக்கு "புள்ளையார் எனவும் செல்வ விநாயகருக்கு "செல்வ விநாயக்க" என்றும் அழைக்கின்றனர்.

மயில் "வாகனம்" பெரகராவில் கொண்ட செல்லப்படுகிறது. இதில் வாகனம் என்பதற்கு "வாகன" என்கின்றனர்.

பெரகராவுடன் இணைத்து பாவிக்கப்படும் சொற்களில் கங்காணி அல்லது "கண்காணி" என்ற சொல் தமிழ் சொல். இது "கண்கனரால" என்றும் கொடி அதாவது சேவல் கொடி, மயில் கொடி, இராவணா கொடி, சிங்க கொடி என பல கொடிகள் பெரகரா ஊர்வலத்தில் கொண்டு சுமக்கின்றனர். இதில் "கொடிக்கு" "கொடிய" என்ற சொல்லும் "இராவணா கொடிய" என்ற சொல்லும் பாவனையில் உள்ளது. சிங்கம் என்பதை சிங்க என்கின்றனர். பெரகரா ஊர்வலத்தில் மன்னர் உடை அணிந்து மன்னர் போல தியவதன நிலமே மண்டபத்திலிருந்து ஊர்வலத்திற்கு செல்கிறார். சிங்களவர்களால் இது "மண்டபய" என்று அழைக்கப்படுகிறது. அதிகாரமுடைய அதிகாரிகள் புடை சூழ வருவார்கள். இவர்களை சிங்களத்திலும் "அதிகாரி" என அழைப்பர். இவர்களோடு பெரகராவில் கலந்து கொள்ளும் பஸ்நாயக்க நிலமேக்கள் தேவாலய தெய்வங்களை வழிபட்டு, ஊர்வலத்தில் கலந்து கொள்கின்றனர். தெய்வத்தை "தெவியோ" என "தெய்யோ" அழைக்கின்றனர். நில உடைமையாளர்களே நிலமே என அழைக்கப்படுகிறார்கள். இந்நிலமேக்களின் நிலத்திலேயே மற்றவர்கள் வாழ்கின்றனர்.

பெரகராவில் பங்குபற்றும் பௌத்த குருமாருக்கு தானம் வழங்கப்படுகிறது. இதனை "தான" என அழைக்கின்றனர். இக் கலைஞர்களின் நிபுணத்துவத்தினை பாராட்டி பரிசுகள் வழங்கப்படுகிறது. இதனை "நிபுணத்வய" என சிங்களத்தில் அழைக்கின்றனர்.

பெரகரா ஊர்வலத்தில் முதல் யானையில் பகரா செல்லும் வழி சொல்லும் சாசனம் கொண்டு செல்லப்படுகிறது. இது சிங்களத்தில் "சாசன" என்று சன்னஸ என்றும் அழைக்கப்படுகிறது. யானை மேலிருந்து தட்டுகளில் மல்லிகை பூக்களை வைத்து அம்பாரி கட்டிய யானை மீதுள்ள தண்டாயுதத்திற்கு மலர்தூவுகின்றனர். இதில் தட்டு என்பதற்கு "தட்டுவ" எனவும் "மலர்களுக்கு மல்" எனவும் அழைக்கப்படுகிறது. பூவின் "மொட்டு" சிங்களத்திலும் "மொட்டு" என்றே அழைக்கப்படுகிறது.

புத்தரின் புனிதப்பல் அடங்கிய பேழை, முத்துக்களை தந்தத்தில் கொண்டுள்ள முத்துராஜ இன யானை சுமந்து செல்ல, இருமருங்கிலும் செல்லும் யானைகளிலிருந்து மல்லிகைப்பூ தூவப்படும். இதுவும் இந்துக்களின் பூசை செய்யும் முறையாகும். இந்த பத்து நாள் பெரகரா ஊர்வலத்தில் செல்லும் நடனக் கலைஞர்கள் தலதா மாளிகை நிலங்களில் வாழ்பவர்கள். இவர்கள் பெரகராவில் பங்கேற்பது "இராஜ கடமை" என்றே நினைத்து கலைஞர்களாக பங்குபற்றுகின்றனர். இதில் காவடி, கரகம், பொய்க் கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை, மயிலாட்டம், வாள்வீச்சு நடனம், செம்பு நடனம், போன்ற தமிழ் கலாசார பண்பாட்டு அம்சங்கள் காணப்படுகின்றன.

பெரகராவை இந்து மன்னர்களே ஆதரவு வழங்கி சிறப்பாக நடாத்தியமை வரலாறு. இன்றும் அம்முறைபடியே சம்பிரதாயங்கள் மாறாது நடைபெற்று வருகிறது. இவற்றில் சில எழுதப்பட்ட சம்பிரதாயங்களாக காணப்படுவதோடு சில எழுதப்படாத சம்பிரதாயங்களாக காணப்படுகின்றன. கால ஓட்டத்தில் இவை இன்னும் மாறுபடாமல் இருப்பதற்கு இந்து பௌத்தர்களது ஒற்றுமையும் ஒரே வகையான வழிபாட்டு முறைகளும், தெய்வங்களை ஏற்றுக் கொள்ளும் பாணியும் காரணமாக அமைந்துள்ளது. அண்மையில் ஏற்பட்டுள்ள இனவாதம், மதவாதம், பௌத்தவாதம், இந்துவாதம், இனத்துவேசம், மதத்துவேசம் இச் சம்பிரதாயங்களின் மாற்றத்திற்கு காரணமாக அமையாது மாறாக இதனை பேணி காப்பதற்கு தேவையான காத்திரமான பங்களிப்பினை செய்ய வேண்டும். இது இருபக்க மதத் தலைவர்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமையாகும்.

உசாத்துணை நூல்கள்

1. Dammaratana Hisselle Thero (1963) Tamil influence on Sinhalese language
2. Gunasena, R. M. D. (1981).'The Kandy Esala Perahara Aluwihare', Colombo,
3. Seneviratne, Anuradha. (1978) "The Kandy Asala Perahara" Ceylon Tourist Board, Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

இலங்கையில் முருக வழிப்பாட்டின் வரலாற்றினை கூறும் நாட்டுப்புறவியல்

இலங்கை வரலாற்றில் ஆதிமக்கள் வேடுவர்கள். இவர்கள் முருகனை வழிப்பட்டுள்ள னர். முருகனின் தேவியருள் ஒருவரான வள்ளியம்மையினை இலங்கைப் பெண்ணாக, வேடுவப் பெண்ணாக வேடுவர்கள் சொந்தம் கொண்டாடுகின்றனர். இதனால் இலங்கையில் ஆதிகாலம் முதல் முருக வழிபாடு வேரூன்றிக் காணப்பட்டுள்ளது.

இலங்கையும், இந்தியாவும் புவியியல் ரீதியாகவும், பொருளாதார அரசியல், சமூக, கலாச்சார ரீதியாகவும் பல தொடர்புகளைக் கொண்டுள்ளன. தென்னிந்தியாவில் மிகப்பண்டைக் காலந்தொட்டு முருகவழிபாடு சிறப்பாகக் காணப்படுகிறது. முருகனை தமிழ்கடவுள் என்றே அழைக்கின்றனர். ஐரோப்பியக் காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் உள்ள தொடர்புகளான முருகவழிபாடு கொண்ட திருச்செந்தூர் முக்கிய இடத்தினை பெற்றுள்ளதால் நீண்டகாலமாக முருகவழிபாடு இலங்கையில் சிறப்பாக உள்ளதைக் காணலாம். ஆரம்ப காலத்தில் தமிழ் மன்னர்கள் பலர் இலங்கையை ஆண்டனர். சேரர், சோழர், பாண்டியப் படை யினர் இலங்கையில் வாழ்ந்தனர். பிற்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்தே தமிழர்கள் பெருந்தோட்ட தொழிலுக்காக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்கள் இலங்கையில் மலையகப்பகுதிகளில் குடியமர்த்தப்பட்டதால் இன்று இந்திய வம்சாவழி மலையகத்தமிழர் என அழைக்கப்படுகின்றனர். மலையகத்தமிழர் வருகையும்; இலங்கையில் முருகவழிபாடும் சிறப்புற மற்றொரு காரணமாயிற்று. [Nadesan, S. (1993)]

முருகன், சிவன் நெற்றிக்கண்ணில் ஒளிரும் ஆறுபட்டை சுடரே ஆறுமுகனாக அவதரித்தார். ஆணவ அரக்கனான சூரனை அழித்து தருமத்தை நிலைநாட்டவே அவதரித்தார். பராசக்தி அளித்த வீரவேலால் பகைவரை அழித்து சிவனடியார்களை காத்தவர். கந்தசாமி, கந்தன், ஆறுமுகன், சுப்பிரமணியன், சேயோன், மாயோன், விசாகன், வேலாயுதன், வேலன், குமரன் என பல்வேறு திருநாமங்களால் அழைக்கப் படுபவர். இச்சகல பெயர்களிலும்; இலங்கையில் பல கோயில்கள் உண்டு.

முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளான ஆறு மலைகளை குறிப்பிடுவார்கள். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, பழமுதிர்ச்சோலை, சாமிமலை எனும் ஐந்துடன் 'குன்றுதோறாடல்' என ஆறாவது படைவீடாக திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைக் 'கதிர்காமம்' என இலங்கை முருக பக்தர்கள் நம்பிக்கையுடன் வழிப்படுகின்றனர்.

இலங்கையின் பாரம்பரிய, கலாசார தேசிய நிகழ்வான கண்டி 'உடரட்ட' (மலை நாட்டு) வரலாற்றுப் புகழ்மிக்க எசல பெரகராவில் கண்டி கதிரேசன் கோவில் கலந்து கொள்வது இலங்கையின் முருகவழிபாட்டில் மற்றொரு முக்கிய அம்சமாகும். கார்த்திகை மாதகுமரனை குமார, விசாக, மகாசேன என இலங்கையில் சிங்களவர் களும் வழிபடுகின்றனர். கண்டி வரலாற்று புகழ்மிக்க ''எசல பெரகரா'' (எசல ஆடி, பெரகரா ஊர்வலம்) ஊர்வலத்தில் கதிரேசன் கோயில் ஒரு அங்கமாகவுள்ளது. இதில் முருகனுக்கு பிடித்த காவடியாட்டமும், கரகாட்டமும் ஆடப்பட்டு முருகனின் சேவல், மயில் கொடிகள் ஊர்வலத்தில் ஏந்திச் செல்லப்படுகிறது. கண்டி எசல பெரகராவில் புத்தரது தந்த (பல்) பவனி சேர்க்கப்படமுன் கதிர்காமக் கடவுள் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் முருகனுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை கண்டி இராச்சியத்தில் கைதியாக இருந்த ஆங்கிலேயரான ரொபர்ட் நொக்ஸ் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். [Ludowyk (ed.)(1948)] ஆரம்பத்தில் ஆடிப் பெருவிழாவாகவே நான்கு தேவாலயங்களின் ஊர்வலம் 'பெரகரா' நடந்து வந்துள்ளது. நரேந்திரசிங்க மன்னன் தலதா மாளிகையை அமைத்த பின்னர் பௌத்த தேரோவான சரணங்கரதேரரின் வேண்டுகோளுக்கிணங்கவே புனிததந்தம் ஊர்வலத்தில் சேர்க்கப்பட்டு முதல் பெரகராவாக தலதா மாளிகை (புத்தப்பெருமானின் பல்லுக் கோயில்) ஊர்வலமும் அதனைத் தொடர்ந்து ஏனைய ஆலயங்களும் செல்லத் தொடங்கியுள்ளன. [Seneviratne, Anuradha (1993)].

இலங்கையில் கண்டி இராச்சியத்தில், இந்திய நாயக்கர் வம்சத்தின்; ஆட்சிக் காலத்தில், இராஜசிங்கன் பரம்பரை நாட்டினை ஆட்சி செய்தபோது, ஆளும் மன்னன் பௌத்தராக இருக்கவேண்டும் என்பதற்காக பௌத்தமதத்தினைச் சார்ந்திருந்தாலும் அவரது இந்திய அரசியர் இந்துக்களாகவே இருந்தனர். இவர்கள் முருகபக்தர்களாகவும் இருந்துள்ளனர். எனவே மன்னனும் இராணியும் ஒன்றாகச்சென்று வழிப்படக்கூடியதாக பௌத்தமும் முருகவழிபாடும், ஒன்றிணைந்தாக கண்டி கதிரேசன் கோயில் அமைந்தது. இக்கோயில் நாயக்கர் காலத்துக்கு முன்னரே இருந்தபோதும் நாயக்கர்களே இக்கோயிலைப் புனரமைத்துள்ளனர். ஜநல்லையா, எஸ். (சாரல்நாடன்) (2005)].

'பெரகரா' ஆரம்பத்தில் 'கப்' நாட்டுதல் (காப்பு கட்டுதல்) நடைபெறும் போது கதிரேசன் கோவில் மூலமூர்த்திகளுக்கும் காப்பு கட்டப்படுகின்றது. அதன்பின்னர் முதல் ஐந்து நாட்களும் உள்வீதி 'பெரகரா' வில் கதிரேசன் கோவில் சிவாச்சாரியார் கோவில் வேலாயுதத்தினை தூக்கிக் கொண்டு மூன்று முறை கோயிலை வலம் வருவார். அதன்பின் 10 நாட்களும் வெளி 'பெரகரா' வில் யானைமீது அம்பாரி கட்டி அதில் பனிச்செப்புடன் முருகனின் வேலையும் வைத்து 'பெரகரா' ஊர்வலத்தில் எடுத்துவரப்படுகின்றது. இரந்தோலி 'பெரகரா' என அழைக்கப்படும் இறுதி ஐந்து நாளும் 'ரங்' ஆயுதம் எனப்படும் தண்டாயுதம் பல்லக்கினில் தூக்கி வரப்படும்.

இலங்கையில் கதிர்காமம் பழைய வரலாற்றினைக் கொண்டது. சூரபத்மனை அழிக்க வந்த முருகன் செந்தூரிலும், கதிர்காமத்திலும் பாசறை அமைத்து தங்கினான் என்பது தமிழரினதும் சிங்களவரினதும் நம்பிக்கையாகும். வள்ளி திருமணம் கதிர்காமத்தில் நடந்ததாக இலங்கையர் நம்புகின்றனர். இலங்கைக்கு பௌத்தம் வரமுன்னரே கதிர்காமம் புகழ் பெற்றிருந்தது. அநுராதபுரத்திற்கு சங்கமித்தையுடன் மகிந்த புத்தப்பெருமான் ஞானம் பெற்ற வெள;ளரச மரக்கிளையினை கொண்டுவந்து பௌத்த மதத்தினை பரப்பினார்கள் என்பது பௌத்த வரலாற்றினையும், இலங்கை வரலாற்றினையும் கூறம் மகா வம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது. இந்த வெள;ளரச மரவிழாவில் கதிர்காமத்து சிற்றரசர்களும் கலந்து கொண்டதாக மகாவம்சம் எடுத்துக் காட்டுகின்றது. இந்த வெள்ளரசு கிளை கதிர்காமத்திலும் நாட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. ஜசபாநாதன், குல (2007)].

இலங்கையின் வரலாற்றினை ஆராய்ந்த சாசனங்களில் 'விசாகன்' என்ற வணிகன் பற்றியும், அம்பாந்தோட்டையில் கதிர்காமத்திற்கு அண்மையில் சாசனம் ஒன்றில் 'குமர' என்ற பெயரும் 'வேலு' என்ற பெயரும் காணப்படுகிறது. எனவே விசாகன், குமரன், வேலு ஆகிய பெயர்கள் முருகனையே குறிப்பிடுகின்றது. ஜவேலுப்பிள்ளை, ஆ. (1985)]..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதர் பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாக்களைப் பாடியதுடன் முருகன் மேல் வேறு பல பிரபந்தங்களையும் பாடியுள்ளார். இவர் ஈழ நாட்டு முருகன் கோயில்களையும் பாடியுள்ளார். கதிர்காமமும், திருகோணமலை சிவன் கோயிலின் முருகன் கோவிலும் இவர் பாடிய ஈழத்தலங்களாகும். எனவே இக்கோயில்களின் மகிமை கி.பி. 15ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலும் பரவியுள்ளது எனலாம். கிழக்கில் மட்டக்களப்பில் திருக்கோயிலிலும், வெருகலிலும், யாழ்ப்பாண பிரதேசத்தில் நல்லூர் கந்தசாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், தொண்டமனாறு செல்வசந்நிதி என்பவை புகழ் பெற்ற முருகன் கோயில்களாகும்.

யாழ்ப்பாண நல்லூர் கந்தசாமி கோயில் கட்டப்பட்டது புவனேகபாகுவின் காலத்தில் எனப்படுகின்றது. 15ம் நூற்றாண்டில் கோட்டை சிங்கள மன்னர் ஆணைப்படி சிங்கை (யாழ்) நகரை தகர்த்து யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி நல்லூர் இராசதானியாக்கி சபுமல் குமாரயா என்ற சிங்கள பெயரைக் கொண்ட செண்பகப் பெருமாளே என்பது ஆய்வாளர்களது கருத்தாகும். ஜவேலுப்பிள்ளை, ஆ. (1985)]. இது அருணகிரிநாதர் காலத்து முருக வழிப்பாட்டு மறுமலர்ச்சியாகும். புவனேகபாகுவின் திருப்பணியை பாராட்டி மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆதினப் பிராமணர் அவனுக்கு விருந்து கொடுத்ததாக யாழப்பாண வைபவ மாலை கூறுகின்றது. ஜவேலுப்பிள்ளை, ஆ. (1985)]. எனவே மாவிட்டபுரம் கோவில் நல்லூர் கோவிலுக்கு முந்தியதாகும்.

தொண்டமனாறு செல்வசந்தியில் பிராமணரல்லாதவர்கள் பூஜை செய்கின்றார்கள். இதுபோலவே கதிர்காமத்திலும் கப்புராளை என அழைக்கப்படும் பிராமணரல்லாதவர்களே பூஜை செய்கின்றனர். எனவே இதுவும் கதிர்காமத்தை போலவே பழைமையானது. சிங்கள பௌத்தர்கள் ஈழநாட்டு காவல் தெய்வமாக புத்தபெருமான் முருகனை நியமித்திருப்பதாக நம்புகின்றனர்.

இந்துக்கள் கதிர்காமத்துடன் சம்பந்தப்பட்டு அந்த பெயரோடு முருகன் கோயில்களை நிறுவியுள்ளனர். புங்குடுதீவு கதிர்காமம், வட்டுக்கோட்டை சின்னக் கதிர்காமம், புலோலி உபயக் கதிர்காமம், மட்டக்களப்பு சின்னக் கதிர்காமம், குருக்கள் மடத்தில் செல்வக் கதிர்காமம், மடுல்கல சின்ன கோமரை செல்வக் கதிர்காமம் என்பன இவ்வாரானவையாகும். இதுபோல் கீரிமலை கதிரையாண்டவர், காரைநகர் கதிர்காமசுவாமி, நாகர்கோவில் கதிர்காம முருகமூர்த்தி என்பனவும் கதிர்காம பெயருடன் தொடர்புபட்டவை. அநுராதபுரத்தில் கதிரேசன், வத்துகாமத்தில் கதிரேசன், குருணாகலையில் கதிரேசன், ஊருகொல்லவில் முருகாமலை கதிரேசன், கண்டியில் கதிரேசன் என முருகக் கோயில்களை அழைக்கின்றனர். ஜமகேஸ்வரன், இரா. (2011)].

இந்திய தமிழ்நாட்டில் கன்னியாக்குமரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் சுப்பிரமணியம் என்ற பெயரிலேயே கோயில்கள் அமைத்துள்ளனர். அதுபோல யாழ்ப்பாணத்தில் பொலிகண்டியில் கந்தவனச் சுப்பிரமணியர், கதிர்ப்பாய் சுப்பிரமணியர், சங்கரணை வெல்வர் சுப்பிரமணியர், பன்னாலை வள்ளிமலைச் சுப்பிரமணியர் என அழைக்கப் படுகின்றன.

சிவசுப்பிரமணியம் என்ற பெயரில் கொழும்பு கட்டாந்தெரு சிவசுப்பிரமணியர், தொலஸ்பாக சிவசுப்பிரமணியர், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் கோயில்கள் உண்டு. கோயில்கள் கந்தசுவாமி கோயில் என்றே அழைக்கப்படுகின்றன. 14ம் நூற்றாண்டில் காஞ்சியிலே கச்சியப்பச் சிவாசாரியாரால் பாடப்பட்டதே கந்தபுராணம். இது ஈழத்தில் சோழநாட்டை போலவே பாராயண நூலாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போலவே வேலாயுதம் என்ற பெயரில் பல கோயில்கள் உண்டு. நெடுங்கேணி வேலாயுதன், மட்டக்களப்பு வேலாயுத சுவாமி, களுத்துறையில் கதிர்வேலாயுத சுவாமி, எட்டியாந்தோட்டையில் கதிர் வேலாயுத சுவாமி, மட்டக்களப்பு மான்தீவில் குமார வேலாயுதம், புதுக்குடியிருப்பில் ஞான வேலாயுதம், தம்பன் கடவையில் சித்திர வேலாயுதம், வெருகலில் சித்திர வேலாயுதம், அம்பனில் சித்திர வேலாயுதம், போரைத் தீவில் சித்திர வேலாயுதம், குமார புரத்தில் சித்திர வேலாயுதம் என அழைக்கப் படுகின்றது.

முருகனை முருக மூர்த்தி என்ற பெயரில் சுளிபுரம், அராலி, கரவெட்டி. மேலைக்கரம், சங்கானை, நவாலி ஆலயங்கள் அமைந்துள்ளன. கண்டி பல்லேகலவில் முருகன் கோயில் எனவும் பேராதனை பல்கலைக்கழகத்திலும், கம்பளை அம்புலுவாவிலும் குறிஞ்சி குமரன் கோயில் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றன. முத்துகுமாரசுவாமி என்ற பெயரில் திருகோணமலையிலும், கைதடியிலும், மூதூரிலும், நாவற்குழி தச்சன் தோப்பிலும், மண்டைத்தீவு சிறுபுலத்திலும் நயினாதீவிலும் அழைக்கப்படுகின்றன. சேலத்தை சேர்ந்தவர்களும், திருச்சியிலிருந்து வந்தவர்களும் தண்டாயுதபாணி சுவாமி என்றே அழைக்கின்றனர்.

மலையகத்தில் எம்பக்க தேவாலயம் எனக் கூறப்படும் ஆலயம் ''மகாகதரகம'' (மகா கதிர்காமம் முருகன்) தெய்வத்தினை வைத்து வழிபடும் தேவாலயமாகும். இது கம்பளை இராஜதானியாக விளங்கிய காலத்தில் அமைக்கப்பட்டது. கடலாதெனிய, எம்பக்க, லங்காதிலக ஆலயங்கள் இலங்கை வரலாற்றில் மட்டுமல்ல சிற்பக்கலைக்கும் சிறப்பான சான்று பகரும் உதாரணங்களாகும்.

மேளம் அடிப்பவர் ஒருவர் வருடாவருடம் கதிர்காமம் சென்று மேளம் அடித்து முருகனை வழிபட்டு வந்தார். அவர் வயோதிபம் அடைந்ததும் மிகவும் கவலையுடன் இம் முறைதான் தான் வரும் கடைசிப் பயணம் என கூறி அழுது துயரத்துடன் கதிர்காமத்தில் கந்தனை வழிப்பட்டார். அவரது கனவில் தோன்றிய முருகன் ''கவலைப்படாமல் செல் நான் ஆவன செய்வேன்'' என்றாராம். அவர் வீட்டுக்கு வந்த பின்னர் அவரது சொந்த ஊரைச் சேர்ந்தவர்கள் மரம் ஒன்றினை வெட்டும் போது அம்மரத்திலிருந்து சிவப்பு இரத்தம் வடிந்ததாம். அன்றைய தினம் கனவில் தோன்றிய முருகன் இங்கே கோயில் அமைக்குமாறு கூறினாராம். இது மன்னருக்கு தெரிவிக்கப்பட்டு கோயில் அமைக்கப்பட்டது. அந்த தேவாலயமே எம்பக்க தேவாலயமாகும். அந்த மேளமடிப்பவர் இறக்கும்வரை எம்பக்க தேவாலயத்தில் மேளம் அடித்தாராம். [Tundeniya, H. M. S. (1986].

தெல்தெனியாவுக்கும் மகியங்கனைக்கும் இடையில் அமைந்துள்ள முருகாமலை அல்லது முருகன் மலை என்ற இடத்தில் அமைந்துள்ள முருகன் கோயில் காலத்தால் முந்தியது என கூறப்படுகின்றது. இக்கோயில் தென்னிந்தியர் வருகைக்கு முன்னரே இப்பகுதியில் அமைந்துள்ளது. மாணிக்க கங்கைக்கு அருகில் கதிர்காமம் அமைந்திருப்பது போலவே இதன் அமைப்பும் காணப்படுகின்றது. முருகக் கடவுள் இங்கு வந்து சென்றதாக ஜதீக கதைகளும் உண்டு. கண்டி மன்னரான செனரத் மன்னன் யுத்தத்திற்கு செல்லும் போது நேர்த்திக்கடன் வைத்து சென்ற வேல் கோயில் எனவும், அவரே இக்கோயிலை அமைத்தார் எனவும் கூறப்படுவதோடு, இந்தியாவிலிருந்து கதிர்காமம் செல்லும் மயில் கூட்டம் இங்கு தரித்து நின்று முருகனை தரிசித்து செல்வதாகவும் கூறப்படுகிறது. ஜமகேஸ்வரன், இரா. (2011)].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து குறவர்கள் தங்களை வேடுவர் என்றே அழைப்பதுடன் தாம் வள்ளியின் பரம்பரை என்றே 'வள்ளி மக்கர்' என்று அழைக்கின்றனர். இவர்கள் மலைக்கடவுள் என்றே கூறி வணங்குகின்றனர். வேடுவக் குலத்தலைவன் நம்பிராசன் ஏழுமகன்காரனுடன் வேட்டைக்கு போனபோது வள்ளிக்கிழங்கு எடுத்தகுழியில் மான் ஈன்ற குழந்தையை கண்டு எடுத்துவந்து வள்ளி என்று பெயரிட்டனராம். அக்குழந்தை வளர்த்து தினைப்புலம் காவல்காக்க சென்ற நாரதர் கண்டு முருகனிடத்து சொல்ல, முருகன் கிழவன் வேடத்தில் வள்ளியைப் பார்த்தார். அந்த முருகனுக்கும் வள்ளிக்கு விவாகம் நடந்தது. அண்ணமார் அவ்விடம் வரவே தினைப்புலத்தில் முருகன் வேங்கைமரமானாரம். பிறகு வேங்கையை வெட்ட முற்பட்ட அண்ணன்மார் கல்லாக சபிக்கப்பட்டனர். வள்ளியின் வேண்டுகோளுக்கிணங்க முருகன் அண்ணன்மார்களை எழுப்பினார் என கூறப்படும் நாட்டார்கதை உண்டு.

நாட்டுபுற இலக்கியங்களை மக்கள் இலக்கியம் என்பர். மண்ணின் மணத்தையும், மக்களின் குணத்தையும் வெளிப்படுத்துவது நாட்டுப்புற இலக்கியம். இதனை எழுதாத இலக்கியம் என்றும் மக்களின் இன்ப, துன்பத்தினை கூறும் இலக்கியம் என்றும் மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை ஒவ்வொரு காலகட்டத்திற்கு ஏற்ப பின்னிப் பினைந்தது நாட்டுப்புற இலக்கியம் என்பர். ஜசக்திவேல், சு. (1983)ஸ இந்த இலக்கியத்தில் முருக கடவுள் வழிப்பாடு ஆதாரங்களை காணமுடிகிறது.

இலங்கையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நாட்டார் வழக்கிலுள்ள சமய வழிப்பாட்டு பாடல்களை ஆராய்கின்ற போது ஆண் தெய்வ வழிப்பாடு பற்றி கணிசமான பாடல்கள் உண்டு. பண்டைக் காலந்தொட்டு மட்டக்களப்பு சைவசமய வழிப்பாட்டு தெய்வமாக முருகன் விளங்குகின்றார். இங்கு மண்டூர், சிற்றாண்டி, தாந்தாமலையில் திருக்கோயில், தாந்தாமலை கதிர்காமம், தாந்தாமலை வெருகல் முதலிய இடங்கள் வரலாற்று பழைமை மிக்க முருக வழிப்பாட்டு தலங்களாகும். இவை வரலாற்றைக் கூறும் புராணக் கதைகளைக் கொண்டவை.ஜசுப்பிரமணியம், சுகந்தி (2006)].

வெள்ளி விளக்கெரியும்
வெண்கலங்கள் ஓசையிடும்
தங்க விளக்கெரியும்
சண்முகனார் கோயிலிலே

கந்தப் பனையோரம்
குளிராட்டக் காலையிலே
ஏந்து பலகையிலே
இருப்பாராம் சண்முகநாதர்

(தந்தனைத் தானானே மெட்டு)
சங்கு முழங்கிவரும் சண்முகா
சரவணப் பொய்கையிலே
வையாபுரி முருகா இந்நேரம்
வந்து உதவவேணும்

கோயிலை சுற்றி வலம்வரும் பொழுது பாடப்படுவது

சின்ன சின்ன ஏந்தரமா
தரும துர கோபுரமா
கோபுரத்து மேல் முருகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னா புஷ்பம் சாத்தலாம்
மல்லிகைப் பூ மருக்கொழுந்து
மலந்த புஷ்பம் சாத்தலாம்
ஒரு கொடியான் பலசரக்கான்
முருகரோட சந்திரியான் சமுத்திரமா
சதுரமான கோபுரமா
கோபுரத்து மேல் முருகா
இன்னா புஷ்பம் சாத்தலாம்
மல்லிகைப் பூ மருக்கொழுந்து
மலந்த புஷ்பம் சாத்தலாம்

காவடி பாட்டு

ஒரு அத்தான் கந்தர்! வேப்பமரம் அரோகரா
தோப்படிலே அரோகரா! சிம்மாசனம் அரோகரா
சித்தெடுக்க அரோகரா! சிறுபெரம்பு அரோகரா
மண்ணுடுக்க அரோகரா! மணிப்பெரம்பு அரோகரா
தாளுகத்தை அரோகரா! தடிபெரம்பு அரோகரா
சேதி சொல்ல கந்தர் வருவதொப்போ
இரு அத்தான் கந்தர் வேப்பமரம் அரோகரா

கோலாட்டப் பாடல்களில்

ஓடினேன் கப்பலேறி கதிர்காமம்
ஓங்குவடி வேலைத்தேடி
ஆடுவோம் பாடுவோம் கோலாட்டம்
ஆண்டவன் உன் பாதமே!
சந்தன சாது வத்தி சவ்வாது
சாம்பிராணி வாடை கட்டி
அந்தர கந்தாயுதா திருகங்கை
அன்பு வடிவமாய் பொங்குதே!

மங்கைய ரெல்லோரும் வாருங்கடி யிந்த
மாணிக் கெங்கை நீராடுங்கடி

எந்திசையும் புகழ் முருகன்தன்னை
ஏத்திக் கொண்டாடலாம் வாருங்கடி

மற்றொரு பாடலில்

பிள்ள வேணுமெண்டு நாங்க கதிரமலை போகையிலே
கதிரமலை சாமிவந்து பிள்ளைக்கலி தீர்த்தாரோ

என்றும்

கணபதியே கரிமுகனே கந்தருக்கு மூத்தவனே
கந்தரது தேர்ஏற கணபதியார் தேர் முன்டைக்க
வேடர் வனத்திலே வேலர் வேங்கைமரமானாராம்
குறவர் வனத்தினிலே கந்தர் கோல் ஊண்டித் தள்ளாடி
புன்னைமரமாம் அது பூக்கும் பூ ஆயிரமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் பூகொல்லையிலே கந்தர் அல்லிமணம் கொண்டாராம்

என்றும்

வந்தவினை தீர்ந்தருளும் வாழ்கதிரை வேலோனே

என்றும்

தாலாட்டுப் பாடலிலே குழந்தை அவதாரமாகக் தோன்றிய முருகனாக உடுக்குறி இடப்பட்ட பாடல் ஒன்றில் தமது குழந்தையை முருகனாக கற்பனை செய்து

"ஆதி சிவன் தன்மனோ
பெருமாள் திருமகனோ
சிவன் உமையான் ஈன்றெடுத்த
சிவக்கொழுந்தே
குமரேசா கண்வளராய்
கார்த்திகையாயப் பூத்தாயோ
சண்முகனே, குமரேசா
பார்வதியைப் பூசை செய்யப் பாலகனாய்
வந்தாயோ
பார்வதியாள் பாலகன்
மாங்கனியாய் வந்தாயோ"
என பாடப்படுகின்றது.
வள்ளி என்றால் வள்ளி
மலைமேல் படரும் வள்ளி
கொடியில் கிடந்து வள்ளி
கூவி அழும் போது
வனத்து குறவர்களாம்
மான் பிடிக்கும் வேடர்களாம்
குழந்தை குரல் கேட்டு
குறவேடர் ஓடிவந்து
மதலை குரல் கேட்டு
மான் வேடர் ஓடிவந்து
வாரியெடுத்து
வன்மைமடியில் வைத்து
தூக்கி எடுத்துச் சொர்ண மடியில் வைத்து
மண்துடைத்து மடியில் வைத்து
வள்ளியென்று பேரும் வைத்து
வடிவேல் துணையென்று
வளர்த்தார் வனந்தனிலே

என்றும் நாட்டுப்புறப் பாடல் வள்ளிக்குறித்து பாடப்பட்டது. எனவே தாம் வள்ளியின் பரம்பரை என்றே கூறிக்கொள்கின்றனர்.

இந்திய வம்சாவளி மலையக மக்களின் வரலாற்றின் எழுதப்படாத பகுதிகளாக மலையக வாய்மொழிப்பாடல்கள் அமைந்துள்ளன. வாய்மொழிப்பாடல்கள் மூலம் வரலாற்றுகள் ஆராயப்படுகின்றது. அவற்றில் முருகவழிப்பாட்டுப் பாடல்களையும் காணலாம். அதன் மூலம் முருக வழிப்பாட்டின் முக்கியத்துவம் அவர்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டதை அறியக்கூடியதாகவும் உள்ளது. ஜவேலுப்பிள்ளை, சி.வி.(1983)]

காணிக்கை கொண்டு செல்லமே
கண்டி கதிரமலை போனோமையா
வழியா வழிநடந்து செல்லமே
வரத்துக்கே போனோமையா

முருக பக்தர்கள் ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் கூட்டாக புறப்பட்டு கால்நடையாக கதிர்காமத்துக்கு யாத்திரை செய்வது பண்டுதொட்டு நடைபெறுவது வழக்கம். இவ்வழக்கம் மற்றோர் பாடலில்ஞ்

'காணிக்கை கொண்டு
கதிர்காமம் போகையிலே
மாணிக்க பிச்சையொன்று
மடிப்பிச்சை தந்தாரே'

எனவும், கோலாட்டப் பாடலொன்றில்

ஓடினேன் *கப்பலேறி கதிர்காமம்*
ஓங்குவடி *வேலைத்தேடி....* எனவும் காணப்படுகின்றது.

இவ்வாறு முருகவழிப்பாட்டுடன் தொடர்பான இன்னும் பல்வேறு பாடல்கள் உண்டு. அத்தோடு மலையகத்தில் பலரது பெயர்களுடன் முருககடவுளின் பெயர் மற்றும் அவரது மனைவியரின் பெயர்கள் இணைந்துள்ளது. வள்ளி, வள்ளியம்மா, வள்ளியாயி, தெய்வானை, தெய்வானையம்மா, முருகாயி, கந்தசாமி, முருகன், வேலன், வேலு, வேலையா, வேலாயுதம், சுப்பிரமணியம், அழகன், வேலுசாமி போன்ற பெயர்களாக இருப்பதை அவதானிக்கலாம். எனவே இலங்கையில் முருக வழிப்பாட்டின் வரலாற்றினை நாட்டுப்புறவியல் ஆதாரங்களைக் கொண்டு ஆராயலாம்.

உசாத்துணை நூல்கள்

1. ஆனந்தகுமார், அம்பிகை தமிழகத்தில் முருகவழிபாடு, முறுதகஹமுல : வர்தா பதிப்பகம், 2003.
2. கணபதிப்பிள்ளை, க. முருகவழிப்பாடும் கதிர்காம பாதயாத்திரையும், கொழும்பு: பெரியதம்பி கந்தக்குட்டி, 2000.
3. சக்திவேல, சு. நாட்டுப்புறவியல் ஆய்வு, சென்னை: மாணிக்கவாசகம் பதிப்பகம, 1983.
4. சபாநாதன், குல. கதிர்காமம், கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 2007.
5. சுப்பிரமணியன், ச. வே தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, சென்னை: உலகத்தமிழாராச்சி நிறுவனம், 1979.
6. சுப்பிரமணியம் சுகந்தி, மட்டக்களப்பு மாவட்டத்துக் கிராமிய வழிப்பாட்டு சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும், லண்டன்: இலண்டன் இந்து மாமன்றம், 2006.
7. சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் இந்தியா: நேஷனல் புக் டிரஸ், 1975.
8. வேலுப்பிள்ளை, சி.வி. மலைநாட்டுமக்கள் பாடல்கள்.சென்னை: கலைஞர் பதிப்பகம், 1983.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பாலசுந்தரம், இ. ஈழத்து நாட்டார் பாடல்கள், சென்னை: தமிழ் பதிப்பகம், 1979.

10. பிச்சை,. அ.தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, சென்னை: உலகத் தமிழாராச்சி நிறுவனம் 2003.

11. மகேஸ்வரன், இரா. மலயக முருகவழிபாடு, கண்டி: மத்திய மாகாண சாகித்திய விழா, 2011.

12. நல்லலிங்கம், சந்தனா. கதிர்காம பிரபந்தங்கள், கொழும்பு: ஆசிரியர், 1995.

13. நல்லையா, எஸ். (சாரல்நாடன்.) கண்டிராசன் கதை, கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், 2005.

14. வேலுப்பிள்ளை, ஆ. தமிழ் சமய வரலாறு, சென்னை: பாரி புத்தக நிலையம், 1985.

15. Nadesan, S. A History of the up-country Tamil People in Sri Lanka, Sri Lanka: Nandalala Publication, 1993.

16. Robert Knox, E. F. L. Ludowyk (ed.), Ropbert Knox in the Kandyan Kingdom, Oxford: OUP, 1948.

17. Seneviratna, Anuradha. The Kandy Asala Perahara, University of Peradeniya: 1993.

18. Tundeniya, H.M.S. Ambekka, Sudarma Tundeniya, Henthessa: 1986.

19. Zvelebil Kamil, The Smile of Murugan, Netherlands: E.J. Brill, 1973.

20. Zvelebil Kamil, Tamil Traditions on Subrahmanya-murugan, Madras: Institute of Asian Studies, 1991.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

இலங்கையில் இந்தியத் தமிழர் நாட்டார் வழக்காற்றியல்

ஒரு சமூகத்தின் நாகரிகம், பண்பாடு, வரலாறு பற்றி அறிந்து கொள்வதற்கு கல்வெட்டுகளும், புதை பொருள்களும் உதவுவது போன்றே நாட்டுப்புற இலக்கிய வகைகளும் உதவுகின்றன. இலங்கைக்கு புலம்பெயர்ந்த இந்திய தமிழர்களது ஆரம்பக்கால வரலாற்றை நாட்டுப்புற வழக்காற்றியல் மூலமும் அறியமுடிகின்றது. உலகில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றில், இலங்கைக்குப் புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்கள் முக்கிய இடம் பெறுகிறார்கள். இவர்கள் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டத் தொழிலுக்காக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். பாதையமைக்க, பாலங்களமைக்க, குளங்களமைக்க மற்றும் புகையிரதப் பாதைகள மைக்கவும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர். இக் காலத்தில் இந்தியாவில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், வறுமை பட்டினி, நிலவுடைமையில் ஏற்பட்ட மாற்றங்கள், அடிமை வாழ்க்கை, வாடகை, ரயத்து வாறிமுறை, சாதிக்கொடுமை, பருத்திக்கான சுங்கவரி பட்டுக்கான சுங்கவரி, விவசாயத்தில் ஏற்பட்ட தேக்கம், பணமின்மை மற்றும் நிலவரி போன்ற பொருளாதாரக் காரணிகளும் புலம்பெயர்வதற்கு காரணமாயின. மறுபுறம் இலங்கையில் மலையகத்தில் தேங்காயும் மாசியும் நிறைந்திருப்பதாகவும் சுபீட்சமான வாழ்வு பற்றியும் ஆங்கிலேயர் தமிழர்கள் மூலமே பிரசாரம் செய்து ஒப்பந்த முறையிலும், சிலர் கங்காணிகளினாலும், சிலர் துண்டுமுறை மூலமும் கூலிகளாக இலங்கைக்குக் கூட்டிவரப்பட்டனர்.

ஆங்கிலேயரினால் 1823 இல் இலங்கையில் பெருந்தோட்டத் துறையில் கோப்பித் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1850இல் கம்பளை மரியாவத்தையில் கொக்கோத் தோட்டங்களும், 1873 இல் லூல்கந்துரத் தோட்டத்தில் தேயிலைப் பயிர்ச் செய்கையையும் ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து, 1842இல் 14000 பேரும், 1843இல் 31,000 பேரும், 1844இல் 67,000 பேரும் 1875இல் 71,000 பேரும் எனத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கைக்கு வந்தனர். இவர்களில் பலர் கடல் பயணங்களின் போது இறந்துள்ளனர். படகு சரிந்து பலர் இறந்தனர். காற்றில் படகுடன் இழுத்துச் செல்லப்பட்டுக் காணாமற் போயினர். ஆதிலட்சுமி என்ற கப்பல் 120 பேருடன் கடலில் மூழ்கியுள்ளது. காட்டுவழியில் நடந்து வரும்போது மிருகங்களின் கடிக்கும், பாம்புக் கடிக்கும் ஆளாயினர். நோய்வாய்ப்பட்டு இறந்தனர். 1924 இல் இலங்கையில் இந்தியர்கள் 7,86,000பேர் எனவும் இதில் தோட்டத் தொழிலாளர்கள் 6,10,000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. 1925 இல் இவர்களது சம்பளம் ஆண்களுக்கு 38 சதமாகவும் பெண்களுக்கு 26 சதமாகவும் சிறுவர்களுக்கு 19 சதமாகவும் காணப்பட்டுள்ளது.

இலங்கையில் புலம்பெயர்ந்து வாழும் இந்தியத் தமிழர்களின் தனிப்பட்ட அடையா ளங்கள் இதுவரை பூரணமாக ஆவணப்படுத்தப்படவில்லை. இவை சர்வதேச ரீதியில் முழுமையாக வெளிக்காட்டப்படவுமில்லை. இத்தனிப்பட்ட அடையாளங்கள் தற்போது மறைந்து வரும் நிலையில் இவை ஆவணப்படுத்தப்பட வேண்டியது இன்றியமை யாததாகும்.

இம்மக்களின் மனக்கருவில் உருப்பெற்ற உணர்வுபூர்வமான வெளிப்பாடுகளான நாட்டுப்புற இலக்கியங்கள், சமய வழிபாட்டு முறைகள், சிறுதெய்வ வழிபாடுகள், குல தெய்வ வழிபாடுகள், வாய்மொழிப் பாடல்கள், பழமொழிகள், பழங்கால நம்பிக்கைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகள், இசைக்கருவிகள் பயன்பாடு, சடங்குகள், நாட்டுப்புற விளையாடடுக்கள், நாட்டுப்புற மருத்துவங்கள், இவர்களது சாதி முறைகள் ஆகியவற்றில் பூர்வீக பண்பாட்டின் வேர்களை அடையாளப்படுத்துவதும், ஆவணப்படுத்துவதும் அவை பற்றிச் சர்வதேச ரீதியில் எடுத்துக்காட்டுவதும் இவ் ஆய்வின் நோக்கமாகும்.

தமிழ் நாட்டைப் போலவே இலங்கையிலும் தமிழ் ஆய்வாளர்கள் சேரிமொழி, இழிசனர் வழக்கு என கருதியதால், இவற்றினைத் தொகுத்து ஆய்வு செய்யாது ஒதுங்கி யிருந்தனர். இலங்கை மலையகத்தில் 1970 க்கு பின்னரே களஆய்வுகளை செய்து, தரவுகளைத் தொகுத்தனர். இக்காலத்தில் பல்வேறு நாடுகளில் நாட்டார் வழக்காற்றியல், தனியானதொரு ஆய்வுப்புலமாக உருவாகியது. இவற்றை ஒப்பியல்முறை கொண்டு ஆராய்ந்தால், ஒரே தன்மையான பலகூறுகள் முந்தைய மூதாதையர்களிடமிருந்து தற்கால மக்களுக்கு வந்து சேர்ந்தமைப் புலப்படும். இலங்கையில் முற்காலத்தில் மன்னர் வழிபாடு, முக்கியத்துவம் பெற்றுகாணப்பட்டுள்ளது. அரசனுக்கு செய்யும் பணி அரசன் வழிபடும் தெய்வத்தையும், உள்ளடக்கியிருந்தது. வழிபாட்டின் சில பணிகளை அரசன் குடிகளுக்கும் ஒதுக்கினான். இதன் பிரகாரமே அரசர்காலத்தில் கண்டி பெரஹறா ஊர்வலத்தில் கரகம், காவடி, கசையடி, வில்லுச்சண்டை, அம்புச்சண்டை, வாள்சண்டை, சிலம்படி, உறுமி, கோலாட்டம் போன்றனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்திய தோட்ட தொழிலாளர்கள் வருகைக்கு முன்னரே இவை நிகழ்த்தப்பட்டதற்கு வரலாற்றில் பல ஆதாரங்கள் உண்டு.

தோட்ட தொழிலாளார்களான இந்திய தமிழர்களுக்கு வெளியுலகத்தொடர்பற்று தனிமை, மழை, மலைகள் காரணமாக கடும்குளிர், காற்று, தொற்றுநோய்கள், பசிபட்டினி, துயரங்களும் காரணமாக சமய நம்பிக்கைக்குப் பற்றுகோலாக அமைந்தன. இவர்களிடத்து குடும்ப தெய்வங்கள், சிறு தெய்வங்கள் என வழிபாடு முறைகள் காணப்பட்டன. இவர்கள் மதுரைவீரன், மாடசாமி, முனியாண்டி, ரோதைமுனி, காட்டுமுனி, தவறணைமுனி, கருப்பன்னசாமி, வேட்டைகறுப்பன், செண்டாகட்டி, கவ்வாத்துச்சாமி, மின்னடையான், மலைசாமி, வைரவர், இடும்பன், வனத்துச்சின்னப்பர், அந்தோனியார், மரியாள், சூசையப்பர், மாயாண்டி, சங்கிலிகறுப்பு, கறுப்புத் தெய்வம், சுடலைமாடன், உத்தரகாளி ஆகிய சிறு தெய்வங்களை குலதெய்வங்காகவும் கொண்டுள்ளனர். ஆடு, கோழி, பலியிட்டு, சுருட்டு, சாராயம் படைத்தும், வழிபடுகின்றனர். பொதுவாக, செய்திப்பரிமாற்றங்கள் வாய்மொழியாக நாட்டுப்புற பாடல்களாக இடம் பெற்றுள்ளன. இம்மக்களின் நாட்டுப்புறப் பாடல்களில் புலம்பெயர்தல் பற்றி பல குறிப்புகள் உள்ளன.

தாம் வந்த கப்பல் பயணம் பற்றி

"வாடையடிக்குதடி
வடகாத்து வீசுதடி
சென்னல் மணக்குதடி நம்ம
சேந்து வந்த கப்பலிலே" என்றும்,

தாம் பல தேசத்திற்கு பிரிந்து சென்றதை,

"ஆல மர மானேன்
ஆகா பெண்ணானேன்
ஆகா பெண்ணானேன்
ஆளுக்கொரு தேசமானோம்" என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கணவரை இழந்ததை,

"எட்டுப் பேர் சேவகரும்
எலங்கைக்கு போனதில்
எட்டுப் பேர் வந்ததில் நீங்க
எலங்கையிலே மாண்டதென்ன" என்றும்,

அண்ணன் இழந்ததை பற்றி கூறுகையில்,

"கூனி அடிச்ச மலை
கோப்பிக் கன்னு போட்ட மலை
அண்ணனைத் தோத்த மலை
அந்தா தெரியுதடி" என்றும்,

ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்களை பிரிந்தது பற்றி,

எலுமிச்சம் பழம் போல
இரு பேரும் ஒரு வயது
யாரு செய்த தீவினையோ
ஆளுக்கொரு தேசமானோம்" என்றும் கூறப்படுகின்றது.

தாம் நடந்து சென்ற பாதை, பட்ட கஷ்டங்கள் பற்றி,

"ஏற்றமடி பெத்துராசி
இறக்கமடி கொட்டியாகல
தூரமடி தொப்பி தோட்டம்
தொடர்ந்து வாடி நடந்து போவோம்"! என்றும்,

(பெத்தராசி, கொட்டியாகல என்பன டிக்கோயாவிலும், பொகவந்தலாவையிலும் உள்ளன. தொப்பித் தோட்டம் என்பது ஹட்டன் நகரம்.)

தாம் வாழும் கண்டிச் சீமை தமக்கு செந்தமில்லை என கூறும் போது,

"ஆளுகட்டும் நம்மசீமை
அரிசிபோடுது கண்டிச் சீமை
சோறு போடுற கண்டிச் சீமை
சொந்தமின்னு நம்பாதீங்க" என்றும்,

கணடாக்கையா வேலை வாங்கியது பற்றி கூறுகையில்,

"அந்தானை தோட்டமுனு
ஆசையா தானிருந்தேன்
ஓர முட்டைத் தூக்கச் சொல்லி
ஒதைக்கிறாரே கண்டாக்கையா" என்றும்,

தாயை மறந்த பற்றிக் கூறுகையில்,

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தபனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாய நாமறந்தேன்" என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கது கடந்த கால வாழ்வு பற்றி கூறுகையில்,

"பாதையிலே வீடிருக்க
பழனிச்சம்பா சோறிருக்க
எருதை தயிருருக்க
ஏண்டி வந்தே கண்டிச்சீமை" என்றும்,

தோட்டக்காரனுக்கு எதிரான உணர்வுகளுடன்,

"காலையிலே நெரே புடிச்சு
காட்டு தொங்க போய் முடிச்சு
கூட நெரையலேயே இந்தச்
கூனப்பய தோட்டத்திலே" என்றும்,

தமது தோட்ட இயந்திரம் தொழிற்சாலைப்பற்றி,

"ஆடுதையா இஞ்சிநீரு
அரைக்குதையா செம்பு ரோதை
ஓடுதையா வாருகளும்
ஒளிஞ்சிருந்து பாருமையா" என்றும்,
"அடிஅளந்து வீடுகட்டும் நம்ம
ஆண்டமனை அங்கிருக்க
பஞ்சம் பொழைப்பதற்கு
பாற்கடலைத் தாண்டி வந்தோம்
பஞ்சம் பொழைக்க நம்ம
பட்டிணம் போய்ச் சேரலையே"
கப்பல் கடந்து
கடல் தாண்டி இங்கு வந்தோம்
காலம் செழிச்சு நம்ம
காணி போய்ச் சேரவில்லையே" என்றும் கூறியுள்ளனர்.

சடங்குப்பாடல், தொழிற்பாடல், கதைப்பாடல்கள், கொண்டாட்டப்பாடல், ஏற்றப்பாடல், நடுகைப்பாடல், களையெடுப்புபாடல், கதிர்அறுவடைப்பாடல், வண்டிக்காரன் பாடல், என்பன இவர்களிடம் காணப்பட்டன.

ராசன்பாடல், மதுரைவீரன்பாடல், கட்டபொம்முபாடல், மணிக்குறவன்பாடல் எனப் பல கதைப்பாடல்கள் காணப்படுகின்றன. இக்கதைப்பாடல்கள், வில்லுப்பாட்டின் மூலமும், உடுக்கடிப்பாடல்கள், சாமியாட்டம், பேயாட்டம், போன்றவற்றிலும் பாடப் பட்டவையாகும். இது நையாண்டி பாடல்களும், கேலிப்பாடல்களாகவும் உண்டு. இவர்களின் பாரம்பரியகலைகள், பண்பாட்டு விழுமியங்கள், கலாசார விழுமியங்கள், சில தற்போது அழிந்து வருகின்றன. நாட்டில் ஏற்பட்ட இனவாத பிரச்சனையோடு ஏற்பட்ட பயங்கரமான பயங்கரவாத சூழலும், இன முரன்பாட்டு முறுகல் நிலையும், புதிய கலாசார சூழலும், உலகமயமாக்கலின் விளைவுகளினாலும், இவை ஆவணப் படுத்தப்படாமையினாலும் அழிந்தும் மறைந்தும் வருகின்றன.

இந்தியாவிலிருந்து வந்த இவர்களை தற்போது, இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்றும், மலையகத்தமிழர் என்றும், அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பெருந்தோட்டங் களில் வேலை செய்வோராகவும், நகரசுத்தித் தொழிலாளர்களாகவும், தோட்டங்களில் வேலைகளை கவனிக்கும் உத்தியோகத்தர்களாகவும் இருந்தவர்கள் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களாகவும், வணிக முயற்சியாளர்களாகவும், சுயதொழில் செய்பவர்களாகவும் உள்ளனர். இன்று பல தோட்டங்கள் மூடப்படுவதால், கடைசிப்பந்திகளாகவும், முச்சக்கர வண்டி ஓட்டுநர்களாகவும், உள்ளனர்.

இவர்கள் ஆரம்பகாலத்தில் சாதி அடிப்படைலேயே, லயன்களில் தங்க வைக்கப் பட்டனர்.

அகம்பாடியார்	சக்கிலியர்	
அம்பட்டர்	சாணரர்	பறையர்
அம்பலகாரர்	செட்டி	பள்ளர்
ஆசாரி	கோமுட்டிச்செட்டி	பண்டாரம்
இடையர்	வள்ளுவர்	மறவர்
ஒட்டர்	வளையட்செட்டி	முத்துராசா
கம்மாளர்	தேவர்	முதலி
கவுண்டர்	நாடார்	வடுகவண்ணார்
கள்ளர்	நாயர்	வலையர்
குயவர்	நாயுடு	வேளாளர் ஆறுநாட்டு வேளாளர்கள், கொங்கு வேளாளர்கள்,
கோனார்	தேவேந்திர பள்ளர்	கொடிக்கா வேளாளர்கள், சோழியர் வேளாளர்கள்

என பல சாதிகள் உண்டு.

சாதி பற்றி குறிப்பிடுகையில்

"காரை கிடைக்காத
காந்நாரப் பஞ்சத்தில்
கீரை கொடுப்பானோ
கீழ் சாதி வெள்ளாளன்" என கூறியுள்ளனர்.

இவர்கள் சாதிக்கேற்ப "உறைநிலையில்" வைக்கப்பட்டனர். உள்ளூர் தொடர்புகளோடு ஒதுக்கப்பட்டனர். சாதி வேறுபாடுகளுக்கேற்ப புறம்பாக வைக்கப்பட்டனர். இவர்கள் தனிச்சாதியாகவும் சாதிக்கூட்டமாகவும் வாழவிடப்பட்டனர். வாழ்ந்தும் வந்தனர். காலை முதல் மாலை வரை வேலை கணவன், மனைவி, குடும்ப உறுப்பினர்கள் சகலருக்கும் தோட்டத்தில் தொழில் வழங்கப்பட்டு அத்தொழிலில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களது வழக்காற்றில் வாழ்க்கைச் சடங்குகள் முக்கியத்துவம் பெற்றிருந்தது. பிறப்பு, பூப்புனித நீராட்டு, திருமணம், இறப்பு, ஆகிய சடங்குகள், முக்கியமாகவுள்ளதோடு ஆடிமாதத்தில் பெண்ணை தாய்வீட்டுக்கு அனுப்புதல், பெண் பிள்ளைக்கு காது குத்துதல், திருமணம் முடித்தபின், ஆடி பதினெட்டாம் தினத்தில் பெண்ணின் தாய்வீட்டிலும், அடுத்துவரும் வருடங்களில் கணவனின் தாய்வீட்டிலும் தாலியினைப் புனிதப்படுத்தி கயிறு மாற்றுதல், தாலியினை மஞ்சள் நீராட்டல், பொட்டு என்ற அணியை தாலியுடன் இணைத்தல், மற்றும் பெண் கருத்தரித்த ஐந்தாம், ஏழாம் ஒன்பதாம் மாதங்களில், கட்டுச்சோறு கட்டும் நிகழ்வு, இதில் முதலில் பெணவீட்டார் கட்டுச்சோறு கட்டுவர், பெண்வீட்டார் மாப்பிள்ளை வீடு சென்று வளை காப்பு அணிவித்தல், இது பெண் கருத்தரித்து ஏழாம் மாதத்தில் செய்யப்படுகிறது. பிரசவத்துக்கு தாய்வீடு அழைத்துவரல், புளிகரைத்து தயிர்சோறுகட்டல், தேசிக்காய் அல்லது தக்காளிச்சோறு கட்டல், வெள்ளைச் சோறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டல், போன்றனவும், செய்யப்படுகிறது. இதுதவிர, மகப்பேறு பார்த்தல், மகப்பேற்று தாயை நீராட்டல், சேனைப்பாலூட்டல் என பிள்ளைப் பாலூட்டல், பேய்பிசாசுக்கு தோசப்பரிகாரம் செய்தல், கழுத்தில் அல்லது இடுப்பில் நூல் கட்டல், கறுப்புபொட்டு வைத்தல், தொட்டில் கட்டுதல், தாய்மாமன் ஏணைச்சீர் கொடுத்து தொட்டில் கட்டுதல், பெயர் சூட்டுதல், முடி இறக்குதல், பல்லுகொழுக்கட்டை அவித்தல், வித்தியாரம்ப்பம் அல்லது ஏடு தொடக்குதல், பூப்புனித நீராட்டலில் நீர் வார்த்தல், களி கிண்டுதல், வண்ணான் சடங்கு, புண்ணியதானம், அதன்பின், திருமணம், தாம்பூலம் மாற்றுதல், பத்திரிகை வைத்தல், பொன்னுருக்கல், மணமகளின் வருகை, மணமகனின் வருகை, முகூர்த்தக்கால் ஊன்றுதல், ஓமம் வளர்த்தல், கன்னிகாதானம், மாங்கல்யதாரணம், அம்மிமிதித்தல், மிஞ்சிபோடுதல், அருந்ததி பார்த்தல், குழந்தைபரிமாறல், ஐயர் இல்லாத திருமணம் என்பனவும், மரணச்சடங்களும், இதில் கோடிபோடுதல், கட்டைமெய் எடுத்தல், மாமன் சீர் கொடுத்தல், நீர்மாலைஎடுத்தல், அரைப்பு வைத்தல், நெய்பந்தம் பிடித்தல், சீதேவி வாங்குதல், வாய்க்கரிசி போடுதல், கொள்ளிக்குடம் உடைத்தல், எட்டுச்செய்தல், மூன்றாம் குழிமூடல், கருமாதி செய்தல், தாலி கழற்றல், திவசம் என மரணச்சடங்கள் பலவும் அமைந்துள்ளன.

இவர்களது இசைக்கருவிகள் பாவனையினை ஆராயின் வீணை, தம்புரா, சுரசெத்து, வயலின், புல்லாங்குழல், நாதசுரம், சங்கு, எக்காளம், கொம்பு, மத்தளம், பறை, தவில், கஞ்சிரா, டமாரம், உடுக்கை, தமசபட்டம், முரசு, ஜால்ரா, கடம், கொக்கள், குடுக்கை என்பன ஆங்காங்கே புழக்கத்தில் உள்ளன. பல கருவிகள் அழிந்து போயின. குடமுழவம், கொடு,கொட்டி, துடி, பசகம், குரித்தாளம், கஞ்கிரா, நாற்சுரம், நாழி, நூம்பு ஆகியன அழிந்து போயின.பறை, சிலம்பு மற்றும் கூத்துகள் கலைகள் ஒரு காலத்தில் இவர்களிடம் சிறப்பு பெற்றிருந்தது. பறைக்கு தப்பு என்றே கூறுகின்றனர். காலைத்தப்பு, பிரட்டுத்தப்பு, பகல்உணவுத்தப்பு, மாலைத்தப்பு, ருதுசாந்தித்தப்பு, திருமணத்தப்பு, சாவுத்தப்பு, காவடித்தப்பு, கரகத்தப்பு, காமன்தப்பு, என பல வகைத்தப்புகள் அடிப்பர். காமன்கூத்து, பொன்னன்சங்கர், அர்ச்சுனன் தபசு போன்ற கூத்துகளும், ஆடப்படும் போது அவற்றுக்கு அடிக்கும் தப்புகளும் வேறுபட்டன. இராமபஜனையும் தோட்டங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளன. 'வஸ்தா' என அழைக்கப்படும், சிலம்பாட்டம் மலையகத்தில் சிறப்புப்பெற்று காணப்பட்டது.

நாட்டார்வழக்காறும் இடம்பெயர் கோட்பாடின் படியும் (Migratory Theory) "கடன் வாங்குதல்" என்ற கோட்பாடு படியும் இவை இலங்கைக்கு வந்துள்ளன. இயற்கையில் காணப்படும் பொதுவான இயல்புகளைக் கொண்டு நாட்டார் வழக்குகள் ஊடுறுவுவதை "வரலாற்று நிலவியல் அணுகுமுறை" என ஆராயலாம். இதன் காரணமாக பரவிய காலம், தோன்றிய இடம் என்பன பற்றி ஆராயலாம். இதேபோல் நாட்டார் வழக்காற்றில் சூழல் கோட்பாடும் முக்கியமானதாகும். பொருண்மை சூழல், நிறுவனச்சூழல், கருத்துப்புலப்படுத்த ஒழுங்கமைப்புச்சூழல், சமூகச்சூழல், தனிப்பட்சூழல் ஆகியனவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இதனையே பொருள், இடம், காலம் எனவும் குறிப்பிடுவர். இந்த கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இலங்கை, இந்திய வம்சாவளி தமிழரின் நாட்டாரியல் பற்றி ஆராயப்படவேண்டியுள்ளது.

நாட்டுப்புற மருத்துவமாக தாய்ப்பால் மருந்து. காய், இலை. செடி, வேர், பட்டை, எழுமிச்சை, சீரகம், தும்பை, துளசி, மிளகு, பூண்டு, மோர், காச்சிய எண்ணெய், தேன், பால், முட்டை ஆகியவற்றைப் பயன்படுத்தினர். வெளியில் பூசும் மருந்துகளாக ஆமணக்கு, பூண்டு, வாழைத்தண்டு, வேப்பிலை, மஞ்சள், மிளகு, உப்பு, தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை பயன்படுத்துகின்றனர். இங்கு வாதம், கண்நோய், வீக்கம், வலி, பீனிசம். பல் வருத்தம், காயங்கள் என பலவகை நோய்களுக்கு மருந்து செய்கின்றனர்.

இவர்கள் மருத்துவ சடங்குகளாக நேர்த்திகடன் நிறைவேற்ற பலி தீர்க்க சூனியம், பேய் விரட்டல் போன்றவற்றை மேற்கொள்கின்றனர். திருநீறு மந்திரிப்பது இதில் முக்கியத்துவம் பெறுகிறது. சாமப்பேய், பிசாசு, முனி, கறுப்பு, மோகினி, ஆவி ஆகியவற்றை விரட்டும் சடங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டுப்புற விளையாட்டுகளாக, ஆண்கள் விளையாட்டுகளாக கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, கோலிவிளையாட்டு, கிளித்தட்டு, சடுகுடு, வெட்டுக்கத்தி, வழுக்குமரம் ஏறுதல், பட்டம் விடுதல், டாம் விளையாட்டுகள் போன்றனவும், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல், மல்யுத்தம், சிலம்படி விளையாட்டு, வாளும் கேடயமும், மாட்டுவண்டி ஓட்டுதல் ஆகியன ஆண்களின் வீரவிளையாட்டுகளாக குறிப்பிடப் படுகின்றன. பெண்கள் விளையாட்டுகளாக கோலம் போடுதல், சமைத்து விளையாடுதல், நொண்டிக்கோடு, வீடுகட்டி விளையாடுதல், பாண்டியாடுதல், கோலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், குளம்கரை, காயா பழமா, கீச்சு கீச்சுத்தம்பாளம் போன்ற விளையாட்டுக்களும், பொதுவாக இருபாலருக்குமான விளையாட்டுகளாக தொட்டுவிட்டு ஓடுதல், குதித்தல் (ஸ்கிப்பிங்), ஆடுபுலி ஆட்டம், கண்ணைக்கட்டி, நொண்டித் தொடுதல், கயிறு இழுத்தல், கள்வரும் பொலிசாரும், தாயக்கட்டையில் பல்வேறு விளையாட்டுகள், தொட்டால் விரட்டி, பந்தால் ஆள் அடித்தல், கண்கட்டி தேடல், கையைத்தொட்டவரை விரட்டல், நிழலைமிதித்தல், பழம் பொறுக்குதல் போட்டி, சேவல்களை சண்டையிட விட்டு குதுகலித்தல், பம்பரம் விட்டு விளையாடல், குளம்கரை, காயா பழமா, கீச்சு கீச்சுத்தம்பாளம், பண்ணாங்குழி, சங்கிலிபுங்கிலி, முந்திரிக்காயும் நரியும், சிறுவீடு கட்டுதல், கண்ணாம்பூச்சி, ஓடிப்பிடித்து விளையாடுதல், சதுரங்கம் (டக்டிக் டொஸ்). தாயம் விளையாடுதல். நொண்டிவிளையாட்டு, உப்பு விளையாட்டு, காற்றாடி விடுதல், கப்பல்விடல், மண்வண்டி விளையாட்டு, காவடி விளையாட்டு, போன்றன இடம்பெறுகின்றன.

அண்மைக்காலமாக ஊடகங்களில், நாட்டுபுறக்கதைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. சினிமாவில் உள்வாங்கப்பட்ட நாட்டுபுறக்கதைகள், பாடல்களை மக்கள் இரசிக்கின்றனர்., நாட்டுபுறகதைகள், பாடல்கள், கலைகள், ஆடல்கள், கூத்துகள், விளையாட்டுகள் என பல்துறையிலும் தற்போது வெவ்வேறாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், நாட்டுபுறக்கலைஞர்களுக்கு இன்றும் சமூகத்தில் சிறந்த அந்தஸ்து வழங்கப்படவில்லை. தற்போது 'கிரிக்கெட்' போட்டிகளில் 'கிளர்னட் பாண்ட்' அடித்து ஆடுகின்றனர். இதன் மூலம், சடங்குமுறை கலைஞர்கள், மெல்லமெல்ல தொழில்சார் கலைஞர்களாக மாறிவருகின்றனர். ஆனால், இதனை "சக்கிலி பாண்ட்" என்றே இன்றும் அழைக்கின்றனர். ஏற்றப்பாடல்கள், நடுகைப்பாடல்கள், அறுவடைப்பாடல்கள் இன்று இயந்திர முறைகளில் அறுவடைசெய்தல், நீர்பாய்ச்சுதல் போன்ற இயந்திரமயமாக்கல் காரணமாக மங்கி போய், வழக்கொழிந்து அழிந்து போயின.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மதமாற்றம், தமது செயல்கள் வழிபாட்டு முறைகள் பிற்போக்கானது என நினைத்து, நற்போக்கையும், முற்போக்கையும் விரும்புபவர்களாக, தம் மதச்சடங்குகள் ஏனைய மதத்தினர் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள வெட்கம் போன்றவற்றினாலும் சில வழிபாட்டு முறைகளும், சடங்குகளும் கைவிடப்பட்டும், மாற்றம் பெற்றும் வருகின்றன. பாவனையிலில்லாமலும் உள்ளன. பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்கள் அழிந்து போயின. எனவே மிகுதியாயுள்ளவற்றையாவது ஆவணப் படுத்தி, தொகுத்து, பாதுகாத்து வைக்கவேண்டும். இல்லாது போனால் எஞ்சிருப்பதும் அழிந்துபோன பின் இப்படி ஒன்று இருந்தது என கூறமுடியாத நிலை உருவாகலாம் அல்லது இப்படிப்பட்ட ஆய்வுக்கட்டுரைக்காக மட்டும் பயன்படுத்தப் படலாம்.

உசாத்துணை நூல்கள்

1. இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் தொகுதி 1. கார்த்திகேசு சிவத்தம்பி (பதிப்பாசிரியர்), கொழும்பு : உதயம் நிறுவனம், 1993.
2. சந்திரசேகரன், சோ., "மலையகக்கல்வி சில சிந்தனைகள்", கொழும்பு, கவிதா பதிப்பகம், 1999.
3. நல்லையா, க. மலையகத் தமிழர் வரலாறு, கொட்டகலை: சாரல் வெளியீடு, 2003.
4. மூக்கையா, மா.செ., "இன்றைய மலையகம்", கொழும்பு, தொண்டமான் அறக்கட்டளை, 1995. Hollup, Oddvar. Bonded labour caste and cultural identity among Tamil plantation workers in Sri Lanka. Colombo: Charles Subasinghe & Sons, 1994. Print.
5. Mahavamsa . Wilhelm Geiger (ed). Colombo: Ceylon Government Press, 1960. Print.
6. Nadesan, S. A history of the up country Tamil people. Colombo: Nandalala Publications, 1998. Print.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

கண்டியம்பதியில் மத்திய கைலாசம் : கட்டுக்கலை அருள்மிகு மீனாட்சிஅம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வவிநாயகர் திருக்கோயில் - வரலாறு

சிவபூமி எனத் திருமூலரால் கூறப்பட்ட ஈழத்திருநாட்டில் நீண்ட கால வரலாற்றினைக் கொண்ட ஒரு கோயிலாகக் கண்டியம்பதியில் மத்திய கைலாசமாக அமைந்துள்ள கண்டி கட்டுக்கலை அருள்மிகு மீனாட்சிஅம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் காணப்படுகிறது. இக்கோயிலின் வரலாறு கண்டி இராச்சியத்தை ஆண்ட அரசர்களது வரலாற்றுடன் இணைந்து காணப்படுகிறது. தொன்மையான வரலாற்றுடன் பிற்காலத்தில் கண்டி இராச்சியத்தில் பௌத்தர்களது புத்தபெருமானின் புனிதப்பல் கொண்டுவரப்பட்டு தலதாமாளிகையினை அமைத்து இந்துக் கோயில்களுடன் இணைத்து ஆடித்திருவிழா என்ற எசல பெரகராவினை நடத்திய வரலாற்றுடன் இக் கோயிலின் வரலாறும் தொடர்புபட்டுள்ளது. இக்கோயிலின் வரலாற்றுடன் கண்டி வாழ் இந்துக்களின் தொன்மையையும் நிரூபிக்கக் கூடியதாக உள்ளது.

இலங்கையின் மத்திய மாலைநாட்டில் மத்திய மாகாணத்தில், மரபுரிமை நகரமான கண்டி மாநகரில், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் தொடர்பாக காலத்திற்கு காலம் வரலாற்று ரீதியாக மிகவும் தொன்மையான பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. ''கண்டி'' என பெயர் வர சிவ வழிபாட்டு சான்றுகள் ஆரம்ப காலந்தொட்டே உள்ளன. செங்கந்தன் என்ற சிவ பக்த பிராமணர் உடவத்தகெலேயில் வாழ்ந்ததாகவும், அவர் வாழ்ந்த இடம் செங்கந்தகாடு மக்களால் செங்கந்தகெலே எனவும், பின்னர் ''செங்கந்தபுரம்'' என்றும், இது மருவி, கெலே காடு செங்கடகெல என்றும், இது பிற்காலத்தில் மருவி ''செங்கடகல'' எனவும் வழங்கப்பட்டது. கந்தமலை (Kandy) என்பது பிற்காலத்தில் ஆங்கிலேயர்களால் கண்டி "Kandy" என உச்சரிக்கப்பட்டு இப்பெயர் வரக்காரணமா யிற்று.

காலத்திற்குக் காலம் இலங்கையையும் கண்டி இராச்சியத்தையும் பல்வேறு வெளிநாட்டார்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். கண்டி இராச்சியத்தை ஆண்ட உள்ளர் மன்னர்களிடையேயும் காலத்திற்கு காலம் யுத்தங்கள் ஏற்பட்டுள்ளது. 15ஆம் நூற்றாண்டின் பின் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற முயற்சித்துள்ளனர். இதன் பின் ஆங்கிலேயர் 1815இல் கண்டி இராச்சியத்தை முழுமையாகக் கைப்பற்றினர். இவ்வெளிநாட்டு ஆக்கிரமிப்புக் காலங்களில், தமது கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து மதத்தினைப் பரப்புவதற்காக இந்துக் கோயில்களை அழித்துள்ளனர். பெரும்பான்மைச் சமூகத்தினரும் எமது இருப்பை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களை அழித்துள்ளனர். ஆகவே, ஆதாரங்கள் தேடுவதும், ஆவணங் களைத் தேடுவதும் கடினமாகும். கிடைக்கப்பெற்ற ஆதாரங்களுடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆய்வில் இலங்கையில் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில், கண்டி மாநகரில், கட்டுக்கலையில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சிஅம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலின் வரலாறும், அதனுடன் தொடர்பான ஆதாரங்களும் மட்டுமே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

உலகத்தின் முதலாவது தேசப்படமான டொலமியின் தேசப்படத்தில் இலங்கையும், மத்திய மலைநாடும் குறிக்கப்பட்டுள்ளது. மத்திய மலைநாட்டில் சிவனொளிபாதமலையும், கண்டி அருள்மிகு மீனாட்சிஅம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வவிநாயகர் திருக்கோயிலும் முக்கிய சிவத்திருத்தலங்களாகும். இதில் கண்டிக்கோயில் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன.

18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "அஸ்கிரிய தல்பொத்த" என்ற ஓலைச்சுவடியில் கண்டி பைரவகந்த பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது பற்றி பல்வேறு ஆய்வு நூல்களிலும், கண்டி மரபுரிமை பற்றிய நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது போல "லோறி கெசட்டியரில்" பைரவகந்த பெயர் வரக்காரணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன்படி முதலாவது மகா பராக்கிரமபாகு (1164 – 1197) ஆட்சிக் காலத்தில் பௌத்த பிக்குக்கு கண்டி அஸ்கிரிய பகுதியில் ஒரு ஆஸ்ரமம் (பிற்காலத்தில் அஸ்கிரிய பௌத்த பீடம்) அமைத்தார். அந்த ஆஸ்ரமத்திற்குத் தெற்குப்பகுதி 'பைரவகந்த' ஆகும். எனவே, 12ஆம் நூற்றாண்டிலிருந்தே வரலாற்று நூல்களில் பைரவகந்த பற்றிக் கூறப்பட்டுள்ளது. வைரவர்மலை என்பது (பைரவர் = வைரவர், கந்த = மலை எனப் பெயர் மாற்றம் பெற்றது.) தற்போது பைரவ கந்தை என அழைக்கப்படுகிறது.

அக்காலந்தொட்டு பைரவருக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் பற்றி மேற்கூறப்பட்ட வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ளது. இது ஒரு பைரவரை சந்தோசப்படுத்தும் நரபலி பூசைவிடயமாகவும் இருந்துள்ளது. பிள்ளைகள் இல்லாத ஓர் அரசிக்குப் பிள்ளைவரம் வேண்டியே முதலாவது நரபலி கொடுத்ததாக அஸ்கிரிய தல்பொத்தவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ராணிக்கு பேய் கனவில் வந்து இதனைக் கேட்டதாகவும், இதற்காக மன்னர் குழந்தை வேண்டி உயர்குலப் பெண்ணை பலிக் கொடுக்க தீர்மானித்ததாகவும், இதன் பின் நீண்ட காலமாக நரப்பலிச்சடங்கு இல்லாமல் இருந்த தாகவும், இராஜசிங்கனின் ஆட்சிக் காலத்தில் அரசியல் முரண்பாடுகளினாலும், சாஸ்திரக்காரர்களது வேண்டுகோளுக்கிணங்கவும் உயர்குலப் பெண்ணைக் கொண்டு சென்று இரவில் பைரவரிடம் விட்டு விட்டு வந்ததாகவும், அவளது காதலன் அவளைக் காப்பாற்றியதாகவும் புராணக்கதைகளில் கூறப்பட்டுள்ளன.

இராமாயணத்தில் இராவணனை வதை செய்த இராமன் பாவவிமோசணம் வேண்டிப் பாபநாசத்தில் குளித்துச் சிவனை வழிபட்டதாகவும், இராமேஸ்வரதீர்த்தத்தில் நீராடிப் பாவத்தினைப் போக்க ஈஸ்வரனை வழிபட்டதாலேயே, இராமர் ஈஸ்வரனை வழிபட்ட இடம் இராமேஸ்வரம் என்ற பெயர் பெற்றதாகவும் கூறப்படுவது போல, நரபலி கொடுத்த பின், வைரவர் மலையில் நீர் சேரும் போகம்பரை குளத்தில் நீராடிச் சிவனை வழிபட்டுப் பாவ விமோசனம் வேண்டியதாகப் புராணவியல் கதைகளில் கூறப்படுகிறது. அக்காலத்தில் இக்கோயில் சிவன்கோயிலாகவே, காணப்பட்டுள்ளது. இன்று வரை கட்டுக்கலை கோயிலில் மூலஸ்தானத்தில் மூலவராகச் சிவனும், மூலவருக்கு நேராக நந்தி வாகனமும், கொடிக்கம்பமும் காணப்படுகிறது. இக்கோயிலில் இராஜகோபுரங்கள் சிவனுக்கும் அம்பாளுக்குமே அமைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி அம்மன் குழந்தையாகப் பேழையில் மிதந்து வந்த போது, மாநாயக்கன் எடுத்து கண்ணகி என்ற பெயரிட்டு வளர்த்துக் கோவலனுக்குத் திருமணம் செய்து கொடுத்ததாகவும், கோவலனுக்கும் மாதவி என்ற கணிகையுடன் தொடர்பு ஏற்பட்டதால், தனது செல்வங்களை எல்லாம் இழந்து, பின்னர் கண்ணகியிடம் தஞ்சமடைந்து, வாணிக நோக்கமுடன் மதுரை சென்றதாகவும், காற் சிலம்பை விற்கச் சென்ற போது, பாண்டிய மன்னனால் கள்வனெனக் கருதப்பட்டுக் கோவலன் கொல்லப்பட்டதாகவும், நீதி கேட்டுக் கண்ணகி விரித்த கூந்தலுடன் மன்னனைச் சந்தித்து, மற்றைய காற்சிலம்பைத் திருகி எறிந்து, அது தனது காற்சிலம்பு என நிரூபித்ததாகவும் கோபத்தில் மதுரையை எரித்தபின் மலையேறி மறைந்ததாகவும், அதனைச் செங்குன்றக்குரவர்கள் கண்டதாகவும் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறது. கண்ணகியின் பெருமையை உணர்ந்து, சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை செய்தான் எனவும், சிலை பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தபோது இலங்கை மன்னன் கஜபாகு (கி.மு.113 – 135) விழாவில் கலந்து கொண்டதாகவும் அறியப்படுகிறது.

கஜபாகு மன்னன் தென்னிந்தியாவில் இருந்து திரும்பியபோது, சந்தன மரத்திலான கண்ணகி சிலையையும் காற்சிலம்பையும் இலங்கைக்குக் கொண்டு வந்தான் எனவும், வடபுலக கடற்கரையில் இறங்கிய மன்னன், யானை மீது ஊர்வலமாக கண்டிவரை சிலையைக் கொண்டு சென்று கண்டி ஆலயத்தில் வைத்து வழிபட்டான் எனவும் கூறப்படுகிறது. இதனைக் 'கடல்சூழ இலங்கை கயபாகு வேந்தனும்' என இளங்கோவடிகளின் (வரந்தகு காதை (160 – 164) எனும் பாடல் மூலம் அறியலாம்.

"அது கேட்டுக் கடல் சூழ் இலங்கை கயபாகு என்பான்
நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்தறுத்து
ஆங்கு அறத்தை கெடுத்த வரந்தரு இவனென
ஆடித்திங்க ளவையின் ஆங்கோர்
பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப
மலைவீற் றிருந்த வளம்பல பெருகி
பிழையா விளையள நாடாயிற்று." எனக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தின் புகார்க்காண்டத்தில் மங்கள வாழ்த்துப் பாடலில் "இந்திர" விழாவெடுத்த காதை" என்பதும் ஒன்றாகும். சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்ற இத்திருவிழா பூம்புகாரில் கொண்டாடப்பட்ட விழா.

இந்திரன் கோயிலான வச்சிரக் கோட்டத்திலுள்ள முரசை வெள;ளானைக் கோட்டத்திற்கு எடுத்துச் சென்று, அதனை யானை மேலே ஏற்றி வீதி வலம் செல்வதன் மூலம் இந்திரவிழா உத்தியோகப்பூர்வமாக நகர மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த இந்திரவிழாவில் சிவன் கோயில், குமரக்கோட்டம், திருமால்கோட்டம், பலராமன் கோட்டம் ஆகிய எல்லாக் கோயில்களிலும் விழா நடைபெற்று வீதிவலம் வந்தன. இதனைக் கண்ணுற்ற கஜபாகு இலங்கையிலும் இதைப்போலவே நடைபெற வேண்டும் என விரும்பி கண்டி பெரஹராவுடன் நாத, விஷ்ணு, கதிரேசன், பத்தினி தேவாலயங்களில் இருந்தும் ஊர்வலங்கள் புறப்பட்டு எசலபெரஹராவுடன் இணையும்படி செய்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே, தமிழில் காணப்படும் பெருங்காப்பியங்களுடன் கண்டிப் பெரகராவுக்கு தொடர்பு காணப்படுகின்றது. இந்த கண்ணகிசிலை பிற்காலத்தில் ஏற்பட்ட யுத்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினால் புதையுற்று, பின்னர் போகம்பரை வாவியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு, கண்டி கட்டுக்கலை மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகப் புராணவியல் கதைகளூடாக அறியப்படுகிறது.

மாயாதுன்னையின் மகன் யமசிங்க பண்டார (குசுமாசனதேவியின் கணவன்) "தொன் பிலிப்பு" என்ற பெயர் மாற்றத்துடன் கிறிஸ்துவத்தைத் தழுவிப் போர்த்துக்கேயர் உதவியுடன் 'செங்கடகல' ஆட்சி செய்தான். இதேவேளை பேராதனை வீரசுந்தர முதலியின் மகன் கொணப்பு பண்டாரவும் கிறிஸ்தவ மதமாற்றம் பெற்று தொன்யுவான் என பெயர் மாற்றம் பெற்று கண்டி வந்து யமசிங்க பண்டார மரணத்தின் பின் கிறிஸ்தவ மதத்தைத் துறந்து பௌத்தனாகி, முதலாவது விமலதர்மசூரிய என்ற பெயருடன் 'செங்கடகல'யை (1592) ஆட்சி செய்தான். பின்னர் குசுமாசனதேவியை திருமணம் செய்கிறார். இக்காலத்திலேயே தலதா மாளிகை கட்டப்பட்டது. தெலுகமவில் இருந்து புத்தபெருமானின் புனிதப்பல் 'செங்கடகல'வுக்குக் கொண்டுவரப்பட்டது. இவன் சிதைவுற்ற இந்து, பௌத்த ஆலயங்களை கட்டிவித்தான். திருவிழாக்களையும், பூசைகளையும் நடத்தினான். பெரகராவையும் மீள அறிமுகம் செய்தான். இக்காலத்தி லேயே இந்துக் கோயில்களும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதாக வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ளன. இக்காலத்திலேயே கட்டுக்கலை சிவன் கோயிலும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இவரது தம்பி செனரத் (1605 – 1635) ஆட்சிபுரிந்தார். செனரத்தின் இரண்டு புதல்வர்கள் தமிழ் பெண்களையே திருமணம் செய்துள்ளனர். மூன்றாவது மகன் இராஜ சிங்கன் ஆட்சி பீட மேறியுள்ளார். இந்த இரண்டு மருமகள்மார்களும் இந்துவாகவே இருந்துள்ளனர். இராஜசிங்கள் (1635 – 1687) பின்னர் இவனது மகன் இரண்டாம் விமலதர்மசூரியன் (1687 – 1706) தஞ்சாவூரில் திருமணம் செய்தான். இக்காலத்தில் இந்தியத் தமிழர்கள் பலர் இவனது படையில் போராளிகளாக இருந்தனர். இவர்கள் "வடக்கத்தையான்", "வடுகர்கள்" என அழைக்கப்பட்டனர். இக்காலத்திலேயே இந்திய விஜயநகர் ஆட்சியுடன் தொடர்புகள் பலப்படுத்தப்பட்டன. இவனது தஞ்சாவூர் அரசியின் மகன் ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் (1706 – 1739) ஆட்சியுரிமை பெற்றான்.

இதன் பின், ஸ்ரீ விஜய ராஜசிங்கன் (1739 – 1747) கோயில்களையும், விகாரைகளை யும் கட்டினான். கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747 – 1782) காலத்திலேயே திருவிழாக்கள், பூசைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. சித்திரை விழா, ஆடித்திருவிழா சிறப்பாக நடைபெற்றுள்ளன. எல்லாத் தேவாலயங்களும் இணைந்து பெரகரா நடத்தப்பட்டுள்ளது. இவரே 'பெரகரா'வில் கண்டிக் கோயிலையும் சம்பந்தப்படுத்தியுள்ளார். இக்காலத்தில் அரசமாளிகையைச் சுற்றியுள்ள தேவாலயங்களிலும், அரசநிர்வாகத்திலும் தமிழர்கள் இருந்துள்ளனர். கோயில் அமைந்துள்ள பிரதேசத்தையும் சுற்றி தமிழர்கள் வாழ்ந்தார்கள். தமிழ்மக்கள் இக் கோயிலை நாளாந்த சமயக்கடமைகளுக்கு பயன்படுத்தியுள்ளனர். இக்காலத்தில் இந்து பிராமணர்களின் செல்வாக்குக் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், வெளிநாடு களிலிருந்து பௌத்த பிக்குகளை வரவழைத்துள்ளனர்.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747 – 1782) காலத்திலேயே சிவனொளிபாத மலை பௌத்தர்களின் புனித யாத்திரைத் தலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் சிவனொளிபாத மலைக்குத் தரிசிக்க சென்றவர்கள் கண்டி, கம்பளை ஊடாகவே சென்றுள்ளனர். இப்னுபதூதா (1304 – 1377) சீலத் என்ற அரபு நூலில் அவரது விஜயம் பற்றியும், மலை நாட்டு வருகை பற்றியும் சிவனொளிபாதமலை தரிசனம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இவரை, வடபகுதியை ஆண்ட ஆரியச்சக்ரவர்த்தி நான்கு யோகிகள் பதினைந்து பிராமணர்களுடன் இம்மலைநாட்டு பயணத்திற்கு அனுப்பி உதவியுள்ளார். இவர்கள் கண்டி கங்கசிறிபுர ஊடாக சென்றுள்ளனர். கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்தில் 1765இல் கண்டி கட்டுக்கலை கோயில் திருப்பணிகள் ஆரம்பமாகின எனவும், ராஜசிங்கனே கண்டிப் பெரகராவில் நான்கு தேவாலயத்திற்கான பெரகராவைச் சிறப்பாக நடத்தினான் என்றும் கூறப்படுகிறது. இக்காலத்தில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இந்திய நடனக்கோஷ்டிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. ஹரிச்சந்திரன், சத்தியவான் சாவித்திரி, ராமாயண, மகாபாரதக் காட்சிகள், இந்திய வாத்திய மேளங்கள், நாதஸ்வரம், பஜனைகள் இடம்பெற்றுள்ளன. இந்த பஜனையே பின்னர், "பஜாவு" எனச் சிங்கள வார்த்தையாக மாறியுள்ளது. இந்;திரவிழா நாட்டிய நடனங்கள் பற்றிக் கலாநிதி சரத்சந்திர 'நாட்டியம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கலைஞர்கள் வாழ்ந்த வீதி, கவிகாரவீதி (தற்போது கொடுகொடுல்ல வீதி) என அழைக்கப்பட்டுள்ளது.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747 – 1782) காலந்தொட்டு கண்டி எசல பெரகராவில் தலதா பெரகராவிற்கு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆசியை வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகியுள்ளது. அத்தோடு கண்டி வாழ் இந்து மக்கள் பிரமுகர்கள் ஒன்றுகூடி கண்டி கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலின் சிவாசாரியார்களுடன் புனித தேவ வஸ்திராபரணம் ஒன்றை ஊர்வலமாக எடுத்து சென்று, தலதா மாளிகை 'தியவதன நிலமே' ஆசிர்வதித்து புனித பேழைக்கு பூசை செய்து வருவது வழக்கம். இதனைத் தொடர்ந்து பத்து நாள் பெரகரா முடிந்த பின் கெட்டம்ப மகாவலி நதிக்கரையில் நீர் வெட்டு தீர்த்தோற்சவம் முடிந்த பின் நான்கு தேவாலங்களாக நாத்த, விஷ்ணு, கதிரேசன் மற்றும் பத்தினி தேவாலயங்களின் தீர்த்தத்துடன் பஸ்நாயக்க நிலமேக்கள் யானைகளில் கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலுக்கு வந்து தமது தேவ வஸ்திராபரணங்களை இறக்கி வைத்து யானைகளை இளைப்பாறவிட்டு, பகல் தேவ வஸ்திராபரணங்களை மீள அணிந்து பகல் பெரகரா இக் கோயிலிலிருந்தே தீர்த்தக் கலசங்களுக்கு பூசைகள் நடத்தி ஆரம்பிக்கப்படுகிறது.

கண்டியில் அக்காலத்தில் மூன்று குளங்கள் இருந்துள்ளன. கிரிமுகுத (பாற்கடல்), போகம்பர குளம், பொறலேவர் குளம். பைரவகந்த மலையின் நீர் அருகில் அடிவாரத்தி லுள்ள போகம்பரை குளத்திலேயே சேர்ந்துள்ளது. போகம்பரைக் குளத்திற்கு அருகிலேயே கட்டுக்கலை அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் அமைந்திருந்தது. போகம்பரைக் குளத்தின் அருகிலிருந்து பைரவகந்தைக்கு செல்லும் வீதி 'லேக் ரோட்' என அழைக்கப்பட்டுள்ளது. இவ்வீதி இன்றும் கட்டுக்கலை சினிமா தியேட்டருக்கு மேற்குபுறமாக உள்ளது. இதனை 1600களிலும் 1700களிலும் உள்ள கண்டி வரைப்படங்களில் காணமுடிகிறது. இக்குளத்தில் தெய்யன்னவெல பகுதியில் அரச குடும்பங்களின் ஆடைகளைச் சலவை செய்வோர் குடியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Plan of Kandy showing the position of the redoubts - 1816



Map of Kandy Town - 1815



இக்காலத்தில் இலங்கையின் புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்க இந்தியாவி லிருந்து குருசாமி என்பவர் கண்டிக்கு வந்துள்ளார். இவர் கண்டி கட்டுக்கலையில் சிவ வழிபாடு செய்து, இப்பிரதேசத்திலேயே குடியேறியுள்ளார். ஒரு நாள் குருசாமி யின் கனவில் விநாயகர் தோன்றி "நான் குளக்கரையில் துணிகள் துவைப்பதற்காக பயன்படுத்தப்படுகிறேன். என்னை கொண்டு வந்து கோயிலில் பிரதிஷ்டை செய்வாய்" எனக் கூறியுள்ளார். குருசாமி பக்தி பூர்வமாக குளத்தருகில் சென்று பார்த்தபோது, துணிகள் துவைப்பதற்கு பயன்படுத்திய கற்களில் ஒன்றின் மறுபக்கம் விநாயகப்பெருமானின் திருவுருவ வடிவமாக இருந்தது. குருசாமியும் கூடி நின்றவர்களும் அதனைக் கொண்டுவந்து கட்டுக்கலை ஸ்ரீ சோமசுந்தரேசுவரர் ஆலயத்தில் சோமசுந்தரேசுவரருக்கு வலப்பக்கமாக பிரதிஷ்டை செய்தனர். இதனாலேயே இக்கோயில் விநாயகர் கோயில் என்றும், பிள்ளையார் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. சமகாலத்தில், கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் கட்டிடப்பணிகள் ஆரம்பமாகியிருந்தன. இப்பணிகளுக்காக வந்த ஸ்தபதி மகிழவணின் மூத்தபுதல்வன் செல்லக்கண்ணு மகிழவணன் ஸ்தபதியாரே இக்கோ யிலையும் வடிவமைத்துள்ளார்.

1815இல் கண்டி இராச்சியத்தின் மன்னராகக் கண்ணுசாமி என்ற ஸ்ரீ விக்ரமராஜ சிங்கன், அவனது மனைவி ரங்கம்மாள் இக்கோயிலை வழிபட்டதாக வரலாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலத்தில் கண்டி இராச்சியத்தில் அடிக்கடி போர் ஏற்பட்டு, கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியோடு கோயிலை நிர்வகிக்கும் பொறுப்பு பொதுமக்களான கண்டி வர்த்தகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பின் 1982 ஆம் ஆண்டிலிருந்து அறங்காவலராகக் கோவிந்தசாமி கிருஷ்ணமூர்த்தி இக்கோயிலை பொறுப்பேற்று சிறப்பாக நிர்வகிப்பதோடு மூன்று கும்பாபிஷேசகங்களை சிறப்பாக மேற்கொண்டுள்ளார். 1988, 2000, 2019 ஆகிய ஆண்டுகளில் இக்கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. கோயில் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக 2000 ஆம் ஆண்டிலேயே ஐந்து தள இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாநகரில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் ஒர் ஒற்றுமைச் சின்னமாகக் கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் விளங்குகிறது. நாத, விஷ்ணு, கதிரேசன், பத்தினி கோயில்கள் வரலாற்றில்; இந்துக்கோயில்களாக இருந்து, பின்னர், சரணங்கர தேரோவின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் 1752இல் தலதா மாளிகையை பெரகராவில் சேர்த்ததோடு தலதாமாளிகைப் பெரகராவை முதலில் செல்லவும் வழி வகுத்தார். இதன் பின் இத்தேவாலங்களின் நிர்வாகம், இந்துக்களை விட்டு பௌத்தர்களிடம் சென்றதால், இந்துக்கள் கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வவிநாயகர் திருக்கோயிலை வழிபடத் தொடங்கினர். எனவே, இக்கோயில் நீண்ட வரலாற்றினைக் கொண்ட, புராணக் கதைகளை கொண்ட கோயிலாக இப்பொழுது விளங்குகின்றது. அத்துடன் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் உறவுப்பாலமாக இத்திருக்கோயில் விளங்குகின்றது.

உசாத்துணை நூல்கள்

1. Dammaratana Hisselle Thero (1963) Tamil influence on Sinhalese language
2. Dhammanandha, Nawulle (1969) Madiyama Lanka Purawurutha, M.D.Gunasena, Colombo.
3. Gunasena, R. M. D., (1981).'The Kandy Esala Perahara Aluwihare', Colombo,
4. Lawrie, Archbald Compbell. (1896). A Gazetteer of the Contral Province. Colombo. George. J. A. Skeen. Government printer, Ceylon
5. Mendis, Rohanadheera. (1997) Asgiriya Talpatha, Tharanji Printers, Maharagama.
6. Sarachchandra, Ediriweera, (1992), Sinhala Gaminattiya, Department of Cultural. Maharagama.
7. Seneviratne,Anuradha. (1978) "The kandy Asala Perahara" Ceylon Tourist Board, Colombo
8. Senaviratna, A. (1999). World Heritage City of Kandy Sri Lanka.(1999) Conservation and Development Plan, Colombo.
9. Wijayawardhana, Kusumsiri, (2009) Mahanuwara Loka urima Nagarye ismaraka, Dayawansa, Jayakody & Company, Colombo.
10. World Heritage city of Kandy Sri Lanka (1999) Central Cultural Fund, Colombo.
11. நல்லையா. எஸ்இ (2005) "கண்டிராசன் கதை'', கொட்டகலை, சாரல் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

சங்க இலக்கியங்களில் ஆண்களின் வீரத்தினை வெளிக்காட்டும் போரும் வீர விளையாட்டுகளும்

தமிழர்களின் பொற்காலம் என்பது சங்கக்காலம். சங்க இலக்கியங்கள் இதனை பறை சாற்றுகின்றன. சங்க இலக்கியங்களில் அகம், புறம் என்னும் இருபெரும் பிரிவுகள் உள்ளன. அகம் காதல், இல்லறம், ஊடல், பிரிவு, போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பது போல, புறம், ஆண்மகன் போரிடுதல், பொருளீட்டல் போன்ற நிகழ்வுகளை குறித்து நிற்கின்றது. சங்க பாடல்களில் ஆண்களின் வீரத்தை விளையாட்டுக்கள் மூலமும் போர் மூலமும் வெளிக்காட்டினர்.

போர் புரிதல் மிருகங்களை அடக்குதல், ஏறுதழுவுதல், சிலம்பாட்டம், மல்யுத்தம், நீச்சல் போன்ற வீர விளையாட்டுக்கள் சங்க செய்யுள்களில் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றிற்கான ஆதாரங்களை வெளிக்காட்டுவதும், பதிவதும் ஆவணப்படுத்துவதுமே இவ்வாய்வாகும்.

சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களின் தொகுப்பு. இதில் காதலும் வீரமுமே முக்கியத்துவம் பெறுகின்றன. சங்க இலக்கியங்கள் கற்பனையும் கனவும் புனைவும் அற்ற தமிழ்ச்சமுதாயத்தினை உள்ளது உள்ளபடியே காட்டுகிறது. உலக இலக்கியங்களிலே சமயம் சாரா இலக்கியங்கள் என்கின்ற பெருமையும் சங்க இலக்கியத்திற்கு உண்டு. சங்க இலக்கியங்கள் சிறந்த சிந்தனைகளையும் நாகரிகத்தையும் உள்ளடக்கியவையாகத் திகழ்கின்றன. மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொள்கிறான். அவனுக்கு இயற்கையும் அழகும் ஒன்றாகத் தெரிகின்றது. அதனால் தான் அவன் இயற்கையை வருணிக்கவும் உவமைப்படுத்துவதற்கும், ஒப்புமைப்படுத்துவதற்கும் முயன்றதை காணமுடிந்தன. புலவர் ஒருவர் ஒரு பாடலை இயற்றும் போது, அப்பாடலில் இயற்கைக்கூறுகளையும், மனிதனின் வாழ்க்கை நிலைகளையும், இணைத்துப் பாடல் புனைகிறான். மேலும் ஒலிநயம், சொல்நயம், பொருள்நயம் போன்றவற்றுடன் அழகினையும் கலந்து புலவர்கள் பல பாடல்கள் பாடியுள்ளதை ஒப்பு நோக்க முடிகின்றது.

தெரு, மறைவிடம், மன்றம், செய்குன்று, இளமரக்கா என்னும் பூங்கா, பந்தல், பீலிக்கரை, நீர்நிலை, நெடுமணல்பரப்பு, காவற்காடு, கனிமலர்ச்சோலை, களம் முதலான பகுதிகளில் சங்ககால மக்கள் விளையாடியதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன. நவீனகால விளையாட்டுக்கள் பலவற்றின் ஆரம்பம் சங்ககாலத்தில் காணப்பட்டுள்ளதைத் தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக சங்க இலக்கியச் சான்றுகள் கொண்டு விளக்கவும் ஆராயவும் முடிகின்றது. இவ் ஆய்வு சங்கப் பாடல்களில் ஆண்களின் வீர விளையாட்டுப் பற்றியதாக அமைந்தாலும், தமிழ் இலக்கியத்திற்கும் விளையாட்டுக்குமான ஓர் ஆய்வின் முன்னோடி ஆய்வாகவே இதனைக் கொள்ளமுடியும். எனவே, இத்துறை சார்ந்த ஆய்வாகவும் ஆய்வாளர்களால் தொடர்ந்தும் ஆராயப்பட வேண்டும். அதற்கு ஒரு முன்னாய்வாக இதனை பயன்கொள்ள முடியும். கி.மு. 776 இல் ஒலிம்பிக் ஆரம்பித்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடந்துவந்துள்ளது. கி.மு. 339 இல் நிலநடுக்கம் காரணமாக அரங்கம் அழிந்ததில் பலர் இறந்தனர். இதனால் ஒலிம்பிக் நிறுத்தப்பட்டு மீண்டும் 1896 இல் ஆரம்பிக்கப்பட்டது. எனவே, ஆரம்ப ஒலிம்பிக் சங்க காலத்திற்கு சமனாகவே நடந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புறம் என்பது, ஆண்மகன் போரிடுதல், பொருளீட்டுதல் போன்ற நிகழ்வுகளை விளக்கிச் சொல்கிறது. பெண்களுக்கேயுரிய தனிப்பெரும் குணமாகிய கற்பை ஆண்களும் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தவில்லை. அதற்கு மாறாக ஆண்கள் எத்தனை பெண்களோடும் உறவு கொள்ளலாம் என்ற பரத்தையர் ஒழுக்கத்தைக் காட்டுகிறது. இவ்வாறு ஆண்கள் நடந்துக் கொள்வது அவர்களது தனித்த உரிமையாகவும், இதற்கும் மேலாக அவர்களுக்குப் பெருமை அளிக்கும் செயலாகவும் சங்ககாலத்தில் கருதப்பட்டது. சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவி இருவரும் பிறப்பு முதல் செல்வம் ஈறாக ஒத்த நிலையில் இருப்பதும் தலைவன் மிகையாக இருப்பதும் மட்டுமே சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறையாக இருந்திருக்கின்றது. அதாவது, கீழ்குறித்த பத்துக் குண நலன்களில் ஏதாவது ஒன்றோ இரண்டோ அல்லது பத்திலும் தலைவன் தலைவியைவிட உயர்ந்தவனாக இருப்பது ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் இவற்றில் ஒன்றில் கூட தலைவி மிக்கவளாக இருக்கக் கூடாது அப்படி இருந்தால் அது அன்பின் ஐந்திணைப் பாற்படாது. என்கிறார் இளம்பூரணர். பிறப்பு, குலம், ஆண்மை, வயது, அழகு, காமநாட்டம், ஒழுக்கம், அருள், உணர்ச்சி, செல்வம் என்ற பத்து நிலையிலும் ஒத்து இருக்க வேண்டும் என்று கூறும் நூற்பா இறுதியாக ஆண்மகன் இக்குணநலன்களில் மிகுந்து இருந்தாலும் மானிட தன்மையுள்ளவனாகவே சுட்டுகின்றது.

போர்ச் சமுதாய மரபாகவே ஆரம்பகால மனித குலம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆதிச் சமூகம், காடுகளில் அலைந்து திரிந்த காலத்திலும், மரங்களில் குகைகளில் உறங்கிய பொழுதிலும் தன்னைத் தற்காத்துக் கொள்ள போர்முறையினை கற்றுக் கொண்டிருந்தது. பிறகு, மேய்ச்சல் சமூக நிலையிலும் போர் என்பது ஆண்களுக்கு அவசியமானது என உணர்த்தப்பட்டது.

சமுக நீதிமுறையும் ஆண் உயர்ந்தவன்; பெண் தாழ்ந்தவள் என்ற கருத்தும் சங்ககாலம் முதலே சமூதாயத்தில் காணப்படுகின்றன. இவை, காப்பிய காலங்களில் வலிமையுற்று பெண்களின் நிலை வீழ்ச்சியுறக் காரணமாயின, நீதி நூல்கள் ஆண், பெண் ஏற்றத் தாழ்வுகளை வலுப்படுத்துவது மட்டுமின்றி ஆண்களால் அடக்கி ஆளப்படவேண்டியவர்கள் என்றும் வலியுறுத்துகின்றன. இவ்வாறு இலக்கியத்தில் ஆண் பெண் ஏற்றத்தாழ்வு நிலையாக காணப்படுவதை பார்க்க முடிகிறது.

கணவனுக்கு பணிவிடை செய்தும் அவனைத் தொழுதும் வாழ்பவள் தான் கற்புடைய பெண் என்ற கருத்து நிலவியதை,

"குலமகட்டு அழகு தன் கொழுநனைப் பேணுதல்"

என்று குமரகுருபரரும் கூறியுள்ள கருத்துகளிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

உலக வரலாற்றைப் படிப்பவர்கள் ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு பொற்காலம் இருந்திருப்பதை அறிந்து கொள்ளலாம். சங்ககால இலக்கியங்களைக் கொண்டு சங்க காலம் தமிழர்களின் பொற்காலமாக குறிப்பிடலாம்.

வேந்தர்களும், குறுநிலமன்னர்களும், இனக்குழுத் தலைவர்களும் தங்கள் மக்களை பகைவர்களிடமிருந்து பாதுகாக்கவும், நாட்டினை விரிவுபடுத்தவும் அடிக்கடி போரில் ஈடுபட்டனர். போரில் விழுப்புண்பட்ட வீரமரணம் அடைவது பெருமையாகக் கருதப்பட்டது. புறமுதுகிட்டு ஓடுவதும் முதுகில் அம்பு பாய்தலும் இழிவாகக் கருதப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய
அருஞ்சமம் ததைய நூறி நீ
பெருந்தகை! விழுப்புண் பட்ட மாறே. (புறம் 93)

என்ற பாடல் விழுப்புண்பட்டு இறத்தலையும் வாளால் பிளந்து அடக்கம் செய்யும் இழிந்த செயலையும் சுட்டிக்காட்டுகின்றது. வீரன் என்றால் போரில் மாய்வதுதான் சிறப்பு என்ற எண்ணம் அக்கால மக்களிடத்தில் இருந்தது என்பது புலனாகிறது.

கலிகொள் யாணர் வெண்ணிப்
பறந்தலை மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே (புறம் 66)

போரில் முதுகில் அம்பு பட்டதால் அதற்காக நாணி சேர மன்னன் வடக்கிருந்து உயிர்துறந்தான், என வெண்ணிக்குயத்தியார் பாடியுள்ளார். புறமுதுகில் புண் ஏற்படுவது இழுக்கு வீரர்களுக்கு வீரமல்ல என்ற எண்ணம் அக்கால மக்களிடம்; இருந்ததை இப்பாடல் சுட்டிக்காட்டுகின்றது. போர்களால் பெண்கள் பாதிக்கப்படக்கூடாது என்பது போர் அறமாக கருதப்பட்டது. அது பூட்கைமறம் (புறம் 9) என்று போற்றப்பட்டது.

முன்னாளில் தமிழர்கள் மணமகனைத் தேர்ந்தெடுக்கும் போது சிறந்த வீரம் காணப்படுகின்றதா என்ற குறிக்கோளுடனும் இருந்தனர். முல்லை நில குடி மக்கள் ஏறுதழுவுதலை அதற்குரிய போட்டியாக வைத்தனர். குறிஞ்சி நில மக்களும் யானை, சிங்கம், புலி போன்றவற்றுடன் அஞ்சாது எதிர்த்து நின்று போராடி வெற்றி பெற்ற வீரருக்கோ, போர்க்களத்தில் பகைவர் படையைக் கல்லணை போல் அசையாது நின்று எதிர்த்துப் போராடி புறமுதுகுகாட்டா மறவர்களுக்கோ, குரந்தைப் போரில் ஆநிரைகளை மீட்டு அருஞ்செயல் புரிந்தவர்க்கும் மட்டுமே மகட்கொடை அளிக்கும்குறிக்கோள் கொண்டவராக விளங்கினர். வீரத்துக்கே முன்னிடம் அளித்தனர். தான் விரும்ப வில்லையாயின் தகுதியற்றவன் எனக் கருதி முடிவுடை வேந்தனேயாயினும், என்ன நேரினும் பெண் கொடார். பாரி வள்ளல் தம் மகளிரை முடிவுடை வேந்தருக்கே (சேரர், சோழர், பாண்டியர்) பெண் கொடுக்க மறுத்தும் போரிட்டு மடிந்ததை புறநாறு (109 ஆம்) பாடல் பறைசாற்றுகின்றது.

பெண்கள் தங்களுக்கேற்ற காளைகள்பால் காதல் கொண்டார்கள் இக்கால ஆடவனுக்கு வீரமே வாழ்வாக விளங்கியது. 'பொன்முடியார் என்ற பெண்பாற்புலவர் வயது நிறைந்த இளைஞன் ஒருவனை குறிக்கின்ற பொழுது,

ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் – 312)

என்று கூறியுள்ளார். மேலும் முல்லை மகளிர் தம்பால் விரும்பி வளர்க்கப்பெற்ற வலிமையான எருதுகளைப் பிடித்து அடக்கும் அஞ்சாநெஞ்சமும், ஆற்றலுமுடைய காளையரையே மணக்க விரும்பினர். இதனை,

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆயமகள் (கலித்தொகை 103: 63, 64)

அழகுறச் சித்தரிக்கின்றது..

சங்க இலக்கியங்களில் காணப்படும் வீரவிளையாட்டுக்கள் ஆண்களின் வீரத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்காட்டுவதாக காணப்படுகின்றன. தற்காலத்தில் சட்டத்திட்டங்களுடன் விளையாடப்படும் விளையாட்டுகளின் ஆரம்பம் சங்ககாலமாகவே இருந்துள்ளன. சங்க கால விளையாட்டுகளில் ஆண்களின் வீரவிளையாட்டுகள் சங்க இலக்கியங்களில் பாடல்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இப்பதிவுகள்; பல சங்க இலக்கியங்களில் ஆதாரங்களுடன் இன்னும் எடுத்துக்காட்டப்படாதுள்ளன.

இவ் ஆய்விற்கு இலக்கிய சான்றுகள் தவிர ஏனைய சான்றுகள் இல்லை. வரலாற்று மீட்டுருவாக்க அணுகுமுறை கோட்பாடு கொண்டு சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் காணப்படும் ஆண்களின் வீர விளையாட்டுக்களை ஆதாரங்களுடனும், இரண்டாம் நிலை பதிவுகளுடனும் தேடி பதிவு செய்து ஆவணப்படுத்தலோடு, ஒப்பீட்டு ஆராய்வதுடன் தொல்காப்பியம், எட்டுதொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களை முதன்மை சான்றுகளாகவும், இவை தொடர்பான ஏனைய ஆய்வுகள் துணைச் சான்றுகளாகவும் கொள்ளப் பெற்றுள்ளன.

சங்க காலத்தில் ஆண்கள் தலையிலும், முகத்திலும் முடிவளர்த்துக் கொள்வதையும் மழித்துக் கொள்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கும் செய்தி இருக்கிறது. சங்க காலத்தில் "தாடி" ஆண்மையின் அடையாளமாக இருந்த செய்தியைப் புறநானூறு குறிப்பிடுகிறது.

"அடிபுனை தொடுகழல் மைஅணற் காளைக்கு என்
தொடி கழித்திடல் யான் யாய் அஞ்சுவலே!" (புறம் – 83)

"காலில் செறிந்த வீரக் கழலை உடையவன்; மை போன்ற கரிய தாடியை உடையவன்; அத்தகையவனுக்காக என் கை வளையல் கழன்று போகின்றனவே!" எனப் பெருநற்கிள்ளியைப் புகழ்ந்து தம் காதலை நக்கண்ணையார் எனும் புலவர் வெளிப்படுத்திப் பாடியுள்ளார்.

"புலம் புக்கனனே! புல் அணற்காளை" (புறம் – 28)

என்னும் புறநானூற்றுப் பாடலில் ஒரு வீரனுக்குப் புற்களைப்போல முகத்தில் தாடி மண்டிக்கிடந்த செய்தியை அறிய முடிகிறது.

மதி உடம்படுத்த மை அணற் காளை" என அகநானூறும் (221)
"மை அணற் காளையொடு பைய இயலி" என ஐங்குறுநூறும் (389) குறிக்கின்றன.

"..... ..... இன்றே
மை அணற் காளை பொய் புகலா
அருஞ்சுரம் இறந்தனள் என்ப" (நற்.179)

என நற்றிணைப் பாடலும் சுட்டுகிறது.

"அணல்" என்பது தாடி என்றால் "மை அணல்" என்பது மைபோன்ற கருத்த தாடி என்று பொருள்.

"மை அணல்" என்று வருகிற இடங்களில் எல்லாம், குறிக்கப்பெறும் தலைவன், இளமையும் ஆண்மையும் பொருந்தியவன் என்பதை உணரமுடிகிறது.

வெண்ணிக்குயத்தியார் என்கிற பெண்பாற் புலவரும் கரிகாலனைப் பாடுகிறார். அந்தப் பாடல்...

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி,
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிஇயல் யானைக் கரிகால் வளவ!
சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய், நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை,
மிகப் புகழ் உலகம் எய்திப்,
புறப்புண் நாணி, வடக் கிருந்தோனே!

'காற்று வீசும் திசையை அறிந்து தடைப்படாது மரக்கலம் செலுத்துகிற தொழில் நுட்பம் அறிந்திருந்த சோழர் குல மன்னர்களின் வழி வந்தவனே, மத யானையையுடைய கரிகாற்பெருவளவனே, உன்னுடைய ஆற்றல் வெளிப்படுமாறு ஊர்ப்புறத்தில் படையெடுத்துச் சென்று பகைவர்களை வெற்றிகொண்டவனே வளமைமிக்க வெண்ணிபறந்தலை என்கிற இடத்தில் போர்க்களத்தில் புறமுதுகில் காயம்பட்டதால் நாணமடைந்து வடக்கிருந்து உயிர்விட்ட அவன், உன்னைவிட நல்லவன் அல்லவா?' என வெற்றிபெற்ற மன்னனைப் போற்றிய நிலையில், தோல்வி அடைந்தவனை நல்லவன் என்று சொல்வதற்கான காரணங்களைத் தேடச் சொல்கிறது இந்தப் பாடல்.

இந்தப் பாடலில் குறிப்பிடப்படுகிற சேர மன்னர் புறமுதுகிட்டுக் காயமடைந்தார் எனத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்பதால், சேரனின் மார்பில் பாய்ந்த வேல், முதுகு வரை புகுந்து காயம் ஏற்படுத்தியதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் புலவர்

"தன்போல் வேந்தன் முன்புகுறித்து எறிந்த
புறப்புண் நாணி மறந்தகை மன்னர்
வாழ் வடக்கு இருந்தனன்;"

என்கிற புறப்பாடலின் வரிகளும் உறுதிசெய்கின்றன. அந்த அளவுக்கு வீரமும் வலிமையையும் உள்ளவர்களாகவே பண்டைய மன்னர்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். 'மகட்பாற்காஞ்சி' என்கிற ஒரு துறை, சங்கப் பாடல்களில் அமைக்கப்பட்டுள்ளது. பெண் கேட்டு, அந்தப் பெண்ணைக் கொடுக்க தகப்பன் மறுக்கும்போது, நிகழ்த்தப்பட்ட போர்களே 'மகட்பாற்காஞ்சி'.

ஆணுக்கு மானம் என்பது அவனுடைய வீரம்,

சங்க கால மக்கள் வீரம் மிக்கவர்களாய் விளங்கினர். போர்களை இன்முகம் காட்டி வரவேற்றனர்.

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லை
தன்னுயிர் அஞ்சும் வினை"

என்பதற்கிணங்க, தன்னுயிரைப் பற்றி சிறிதும் கலக்கமுற்றாரில்லை. ஆடவரேயன்றி பெண்களும் வீரம் மிக்கவராய் சிறந்து விளங்கினர்.

சேரமான் இரும்பொறை என்ற அரசனோ போர்த்திறம் மிக்க வீரரோடு கூடி தம் பகைவர் அழியும் வரை உண்ணுதலை நினைக்காது போரிட்டு வெற்றிபெற்ற பின்னரே உண்ணக் கூடியவன் என்று அவனது வீரத்தினைப் புகழ்கிறார் குறுங்கோழியூர் கிழார் என்ற புலவர்.

ஆடவர் என்று பெயர் படைத்தார் எல்லாம் ஆண்மை யுடையரா யிருத்தல் வேண்டும் என்பது பண்டைத் தமிழர் கருத்து. 'பிள்ளையைப் பெற்று வளர்த்தல் நற்றாயின் கடமை; சீலனாக்குதல் தந்தையின் கடமை. வாள் எடுத்து வீசி, வலிய யானையைக் கொன்று வருதல் அப் பிள்ளையின் கடமை' என்று பாடினார் பொன்முடியார் என்னும் புலமை சான்ற தமிழ் வீரத்தாய். (புறநானூறு 312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாற்றங்கரையில் ஒரு பெரும்புலியைக் கொன்ற வீரன் இன்றும் கல்லிலே நின்று காட்சி தருகின்றான். தலையிற் குட்டையும் இடையில் ஆடையும் கட்டிய ஆண் மகன் புலியோடு போர் செய்யும் பான்மையில் அமைந்துள்ளது அவ்வடிவம். புலி, முன்னங் கால்களைத் தூக்கி அவனைத் தாக்குகின்றது; இடக் கையைப் பற்றிக் கடிக்கின்றது; அந்த நிலையில் அவனது வலக்கையில் அமைந்த வாள் அதன் வயிற்றினூடே பாய்கின்றது. இவ்வாறு வாளாண்மையால் வேங்கையைக் கொன்ற வீரனுக்கு வீரக்கல் நாட்டினர் தமிழர்.

ஜல்லிக்கட்டு தமிழர்களின் வீர விளையாட்டு. ஏறுதழுவுதல் என்பது தான் இதன் உண்மை பெயர். இதில் பல வகைகள் இருக்கின்றன. தமிழர்களின் வீரம் மட்டும் என்றில்லாமல், காளைகளின் வீரியமும் குறைந்துவிட கூடாது என்பதற்காகவும் ஏறுதழுவுதல் நடத்திவரப்பட்டது.

தனி நிலையிலும் குழு நிலையிலும் அமைந்த புற விளையாட்டுகளாக ஆடவர் விளையாட்டுகள் அமைந்துள்ளன. உடல் திறன், அறிவுத் திறன், வீரப் பண்பு ஆகிய மூன்று கூறுகளில் ஏதேனும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இவ்விளையாட்டுகள் ஆடப்படுகின்றன. போட்டி மனப்பான்மையைத் தூண்டுபவையாகவும் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வாய்ப்பு நிலை விளையாட்டுகளாகவும் உள்ளன. ஒரு சமுதாயத்தில் போட்டி விளையாட்டுகள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டால் அது அந்தச் சமுதாயத்திற்குச் சிறப்புச் சேர்க்கும் என்று கூறுவதுண்டு. ஏனையோர் ஆடும் விளையாட்டுகளை விட ஆடவர் விளையாட்டுகளில் பார்வையாளர் மிகுதி. ஆடவர் இருவராகவோ, இரு அணிகளாகவோ பிரிந்து ஆடும் நிலையில் பார்வையாளர்களும் இரு அணியினராகப் பிரிந்து, ஆடுவோருக்கு உற்சாக மூட்டுவதைக் காணலாம். கபடி, சிலம்பம், சல்லிக் கட்டு, உறியடி, வழுக்கு மரம், வண்டிப் பந்தயம், புலியாட்டம், ஆடுபுலியாட்டம், மான்கொம்பாட்டம், சுருள்கத்தி சுழற்றுதல், வடம் இழுத்தல் போன்ற விளையாட்டுகள் ஆடவர் விளையாட்டுகளாக நாட்டுப்புற மக்கள் மரபில் இன்றும் ஆடப்பெற்று வருகின்றன.

நீச்சல், சங்க காலத்தில் ''மருதச்'' செய்யுள்களில் காணப்படுகின்றது. பரிபாடல் வையைப்பற்றிய பாடலில் புனலாடல் பற்றிக் காட்டப்பட்டுள்ளது.

எல்லாம் கவரும் இயல்பிற்றாய் : தென்னவன்
ஒன்னார் உடைபுலம் புக்கற்றால் மாறுஅட்ட
தானையான் வையை வனப்பு"

பகைவரைக் கொன்ற படையினுடைய பாண்டியனுக்குரிய வையையாற்றில் வந்த புதுவெள்ளத்தின் இயல்பு, பாண்டிய மன்னன், பகைவருடைய தோல்விக்குரிய நிலத்தில் புகுந்து அவர்களை வென்று அவர் நாட்டுப் பொருள்களைக் கவர்ந்து வருதலை ஒத்ததால் வையையின் வனப்பு, பாண்டியனின் இயல்பை ஒத்தது எனக் கூறப்படுகின்றது.

இது ஆண்மகனின் வீரத்தை பறைசாற்றுகிறது.

இதில் கீழ் நீச்சல் அதாவது மேலே இருந்து குதித்து கிணற்றின் கீழே சென்று மணல் எடுத்து வருவதை "தொடித்தலை " விழத்தண்டுன்றினார்" என நற்றிணை பாடலில் தொடித்தலை விழுத்தண்டுன்றினார் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இனிநினைதந் திரக்க மாகின்று திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஅத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொடு
உயர்சினை மருதத்துத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரயகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா இளமை " (புறம்–243)

நற்றிணையில் (68இல்) ஆற்று நீர் விளையாட்டுப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இதில் இளமை பருவத்தில் ஆணின் வீரச் செயல் பற்றி கூறப்படுகிறது.

மற்போர் என்பது இரண்டு ஆட்கள் ஆயுதங்கள் இல்லாமல் ஈடுபடும் ஒருவகைப் போர் அல்லது தற்காப்புக் கலை ஆகும். இது உலகின் பல்வேறு சமூகங்களுக்கு இடையேயும் உள்ள ஒரு கலை வடிவம். இந்திய மரபிலும், தமிழர் மரபிலும் மற்போர் சிறப்புற்று இருந்தது. மல்: என்பதற்கு வலிமை, மற்றொழில், எனப் பொருள் வழங்குகின்றன. இம் மற்போர் தமிழ் இலக்கியங்களில் 'மல்லாடல்' என வழங்கப்படுகின்றது. மற்போர் இன்று ஒரு விளையாட்டாக, அரங்கக் கலையாகப் பெரிதும் பயிலப்படுகிறது. இன்று இது ஓர் ஒலிம்பிக் விளையாட்டும் ஆகும். மல்லாடல் பிற்காலத்தில் குஸ்தி என்ற சொல்லாலும் குறிக்கப்படுகிறது. மற்போராளிகளைப் பயில்வான் என்றும் குறிப்பர். மற்போர் விளையாட்டு நம்நாட்டில் நெடுங்காலமாகப் பயிலப்பட்டு வருகிறது. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் மற்போரில் சிறந்தவனாக இருந்ததால் அவனுக்குச் சிறப்பு பெயராக மாமல்லன் என்ற பெயர் ஏற்பட்டது. அவன் பெயராலே மாமல்லபுரம் என்ற ஊர்ப் பெயர் ஏற்பட்டது.

புறநானூற்றில் மற்போர் புரிந்த மன்னன் எனப் புலவர் சாத்தந்தையார் பாடியுள்ளார். (புறநானூறு 80) சோழன் போர்வைக் கோப்பெரு நற்றின்றி இவன் தித்தன் என்னும் சோழ மன்னன் மகன் (புறநானூறு)

இன்கடுங் கள்ளின் ஆமுர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பு ஒதுங்கின்றே! ஒருகால்
வரு தார் தாங்கிப் பின் ஒதுங் கின்றே !
நல்கினும் நல்கான் ஆயினும், வெல்போர்ப்
பொரல் அரம் தித்தன் காண்கதில் அம்ம!
பசித்துப் பணைமுயலும் யானை போல,
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகு மல்லன் கடந்து அடு நிலையே !"

மல்லன் (மற்போர்வீரன்) ஆற்றலை அழித்துத் தன் ஒரு காலை அவன் மார்பிலும், மற்றொரு காலை முதுகுப்புறத்திலும் அழுத்தி வருந்தச் செய்தவன்;. பசித்துச் செல்லும் யானை தன்முன்னே எதிர்ப்பட்ட மூங்கில் தண்டினை ஒடித்துத்தள்ளுவதைப் போல, களம்புகுந்து மல்லனைப் பெருநற்கின்னி வீழ்த்திய செயல் விளங்கிற்று எனக் கூறப்படுகின்றது. இதன் மூலம் ஆணின் பலம் சித்தரிக்கப்படுகிறது.

மகட்பாற்காஞ்சி' என்கிற ஒரு துறை, சங்கப் பாடல்களில் அமைக்கப்பட்டுள்ளது. பெண் கேட்டு, அந்தப் பெண்ணைக் கொடுக்க தகப்பன் மறுக்கும்போது, நிகழ்த்தப்பட்ட போர்களே 'மகட்பாற்காஞ்சி'.என்று அழைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுதழுவுதல், ஏறுகோள், மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, பொல்லெருது பிடித்தல் என்று தமிழகத்தின் பல பகுதிகளில் பல பெயர்களில் தமிழர்களின் வீர விளையாட்டாம் ஏறுதழுவுதல் அழைக்கப்பெறுகிறது.

சங்க கால சமூகத்தில் ஏறு தழுவுதல் நிகழ்வு இடம் பெற்றமை கலித்தொகையிலும் இன்னும் பிற சங்க இலக்கியங்களில் வாயிலாகவும் அறியமுடிகிறது. இந்நிகழ்வு இன்றும் சல்லிக்கட்டு மஞ்சுவிரட்டல் என்று அழைக்கப்பட்டு வழக்கில் உள்ளது. இந்நிகழ்வானது ஆண்மகனின் வீரத்தினை மெய்ப்பிக்க்கூடிய ஒன்றாக கருதப் படுகிறது. முல்லை நில ஆடவர்கள் தலைவியின் காதலைப்பெறும் பொரட்டு தன் வலுவினை வெளிப்படுத்தி காளையினை அடக்கி அவளை அடைய முயற்சிப்பர். ஆதலின் முல்லை நில ஆடவர் வீரமிக்கவர்களாகத் திகழ்ந்தனர்.

கொல் ஏற்றுக்கோடு அஞ்சானை மறுமையும்
புல்லாளே ஆயமகள்
அஞ்சார் கொலைஏறு கொள்பவர் அல்லதை,
நெஞ்சிலார் தேய்தற்கு அரிய உயிர்துறந்து
நைவாரே ஆயமகள் (கலித்தொகை ப. 453)

முல்லை நில மகளிர் தம் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுப்பதில் எவ்வளவு கவனம் செலுத்தினார் என்பதனை மேற்கண்ட பாடல் வரிகள் வாயிலாக அறியலாம். ஆயர்குல மகளிரை மணக்க வழும்புவோர் அவளுக்காக வளர்க்கப்பட்ட காளை யினை அடக்க வேண்டும் என்பது அக்கால வழக்கமாகும்.

வாள் எடுத்து வீசி யானையை அடக்கி கொண்டு வருவதும் காளைகளை அடக்கி வீரத்தினை வெளிகாட்டுவதும், நீச்சலில் அடி கிணறு வரை சென்று மணல் எடுத்து வருவதையும், இன்றைய ஹொக்கி போட்டிப் போல குணிலால் அடிக்கப்பட்ட வட்டு மணிவட்டு மலைமேல் எழுந்ததும், வட்டு நா விளையாட்டும், மான் கொம்பாட்டம், சுருள் கத்தி சுழற்றுதல், வடம் இழுத்தல் போன்றன சங்க காலத்தில் காணப்பட்டதோடு இவையே வளர்ந்து இன்று சட்ட திட்டங்களுடனான விளையாட்டாகி அபிவிருத்தி பெற்றுள்ளன. நாவாய்ப் போட்டிகள் அதாவது படகோட்டிப் போட்டிகள் படகு வலிக்கும் போட்டிகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. நெடியோன் பாண்டியனின் முந்நீர் விழாவில் வளி தொழில் நாவாய்ப் போட்டி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சடுகுடு, பலிஞ்சடுகுடு, கபடி என்றெல்லாம் கபடி விளையாட்டு அழைக்கப்படுகிறது. இது இளைஞர்களும் விரும்பி ஆடும் போட்டி விளையாட்டு ஆகும். கபடி விளையாட்டு இன்று உலகம் முழுவதும் பரவி ஒலிம்பிக் இடம்பெறும் அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

தனி நிலையிலும் குழு நிலையிலும் அமைந்த புற விளையாட்டுகளாக ஆடவர் விளையாட்டுகள் அமைந்துள்ளன. உடல் திறன், அறிவுத் திறன், வீரப் பண்பு ஆகிய மூன்று கூறுகளில் ஏதேனும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இவ்விளையாட்டுகள் ஆடப்படுகின்றன. போட்டி மனப்பான்மையைத் தூண்டுபவையாகவும் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வாய்ப்பு நிலை விளையாட்டுகளாகவும் உள்ளன. ஒரு சமுதாயத்தில் போட்டி விளையாட்டுகள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டால் அது அந்தச் சமுதாயத்திற்குச் சிறப்புச் சேர்க்கும் என்று கூறுவதுண்டு. ஏனையோர் ஆடும் விளையாட்டுகளை விட ஆடவர் விளையாட்டுகளில் பார்வையாளர் மிகுதி. ஆடவர் இருவராகவோ, இரு அணிகளாகவோ பிரிந்து ஆடும் நிலையில் பார்வையாளர்களும் இரு அணியினராகப் பிரிந்து, ஆடுவோருக்கு உற்சாக மூட்டுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

1. தட்சிணாமூர்த்தி அ. (1994). தமிழர் நாகரிகமும் பண்பாடும். யாழ் வெளியீடு.
2. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு (2000). தமிழ் நாட்டு வரலாறு சங்ககாலம் வாழ்வியல் சென்னை: தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம.
3. செங்கைப் பொதுவன் (2010). சங்க இலக்கியங்களின் விளையாட்டுக்கலை. உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டு சிறப்பு மலர். சென்னை: தமிழ்நாடு அரசு.
4. சங்க இலக்கிய வரலாறு (2010). சண்முகசுந்தரம், தொகுப்பு மா.ரா.களசியம். சென்னை: காவ்யா.
5. சிவகாமசுந்தரி க. (1995). சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. இரா. மகேஸ்வரன் (2015). சங்க கால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள் ஆவணப்படுத்தலுக்கான ஓர் ஒப்பீட்டாய்வு. தண்பதம். பேராதனை தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

சைமன் காசிச்செட்டி - தமிழ் புலவர் சரிதத்தின் முன்னோடி

தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பாதாம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்க காலக் கட்டமாகும். இருபதாம் நூற்றாண்டிலே தமிழ் இலக்கிய நெறியிற் காணப்படும் சிறப்பியல்புகள் பலவற்றிற்குக் காலெடுத்துக் கொடுத்தது பத்தொன்பதாம் நூற்றாண்டு எனின் மிகையாகாது. இருபதாம் நூற்றாண்டுச் செய்யுளிலக்கியத்திற் சுட்டக்கூடிய பண்புகளிற் சில, காத்திரமான முறையிலே தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தொடங்கியதும் இக்காலக்கட்டத்திலேயாம். மேலும் இருபதாம் நூற்றாண்டிற் செல்வாக்குப் பெற்ற பிரிவாக விளங்கும் வசன இலக்கியத்தின் பரிசோதனைக் களமாகத் திகழ்ந்ததும் பத்தொன்பதாம் நூற்றாண்டேயாகும்.

அறிவியல் இலக்கியக் கூறாகத் தமிழ் இலக்கிய வரலாறு இன்று எவ்வளவே தூரம் முன்னேறிவிட்டது. கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் பாடத்திட்டத்தில் இடம் பெற்றதால் இலக்கிய வரலாற்று நூல்கள் பல்கிப் பெருகிவிட்டன. தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களின் முன்னோடியாக விளங்குவது, சைமன் காசிச்செட்டி எழுதிய "தமிழ் புளூலீராக்" என்னும் ஆங்கில நூலாகும். இவ் ஆங்கில நூலானது 1859 ஆம் ஆண்டு வெளி வந்தது. புளூலீராக் எழுதிய "வாழ்க்கைச் சரிதங்கள்" ஆங்கில இலக்கியத்திற் செல்வாக்குப் பெற்றது (சாமுவேல் ஜொன்சன் (1709 – 1784) எழுதிய "The lives of the English Poets" என்னும் நூலுக்கு வழிகாட்டி. மேலைத்தேயங்களிலே செல்வாக்குப் பெற்ற "வாழ்க்கைச் சரிதம்" என்னும் வடிவத்தை எடுத்துக் கொண்டு சைமன் காசிச்செட்டி தமிழ்ப்புலவரின் சரிதங்களைக் கூறமுற்பட்டார்.

தமிழ் புளூராக் என்னும் நூலே தமிழ் புலவர்களின் சரிதங்களை ஒரே நுலாகக் கூற எழுந்த முதல் நூலாகும். தமிழ்ப்புலவர் பலருடைய சரிதங்களை ஒரே நூலிலமைத்து முதலில் அச்சிலிட்ட பெருமை சைமன் காசிச் செட்டியவர்களையே சாரும்.

சைமன் காசிச் செட்டியவர்கள் தமது முகவரையிலேயே தமிழ் புளூராக் பற்றிக் கூறுமிடத்து இவ்வகையில் இதுவே முதல் முயற்சி என்று கூறவது தற்புகழ்ச்சியல்ல. உண்மைக் கூற்றாகும்.

தமிழ்புலவர் சரிதம் எழுதுவதற்கு வேண்டிய ஆதாரங்களை சைமன் காசிச் செட்டி இரு தசாப்தத்திற்கு முன்பிருந்தே சேர்த்து வந்திருக்கிறார் என்பதை அவர் எழுதிய ஆங்கில கட்டுரைகள் மூலம் நாம் அறியலாம். இவர் ஆரம்பக் காலத்தில் எழுதியனவற்றுட் கோணேசர் கல்வெட்டினை ஆங்கிலத்திற் சுருக்கமாக மொழி பெயர்த்து எழுதிய கட்டுரையொன்றாகும். அல்லியரசாணி நாடகத்தில் உண்மை காணவிழைந்த முயற்சியின் பயனாக 1933ஆம் ஆண்டிலே கட்டுரையொன்று வெளிவந்தது. வலைவீசுபுராணத்தின் சுருக்கத்தைப் பரதவர் பற்றி எழுதிய கட்டரையிலே தந்துள்ளார். காசிச்செட்டியவர்கள் 1840 ஆம் ஆண்டிலே கொழும்பு ஒப்சேவர் (The Colombo Observer) என்ற பத்திரிகையிலும் சிலோன் மகெசின் (The Ceylon Magazine) என்ற சஞ்சிகையிலும் எழுதிய கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. கொழும்பு ஒப்சேவர் பத்திரிகையிலே தமிழர் தம் பழக்கவழக்கங்கள் பற்றியும் இலக்கியம் பற்றியும் தொடர்பாக எழுதியள்ளார். இலக்கியம் பற்றிய கட்டுரைகளிலே தமிழ் நீதி நூல்கள் பற்றிய கட்டுரையும் காசி கண்டத்திலிருந்து மொழிபெயர்த்த பகுதியும் சுட்டக்கூடின. சிலோன் மகெசின் என்ற சஞ்சிகையிலே தமிழ் புளூராக் கருக்கொண்ட தன்மையை நாம் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1840 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் வெளிவரத் தொடங்கிய சிலோன் மகெசின் என்னும் சஞ்சிகையின் மூன்றாம் இதழொழிந்த ஏனைய முதலாறு இதழ்களிலும் சைமன் காசிச்செட்டி அகத்தியர், தேரையர், திருமூலர், கொங்கணர், மச்சமுனி, அப்பர், சம்பந்தர், சுந்தரர், நக்கீரர், ஔவையார், திருவள்ளுவர், கபிலர், மாணிக்கவாசகர், அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரர், தொல்காப்பியர், பவணந்தி, அமிர்தசாகரர், கச்சியப்பர், சேந்தன் (திவாகர்) கம்பன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, மண்டலபுருடர், பரஞ்சோதிமுனிவர், சிவவாக்கியர், அருணகிரிநாதர், பட்டணத்துப்பிள்ளையார், பத்திரகிரியார், குமரகுருபரர், தாயுமான சுவாமிகள், சீர்காழி அருணாசலக் கவிராயர் என்னும் முப்பத்திரண்டு தமிழறிஞர் பற்றிய செய்திகளைச் சுருக்கமாகத் தருகிறார்.

சிலோன் மகெசின் என்னும் சஞ்சிகையிலே சீறாப்புராணத்திலிருந்து ஒரு பகுதியை மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். அடுத்து திருவாதவூரர் புராணத்திலிருந்து ஒரு சுருக்கத்தை இலங்கை றோயல் ஏசியாரிக் சங்கத்தினரின் சஞ்சிகையிலே மொழிபெயர்த்து அளித்துள்ளார். இவற்றைத் தொடர்ந்து காசிச்செட்டியவர்கள் இலங்கை றோயல் ஏசியாரிக் சங்கத்திலே 1848 ஆம் ஆண்டு ஜீன் மாதம் மூன்றாம் திகதியும் 1849 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியும் டிசம்பர் மாதம் முதலாம் திகதியும் தமிழ்நூற்பட்டியல் ஒன்றினை வாசித்தார். தமிழ் புளூராக் என்னும் நுலின் ஆக்கத்திலே ஈடுபட்டிருந்த ஆசிரியர் தமிழ் நூல்களின் பட்டியலைத் தயாரிப்பதில் அக்கறையுடையவராக இருந்தார் என்பது முற்கிளந்த பட்டியலாற் புலனாகின்றது. இப்பட்டியல் முப்பெரும் பிரிவுளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதற் பிரிவாகிய மொழியியற் பகுதியுலே 74 நூல்களின் பெயர்களும் சிலவற்றிற்கு அவற்றின் ஆசிரியர் பெயர்களும் தரப்பட்டுள்ளன. அகத்தியம், தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், தண்டியலங்காரம், முதலிய பழைய இலக்கண நூல்களும் சிவஞான முனிவரின் இலக்கண விளக்கச் சூறாவளி, நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை, நன்னூல் விசாகப்பெருமாளையார் உரை, சரவணப் பெருமாளையரின் அணியியல் விளக்கம், தாண்டவராய முதலியாரின் இலக்கண வினாவிடை முதலிய அண்மைக்காலத்துத் தமிழகத்தறிஞரின் இலக்கண நூல்களும் ஐரோப்பியர் எழுதிய இலக்கண நூல்களும் சிதம்பரப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், சம்பந்தப்பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்களும் திவாகரம், பிங்கலந்தை, சூடாமனி நிகண்டு முதலிய நிகண்டுகளும் அகராதிகளும் இப்பிரிவிலே இடம்பெறுகின்றன. இரண்டாவது பிரிவு புராண இலக்கியம், வரலாறு, வாழ்க்கைச் சரிதம் பற்றிய நூல்களை உள்ளடக்கிக் கூறுகின்றது. செய்யுலிலும் வசனத்திலும் இந்துக்கள், கிறிஸ்தவர், இஸ்லாமியர் ஆகியோர் இயற்றிய 82 நூல்கள் பற்றிய செய்திகளும் தரப்பட்டுள்ளன. கம்பராமாயணம், கந்தப்புராணம், இரகுவம்சம், சிலப்பதிகாரம், பெரியபுராணம், சேதுபுராணம், தட்சிண கைலாசபுராணம், (கோணேசர்) கல்வெட்டு, தேம்பாவணி, திருச்செல்வர் காவியம், சீறாப்புராணம், முகையித்தீன் புராணம் முதலிய செய்யுல் நூல்களும், நளன்கதை, கஞ்சன் கதை, தேவப்பிசையின் திருக்கதை முதலிய வசன நூல்களும் இப்பிரிவிலே காணப்படுகின்றன. மூன்றாவது பிரிவாகிய சமயம், தத்துவம் பற்றிய பகுதியிலே இந்துக்கள், கிறிஸ்தவர் ஆகியோருக்குரிய 153 நூல்களும் சிலவற்றிற்கு அவற்றின் ஆசிரியர் பெயர்களும் குறிக்கப்படுகின்றன. எனவே, மூன்று பகுதிகளிலும் 309 நூல்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. சைமன் காசிச் செட்டி எழுதிய கட்டுரைகளும் ஏனைய கட்டுரைகளும், தமிழ் புளூராக் தோன்ற வழியமைத்துக் கொடுத்தன. தமிழ் புளூராக் வெளிவந்த போது கொழும்பு ஒப்சேவர், சிலோன் ரைம்ஸ் என்னும் பத்திரிகைகள் சிலாகித்து விமர்சனம் செய்தன. கால்ட்வெல் அவர்கள் தமது ஒப்பியலிலக்கண நூலின் பிந்திய பதிப்பிலே தமிழ் புளூராக் என்னும் நூலை உசாத்துணை நூற்பட்டியலிலே சேர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைமன் காசிச்செட்டி 1807 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி ஈழவள நாட்டிலே கற்பிட்டி என்னும் ஊரிலே கவிரியேல் காசிச் செட்டியின் புதல்வராகப் பிறந்தார். கற்பிட்டி வடமேல் மாகாணத்தில் உள்ளது. புத்தளம் நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணிபுரியத் தொடங்கிய காசிச் செட்டி, 1828ஆம் ஆண்டு முதலாகப் புத்தளம் மணியக்காரராகவும், 1833ஆம் ஆண்டு முதல் புத்தளம் மாவட்டத்தில் முதலியாராகவும் கடமை செய்தார், 1838ஆம் ஆண்டு முதல் 1845ஆம் ஆண்டுவரை இலங்கைச் சட்ட நிரூபண சபை அங்கத்தினராகத் திகழ்ந்தார். பின்பு, 1848ஆம் ஆண்டு முதலாகத் தாற்காலிக நீதிபதியாகவும், 1852ஆம் ஆண்டு முதல் நிரந்தர நீதிபதியாகவும் சிலாபத்திலே விளங்கினார். 1860 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி மரணமடைந்தார்.

காசிச்செட்டியவர்கள் கத்தோலிக்க கோயிலின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் நூலையும் ஜனன காண்டத்திற்குக் குறிப்புரையையும் எழுதியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சைமன் காசிச்செட்டி எழுதிய ஏனைய கட்டுரைகளையும் நூல்களை யும் நோக்கும் போது அவர் அறிவியலுக்குட்டபட்ட பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டார் என்பது தெளிவாகும். வரலாறு, சமூகவியல், மொழியியல் முதலிய துறைகளிளிலே காசிக் செட்டியவர்கள் ஈடுபாடு உடையவராக இருந்தார். குதிரைலை தம்மன்ன நுவரை, கற்பிட்டியிற் கண்டெடுத்த நாணயங்கள் செப்பேட்டு மொழிபெயர்ப்பு, பிரமனன்கண்டல் கல்வெட்டு முதலியன பற்றிய கட்டுரைகளும் பண்டைக் காலம் தொட்டு ஒல்லாந்தர் காலம் வரையுமுள்ள யாழ்ப்பாண நாட்டின் வரலாறு என்னும் கட்டுரையும் இலங்கை வரலாறு பற்றிய நூலின் மொழிப்பெயர்ப்பும் அவர் வரலாற்றிலே கொண்டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுகின்றன. தமிழ் மக்களுடைய சாதிகள், தமிழ் மக்களுடைய சாதிச் சடங்குகள், முக்குவர் வரலாறு, இலங்கை இஸ்லாமியரின் பழக்கவழக்கங்கள் என்பன பற்றி காசிச்செட்டியவர்கள் எழுதிய நூல்கள் சமூகவியலில் அவருக்கிருந்த ஆர்வத்தைச் சுட்டுகின்றன. காசிச்செட்டியவர்கள் 1834 ஆம் ஆண்டிலே எழுதி வெளியிட்ட சிலோன் கசற்றியர் (The Ceylon Gazetteer) என்னும் நூல் சமூகவியல், வரலாறு முதலிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு இருவிருந்தாகும்.

மாலைத்தீவு மொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையேயுள்ள ஒற்றுமையைக் காட்டும் சொற்பட்டியல், ஜாவா மொழிக்கும் வடமொழிக்கும் இடையேயுள்ள ஒற்றுமை மலையகராதி (1840) என்னும் அகராதி ஆகியன இவருடைய மொழியியல் அறிவை விளக்குகின்றன.

ஆங்கில நெடுங்கணக்கின்படி தமிழ்ப் புலவர்களைக் காசிச் செட்டியவர்கள் வரிசைப் படுத்திக் கூறும் தமிழ் புளூலீராக் என்னும் நூலிலே 197 பேர்களுடைய சரிதங்கள் இடம்பெறுகின்றன. இவர்களுள் அரசகேசரி நல்லூர் வி.சின்னத்தம்பிப் புலவர் சுன்னாகம் வரதகவிராயர், மாதோட்டம் லோரெஞ்சுப் புலவர், ஞானப்பிரகாசதேசிகர், கூழங்கையர்,பிலிப்பு தெ.மெல்லோ (1723 17900 மாதோட்டம் குமாரசிங்க முதலியார், வட்டுக்கேட்டை கணபதி ஐயர் (1803) நெ.சேனாதிராய முதலியார் (1840). நல்லூர் ம். சரவணமுத்துப்புலவர் (1845) அராலி விசுவநாதசாஸ்திரியார் ஆகிய பன்னிருவரும் ஈழத்தவராவர்.

அரச்சேசரி பாடிய இரகுவம்சத்திலே 2444 பாடல்களும் 26 படலங்களும் இருப்பதாகக் காசிச்செட்டியவர்கள் கூறினார். சிலபதிகாரம், சிந்தாமணி, திருச்செல்வர் காவியம், வீரசோழியம், மாறலனலங்காரம், சீறா (சீறாப்பராணம்) முதலிய நூல்களைப் பற்றித் தமது தமிழ் நூற்பட்டியல் எண்ணும் கட்டுரையிலே குறிப்பிட்ட காசிச்செட்டியவர்கள் அந்நூல்களின் ஆசிரியர்களைப்பற்றி தமது நூலிலே கூறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசியா ஆய்வுகள்" என்னும் பத்திரிகை திருவள்ளுவர் காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு என்று கூறியது. இதைக் காசிச் செட்டி மறுக்கிறார். சிவவாக்கியர், திருமழிசையாழ்வார் வாழ்ந்த காலமான 8ஆம் நூற்றாண்டு என்றனர். சிவவாக்கியர் பாடலில் முகம்மதியரைப் பற்றிய குறிப்பு வருவதால் தமிழ்நாட்டில் முகம்மதியர் படையெடுப்புக்குப் பிந்தைய காலத்தவராகத்தான் வாழ்ந்திருக்க முடியும் என்று கருத்துரைக்கிறார்.

மண்டலபுருடரின் காலத்தைப் பற்றிக் கூறுமிடத்து, தமது நிகண்டின் ஒன்பதாம் தொகுதியில் கிருஷ்ணதேவராயரைப் பாராட்டுவதால் கி.பி. 1508 முதல் கி.பி.1530 வரை ஆட்சி புரிந்த இராயரின் காலமே மண்டலபுருடரின் காலம் என்கிறார். இதேபோன்று "ஞானவெட்டியான்" என்ற நூலைத் திருவள்ளுவர் எழுதினார் என்று கூறுவதும், "அல்லி அரசாணிமாலை" புகழேந்திப் புலவர் எழுதியது என்று கூறுவதும் அவ்விரு பெரும்புலவர்களை இழிவுபடுத்தியதாகும் என்று கருத்துரைக்கிறார்.

காசிச்செட்டியவர்களைத் தொடர்ந்து புலவர் சரிதம் எழுத முற்பட்ட ஆசிரியர் பலருக்குத் தமிழ் புளூலீராக் சிறந்த வழிகாட்டியாக அமைந்தது. தமிழ் புளூலீராக் என்னும் நூலை மொழிபெயர்க்கத் தொடங்கிய அ.சதாசிவப்பிள்ளை (J.R.Arnold) பாவலர் சரித்திர தீபகம் (The Galaxy of Tamil Poets) என்னும் நூலை 1886 ஆம் ஆண்டிலே தந்தார்.

உசாத்துணை

1. இராமசாமிப்புலவர் சு. அ. (1953): தமிழ் புலவர் வரிசை : ஐந்தாம் புத்தகம்,. பக். 108.
2. சதாசிவம்பிள்ளை அ. (1886): பாவலர் சரித்திர தீபகம், பக். 230
3. சேவியர் எஸ். தனிநாயகம் அடிகள் (1958) : "முதல் அச்சேறிய தமிழ் நூல்கள்" கல்கி தீபாவளி மலர்
4. தமிழ்ப் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி வரலாறும் பணிகளும், (2007) இவரின் பிறந்த 200 ஆண்டு நிறைவு வெளியீடு, நினைவுப் பணிப்பெருமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

நவீன ஊடகத்தில் நாட்டுப்புற கலைகள்

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் குறிக்கப்பட்ட இனத்தவர்களால் நிகழ்த்தப் படுவையாக உள்ளன. இது காலப்போக்கில் காலத்தின் நோக்கம் கருதி செழுமைப் படுத்தப்பட்டு நிகழ்த்து கலைகளாக (performing art) ஆயின. இது ஊடகங்களினால் (mass media) உலகறியச் செய்யப்பட்டன. கிராமத்து கலைகளாக இருந்த இவை நவீன வெகுசன ஊடகங்களினால் அனைவராலும் அறியப்பட்டன.

ஊடகம் என்பது தகவல்களை மக்களுக்கு பரப்புவன. ஊடக செய்தி பரிமாற்றத் தில் நாட்டுப்புற இலக்கியம் பரவும் விதத்தினை பின்வருமாறு ஆய்வாளர்கள் விளக்கு கின்றனர். 1. வாய் மொழியாக பேசப்பட்டு, 2. இலக்கிய வடிவமெடுத்து, 3.பல்வேறு நிகழ்வுகளாகி, 4. செய்தியாக பல நிலைகளாகின்றன என்கின்றனர்.

நவீன யுகம், இடம்பெயர் யுகம், விவசாய யுகம், கைத்தொழில்யுகம், தகவல் யுகம் நவீன யுகம் என யுகங்கள் மாறி வருகின்றன. இதில் விவசாய யுகத்திலேயே நாட்டுப்புற கலைகள் அதிக செல்வாக்குடன் காணப்பட்டுள்ளன. தற்போது நிலவுவது நவீன ஊடகயுகமாகும்.

நவீன ஊடகத்தில் நாட்டுப்புற கலைகள் நவீன ஊடகத்தில் கதைகளாக தோன்றி, சிறிய கதைப் பாடல்களாகி, பெரிய கதைப் பாடல்களாகி, மீண்டும் கதைகளாகி, கதைபாடல்களாகி,கற்பனைகள் பல கலந்து என படிமுறையாக வளர்ச்சியடைந்துள்ளன என்கின்றனர்.

வெகுசன ஊடகங்களாக செய்தி பரப்புவதற்கு கட்டுரைகள், சஞ்சிகைகள், நூல்கள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா, கணணி, இணையத்தளம் என விரிந்து செல்கின்றன.

வெகுசன ஊடகங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ❖ காணுதற்குரியது அச்சு ஊடகம், எழுத்துக்கள், பாறை ஓவியங்கள், கோலங்கள், வேடங்கள், உடை ஒப்பனைகள், செய்தித்தாள்கள், புகைப்படங்கள்
- ❖ கேட்பதற்குரியது அலை ஊடகம், பேச்சு, பாட்டு, ஒலிபெருக்கி, பறை, மேளம், வானொலி, நாட்டுப்புற இசை
- ❖ காணுவதற்கும், கேட்பதற்கும் உரியது – காட்சி ஊடகம், தொலைக்காட்சி, வீடியோ, கூத்துக்கள், நாடகங்கள், சினிமா மற்றும் இணையத்தளங்கள் என வகைப்படுத்தலாம்.

நாட்டுப்புற கலைகள் பற்றிய தகவல் வழங்குவதில் நவீன ஊடகங்கள்

1. விமர்சனப் பார்வை (Critical Methods),
2. பாரம்பரியக் கலைகளை ஒப்பீட்டு வழங்குவது (Classical Mrthod),
3. விபரித்து எழுதுதல், படைத்தல், பரப்புதல்
4. (reportorial method),
5. புதிய படைப்பை வரலாற்று கண்ணோட்டத்தில் நோக்குதல் (organic mrthods), என பல்துறையாக ஆய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புறவியல் பற்றி பின்வரும் நான்கு வகையிலும் அடிப்படையில் பூரண அறிவு இல்லாதவர் செய்ய முடியாது.

இம்மாற்றத்தினை விவரித்தல் (Elaboration), சுருக்குதல் (Condensation), தெய்வீக நிலையாக்குதல் (Sanctification), செய்தியாக்கல் (news) எனக் கூறலாம்.

ஊடகங்களில் நாட்டுப்புறவியல் உள்வாங்கல்

பாடல்கள், இசைவகைகள், நாட்டுப்புற கதைகள், கூத்துக்கள், நடனங்கள், வாழ்வியல் நிகழ்வுகள், வட்டார மொழி நடைகள் என பல வகைப்படுத்தலாம். இவை நேரடியாகவும் தழுவிய நிலையிலும் மறைமுகமாகவும் உள்வாங்கப்பட்டுள்ளது.

நிகழ்கலைக்கும் அதனை ஊடக கலையாக்கும் போது நவீன ஊடக கலைக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஒப்பீட்டு நோக்கின்...

நிகழ்க்கலை	நவீன ஊடகக் கலை
நிறப்பூச்சுக்கு அடுப்புக்கரி, அரிதாரம், செம்மண், செந்சந்தனக் கட்டை உரைசல், மஞ்சள் பயன்படுத்தப்பட்டன.	நிறப்பூச்சுக்கு வண்ணக்கலவை, முகப்பூச்சு பயன்படுத்தப்படுகிறன.
வாய்ப்பாடல்கள் குரல்களால் உரத்த குரலில் ஒலித்தன.	வாய்ப்பாடல்கள் ஒலிபெருக்கியினால் வண்ணக்குரலில் மென்மையாக பாடப்படுகின்றன.
நாட்டுப்புற கலைகள் ஏழ்மையானவை, எளிமையானவை.	நவீன ஊடக கலைகள் ஆடம்பரமானவை.
வட்டாரத்தன்மை வட்டார பண்பாடு வட்டார உடை, ஒப்பனை, தொழில் முறை காணப்பட்டன.	ஊடகத்துறையில் எல்லோரும் பயன்படுத்தக் கூடியதாக உடை தயாரிக்கப்படுகின்றன.
நாட்டார் கலை வடிவங்கள் குழுமை நிலைக்கொண்டமை.	ஊடக கலை வடிவங்கள் தனிநபர் நிகழ்த்துகையாக காட்டப்படுகிறது.
சிலவற்றை அழுத்தப்படுத்தி காட்டுதல் ஒரு சிறப்பாக காணப்பட்டன.	நவீன வெகுசன ஊடகத்திலும் வேறாக அழுத்தப்படுத்திக் காட்டப்படுகிறது.
திரை மறைவில் பலர் செயற்படுவர்.	பிற்புல ஆட்களை ஊடகங்களில் படம் பிடித்து காட்டப்படுகின்றன.
தெய்வத்தின் முன் தெய்வ வழிபாட்டுடன் உரு ஏற்று நிகழ்த்தப்படும் கலை	நவீன ஊடகங்களில் கெமராக்களுக்கு முன் நடத்தப்படுகின்றன.
நாட்டார் கலைகள் கலைஞர்களின் உழைப்பை முழுமையாக்க கொண்டவை.	நவீன வெகுசன தொடர்பு சாதனங்கள் இயந்திரமய இயக்குனர்களைக் கொண்டவை
நாட்டுப்புறவில் கிராம சூழலை கொண்டவை	ஊடகத்துறை நகர கலாச்சாரத்தினை பிரதிபலிப்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புற நிகழ்வுகள் விடிய விடிய நிகழ்த்துவன சில கலைகள் பல நாட்கள் தொடர்வன	வெகுசன ஊடாக கலைகள் சில நிமிட /மணிநேரம்
நாட்டுப்புற மக்கள் ரசணையுடன் கூடியவர்கள்	ஊடகத்துறை பார்வையாளர் நேரத்தை கழிப்பதற்காக பார்ப்பவை வெகுசன ஊடாக – குழும நிலை – சிறுகூட்டம் தனிநபர் ரசனை கொண்டவை.
நாட்டுப்புற கலைகளில் இயற்கை மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.	வெகுசன ஊடாக கலைகள் வேறுபட்டு, நவீனமய புத்தாக்கம் கொண்டவை
ஆடல் ஒசைக்கு வாகைநெத்து, கருவேல் நெத்து குண்டுமணி பயன்படுத்தப்பட்டன.	ஊடகத்துறையில் நவீன இசை பொருட்களுடன் சலங்கை பாவிக்கப்படுகின்றன.
மனித உழைப்பை கொண்டவை.	நவீன ஊடகம் இயந்திர உதவி கொண்டவை.
இயற்கை தன்மையுடனான கலைகள்	செயற்கை தன்மையுடன் வடிவமைக்கப்படுகின்றன.
படைப்பாளர்களது சுதந்திரத் தன்மைக் காணப்பட்டன	ஊடகங்கள் மூலம் படைப்பாளரது சுதத்திரதன்மை பாதிக்கப்படுகிறது. ஊடகத்திற்கு ஏற்றவாறு படைப்படுகின்றன.
கூத்து ஆட்டம், நடிப்பு ஆகியன உடை ஒப்பனை திரைச்சீலை போன்றக் கலை கூறுகளாக காட்டப்பட்டன.	காட்சி நிலைக்கு அமையாத கலை வடிவங்கள் நவீன காட்சி வடிவமாக மாற்றப்படுகின்றன.
நாட்டு மருந்து விற்பனை, பாவனை குறைந்தது போல நாட்டார் கலைகளும் குறைகின்றன.	நவீன மருந்துக்கள் மற்றும் விளம்பரம் போல நவீன கலைகள் வளர்ந்துள்ளன.
தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட மக்களின் கலைகள்	சகலரதும் நடிப்பாலான கலைகளாகவுள்ளன.
கலைஞர்களுக்கு வருமானமில்லை	கலைஞர்கள் நல்ல வருமானம் பெறுகிறார்கள் விளம்பரங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறார்கள்

ஊடகங்களில் நாட்டுப்புறவியல் புறக்கணிக்கப்படுகின்றமைக்கு காரணம் அதன் அங்கீகாரம் போதாமை, நையாண்டி பார்வை, சமூகத்தில் மதிப்பிழப்பு, சாதிய ஆதிக்கம் ஒடுக்கல், உலகமயமாதலினால் நவீனத்தாக்கம் அவற்றோடு தொழிற்சங்க அரசியல் தாக்கம், கலைஞர்களின் பற்றாக்குறை, சினிமாத்தாக்கம், கணிணி இணையத் தாக்கம் போன்நன காரணமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுசன ஊடகங்கள் கவனிக்க வேண்டியனவையாக கால அளவு, நவீன உடைப் பயன்பாடு, மென்மைத் /வன்மைத் தன்மை, வட்டாரத்தன்மை, குழுமத்தன்மை, அழுத்தப்படுத்தி காட்டுதல் ஆகியவற்றில் கவனம் கொள்ளுதல் . மற்றும், இடம், மக்கள் கூட்டம், அரங்கு, இயற்கைச்சூழல் பாவிப்புப் பொருட்கள் பற்றியும் கவனம் கொள்ள வேண்டும்.

நவீன ஊடகச் சந்தையில் நாட்டுப்புறவியலான இரசிப்புத் தன்மை, ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை, செல்வாக்கு நிலைகள் ஆகியவற்றோடும் சந்தைப் பொருளாக மாற்றுதல், வேறுபட்ட வாய்ப்புக்கள் உதாரணமாக சினிமாவில் பாடல்களின் பின்னணி இசை, இனிய கனவு, காதல் பாடல் காட்சிகள் ஆவனவோடு சண்டைக் காட்சிகளில் புலியாட்டம், சிலம்படி வாஸ்தா, மல்யுத்தம், வாளும் கேடயமும், காளை அடக்குதல் மஞ்சு விரட்டுதல் ஆகியனவும் வாழ்வியல் நிகழ்ச்சிகளாக பொங்கல், ஏர் மங்கலம் பூட்டல், வில்லுபாட்டு என சினிமாவில் நாட்டுபுற பாடல்கள், கதைகள், ஆடல்கள் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

நவீன ஊடகமான நாட்டுப்புறக் கலைஞர்களை விளம்பரப்படுத்தல், கலைகளை உலகறியச் செய்தல், செய்திகளை பரிமாற்றல், பலருக்கு சென்று சேரும் தன்மையை ஏற்படுத்தல், விளக்கங்களுடன் தெளிவுடன் காட்டுதல். பல்வேறு இன மொழி மக்களுக்கு சென்றடையக் கூடியதாக காணப்படுகிறது. அழிந்து வரும், மாற்றமுற்றுவரும் கலைகளை காப்பாற்றி புத்துயிராக்க முடியும். நிகழ்கால கலைஞர்களையும் பார்வையாளர்களையும் இணைக்கக் கூடியதாக இது உள்ளது.

ஆட்டங்களான கரகாட்டம் (சக்தி கரகம், ஆடுகரகம்), காவடி ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம் (நரிக்குறவர் ஆட்டம்), மரதடிப்பு ஆட்டம், புலியாட்டம், பொம்மலாட்டம், ஆலி நடனம், மந்தி நடனம், மயிலாட்டம், மரக்கால் ஆட்டம், பொய்க்கால் ஆட்டம், குதிரையாட்டம், தப்பாட்டம், போன்றவற்றை நவீன வெகுசன ஊடகங்கள் பல்வேறு புதிய வடிவமைப்புக்களை இணைத்து மாற்றங்களை உட்புகுத்தியுள்ளன.

மேளங்களானஞ்ஞ்.மேளம், உடுக்கடி, தவில், பம்பை, தப்பு, உறுமி போன்றனஞ்ஞ் இவை நையாண்டி மேள நிகழ்ச்சிகளாக காட்டப்படுகின்றன.

கூத்துக்களான... காமன்கூத்து, தோற்பாவை, நிழற்கூத்து, புத்மசாலியார் கூத்து, வடமோடி, தென்மோடி காத்தவராயன் கூத்துக்கள் ஆகியன தோட்டங்களில் கிராமங் களில் அழிந்தாலும் ஊடகங்களுடாக சினிமா ஊடாக ஒரு பகுதியாவது பார்வையிட முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாவில் நாட்டார் கலை

வெற்றிமாறனின் ஆடுகளம், கங்கை அமரனின் கரகாட்டக்காரன், எங்க ஊரு பாட்டுக் காரன், சுரேஸ் கிருஷ்ணாவின் சங்கமம், ராமநாராயணனின் பாளையத்து அம்மன், பாரதி கண்ணனின் ஸ்ரீ பண்ணாரி அம்மன், கண்ணாத்தாள் ஆகியன சில உதாரணங்களாகும்.

உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்களால், இணையத் தளங்களால் நாட்டுப்புற கதைகளுக்கான ஆர்வம் கூடியுள்ளது. தற்போது தகவல், தேடல், செய்தி ஆய்வு என ஆர்வம் காட்டப்படுகிறது. ஆனாலும் தடைச் சட்டங்களால் ஏற்பட்ட தடைகள் சேவல் சண்டை – சூதாட்டம், பலி கொடுத்தல் மிருகவதைச் சட்டம், காளையடக்குதல் தடைச்சட்டம், கள்ளுக்குடித்தல் தடைச்சட்டம் (தமிழ்நாடு) சில நாட்டுப்புற நிகழ்வுகளுக்கு தடை ஏற்பட்டுள்ளது.

நாட்டுப்புறவியல் கலைகள், எமது பாரம்பரியம், வாழ்வியல் பண்பாட்டு கூறுகள், நவீன ஊடகங்களினால் நவீன மயப்படுத்தலினால், இயல்பான நிகழ்வினது தன்மையை வெளிக்கொண்டுவராமல் மாற்றியமைப்பதினால் இம் மாற்றம் அழிவிற்கே வழி வகுக்கும். நவீன ஊடகங்களின் தாக்கம் நாட்டுப்புற இயற்கை அமைப்பிற்கு மாறகவே உள்ளன. நாட்டுப்ற கலைகளின் அதன் உண்மைத்தனைமையோடு காப்பது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

பிரித்தானியருக்கும் சிங்கள பிரதானிகளுக்கும் இடையிலான கண்டி ஒப்பந்தத்தில் தமிழ் கையெழுத்துக்கள் - ஆவணப்படுத்தல்

பிரித்தானியர் கண்டி இராச்சியத்தினைக் கைப்பற்றிய போது, கண்டி இராச்சிய சிங்கள பிரதானிகளுக்கும், ஆங்கிலேயருக்குமிடையில் 1815ஆம் ஆண்டு ஒப்பந்த மொன்று கைச்சாத்திடப் பெற்றது. அவ்வொப்பந்தம் "கண்டி ஒப்பந்தம்" என அழைக்கப் பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் சிங்கள பிரதானிகள் சிலர் தமிழில் கையொப்பமிட்டுள்ளனர்.

1815ம் ஆண்டு கமுகம் தாழில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் எழுதப்பட்ட பிரித்தானிய ஆளுனரும், சிங்கள பிரதானிகளும் கையொப்பமிட்ட கண்டி ஒப்பந்தத்தில், சிங்கள பிரதானிகளின் தமிழ் கையொப்பங்களை ஆவணப்படுத்துதலும், சிங்கள பிரதானிகள் ஆங்கிலேயருடனான ஒப்பந்தத்தின் பின்னணியினை ஆராய்தலும் ஆவணப்படுத்தலும் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

சிங்கள பிரதானிகள் தமிழில் கையொப்பமிடப்பட்டனர் என பலராலும் பேசப்பட்டு வந்தாலும் சிங்கள பிரதானிகளின் இத் தமிழ் கையொப்பத்தினை இதுவரை இந்த நோக்கில் ஆவணப்படுத்தப்படவில்லை. சிங்கள பிரதானிகள் மற்றும் பிரித்தானிய ஆளுனர் செய்து கொண்ட கண்டி ஒப்பந்தத்தில் தமிழ் கையொப்பமிடலுக்கான பின்னணி பற்றியும் ஆராயப்படவில்லை.

வரலாறு தொடர்பான ஆய்வு நூல்களின் ஆதாரங்களுடன் இத்துறை சார்ந்த இரண்டாம் நிலைச் சான்றுகளுடனும் நேரடி அவதானிப்புகளுடனும், ஆவணச் சான்று களுடனும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதில் செல்வாக்கு செலுத்திய பின்னணி

1. கீழைத்தேச வர்த்தகத்தினை தனதாக்கிக் கொள்ளல்.
2. இந்து சமுத்திர ஆதிக்கத்தினை தனதாக்கிக் கொள்ளல்.
3. திருகோணமலைத் துறைமுகம் மீது கவனம் செலுத்தல்.
4. இலங்கையின் கேந்திர நிலைய முக்கியத்துவம்.
5. இந்து சமுத்திர கடற்பாதையில் இலங்கை அமைந்திருந்தமை
6. பருவகாற்றுக் காலத்தில் கப்பல்களுக்கான பாதுகாப்பு
7. பிரித்தானிய இந்திய ஆட்சியை இலங்கையிலும் நிலைநிறுத்தி கொள்ளல்
8. இலங்கையில் வாசனைத் திரவியங்கள் கிடைத்தமை. கறுவா, மிளகு, ஏலம், கராம்பு, முத்து, மாணிக்கம், யானைத்தந்தம் போன்ற வர்த்தகப் பொருட்கள் கிடைத்தமை.

பிரித்தானியர் 1796ல் கரையோர பிதேசங்களை கைப்பற்றி 1815ல் நாடு முழுவதையும் கைப்பற்றினர். 1795இல் திருகோணமலையை கைப்பற்றியவர்கள் படிப்படியாக . அதன் பின் யாழ்ப்பாணம் கற்பிட்டி, காலி, கொழும்பு கரையோரங்களைக் கைப்பற்றினர். இதனை ஆங்கில கிழக்கிந்திய கம்பனி (1796 798) நிர்வகித்து இதனை சென்னை ஆட்சிமுறை எனவும் கூறினர். இதன் பின் இரட்டை ஆட்சி (1798 1802), முடிக்குறிய ஆட்சி (1802) என நிர்வாகம் மாறியது, சென்னையிலிருந்து கூட்டிவரப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டுபாசிகள்'' (இரு மொழி பேசுவோர்) மூலம் வரி அறவிட்டனர். பொருட்களல்லாது பணம் அறவிடப்பட்டமை, வரி அறவிடும் உரிமை ஏல விற்பனையில் விடப்பட்டமை. இவை சென்னை உத்தியோகஸ்தர்களால் கொள்வனவு செய்யப்பட்டமை, மொழி, பழக்கவழக்கங்கள் போன்றவையும் சுதேசிகளிடத்து சிக்கலை ஏற்படுத்தின. தமது உரிமையை இழந்த சுதேச உத்தியோகஸ்தர்கள் பிரித்தானியாவை எதிர்த்தனர். இக்காலத்தில் தென்னைவரி, மீன்வரி, உப்புவரி, கள்வரி, சாராய வரி, புகையிலைவரி போன்ற புதிய வரிகள் விதிக்கப்பட்டன. இதே நேரம் போக்குவரத்து சிக்கல்கள் சிங்கள மக்களின் மறைந்திருந்து தாக்கும் போர் முறை போன்றனவும் கிளர்ச்சியை ஏற்படுத்தக் காரணமானது. இதன் தாக்கம் காரணமாக 1797–1798 களில் இக்கிளர்ச்சிகள் ஆரம்பித்து நடைபெற்று வந்தது. கிளர்ச்சியை அடக்க மூவர்குழு நியமிக்கப்பட்டது. டி.மியூரன் தலைமையில் ஒரு குழு அமைந்தது. இதன் மூலம் வரி, ஏலவிற்பனை முறை ஆரம்பிக்கப்பட்டது. புதிய வரிகள் நீக்கப்பட்டன. சென்னை உத்தியோகஸ்தர்களுக்கு பதிலாக உள்நாட்டு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். பணத்திற்கு பதிலாக வரி பொருட்கள் மூலம் செலுத்தும் முறை மிளரிமுகமானது. இதன் பின் பிரித்தானிய அரசாங்கமும் கிழக்கிந்திய வர்த்தக கம்பனியும் கரையோரப் பிரதேசத்தினை கூட்டாக நிர்வகித்து பிரித்தானிய அரசாங்கங்கள் குடியியல் பாதுகாப்பு நடவடிக்கைகளையும், ஆங்கில கிழக்கிந்திய கம்பனி வருமானம் ஈட்டலையும் கவனித்தது.

1798 பிரட்ரிக்நோர்த் ஆளுனராக நியமிக்கப்பட்டார். இதன் பின் (1802 – 1815) கரையோரப் பிரதேசம் முடியாட்சிக்கு உட்பட்டது. 1803 ஆளுனர் பிரட்ரிக்நோர்த் மற்றும் 1815ல் ஆளுனர் ரொபட் பிரவுன்றிக்கினால் கண்டி இராச்சியம் ஆக்கிரமிக்கப்பட்டது. (1796 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தினைக் கைப்பற்றிய பிரித்தானியர்) அதன் பின்னர் கண்டி இராச்சியத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முயற்சித்தனர். இதற்காக கண்டியைக் கைப்பற்ற பல தடவை முயற்சித்தனர். 1803ல் ஆளுனர் பிரிட்டிக் நோத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு 1815ல் ஆளுனர் ரொபட் பிரவுண்றிக்கினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு முக்கியமானது.

கண்டி இராச்சியத்தைப் பற்றி அறிய பல்வேறு தூதுக்களை அனுப்பினர். 1742இல் சென்னை பிரதிநிதியாக ஜோன்பைபஸ் கண்டி மன்னர் இராஜசிங்கனை சந்தித்தல், 1782ல் ஹியூ பொய்ட் இராஜாதி இராஜசிங்கனை சந்தித்தல், 1795ல் ரொபட் அண்ட்றூஸ் இராஜாதி இராஜசிங்கனை சந்தித்தல் ஆகியன முக்கிய சந்திப்புகளாக அமைந்தன.

1800ல் மெக்டோவல் என்ற தளபதியினால் கண்டிக்கு படையெடுக்கப்பட்டது. கண்டி இராச்சியத்தை கைப்பற்ற உடனடி முக்கிய காரணமாக அமைந்தவை. கொழும்புக்கும் திருகோணமலை துறைமுகத்திற்கும் இடையில் கண்டி இராச்சியம் ஊடாக வீதி அமைக்க விரும்பியமை, கரையோர மக்களும் தமது மன்னராக கண்டி மன்னரை கருதியமை, கரையோரங்களின் பிரித்தானியருக்கு எதிராக கண்டி மன்னர் ஆதரவளித்தமை, கரையோர மக்கள் கண்டி மன்னரது உதவியை நாடலாம் என்ற பயம் மற்றும் பிரான்சியரின் படை உதவியை நாடலாம் என்ற பயம் ஆகியன அமைந்தன.

இதுபோல் மலையக முஸ்லீம்களின் பங்கு வியாபாரத்திற்கு எதிராக இடைஞ்சலை விளைவித்தமை, பிலிமதலாவ தான் அரசனாக விரும்பி ஆங்கிலேயருடன் சேர்ந்து செயற்பட்டமை ஆகியனவும் காரணங்களாயின. தளபதி மெக்டோவல் தலைமையில் கொழும்பிலிருந்தும் தளபதி பாபட் தலைமையில் திருகோணமலையிலிருந்தும் படைகள் கண்டிக்கு வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனும் (இயற்பெயர் கண்ணுச்சாமி) நகர மக்களும் கண்டியை விட்டு ஹங்குராங்கெத்த சென்றனர். ஆங்கிலேயர் மன்னரது சகோதரனான முத்துசாமியை கண்டி மன்னன் ஆக்கினர். ஆனால் பருவமழை மலேரியா, கொரில்லா தாக்குதல், விக்கரமசிங்கனின் கட்டளைப்படி முத்துசாமி கொலை செய்யப்படல் ஆகியவற்றால் ஆங்கிலேயர் தோல்வி கண்டனர். 1805ல் தோமஸ் மெய்ட்லண்டு ஆளுனர் கண்டி இராச்சியமான மலையகத்துடன் ஒற்றுமை கொள்ள கோன் டெ யியை நியமித்தார். 1812ல் ரொபட் பிரௌன்றிக் மலையக இராச்சிய அரசுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டான். இதன் பின்னர் மலையகத்தினை ஆக்கிரமித்து தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.

பிலிமதலாவ என்ற சிங்கள பிரதானி கண்ணுச்சாமியை ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் என்ற பெயருடன் அரசனாக்கி தான் நினைத்தபடி ஆட்சி நடாத்த நினைத்தமையும் அதன் பின் மன்னருடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டமையும், மன்னரை கொலை செய்ய சதி செய்த சம்பவத்தின் காரணமாக மன்னர் பிலிமதலாவுக்கும் மற்றும் உதவியாளர்களுக்கும் மரண தண்டனை விதித்தமை, பிலிமதலாவக்கு பிறகு சிங்கள பிரதானி ஹெலபொலவை பிரதம அமைச்சு பதவிக்கும் நியமித்தமை இரண்டாவது சிங்கள பிரதானி பதவிக்கு மொல்லிகொட நியமிக்கப்பட்டமை, பிரித்தானியருக்கு ஆதரவானவர்களுக்கு மரண தண்டணை விதித்தமை, மால்பிட்டிய புஸெல்லாவே திஸாவை, பரணதல தேரர் ஆகிய சிங்கள முக்கியஸ்தர்களுக்கு மரண தண்டனை விதித்தமை போன்றனவும் பகைமைக்கும், யுத்தத்திற்கும் காட்டிக்கொடுப்புக்கும் காரணமாயின.

எஹலபொல என்ற சிங்கள பிரதானி மன்னரின் செயற்பாடுகளுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டான். இவன் பிரித்தானியரிடம் போய் சேர்ந்தான். கோபமுற்ற மன்னர் பிள்ளைகளைக் கொன்று, மனைவி உட்பட உறவினரை போகம்பரை வாவியில் மூழ்கடித்தார். இதனால் தமிழ் மன்னன் சிங்களவர்களின் எதிர்ப்பினை சம்பாதித்தான். வர்த்தகத்திற்கு வந்தவர்களை ஒற்றர் என நினைத்து கை, காது, மூக்கு என்பவற்றை துண்டித்தான். இதனால் ஏற்பட்ட பகையை சந்தர்பமாக பயன்படுத்தி 1815ல் ஆளுனர் பிரொன்றிக் யுத்த பிரகடனம் செய்தார். மன்னனின் பிரதம பிரதானியான சிங்கள பிரதானி மொல்லிகொட பிரதானியர் பக்கம் சார்ந்தான். இதனால் பிரதானியர் வெற்றி கொண்டனர். மன்னரை சிங்கள பிரதானிகளான எஹலபொல, எக்னெரிகொட ஆகியோரின் உதவியுடன் கைது செய்தானர். கொழும்பு அழைத்து சென்று கொள்வோயிஸ் என்ற கப்பலில் இந்திய வேலூர் சிறைக்கு நாடு கடத்தினர்.

கண்டி உடன் படிக்கைகண்டி யுத்தத்தின் பின் 1815ல் மார்ச் மாதம் 2ம் திகதி கண்டி அரச மண்டபத்தில் பிரித்தானியர் ஆளுனரான ரொபட் பிறேயின்றிக்கிற்கும் மலையக சிங்கள பிரித்தானியருக்கும் இடையில் இடம்பெற்ற ஒப்பந்தத்தால் கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமானது. சிங்கள பிரதானியான பிரதம பிரதானி எஹலபொல, கலபொட திஸாவ மற்றும் ஒன்பது சிங்கள முக்கிய பிரதானிகள் கையொப்பமிட்டு இலங்கை நாடு ஆங்கிலேயர் வசமானது.

1815ல் சிங்கள பிரதானிகளாக கையொப்பமிட்ட மலையக தலைவர்கள்

1. மொல்லிகொட
2. பிலிமதலவ்வே
3. ரத்வத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மொணரவில் கெப்பட்டிபொல
5. மில்லேவ
6. கலகம
7. எஹலபொல
8. கலகொட

இந்த கையொப்பம் மூலம்,

1. மலபாரைச் சேர்ந்த நாயக்க வம்சத்தினருக்கு மலையகச் சிம்மாசன உரிமை அகற்றப்பட்டு 111ம் ஜோர்ஜ் மன்னருக்கு வழங்கப்பட்டது.
2. உள்நாட்டு அதிகாரிகளின் பதவிகள், உரிமைகள், சலுகைகள், அதிகாரங்கள் பாதுகாக்கப்படும். பழைய சம்பிரதாயங்கள் படியே மலையகம் ஆளப்படும் எனவும்
3. வணக்கஸ்தலங்கள், பௌத்தமதம், புனித இடங்கள் பௌத்த குருமார்கள் பாதுகாக்கப்படும் எனவும்
4. ஆளுநரினால் விதிக்கப்பட்டாலன்றி மரண தண்டனை விதிக்கப்படமாட்டாது எனவும்
5. பொதுமக்களின் குடியியல் குற்றவியல் வழக்கு சுதேச உத்தியோகஸ்தரினால் சம்பிரதாய முறைபடி விசாரிக்கப்படும் என்ற அம்சங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சாரம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கள பிரதானிகளில் மூவர் கண்டி ஒப்பந்தத்தில் தமிழில் கையொப்பமிட்டுள்ளனர். அக்காலத்து தமிழ்ச்சூழல், இராஜசிங்கன் மன்னர் காலத்தில் அரசவையில் தமிழும் ஆட்சி மொழியாக இருந்திருக்கலாம் எனக் கருதக்கூடிய நிலை, சிங்கள பிரதானிகள் தமது சொந்த கையெழுத்திற்கு பதிலாக ஏமாற்றுவதற்காக தமிழில் கையொப்பமிட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு. இலங்கையின் இனவாத சூழல், யுத்த நிலை காரணமாக இந்த சிங்கள பிரதானிகளின் தமிழ் கையொப்பம் இதுவரை கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டு வந்தாலும் ஆவணப்படுத்தப்படவில்லை. இதனை இக்கட்டுரை மூலம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதோடு தமிழில் கையெழுத்திட்டத்திற்கான காரணங்களை வரலாற்றாசிரியர் ஆராயும் போது இது பற்றிய தேடல் மேலும் விரிவு பெறலாம். அவ்வாறான ஆய்வுக்கு முன்னாய்வாக இவ் ஆய்வு அமையலாம்.

உசாத்துனை நூல்கள்

1. கண்டி மாவட்ட தமிழில் வரலாற்று பதிவுகள் (2002) (கட்டுரை தொகுப்பு) கண்டி, மலையக வெளியீட்டகம்.
2. நல்லையா க. (2005). கண்டிராசன் கதை, கொட்டகலை, சாரல் வெளியீட்டகம்.
3. Aluvihare B.H. (1941) The Kandyan Convention and After, Colombo, Virakesari Press
4. Dewaraja. L. S. (1972) The Kandyan Kingdom of Sri Lanka. 1707 - 1782, Colombo. Lake Houe Publishers.
5. Iriyagolle, Gamini, (2000) The Kandyan Convention A Conditional Treaty of Cession Between The Sinhalese and the British,Colombo, Sinhala Veera Vidahana.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

மலையகப் பெண்கவிஞர்களும் - பாடுபொருளும் - ஆவணப்படுத்தலுக்கான ஓர் முன்னாய்வு

உலகில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றில், இலங்கைக்கு புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்கள் முக்கிய இடம் பெறுகிறார்கள். இலங்கைக்கு புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்கள் இரு பிரிவினராக நோக்கப்படுகிறார்கள். இந்தியாவிலிருந்து, இலங்கை ஆகிய நாடுகளின் காலனித்துவ காலத்துக்கு முன்னர் புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்கள் அடுத்து, காலனித்துவ காலத்தில் புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்கள் வகைப்படுத்தி ஆராயலாம். ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இந்தியத் தமிழர்கள் இலங்கைக்கு பல்வேறு தொழிலுக்காகக் கூட்டி வரப்பட்டனர் அல்லது புலம்பெயர்ந்தனர். பாதையமைக்க, பாலங்களமைக்க, குளங்களமைக்க, புகையிரத பாதைகளமைக்க மற்றும் பெருந்தோட்டத்துறையின் தேவைகளுக்கு இவர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

இக்காலத்தில் இந்தியாவில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், வறுமை, பட்டினி, என்பன முதல் காரணம். அடுத்து நிலவுடைமையில் ஏற்பட்ட மாற்றங்கள் அடிமை வாழ்க்கை, வாடகை, ரயத்து வாறிமுறை என்று கூறப்படும் ஒரு கிராமத்தினை அல்லது நிலப்பரப்பினை அரசாங்கத்திற்கு நிலவரி செலுத்தி பெற்றுக்கொண்ட மிராசுதாரின் ஆதிக்கத்திலிருந்த நிலத்திற்கான அடிமைகள் முறை, சாதிக்கொடுமை, 1677ல் கொண்டுவரப்பட்ட இந்தியபருத்திக்கான சுங்கவரி, 1696ல் கொண்டு வரப்பட்ட பட்டுக்கான சுங்கவரி, வரட்சியால் விவசாயத்தில் ஏற்பட்ட தேக்கம், பணமின்மை, நிலவரி, கடன் பத்திரத்தால் காணி இழந்தன. ஆகிய பொருளாதார காரணங்களால் அடிமைகளாக நீண்ட காலங்களாக நடத்தப்பட்டமையும், கங்காணிகளின் தூண்டுதல்கள் போன்ற காரணிகளும் மக்கள் புலம்பெயர்வதற்கு காரணமாயின. மறுபுறம் இலங்கையில் மலையகத்தில் தேங்காயும் மாசியும் நிறைந்திருப்பதாகவும் சுபீட்சமான வாழ்வு பற்றியும் ஆங்கிலேயர் அடிவருடிகளான தமிழர்கள் மூலமே பிரசாரம் செய்து ஏமாற்றி ஒப்பந்தமுறையிலும், சிலர் கங்காணிகளினாலும், சிலர் துண்டுமுறை மூலமும் கூலிகளாக இலங்கைக்கு கூட்டிவரப்பட்டனர். 18021812, 1865 1888 காலப்பகுதியில் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சம் இவபிகளை பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து செல்லும் சூழலை ஏற்படுத்தியது. இலங்கை ஆளுநர் பிடரிக் நோத் காலத்தில் (1798-1802) 30,000 பவுண் செலவில் இந்தியத் தொழிலாளர்களை இலங்கைக்கு கூட்டிவர தொடங்கியுள்ளனர். இவர்களே “பயினியர் ரோட் கோப்ஸ்” என அழைக்கப்பட்டனர். 1818 இல் இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதற்காக 5000 தென்னிந்திய வீரர்கள் கொண்டுவரப்பட்டனர், அவர்களே இங்கு பாலங்கள், ரயில் பாதைகள் ஆகியன அமைத்தனர். முக்கியமாக இலங்கையில் கம்பளை, பேராதனை, களுத்துறை, கட்டுகஸ்தோட்டை பாலங்களை இவர்களே கட்டினார்கள்.

ஈழத்து கவிதைகள், ஈழத்து மலையகக் கவிதைகள் என்பன பல்வேறு தளங்களில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வெளிகொண்டு வரப்பட்டபோதும் ஈழத்து பெண் கவிஞர்கள் அதிலும் மலையகப் பெண் கவிஞர்கள் பற்றி முழுமையான ஆய்வுகள் இதுவரை இல்லாமை பெறும் குறைபாடாகும். ஈழத்து கவிதை வரலாற்றினை நோக்கும் போது வடக்கு கிழக்கு பிதேசங்களின் கவிஞர்களை மனதில் கொண்டே கவிதை ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகள் பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. இத்தகைய நிலைமைக்கு ஈழத்தில் பிரதேச ரீதியான வேறுபாடும், அசமந்த நிலையும் வாழ்வியல் அனுபவ முரண்பாடுகளும், காரணமாக அமைந்துள்ளன. இதில் பெண் கவிஞர்களின் எண்ணிக்கை குறைவா, கவிதை நூல்களாக தரம்குறைவானது, வாழ்க்கை போராட்டம், ஏழ்மை காரணமாக இவை தொகுதியளாக வெளியிடப்படாமையா? இவை ஆய்வுகளிலிருந்து விடுபட்ட தற்கு காரணம் என அறியமுடியவில்லை. குறிப்பாக மலையகக் கவிஞர்களைப் பற்றிக் குறிப்பிட்ட பேராசிரியர் க. அருணாசலத்தின் "மலையகத் தமிழ் இலக்கியம்" பெண் கவிஞர்கள் பற்றி ஆராயமல் விட்டமை வருத்தத்துக் குரியது. சிலோன் விஜேயேந்திரா வின் (1994) இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களும், கவிதைகளும் என்று நூலிலும் மலையகப் பெண் கவிஞர்கள் இடம்பெறவில்லை. 20ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் என்ற பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தனின் தொகுப்பிலும் (2006) மலையக பெண் கவிஞர்கள் எவரும் இடம்பெறவில்லை.

ஈழத்தமிழ்க் கவிதை களஞ்சியத்தில் பெண் கவிஞர்களில் மலையகப்பெண் கவிதைகள் இடம்பெறவில்லை. குறிஞ்சிப் பூ மலையகக் கவிதைத் தொகுதி (1965) தொகுப்பாசிரியர் ஈழக்குமார், கண்டி கவிதா நிலையம் வெளிட்ட, குன்றத்துக் குமுறல் மலையகக் கவிதைத் தொகுதி (1993) ஆகியவற்றிலும் பெண்கவிஞர் இடம் பெறவில்லை.மலையகம் வளர்த்த கவிதை (2002) என்ற நூலிலும் மீனாட்சி அம்மாள் தவிர பெண் கவிஞர்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை.

தமிழ் இனி (2010) இருபதாம் நூற்றாண்டு உலகத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் மலையக கவிதைகளோ மலையக பெண் கவிஞர்களோ குறிப்பிடப்படவில்லை. எனவே ஆய்வு நூல்களில் மலையக பெண் கவிஞர்களை பற்றி ஆய்வுகள் இடம்பெறாமையால் இவ் ஆய்வில் ஆய்வுப் பிரச்சினையாக கொண்டு அவை இவ் இவ்வாய்வில் தேடிப் பதியப்பட்டுள்ளன.

இலங்கை மலையகப் பெண் கவிஞர்களையும் கவிதைகளையும், வெளிகாட்டுவதும், ஆவணப்படுத்தி பதிவு செய்வதுமே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

மலையக கவிஞர்கள் பற்றிய ஆய்வு எழுபதுகளில் முகிழ்ந்த போதும் மலையக பெண் கவிஞர்கள் ஆய்வுகளில் இடம்பெறாமை கவலைக்குரிய விடயமாகும். இலங்கையில் மலையகத் தமிழர் எனப்படுவோர் மூன்று பிரிவுகளில் வெவ்வேறு தளங்களினூடாக நோக்கப்பட வேண்டும்.

1. இந்த மலையகத் தமிழர் என்போர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்திய வம்சாவளி தமிழர்களாக மலைப்பாங்கான இடங்களில் குடியேற்றப்பட்டதால் மலையகத் தமிழர் எனவும், ஒரு காலத்தில் "இந்திய கூலிகள்" எனவும், பெருந் தோட்டங்களில் வாழ்ந்ததால் "தோட்டக்காட்டான்" எனவும், பலர் கள்ளத்தோணிகளில் வந்ததால் பலர் "கள்ளத்தோணி" எனவும் இலங்கையின் வடபகுதியான இந்தியாவிலிருந்து வந்ததால் "வடக்கத்தயன்" எனவும் அழைக்கப்பட்டனர்.
2. இவர்களோடு புவியியல் ரீதியாக மலைநாட்டினை கொண்டுள்ள மலைபாங்கான மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியில் நிரந்தரமாக குடியிருக்கும் ஏனைய தமிழர்கள் இரண்டாம் பிரிவாகவும்,
3. மேல் கூறப்பட்ட இந்திய வம்சாவளி ரீதியாகவும், மலைப்பாங்கான மாவட்டங் களிலும் குடியிருக்கும் முஸ்லீம் தமிழரும், மலையகத் தமிழர்கள் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரையறைக்குள் இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்கள் தனியான இனமாக கொள்ளப்பட்டபோதும் தமிழ் மொழியை பொறுத்தவரை இவர்களையும் சேர்த்தே ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

மலையகப் பெண் கவிஞர் வரலாற்றில் முதன்மையானவராக குறிப்பிடப்படுபவர் மீனாட்சி அம்மையார் ஆவார். தஞ்சையைச் சேர்ந்த கோ.நடேசய்யர் மலையகத் தொழிலாளர்களுக்காக 1920–1947 வரை பாடுபட்டவர். பத்திரிகை நடத்தியவர். அவருக்கு துணையாக நின்றவர் துணைவியார் மீனாட்சி அம்மையார். நடேசய்யர் மக்களை விழிப்புணரச் செய்து சட்டமன்றம் சென்றவர். தேசநேசன், தேசபக்தன் தொழிலாளி, தோட்டத் தொழிலாளி, வீரன், சுதந்திரன் போன்ற பத்திரிகைகளை நடத்தியவர். இவற்றுடன் இணைந்து மீனாட்சி அம்மையார் அறியாமை, தாழ்வுற்றுள்ளமை, வறுமை தொழிலாளர்களின் இன்னல்கள், விடுதலை, அடிமைநிலை, சுரண்டல், ஏக்கம், தாய்மை நிலை, பிள்ளை பருவம், பெண்களின் கற்பு சூறையாடியமை, தெய்வப்பாடல்கள், (அம்மன் பாடல்கள்) காமம், கட்டாயக் காமம், கொடுமை, ஆணாதிக்கவாதம், சாதிக்கொடுமை, மதுவின் தீமை, தேசியம், தொழிலாளர் வாழ்க்கை, சூழல் தாக்கம் போன்ற பொருள்களில் கவிதைகளை இயற்றியுள்ளார்.

சிவபாக்கியம் குமாரவேல் கண்டி கொட்டகங்க, பூரணி, நயீமா ஏ.பஷீர், திலகா பழனிவேல், புசல்லாவ இஸ்மாலிகா, சரஸ்வதி, அக்னஸ் சவரிமுத்து, மகேஸ்வரி, பிரமிளா, நாகபூசணி, கருப்பையா, மாத்தளை பாலரஞ்சினி, பதுளை பிரியா, ஸ்ரீ தேவிப்பிரியா, இராஜலட்சுமி குமாரவேல், எஸ். விஜயா, சரண்யா, கலைமகள், செல்வி அரபா உம்மா (இஸ்லாமியச் செல்வி) நளினி, நிமலா, தெ.மீனாம்பிகை, மாவனெல்ல ஜனனி, யோகேஸ்வாரி கிருஷ்ணசாமி, கெங்கல்ல எஸ்.அமராவதி, மணிமேகாதேவி செல்லதுரை, புவனேஸ்வரி பன்னீர் செல்வம், சிவமலர், சின்னசாமி சுபத்திரா தேவி, ஆ.புனிதகலா, தலவாக்கலை சி.சி.சாரதாம்மா, கொட்டகலை விஜயபாரதி, அட்டன்" பாலரஞ்சனி, பண்டாரவளை சாந்தி மோகன், ரூபராணி ஜோசப், விஜிதா, கெலாபொக்க அருள்ஜோதி சேவகன், புசல்லாவ, செல்வி சி.தலபதி, எவல்கொல த.வி, நாவலப்பிட்டிய ம.பரிமளா, பிரண்டா இரா.பரிமளா, பதுளை பூனாகலை நித்தய ஜோதி, பொகவந்தலாவ ஈஸ்வரி, கல்பீல அன்னபூரணி கதிர்வேல், கலைநிலா சாதிகீன், ஸ்ரீ தேவிப்பிரியா மற்றும் மலையக முஸ்லிம் பெண் கவிஞர்களான செல்வி ரஸ்னா, மரினா இல்யாஸ், றசீனா கம்பளை, பஸ்மினா, லறீனா ஹக், மஸீதா புண்ணியாமீன், ரிஹானா ரஹீட், மரீனா இல்யாஸ், பேராதனை சர்புனிஸா ஹசன், அக்குரணை என்.எம்.ரினோஷா, சுமைரா அன்வர், றிஹாஸா றியாஸ், ஆகியோரது கவிதைகள் தனி தொகுப்புகளாகவும், கவிதை தொகுப்புகளில் உதிரிகளாகவும், வேறு சஞ்சிகைகளிலும் தமது கவிதைகளை பதிவாக்கியுள்ளனர். இதில் உடபோவல – அரபா உம்மா இஸ்லாமிய செல்வி, யூ.எல்.செல்வி, அரபா உதுமான், அரபா மன்சூர் ஆகிய பெயர்களில் எழுதியுள்ளார். கண்டி சுதுகும்பொல ஸாஹிரா நாஸிர், சித்தி ஸாஹிரா, ஹசன் பரீட் ஆகிய பெயர்களில் எழுதி வருகிறார். சிவபாக்கியம் குமாரவேல், கல்பீல பூரணி ஆகியோர் மலை முரசுவில் பல கவிதைகளை எழுதியுள்ளனர்

கவிதை வரலாற்றினை நோக்கின் மலையகத்தில் பிரதேச வாரியாக தோன்றிய இலக்கிய வட்டங்கள், மாத்தளை இலக்கிய வட்டம், கண்டி இலக்கிய வட்டம் போன்றன பெண் கவிஞர்களை வளர்த்துவிட்டதில் முக்கிய பங்கினை வழங்கியுள்ளன. தேசிய பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, தினக்குரல், போன்ற பத்திரிகைகளில் தோட்ட வட்டாரம், தோட்ட மஞ்சரி, குறிஞ்சிச்குரல், குறிஞ்சிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரல்கள், குன்றின் குறல், மலையகம், மலையகப்பகுதி, மலையக மக்கள் மன்றம், மலைநாடு, எங்கள் மலைநாடு போன்ற பகுதிகளில் அவ்வப்போது பெண்களின் கவிதைகள் வெளிவரத் தொடங்கின.

பாரதி, மலை முரசு, செய்தி, கலைக்குயில், மலைக்குருவி, ஆக்கம், விடிவு, ப்ரியா நிலா, கலைமகள், தோழன், மலைமுரசு, குன்றிக்குறல், தீர்த்தக்கரை (மாதர்பகுதி) கொழுந்து, நந்தலாலா, மல்லிகை, ஆசிரியர் கலாசாலை மலர்கள், யதன்னசட் (மலையருவி) கல்வியியல் கல்லூரி மலர்கள், (லயம்) பல்கலைகழகத்தின் இளங்கதிர், இளம்தென்றல், போன்ற சஞ்சிகைகளில் மலையக பெண்களின் கவிதைகள் வெளிவரலாயின. இசை பிழியப்பட்ட வீணை (2007) கவிதைத் தொகுப்பில் மலையக கவிஞர்களின் படைப்புகள் வெளிவந்துள்ளன. இது சுவிஸ் ஊடறு வெளியீடாக வெளிவந்துள்ளது. இதில் கவிதா பாலரஞ்சனி ஜெயபால், சந்திரலகா கிங்ஸ்லி, மஞ்சுளா, மரியா என்டனீட்டா, எஸ்தர் லோகநாதன், இஸ்மாலிகா, புனிதகலா, இரா.தேவிகா, பொ.கீதாகொளரி, எஸ்.கலைச்செல்வி க.மீனாள் செல்வன், மலைமதி, காஞ்சனா, மணிமேகலா செல்லத்துரை, புனிதகலா, சு.பிரேமராணி, ஜி.ஷர்மிளா, ஜே.ன்னால் குளோரி, எம்.புனிதகுமாரி, எஸ்.சர்மிளா, சே.மேரிதெபோராள், ஜெ.ரெஜினா, எஸ்.விஜய பாரதி, ஆர்.பூங்கொடி, அ.பரமேஸ்வரி, பூங்கொடி இராமையா, சி.சாரதாம்பாள், சாந்தி மோகன், ம.மோகனா, ஜெ.வித்தியாதர்சினி, தி.சுபந்தினி, பெ.சசிகலா,வே. சசிகலா, ஆர்.சரஸ்வதி, தினமணி தங்கையா, விழி, சு.உஷாந்தினி, கு.விஜிதா, ரா.ஸ்ரீபிரியா, யோகஸ்வரி கிருஷ்ணண், இரா. வனிதா, ரா.கெத்தரீன், க.நளாயினி, ஆர்த்தி, பி.ஜேசுராணி ஆகியோரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

கவிதைத் தொகுப்புக்களாக....

1. மீனாட்சி அம்மையாரின் (1947)''இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை''.
2. சிவபாக்கியம் குமாரவேல் (1948) இந்திய மாதர் ஐக்கியசங்கம், இந்திய தமிழ் நாட்டு சமரச சன்மார்க்க சங்கம் வெளியீடு
3. குறிஞ்சிக் கதம்பம், ஊவா மாகாணக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு (1996) தொகுப்பு. செ. பாலசுப்பிரமணியம், ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சு. வெளியீடு (30 கவிஞர்களின் 84 கவிதைகள்).
4. பாலங்கள் கவிதை தொகுதி (1996) தொகு. புண்ணியமீன் ஹத்தரலியத்த தெஹிதெனிய மரீனா இல்லாஸ் கவிதைகள் வெளியாகியுள்ளன.
5. எம். வை. கிமாலா பாத்திமா (2000) தென்றல்
6. கிமாலா யாஸீன் (2002) வசந்த அலைகள்
7. றஸீனா புஹார் (2003) மண்ணிழந்த வேர்கள் பதுளை
8. நாகபூஷணி கருப்பையாவின் (2003)''நெற்றிக் கண்''
9. எண்ணச் சிதறல்கள் (2003) சுமைரா அன்வர்
10. நட்சத்திரத் துகள்கள் (2005) கவிதைத் தொகுதி
11. ஸ்ரீ, லுனுகலை (ராதிகா பெருமாள்) (2007) மோட்ச முழக்கம் தினு பதிப்பகம் லுனுகலை
12. மஞ்சுளா கிருஷ்ணசாமி (2009) கடமையே கண்ணாக, மணிமேகலை பிரசுரம்
13. கண்ணாடி முகங்கள் பெண்கள் கவிதைகள், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் (2009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கவிதைகள் பேசட்டும் (2010) பெண்கள் கவிதைத்தொகுதி தொகு. சித்திரலேகா மௌனகுரு மட்டக்களப்பு சூரியா பெண்கள் நிலைய வெயியீடு
15. கலையழகி வரதராணி (2010) கல்லுக்கு உயிர் வந்தால், மணிமேகலை, பிரசுரம்.
16. நிஹாஸா,றியாஸ் கண்ணீர் வரைந்த கோடுகள் (2011) (கஹட்டோவிட்ட நிஹாஸா)
17. சாகித்யவிழா மலர்கள் மத்திய மாகாணம் (1990 2015)
18. பேராதனை பல்கலைகழகத்தில் கலை இலக்கிய கழகத்தின் நிலா சஞ்சிகையில் பல மலையக பெண் கவிஞர்களின் கவிதைகள் வெளியாகியுள்ளன.
19. குறிஞ்சிக் குயில்கள் [2008] மலையகப் பெண் கவிஞர்களின் கவிதைகள்
20. சந்திரா தேவியின் ''குவி முகை'' கவிதை தொகுப்பு. மாத்தளை.
21. ரிஷானா பாரூக் என் விழியில் தங்கிய நினைவுகள் (எட்டியாந்தோட்டை)
22. பாலரஞ்சனி மனசின் பிடிக்குள். மாத்தளை
23. மலையகப் பெண் கவிஞர்களின் கவிதைகள் ஊடறு (சுவிஸ் வெளியீடு) சிந்தனை வட்ட வெளியீடாக பெண்கள் கவிதை தொகுதிகளாக வெளிவந்தவை
24. புதிய மொட்டுக்கள் (1990) கவிதைத் தொகுதி
25. அரும்புகள்(1990) கவிதைத் தொகுதி
26. பாலங்கள் (1990) கவிதை தொகுதி ஆகியவற்றில் மலையக பெண்களின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.
27. இசை பிலியப்பட்ட வீணை (2007) கவிதைத் தொகுப்பு (மலையகக் கவிஞர் களின் படைப்புகள்) சுவிஸ், ஊடறு வெளியீடு
28. மஸீதா புண்ணியாமீன் ஹிதாயாவுடன் இணைந்து எழுதிய இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை

ஆகியன மலையக பெண் கவிஞர்களைக் கொண்ட கவிதைத் தொகுப்பு நூல்க ளாகும். இவற்றில் முக்கிய சில கவிதைகளை நோக்குவோமாயின்,

மீனாட்சி அம்மாள் பாடல்களில் "சுதந்திரம்" பாடுபொருளாக கொண்டு

சுதந்திரப் போராட்டப் பாடல்களைப் பாடியுள்ளார். இதில் இந்திய வம்சாவளியினர் இலங்கையில் தோட்டங்களை உருவாக்கியது பற்றிய கவிதைகளில்...

"நூறு வருஷங்கள் முன்னாலே யிலங்கையின்
நேர்த்திதான் னெப்படி யிருந்ததென்று
பாருங்கள் பங்களா தோட்டங்கள் தேட்டங்கள்
பண்பா யமைந்து விளங்குவதை" (மீனாட்சிப் பாடல்கள்)

இவை தொழிலாளர் உரிமை, கடந்த கால வரலாறு, அரசியல் போராட்டங்களை தூண்டும் பாடல்களாக சார்ந்து நிற்கின்றன. மற்றொரு கவிதையில்

"பாய்க்கப்பல் ஏறியே வந்தோம் அந்நாள்
பலபேர்கள் உயிரிடைவழி தந்தோம்.
தாய் நாடென்றெண்ணியிருந்தோம். இவர்கள்
தகாத செய்கையைக் கண்டு மனமிகு நொந்தோம்." என்கிறார்

இவரது மலையக தோட்ட தொழிலாளர்கள் பற்றிய கவிதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சட்டமிருக்குது ஏட்டிலே
நம்முள் சக்தியிருக்குது கூட்டிலே
பட்டமிருக்குது வஞ்சத்திலே
வெள்ளைப் பவர் உருகுது நெஞ்சத்திலே
வேலையிருக்குது நாட்டிலே
உங்கள் வினையிருக்குது வீட்டிலே...”

என்றும் மீனாட்சி அம்மாள் பாடிய'' தொழிலாளர் சட்டக்கும்மி'' கேட்டு மெய் மறக்காதவர் யாருமில்லை.

சங்கே முழங்கிடு என்ற தி.சரண்யாவின் கவிதையில் பாடுபொருளாக ''தமிழே வளர்க'' என்பதை காணமுடிகிறது. இதில் சில வரிகள்...

“தமிழ் எங்கள் உயிராகுமே - அந்த
உயிரும் மெய்யும் - கலந்து
உணர்வுடன் எழுந்திடாமலிருக்குமானால்
உலகம் இரண்டிருக்கும் என சங்கேமுழங்கு
சங்கே நீ
சங்கத்தமிழை வாழ்த்திப் போற்றி
சங்கம் வளர்த்த தரணி எங்கும் தமிழ் வாழ்க
என நீ சங்கே முழங்கிடு”

(மத்திய மாகாண சாகித்திய விழா 2005)

சூழல் தாக்கம் பற்றிய பாடுபொருளையும் இப்பெண்கள் பாடியுள்ளனர்.

“வாசலில் பதியன்கள்
நின்று வளர
மண் திணித்து
மச்சுத் தோட்டத்தில்
மண் தின்ன முடியாத
பாலிதீன் பைகள்”

(சூழலியல் தமிழ் - ப 90) என்றும்

நாகபூசணி கருப்பையாவின் கவிதைகளில் பாடுபொருளாக காதல், இயற்கை, துன்பம் ஆகியன காணப்படுகின்றன. அவரது கவிதையில்......

“படித்தவர்கள் ரெண்டு பேரும்
பரதேவி வாழ்வெதற்கு
அடிவயிற்றில் எழுந்த மூச்சை
அடக்கியே கூறிவிட்டு
தடியோடு ஒரு கூடை
தாங்கி மலை ஏறுகிறாள்
படியளக்க யாருமில்லை தன்
பாழ் விதியை நொந்தபடி”

எனவும்,

“முகில் தவழும் மலைகளிடை
முகம் மறைப்பாள் வெண்மதியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துகிலெனப் பச்சைப் பயிர்
தரையெல்லாம் விரித்திருக்கும்
அகலம் உயர உழைப்போர்
தனைக்கொண்ட மலைநாடு

அந்த மண்ணில் தான்
நின்று கொண்டு
வீழ்ந்து கிடப்பவர்களைப்
பார்த்துச் சிரிக்காதே"

என்றும் பாடியுள்ளார்.

மா.சந்திராதேவியின் கவிதைகளில் பாடுபொருளாக யதார்த்தம் துன்பம் காணப்படுகின்றது. அவரது 'அடையாள அட்டை' என்ற கவிதையில்

"கடையகம் தட்டும் போது
இதயம் புரள்கிறது
உதயத்துக்கு முன்
கருவறையில்
இருக்கும் போது
கர்ப்பிணிப் பதிவேட்டில்............
வெளியறையில் வரும் போது
பிறப்பின் பதிவேட்டில்............
தலைநிமிர்ந்து வாழும் போது
தப்பித்து வாழும் தமிழருக்கு
தனித்துவமான அட்டை ...."

என்று குறிப்பிடுகிறார்.

லறினா ஏ ஹக் தனது "வீசுக புயலே" என்ற கவிதையில் பாடுபொருளாக விடுதலை பற்றிப் பாடியுள்ளார். விடுதலை பற்றிப் பல கவிதைகள் எழுந்த யுத்தகாலத்தில் மலையகத்தில்லிருந்து இக்குரல் எழுப்பப்பட்டள்ளது.

"என்னுள் உறையும்
சீற்றமே எழுக !
என் மண் மீதான
காதலே பெருக !

காற்றும் சீற்றமும்
கலந்தே வெறியரை
துவம்சம் செய்திடும்
புயலென மாறுக !

இனியென் மண்ணில்
வீசுக புயலே !
விடுதலை பிறந்திட
வீசுக புயலே !"

(என் தேசத்தில் நான் – பேராதனை பல்கலைக்கழக மாணவரின் கவிதைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் கவிஞர் அநேகர் பெண் வேலைப்பளு, இல்லறச் சுமை, உணவு தயாரித்தல், தாம்பத்தியத் தொல்லை, வயது வந்த பிள்ளைகளின் இரவு, பகல், காதல், கெடுபிடி, தூஷணம், கணவனை விட்டுப் பிரியா மதுப்பாவனை பற்றியும், எதிர்பார்ப்பு, எச்சரிக்கை, ஏமாற்றம், கவலை, காமுகர்கள். தொல்லை, சீதனம், சோகம், பிரசவம் பற்றியும் கவிதைகள் பாடியுள்ளனர்.

கம்பளை சிங்ஹபிடிய மஞ்சுளா கிருஷ்ணசாமி (2008) கடமையே கண்ணாக கவிதை தொகுதியை மணிமேகலை பிரசுரமாக வெளியிட்டுள்ளார். இதில் சீதனம் என்ற தலைப்பில்

அன்று
சாதாரண ஜுரம்
இன்று
உடலெங்கும்
புரையோடி விட்ட
புற்று நோய்

என்று பாடியுள்ளார்.

இவரது வெற்றிடம் என்ற தலைப்பில்

"காசைக் கொண்டு
காற்சட்டையை நிறைத்தான்
என்னைக் கொண்டு
தன்னை அடைந்தான்
உண்மையான அன்பினால் - எந்தன்
உள்ளத்தை நிறைக்க
ஏனோ இன்று வரை
எண்ண எண்ணவில்லை"

என்கின்றார்.

''வட்டகொடை அக்னஸ் சவரிமுத்து'' கூடைத்தோழி நீ வாழி என்ற கவிதையில் பாடுபொருளாக மலையகப் பெண்கள் கூடை சுமப்பதை கூலிப் பெண் அடையாளமாக, பிறப்பிலேயே விட்டுப் போகாத கூடையாக, காவியம் படைத்து நிற்கும் கூடை தோழி என்ற பொருளில் கவிதை வடித்துள்ளார். அதில் சில வரிகள்.....

"கூடுவிட்டுக் கூடு பாயும்
ஆவியது பிரிந்தாலும்
போடும் தலை விட்டுப்
போகாது கூடையே வாழி
சேலை உடுத்துவது
செந்தமிழாள் அடையாளமெனில்
கூடை போடுவது
கூலிப் பெண் அடையாளமென்று
வாழ்வின் சரித்திரத்திலாம்
வஞ்சியர் கூட்டத்தோடு
காவியம் படைத்து நிற்கும்
கூடைத் தோழி நீ வாழி"

(மத்தியமாகாண சாகித்திய விழா சிறப்பு மலர் 2006)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்போம் கரங்கள் கவிதைத் தொகுதியிலும் சிங்களக் கவிஞர்களுடன் இஸ்மாலிகாவின் கவிதையும் வெளிடப்பட்டுள்ளது. களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச இதனைத் தொகுத்துள்ளார். நாட்டின் சமாதானத்திற்கான கவிதைகள் இதில் அமைந்துள்ளன.

கலையழகி வரதராணியின் கல்லுக்கு உயிர் வந்தால்..?எனும் கவிதையில்...

"வியர்வையின் வேகம்
வழிந்து ஒழுக
வீரியங்கள்
கல்லால் சிதறும்,
கல்லுடைக்கும் தோழனேஞ்..!

கல்லுக்கு உயில் வந்தால்
சொல்லுக்குச் சொல்
உனைப் பேசும்,
கண்ணீரில் கரையும்
உனைக் கண்டு
கண்ணீராய்க் கரையும் !

நீ உடைக்கும் கல்
உனதான
குடிசையாகுமா?
இல்லை
கல்லறையாகுமா? !

எதுவுமாகாமல் போனால்...?

ஓ............
கல்லுக்குள் - கல்
கதையெழுதிக்
கொண்டிருக்கிறது!"

என்று பாடியுள்ளார்.

லுணுகல ஸ்ரீ (ராதிகா பெருமாள்) மோட்ச முழக்கம் என்ற கவிதை தொகுதியில்,

பெப்ரவரி 4 என்ற கவிதையில்....

"தப்பேதும் புரியாத இலங்கை மாதாவை
நித்தம் சிறையில் அடைத்துவிட்டு
அந்தப் பொய் கொண்டாட்டம் இன்று
சுதந்திர தினம் இலங்கைக்கு என்று!"

என்றும்,

அறிவிப்பு. என்ற கவிதையில்...

உனது நோக்கம் என்னை
கவிஞனாக்குவது என்றால்
கற்று தந்திருக்கலாம்.
காதலித்துவிட்டு பிரிந்திருக்க வேண்டியதே இல்லை.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும்,

பரீட்சை பிரசவம் என்ற கவிதையில்ஞ்ஞ்.

"முந்நூறு நாள் சுமந்ததை
முடக்கப்பட்ட நேர எல்லைக்குள்
இறக்கி வைத்திட நேரும்போது....
எதிர்பம் இம்சையை வெல்ல

எத்தனிக்கும் சுய போராட்டத்தில்
இரண்டும் ஒத்துழைத்த பின்
அடடாஞ். அதன் பின் தான்
என்ன சுகம்?............... சுகம்?..................?

என்று பாடியுள்ளார்.

புசல்லாவ இஸ்மாலிகா தனது கவிதையான்றில்......

நலம் பிறக்க வேண்டும் என்ற தலைப்பில்

"மலையகத்தில் ஊதுகின்ற சங்கு
மங்கையவள் வாழ்வில் பெரும் பங்கு
இலைதளிரைக் கொய்ய வந்து இங்கு
இன்னல் படும் வாழ்வு வேறு எங்கு

தலைவாரிப் பொட்டிடவா நேரம்
தலைமுழுகி ஆகிறதிரு வாரம்
முலையசைய முதுகில் பெரும் பாரம்
முந்நாளில் செய்ததிந்தப் பாவம்

தலையெழுத்து கொழுந்தெடுக்க வேணும்
தவறாது மலைக்குச் செல்ல வேணும்
குலை நடுங்க குளிரில் வாடவேணும்
கூடை நிறைய கொழுந்தெடுக்க வேணும்

இருள் விலக எழுந்து செல்லும் வேளை
இளங் குழந்தை அழுது சுற்றும் காலை
அருள்புரிய யாருமில்லா ஏழை
எதிர்காலம் என்பதோர் பாலை

கொழுந்தெடுத்தால் இங்கு உண்டு பேரு
குந்தி விட்டால் இல்லையந்தப் பேரு
எழுந்தலைந்தால் ஆடும் வாழ்க்கைத் தேரு
எங்கள் வாழ்க்கை மலையகத்தின் வேரு

இரண்டெழுத்து படித்து விட்டால் காலம்
எங்களையே மாற்றும் இனிமேலும்
கரம் எட்டும் கல்வியதால் நாமும்
கரை சேர்வோம் இன்பமுடன் நாளும்

நலம் நிறைந்த காலம் வரவேண்டும்
நம்வர்க்கு வாழ்வு வரவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலங்கெடுக்கும் குடி மறைய வேண்டும்
கோபுரமாய் நிலை உயர வேண்டும்."

என்று பாடியுள்ளார்.

மலையகப் பெண்களின் கல்வி நிலை ஒரு காலத்தில் மிகவும் மோசமாக இருந்ததனாலோ அல்லது ஏழ்மை, வசதியீன்மை, வாய்ப்புகள் இன்மையாலோ தொகுதிகளாக வெளிவராமையினாலோ இவர்களின் கவிதை தொகுதிகள் பற்றி ஆராயப்படாமலுள்ளன.

ஆண்டு	பெருந்தோட்ட ஆண்களின் எழுத்தறிவு	பெருந்தோட்ட பெண்களின் எழுத்தறிவு
1981	78%	52%
1991	83%	60%
2001	87%	73%
2011	90%	83%

(தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களம் 2012)

ஒரு காலத்தில் வெளித்தொடர்புகளேயின்றி தோட்டங்களுக்குள் சிறைப்பட்டவர்களாக சங்கொலியுடன் தொழிலுக்கு செல்வார்கள், குழந்தையை குழந்தை மடுவத்தில் விடுதல், குழந்தையைச் சென்று பார்த்தல், வேலைவிட்டு விறகு தேடுதல், விறகு சுமத்தல். சமையல், பொருளாதாரப் பிரச்சினை, குடும்பச்சுமை போன்றவை இச்சமூகப் பெண்களின் பின்னடைவுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். இந்தச் சமூகச் சூழலில் எப்படி தரமான கவிதைகளை எதிர்பார்க்க முடியும்? எனவே, வாய்ப்புகளைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் மிளிர்வார்கள் என்பதில் ஐயமில்லை.

உசாத்துணை

1. அருணாசலம், க. (2003). மலையகத் தமிழ் இலக்கியம். பேராதனைப் பல்கலைக்கழகம்.
2. நித்தியானந்தன், மு. (1995). மீனாட்சியம்மாளும் மேடைப்பாடல்களும். கண்டி மத்திய மாகாண சாகித்திய விழா சிறப்பு மலர். மத்திய மாகாண அமைச்சு.
3. இசைபிழியப்பட்ட வீணை (2007) சுவிஸ் ஊடறு வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

சங்ககால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள் ஆவணப்படுத்தலுக்கான ஓர் ஒப்பீட்டாய்வு

விளையாட்டினால் ஒருவருக்கு மனமகிழ்ச்சியும், உடல்வளர்ச்சியும், உடலுக்குப் புத்துணர்வும் ஏற்படுகின்றன. மனிதனுக்கு உழைப்பும், உறக்கமும் போலவே விளையாட்டு, திளைப்பு, மகிழ்ச்சி, என்பனவும் முக்கியமானதாகும். மனிதர்கள் மட்டுமன்றி சகல உயிர்களும் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றன. விலங்குகளும் பறவைகளும் கூட விளையாடுவதைக் காண்கிறோம். தமிழ் இலக்கியத்தில், பழந்தமிழ் மன்னர்கள் காலந்தொட்டு வீர விளையாட்டுக்கள் இருந்து வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரபலமான பல விளையாட்டுக்கள் இடம்பெறும் ஒலிம்பிக் போட்டிகள் சங்ககாலத்திலேயே ஆரம்பமாகியுள்ளது. சங்ககால தமிழ் இலக்கியங் களில், விளையாட்டுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்கத்தமிழ் இலக்கியம் எட்டுத் தொகையையும், பத்துப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டவை. கி.மு.776 இல் ஒலிம்பிக் ஆரம்பித்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடந்துவந்துள்ளது. கி.மு.339 இல் நிலநடுக்கம் காரணமாக அரங்கம் அழிந்ததில் பலர் இறந்தனர். இதனால் ஒலிம்பிக் நிறுத்தப்பட்டு மீண்டும் 1896 இல் ஆரம்பிக்கப்பட்டது. எனவே, ஆரம்ப ஒலிம்பிக் சங்க காலத்தில் நடந்துள்ளன. சங்கக்கால விளையாட்டுக்கள் பற்றிச் சங்கப் பாடல்களிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. தெரு, மறைவிடம், மன்றம், செய்குன்று, இளமரக்கா என்னும் பூங்கா, பந்தல், பீலிக்கரை, நீர்நிலை, நெடுமணல்பரப்பு, காவற்காடு, கனிமலர்ச்சோலை, களம் முதலான பகுதிகளில் சங்ககால மக்கள் விளையாடியதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன. தமிழரின் ஆயகலைகள் அறுபத்துநான்கில் குதிரையேற்றமும் ஒன்றாகும். இது வளர்ச்சிபெற்ற சூதாட்டப் போட்டியாகவும் இன்று காணப்படுறது.

"ஒண்கொடி மகளிர் வண்டல் சயநம
நொண்டி அன்ன என்நலம் கந்து
கொண்டனை சென்மோ மகிழ்த நின் சூளே"

இங்கு ஒள்ளிய வளையலை அணிந்த பெண்கள் வண்டற் பாவை செய்து விளையாடுவதை குறிப்பிடுகின்றது. (குறுந்தொகை 238: 3)

புறநானூற்றில் ''ஓரை ஆயத்து ஒண்தொடி மகளின்'', ஓரை ஆயம் – ஒரு விளையாட்டு வகை கைவளையல் அணிந்த மகளிர் விளையாட (புறநானூறு 176 : 2), குறுந்தொகையில் பாலுண்டலையும் பந்து விளையாடலையும் தன்னோடு கூடி விளையாடும் ஆய மகளிருடன் செய்யாமல் என (396:2 பாலையில்) கூறப்பட்டுள்ளது.

''விளையாட்டாயமொரு'' (நன்றிணை 68)'' விளையாட்டு ஆயமொரு வெண்மணல் அழுத்தி'' (நற்றிணை 172)'' ஒருங்கு விளையாட "(கலித்தொகை 711.6)'' மடவரன் மகளிரோடு விளையாடி'' (பெரும்பாணாற்றுப்படை 38) ஆகியவற்றில் "விளையாட்டு'' பற்றிக் கூறப்படுகின்றது. இவற்றை அக விளையாட்டுக்கள், புறவிளையாட்டுக்கள் (indoor & outdoor games) என வகைப்படுத்தலாம்.

தொல்காப்பியத்தில், "செல்வம் பலனே புணர்வு விளையாட்டென்று எல்லல் நீத்த உவகை நான்கே'' எனக் கூறப்படுகிறது. இதன் மூலம் இன்பம் தருவதே விளையாட்டாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கலாம். சங்ககால இலக்கியங்களில் கூறப்படும் விளையாட்டுக்களை இன்றைய விளையாட்டுக்களோடு ஒப்பிட்டு நோக்குதல் அவசியமானதாகும்.

தற்காலத்தில், சட்டதிட்டங்களுடன் விளையாடப்படும் விளையாட்டுக்கள் கூட ஆரம்பகாலத்தில் நாட்டுப்புற விளையாட்டுகளாக இருந்தே வளர்ச்சியடைந்ததன. பின்னர் இன்று வரைக்கும் காலத்துக்காலம், காலத்துக்கேற்ப விதிமுறைகள் அமைக்கப்பட்டு தற்போது விளையாடப்பட்டு வருகின்றன. விளையாட்டுக்களின் ஆரம்பகாலம் ஆவணப்படுத்தப்படாமல் வரலாறாகவே கூறப்படுகிறது. ஆனால், சங்க இலக்கியத்தில் இதற்கான ஆவணப்படுத்தலையும், பதிவினையும் காணமுடிகின்றது. இவற்றில் பல ஆதாரத்துடன் எடுத்து காட்டப்படாமலுள்ளன.

சங்ககால இலக்கியங்களில் தற்கால விளையாட்டுகளின் ஆதாரங்களைத் தேடுவதும், ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி இப்பதிவினை ஆவணப்படுத்துவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.



புனலாடுதல் / நீச்சல் (swimming)

நீராடி மகிழ்தல் என்பதே புனலாடுதலாகும். இது தற்போது பல பெயர்களைக் கொண்ட நீச்சல் தடாக விளையாட்டாக காணப்படுகின்றது. நீச்சல் என்பது நீரினுள் எந்தவிதக் கருவிகளும் இல்லாமல் பக்க உறுப்புகளின் அசைவின் மூலம் மிதந்து, நகரும் செயலாகும். நீச்சல் பழக்கம் புத்துணர்ச்சியையும், சுறுசுறுப்பையும் தருகிறது. குளிப்பதற்கும், மீன்பிடிப்பதற்கும், புத்துணர்ச்சிக்கும், உடற்பயிற்சிக்கும் மற்றும் விளையாட்டாகவும் நீச்சல் பழக்கம் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் படர்பிறை (Synchonised Swiminig) என்பதும் நீச்சல் போட்டிகளில் காணப்படும் ஒரு வகை நீரில் ஆடல் எனும் குழுவாக பங்குபற்றும் போட்டியாகும். வரலாற்றிற்கு முந்திய காலமான கற்காலந்தொட்டே நீச்சல் கலை மனிதர்களிடம் இருந்ததற்கான ஆதாரங்கள் 7000 ஆண்டுகள் பழமையான குகை ஓவியங்கள் மூலம் காணக்கிடைக்கின்றன. கில்கமெஷ், காப்பியம், இலியட், ஒடிசி, விவிலியம் போன்ற எழுத்துபூர்வமான ஆதாரங்கள் கி.மு. 2000 இல் இருந்து கிடைக்கின்றன. ஆண்களும், பெண்களும் பங்குபெற்றும் இப்போட்டி நிகழ்வாக விளங்கும் நீச்சல், சங்க காலத்தில் “மருதச்” செய்யுள்களில் காணப்படுகின்றது. பரிபாடல் வையைப்பற்றிய பாடலில் புனலாடல் பற்றிக் காட்டப்பட்டுள்ளது.

வையைப் புனலின் வனப்பு

“இறு வரை புரையுமாறு இருகரை ஏமாத்து,
வரை புரை உருவின் நுரை பல சுமந்து,
பூ வேய்ந்து, பொழில் பரந்து ;
துனைந்து ஆடுவார் ஆய் கோதையர்,
அலர் தண் தாரவர், காதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிர் செரீஇ, கண்ணி பறித்து;
கைவளை, ஆழி, தொய்யகம், புனை துகில்,
மேகலை, காஞ்சி, வாகுவலயம்,
எல்லாம் கவரும் இயல்பிற்றாய் : தென்னவன்
ஒன்னார் உடைபுலம் புக்கற்றால் – மாறுஅட்ட
தானையான் வையை வனப்பு"

நீரால் அரிக்கப்பட்டு அடிப்பக்கம் இற்றுப்போன மலைபோல, நீரால் அரிக்கப்பட்டுக் குத்துண்டு நிற்கும் இருகரைகளாகிய காவலுக்குள் அடக்கி, வெள்ளிப் பனிமலையின் சிகரங்களைப் போன்ற வடிவம் உடைய நுரைகள் பலவற்றையும் சுமந்துகொண்டு, பூவினால் மூடப்பட்டுச் சோலைகளிடையே பரந்து வந்தது வையை, மேலும், அவ்வையை, தன்னிடத்தில் விரைந்து நீர் விளையாடலைச் செய்கின்ற ஆராய்ந்தணிந்த மலர் மாலையினையுடைய பெண்டிரின் காதுகளில் தளிரைச் செருகியும், மலர்ந்த குளிர்ச்சி பொருந்திய மாலையணிந்த ஆடவரின் தலையில் சூடிய தலைமாலைகளைப் பறித்தும், மகளிரின் கைகளில் அணிந்த வளையல், மோதிரம், தலையில் அணிந்த தலைப்பாகை, உடுத்திய ஆடை, அந்த ஆடையின் உள்ளே அணியப்படும் மேகலை, ஆடையின் புறத்தே அணியும் காஞ்சி ஆகியவற்றையும் கவர்ந்து கொள்ளும் இயல்பினையுடையதாய, பகைவரைக் கொன்ற படையினுடைய பாண்டியனுக்குரிய வையையாற்றில் வந்த புதுவெள்ளத்தின் இயல்பு, பாண்டிய மன்னன், பகைவருடைய தோல்விக்குரிய நிலத்தில் புகுந்து அவர்களை வென்று அவர் நாட்டுப் பொருள்களைக் கவர்ந்து வருதலை ஒத்ததால் வையையின் வனப்பு, பாண்டியனின் இயல்பை ஒத்தது எனக் கூறப்படுகின்றது.

"தலைப்புணைக் கொளினே தலைப் புணைக்கொள்ளும்
கடைப் புணைக் கொளினே தலைப் புணைக்கொள்ளும்
புன்னகைவிட்டு புனலோடு ஒழுகின்
ஈண்டும் வருகுவன் போலும்"

குறுந்தொகையில் (222:1 குறிஞ்சி) தலைவியும், தோழியும் ஆடும் புனல் விளையாட்டில் தலைவன் கண்டறிந்தமை இப்பாடலிற் கூறப்படுகிறது.

"புனல்நயந்து ஆடும் அத்தி அணிநயந்து
காவிரி கொண்டு ஒயித் தாங்கும் அன்னோ என" (அகநானூற்றில் 376 மருதம் (1011) கூறப்படுகிறது.

பண்ணை பாய்தல் (Diving)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர்க் காதில் தளிரைச் சொருகும் வழக்கம் உண்டு என்பதனை, " வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்" (திருமுருகாற்றுப்படை31) என்பதால் அறியலாம். மூழ்கி நீராடி எழும் போது, நீரில் அடித்து வரப்படும் தளிர் காதில் வந்து செருகிக் கொள்ளுமாதலின், வையை, மகளிர் காதில் தளிரைச் சொருகியது என்னும் கற்பனையை ஆசிரியர் புலப்படுத்தினார். இதில் கிழ் நீச்சல் - அதாவது மேலே இருந்து குதித்து கிணற்றின் கீழே சென்று மணல் எடுத்து வருவதை "தொடித்தலை விழத்தண்டுன்றினார்" என்றும் புலவர் குறிப்பிடுகின்றார்.

பெண்கள் பலரும் சூழ்ந்து நிற்கக் கிணற்றுக்குள் துடுமெனப் பாய்ந்து குதித்து மணல் கொண்டு மேலேவந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய கல்லா இளமைப் பருவத்தினை நினைந்து கழிவிரக்கப்படுகிறார், தொடித்தலை விழுத்தண்டுன்றினார் என்னும் புலவர்.

"இனிநினைதந் திரக்க மாகின்று திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத.
தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஅத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொடு

உயர்சினை மருதத்துத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரயகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா இளமை " புறம்.243

நற்றிணையில் (68இல்) ஆற்று நீர் விளையாட்டுப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஈட்டி எய்தல் (Spear shot- Javelin- Arrow shot)



ஈட்டி எறிதல் என்பது அல்லது ஈட்டி போன்ற ஒன்றை எவ்வளவு தூரம் எறிய முடியும் என்று பார்க்கும் ஒரு ஆகும். ஒவ்வொரு போட்டியாளரும் ஒரு தட களத்தில் ஓடிவந்து அந்த விசையுடன் எறிவர். ஒவ்வொருவருக்கும் மூன்று சுற்றுக்கள் தரப்படும். ஈட்டியின் முனை முதலில் நிலத்தைக் குத்தினால், அந்த முனையில் இருந்து தூரம் கணக்கிடப்படும். ஈட்டி கிடையாக போய் விழுந்தால், ஈட்டியின் இறுதி முனையில் இருந்து தூரம் கணக்கிடப்படும். எந்தப் போட்டியாளர் அதிக தூரம் எறிகிறாரோ, அவரே வெற்றியாளர். இவ்விளையாட்டானது ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும், தென் ஆசிய (சாக்) விளையாட்டு போட்டியிலும் உண்டு. இது போலத் தேசியப் போட்டிகள் மாகாணப் போட்டிகளிலும் ஈட்டி எறிதல் போட்டி உண்டு. சங்க கால வேடுவர்கள் ஈட்டி எய்தனர். மன்னர்களே ஈட்டி எய்தலை வீரமிக்கதாக கருதினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூற்றில் வேட்டையாடச் சென்ற இடத்தில் ஈட்டி எறிதலைக் கண்ட புலவர் பெருமானுக்குப் பெரும்பரிசினை அளித்த செய்தி இடம் பெற்றுள்ளது.

உடற்பயிற்சி ஆட்டம் / கண்காட்சி / பெலே டான்ஸ். (Tril Play)



விளையாட்டுப் போட்டிகளில் ஆரம்ப விழாவிலும், இறுதி விழாவிலும் நடைப் பெறும். ஆட்டங்களுடன் போட்டியாகவும் நடைபெறுகிறது. சில இடங்களில் பேண்ட் வாத்தியப் போட்டியாகவும் நடைபெறுகின்றது. சங்க காலத்தில் மன்னர்கள் கூத்தர் விறலியர்களின் பாடலையும், ஆடலையும் கேட்டும் கண்டும் இணைந்து பங்குபற்றிய வர்களுக்கு பெரும் பரிசு அளித்துள்ளனர். "துணங்கை" என்பது இன்னொரு கூத்தாகும், விழாவின் போது தெருக்களில் துணங்கை ஆடினர். இதற்கு ஏற்ப முழவு ஒலித்தது.

"முழவு இமிழும் அகலாங்கண்
விழவு நின்ற வியன்மறுகில்
துணங்கை" (மதுரை.327)

அத்துணங்கைக் கூத்தில் மகளிர் பங்கு பெறுவர். ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து ஆடுவர். "மள்ளர் குழீஇய விழவினானும், மகளிர் தழீஇய துணங்கையானும் யாண்டும் காணேன் மாண்தக்கோனை" என்னும் ஆதிமந்தியாரின் பாடல் வரிகள் சான்றாகும். போர்க் கொடுமையால் நெடுஞ்செழியனின் பகைப்புல மகளிர் தாம் வழக்கமாக ஆடும் துணங்கையை மறந்திருந்தனராம். (மதுரை. 159-160) இங்ஙனம் நடக்கும் துணங்கையில் அரசரும் கலந்து கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

சதுரங்கம் (chess)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத்தில் சிறந்து விளங்கிய விளையாட்டுகளில் ஒன்று வட்டாடல். திருவள்ளவர்

"கல்லாடிக் கோட்டி கொளல்
அரங்கின்றி வட்டாடுதலை யொக்கும்"

என்கிறார் இளங்கீரனார் பாடிய நற்றிணையில் வேப்பமரத்து நிழலில் நெல்லிக்காயை வட்டமாக கொண்டு ஆடுவது பற்றி,

"பொரியரை வேம்பின் புள்ளி நிழல்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்
வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்" – (நற். 3.25)

பறையில் உதிர்ந்து கிடந்த பளிங்கு போன்ற நெல்லிக் காய்கள் வட்டுப்போலத் தோன்றிய பாலை நிலம்பற்றி அகநானூறும் (5.910) குறிப்பிடுகின்றது. சதுரங்கத்தின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும், விளையாடப்பட்டு வந்த சதுரங்கம் என்னும் விளையாட்டிலிருந்தே இது வளர்ச்சியடைந்தது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இங்கிருந்து மேற்கே ஐரோப்பாவிற்கும் கிழக்கே கொரியா வரையும் பல வேறுபாடுகளுடன் பரவியது. இது மங்கோலியா வழியாக ரஷ்யாவுக்கு பரவியது. அங்கே ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விளையாடப்பட்டதாகத் தெரிகிறது. இந்தியாவிலிருந்து பரவிய இவ்விளையாட்டு, பாரசீகத்தை இஸ்லாமியர்கள் கைப்பற்றிய பின்னர் நாடுகள் பலவற்றிலும் பரவியது.

தமிழர் விளையாட்டில் மிகவும் சிறப்புற்றிருந்த விளையாட்டு வட்டாடல் (வட்டாடல் வட்டை உருட்டி சூதாடுதல்) இதற்காக இழைத்துக் காய்களை நகர்த்தி விளையாடும் இவ்வகை ஆட்டம் ஒருவகைச் சூதாட்டத்தை ஒத்தது. இவ் விளையாட்டைத் திருவள்ளுவர்,

"அரங்குஇன்றி வட்டுஆடி அற்றேநிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்" (401)

ஆகவே, இந்த வட்டாடல் விளையாட்டு குறள் காலத்து விளையாட்டு என்பது தெரிய வருகிறது. எனவே, பழந்தமிழரும் விளையாட்டுகளிலும் அறிவியல் வழி சிந்தனை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதே தமிழருக்கு மரபு சார்ந்த பெருமையாகிறது.

பந்தாடுதல் – கோகோ / ஏன்ட்போல் (Handball)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒருவகைப் பந்தினைக் கொண்டு ஆடுதல் அன்றைய மகளிர் வழக்கமாக இருந்தது மாடி வீடுகளில் – மேல் மாடத்தில் பெண்கள் வரிப்பந்தாடியது பற்றியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

"பீலி மஞ்ஞையின் இயலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந் தசைஇ" (பெரும்பாண். 331.333)

கைப்பந்தாடும்(ஏன்ட்போல்) பெண்களைப்பற்றிப் புறநானூற்றிலும் கூறப்படுகின்றது.

"வரிப்பனை பந்தோடு பாவைத்தூங்க" (திருமுருகாற்றுப்படை 68)

"பந்தோடு பெயரும் பரிவி லாட்டி" (நற்றிணை 140 6–7)

"பந்து நிலத்தி எறிந்து பாவை நீக்கி" (நற்றிணை 17 9–2)

"பாலும் உண்ணால் பந்துடன்
விளையாடு ஆலயமொரு மேவார் (குறுந்தொகை 396 – 1)

எனக் குறிப்பிடப்படுகின்றன.

புராண காலந்தொட்டு திருமாலின் அவதாரமாகிய கண்ணன் (கிருஷ்ணன்) கோபியர்களுடன் வட்ட வடிவில் நின்று விளையாடியது பற்றி கூறப்படுகின்றன. அதன் வளர்ச்சியே இன்றைய கோ கோ விளையாட்டு. இயற்கையாகவே இளஞ்சிறார்கள் " ஒருவரை மற்றொருவர் துரத்திப் பிடித்து, விளையாடுவர். அதன் வளர்ச்சியுற்ற நிலையே கோ கோ விளையாட்டு என்று வல்லுனர்கள் கருதுகின்றனர். இன்று இந்தியா ஆசியா என்று பரந்து பட்ட நிலையில் இவ்விளையாட்டு விளையாடப்பட்டாலும், தொடக்கம் காலத்தில் மராட்டிய மாநிலத்தில் தொடக்கப் பெற்று வந்துள்ளது. நற்றிணையில் மகளிர் கைப்பந்து, காற்பந்து விளையாட்டுகள் பற்றிக் (நற்றிணை 104, 324) குறிப்பிடப்பட்டுள்ளது.

மணிவட்டு (ஆக்கி - Hockey):



மணிவட்டு உருண்டு கொண்டிருந்தது. அதனைக் குணிலால் அடித்தனர். அதனால் அந்த மணிவட்டு மேலும் வேகமாக உருண்டோடியது. இதுதான் இந்த விளையாட்டைப் பற்றிச் சொல்லப்படும் செய்தி. குணில் என்பது நுனி வளைந்திருக்கும் தடி. துரத்தல் என்பது தட்டி ஒட்டுதல். வளைந்த தடியால் உருளும் பந்தை அடித்தனர். இது இக்கால ஹாக்கி விளையாட்டைப் போல அக்காலத்தில் ஆடப்பட்ட விளையாட்டு.சேர மன்னர் இமயத்தில் வில் பொறித்த செய்தியை, ஆரிய மன்னர் இழிவுபடுத்திப் பேசிய செய்தியைக் கேட்ட செங்குட்டுவன் அவர்களுக்குப் பாடம் புகட்ட வடநாட்டின்மீது படையெடுத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தான். கண்ணகிக்குக் கல் இமயமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்து கொண்டுவரலாம் என்று கூறக் கேட்டதும் அவன் எண்ணத்துடிப்பு மேலும் வேகமாகப் பாய்ந்தது. இது உருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு துரந்தாற் போல் வேகமாகச் சென்றது எனக் கூறப்பட்டுள்ளது

வட்டுநா விளையாட்டு (கோல்ப் - Golfe)

வட்டைக் குணிலால் அடித்த குணில்வட்டு விளையாட்டைப் போல நாக்குப் போன்ற தடியால் வட்டை அடித்த விளையாட்டு நாவட்டு விளையாட்டு அல்லது வட்டுநா விளையாட்டு ஆகும். குணில் விளையாட்டில் மணிவட்டை அடித்தனர். இந்த விளையாட்டில் அரக்கினால் சிவப்புப் புள்ளிகள் வைக்கப்பட்டிருந்த வட்டை அடித்தனர். குணில் விளையாட்டில் அடிக்கும் கோலாகக் குணில் பயன்படுத்தப்பட்டது. இந்த விளையாட்டில் நாக்கு போன்ற தடி பயன்படுத்தப்பட்டது. இக்காலக் கோல்ப் விளையாட்டில் இதுபோன்ற தடி பயன்படுத்தப்படுகிறது. இது சங்ககால நாத்தடி விளையாட்டு ஆகும்.

“வினை தலைப்படுத்தல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓனம் முதனைதயல் அம்காட்டு
பளிங்கத்து அன்ன பல்காய் நெல்லி
மோட்டு அரும்பாறை ஈட்டுவட்டு ஏறப்,
உதிர்வன படூ உம் கதிர் தெறு கவாஅன்
மாய்ந்த போல மழகு துணை தேற்றி” (அகநானூறு பாலை 5–(7–12))

எனக் கூறப்படுகின்றது.

மற்போர் (wresling)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்போர் என்பது இரண்டு ஆட்கள் ஆயுதங்கள் இல்லாமல் ஈடுபடும் ஒருவகைப் போர் அல்லது தற்காப்புக் கலை ஆகும். இது உலகின் பல்வேறு சமூகங்களுக்கு இடையேயும் உள்ள ஒரு கலை வடிவம். இந்திய மரபிலும், தமிழர் மரபிலும் மற்போர் சிறப்புற்று இருந்தது. “மல்” என்பதற்கு வலிமை, மற்றொழில், எனப் பொருள் வழங்குகின்றன இம் மற்போர் தமிழ் இலக்கியங்களில் ‘மல்லாடல்’ என வழங்கப் படுகின்றது. மற்போர் இன்று ஒரு விளையாட்டாக, அரங்கக் கலையாகப் பெரிதும் பயிலப்படுகிறது. இது ஓர் ஒலிம்பிக் விளையாட்டும் ஆகும். பிற்காலத்தில் குஸ்தி என்ற சொல்லாலும் குறிக்கப்படுகிறது. மற்போராளிகளைப் பயில்வான் என்றும் குறிப்பர். மற்போர் விளையாட்டு நம்நாட்டில் நெடுங்காலமாகப் பயிலப்பட்டு வருகிறது. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் மற்போரில் சிறந்தவனாக இருந்ததால் அவனுக்குச் சிறப்பு பெயராக மாமல்லன் என்ற பெயர் ஏற்பட்டது. அவன் பெயராலே மாமல்லபுரம் என்ற ஊர்ப் பெயர் ஏற்பட்டது.

புறநானூற்றில் மற்போர் புரிந்த மன்னன் எனப் புலவர் சாத்தந்தையார் பாடியுள்ளார். (புறநானூறு 80) சோழன் போர்வைக் கோப்பெரு நற்றின்றி இவன் தித்தன் என்னும் சோழ மன்னன் மகன் (புறநானூறு)

இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பு ஒதுங்கின்றே! ஒருகால்
வரு தார் தாங்கிப் பின் ஒதுங் கின்றே !
நல்கினும் நல்கான் ஆயினும், வெல்போர்ப்
பொரல் அரம் தித்தன் காண்கதில் அம்ம!
பசித்துப் பணைமுயலும் யானை போல,
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகு மல்லன் கடந்து அடு நிலையே!”

மல்லன் (மற்போர்வீரன்) ஆற்றலை அழித்துத் தன் ஒரு காலை அவன் மார்பிலும், மற்றொரு காலை முதுகுப்புறத்திலும் அழுத்தி வருந்தச் செய்தவன் பெருநற்கிள்ளி அவன். பசித்துச் செல்லும் யானை தன்முன்னே எதிர்ப்பட்ட மூங்கில் தண்டினை ஒடித்துத் தள்ளுவதைப் போல, களம்புகுந்து மல்லனைப் பெருநற்கின்னி வீழ்த்திய செயல் விளங்கிற்று எனக் கூறப்படுகின்றது.

நாவாய்ப் போட்டி (படகோட்டப்போட்டி/ Boat competition / rowing)

நாவாய் என்பது பொதுவாகக் கடற்கரை நாவாயியல் (coastal Narvigation) வானவியல் நாவாயியல் (astrononomical navigation) மின்னணுக் கருவி நாவாயில் (electronic Nativa-gation) என இன்று பகுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரை நாவாயியல் என்பது கடற்கரை நிலப்பகுதியில் உள்ள அடையாளங்களைக் கொண்டு கப்பலை வழி நடத்துவதாகும். நாவாய்ப் போட்டிகள் – அதாவது படகோட்டிப் போட்டிகள் படகு வலிக்கும் போட்டிகள் தற்போது காணப்படுகின்றன. நெடியோன் பாண்டியனின் முந்நீர் விழாவில் வளி தொழில் நாவாய்ப் போட்டி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கால விளையாட்டுக்கள் பலவற்றின் ஆரம்பம் சங்ககாலத்தில் காணப் பட்டுள்ளதைத் தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக சங்க இலக்கியச் சான்றுகள் கொண்டு விளக்கவும் ஆராயவும் முடிகின்றது. இவ் ஆய்வு சங்கப் பாடல்களில் விளையாட்டுப் பற்றியதாக அமைந்தாலும், தமிழ் இலக்கியத்திற்கும் விளையாட்டுக்குமான ஓர் ஆய்வின் முன்னோடி ஆய்வாகவே இதனைக் கொள்ளமுடியும். எனவே, இத்துறை சார்ந்த ஆய்வுகள் ஆய்வாளர்களால் தொடர்ந்தும் ஆராயப்பட வேண்டும். அதற்கு ஒரு முன்னாய்வாக இதனை பயன்கொள்ளமுடியும்.

உசாத்துணை நூல்கள்

1. தட்சிணாமூர்த்தி அ. (1994) தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு.
2. தமிழ் நாட்டு வரலாறு சங்ககாலம் வாழ்வியல் (2000) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் .
3. செங்கைப் பொதுவன் (2010) சங்க இலக்கியங்களின் விளையாட்டுக்கலை உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டு சிறப்பு மலர். 2010 தமிழ்நாடு அரசு.
4. சங்க இலக்கிய வரலாறு மா. ரா. களஞ்சியம் iii (2010) தொகுப்பு சண்முகசுந்தரம், சென்னை, காவ்யா.
5. சிவகாமசுந்தரி க. (1995) சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
6. வித்தியானந்தன்.சு. (1954) தமிழர் சால்பு. தமிழ் மன்றம், கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஊவா வகிபாகம் - ஆவணப்படுத்தலுக்கான ஓர் முன்னாய்வு!

உலகில் சகல மொழிகளிலும் ஆவணப்படுத்தல்கள் உண்டு. ஆவணப்படுத்தல் என்பது குறிப்பேடுகளை, வெளியீடுகளை தொகுத்து வைத்துப் பாதுகாத்தல். இன்றைய ஆவணங்களை வருங்காலத்தவர்களுக்கு பாதுகாத்து வழங்குவது இதன் பணிகளுள் முக்கியமானதாகும். இலங்கையில் ஆவணப்பாதுகாப்புக்கு நீண்டகால வரலாறு உண்டு; மூன்றாம் நூற்றாண்டில் நிலவிய மன்னர் ஆட்சிக் காலந்தொட்டு இலங்கையின் பௌத்த மடாலயங்களிலும், கோயில்களிலும், நூல்கள் பாதுகாக்கப் பட்டும், பயிலப்பட்டும் வந்துள்ளன. உதாரணமாக மகாவிஹாரைகள், அபயகிரி விகாரை முதலியன ஆவணப் பாதுகாப்பு நிலையங்களாக விளங்கியிருந்தன. இலங்கையில் 3ம்; நூற்றாண்டு முதல் ஆவணப் பாதுகாப்பு முறைமை ஆரம்பிக்கப்பட்ட போதும் ஐரோப்பிய ஆட்சிக் காலத்திலேயே (16ம் நூற்றாண்டில்) ஆவணப்படுத்துதல், நூலகம் என்பன முறைப்படி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பண்டைக்காலத்தில் சிங்கள மன்னர்களால் வழங்கப்பட்டவற்றைக் குறித்துவைத்த ஆவணம் "பின்பொத்" (Pinpoth) என அழைக்கப்பட்டது. இதனை வைத்துக்காத்தவர் ("பொத் வருன்") (Poth Varun) நூல்காப்பாளர் என அழைக்கப்பட்டனர். கோட்டை இராச்சியகாலத்தில் (1415 – 1597) மன்னரால் வழங்கப்பட்ட வாய்மூலத் தண்டனைகளைக் குறித்துவைக்க "முகவெட்டி" (Mukavetti) என்ற ஆவணம் பயன்படுத்தப்பட்டதாவும், கண்டி இராச்சியகாலத்தில் ஆவணங்களை 'மகாமோட்டி' (Mahamoutti) பாதுகாத்த தாகவும் வரலாற்றுக் குறிப்புகள் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் மன்னர்கள் கொடையாக வழங்கிய காணிகளுக்கான ஓலைச்சீட்டு ('olai Sittu', 'Cul Put') "குர் புத்" என அழைக்கப்பட்டதுடன் இவ்வாவணங்களை எழுதுபவரும், பாதுகாப்பவரும் 'லியன்னா' (liannah) எனவும் அறிய முடிகின்றது. அநுராதபுர காலத்தில் (300– 1017) மன்னரது இராட்ச்சிய நிதிக்கணக்கு எழுதப்பட்ட ஆவணங்கள் 'பண்டக பொத்தகம்' (Pandaka–Pottagam) எனவும் வரி அறவீட்டு ஆவணங்கள் 'வரி பொத்தகம்' (Vari-Pottagam) எனவும் அழைக்கப்பட்டுள்ளது. (இலங்கையின் வரலாற்றினைக் கூறும் மகா வம்சம், சூளவம்சம் என்பன தீபவம்சம் (Dipawamsa, Attakatha) எனும் 4ம் நூற்றாண்டு ஆவண ஏடுகளைத் துணைக்கொண்டு எழுதப்பட்டுள்ளன.)

ஊவாவைத் தலைநகராகக் கொண்டு இராவணன் ஆட்சி செய்ததாகவும் ஆங்கிலேயருக்கு எதிரான ஊவா வெல்லஸ போராட்டத்தில் துரைசாமி என்ற பெயரில் பௌத்த குருவானவர் தலைமை தாங்கினார் எனவும், வ.ஞானபண்டித செட்டியார் என்பவர் குறிப்பிட்டுள்ளார். ஈ.வே.ரா.வின் திராவிடக் கொள்கைகளில் ஈடுபாடுடன் 1930–களில் இலங்கை இந்திய வாலிபச் சங்கத்தினை பதுளை வழிநடத்தினார் என்றும், பாரதி இராமசாமி மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கத்தின் பதுளைக் கிளைத் தலைவராக இதற்கு சேவையாற்றியவர் எனவும், பதுளை மொடன் படமாளிகை ரத்னசாமி, கல்வி பணிப்பாளர் ஏ.எம். சமீம், கலை ஒளி பற்றியும், பதுளை கந்தசாமி 1947ல் வழிப்போக்கன் என்ற கவிதை நூலை ஆங்கிலத்தில் வெளியிட்ட தரபேல் போன்றவர்களது பதிவுகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களில் பதுளையும் முக்கிய இடத்தினைக் கொண்டுள்ளது. 1970ம் ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதி பிரசவத் தாய்க்கு வாகனம் கொடுக்க மறுத்த தோட்ட நிர்வாகத்திற்கு எதிரான சீனாக் கொல தோட்டத்தில் நடைபெற்ற 90 நாள் போராட்டத்தின் முடிவில் பொலிஸ் துப்பாக்கி பிரயோகத்தில் லெட்சுமணர் அழகர்சாமி மற்றும் பெருமாள் ராமையா ஆகிய தொழிலாளர்கள் உயிர் நீத்துள்ளனர். இதன் மூலம் தோட்டத் தொழிலாளர் போராட்டத்திலும் பதுளை முக்கிய இடம் கொண்டுள்ளது.

ஊவாவில் சாகித்தியா விழாக்கள் 1.1993 பண்டாரவளை, 2.1994 பதுளை, 3.1995 அப்புத்தளை, 4.1996 பசறை, 5.1997 ஆலிஎல, 6.1998 ஊவா பரணகம அலகொல்ல த.வி, 7.1999 கந்தேகெதர (சிங்கள வித்தியாலயம்), 8.2002 பண்டாரவளை என, எட்டு ஊவா சாகித்திய விழாக்கள் நடைபெற்றுள்ளன. பல எழுத்தாளர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். இந்தப் பின்னணியிலேயே இந்த ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இலங்கையில் ஊவா மாகாணத் தமிழ் ஆவணங்கள் முழுமையாக ஆவணப்படுத்தப் படவில்லை. தமிழ் நூல்கள் பல இந்தியாவிலும் பிறநாடுகளிலும் அச்சிட்டு வெளி யிடப்படுவதும், இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதர நூல் எண் பெறப்படாமையும் எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் அக்கறையின்மையும் போதிய தமிழ் ஆய்வுகளின்மையும், பாராமுகத்தன்மையும் தேசிய நூற்பட்டியலில் தமிழ்நூல்கள் பதியப்பட்டு ஆவணப்படுத்தப்படாமையும் இதற்கு காரணங்களாகும். இதனால் ஆய்வாளர்கள், எதிர்கால சந்ததியினர் இவை பற்றி அறிய முடியாதுள்ளன.

வரலாற்று மீளுருவாக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் வரலாற்றுத் துணையுடன் இலக்கிய வரலாற்று ஆய்வு நூல்களின் ஆதாரங்களுடன் இத்துறைசார்ந்த இரண்டாம் நிலை சான்றுகளுடன் நூல்களின் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. 'நூல் தேட்டம்' என்ற நூல்பட்டியல் ஆவணம் முதலாம் தொகுதி முதல் ஏழாம்; தொகுதி வரை அவதானிக்கப்பட்டது. வெளியீட்டாளர்களின் விலைப்பட்டியல்கள், நூலகங்களில் வைப்பிலுள்ள நூல்கள், வகுப்பாக்கப்பட்டியல்கள் ஆகியன அவதானிக்கப்பட்டது. இவற்றுள் அநேகமான நூல்கள் தேசிய நூற்பட்டியல், பல்கலைக்கழக நூற்பட்டியல், நூல்தேட்ட பதிவுகளை அடிப்படையாகக் கொண்டே பதிவுகள்; மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வில் துண்டுப்பிரசுரங்கள், பாடசாலை பாடநூல்கள், பரீட்சைகளை அடிப் படையாகக் கொண்ட நூல்கள், வினாவிடைகள் வர்த்தமானி வெளியீடுகள், அரசதிணைக்கள அறிக்கைகள் ஆகியன தவிர்க்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தமிழ் ஆவணங்களை ஆவணப்படுத்துதல் பூரணமாக நடைபெறவில்லை என வெளிக் காட்டல், இலங்கையல்; ஊவா மாகாண தமிழ் ஆவணங்களை ஆவணப்படுத்துதலில் உள்ள இடர்பாடுகளை கண்டறிதலும்; இவற்றினை களையும் வழிமுறைகளை கண்டறிதலும் முழுமையாக ஆவணப்படுத்தித் தீர்வு காண்பதுமே இவ்வாய்வினது நோக்கமாகும்.

ஊவா மாகாணத்தின் பதுளை, மொனராகலை மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இங்கு வாழ்ந்தவர்களதும், இவ் இடப்பெயர் குறித்து வெளியிடப்பட்ட வெளியீடுகளும் இதில் பதியப்பட்டுள்ளன.

இந்த ஆய்வு கல்வியாளர்களதும், இலக்கியம் தவிர்ந்த வேறு வெளியீகளும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊவா மாகாணத்திலிருந்து வெளியான நூல்களும், சஞ்சிகைகளும்

1. சாமி, மு. வே. பெ.	யார் கொலைகாரன்	பதுளை	1954
2. குறளன்பன், வராதொல	குறிஞ்சி	பசறை	1957
3. சுல்தான், ஜில்	19 நாட்டார் சிந்து பாடல்	1957	
4. தமிழோவியன்	எழுத்தாளன் காதலி (இசைப்பாடல்)	பதுளை	1959
5. மல்லிகைக் காதலன் காந்திமணி	முத்துச்சரம்	பதுளை	1960
6. மல்லிகைக் காதலன் காந்திமணி	மல்லிகை	பதுளை	1960
7. பழனிவேல் கும்பால்வெல	ஈழத்தென்றல்	பதுளை	1960
8. நடராஜா	கலைச்சுடர்	பதுளை	1960
9. தங்கராசா	போர்முரசு	பதுளை	1960
10. சுபைர், எம்.சி.எம்.	மணிக்குரல்	பண்டாரவளை	1960
11. சேந்தன் ராசமாணிக்கம்	தமிழமுதம்	பதுளை	1960
12. தர்மலிங்கம், எஸ்.	உலக நன்பன்	வெளிமடை	1960
13. தங்கராசா	புதுமை முரசு	பதுளை	1960
14. சாமிவேல், பாலக்கொல்லை	மானக்கேடு	பதுளை	1960
15. இளந்திங்களன்	முத்துச்சரம்	பதுளை	1960
16. முத்தையாபிள்ளை	கலை ஒளி	பதுளை	1961
17. அப்துல் காதர்	இக்பால் இதயம், மணிக்குரல் பதிப்பகம்,	பதுளை	1961
18. சாரணா கையூம், என்.எஸ்.எ.	குழந்தை இலக்கியம்		1962
19. ஜோசப், தெளிவத்தை	பாட்டி சொன்ன கதை		1963
20. தமிழோவியன்	தமிழோவியன் கவிதைகள்	பதுளை	1963
21. சாமி, மு.வே.	நாம்	பதுளை	1964
22. சாமி, மு.வே.	சமூக முன்னேற்றம்	பதுளை	1964
23. செல்லையா, என்.	மாமலைமணி	அப்புத்தளை	1965
24. சாமி, மு.வே.	மலைதேவி	பதுளை	1967
25. சின்னத்தம்பி குமாரவேல், மா.	தூவானம்	வெளிமடை	1967
26. ஜோசப், தெளிவத்தை	காதலினால் அல்ல		1967
27. சுபைதா, பேகம்	மலைமகள்	பண்டாரவளை	1969
28. சாரணா கையூம், என். எஸ். எ.	கவிதை நெஞ்சம்		1971
29. சற்குருநாதன், செ.	பூங்குன்றம்	பதுளை	1971
30. நாதன்	கலைக்குயில்	பண்டாரவளை	1971
31. சதாசிவம், புலோலியூர் க.	யுகப்பிரவேசம்	பண்டாரவளை	1973
32. சுப்பையா, கோகிலம்	தூரத்துப்பச்சை	பதுளை	1973
33. சாரணா கையூம், என். எஸ். எ.	பத்திரிகை சிறுவர் பாரதி		1974
34. நயீமா சித்திக்	வாழ்க்கை பயணம்		1974
35. ஜோசப், தெளிவத்தை	காலங்கள் சாவதில்லை	கொழும்பு	1974
36. ர. ஃபேல்	முடிவற்ற தன்மை		1977
37. நித்தியானந்தன், மு.	ரத்தங்கள் மண்ணில் கலப்பதில்லை		1977
38. ராஜலிங்கம், ஆர்	ஹரே கிருஷ்ணா	பதுளை	1977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39.	ஜோசப், தெளிவத்தை	பழம் விழுந்தது		1977
40.	ஜோசப், தெளிவத்தை	நாமிருக்கும் நாடே	கொழும்பு	1979
41.	ராஜலிங்கம், ஆர்	சித்ரா	பதுளை	1981
42.	எழுத்தழகன்	அல்லி	பதுளை	1981
43.	இராஜரத்தினம், இ.	நவ உதயம்	பதுளை	1982
44.	எழுத்தழகன்	உதயம்	பதுளை	1982
45.	எழுத்தழகன்	நவ உதயம்	பதுளை	1982
46.	மாசிலாமணி, பி. தமிழ் செல்வன்	நவ உதயம்	பதுளை	1982
47.	சாரணா கையூம், என். எஸ். எ.	சிறுவர் பாட்டு	கல்ஹின்ன	1983
48.	சதாசிவம், புலோலியூர் க.	மூட்டத்தினுள்ளே	பண்டாரவளை	1983
49.	சதாசிவம், புலோலியூர் க.	ஓர் அடிமையில் விலங்கு அறுந்தது	பண்டாரவளை	1984
50.	சாரணா கையூம், என். எஸ். எ.	நபி மாலை		1987
51.	மொழிவரதன்	மோகமலை ராகங்கள்		1988
52.	நயீமா சித்திக்	வாழ்க்கைச் சுவடுகள்		1989
53.	சாரணா கையூம், என். எஸ். எ.	சிறுவர் கவிதைகள்		1992
54.	சாரணா கையூம், என். எஸ். எ.	சிறுவர் பாடல்		1992
55.	சாரணா கையூம், என். எஸ். எ.	விஞ்ஞான மேதைகள்		1993
56.	சாரணா கையூம், என். எஸ். எ.	இவைகள் பேசினால்		1993
57.	இராமையா, என்.எஸ். எம்.	ஒரு கூடைக்கொழுந்து		1994
58.	ராமையா, என். எஸ். எம்.	தீக்குளிப்பு		1994
59.	சதாசிவம், புலோலியூர் க.	ஒரு நாட் போர்	பண்டாரவளை	1995
60.	சண்முகநாதன், ம.	வாழ வா தோழா	பண்டாரவளை	1995
61.	ஜோசப், தெளிவத்தை	நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்	துறைவி	1996
62.	குறிஞ்சி கதம்பம் 84 கவிதைகள் 30 கவிஞர்களின் கவிதைகள் ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சு			1996
63.	தமிழோவியன்	மெய் மணக்குது		1997
64.	மாசிலாமணி, பி. தமிழ்ச்செல்வன்	ஓ இந்த மனிதர்கள்		1997
65.	ஜோசப், தெளிவத்தை	மலையக இலக்கியத்திற்கு கிறிஸ்தவர்களின் பங்களிப்பு		1997
66.	சாரணா கையூம், என். எஸ். எ.	என் நினைவில் ஒரு கவிஞர்		1997
67.	ஜோசப், தெளிவத்தை	பாலாயி	கொழும்பு	1997
68.	சதாசிவம், புலோலியூர் க.	புதிய பரிணாமம்	பண்டாரவளை	1998
69.	ஜோசப், தெளிவத்தை	மலையகச் சிறுகதை வரலாறு		2000
70.	மொழிவரதன்	ஒரு நாடும் மூன்று நண்பர்களும்,		2001
71.	திரேஸ்குமார் த.	நிஜங்களின் நிழல்	பதுளை பசறை	2002
72.	பதுளை சொல்லும் கதைகள் (ஊவா மாகாணச்சபை, ஊவா மாகாண எழுத்தாளர்களின் தொகுப்பு)	இந்து கலாசார அமைச்சு		2002
73.	சதாசிவம், க	அக்கா ஏன் அழுகிறாய்		2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74.	திரேஸ்குமார் த.	நெருடல்கள்	பசறை	2003
75.	றஸீனா புஹார்	மண்ணிழந்த வேர்கள்	பதுளை	2003
76.	பிரபாகர், துரைராஜ் (அப்புத்தளையூர்)	மீண்டும் வேதாளம்		2004
77.	இராமநாதன், குமார	சாரல்		2004
78.	நயீமா சித்திக்	வாழ்க்கை வண்ணங்கள்		2005
79.	ராஜலிங்கம், ஆர்	காதலி தேடிக் கொடுத்த மனைவி		2005
80.	இராஜலிங்கம், ஆர்	சிறகொடிந்த வண்ணக்கிளி		2005
81.	பிரதீபன், பிரமிளா	பீலிக்கரை		2006
82.	ஸ்ரீ, லுணுகலை	மோட்ச முழக்கம் (ராதிகா பெருமாள்)	லுனுகலை	2007
83.	ரபீக், வெலிமடை	மேகவாழ்வு		2009
84.	பிரதீபன், பிரமிளா	பாக்குப் பட்டை		2010
85.	ஜோசப், தெளிவத்தை	குடை நிழல் (புதினம்),		2010
86.	துரைசாமி, மு.	நாளெந்த நாளோ?		2010
87.	ஜோசப், தெளிவத்தை	மீன்கள்		2013
88.	சேனாதிராஜா, பதுளை	குதிரைகளும் பறக்கும்	கொழும்பு	2013
89.	மருதமுத்து, தானா.	சிறகிழந்த கிளிகள் பாக்கியா வெளியீடு ஹாலியெல		2014
90.	ஜோசப், தெளிவத்தை	தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள்		2014
91.	இராமசாமி, க.	தேயிலைத் தோட்டத்திலே	பதுளை	
92.	இராமசாமி, க.	கல்வி	பதுளை	
93.	சதாசிவம், புலோலியூர் க.	நாணயம்	பண்டாரவளை	
94.	பாலா, பன்	மலைப்பொறி	அப்புதளை	
95.	பிரபா	எரிச்சல்	ஐ ஸ	
96.	மாசிலாமனி. தமிழ்ச் செல்வன்	அமைதி	பதுளை	
97.	மொழிவரதன்	மூன்று குறுநாவல்கள்		
98.	ராஜலிங்கம், ஆர்	ஓய்ந்து போன பம்பரம்		
99.	வேலழகன், மு.	தமிழரின் கண்ணீர்	அப்புத்தளை	
100.	ஜோசப், தெளிவத்தை	இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும் மூன்றாவது மனிதன்		
101.	சதாசிவம், புலோலியூர் க.	நினைவலைகள்	ஐ ஸ	

இவற்றுள் கவிதை நூல்களை பிரித்து நோக்கின்...

1.	சுல்தான், ஜில்;	19 நாட்டார் சிந்து பாடல்		1957
2.	தமிழோவியன்	எழுத்தாளன் காதலி (இசைப்பாடல்கள்)	பதுளை	1959
3.	தமிழோவியன்	தமிழோவியன் கவிதைகள் (தொகுப்பு) மனவேர் மன்றம், சென்னை		1963
4.	சின்னத்தம்பி குமாரவேல், மா. (குமரன்)	தூவானம்	வெளிமடை	1967
5.	குறிஞ்சி கதம்பம் 84 கவிதைகள் 30 கவிஞர்களின் கவிதைகள் ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சு			1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சண்முகநாதன், ம.	வாழ வா தோழா	பண்டாரவளை	1995
7. திரேஸ்குமார் த.	நிஜங்களின் நிழல், உடதளவின்ன சிந்தனைவட்டம்	பதுளை பசறை	2002
8. திரேஸ்குமார் த.	நெருடல்கள்	பசறை	2003
9. றஸீனா புஹார்	மண்ணிழந்த வேர்கள்	பதுளை	2003
10. ஸ்ரீ, லுணுகலை (ராதிகா பெருமாள்)	மோட்ச முழக்கம் தினு பதிப்பகம்	லுனுகலை	2007
11. ரபீக், வெலிமடை (எஸ்.எச்.மொஹமட்)	மேகவாழ்வு (கவிதைதொகுதி)		2009
12. துரைசாமி, மு.	நாளெந்த நாளோ? எல்ல குறிஞ்சி பேரவை (கவிதைத் தொகுப்பு)		2010

13. பிரபா, எரிச்சல் (கவிதை தொகுதி) சிறுதுளி பதிப்பகம், ஸ்பிரிங் வெளி ஐ ஸ

ஊவாவில் வெளியான இதழ்கள்

1. குறிஞ்சி	குறளன்பன்	பசறை	1957
2. முத்துச்சரம்	இளந்திங்களன்	பதுளை	1960
3. முத்துச்சரம் சரம்	மல்லிகைக் காதலன் காந்திமணி	பதுளை	1960
4. மல்லிகை	மல்லிகைக் காதலன் காந்திமணி	பதுளை	1960
5. தமிழமுதம்	சேந்தன் ராசமாணிக்கம்	பதுளை	1960
6. கலைச்சுடர்	நடராஜா	பதுளை	1960
7. புதுமை முரசு	தங்கராசா	பதுளை	1960
8. போர்முரசு	தங்கராசா	பதுளை	1960
9. ஈழத்தென்றல்	பழனிவேல் கும்பால்வெல	பதுளை	1960
10. மணிக்குரல்	சுபைர், எம்.சி.எம்.	பண்டாரவளை	1960
11. உலக நண்பன்	தர்மலிங்கம், எஸ்.	வெளிமடை	1960
12. கலை ஒளி	முத்தையாபிள்ளை	பதுளை	1961
13. நாம்	சாமி, மு.வே.	பதுளை	1964
14. சமூக முன்னேற்றம்	சாமி, மு.வே.	பதுளை	1964
15. மாமலைமணி	செல்லையா, என்.	அப்புத்தளை	1965
16. மலைத்தேவி	சாமி, மு.வே.	பதுளை	1967
17. ஞானத்தை மறந்து	தமிழோவியன்	சென்னை	1967
18. மலைமகள்	சுபைதர், பேகம்	பண்டாரவளை	1969
19. பூங்குன்றம்	சற்குருநாதன், செ.	பதுளை	1971
20. கலைக்குயில்	நாதன்	பண்டாரவளை	1971
21. ஹரே கிருஷ்ணா	ராஜலிங்கம்	பதுளை	1977
22. அல்லி	எழுத்தழகன்	பதுளை	1981
23. சித்ரா	ராஜலிங்கம்	பதுளை	1981
24. உதயம்	எழுத்தழகன்	பதுளை	1982
25. நவ உதயம்	எழுத்தழகன்	பதுளை	1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. நவ உதயம் இராஜரத்தினம், இ. பதுளை 1982
27. நவ உதயம் மாசிலாமணி, பி. தமிழ் செல்வன் பதுளை 1982
28. தேயிலைத் தோட்டத்திலே இராமசாமி, க. பதுளை ஐ ஸ
29. கல்வி இராமசாமி, க. பதுளை ஐ ஸ
30. அமைதி மாசிலாமணி. தமிழ்ச் செல்வன் பதுளை ஐ ஸ
31. மலைப்பொறி ப பாலா அப்புதளை ஐ ஸ

தெளிவத்தை ஜோசப்

தெளிவத்தை என்னும் தோட்டத்தில் ஆசிரியராக பணியாற்றினார். அதனால் தெளிவத்தை ஜோசப் என்ற புனைப்பெயரைக் கொண்டிருந்தார்.

1. காலங்கள் சாவதில்லை, (நாவல்), வீரகேசரி வெளியீடு, 1974
2. நாமிருக்கும் நாடே, (சிறுகதைகள்,) வைகறை வெளியீடு, (அரச சாகித்திய விருது) 1979
3. மலையக இலக்கியத்திற்கு கிறிஸ்தவர்களின் பங்களிப்பு 1997
4. பாலாயி, (மூன்று குறுநாவல்கள்), துரைவி வெளியீடு 1997
    1. ஞாயிறு வந்தது 1966
    2. பாலாயி (கதம்பம்) 1967
    3. மனம் வெளுக்க (தினகரன்) 1967
5. காதலினால் அல்ல 1967
6. நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் துரைவி 1996
7. மலையக சிறுகதை வரலாறு, துரைவி வெளியீடு, (சாகித்திய பரிசு பெற்றது) 2000
8. இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும் மூன்றாவது மனிதன் வெளியீடு ஐ?ஸ
9. குடை நிழல் (புதினம்), சுபமங்கள 1995 குறுநாவல் போட்டியில் 2ம் அடம் பெற்று பின்னர் நூலானது 2010
10. மீன்கள் நற்றணை பதிப்பகம் 2013
11. தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள் 2014

தொகுப்பு நூல்கள்

1. மலையக சிறுகதைகள் துரவி வெளியீடு 1997
2. உழைக்க பிறந்தவர்கள் துரவி வெளியீடு 1997
3. பரிசு பெற்ற சிறுகதைகள் 1997

பரிசு பெற்ற சிறுகதைகள்

1. மலை முரசு சிறுகதை போட்டியில் பாட்டி சொன்ன கதை 1963
2. வீரகேசரி சிறுகதைப்போட்டி; பழம் விழுந்தது 1965

நயீமா சித்திக் பிற்காலத்தில் நயீமா ஏ.பஷீர்
ஊவா மாகாணம் பதுளை ஹப்புத்தளையை சேர்ந்தவர்.

1. வாழ்க்கை பயணம் (நாவல்) வீரகேசரி பிரசுரம், 1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வாழ்க்கைச் சுவடுகள் (சிறுகதைதொகுதி) தமிழ் மன்ற வெளியீடு, 1989
3. வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி) சிந்தனை வட்டம், 2005

700 மேற்பட்ட சிறுகதைகள்

மொழிவரதன் (கருப்பையா மகாலிங்கம்)

ஹாலிஎல பிறந்த மொழிவரதன் (கருப்பையை மகாலிங்கம்)

1. மேகமலைகளின் ராகங்கள் (சிறுகதை தொகுதி) மலையக பதிப்பகம் 1988
2. கலை ஒளி முத்தையா பிள்ளை நினைவு சிறுகதை போட்டி பதுளை கலை இலக்கிய வட்டம்.
3. ஒரு நாடும் மூன்று நண்பர்களும், சாரல் வெளியீட்டகம், 2001
4. மூன்று குறுநாவல்கள் – புதிய மலர்கள் மலர்கின்றன, ஒரு நாடும் மூன்று நண்பர்களும், நிலப்பசி
5. பேராதனைப் பல்கலைகழக தமிழ்ச்சங்க சிறுகதை போட்டியில் கிணற்றுத் தவளைகள் என்ற சிறுகதை பரிசு பெற்றது.
6. மலையக இளைஞர் முன்னணியின் குறுநாவல் போட்டியில் புதிய மலர்கள் மலர்கின்றன என்ற குறுநாவல் பரிசு பெற்றுள்ளன.

என்.எஸ்.எ.சாரணா கையூம் ஊவா. பதுளை

1. குழந்தை இலக்கியம் 1962
2. கவிதை நெஞ்சம் ஸாபியா வெளியீடு 1971
3. பத்திரிகை சிறுவர் பாரதி 1974
4. சிறுவர் பாட்டு 1983
5. புதுமலர் கவிதைத் தொகுதி ஸாபியா வெளியீடு 1983
6. தன் நபி மாலை 1987
7. சிறுவர் கவிதைகள் 1992
8. சிறுவர் பாடல் 1992
9. விஞ்ஞான மேதைகள் 1993
10. இவைகள் பேசினால் 1993
11. என் நினைவில் ஒரு கவிஞர் 1997

புலோலியூர் க.சதாசிவம்

பண்டாரவளையில் வசித்தவர்

1. யுகப்பிரவேசம் (சிறுகதை) 1973
2. மூட்டத்தினுள்ளே (நாவல்) 1983
3. ஓர் அடிமையில் விலங்கு அறுகிறது (நாவல்) 1984
4. ஒரு நாட் பேர் (சிறுகதை) 1995
5. புதிய பரிணாமம் (சிறுகதை) 1998
6. நாணயம் (நாவல்)
7. நினைவலைகள்
8. அக்கா ஏன் அழுகிறாய் மணிமேகலை பிரசுரம் சென்னை 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழோவியன் (ஆறுமுகம்)

1. எழுத்தாளன் காதலி (இசைப்பாடல்) 1959
2. தமிழோவியன் கவிதைகள் (தொகுப்பு) தமிழோவியன் சென்னை, மனவேர் மன்றம் 1963
3. ஞானத்தை மறந்து, பாரி புத்தக நிலையம் சென்னை 1967

சாமி, மு. வே.

1. யார் கொலைக்காரன் 1954
2. நாம் 1964
3. சமூக முன்னேற்றம் 1964
4. மலைதேவி 1967

ராஜலிங்கம், ஆர்.

1. சிறகொடிந்த வண்ணக்கிளி (நாவல்) மணிமேகலைப் பிரசுரம் 2005
2. காதலி தேடிக் கொடுத்த மனைவி (நாவல்) மணிமேகலை பிரசுரம் 2005
3. ஒய்ந்து போன பம்பரம் ஜ ஸ

சஞ்சிகைகள்

1. ஹரே கிருஷ்ணா 1977
2. சித்ரா 1981

நித்தியானந்தன், மு.

ரத்தங்கள் மண்ணில் கலப்பதில்லை

இலங்கை முதலாவது வேலை நிறுத்தம் அச்சுத் தொழிலாளர் போராட்டம் 1893 (தமிழாக்கம்)

சஞ்சீவ வெளியீடு 1893

கூலித்தமிழ் 2014

30க்கும் மேற்பட்ட ஆய்வு கட்டுரைகள்

சிறுகதை தொகுதிகளில்...

மலையக சிறுகதைகள் துரைவி வெளியீடு (சிறுகதை தொகுதி) 1977 இதில் பதுளையைச் சேர்ந்த

1. ர. ஃபேல் – முடிவற்ற தன்மை
2. ஜோசப், தெளிவத்தை – பழம் விழுந்தது
3. நித்தியானந்தன், மு. – ரத்தங்கள் மண்ணில் கலப்பதில்லை

உழைக்க பிறந்தவர்கள் (சிறுகதை தொகுதி) துரவி வெளியீடு 1997 இதில் பதுளையைச் சேர்ந்த

1. தமிழோவியன் – மெய் மணக்குது
2. மாசிலாமணி, பி. தமிழ்ச்செல்வன் – ஓ இந்த மனிதர்கள்
3. க. சதாசிவம் – ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது.

ஒரு கூடைக் கொழுந்து, காந்தளகம் வெளியீடு (சிறுகதை தொகுதி) 1994 இதில் பதுளையைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ராமையா, என். எஸ். எம். – தீக்குளிப்பு
2. சித்திக், நயீமா – வாழ்க்ககையின் சுவடுகள்
3. மொழிவரதன் – மேக மலைகளின் ராகங்கள்
4. மகேந்திரன், கோகிலா – சடப்பொருள் என்றுதான் நினைப்போ ?

பதுளை சொல்லும் கதைகள்

1. இந்து கலாசார அமைச்சு ஊவா மாகாணச்சபை, ஊவா மாகாண எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு

2002

ஊவா பதிப்பகங்கள்

1.	சாமி, மு.வே. தொழிலாளர் அச்சகம் பதுளை	1954
2.	சுபைர், எம்.ஸி.எம். மணிக்குரல் பதிப்பகம் பண்டாரவளை	1961
3.	ஸாபியா பதிப்பகம் பதுளை	1963
4.	வைகறை பதிப்பகம் மு. நித்தியானந்தன்	1979
5.	குறிஞ்சிப் பண்ணை (25 லொங்டன்வீதி பதுளை) ஏற்பாட்டால்	
6.	அ. சா. மல்லிகை காதலன் பதுளை	
7.	சிறுதுளி பதிப்பகம்	
8.	குறிஞ்சிப் பேரவை	
9.	தினு பதிப்பகம்	

இதில் சிலரது சில நூல்கள் பதியப்பட்டு மற்றம் சில விடுபட்டிருக்கலாம். அதற்கு காரணம் இலங்கையின் தேசிய நூல் பட்டியலாக்கமாகும். தேசிய நூலகத்தில் பதியப்படாமை, சர்வதேச தராதர நூல் எண் பெறப்படாமை, பிறநாடுகளில் நூல் வெளியிடல் போன்றவை இவற்றுக்கு காரணமாகும். தேசிய நூற் பட்டியலையும், நூற்தேட்டம் போன்றவற்றையும் ஆதாரமாகக் கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு முன்னோடி ஆய்வு. விடுபட்டவற்றை மீளத்தேடி பதிந்து முழுமையாக்கலாம். இதில் ஊவாவின் கல்வியாளர்கள், பேராசிரியர்களது இலக்கியம் சாராத நூல்கள் சேர்;த்துக் கொள்ளபடவில்லை எதிர்காலத்தில் இவையும் சேர்த்துக்கொள்ளப்படலாம். இவ் ஆய்வில் ஊவாவில் வெளியான 101 நூல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஊவாவில் வெளியான 31 இதழ்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து பதிவு செய்யப்படாதவை தேடிப் பதிவு செய்து இதனை முழுமையாக்க வேண்டும். இவ்வாறான ஆய்வினை மேற்கொள்ளபவர்களுக்கு இதனை முன் ஆதாரமாகக் கொள்ள முடியும்.

உசாத்துணை நூல்கள்

❖ செல்வராஜ் என்., “நூல்தேட்டம் தொகுதி 18”, ஐக்கிய இராச்சியம், அயோத்தி நூலக சேவைகள்;, 20022014.

❖ ஜெமீல், எஸ்,எச்,எம், “சுவடிஆற்றுப்படை” கல்முனை, இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், 1994.

❖ ஜோசப், தெளிவத்தை மலையக சிறுகதை வரலாறு, துரைவி வெளியீடு, 2000.

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி உரை

எம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து....

மகேஸ்வரம் எனும் ''மணிவிழா'' மலர் நூல் வெளியாவதற்கு உதவிய அத்தனை கரங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

''மணிவிழா'' மலர் இனிதே மலர்ந்திட அருள்பாலித்த இறைவனுக்கு கோடானு கோடி நன்றிகள்.

மணிவிழா மலருக்கு ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச்செய்திகளையும், மனப்பதிவுகளையும் வழங்கிய எம்மதிப்பிற்கும், பேரன்புக்குமுரிய பேராசிரியர்களுக்கும், கல்விமான்களுக்கும், பெரியார்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆக்கங்களைத் தந்துதவிய பேராசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கும், ஏனைய அன்புள்ளங்களுக்கும், எமக்கு இவ்விழா, விழாமலர் பற்றி ஆலோசனைகளை வழங்கியவர்களுக்கும், பிரதமஅதிதிக்கும், கௌரவ அதிதிக்கும், சிறப்புரையாற்றியோருக்கும் இந்நிகழ்வில் பங்குபற்றிய பெரியோர்களுக்கும் மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன், இவ்விழாவில் கலந்து கொண்ட ஆசான்கள், வழிகாட்டிகள், உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள், சக உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும், இவ்விழாவினை ஊடகங்களில் ஒலி, ஒளி மற்றும் பத்திரிகைகளில் பதிவு செய்த பணிப்பாளர்கள், பிரதம ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகத்தின் சென்னையை சேர்ந்த அச்சகத்தார் தமிழ்ச்சுவடி அ.பாலாஜி, சு.நீலகண்டன் ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்விழாவுக்காக மண்டபத்தைத் தந்துதவிய கட்டுக்கலை அருள்மிகு மீனாட்சிஅம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வவிநாயகர் திருக்கோவில் அறங்காவலர் கோ.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

நடனக்கலை, கர்நாடக சங்கீதம் ஆகிய நிகழ்வுகளை வழங்கிய சத்யாசாயி கலாலயம் ஸ்ரீமதி.உமாசிறீதரன், ஸ்ரீமதி எம்.கலைவாணி ஜெகதீஸ்வரன் (எம்.ஏ.சங்கீதம்) இசைமாமணி உதவிக்கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்) கண்டி, ஆலாபனா இசை மன்றம், ஆகியோருக்கும் ஏனைய கலைஞர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

எவ்வித சன்மானங்களையும் எதிர்பாராது எமக்கு பலவழிகளிலும் உதவிய, உதவிவருகின்ற அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கிறோம்.

நன்றி!

இங்ஙனம்

ஏற்பாட்டுக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி நிரல்

1.30 வரவேற்பு

2.00 மங்கள விளக்கேற்றல்

2.10 தமிழ்மொழி வாழ்த்து
(கலைமாமணி திருமதி கலைவாணி ஜெகதீஸ்வரன், ஆலாபனா இசைமன்ற மாணாக்கர- கண்டி)

2.15 **இறைவணக்கம்**
சிவாச்சாரியார் க.வரதராஜன் சர்மா
(பிரதம குருக்கள் குறிஞ்சிக் குமரன் கோயில் பேராதனைப் பல்கலைக்கழகம்)

வண.பிதா.ஷெல்ரன் சமாதானம்
கண்டி கிறீஸ்துநாதர் ஆலயம் பங்குத்தந்தை(விகார்),
கண்டி திரித்துவக் கல்லூரி ஆலய பொறுப்பான அருட்தந்தை.

ஆஷ் ஸஜீக் (மௌலவி)
றிம்ஸான் ஸமீல்
(கட்டுக்கலை ஜு"ம்மா பள்ளிவாசல், கண்டி

2.25 **வரவேற்புரை**
(திரு. றொட்ணி பெர்னாண்டோ – ஏற்பாட்டுக் குழு)

2.30 **ஆசியுரை**
கோ. கிருஷ்ணமூர்த்தி
(அறங்காவலர் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில்)

2.35 **இறைவணக்க நடனம்**
(நடன கலா வித்தகர் ஸ்ரீமதி உமா ஸ்ரீதரனின் சத்யாசாயி கலாலய மாணவிகள்)

2.45 **தலைமையுரை**
தகைசார் ஓய்வுநிலை பேராசிரியர் சி. தில்லைநாதன்
(முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

வாழ்த்துரைகள்

2.55 பேராசிரியர். எம்.ஏ.நு.்.மான்
(முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

3.00 பேராசிரியர் துரை மனோகரன்
(முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

3.05 திரு. முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்த்
(அறங்காவலர் - நாவலப்பிட்டிய ஸ்ரீ கதிர்வேலாயுத கோயில்)

3.10 பேராசிரியர். எஸ்.பிரசாந்தன்
(தமிழ்த் துறைத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

3.15 Mr.Mahinda Munasinge
(Past President, St. Sylvester's College OBA/ Sinhala velanda Peramuna)

3.20 **மணிவிழா நூல் வெளியீடு – ஏற்பாட்டுக்குழுவினர்**

3.30. அர்த்தநாரீஸ்வரர் சிவசக்தி நடனம்
(ஆசிரியை நடன கலா வித்தகர் கோமளா சந்திரசேகரன், கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள்)

3.35 **நூல் அறிமுகவுரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
(முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

3.45 **குழுப்பாடல்**
(கலைமாமணி திருமதி கலைவாணி ஜெகதீஸ்வரன், ஆலாபனா இசைமன்ற மாணவிகள்)

3.50 **சிறப்புரைகள்**

Prof. H. M. D. R. Herath
Professor Emeritus (Sociology) University of Peradeniya and the Chairman of Inter Statutory Board for the Protection of Kandyan Heritage)

3.55 பேராசிரியர் வை. நந்தகுமார்
(முன்னாள் புவியியற் துறைத் தலைவர். மகேஸ்வரனின் ஆசான்)

4.00 **கவி வாழ்த்து**
பி. சிவகுமார்
(அதிபர். கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரி)

4.05 **தனி இசை**
எஸ். கிறிஷான்
(திறந்த பல்கலைக்கழக மாணவன்)

4.10 **பிரதம அதிதி உரை**
கௌரவ ரவூப் ஹக்கீம்
(நாடாளுமன்ற உறுப்பினர் தேசிய தலைவர், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ்)

4.20. (இசை கலைமணி திருமதி வரதா ரகுநாதன்,
இந்துமாமன்ற வீணை ஆசிரியரின் மாணாக்கர்)

4.25 **ஏற்புரை**
மணிவிழா நாயகன் ஆர்.மகேஸ்வரன்

4.35 **சிவதாண்டவம்**
(நடன கலா வித்தகர் ஸ்ரீமதி உமா சிறீதரனின் சத்யாசாயி கலாலயம்)

4.40 **நன்றியுரை**
வே. கிருஷ்ணமூர்த்தி – ஏற்பாட்டுக்குழு

நிகழ்ச்சித் தொகுப்பு

கலாநிதி எஸ். சுதர்சன்

(சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)

செல்வி கலைச்செல்வன் காயத்தரி

(வானொலி பகுதி நேர அறிவிப்பாளர்)

நிகழ்ச்சி முகாமை

இரா. அ. இராமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-624-5 867-04-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org